தொல்காப்பியம்

பொருளதிகாரம்

பேராசிரியம்.

மெய்ப்பபாட்டியல், உவமவியல், செய்புளியல், ம்ரபியல்.

ராவ் பஹதூர் - ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ். (லண்டன்.) எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்.)
[சென்னை சர்வகலாசாலையின் தமிழ்க் கல்விச்சபை, தமிழ் வியாசசபை
இவற்றின் அங்கத்தினர். சென்னை 'கல்வி' இலாகாவைச்
சேர்ந்த 'டெக்ஸ்ட்புக் கமிட்டி' அங்கத்தினர். சென்னை
'ஸ்கூல்புக் அண்ட் லிட்டரேச்சர் சொஸைட்டி'
தமிழ்க் கமிட்டி அங்கத்தினர்.]

பதிப்பித்தது.

லாங்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார்
167, மவுண்ட் ரோட், சென்னை.
பம்பாய், கல்கத்தா.

1917

[ரிஜிஸ்தர் செய்தது.]

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."—திருக்குறள்.

ஆறாவது

மெய்ப்பாட்டியல்.

249. பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொ
[ருளுங்
கண்ணிய புறனே நானான் கென்ப.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்னபெயர்த்தோவெனின், மெய்ப்பாட்டியலென்னும் பெயர்த்து. மெய்ப்பாடென்பன சில பொருள் உணர்த்தினமையின் அப்பெயர்த்தாயிற்று. இதனானே ஒத்துநுதலியதூஉம் மெய்ப்பாடு உணர்த்துதலென்பது பெற்றாம். மெய்ப்பாடென்பது பொருட்பாடு. அஃதாவது, உலகத்தார் உள்ளநிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல். அதனது இலக்கணங்கூறிய ஒத்தும் ஆகு பெயரான் மெய்ப்பாட்டியலென்றாயிற்று. மேலோத்தினோடு இவ்வோத்தினிடை இயைபென்னையோவெனின், மேலை ஒத்துக்களுட் கூறப்படும் ஒழுகலாற்றிற்குங், 'காட்டலாகாப் பொருள்' (தொல்-பொருளியல் - 53) என்றவற்றிற்கும் எல்லாம் பொதுவாகிய மனக்குறிப்பு இவையாகலின் இவற்றை வேறுகொண்டு ஓரினமாக்கி மெய்ப்பாட்டியலென வேறோர் ஒத்தாக வைத்தமையானே எல்லாவற்றோடும் இயைபுடைத்தென்பது. இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அம்மெய்ப்பாடு பிறர் வேண்டுமாற்றான் இத்துணைப் பகுதிப்படுமென் றுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்: பண்ணைத்தோன்றிய எண்ணான்கு பொருளும்—முடியுடைவேந்தருங் குறுநிலமன்னரு முத

லாயினோர் நாடகமகளிர் ஆடலும்பாடலுங் கண்டுங்கேட்டுங் காமநுகரும் *இன்பவிளையாட்டினுட் டோன்றிய முப்பத்திரண்டுபொருளும்; கண்ணிய புறனே நானான்கு என்ப— அவை கருதிய பொருட்பகுதி பதினாறாகி அடங்கும் நாடக நூலாசிரியர்க்கு, என்றவாறு.

அது அகத்தியும் முதனூலைநோக்கிக் கூறியவாறு போலும்.

முப்பத்திரண்டாவன யாவையெனின்,—ஒன்பதுசுவையெனப்பட்டவற்றுள் உருத்திரமொழித்தொழிந்த எட்டனையுங் கூறுங்காற், சுவைக்கப்படும்பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துப்பட்டவழி உள்ளத்து நிகழுங் குறிப்புங், குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீரரும்பலும் மெய்ம்மயிர்சிலிர்த்தலுமுதலாக உடம்பின்கண்வரும் வேறுபாடாகிய சத்துவங்களுமென நான்காக்கி, அச்சுவையெட்டோடுங்கூட்டி, ஒன்று நான்கு செய்து உறழ், முப்பத்திரண்டாமென்பது. எனவே, சுவைப்பொருளுஞ் சுவையுணர்வுங் குறிப்பும் விறலுமென நான்காயின. விறலெனினுஞ் சத்துவமெனினும் ஒக்கும்.

சுவைப்பொருளென்பன, அறுசுவைக்கு முதலாகிய †வேம்புங் கடுவும் உப்பும் புளியுங் கரும்பும்போல்வன. அவையாமாறு: நகைச்சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறுந் தமிழுங், குருடரும் முடவருஞ் செல்லுஞ் செலவும், பித்தருங் களியருஞ் சுற்றத்தாரை இகழ்ந்தாருங் குழவி கூறும்மழலையும் போல்வன. அச்சப்பொருளாவன,

---

* 'காமவிளையாட்டு' என்பதும் பாடம். பண்ணை - விளையாட்டு; 'கெடவரல் பண்ணையாயிரண்டும் விளையாட்டு' என்றார் உரியியலினும். [illegible] 319.

† அறுசுவையிற் றுவர்ப்புச்சுவைக்கு முதலான துவரையேனும் பாக்கேனும் இங்கே இல்லை; ஏடெழுதுவோரால் விடுபட்டது போலும்! நகை முதலாய. நகை அனுகை, ஆவரல் விடப்பு அச்சம் விரம் வேகை கூறில்.

"வள்ளெயிற் றரிமா வான்வரி வேங்கை
முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ
மானே. யீற்ரு மதமா வேக பாதங் பூதம்.(பேருணர்க்கால்)
கூற்றங் கோண்மா குன்றுறை யசுணம்"

என்று சொல்லப்பட்டனபோல்வன. இவற்றைச் சுவை கோடலென்பதென்னையெனின், நகையும் அச்சமு முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவாலொருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள்பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச்சுவை யெனப்படும். வேம்பென்னும் பொருளும் நாவென்பொறியுந் தலைப்பெய்துழியல்லது கைப்புச்சுவை பிறவாததுபோல, அப்பொருள் கண்டவழியல்லது நகையும் அச்சமுந் தோன்ரு. ஒழிந்த காமமுதலியனவும் அன்ன. இக்கருத்தேபற்றிப் பிற்காலத்து நாடகநூல் செய்த ஆசிரியரும்,

"இருவகை நிலத்தி னியல்வது சுவையே"

என்ருரென்பது.

இனி இருவகை நிலனென்பன உய்ப்போன்செய்தது காண்போர்க்கெய்துதலன்ரு்வெனின் சுவையென்பது ஒப்பினுனைய பெயராகலான் வேம்புசுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்வினுற் பிறனுணரான், இவன் கைப்புச்சுவைத்தானெனக் கண்ணுணர்வினுன் அறிவதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒரு பொருள்கண்டு அஞ்சி ஓடிவருகின்ரு்ெருவனை மற்ரு்ருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமாமுதலாயின கண்டு அஞ்சினனென்றறிவதல்லது வள்ளெயிற்றரிமாவினைத் தான்காண்டல் வேண்டுவதன்று; தான் கண்டானுயின், அதுவுஞ் சுவையெனவேபடும். ஆகவே அஞ்சினனைக்கண்டு நகுதலுங் கருணைசெய்தலுங் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன்செய்தது காண்போனுய்த்த அறிவின் பெற்றியாற் செல்லாதாகலின் இருவகை நிலமெனப்படும்.

சுவைப்பதோன் நகுந்திபுசுவை தவன் டாமை நகுமிம்
சீர்த்துவத்தினைப் பாடப்பட்டுக் காணபோர்க்கெய்துவதேன்.

வன சுவைப்பொருளுஞ் சுவைத்தோனுமென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல் வேண்டுமென்பது.

குறிப்பென்பது, கைப்பின் சுவையுணர்வு பிறந்தவழி வெறுப்பு முதலாயின உள்ளநிகழ்ச்சிபோல *அஞ்சுதக்கன கண்டவழி அதனை நோக்காது வெறுக்கும் உள்ளநிகழ்ச்சி. விறலென்பன, அவ்வுள்ள நிகழ்ச்சி பிறந்தவழி வேம்புதின் றூர்க்குக் தலைநடுங்குவதுபோலத் தாமே தோன்றும் நடுக்க முதலாயின. இவ்வகையால் இந்நான்கினையும் எட்டோடும் உறழவே முப்பத்திரண்டாயின.

இனி அவை பதினாறினவாறென்னையெனின், வேம் புமுதலாயின பொருளும் அதனோடு நாமுதலாயின பொரி யும் வேறுவேறு நின்றவழிச் சுவையென்று சொல்வதே பிறவாமையானும் அவ்விரண்டுங் கூடியவழிச் சுவை யென்பது பிறத்தலானும் அவை பதினாறும் எட்டெனப் படும்; இனிக் குறிப்புஞ் சத்துவமும் மென்பனவும் உள்ள நிகழ்ச்சியும் உடம்பின் வேறுபாடு மென்பராகலின் அவ் வுள்ளநிகழ்ச்சியை வெளிப்படுப்பது சத்துவமாகலின் அவை பதினாறும் எட்டாயடங்குமாகலின் அவை ஈரெட் டுப் பதினாறு மென்பது. மற்றிவை பண்ணைத்தோன்று வனவாயின், இது பொருளோத்திலுள் ஆராய்வதென் னை? நாடகவழக்கத்தானே, ஒருவன் செய்ததனை ஒருவன் வழக்கினின்றும் வாங்கிக்கொண்டு பின்னர்ச் செய்கின்ற தாதலானும் வழக்கெனப்படாதாகலானும் ஈண்டு ஆராய் வது பிறிதெடுத்துரைத்தலென்னுங் குற்றமாமென்பது

அதுவன்றே இச்சூத்திரம் பிறன்கோள் கூறலென் உத்திவகையாற் கூறி, அதுதானே மரபாயிற்றென் பது. (க)

* 'அஞ்சுதரக்கண்டவழி' என்பதும் பாடம்.

பதினைம்பெருங்குறைவ எட்டாவது முடிந்தமைந்தன.

250. நாலிரண் டாகும் பாலுமா ருண்மேட.

இது மெய்ப்பாட்டின் அடக்கங் கூறுகின்றது.

இதன் பொருள்: முப்பத்திரண்டு மெய்ப்பாடும் பதினைந்தாதலேயன்றி எட்டாதலும் உண்டு, என்றவாறு.

அவை வீரம் அச்சம் வியப்பு இழிபு காமம் அவலம் நகை நடுவுநிலையென்பன. இவற்றின் விகாரமாகிய சத்துவங் களெட்டனையும் இவற்றுளடக்கி எட்டாக்கிக் கூறியவாறிது வென்பது. நாலிரண்டாதலு முண்டென்றது பாலென்றதனான் எட்டாகலேயன்றி அவை ஒன்பதாதற்குப் பகுதியு முடையவென்பது; என்னை?

"உருத்திரந் தன்னே டொன்ப தாகும்"

என்பவாகலின். உம்மை இறந்தது தழீஇயிற்றாதலான் இவையும் பண்ணைத் தோன்றிய எண்ணென்கெனப்பட்டன. அவற்றுப் பகுதியென்னு மிதுவும் பிறன்கோட் கூறியவாறாயிற்று. மற்றிவற்றது பய னென்னையெனின்; பொருளதிகாரத்துக் கூறுகின்ற வழக்கியலே அவையாமென்பது கூறி, அச் சுவைக்கு ஏதுவாய பொருளினை அரங்கினுள் நிறீஇ, அது கண்டு குறிப்புஞ் சத்துவமும் நிகழ்த்துகின்ற கூத்தனையும் அரங்கிற்றந்து, பின்னர் அவையரங்கினேர் அவன் செய்கின்ற மெய்ப்பாட்டினை உணர்வராக வருகின்ற முறைமையெல்லாம் நாடகவழக்கிற்கே உரியபகுதியெனவும், அப் பகுதியெல்லாம் ஈண்டுணர்த்தல் வேண்டுவதன்றெனவுங் கூறியவாறு. இங்ஙனம் அடங்குமென்பது *நாடகநூலுள்ளுஞ் சொல்லுபவோவெனின், சொல்லுபவாகலினன்றே அதன்வழி நூல்செய்த ஆசிரியர் செயிற்றியனார் சுவையுணர்வும் பொருளும் ஒன்றாகவடக்கிச் சுவையுங் குறிப்புஞ்

*நாடகநூல்வழி 'நாடக நூலுள்ளே' என்பதும் பாடம்.

சத்துவமுமென மூன்றுக்கி வேறுவே றிலக்கணங் கூறி அவற்றை,

"எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
நண்ணிநி னுணர்ந்தோர் நவன்றன ரென்ப"

என்றோதினராயிற்றென்பது. (உ)

251. நகையே யழுகை *யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.

இது பிறர்வேண்டுமாற்றானன்றி இந்நூலுள் இவ்வாறு வேண்டப்படும் மெய்ப்பாடென்பதுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: இச்சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடென்று சொல்லுவர் புலவர், என்றவாறு.

நகையென்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச்சிரித்தலுமென மூன்றென்ப. அழுகையென்பது அவலம்; அஃது இருவகைப்படும், தானே அவலித்தலும், பிறரவலங்கண்டு அவலித்தலுமென; இவற்றுள் ஒன்று கருணையெனவும் ஒன்று அவலமெனவும் பட்டுச் சுவை ஒன்பதாகலுமுடைய என்பது. இளிவரலென்பது இழிபு. மருட்கையென்பது வியப்பு; அற்புதமெனினும் அமையும். அச்சமென்பது பயம். பெருமிதமென்பது வீரம். வெகுளியென்பது உருத்திரம். உவகையென்பது காம முதலிய மகிழ்ச்சி. இவை அவ்வெட்டுமாவன. இவற்றைச் சுவையெனவும் குறிப்பெனவும் வழங்கினும் அமையும்.

மற்று நகை முன்வைத்ததென்னையெனின், பண்ணைத்தோன்றிய எண்ணெண்குபொருட்கும் இவையென்னும்

* 'இழிவரன்' என்பதும் பாடம்.

இயலபிலலனவலல என்றதற்கு விகாயாட்டுப்பொருட்டாகிய நகையை முன்வைத்தானென்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான். இளிவரல் அதன்பின் வைத்தான், அழுகையும் இளிவரலோடு இயைபுடைமை பின். தானினிவந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின் இளிவரலின்பின் வியப்புவைத்தான். வியப்புப்பற்றியும் அச்சம்பிறத்தலின் அச்சத்தை அதன்பின் வைத்தான். அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதன்பின் வைத்தான். அவ்வீரத்தின்பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன்பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலை யாகலானும் நல்லாவற்றினும் சண்டு ஒன்றதற்குச் சிறந்ததாகலானும் முதற்கணிறுத்திய நகைக்கு இயைபுடைத்தாகலானும் உவகையை அவ்வீற்றுக்கண் வைத்தானென்பது. இவ்வெட்டனுண் முதனின்ற நான்கும் முற்கூறுதற்கும் இறுதிநின்ற நான்கும் பிற்கூறுதற்குங் காரணம் வருகின்ற சூத்திரங்களானும் பெறுதும்.

மற்றிவ்வெட்டனேடுஞ் சமநிலைகூட்டி ஒன்பதென்னுமோ நாடகநூலுட்போலவெனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் சண்டுக் கூறிய திலனென்பது; அதற்குவிகாரமுண்டெனின் முன்னே யெட்டனுள்ளுஞ் சார்த்திக்கொள்ளப்படும். அஃதல்லதூஉம் அஃதுலகியல் நீங்கினூர் பெற்றியாகலின், சண்டு உலகவழக்கினுட் சொல்லியதிலனென்பது. ஒழிந்த எட்டும் உலகியலாகலிற் கூறினன், 'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்' (தொல் - சிறப்புப்பாயிரம்) என்றாகுந்தமையினென்பது. அவை எட்டுமாமாறு இனிக் கூறுதும். (க)

நகை நான்கு

252. **எள்ள லிளமை பேதைமை மடனென்**
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப.

இது நிறுத்தமுறையானே நகைக்குறிப்பு நான்கென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: எள்ளுதலும் இளமையும் பேதைமை யும் மடனுமெனக் கருதப்பட்ட நகை நான்கு, என்றவாறு.

இவை நான்கும் பொருளாகிச் சத்துவமுங் குறிப்பும் சுவையுமென்னும் மூன்றற்கும் முதற்கண்ணவாகலான் மூன் றினையும் அடக்கிப் பொருட்பகுதியான் அவற்றைக் கூறு கின்றவாறு இது வென்பது. இவை நான்கும் ஒன்று இரண் டாகி எட்டாதலும் உடைய.

எள்ளலென்பது தான் பிறரை எள்ளிநகுதலும் பிற ரால் எள்ளப்பட்டவழித் தான் நகுதலுமென இரண்டாம். இளமையென்பது தான் இளமையாற் பிறரை நகுதலும் பிறரிளமைகண்டு தான் நகுதலுமென இரண்டு. பேதைமை என்பது அறிவின்மை. *மடமையென்பது பெரும்பான்மை யுங் கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை. இவையுந் தன் மடமையான் நகுதலும் பிறன்மடமையான் நகுதலு மென இரண்டாம்.

எள்ளலென்பது இகழ்ச்சி. "எள்ளி நகினும்வரூஉம்" (கலி - 61) என்பது தன்கண் நிகழ்ந்த எள்ளல்பொருளாக நகைபிறந்தது. "நல்லே மன்னென நகூஉப்பெயர்ந் தோளே" (அகம் - 247) என்பது பிறரெள்ளியது பொருளாகத் தன் கண் நகைபிறந்தது; என்னை? தன்மகள் தன்னை மதியாது இகழ்ந்தாளென நக்கவாறு. இது வெகுளிப்பொருளாக நக் கதன்றேவெனின், அது வீரர்க்கே உரித்தாகல்வேண்டும்; இவள் அவனை வெகுண்டு தண்டஞ்செய்வாளல்லள் அதற் கே உவப்பினல்லதென்பது. அல்லதூஉம், "நகுதக் கன

*'மடம் என்பது கொளுத்தக்கொண்டு கொண்டது விடா மை' என்றார் ஆசிரியர் நக்கீரனாரும்; இதை 2 - வது சூத்திர உரை.

ரே நாடுமீக் கூறுநர்" (புறம் - 72) என்றுற்போல வீரத் தெழுந்த வெகுளிநகையும் எள்ளல் நகையென்றே அடக்க வேண்டும் சண்டென்பது.

"நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே" (கலி - 13.)

என்புழித் தன் இளமைபொருளாக நகைபிறந்தது.

"திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன்" (கலி - 86.)

என்பதும் அது.

அங்ஙனம் மகன்சிரித்தவழித் தாய்க்கு நகைதோன் றிற்றேல் அது பிறரிளமை பொருளாக நகைதோன்றிற்றும். "நாவொடு நவிலா நகைபடு கிளவி" (சிலப்- ஊர்காண் - 139) என்பது பிறரிளமைபொருளாக நகைபிறந்தது.

"நகைநீ கேளாய் தோழி" (அகம் - 248) என்பது தன்பேதைமைபொருளாக நகைபிறந்தது; என்னை? தான் செய்த தவற்றிற்குத் தாய் தன்னை வெகுண்டது தனக்கு நகையாகக்கொண்டமையின்.

"நகையா கின்றே தோழி
மம்மர் நெஞ்சினன் மருழுதனின் றதுவே" (அகம் - 56.)

என்பது பிறன்பேதைமை பொருளாக நக்கது.

"நம்மொடு நக்க வால்வெள் ளெயிறே" (குறுந் - 169.)

என்பது தன் மடத்தான் நகைதோன்றிற்று; என்னை? நீயிர் கூறிய அதனையே மெய்யெனக்கொண்டு மகிழ்ந்து நக்கனை மென்றமையின்.

"குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தான் போல நகும்." (குறள் - 110-5.)

என்பதும் அது.

"நாநகை யுடைய நெஞ்சே நம்மொடு
தான்வரு மென்ப தடமென் மருளி" (அகம் - 121.)

னைப் பிறர்மடம் பொருளாக நகைதோன்றிற்று. பிறவும் அன்ன.

இவ்வோதப்பட்டவற்றுக்கெல்லாம் உவகை உரித்து. உள்ளப்பட்ட நகைநான்கு என்றதனுள் உள்ளத்தோடு பிறவாத நகையுமுள, அவை "வறிதகத் தெழுந்த வாயன் முறுவலள்" (அகம்-5) என்றாற்போல வருவனவெனக் கொள்க. (சு)

253. இளிவே யிழிவே யசைவே வறுமையென
வினிவில் கொள்கை யழுகை நான்கே.

இது முறையானே அழுகையென்னுஞ் சுவையினைப் பொருள் பற்றி உண்டாத்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: இளிவும் இழத்தலும் அசைதலும் வறுமையுமென இந்நான்கு பொருள்பற்றித் தோன்றும் அவலம், என்றவாறு. இளிவென்பது பிறரான் இகழப்பட்டு எளியனாதல். இழிவென்பது தன்தையுந்தாயு முதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலாயவற்றையும் இழத்தல். அசைவென்பது பண்டை நிலைமை கெட்டு வேறொருவாறாகி வருந்துதல். வறுமையென்பது போகந்துய்ப்பப்பெறாத பற்றுள்ளம். இவை நான்குந் தன்கட் டோன்றினும் பிறன்கட் டோன்றினும் அவலமாமென்பது. எனவே, இவையும் எட்டாயின. வினிவில் கொள்கை, கேடில்கொள்கை; அங்ஙனங் கூறிய மிகையானே அழுகைக் கண்ணீர்போல உவகைக் கண்ணீர் வீழ்தலும் உண்டு. அதனையும் அழுகைப்பாற் சார்த்தி உணரப்படும்.

"எழுதெழில் சிதைய வழுதன வேங்கி
யடித்தென வருத்த நித்திப் பல்லூழ்
கொடித்தெனச் சிவந்த மெல்விரற் றிருகுபு
கூர்நுதி மழுங்கிய வெயிற்ற
ளூர்முழுது தலுவிற் காணிய சென்மே" (அகம் - 175.)

× அறுபகிந்த பொருள்.

ன்பது, பரத்தையை நீ யெள்ளினையென்று அழுது ருகின்றாளென்று தலைமகற்குச் சொல்லியதாகலின் இது ண்கட் டோன்றிய இளிவரல் பொருளாக அவலச்சுவையைத் றந்தது. "கயமல ருண்கண்ணுய் காணு யொருவன்" (கலி-7) என்னும் பாட்டினுள் "தானுற்ற நோயுரைக்கல்லான் பெயருமற் பண்ணுளும்" எனத் தலைமகன் இளிவந்தொழுகு. து காரணமாகச் "சேயேன்மன் யானுங் குயருழப்பேன்" ன்றமையின் இது பிறன்கட் டோன்றிய இளிவரல்பொருளாக அவலச்சுவை பிறந்தது. இது கருணையெனவும்படும்.

"மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே" (புறம் - 49) என்புழிக் கணவனை யிழந்தாள் அவற்குப் பலிக் கொடைகொடுத்தற்கு மெழுகுகின்றாளைக் கண்ணீரே நீராக மெழுகுகின்றாளென்றமையின் இது தன்கட்டோன்றியஇழவுபற்றிப் பிறந்த அவலச்சுவையாயிற்று. "ஐயோ வெனின் ான் புலியஞ்சுவலே" (புறம் - 255) என்பதும் அது. "பின் னெடு முடித்த மண்ணு முச்சி" என்னும் பாட்டினுள்,

"அணங்குறு கற்பொடு மடங்கொளச் சாஅய்
மின்னேய்த் தலையையு மல்லே *தெறுவர
வென்ஞ குவன்கொ லளிய டானென
வென்னழி பிரங்கு மின்னெ டியானும்" (அகம் - 73.)

ன்றவழித் தலைமகன்பிரிவிற்குத் தோழி படர்கூர்ந் ாளெனச் சொல்லினமையின் அது பிறன்கட் டோன்றிய ிழவுபற்றி அவலம்பிறந்ததாம்.

"தனியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவெண்ணெக் காட்டி யளியனென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் தஞ்சேன்" (கலி-133.)

* 'தெய்ய' என்பதும் பாடம்.

எனத் தன்கட் டோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

"இல்வழங்கு மடமயில் பிணிக்குஞ்
சொல்வலை வேட்டுவ னாயினன் மூன்னே." (புறம்-252.)

என்பது பிறன்கட் டோன்றிய அசைவுபற்றிய அவலம்; என்னை? அள்ளிலைத்தாளி கொய்யாநின்றாள் இது பொழுது என அவலித்துச் சொல்லினமையின்.

"இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழுஉந்தன் மகத்துமுக மேக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினவி
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண" (புறம் - 164)

என்புழி, முலைப்பசை காணாது அழுகின்றது குழவி யென்பது தன்கட் டோன்றிய வறுமைபற்றி அவலம்பிறந் தது. மகமுகமேக்கி அழுகின்றாள் என்மனைவி யென்பது பிறன்கட் டோன்றிய வறுமையவலம்.

"இன்ன விறலு முளகொ னமக்கென
மூதிற் பெண்டிர் கலிந்தழ நாணிக்
கூற்றுக்கண் ணேடிய வெருவரு பறந்தலை" (புறம் - 10.)

என்புழி மூதூர்ப்பெண்டிர் இழவுபற்றி அழுதாராயிற் கூற்றுக் கண்ணேடாதாகலின் அவர் உவந்தனரென்பது பெற்றும்; அதனானே அஃது உவகைக் கலுழ்ச்சியா மென் பது. (6)

254. மூப்பே பிணியே வருத்த மென்மையோ
டியாப்புற வந்த விளிவர லன்கே.

இது மூன்றும் எண்ணுமுறைமைக்கண்ன இளிவரல் கூறுகின்றது.

இதன்பொருள்: மூப்பும் பிணியும் வருத்தமும் மென் வலிமை மையுமென நான்கு பொருள்பற்றிப் பிறக்கும் இளிவரல், என்றவாறு.

வருத்தமெனினும் முயற்சியெனினும் ஒக்கும். 'யாய் புற வந்த' என்பது திட்பமுறவந்த என்றவாறு. அங்ஙனங் கூறிய மிகையானே வீரமுதலாயினபற்றியும் இளிவரல் பிறக்கும் என்றவாறு. இவையும் முன்னையபோலத் தன் கட் டோன்றுவனவும் பிறன்கட் டோன்றுவனவும் பற்றி நாட்டாதலுடைய வென்பது கொள்க.

"தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற் கமேல்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே" (புறம் - 243.)

என்பது தன்கட் டோன்றிய மூப்புப்பொருளாக இளிவரல் பிறந்தது; என்னை? இளமைக்காலத்துச் செய்தன செய்யமாட்டாது இளிவந்தனம் இக்காலத்து என்றமையின்.

"மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை யெள்ளலஃ தமைகுந் தில்ல" (அகம் - 6.)

என்பதும் அது.

"மூத்துத்தலை யிறைஞ்சிய நின்னோ டியானே
போர்த்தொழி றொடங்க நாணுவ லதனான்"

என்பது பிறன்கட் டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது.

"இமயமுந் துளக்கும் பண்பினை
துணையி லாளர் பெண்டிரிஃ தெவனோ"

என்பது தன்கட் டோன்றிய பிணிபற்றி இளிவரவு பிறந்தது; என்னை? மலையைத்துளக்கும் ஆற்றலையுடையாய்

காமப்பிணிகூர்ந்தோரை அலைப்பது நினக்குத் தகுவதன் றென இளிவந்து வாடைக்குக் கூறினமையின்.

குணகடற் றிரையது பறைதபு நாரை
* * *
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே" * (குறுந்-123)

என்பது நெஞ்சினை வேறு நிறீஇக் கூறினமையிற் பிறன்கட் டோன்றிய பிணியெனப்படும்.

இதனுட் "சேய ளரியோட் படர்தி" என்றமையின் வருத்த மெனினும் முயற்சி யெனினும் ஒக்கும். இது பிறன்கட் டோன்றிய வருத்தமும் வந்ததாயிற்று. "யான்ற னறிவ றுனறி யலளே" என்பது தன்கட் டோன்றிய வருத் தம்பற்றி வந்த இளிவரல்; என்னை? அது பின்னின்ற தலைமகன் கூறியதாகலின். "ஒன், றிரப்பான்போ லினிவந் தஞ் சொல்லும்" (கலி - 47) என்பது பிறன்கட் டோன் றிய வருத்தம்பற்றி வந்தது; என்னை? அவன் இவ்வா றிழுகுதல் நமக்கு இளிவரலாமென்னுங் குறிப்பினாற் கூறிக் குறை நயப்பித்தமையின்.

"வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்" (புறம் - 231.)

எனத் தன்கண்ணும் பிறன்கண்ணுந் தோன்றிய மென் மைபற்றி இளிவரல் பிறந்தன; என்னை? மெலியார் இளிவந் தன கூறுவராயினும் வலியார் மீக்கூறுவராயினும் இவன் அவை செய்யானென்றலின்.

"ஒருவகை யுடைய தெறிவலோ யானு
மிருகை சுமந்துவாழ் வேன்"

என்பது வீரம்பற்றிய இளிவரல் பிறந்தது. இது தன் கண்ணும் பிறன்கண்ணுந் தோன்றுமையின் இலேசினாற் கொண்டாமென்பது. (க)

* இச்செய்யுள் முழுவதையும் களவியல் 10-ஆம் சூத்திரம் உச்சிஞர்க்கினிய ருரையிற் காண்க.

மகிட்கை நான்கே

255. புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.

இது வியப்புணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: புதிதாகக் கண்டனவும், கழியப் பெரியவாயினவும், இறப்பச் சிறியனவும், ஒன்று ஒன்றுப்பத் திரிந்தனவுமென நான்கும்பற்றி வியப்புத் தோன்றும், என்றவாறு.

'மதிமைசாலா மருட்கை' யென்பது அறிவினை உலக வழக்கினுள் நின்றவாறு நில்லாமற் றிரித்து வேறுபடுத்து வருவதென்றவாறு. இவையுமெல்லாம் மேலனபோலத் தன்கட் டோன்றினவும் பிறன்கட் டோன்றினவுமென எட்டாதலுடைய.

"மலர்தார் மார்ப னின்றேற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோர்யா னுகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணெடு நெகிழ்தோ ளானே."(அகம்-82.)

என்பது தன்கட் டோன்றிய புதுமைபற்றிய வியப்புப் பிறந்தது; என்னை? தன்கருத்து வெளிப்படாது தன்மெய்க் கட் டோன்றிய புதுமையைத் தலைவி வியந்தாள்போலத் தோழிக்கு அறத்தொடு நின்றமையின்.

"மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவன ரடுக்கத் தியலி யாடுமயில்
விழவுக்கள விறலியிற் றோன்று நாடன்"(அகம் - 82.)

என்றவழிப் பண்டு ஒருகாலுங் கண்டறியாதபடி ஆடிற்று மயிலென்றமையிற் பிறபொருட்கட் டோன்றிய புதுமை யாயிற்று.

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே." (குறுந் - 3.)

என்பது பெருமைவியப்பு; என்னை? கருங்கோற் குறிஞ்சிப்பூக்கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழிமுறை முறையாற் பெருகற்பாலதாகிய நட்பு மற்றவனைக் கண்ணுற்றஞான்றே நிலத்தினதகலம் போலவும் விசும்பினோக்கம்போலவுங் கடலினாழம்போலவும் ஒருகாலே பெருகிற்றென்றமையின்; இது தன்கட் டோன்றிய பெருமை வியப்பு. இது தலைமகன் கருத்தினை நட்பிற்குங் கொள்ளுங்காற் பிறன்கட் டோன்றிய பெருமை வியப்பாமென்பது கொள்க.

"மைம்மல ரோதி மணிநகைப் பேதைதன்
கொம்மை வரிமுலை யேந்தினு - மம்ம
கடையிற் சிறந்த கருநெடுங்கட் பேதை
யிடையிற் சிறியதொன் றில்."

என்பது பிறன்கட் டோன்றிய சிறுமை வியப்பு. தன்கட் டோன்றினவுங் கண்டுகொள்க.

"எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும" (புறம் - 5.)

என்பது நரிவெரூஉத்தலையார் தம்முடம்பு பெற்று வியந்து கூறிய பாட்டாகலின் இது தன்கட் டோன்றிய ஆக்கம்பற்றி வியப்புப் பிறந்ததாயிற்று.

"உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்கு" (நாலடி 4 - 8.)

என்பது பிறபொருளாக்கம்பற்றிய வியப்பு.

இனி மதிமைசாலா மருட்கையானே சிறுமைப் பொருள் பெருந்தொழில் செய்ததலும் பெருமைப்பொருள் சிறுதொழில் செய்ததலும் வியப்பா மெனக்கொள்க. "கிள்ளி னினி கனைந்தகா லொண்கழ லொட்டு" (புறம்-7) என்னும் பாட்டுச் சிறியோர் பெருந்தொழிலைச் செய்தது.

"அன்னவெருவன்றன் ஞண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய்" (கலி-47.)

என்பது பெரியோன் சிறுதொழில் கூறலின் வியப்பாயிற்று.

புதுமையை ஆக்கத்துளடக்கி முதுமை யென்பது பாடமாகவும் உரைப்ப. அன்னதோர் வழக்கின்மையானும் புதுமை ஒன்று ஒன்றுய்த் திரியுமெனப்பட்டு அவ்வாக்கத் துள் அடங்காமையானும் அஃதமையா தென்பது.

இங்ஙனம் இவை நான்கு சூத்திரப்பொருளும் நா லைஞ்சு பதினேழுகியும் மூப்பத்திரண்டாகியும் விரியுமாகலின் இவற்றை ஓரினமாக்கி முதற்சூத்திரத்து முன்வைத்தா னென்பது. இனி வருஞ்சூத்திர நான்கினும் எண்ணப்படும் பொருள் ஒன்று இரண்டாகாமையின் அவை பதினேறையா மென்பது. அஃதேயெனின் இத்தினையுங் கூறிவந்த முப் பத்திரண்டினையும் இனிக்கூறும் பதினேழினையும் நோக்கி முதற்சூத்திரத்துட்,

"பண்ணைத் தோன்றிய வெண்ணைங்கு பொருளும்
கண்ணிய புறனே நானுன் கென்ப" (தொல்-மெய்ப்—1.)

என்று னென்னுமோவெனின், என்னுமன்றே: பதினேழு பொருளும் மேற்கூறிய முப்பத்திரண்டுமென்று பாடமை யினென்பது; என்றார்க்குத் தன்கட் டோன்றுதல் பிறன் கட் டோன்றுதலெனப் பகுத்துப் பொருளுரையாது மே னையும் இனி வருகின்றனவும் நானுன்கேயாகலாற் 'பண்

1 ஆக்கம் 2 வன்று வென்றெடுத்த திரிவது. புதுமை அன்னாது திரியாதாகலின் அதனுள் அடங்காது.

ணைத்தோன்றிய எண்ணான்குபொரு' ளென்றானாமெனின் அங்ஙனங் கூறின் அவை "கண்ணிய புறனே நானான் கென்ப' என்றும், 'நாலிரண் டாகும் பாலுமா ருண்டே' (தொல்-மெய்ப்-2) என்றும் மடங்கக்கூறல் வேண்டாவாம்; வேண்டவே, இச்சூத்திரம் எட்டுவகையாகியே செல்லுமென மறுக்க. அல்லதூஉம் இஃது உலகவழக்காதலிற் பண்ணைத் தோன்றிய பொருள் ஈண்டு ஆராயானென்பது. *அன்றியும் இவற்றைப் பண்ணைத்தோன்றிய பொருளெனின் ×ஒன்றொன்றாக்கிக் கூறாது கூத்தன் அரங்கினுள் இயற்றும் வகையானே சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென வேறு வேறு செய்வான் ஆசிரியனென்பது. ×ஒன்றையொன்றாளடக்கி (எ)

அச்சமாரான்கி

256. அணங்கேவிலங்கே கள்வர்தமிறையெனப்
பிணங்கல் சாலா வச்ச நான்கே.

இது முறையானே அச்சமுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: தெய்வமும் விலங்குங் கள்வருந் தமக்கு இறைவராயினாருமென நான்கு பகுதியான் அச்சம் பிறக்கும், என்றவாறு.

அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈறாகிய பதினெண்கணனும் நிரயப்பாலரும் பிறரும் அணங்குதற்றொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும் உருமிசைத் தொடக்கத்தனவு மெனப்படும். விலங்கென்பன அரிமா முதலாகிய அஞ்சுதக்கன. கள்வரென்பார் தீத்தொழில்புரிவார். இறையெனப்படுவார் தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முதலாயினார். பிணங்கல்சாலா அச்சமென்றதனான் முன்னையபோல இவை தன்கட் டோன்றலும் பிறன்கட் டோன்றலுமென்னுந் தடுமாற்றமின்றிப் பிறிதுபொருள் பற்றியே வருமென்பது.

* 'அற்றன்றியும்' என்பதும் பாடம்.

உதாரணம் :

"யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாரு மறம்பூண்வாழ்க்கை"

(பத்து-பெரும்பாண்-134-136.)

என்பதனுள் அணங்கும் விலங்கும் பொருளாக அச்சம் பிறத்தல் இயல்பென்பது கூறியவாறாயிற்று.

"ஒருஉநீயெங் கூந்தல் கொள்ளல்யா னின்னை
வெருஉதுங் காணுங் கடை" (கலி-87.)

இது கள்வர் பொருளாக அச்சம்பிறந்தது ; என்னை ? அவனைக் கள்வர்பாற் சார்த்தி உரைத்தமையின்.

"எறித்துமே னெக்குறின் வாழலே மென்னுங்
கருத்திறைக்கை கூப்பிப் பழிஇ—யெருத்திறைஞ்சிக்
கால்வண்ண மல்லாற் கடுமானேர்க் கோதையை
மேல்வண்ணங் கண்டறியா வேந்து."

இஃது இறைபொருளாக அச்சம் பிறந்தது.

பிணங்காத அச்சமென்னது சாலா அச்சமென்ற மிகையான் இந்நான்குமேயன்றி ஊடன் முதலியனவும் அச்சத்திற்குப் பொருளாமென்று கொள்க.

"சேய்இன்று செய்யாத சொல்லிச் சினவனின்
ஞாண் கடக்கிற்பார் யார்." (கலி - 81.)

என்பது புலவிப்பொருளாக அச்சம் பிறந்தது.

"அணிகிளர் சாந்தி னம்பட் டிமைப்பக்
கொடுங்குழை மகளிரி னெடுங்கிய விருக்கை" (அகம்-235.)

எனவும,

"அச்சா ருக வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னகுவல்" (கலி - 75.)

எனவும் வருவனவும் அவை. பிறவும் அன்ன. (அ)

பெருமிதம் நான்கே

257. கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச் சொல்லப் பட்ட பெருமித நான்கே.

இஃது ஆறும் எண்ணுமுறைமைக்கண் நின்ற வீரம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கல்வியுந் தறுகண்மையும் புகழுங் கொடையுமென்னும் நான்கும்பற்றி வீரம்பிறக்கும், என்ற வாறு.

இச்சூத்திரத்துள் வீரத்தினைப் பெருமிதமென்றெண் ணினான்; என்னை? வில்லாரொடும் ஒப்பநில்லாது பேரெல்லை யாக நிற்றல் பெருமிதமெனப்படும் என்றற்கென்பது. கல்வி யென்பது தவமுதலாகிய வித்தை. தறுகணென்பது அஞ் சுதக்கன கண்டஇடத்து அஞ்சாமை. இசைமையென்பது இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடுவரு வன செய்யாமை. கொடையென்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளுங் கொடுத்தல்.

உதாரணம்:

"வில்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள்" (கலி - 141.)

என்பது கல்விபற்றிய பெருமிதம்; என்னை? என்னையுங் கல்லாமை காட்டினளெனத் தன்பெருமிதங் கூறினமையின்.

"அடன்மாமே லாற்றவே னென்னை மடன்மாமேன்
மன்றம் படர்வித் தவள்" (கலி - 141.)

என்பது தறுகண்.

"கழியாக் காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வருஉ மின்பம் வெஃகார்"

என்பது புகழ்.

"வையம், புரவூக்கு முள்ளத்தே னென்னை யிரவூக்கு
மின்னா விடும்பைசெய் தாள்" (கலி - 141.)

என்பது கொடை.

"தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
றபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக" (புறம்-43,)

என்பதும் அது.

'சொல்லப்பட்ட பெருமித' மென்றதனாற் காமம்பற்றி யும் பெருமிதம் பிறக்குமென்று கொள்க.

"பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே" (புறம் - 73.)

என்பது காமம்பற்றிய பெருமிதம். பிறவும் வருவன உளவேற் கொள்க. இது தன்கட்டோன்றிய பொருள்பற்றி வரும்; என்னை? கல்வியுந் தறுகண்மையும் இசைமையும் வேட்கையுங் கொடைத்தொழிலுந் தன் கண்ணவாகலின்.

258. உறுப்பறை குடிகோ ளலைகொலை யென்ற
*வெறுப்பின் வந்த வெகுளி நான்கே.

இஃது ஏழாம் எண்ணு முறைமைக்கண் நின்ற வெகுளி உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: உறுப்பறையென்பது, கைகுறைத்தலுங் கண்குறைத்தலும் முதலாயின; குடிகோளென்பது, தாரமுஞ் சுற்றமுங் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கட் கேடுசூழ்தல்; அலையென்பது, கோல்கொண்டலைத்தன் முதலாயின; கொலையென்பது, அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல்: இவைநான்கும் பொருளாக வெகுளி பிறக்கும், என்றவாறு.

* 'வெறுப்ப' என்பதும் பாடம்

'வெறுப்பின்' என்றதனுள் ஊடற்கண்ணுந் தோன்றும் வெகுளி முதலாயினவுங் கொள்க.

"முறஞ்செவி மறைப்பாம்பு முரண்செய்த புலிசெற்று" (கலி-52) என்பது உறுப்பறையான்வந்த வெகுளி. 'நின்மகன் படை யழிந்துமாறின' னென்றுபலர்கூற,

"மண்டமர்க் குடைந்தன னுயி ரண்டவென்
மூலையறுத் திடுவென் யானெனைச் சினனே" (புறம்-278.)

என்பது குடிகோள்பற்றி வந்தவெகுளி; என்னை? தன்மகன் மறக்குடிக்குக் கேடுசூழ்ந்தானென்று சினங்கொண்டானாகலின்.

"கெருங லெல்லீ யெறிந்தோன் றம்பி
யகற்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன்"

என்பதும் அது.

"வரிவயம் பொருத வயக்களிறு போல
வின்னு மாறுது சினனே" (புறம்-100.)

எனபதனுள் அலைபற்றிச் சினம்பிறந்தது; என்னை? புலி யான் அலைக்கப்பட்ட யானை பொருது போந்தும் அவ்வலைப் புண்டலை நினைந்து சினங்கொள்ளாநின்ற தென்றமையின்.

"உறுதப் பஞ்சா தடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை" (புறம்-72.)

என்பது கொலை பொருளாக வெகுளிச்சுவை பிறந்தது; என்னை? சிறுசொற் சொல்லுதலென்பது புகழ்கொண் டுரைத்தலாகலின்.

"செய்தவ நில்வழி யாங்குச் சினவுவாய்" (கலி-87.)

என்பது ஊடற்கண் தலைமகள் வெகுட்சி கூறியது. பிறவு

இன்னும் அவ்விலேசானே,

"நெருப்புச் சினத்தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை" (புறம்-125)

என்றாற்போலச் சினமில்லதனை உள்ளது போலக் கூறுவனவுங் கொள்ளாமோவெனின், *உணர்வுடையனவற்றுக் கல்லது சுவைதோன்றுமையின் வெகுளியென்று சண்டிக் கூறப்படாவென்பது. இது பிறன்கட் டோன்றிய பொருள் பற்றிவரும். (கo)

259. செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்ல னீத்த வுவகை நான்கே.

இஃது சுற்றுக்கண்ணின்ற உவகை உணர்த்துதல் துதலிற்று.

இதன் பொருள்: செல்வமென்பது, நுகர்ச்சி; புல னென்பது, கல்விப்பயனகிய அறிவுடைமை; புணர்வென் பது, காமப்புணர்ச்சி முதலாயின; விளையாட்டென்பது, யாறுங் குளனுங் காவுமாடிப் பதியிகந்துவருதன் முதலா யின. இவை நான்கும் பொருளாக உவகைச்சுவை தோன் றும், என்றவாறு.

உவகையெனினும் மகிழ்ச்சியெனினும் ஒக்கும்.

"உனதுடை யுள்ளத்தைச் செய்பொருண் முற்றிய
வளமையானுகும் பொருளிது வென்பாய்" (கலி-12.)

என்புழி வளமையானுகும் மனமகிழ்ச்சி இதுவெனக்கூறி னமையின் இது செல்வம் பொருளாகப் பிறந்த உவகையாம். "நன்கலம் பெற்ற வுவகையர்" என்பதும் அது.

"பெண்டிர் நலம்வௌவித் தண்சாரற் றூதுண்ணும்
வண்டிற் றுறப்பான் மலே" (கலி-40.)

---

* 'உணர்வுடையனவற்றிற்கு' என்பதும் பாடம்.

என்பது அறிவுபொருளாக உவகைபிறந்தது; என்னை? முகைப்பதம்பார்க்கும் வண்டுபோலத் தலையியரை நகைப் பதம்பார்க்கும் அறிவுடைமை காமத்திற்கு ஏதுவாமாகலின்.

"இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பாம்" (காலடி-14-7.)

என்பதும் அது. "இலமல ரன்ன வஞ்செஞ் காவின்" என் னும் மணிமிடைபவளத்துள்,

"தொடிக்கண் வடுக்கொள முயங்கினள்
வடிப்புறு கரும்பிற் றீவிய மொழிந்தே" (அகம்-141.)

என்பது புணர்ச்சிபற்றிய உவகை; என்னை? அவள் இவ் வாறு முயங்கினமையான் "உவவினி வாழியென் னெஞ்சே" (அகம்-141) என்றமையின்.

"துயிலின்றி யானீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னே" (கலி-30.)

என்புழி ஆறுடி விளையாடி மயிலியலார் மருவுண்டு மறைந்த மைகுவான்மன் என்றமையின் இது விளையாட்டுப் பொரு ளாக உவகைபிறந்தது.

'அல்லல் நீத்த வுவகை' யென்றதனாற் பிறர்துன்பங் கண்டுவரும் உவகையும் உவகையெனப்படாதென்பது. இது வுந் தன்கட் டோன்றிய பொருள்பற்றி வருமென்றார்க்குப் பிறன்கட் டோன்றிய இன்பம் பற்றியும் உவகை பிறக்கும் அஃதெப்பாற்படுமெனின், அதுவும் அல்லல் நீத்தவுவகை யென்றதனான் *உவகையெனப்படும். இனித் தன்கட்டோன் றியபெருமிதமும் உவகையும் முற்கூறாது பிறன்கட்டோன் றிய அச்சம் முற்கூறி இதனை ஈற்றுக்கண் வைத்தமையான் எடுத்தோதிய தான்கும்போலாது இது பிறன்கட் டோன் றிய இன்பம் பொருளாக வருமென்பதுகொள்க. (கக)

* 'உவகையெனப்படுமெனமறுக்க' என்பதும் பாடம்.

இவையும் பிறவந்த தோற்றமைப்பில் பாடும்

260. ஆங்கவை யொருபா லாக வொருபா
லுடைமை யின்புற னடுவுநிலை யருள
றன்மை யடக்கம் வரைத லென்பெனு அக்
கைம்மிக னலிதல் சூழ்ச்சி வாழ்த்த
னுணுத றுஞ்ச லரற்றுக் கனவெனு அ
முனித னினைதல் வெரூஉதன் மடிமை
கருத லாராய்ச்சி விரைவுயிர்ப் பெனுஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொருமை
வியர்த்த லைய மிகநடுக் கெனுஅ
விவையு முளவே யவையலங் கடையே.

இச்சூத்திரம் மேற்கூறிவந்த எண்ணென்குமன்றி இவை மூப்பத்திரண்டும் அவைபோல மெய்ப்பாடெனப்படுமென்ப தணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஆங்கவை ஒருபாலாக—எள்ளன் முதலாக வீளையாட்டிறுதியாகச் சொல்லப்பட்ட முப்பத் திரண்டும் ஒருகூறாக; ஒருபாலென்பது இனிச் சொல்லு கின்ற *ஒருகூறென்றவாறு: பின்னர் அவற்றையெல்லாம் எண்ணி 'இவையு முளவே அவையலங் கடையே' யென்றார். சண்டெண்ணப்பட்டவையே ஆண்டடங்குவனவும் உள. அப்பொருண்மைய வல்லாதவிடத்து இவை முப்பத்திரண் டும் சண்டு மெய்ப்பாடெனப்படும், என்றவாறு.

இவை முப்பத்திரண்டெனத் தொகை கூறியதிலை லெனின், ஆங்கவை ஒருபாலாக ஒருபாலென்றதனின் இருகூறெனப்படுவ †தம்மிலைத்த எண்ணுதல்வேண்டுமாக லின் அவை முப்பத்திரண்டெனவே இவையும் முப்பத் திரண்டென்பது எண்ணி உணரவைத்தானென்பது.

---

*'ஒருகூறு' என்பதும் பாடம். †'தம்மொளைத்த' என்பதும் பாடம்.

உடைமையென்பது, செல்வம்; செல்வநுகர்ச்சியாயின் உவகைப்பொருளாம்; இஃது அன்னதன்றி நுகராதே அச் செல்வத்தன்னை நினைத்தின்புறுதற்கு எதுவாகிய பற்றுள்ளம்; அஃதாவது * நிதிமேனின்ற மனம்போலச் செல்வமுடைமையான்வரும் மெய்வேறுபாடு. இன்புறலென்பது, அவ்வுடைமையை நினையுந்தோறும் இடையிட்டுப் பிறக்கும் மனமகிழ்ச்சி. நடுவுநிலையென்பது, ஒன்பது சுவையுள் ஒன்றென நாடகநிலையுள் வேண்டப்படுஞ் சமநிலை; அஃதாவது "செஞ்சாந் தெரியினுஞ் செத்தினும் போழினு நெஞ்சோர்ந்தோடா நிலைமை." அது காமவெகுளிமயக்க நீங்கினோர் கண்ணே நிகழ்வது; இது சிறுவரவிற்றாகலான் அவற்றொடு கூறினன். அருளலென்பது, மக்கண்முதலிய சுற்றத்தாரையருளுதல்: அஃது "அரிதாய வறனெய்தி யருளியோர்க்களித்தலும்" (கலி-11) என்றாற்போல வருவது. ஆண்டைக் கருணையினை அழுகையென்றமையின் இஃது அதனோடடங்காது. தன்மையென்பது, சாதித்தன்மை; அவையாவன பார்ப்பாராயிற் குந்தி மிதித்துக் குறுநடைகொண்டு வந்து தோன்றலும், அரசராயின் எடுத்த கழுத்தொடும் அடித்தமார்பொடும் நடந்துசேறலும, இடையராயிற் கோற்கையும் கொடுமடியுடையும் விளித்தவீளையும் வெண்பல்லுமாகித் தோன்றலுமென்று இன்னோரன்ன வழக்கு நோக்கிக்கொள்க. அடக்கமென்பது, உயர்ந்தோர்முன் அடங்கியொழுகும் ஒழுக்கம்; அவை பணிந்தமொழியுந் தணிந்த நடையுந் தானேமடக்கலும் வாய்புதைத்தலும் முதலா

* 'நிதிமேனின்ற மரம்போல' என்னும் பாடம் பொருட்பேறின்றாகலின் அஃது எடெழுதுவோரான் கோக்த பிழையெனவும், 'நிதிமேனின்ற மனம்போல' என்பதே திருத்தமான பாடம் எனவும் உணர்ந்துகொள்க.

யின. வரைதலென்பது, காப்பன காத்துக் கடிவனகடிந் தொழுகும் ஒழுக்கம்; அவை பார்ப்பாராயின் முத்தீவேட்டலும் புலவுங் கள்ளும் முதலாயின கடிதலுமென்று இன்னோரன்னகொள்க; வரைதலென்பது தொழிலாதலான் இது தன்மையெனப்படாது. அன்பென்பது, அருட்கு முதலாகி மனத்தினிகழு நேயம்; அஃதுடையார்க்குப் பிறர்கட்டுன்பங்கண்டவழிக் கண்ணீர் விழுமாகலின் அவ்வருளானே அன்புடைமை விளங்குமென்பது. இவையெல்லாந் தத்தமனத்தினிகழ்ச்சியை வெளிப்படுப்பனவாகலின் மெய்ப்பாடெனப்பட்டன. இனி வருகின்றவற்றிற்கும் இஃதொக்கும். கைம்மிகலென்பது, ஒழுக்கக்கேடு; அது சாதித்தருமத்தினை நீங்கினமை தன்னுள்ள நிகழ்ச்சியானே பிறர் அறியுமாற்றால் ஒழுகுதல். நலிதலென்பது, பிறர்க்கின்னாசெய்து நெருங்குதல்; அது தீவினைமாக்கட்கண் நிகழும். அவரைக்கண்டு அச்சம் எழுந்ததாயின் அஃது அச்சத்தின்கண் அடங்குமாகலின் அஃதன்று இஃதென்பது. சூழ்ச்சியென்பது சுழற்சி, சூழ்வருவானைச் சுழல்வருமென்பவாகலின்; அது வெளிப்படுவதோர் குறிப்பின் அவன் கட் டோன்றின் அதுவும் மெய்ப்பாடு; அஃதாவது மனத்தடுமாற்றம். வாழ்த்தலென்பது, பிறரால் வாழ்த்தப்படுதல். வாழ்த்தலென்பது பிறவினையன்றோவெனின், ஒருவனை நீடு வாழ்க என்று வாழ்த்தல் பிறவினையாயினும் அவன் வாழ்விக்கப்படுதலின் அவன் அவ்வாறுகூறல் அமையுமென்பது. நாணுதலென்பது, நாணுள்ளம் பிறர்க்குவெளிப்பட நிகழும் நிகழ்ச்சி. துஞ்சலென்பது, உறக்கம்; அது நடந்துவருகின்றான் கண்ணும் விளங்கத் தோன்றுதலின் அதுவும் மெய்ப்பாடெனப்பட்டது. அரற்றென்பது, அழுகையன்றிப் பலவுஞ்சொல்லித் தன்குறை கூறுதல்; அது காடுகெழுசெல்விக்குப் பேய்கூறும் அல்லல்போல வழக்கினுள்ளோர் கூறுவன;

கனவென்பது, வாய் வெருவுதல்; அதனானும் அவனுள் ளத்துக்கண் நிகழ்கின்ற தொன்று உண்டென்றறியப்படும். மூனிதலென்பது, வெறுத்தல்; அஃது அருளுஞ்சினமு மின்றி இடைநிகர்த்தாதல்; 'வாழ்க்கை முனிந்தா' னெனவும் "முறையுண் முனியுமவன் செல்லு மூரே" எனவுஞ் சொல்லுபவாகலின். நினைதலென்பது, விருப்புற்று நினைத் தல், நின்னை மிகவும் நினைத்தேனென்பது வழக்காதலின்; அந்நினைவுள்ளம் பிறர்க்குப் புலனுதலின் மெய்ப்பாடா யிற்று. வெரூஉதலென்பது, விலங்கும் புள்ளும்போல வெருவிநிகழும் உள்ளநிகழ்ச்சி; அஃது அஞ்சவேண்டாதன கண்டவழியும் கடிதிற்பிறந்து மாறுவதோர்வெறி. மடிமை யென்பது, சோம்பு. கருதலென்பது, மறந்ததனை நினைத் தல். ஆராய்ச்சியென்பது, ஒருபொருளை நன்று தீதென்று ஆராய்தல். விரைவென்பது, இயற்கைவகையானன்றி ஒரு பொருட்கண் விரைவுதொழில்பட உள்ள நிகழுங் கருத்து. உயிர்ப்பென்பது, வேண்டிய பொருளைப் பெறுதவழிக் கை யற வெய்திய கருத்து; அது நெட்டுயிர்ப்பிற்கு மூதலாக லின் அதனையும் உயிர்ப்பென்றுனென்பது. கையாறென் பது, அவ்வுயிர்ப்புமின்றி வினையொழிந்தயர்தல். இடுக்க ணென்பது, மலர்ந்த நோக்கமின்றி மையமேக்கம்பட வரும் இரக்கம். பொச்சாப்பென்பது, அற்றப்படுதல்; அஃ தாவது பாதகாதத்தச்செல்கின்ற பொருட்கண் யாதானும் ஓரிகழ்ச்சியான் இடையறவுபடுதல். பொறுமையென்பது, அழுக்காறு; அஃதாவது பிறர்செல்வங்கண்டவழி வேண் டாதிருத்தல். மியர்த்தலென்பது, பொறுமைமுதலாயின பற்றி மனம்புழுங்குதல். ஐயமென்பது, ஒருபொருண்மேல் இருபொருட்டன்மைகருதி வரும் மனத்தடுமாற்றம். மிகை யென்பது, கல்லாமையுஞ் செல்வமும் இளமையும் முதலாக வரும் உள்ளமிகுதி. கடுக்கமென்பது அன்பும் அச்சமும்

முதலாக உடம்பிற் புலப்படுமாற்றான் உள்ளதுங்குதல்; புதல்வர்க்குப் பிணி இல்வழியும் எவனுங்கொலென்று கடுங்குதல் அன்பான் நடுங்குதலாம். அச்சமென்னுஞ் சுவை பிறந்ததன்பின்னர் அதன்வழித்தோன்றிய நடுக்கம் அச்சத்தாற்றோன்றிய நடுக்கமாமென்பது.

இவை முப்பத்திரண்டும் மேற்கூறிய முப்பத்திரண்டும் போல அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகி நிகழும் மெய்ப்பாடெனக்கொள்க. இவையெல்லாம் உலகவழக்காகலான் இவ்வழக்கே பற்றி நாடக வழக்குள்ளுங் கடியப்படாவென்றவாறு. மற்றிவற்றை எண்ணியமாத்திரையல்லது இலக்கணங் கூறுகின்றிலனெனின், சொல்லின் முடியும் இலக்கணத்தவாகலின் சொல்லாளுயினனென்பது. உதாரணம் இக்கூறியவாற்றான் வழக்கு நோக்கியுஞ் செய்யுணோக்கியுங் கண்டுணரப்படும். (கஉ)

261. புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்த
னகுநயமறைத்தல் சிதைவுபிறர்க்கின்மையொடு
தகுமுறை நான்கே யொன்றென மொழிப.

இதன்மேலெல்லாம் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகிவரும் மெய்ப்பாடுகூறினான். இனி அகத்திணையுட் பெரும்பான்மையவாகிவரும் மெய்ப்பாடுகூறுவான் தொடங்கி, அவற்றுள்ளுங் களவிற்குச் சிறந்துவரும் மெய்ப்பாடு கூறுவான், ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழி அவ்வெதிர்ப்பாடுதொடங்கி, புணர்ச்சியளவும் மூன்றுபகுதியவாம் மெய்ப்பாடெனவும், புணர்ச்சிப் பின்னர்க் களவு வெளிப்படுத்தணையும் மூன்றுபகுதியவாம் அவை யெனவும், அவையாறும் ஒரோவொன்று நான்னான்கு பகுதியான் ஒன்றன்பிறென்று பிறக்குமெனவுங் கூறுவான். அவற்றுண்

முதலனமூன்றினும் முன்னர்நின்ற ஒருகூற்றினை இச்சூத்திரமென உணர்க. ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழிக் கார்தொழுகும் உள்ளநிகழ்ச்சி பெண்பாலதாகலாற் பெரும்பான்மையும் அவள் கண்ணே ஈண்டுக் கூறுகின்ற மெய்ப்பாடு சிறந்ததென்பது.

இதன் பொருள்: புகுமுகம் புரிதல் என்பது ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழித் தன்னை அவன் நோக்குதற் கண் விரும்பும் உள்ளநிகழ்ச்சி; புகுதலென்பது தலைமகன் நோக்கிய நோக்கெதிர் தான்சென்று புகுதல்; முகமென்பது அங்ஙனந் தான்புகுதற்கிடமாகிய நோக்கு; நோக்கெதிர் நோக்குதலே முகநோக்குதல் என்பவாகலின் இந்நோக்கினை முகமென்றனென்பது. புரிதலென்பது மேவுதல் என்றவாறு: அஃதாவது தலைமகன் காண்டலைத் தலைமகள் வேட்டல் என்றவாறு. மற்றிது தலைமகற்கு உரித்தன்றெனின், அவன்தான்காண்பினல்லது தற்காண்டலை நயவான், அது தலைமையன்றுகலினென்பது. அது,

"யாழைக்குங் காலை நிலனைக்கு நோக்காக்காற்
றூனைக்கி மெல்ல நகும்." (குறள்-110-4.)

என வரும்.

பொறிநுதல் வியர்த்தல் என்பது தலைமகன் தன்னை நோக்கியவழி, உட்கும், நாணும் ஒருங்குவந்தடைதலின் வியர்ப்பொறித்த நுதலளாதலும்; அது,

"பெரும்புழுக் குற்றனின் பிறைநுதற் பொறிவியர்
உறுவளி யாற்றச் சிறுவரை நிறவென" (அகம்-135.)

என வரும். இம்மெய்ப்பாடுந் தலைமகற்குரித்தன்று; உட்கும் நாணும் அவற்கின்மையின்.

<u>நகுகயமறைத்தல்</u> என்பது அதன் பின்னர்த் தலைமகன் கட் டோன்றியகுறிப்புக்களான் அதற்கேதுவாகிய கயனு டைமை மனத்திற் பிறந்தவழியும் நகாதுநிற்றலும்; அது,

"முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு." (குறள்-128-4.)

என வரும். இது மடமையால் தோன்றிய நகையாகலான் இது மறைத்தலுந் தலைமகற்குரித்தன்று ; எனவே அவற் காயின் நகைதோன்றப்பெறு மென்பது. மற்றுச்,

"சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டின்" (குறுந்-169.)

என்னும் பாட்டினுள் "நம்மொடு நக்க வால்வெள் ளெயிறு" என நகைகூறிற்றாலெனின், அங்ஙனம் மறைக்கப் பட்ட நகை தலைமகன் *அறிந்தது மெய்ப்பாடாமாகலான் அவ் வாறு கூறினரென்பது.

<u>சிதைவு பிறக்கின்மை</u> என்பது அங்ஙனம் நகுகய மறைத்த வழியும் உளளஞ்சிதைந்து நிறையழியுமாகலின் அச்சிதைவு புறத்தார்க்குப் புலனாகாமை நெஞ்சினடக்குத லும் என்றவாறு; அது,

"அகமலி யுவகைய னாகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோனே" (அகம்-86.)

எனத் தலைமகன் அறிய மெய்ப்பட்டதென்பது. இதுவுந் தலைமகற்குரித்தன்று, தன்சிதைவுணர்த்தினல்லது மறைக் குந்துணைச் சிதைவின்மையின் ; என்னை?

"பெருமையு முரனு மாடூஉ மேன" (தொல்-கள-7.)

என்பவாகலின்.

---

*'அறிந்தது' ஒரு சொல்; இதனை இருசொல்லாகப் பிரிப் பின் பொருளிடர்ப்படும்.

தகுமுறைநான்கு என்பது இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்று தோன்றுதற்குத் தகுமெனப்பட்ட முறையானே வந்த நான்கும் என்றவாறு; ஒன்றென மொழிப—களவிற்கு முதற்கூறென்ப, என்றவாறு.

இவை களவிற் சிறந்தனவாவதல்லது கற்பினுள் வருவனவல்ல என்றுணர்க. 'சிதைவுபிறர்க்கின்மை' யெனவே சிதைவு தலைமக னுணருமென்றாயிற்று.

இனி இவைநான்கும் முறையானே ஒருங்குவந்து செய்யுள் வருமாறு:

"யான்றற் காண்டொறுந் தான்பெரிது மகிழ்ள்
வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி
மிகைவெளிப் படாது நகைமுகங் கரந்த
நன்னுத லரிவை தன்மனஞ் சிதைந்ததை
நீயறிந் திலையா னெஞ்சே
யானறிந் தேனது வாயா குதலே."

இஃது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்கிய தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. இதனுள் "தான்பெரிது மகிழ்ள்" என்புழிச் சிறிதுமகிழுமென்றமையான் இது புகுமுகம்புரிதலாயிற்று. "வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி" என்பது பொறிநுதல் வியர்த்தல். "நகைமுகங் கரந்த" என்பது நகுநயமறைத்தல். "மிகைவெளிப்படாது" என்புழி மேல் 'அன்ன பிறவு மவற்றொடு சிவணி' (தொல்-மெய்ப்-19.) என்னும் புறனடையாற்றழீஇயின நகைமொக்குட்பற்றும். "தன்மனஞ்சிதைந்ததை நீயறிந்திலையால்" என்பது சிதைவுபிறர்க்கின்மை. பிறவும் அன்ன. (க)

இரண்டாம் பகுதி.

262. கூழை விரித்தல் காதொன்று கனைத
லாழணி தைவர லுடைபெயர்த் துடுத்தலோ
டேழி நான்கே யிரண்டென மொழிப.

இஃது இரண்டாம் மெய்ப்பாடுணர்த்துதல் நுதலிற்று. என்னை? உள்ளத்துச் சிதைவறிந்தவழியன்றித் தலைமகனிறைத் தலைமகன் சென்று கையுங்காலும் மெய்யுறத்தீண்டிக் கண்ணுருளைகளின், அங்ஙனஞ் சிதைவுபிறந்தது எழுவாயாகப், பினைத் தலைமகன் மெய்யுற்றவழி நிகழ்ந்த உள்ள நிகழ்ச்சியை இரண்டாவதென்றுனென்பது.

இதன்பொருள்: கூழைவிரித்தன் முதலாகிய நான்கும் முறையானே இரண்டாவதெனப்படும், என்றவாறு.

இவற்றுக்குத் தலைமகன் ஏதுவாவதல்லது இவைதாம் அவட்கு நிகழாவென்பது.

கூழைவிரித்தலென்பது, மெய்யுமெய்யுந் தீண்டியவழி மெல்லியன்மகளிர்க்குவரும் வேறுபாடு நான்கனுண் முதற் கண்ணதெனப்படும்; என்னை? தன்னுள்ளத்தில்நிகழ்ந்த வேறுபாட்டினை அக்காலத்துத் தலைமகள் நிறையுடையளாகலாற் கரந்தொழுகுதற்பாலளல்லளே, அங்ஙனங் கரக்குங்கால் தன்வயத்ததாகிய உடம்புபற்றிவரும் வேறுபாட்டினைத் தாங்கும்; அங்ஙனந் தாங்குங்கால் உடம்பொடு தொடர்புடையவாகி வேறுபட்ட தலைமயிரினது முடி உள்ள நெகிழ்ச்சியானே தன்வயத்ததன்றி ஞெகிழும்; ஆகலின் இது முற்கூறப்பட்டது. பிறசுவைபற்றியும் உலகினுண் மயிர்க்கு வந்த *வேறுபாட்டினைக் கூறுப; என்னை? ஒன்றன்

* 'வேறுபாடு' என்பதும் பாடம்.

மதுரச் சுவைக்கு அதிசயங் கூறுவார் மயிரினைச் செவ்வ னின்றனவென்பதுபோலக் கொள்க. அக்கூழை விரித்தற்கு ஏதுவாயினுள் இவளாகலின் அதனைச் சினைவினையானன்றி முதல்வினையாற் கூறினனென்பது.

காதோன்று கிளைதலென்பது, உறுப்பிடைப் பூட்டுறப் பூணாது பெய்து வைத்தனவாகலால் தோடு முதலாயின ளிதின் வீழ்வனவாயின; மற்றவை வீழ்தற்கு ஏதுவாய வெகிழ்ச்சி நிரம்பத்தோன்றாது இடைநிகர்த்தகாகலின் ஒன்றுநிற்ப ஒன்றுவீழ்தலென்றனென்பது. இது கூழை போலாது ஊறுணர்வுடைய உறுப்பாகலிற் காதின் வேறு பாட்டினைக் கூழைவேறுபாட்டின்பின் வைத்தான்; என்னை? கூழையிற் காது தனக்கு உறவுடைமையின்.*

ஊழுணர்தலென்பது, அக்கூழையுந் தோடும் போலப் பெயர்ப்படு முறைமையவாகிய வளைகளை முன்கைமேல் இறுகச்செறித்தலும் விரற்செறியினைத் திருத்தலும் முதலாயின. இவை தோடுபோலச் செறிவில்லன அன்மையின் அவற்றுப்பின் வைத்தான்.

உடைபெயர்த்துடுத்தலென்பது, உடுத்த உடையினைப் பலகாலும் அழித்துடுத்தல்; அது கழிநெடிபோலாது செறிவுடைமையின் அவ்வுடைவெகிழ்ச்சியைத் தொடி வெகிழ்ச்சிக்குப்பின் வைத்தானென்பது. மற்றுத்,

"தொடிவெகிழ்ந் தனவே தோள்சா யினவே" (குறுந்-239.)

---

* "கூழைக்குப் பின்னர்க் காதுதோற்றன வென்றவாறு." என்று ஒருசொற்றொடர் இக்குறிப்பிட்ட இடத்தே ஓர் எட்டுப்பிரதியிற் காணப்படுகின்றது.

எனப் பிரிவின்கண்வந்த வேறுபாட்டினை சண்டிக் கூறுரோவெனின், அவை இன்னதன்பின்னர் இன்னது தோன்றுமென்னும் முறைமைய அல்லவாகலின் சண்டிக் கூறார். அவை,

'வினையுயிர் மெலிவிடத் தின்மையு முரித்து' (தொல்-மெய்ப்-20.)

என்புழிச் சொல்லப்படுமென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

"விண்ணுயர் விறல்வரைக் கவாஅ லொருவன்
கண்ணி லேக்கிய தல்லது *தண்ணென
வுரைத்தலு மில்லை மாதோ வவனே
வரைப்பாற் கடவுளு மல்ல னதற்கே
யோதி முந்துறக் காதொன்று லெகிழ
நிழலவிர் மணிப்பூ ணெஞ்சொடு கழலத்
துகிலும் பன்முறை நெடிதுகிமிர்ந் தனவே
நீயறி குவையதன் முதலே
யாதோ தோழியது கூறுமா றெமக்கே."

என்றது, தோழிக்குத் தலைமகள் அறத்தொடுகின்றது. இதனுள் "ஓதி முந்துற லெகிழ" என்பது கூழைவிரித்தல்; "காதொன்று லெகிழ" என்பது காதொன்று களைதல்; "நிழலவிர்மணிப்பூ ணெஞ்சொடு கழல" என்பது ஊழணிதை வரல்; "நெடிது நிமிர்ந்தன துகிலும் பன்முறை" என்பது உடைபெயர்த்துடுத்தலாயிற்று. இவை பாடாண்கைக்கிளையுள் இக்காலத்துப் பயின்றன. பிறவும் அன்ன. (கச)

263. அல்கு றைவர லணிந்தவை திருத்த
லில்வலி யுறுத்த லிருகையு மெடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.

* 'கண்ணென' என்பதும் பாடம்.

இது முறையானே மூன்றுவது உணர்த்துதல் நுதலிற்று.

• இதன்பொருள்: அல்குறைவரல் முதலாகக் கூறப்பட்டனவான்கும் மூன்றுவதெனப்படும், என்றவாறு.

மேலது உடைபெயர்த்தடித்தலாகலான் அதன்வழித் தோன்றுவது உடை பெரிதும் நெகிழ்ந்து காட்டுதலாயிற்று, அதனைப் பாதுகாத்தலான் அவ்வற்றம் மறைக்குங் கையினை 'அல்குறைவர'லென்று னென்பது.

அணிந்தவை திருத்தலென்பது, கடிசூத்திரமுதலாயின திருத்தல்; அஃது உடைநெகிழ்ச்சிபோலப் போற்றிச் செய்வதாகலான் அதனை அல்குறைவரலின்பின் வைத்தான்.

இல்வலியுறுத்தலென்பது, புணர்ச்சியை வேண்டாதாள் போல்வதோர் வன்மைபடைத்துக்கொண்டு செய்தல்; என்னை? இல்லாத வலியை மிகுத்தலென்றமையின் அப்பொருட்டாயிற்று. அல்குறைவரலும் அணிந்தவைதிருத்தலுந் தன்வலியின்மை காட்டவும் வலிதாற்றிக்கொண்டு செய்வதாகலின் அதனை இல்வலியுறுத்தலென்று மூன்று முறைமைக்கண் வைத்தானென்பது. இனி இற்பிறத்தலான் அதன்வலி *தோற்றுவதெனவுஞ் சொல்லுப; அஃதாவது முற்பிறந்தவற்றிற்கு முன்னே கூறினென்பது.

கையுமெடுத்தலென்பது, அங்ஙனம் படைத்துக்கொண்டவலியானுந் தடுக்கப்படாது நிறையழிதலிற் கைகள் தாமே முயங்கல் விருப்பத்தான் எழுவனபோல்வதோர்

* 'தோன்றுதலெனவும்' என்பதும் பாடம்.

குறிப்பு. இந்நான்கும் மேலனவுமெனப் பன்னிரண்டு பகுதியும் புணர்ச்சிக்குழுன் நிகழ்வனவாம்.

சொல்லிய வென்றதனுன் இவையெல்லாஞ் சொல்லப்படுவ தல்லது ஈண்டுச்சொல் *நிகழ்தல் வேண்டிலவென்பது. எண்ணு நிலைவகையால் தொகைபெற்ற நான்கென்னும் எழுவாய்க்கு மூன்றென்பது பெயர்ப்பயனிலையாய் வந்தது. இவை நான்குந் தலைமகற்குரியவல்ல; தான் அவற்றுக்கு எதுவாவதல்லதென உணர்க. இவற்றுக்குச் செய்யுள் :

"ஒதியு நுதலு நீவி யாடன்
மாதர் மென்முலை வருடலிற் கலங்கி
† யுள்ளத் துகுநள் போல வல்குலின்
ஞெகிழ்நூற் கலிங்கமொடு புகுமிட னறியாது
‡ மெலிந்தில ளாகி வலிந்துபொய்த் தொடுங்கவும்
யாமெடுத் தணைத்தொறுந் தாமியைந் தெழுதலி
னிம்மை யுலகத் தன்றியு நம்மை
நீளரி நெடுங்கட் பேதையொடு
கேளறிந் தனகொலிவள் வேய்மென் றோளே."

இஃது இயற்கைப்புணர்ச்சிக்கட் டலைவன் தன்னிலையுரைத்தது. இதனுள் உடம்பும் உள்ளத்துகுவன போன்றனளென்பது அல்குறைவரல்; என்னை? அவ்வேறுபாட்டானே அற்றப்படுதலின். "அல்குலின் ஞெகிழ்நூற் கலிங்கம்" என்பது அணிந்தவை திருத்தல்; அல்குலின் யாத்த, நூலிற்கு ஞெகிழ்ச்சி கூறினமையின். "மெலிந்திலளாகி

---

* 'நிகழாமல் வேண்டுமென்பது' என்பதும் பாடம்.

† 'உள்ளமொடுங்குநள்' என்பதும் பாடம்.

‡ 'மெலிந்தனளாகி' என்பதும் பாடம்.

வலிந்து பொய்த்தொடுங்கவும்" என்பது இல்வலியுறுத்தல்; "யாமெடுத் தணைத்தொறுந் தாமியைந் தெழுதல்" என்பது இருகையுமெடுத்தல்; அங்ஙனம் ஒடுங்கியவழியும் உயிர்ப்பி னளல்லள்போலத் தோள்களைத் தன்வயத்தவாயின என் றமையின். "இம்மையுலகத்தன்றியு நம்மைக் கேளறிந்தன" என்றமையின் இருவர் அன்பும் எழுமையுந் தொடர்ந்த உழுவலன்பெனச் சொல்லித் தன்னிலையுரைத்தாளாம். பிற வும் அன்ன. (கரு)

புணர்ச்சி பின் - தலைவுவெளிப்படுத்தனை. முதல் + நான்கு

264. பாராட் டெடுத்தன் மடந்தப வுரைத்த
லீரமில் கூற்ற மேற்றலர் நாணல்
கொடுப்பவை கோட லுளப்படத் தொகைஇ
யெடுத்த நான்கே நான்கென மொழிப.

இது நான்காம் பகுதி கூறுகின்றது.

இதன்பொருள்: பாராட்டெடுத்தல்—புணர்ச்சிநிகழ்ந்த பின்னர்த் தலைமகனை இயற்பட நினையுங் குறிப்பும்; இது பாராட்டென்னாது எடுத்தலென்றதனால் அதனை உள்ள மெடுத்தன்மேற்கொள்க. இது தலைமகற்கும் ஒக்கும்.

மடந்தப வுரைத்தல்—விளையாடும் பருவத்து நிகழ்ந்த அறிமட நீங்கக் காமப்பொருட்கண்ணே சிறிதறிவு தோன் றுதலும்; உரைத்தலென்றதனான் அக்காலத்துப் பாங்கிக்குச் சில கூற்றுமொழி கூறவும் பெறுமென்பதுகொள்க. அவை மேலையோத்துக்களுட் கூறப்பட்டன. மடந்தபவுரைத்தற்கு ஏதுவாகிய கருத்து ஈண்டு மெய்ப்பாடெனப்படும்.

ஈரமில் கூற்றமேற்றலர்நாணல்—அங்ஙனம் அறிமடங் கெடச் சொற்பிறந்தவழி இன்றளவுந் தமராற் கூறப்படாத

கடுஞ்சொல் உளவாமன்றே, அவற்றை முனியாது ஏற்றுக் கொண்டு புறத்தார்க்கு இது புலனாங்கொலென்று நாணுதலும்:

கொடுப்பவைகோடல்—தலைமகனாற் கொடுக்கப்பட்ட தழையுங் கோதையுந் தாருங் கண்ணியுந் தோண்மாலையு முதலாயினகொண்டு கையுறைபாராட்டுதலும்; உளப்படத் தொகைஇ எடுத்த நான்கே நான்கென மொழிப—கொடுப்பவைகோடலகப்படத் தொகுத்தோதிய நான்கும் நான்காவது, என்றவாறு.

'எடுத்த'வென்றதனாற் கொடுப்பவை கொள்ளாது மறுத்தன் முதலியனவுங் கொள்க.

புணர்ச்சிப்பின்னரல்லது பாராட்டுள்ளம் பிறவாமையானும் அதன் பின்னரல்லது பிறரொடு கூற்றுநிகழாமையானும் அக்கூற்றுக் கேட்டல்லது தமரான் ஈரமில் கூற்றங் கோடலின்மையானும் அவையெல்லாம் முடிந்தவழித் தலைவன்மேற் சென்ற உள்ளத்தாற் கொடுப்பவைகோடற் குறிப்பினளாமாகலானும் அம்முறையான் வைத்தானென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

"ஒருநாள் வந்து பலநாள் வருத்து
நின்னே போலுநின் றழையே யென்வயி
னிற்பா ராட்டியுஞ் சொற்கொள லின்றியும்
யாயெதிர் கழறலிற் போலா நாணியு
மயல்கூர் மாதர்க்குத் துயர்மருந் தாயினு
நோய்செய் தன்றாற் றானே
நீதொடக் கருதலி னோரிடத் தானே."

இது கையுறைமறுத்தது. இதனுள் "நிற்பாராட்டி" என்பது பாராட்டெடுத்தல்; "சொற்கொளலின்றி" என்பது மடக்தபவுரைத்தல்; என்னை? கொளுத்தக் கொள்ளாதுவிடின் அது மடனாகுமையின். "யாயெதிர் கழறலிற் போலாஞாணி" என்பது சுரமில்கூற்றுமற்றலர்காணல்; "துயர்மருந்தாயினும்" என்பது கொடுப்பவைகோடல். இத்தமை நின்கைப்பட்டவழிக் கரிந்துகாட்டி நின்மெய் வெப்பங் கூறுதலின் இதனை அவள் காணின் ஆற்றுளா மெனப் பின்னொருகாலத்து மறுத்தாளென்பது. (கசு)

ஐந்தாம் பகுதி.

235. தெரிந்துடம் படுத றிளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி யுவத்தலொடு
பொருந்திய நான்கே யைந்தென மொழிப.

இஃது ஐந்தாங்காலத்து மெய்ப்பாடுணர்த்துகின்றது.

இதன்பொருள்: மேற்கூறிய கொடுப்பவை கோடல் நிகழ்ந்தவழி அவ்வொழுகலாறு புறத்தார்க்கெல்லாம் ஐயமாகலின் அதன்வழித் தோன்றுவது தெரிந்துடம் படுதலென்றுரென்பது.

தெரிந்துடம்படுதல்— தலைமகனைத் தலைமகள் இவ்வொழுகலாறு நிகழ்ந்தவாற்றைப் பட்டாங்குணராதார் தலைமைசெய்தனளிவளெனவுந் தகாத ஒழுக்கினளிவளெனவும் பல்லாற்றானும் இவள் கண்ணை ஏதமிட்டுத் துணிந்துந் துணியாதும் உரைப்பாராகலான், அதற்கு காணி, இனியாதுகொல்லோ செயற்பாலதென்று ஆராய்ந்து, இவ்வொழுகலாற்றினை அறிவிப்பேங்கொல் அறிவியேங்கொலெனத் தடுமாறிப், பின்னொருவகையான் ஆராய்ந்து, முழுவதானுந்

சொல்லாது தன் குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பெண்டன்மைக்கும் ஏற்றவகையான் வேண்டுவனதெரிந்துகொண்டு, இன்னவாறு பட்டதென்று தோழிக்கு உடம்படுதலுந் தோழியாற் செவிலிக்கு உடம்படுதலுமென இன்னோரன்ன குறிப்பினைத் தெரிந்து உடன்படுதலும்:

தினைப்புனினைமறுத்தல்—அங்ஙனந் தமர்க்குத் தானுடம் பட்டதன் பின்னர்த் தலைமகனோடு பகலுமிரவும் பண்டு திளைத்தவாறு திளைத்தலை அச்சமு நாணு மடனுங் காரணமாக மறுத்தலும்:

உடம்பாட்டின் பின்னர் மறுக்குமாதலின் அதனைத் தினைப்புனினை மறுத்தலென்று இரண்டாவது வைத்தானென்பது.

கரந்திடத்தொழிதல்—அக்காலத்து இற்செறிக்கப்படுதலால் தான் அவனை மறுத்த ஏதத்திற்கு நாணியும் அஞ்சியும் அவற்கு வெளிப்படாதொழுகுதலை உடையளாதலும்:

தன்னிடத்தே தங்குதலை இடத்தொழிதலென்றான்.

கண்டவழி யுவத்தல்—அங்ஙனங் கரந்தொழுகுங் காலத்து அவனை ஒருஞான்று கண்டவழிக் கழியுவகை மீதூர்தலும்:

இது தலைமகற்கும் உரித்து.

பொருந்திய நான்கே ஐந்தென மொழிப—இவை நான்கும் ஐந்தாங்கூறெனப்படும், என்றவாறு.

பொருந்திய நான்கென்றது இவை இடையறவின்றி ஒருங்கு தொடர்தலுமுடைய என்பது. இதனானே இவை



கண்ணன்கிழேடு வருகின்றதற்குச் சிறிது இடையறவும் படு மென்பதுகொள்க.

புகுமுகம் புரிதன் முதலாயினநான்குந் தலைமகளனவே யாகி ஒரினத்தவாயின. அவற்றுப் பின்னர்த் தலைமகன் அவ னோப் பொருந்தியவழிக் கூழைவிரித்தன் முதலாயின நான் கும் நிகழ்ந்தமையின் அவையும் அவற்றோடு சிறிது இடை யறவுபட்டன. அல்குறைவரன் முதலாயின நான்கும் புணர்ச்சிக்கு மிகவும் இயைபுடைமையின் மேலவற்றோ டொன்றாது வேறாயின. பாராட்டெடுத்தன் முதலாயின புணர்ந்து நீங்கியபின் நிகழ்ந்தமையின் அவையும் அவற்றிற் சிறிது வேற்றுமையுடைய. தெரிந்துடம்படுதன் முதலா யின களவுவெளிப்படுத்தற் குறிப்பினவாகலின் மேலனவற் றோடு தழுவாது வேறாயினவென்பது. இவற்றோடும் வரு கின்ற நான்கன் வேறுபாடும் ஆண்டுச்சொல்லுதும். அவ் வாறு நோக்கியன்றே இவ் வாறுசூத்திரப்பொருளினையும் இருபத்துநான்காக உடனோதாது வேறுபடுத்தோதிய கருத் தென்பது. இங்ஙனம் பொருத்தமின்றி வருவனவல்ல கன் னன்கு பகுதியாற் கூறியவை தம்முட் டாமென்பான் பொ ருந்தியநான்கென்றனென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

> " அறியாய் கொல்லோ நீயே தெறுவர
> நோக்குதொறும் பனிச்சு நெஞ்சமோ டிவனே
> யாய்க்கறி வுறுவி னின்னெதிர் நாணி
> மனைவயிற் பிரியலண் மன்னே யதற்கே
> னினைவில னிவனென வுரைத்தி
> புனைதார் மார்ப காண்டியோ வதுவே."

என்பது பகற்குறிக்கட் டலைமகனை இடத்துய்த்து வந்த தலைமகனை எதிர்ப்பட்டு நின்று தோழி வரைவுகடா

யது. இதனுள் "யாய்க்கறிவுறுலின்" என்பது தெரிந்துடம் படுதலென்பது; என்னை? அவள் நோக்குந்தொறும் பணித் தலென்றறிவுறுத்தா ளென்றமையின். "நின்னெதிர்காணி" என்பது தினைப்புனமறுத்தல்; என்னை? தமர்க்கு மறைத் தாள் இம்மறையினையென்று தலைமகன் குறிக்குமென காணி எதிர்ப்படாமையின். "மனைவயிற்பிரியலள்" என்பது கரந் திடத்தொழிதல்; "புனைதார்மார்ப காண்டியோ வதுவே" என்பது கண்டவழி உவத்தல்; என்னை? நிற்கண்டவழி நுதலுந்தோளும் பசலைநீங்கியவாறு கண்டிலையோவென் னுங் குறிப்பினுற் கூறினமையின். பிறவும் அன்ன. (கள)

ஆறாம் பகுதி.

266. புறஞ்செயச் சிதைத்தல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற வுரைத்தலொடு
புலம்பிய நான்கே யாறென மொழிப.

இஃது ஆறுவது கூறுகின்றது.

இதன்பொருள்: புறஞ்செயச்சிதைத்தல்—பூவுஞ்சாந் தும் பூணுந்துகிலும் முதலாயினகொண்டு புறத்தே கோலஞ் செய்ய அகத்தே சிதைவுண்டாதலும்:

மேல்நின்றது கண்டவழி உவத்தலாகலானும் இது காணுதவழி நிகழ்கின்றதாகலானும் அதற்கினமின்றியும் அதன்வழித் தோன்றியதெனப் படுமாகலான் இதனை இச் சூத்திரத்தின் முன்வைத்தானென்பது.

புலம்பித்தோன்றல்—அங்ஙனம் புனைந்தகோலந் துணை யொடுகழியப் பெறுமையிற் புல்லென்றழிந்த நெஞ்சினளாக லான் எல்லாச் சுற்றத்தார்க்கும் இடைநின்றேயுந் தனிய ளென்பது அறிவியாநிற்றலும்:

கலங்கிமொழிதல்—கையொடுபட்ட கள்வரைப்போலச் சொல்லுவனவற்றைத் தடுமாற்றந் தோன்றச் சொல்லுதலும்:

அஃதாவது தன்மனத்துநிகழ்வின்றன தன்னையறியாமற் சிலபுலப்படச் சொல்லுதலாயிற்று.

கையறவுரைத்தல்—கலங்காது சொல்லுங்காற் செயலறவு தோன்றச் சொல்லுதலும்:

அஃதாவது வன்புறையெதிரழிந்து சொல்லுவனபோல்வன.

புலம்பியநான்கே ஆறெனமொழிப — இவை நான்குந் தனிமைவிகற்பமாகிய ஆறுங்கூற்று, என்றவாறு.

கையறவுரைத்தலென்பதனை நற்றுக்கண்வைத்தான் களவொழுக்கத்திலுள் இதனிலுங்கு மெய்ப்பாடு *கூறப்படாதென்றற்கு ; என்னைகாரணமெனின், கையறவுரை தோன்றியதற்பின்னர் நிகழ்வன கைக்கினைக்கும் பெருந்திணைக்கும் மெய்ப்பாடாவதன்றி நற்காமத்துக் காகாவென்பது கருத்து; என்னை ? கையறவுரைத்தலென்பது சொல்லாமரபி னவற்றொடு கெழீஇச் செய்யாமரபிற் றொழிற்படுத்தடக்குதலே எல்லையாகவுடைமையின், அதனினும் இறப்பத் தோன்றுவன மன்றத்திருந்த சான்றவரறியத் தன் தலைவன் பெயரும் பெற்றியுங் கூறி அழுதும் ஆற்றியும் பொழுதொடுபுலம்பியும் புள்ளொடு சொல்லியுங் நிகழும் மெய்ப்பாடாகலான், அவை நடுவணைந்திணையெனப்பட்ட நற்காமத்திற்கு இலக்கணவகையான் வலாவாகலினென்பது. கையறவு

* 'கூறப்பெறுது' என்பதும் பாடம்.

உரைத்தலென்றதனான் இம்மெய்ப்பாடு மனத்தவேயன்றி மாற்றத்தானும் பிறர்க்குப் புலனாக வெளிப்படுமென்பது கொள்க. இவை எல்லாம் முறையானே நிகழ்ந்தமைநோக்தி யாழோர்கூட்டத் *தொன்மையுந் தோலுமபோலப் பொருட்டொடர்நிலையாக்கி உரைப்பாருமுளர். அஃது ஆகாமைக்குக் காரணங் களவியலுட் கூறினானென்பது. இவற்றுக்குச்செய்யுள்:

"இவளே, அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇப்
பல்கிளை நாப்ப ணில்கிளை போல
மொழிவகை யறியாள் பொழிக ணீர்துடைத்
தியானே கையற வலம்வருங்
கூறாய் பெருமநிற் றேறு மாறே."

என்பது வரைவுகடாயது. இதனுள் "அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇ" என்பது புறஞ்செயச்சிதைத்தல்; "பல்கிளை நாப்ப ணில்கிளைபோல" என்பது புலம்பித் தோன்றல்; "மொழிவகை யறியாள்" என்பது கலங்கிமொழிதல்; "யானே கையற வலம்வரும்" என்பது கையறவுரைத்தல்; என்னை? தன் கண்ணீர்துடைத்தலும் ஆற்றாளென்றமையின். பிறவும் அன்ன. (கஅ)

மேற்கூறியவை நிலைவேந்தனைக்குக் காரணமெனல்

267. அன்ன பிறவு மவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்த மென்ப.

இது மேலனவற்றுக்கு ஓர் புறனடை.

---

* 'தொன்மை' 'தோல்' என்பவற்றின் இலக்கணம் செய்யுளியலிற் கூறப்படும்.

இதன்பொருள் : அன்னபிறவும்—மேற்சொல்லப்பட்ட இருபத்தாறான்கு மெய்ப்பாடு போல்வனபிறவும்; அவற் றொடு சிவணி—அவற்றின்வேறன்றி அவைதம்மூட் பகுதி யாகி வருவன பிறவும்; மன்னிய வினைய நிமித்தம் என்ப— நிலைபெறத் தோன்றுங் காமவொழுக்கத்து நிமித்தமென்று சொல்லுவர் புலவர், என்றவாறு.

'மன்னியவினைய'வென்பது நடுவணைந்திணைக்கே யுரிய மெய்ப்பாட்டினவை என்றவாறு; என்னை? கந்தருவ வழக்க மல்லனவற்றை மன்னியகாமமென்றான்றோ, அஃது இடை யறவுபடாதாகலின். எனவே, கைக்கிளைக்கும் பெருந்தி ணைக்கும் வரையறையின்றி வேண்டியவாறு வரப்பெறுமென் பதாம், அவை மன்னியவினையல்லாமையின்; என்னை? 'கா மஞ்சாலா விளமையோள்வயி-னேமஞ்சாலாவிடும்பை' யெய் துதலும் (தொல்-அகத்-50) நாற்பத்தெட்டியாண்டையா னொடு பன்னீராட்டையாள் கூட்டஞ்சொல்லுதலும் ஒத்த காம மெனப்படாவாகலினென்பது. இவ்வாறு கூறவே, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் இவை வைத்த முறை யான் வரையறுத்துக் கூறப்படாவெனவும், அவை வருவன வந்தழிக் கொளப்படுமென்பதும் பெற்றும். இது புல னெறி வழக்கமல்லாத கந்தருவ மணத்திற்கும் ஒக்கும்.

'அன்ன பிறவு மவற்றொடு சிவணி' வருவன யாவையி னின் புகுமுகம்புரிதற்கட் டலைமகன் நோக்கியவழி ஒரு வல் லிப் பொதும்பராலும் மற்றொன்றனுஞ் சார்புபெற்று மறைத லும் அவையில்லாதவழி இடர்ப்படுதலு மென்றற்போல்வன புகுமுகம் புரிதலா யடங்கும். நகுகயமறைக்குங்கால் தலை மகன்கட் டோன்றிய நகைமுதலாகிய குறிப்பேதுவாக நகை

தோன்றியதனை மறைக்குங்கால் இதழ்மொக்குளுள் தோன்றுவது நகையெனப்படாது நகுகுயமறைத்தலின்பாற் படுமென்பது. இனிச் சிதைவுபிறர்க்கின்மையின்கண்ணும்,

'காட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்.' (தொல்-கள-5.)

என்றமையாற் கண்ணின் வேறுபாடுளவாமன்றே, அவை சிதைவுபிறர்க் கறிவிக்குமாயினும் ஆண்டுத் தானது மறைத்தாளென்னுங் கருத்தினளாகலின் அதுவுஞ் சிதைவு பிறர்க்கின்மையாமென்பது. அவையாவையெனின், அமர்த்து நோக்காது அலமர நோக்குதலும் நிலங்கிளைத்தலும் போல்வன. மற்றுப் பொறிநுதல்வியர்த்தற்குப் புறனடையாற்கொள்வன யாவையெனின், புறனடையாற்கோடல் ஆணையன்றுகலான் உள்ளனவற்றிற்குக் கொண்டொழிகவென்றவாறு. ஒழிந்தனவற்றிற்கும் இவ்வாறே வருவன அறிந்து அடக்கங் கூறுக.

மற்றும், 'பிறவும் அவற்றொடு சிவணி' யெனவே, மேற் கூறியவற்றொடு பொருந்தவருவன கோடுமன்றே? 'அன்ன' என்றதென்னை? யெனின்; அதனானே தலைமகட்குரிய மெய்ப்பாடு வேறுளவாயினுங்கொள்க. அவை ஐயப்படுதலும் ஆராய்தலுந் துணிதலுமுதலாயின. மற்றுத் தலைமகட்குரிய மெய்ப்பாடுபோலத் தலைமகற்குரியனவும் இன்னமுறையன வென்று வரையறுத்துக் கூறுரோவெனின்; அற்றன்று, தலைமகன்குறிப்புச் சிலபற்றித் தலைமகள்குறிப்புப் பலபிறக்குமாகலானும் ஐயமுதலாயின மெய்ப்பாடு காமப்புணர்ச்சிக்கு இன்றியமையாதன இன்மையானுந் தலைமகட்குரிய மெய்ப்பாடே சிறந்தனவென்று அவற்றை வரையறுத்துக் கூறினு

ரென்பது. மற்று, இவற்றை 'நிமித்த'மென்றதென்னையெனின், இவை முறையானே நிகழ்ந்து புணர்ச்சி நிகழுமாகலினென்பது. 'வினைய' என்பது ஆறும் வேற்றுமைப் பன்மையுருபு. இம்மெய்ப்பாட்டினுட் கைக்கிளைபெருந்திணைக்கு வருவன வருமாறு:

> "ஒருக்குநா மாடுங் குரவையு ணம்மை
> யருச்சிணன் போலேக்கி யல்லலேய் செய்தல்
> குருக்கட் கொலையேறு கொண்டேன்யா னென்னுந்
> தருக்கன்றே வாயர் பகன்." (கலி-104.)

எனப் புகுமுகம்புரிதல் கைக்கிளைக்கண் வந்தது. 'முன்னிய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே' (தொல்-கள-14) என்பதனுள் இது கைக்கிளையெனப்பட்டது. மற்றிது முல்லைத் திணைப்பாட்டன்றேவெனின், அது நிலத்தான் முல்லையாயிற் றென்பது அகத்திணையியலுட் கூறினும்*

இனித் தொன்மையுந் தோலும் முதலாயின வனப்புக்களுட் புகுமுகம்புரிதன் முதலாயின பெருந்திணைப் பொருள் பற்றிவருவன வருமாறு அறிந்துகொள்க. மற்றிவ் விருபத்துநான்கு மெய்ப்பாடுங் கற்பினுள் இம்முறையானே வரப் பெறுவோவெனின், அதற்கு இம்முறையான் இவையனைத்தும் வரல்வேண்டுவதின்மையிற் களவிற்கே விதந்துகூறினு ரென்பது. அஃதென்னை பெறுமாறெனின், 'பலபொருட் கேற்பின் நல்லது கோடல்' என்னும் உத்திவகை.

இனிக் கற்பினுள்வருவன வருமாறு :

---

* இது பேராசிரிய ருரையாகலின், இசகுறிப்பு அச்சிட்ட நச்சினார்க்கினிய ரகத்திணையியலுரைப்பகுதியிற் காணப்பட்டிலது.

"இனிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே."
(குறுந்-167.)

என்பதனுள் நகுநயமறைத்தல் வந்தது.

"மாண்மறந் துள்ளாத நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து கண்டைப்பாய் நெஞ்சே யுறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மெனநெருங்கிற் றப்பினெ
னென்றடி சேர்தலு முண்டு." (கலி-89.)

இதனுட் சிதைவுபிறர்க்கின்மை வந்தவாறு. ஒழிந்தனவும் அன்ன.

"நோய்சேர்ந்த திறம்பண்ணி நின்பாண னெம்மனை
நீசேர்ந்த வில்வினாய் வாராமற் பெறுகற்பின்" (கலி-77.)

என்பது மடந்தபவுரைத்தல்.

இவையெல்லாங் கற்பின்கண் வந்தன.

"அன்னை சொல்லு முய்க வென்னதூஉ
மீரஞ் சேரா வியல்பில் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கௌவையு மொழிக" (அகம்-65.)

என்பதோவெனின், அது 'பாராட்டெடுத்தல் மடந்தபவுரைத்தல்' (தொல்-மெய்ப்-16) என்புழி அடங்குமென்பது. மேற்கூறிய நிமித்தங்களின்றியும் புணர்ச்சி நகவும் எனல்

268. வினையுயிர் மெலிவிடத் தின்மையு முரித்தே.

இது மேலனவற்றுக்கே ஆவதோர் விதி கூறுகின்றது.

இதன்பொருள்: 'மன்னியவினைய' (தொல்-மெய்ப்-19) வெனப்பட்ட புணர்ச்சி மேல் அறுவகையான் இருபத்து

ரான்கெனக் கூறப்பட்ட மெய்ப்பாட்டினை அம்முறையானே நிமித்தமாகக்கொண்டு வருதலின்மையும் உரித்தெனப்படும், ஆற்றுமைவந்தவிடத்து என்றவாறு.

மேற்கூறிய இருபத்து ரான்கினையின்மை உரித்தென்பது அதிகாரத்தாற் கொள்க.

> ' தன்னசை யுள்ளத்து நன்னசை வாய்ப்ப
> வின்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து
> நக்கென னல்லளே யானே யெய்த்த
> நோய்தணி காதலர் வரவீண்
> டேதில் வேலற் குவந்தமை கண்டே." (அகம்-22.)

எனவும்,

> " *வளைந்துவா வினமுலை ஞெமுங்கப் பல்லூழ்
> விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்றலி
> னின்மார் படைதலி னினிதா கின்றே" (அகம்-58.)

எனவும் இவை களவியலுள் உயிர்மெலிந்தவிடத்துப் புணர்ச்சி நிமித்தமெனக் கூறப்பட்டவையின்றியும் புணர்ச்சி நிகழ்ந்தவாறு ; என்னை ? முயங்குதொறு ரகைதோன்றிற் றெனவே, பாராட்டெடுத்தன் முதலாயினவின்றியும் புணர்ச்சி நிகழ்ந்ததாம். ஒழிந்தனவும் அவ்வாறேகொள்க. இவைகண்டவழி யுவத்தலாகாவோவெனின், ஆண்டுத் தன்னுவகைகூறினன்றே கரந்திடத் தொழிந்தாளாகலினென்பது.

> " தண்டுளிக் கேற்ற பலவுழு †செழுஞ்செய்
> மண்போன் ஞெகிழ்ந்தவற் கலுழ்ந்தவென்
> னெஞ்சறை போகிய வறிவி னேற்கே." (அகம்-26.)

* 'வளைந்து' என்பதும்பாடம்.
† 'செஞ்செய்' என்பதும் பாடம்

னன்புழிப் பாராட்டெடுத்தன்முதலாகிய பன்னிரண்டு நிமித்தமுமின்றி ஆற்றுமைநிமித்தமாகக் கற்பினுட் புணர்ச்சி நிகழ்ந்தது. உம்மை, எதிர்மறை; உயிர்மெலிவிடத்து உடைமையுடைத்துமாம் அவ்வினையென்பது. "தொடிநெகிழ்ந்தனவே தோள்சாயினவே" (குறுந்-239) என்பதனுள் ஊழுணிதைவரலென்னும் மெய்ப்பாடுவந்தது. பிறவும் அன்ன. இனி மேற்கூறிய ஆறுமேயன்றி இன்னும் இவற்றொடு நான்குகூட்டிப் பத்தென்பாருமுளர். அவை இன்ப மாதற் குரியனவன்மையின் வரையறை கூறுதொழிந்தா னென்பது. (20)

269. அவையு முளவே யவையலங் கடையே.

இஃது எதிரதுபோற்றி இறந்தது காத்தது.

இதன் பொருள்: அவையு முளவே—இனி எதிர்வருகின்றனவும் உளவாவது; அவையலங்கடையே—இறந்தனவற்றுக்கு இடனல்லாதவிடத்தென, என்றவாறு.

இதனது கருத்து, மேற்கூறிய இருபத்துநான்கு மல்லாதவழி இன்பத்தை வெறுத்தன் முதலாக இனிக் கூறுகின்ற மெய்ப்பாடும் உளவாம் என்றவாறு. அவையல்லாதவிடத்து இவையும் உளவாமெனவே, வருகின்றமெய்ப்பாடுங் களவிற்குங் கற்பிற்குமுரியவெனவுங், களவிற்குவருங்கான் முதற்கூறிய இருபத்து நான்கன்பின்னுமே இவை பெரும்பான்மையான் வருமெனவுங், கற்பிற்காயிற் பெரும்பான்மையின் வருமெனவுங் கூறியவாறு. அவை இனிக் கூறுகின்றும். (21)

270. இன்பத்தை வெறுத்த றுன்பத்துப் புலம்ப
லெதிர்பெய்து பரித லேத மாய்தல்

பசியட நிற்றல் பசலை பாய்த
லுண்டியிற் குறைத லுடம்புநனி சுருங்கல்
கண்டுயின் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடன் மெய்யே யென்ற
லியஞ் செய்த லவன்றமை ருவத்த
லறனளித் துரைத்த லாங்குநெஞ் சழிதல
லெம்மெய் யாயினு மொப்புமை கோட
லொப்புவழி யுவத்த லுறுபெயர் கேட்ட
னலத்தக நாடிற் கலக்கமு மதுவே.

இது மேல் 'அவையுமுள' (தொல்-மெய்ப்-21) எனப் பட்ட மெய்ப்பாடு கூறுகின்றது.

இதன்பொருள்: எண்ணப்பட்ட இருபதும் 'மன்னிய வினைய நிமித்தம்' (தொல்-மெய்ப்-19) என்பான் 'நலத்தக நாடின் அதுவே'யாமென்றனென்பது. இவை புணர்ச்சிக்கு நிமித்தமாகாதனபோன்று காட்டினும் அவற்றை மிகவும் ஆராய்ந்துணரிற் புணர்ச்சிநிமித்தமேயாம், என்றவாறு.

இன்பத்தை வெறுத்தலென்பது, யாழுங்குழலும் பூவுஞ்சாந்தும் முதலாக இன்பத்திற்கேதுவாகிய பொருள் கண்டவழி அவற்றின்மேல் வெறுப்புத்தோன்றுதல். அவை காமத்திற்கு ஒருவகையான் எதுவாமாகலின் 'மன்னியவினைய நிமித்த' மெனப்படுமாகலான் அவற்றை வெறுத்தல் புணர்ச்சிக் கேதுவாகா தன்றேபாயினும் அதனை ஆராய்ந்துணரின் நிமித்தமென வேண்டுமென்பான் 'நலத்தகநாடின் அதுவே' யென்றனென்பது. கலக்கமுமென நின்ற உம்மை மேற் -றிய பத்தொன்பானையுந் தழுவுதலின் இறந்ததுதழீஇயிற் றும்

"கல்லாக் கோவல ரூதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே." (அகம்-74.)

என்புழி இன்பத்தை வெறுத்தனளாயினும் புணர்ச்சிக்கே துவாமென்பது கருத்து.

"எல்லி, மனைசேர் பெண்ணை மடிவா யன்றி
நுணையொன்று பிரியினுந் துஞ்சா காணெனக்
கண்ணிறை நீர்கொண்டு சாக்கு
மொண்ணுத லரிவையா னென்செய்கோ வெனவே."
(அகம்-50.)

*என்பதும் அது. துன்பத்துப் புலம்பல்; என்பது, பிரிவாற்றாது துன்புறுங்காலை அவ்வாற்றாமை தலைமகற்கின்மித்தானே துன்புறுகின்றாளாகச் சொல்லுதல். அவை கூட்டத்தை வெறுத்த குறிப்பாயினும் அக்கூட்டத்திற்கே நிமித்தமாகும் ஆராய்ந்துணரினென்றவாறு. அவை,

"நின்னுறு விழுமங் களைந்தோ
டன்னுறு விழுமம் வீந்துமோ வெனவே." (அகம்-169.)

என வரும்.

'எதிர்பெய்து பரித' லென்பது, உருவுவெளிப்பாடு, அது தலைமகனையும் அவன் தேர்முதலாயினவற்றையும் தன்னெதிர் பெய்துகொண்டு பரிந்து கையறுதல். அது,

---

* முன் அச்சுப்பிரதியில் 'என்பது' என்னுஞ்சொல் 'துன்பத்துப் புலம்பல்' என்பதைக்கொண்டு முடிவதாகக்காணப்படுகின்றது; அங்ஙனமாமேல் 'துன்பத்துப் புலம்பல்' என்பது வேறாயின்றி மயக்கமாமாகலின், வேறேட்டுப்பிரதிக்கிணங்க ஈண்டுச் செய்யப்பட்டதிருத்தமே பொருத்தமுடைத்தாமென்க.

"வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
துயின்மறந் தனவாற் ரேழியென் கண்ணே." (குறுந்-301.)

என்புழி வாராதென்றுணர்ந்தது இக்காலத்தாகலான் அதற்குமுன் இன்னவாறு பட்டதன்று அன்மையின் எதிர் பெய்து பரிதலாயிற்று.

'எதமாய்த' லென்பது, கூட்டத்திற்குவரும் இடையூறுண்டென்று பலவும் ஆராய்தல். அது தொதமலர் வரையக் கருதுவர் கெரல்லெனவும், பிரிந்தோர் மறந்து இனிவாரார்கொல்லெனவுந் தோன்றும் உள்ள நிகழ்ச்சி. அது,

"வாரார் கொல்லெனப் பருவருந்
தாரார் மார்பீ தணந்த ஞான்றே."

என வரும்.

'பசியடநிற்ற' லென்பது, பசிவருத்தவும் அதற்குத் தளராது உணவு மறுத்தல்.

"அன்னைய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலு முண்ணுள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி." (அகம்-48.)

எனவும்,

"இனியா, னுண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்."
(கலி-23.)

எனவும் வரும்.

'பசலைபாய்த' லென்பது, பசலைபரத்தல். அது,

"கன்று முண்ணுது கலத்தினும் படாது
கல்லான் நீம்பா னிலத்துக் காஅம்

னைக்கு மாகா தென்னைக்கு முதலாது
பசலை யுணீஇய வேண்டுந்
திதலை யல்குலெம் மாமைக் கவினே." (குறுந்-27.)

என வரும்.

'உண்டியிற்குறைதல்' லென்பது, பசியடங்கிற்றலேயன்றிச் சிறிது உண்டியூட்டிய வழிப் பண்டுபோலாது கழியவுஞ் சிறிதுண்டல். அது,

" நீம்பா லூட்டினும் வேம்பினுங் கைக்கும்
வாரா யெனினு மார்வமொடு நோக்கு
மின்னிற் சிறந்ததொன் றிலளே
யென்னினும் படாஅ ளென்னிதற் படலே."

என வரும்.

'உடம்புநனி சுருங்க' லென்பது, அவ்வுண்ணுமை உயிரிற் செல்லாது உடம்பிற் காட்டுதல். அது,

" தொடிநிலை நெகிழச் சாஅய்த் தோளவர்
கொடுமை கூறிய வாயினுங் கொடுமை
நல்வரை நாடற் கில்லை தோழி
நெஞ்சிற் பிரிந்தது மிலரே
குன்ற நோக்கங் கடிந்தது மிலரே."

என வரும்.

'கண்டுயின்மறுத்த' லென்பது, இரவும் பகலுந் துஞ்சாமை. அது,

" புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்ப னின்றேற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு

னாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோர்யா ளுகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணெடு நெஞ்சந்தோ ளேனே."

என வரும்.

'கனவொடுமயங்க' லென்பது, அரிதினில் துயிலெய்திய வழித் தலைமகனைக் கனவிற்கண்டு பின்னர் அவனன்மையின் மயங்கும் மயக்கம்.

"அலந்தாங் கமையலெ னென்றுனைப் பற்றியென்
னலந்தாரா 'யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற மூயங்கிப்'
புலம்ப லோம்பென வளிப்பான்போலவும்" (கலி-128.)

என்பது கனவொடு மயங்கிற்று.

'பொய்யாக்கோட' லென்பது, மெய்யைப் பொய்யாக் கோடல். அது,

"கனவிலு னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குளின் மார்பு." (கலி-68.)

எனவும்,

"வானி னிலங்கு மருவித்தே தாலுற்ற
குன்பேணன் பொய்த்தான் மலே." (கலி-41.)

எனவும்,

"வருவே னென்ற நாளும் பொய்த்த
வளியே ருண்க ணீரு நில்லா."

எனவும் வரும்.

'மெய்யேயென்ற' லென்பது, பொய்யை மெய்யென்று துணிதல். அது,

"கழங்கா டாயத் தன்றுய *மருவிய
பழங்க ணோட்டமுன் னலிய
வழுங்கின னல்லனே வயர்ந்தனன் மன்னே."

என்பது. தானே தன்மகனை வாயில்கொண்டு புக்கானெனினும் அதனைப் பழங்கண்ணோட்டம் முன் கலிதரப் பொய்யே புகுந்தானென்று மெய்யாகத் துணிந்துகோடலின் அப்பெயர்த்தாயிற்று.

'ஐயஞ்செய்த' லென்பது:

"தாதவர் †விடுத்தார் துறப்பார்கொ லெனதக
விருங்குயி லாலு மரோ" (கலி-33.)

என்புழி நம்மை இம்மைப்பிறப்பினுள் துறப்பார்கொல் லென வாளாதே ஐயஞ்செய்தமையின் ஐயமாயிற்று.

'அவன்றம ருவத்த' லென்பது:

"ஊர ஞரன் போலுந்
தேரும் பாணன் றெருவி னனே."

என்பது. அவன் றமரைக்கண்டு உவந்தது. இது முனிவெனப்படாதோவெனின், அது தலைமகனைப் புலந்தாற் போல்வதோர் முனிவாயினல்லது பகைபட நிகழாக்குறிப் பெனப்படும்; அல்லாக்கால் அது பெண்டன்மையன்றுமாகலின்.

---

* 'மருளிய' என்பதும் பாடம்.

† 'விடாராய்' என்பதும் பாடம்.

"அவர் நாட்டு, *மாலைப் பெய்த மணங்கமழ் நீரியொடு
காலை வந்த காந்தண் முழுமுதன்
மெல்லிலை குழைய முயங்கவு
மில்லுய்த்து நடவுங் கடியா தோனே." (குறுந்-361.)

என்பதும் அது.

'அறனளித் துரைத்த' லென்பது, அறக்கிழவனை அன்பு செய்தல். அது,

"பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை யின்றே ளெய்தி." (அகம்-9.)

என வரும்.

'ஆங்குநெஞ் சழிதல்' லென்பது, அங்ஙனம் உரைக்குங் கால் நெஞ்சழிந்துரைத்தல். எனவே, அறனளித்துரைத்தல் அழிவின்றென்றுமென்பது சொல்லிறைப். அது,

"பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு மன்னை
வழிபட் டிரச்குவென் வந்தன னென்னெஞ்
சழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ வென்று." (கலி-143.)

என வரும்.

---

* 'மாலைப் பெய்த மணங்கமழ் நீரி
யோர்குலை யிவந்த முழுமுதற் காந்தண்
மெல்லிலை குழைய முயங்கலு
மில்லுய்த்து நடுதலுங் கடியா தோட்கே'

என்பது வேறுபாடம்.

'எம்மெய்யாயினு மொப்புமை கோட' லென்பது, யாதா னும் ஒரு பொருள் கண்டவிடத்துத் தலைமகனைடொப்பு மைகோடல். அது,

> "கணைகழி கல்லாக் கல்பிறங் காரிடைப்
> பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
> பிணையுங் காணிரோ பிரியுமோ வவையே." (கலி-20.)

என எம்மெய்யாயினும் ஒப்புமை கொண்டவாறு. 'எம் மெய்யாயினு' மென்றமையாற் கண்டபொருளும் கேட்ட பொருளும் ஒப்புமை கொள்ளப்பெறு மென்றவாறு.

'ஒப்புவழியுவத்த' லென்பது, ஒப்புமையுண்டாகிய வழி யே உவமைகொண்டு அதனானே உவகை தோன்றுவது. எனவே, முன்னது ஒப்பின்றி ஒப்புமைகொண்டதாயிற்று ; என்னை ? எம்மெய்யாயினு மென்றமையின்.

> "காமரு நோக்கினை யத்தத்தா வெல்லுனின்
> றேமொழி கேட்ட வினிதுமற் றின்னுதே" (கலி-80.)

என்பது ஒப்புவழியுவத்தது ; என்னை ? காமரு நோக் கினையென்றமையின்.

> "பால்கொள வின்றிப் பகல்போன் *முறைகோடாக்
> கோல்செம்மை யொத்தி பெருமமற் றொவ்வாதி"
> (கலி-86.)

என வருவதனானுஞ் சொல்லுப.

'உறுபெயர் கேட்ட' லென்பது, தலைமகன் பெருப்புகழ் கேட்டு மகிழ்தல். அவை,

---

* 'முறைக்கொல்கா' என்பதும் பாடம்.

"பலவின் பழத்துட் டங்கு மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வா" (கலி-41.)

எனவும்,

"மென்றோ ணெகிழ்த்தான் *றிதமல்லால் யான்காணே
னன்றறி தென்று பிற" (கலி-142.)

எனவும் வரும்.

'கலக்க'மென்பது, சொல்லத்தகாதன சொல்லுதல். அவை,

"பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து" (கலி-142.)

எனவும்,

"பிறங்கிரு முந்நீர் வெறுமண லாகப்
புறங்காலிற் போக விறைப்பேன் முயலி
னறம்புணை யாகலு முண்டு" (கலி-144.)

எனவும் வரும். 'கலக்கமு நலத்தக நாடி னதுவே' என்றது கலக்க மென்பதனை வேறுபெயர்த்து வைத்தென்னையெனின், இக்காலத்து அதனினுங்கு நிகழும் மெய்ப்பாட்டுக் குறிப்புளவல்ல தலைமகட்கென்பது அறிவித்தற்கென்பது. இன்னும் அதனையே தலைமகற்காயின் அதனினுங்கு வருவதோர் கலக்கமும் உளதாமென்றது; அவை, மடலூர்தலே வரைபாய்தலே என்றற்றொடக்கத்தன. அது,

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப

---

* 'தகையல்லால்' என்பதும் பாடம்.

மறுகி னூர்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே." (குறுந்-17.)

இதனுட் சாதல் எல்லையாகக் கூறியவாறு கண்டு கொள்க.

இவ்வாறு கூறலே இச்சூத்திரத்துளோதிய இருபது மெய்ப்பாடுந் தலைமகற்கும் எற்றவகையானே கொள்ளப்படுமென்பது. அவை,

"எவ்வி யிழந்த *வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மெனவ னூறும்
பல்லிருங் கூந்தல் †டாருளர் நமக்கே." (குறுந்-19.)

என்பது துன்பத்தப் புலம்பலாம்; என்னை? தானே துன்புறுகின்றுரைத்தலைமகன் உரைத்தமையின்.

"அந்தீங் கிளவி யாயிழை மடந்தை
கொடுங்குழைக் கமர்த்த நோக்க
நெடுஞ்சே ணிரைடை யிலங்கு ஞான்றே."

என்பது எதிர்பெய்து பரிதல்; என்னை? முற்காலத்து எதிர்ப்பட்டமை பிற்காலத்துச் சொல்லினமையின். ஒழிந்தனவுந் தலைமகற்குரியனவாகி வருவனவும் வந்தவழிக் கண்டு கொள்க. இவையெல்லாம் அறனும்பொருளுமன்றி இன்பப்பொருள் நிகழ்ந்தவிடத்து அவரவருள்ளத்து நிகழ்வனவாதல் வழக்குநோக்கி உணரப்படுமென்பது. மேற்கூறிய நகை முதலாயவற்றுக்கும் இஃது ஒக்கும். இவ்வெண்

* 'வறுமையாழ்ப் பாணர்' என்பதும் பாடம்.
† 'யாரனோ' என்பதும் பாடம்.

ணப்பட்டன வெல்லாம் உள்ளத்து நிகழ்ந்தன்வற்றை வெளிப்படுப்பன வாகலான் மெய்ப்பாடெனப்பட்டன. மேல்வருவனவற்றுக்கும் இஃது ஒக்கும். (உஉ)

வரைவுகடி நிமித்தமான மெய்ப்பாடுகள்.

271. முட்டுவயிற் கழறன முனிவுமெய்ந் நிறுத்த
லச்சத்தி னகற லவன்புணர்வு மறுத்த
றூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்
றுயிரு நான்கே யழிவில் கூட்டம்.

இது வரைந்தெய்துங் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடு இவை எட்டுமென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் :1. முட்டுவயிற்கழறல் — தலைக்கிற்கு முட்டுப்பாடாகியவழிக் கழறியுரைத்தலும்: அது,

"நொச்சி வேலித் தித்த றுறந்தைக்
*கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றுற் றுழிஞங் களவே" (அகம்-122.)

என்பது. இது தலைமகன் கேட்பக் கழறியுரைத்தது.

2. முனிவுமெய்ந்நிறுத்தல்—தலைமகளுள்ளத்து வெறுப்பு வெளிப்பட நிற்குநிலைமையும்:

அஃது,

"இன்னுயிர் கழிவ தாயினு நின்மக
ளாய்மல ருண்கட் பசலை
காம நோயெனச் செப்பா தீமே" (அகம்-52.)

'கன்முது புறங்காட் டன்ன' என்பதும் பாடம்.

என்புழி வாழ்க்கைமுனிந்து *தலைமகள் சொல்லியது.

5 அச்சத்தினகறல் — தலைமகன்கண்வரும் எதமஞ்சி அவனை நீங்குங் குறிப்பும்:

"இன்ன மாகவு நன்னர் நெஞ்ச
மென்னெடு நின்னெடுஞ் †சூழாது கைமிக்
கிறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வருஉம் யானைக்
கயிற்றுப் புறத்தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்
பிட்டருங் கண்ண படுகுழி யியவி
னிருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடித் தாங்கிய சென்ற தின்றே" (அகம்-127.)‡

என்னும்பாட்டினை முழுதுங்கொள்க. அதன் கருத்தாவது, நாம் அவர் இருளிடைவருதலேதமஞ்சி அகன்றுவலித்திருப்பவும் என்னையும் நின்னையுங் கேளாது என்னெஞ்சு போவானேனென்றவாறாயிற்று.

6 அவன் புணர்வுமறுத்தல்—இரவுக்குறியும் பகற்குறியும் விலக்குதற்கெழுந்த உள்ளநிகழ்ச்சியும்:

தலைமகனை மறுத்தல் அவன் புணர்வு மறுத்தல் அது தமரையஞ்சி மறுத்தமையானும் இது வரைவு கடாவுதற்குக் கருத்தாகலானுந் தலைப்புணர்வினை மறுத்தலோடு இது வேற்றுமையுடைத்து.

---

* 'தலைமகன் சொல்லியது' என்னும் பாடம் பொருட் பொருத்தமின்று.

† 'சூழ்ந்து' என்பதும் பாடம்.

‡ இச்செய்யுள் முழுவதையும் (ந - உரை) 470-ஆவது பக்கத்திற் காண்க.

"நல்வரை நாட நீவிரின்
*மெல்லி யாளொரு நாள்வா ழலளே" (அகம்-12.)

என்பது தலைமகள்குறிப்பினைத் தோழி கூறியதாகலான் அஃது அவன்புணர்வு மறுத்தலெனப்படும். இஃது 'ஒன் றித்தோன்றுந் தோழிமேன' (தொல்-அகத்-39) என்னும் இலக்கணத்தால் தோழிகுறிப்பாயினுந் தலைமகள் குறிப் பெனவே படுமென்பது கொள்க.

5 தூதுமுனிவின்மை — புள்ளும் மேகமும்போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று தூதிரந்து பன்முறை யாயுஞ் சொல்லுதலும்: அவை,

"கானலுங் கழனியுங் கழியுங் கூறுது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையு மொழியா
தொருநின்னல்லது பிறிதியாது மிலனி
யிருங்கழி மலர்ந்த கண்போ னெய்தல்
கமழிதழ் நாற்ற மமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறவை யிளருந் துறைவனை நீயே
சொல்ல வேண்டுமோ ரளவ" (அகம்-170.)

என்புழிக் கூறப்பட்டனவெல்லாந் தூதாகலின், தூதுவிடுதலை வெறுத்தன்மை கூறியதாம் இப்பாட்டென்பது.

"புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
றீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி காமம்
நெய்பெய் தீயி னெதிர்கொண்டு
தாமணந் தனையமென விடுகந் தூதே." (குறுந்-106.)

* 'மெல்லிய லோருந் தான்வா ழலளே என்பதும் பாடம்.

என்பதாவெனின், அது கற்பிற்கல்லது ஏலாது. என்னை? களவினுள் நெய்பெய் தீயின்வந்து எதிர்கொளலாகாமையின்.

6. துஞ்சிச்சேர்தல் — மணியகத்துப் பொய்த்துயிலோடு மடிந்து வைகுதலும்:

துஞ்சுதலெனினும் மடியெனினும் ஒக்கும். வேண்டிய வாறு கூட்டம் நிகழப்பெறுமையின் தலைமகனோடு புலந்தாள் போல மடிந்தொன்றுமாதலின் அதனைத் துஞ்சிச்சேர்தலென் றனென்பது. எங்ஙனமோவெனின்,

"என்மலைந் தனன்கொ றானே தன்மலை
யார நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே." (குறுந்-161.)

என்புழி, என்னகாரியம் மேற்கொண்டு வந்தானென்ற மையின் இது துஞ்சிச்சேர்தலாயிற்று. அல்லாக்கால் அங் ஙனஞ் சொல்லுதல் அன்பழிவெனப்படும்.

"ஆமிழி யணிவரை" என்னுங் குறிஞ்சிப்பாட்டினுட்

"பின்னீதல் வேண்டுநீ பிரிந்தோணட் பெனநீவிப்
பூங்கண் படுத்தலு மஞ்சுவ றூங்கிய
வருந்திய ரவலந் தாக்கின்
மருங்கறி வாரா மலையினும் பெரிதே" (கலி-48.)

என்னுஞ் சுரிதகமும் அது.

7. காதல்கைம்மிகல்—காமங்கையிகந்தவழி நிகழும் உள்ள நிகழ்ச்சியும்: அது,

"உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மனையைத் தன்றே வருத்தி

வான்றோய் வற்றே காமஞ்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே" (குறுந்-102.)

என வரும்.

8.கட்டுரையின்மை—உரைமறுத்திருத்தலும்:

அதனுளே அதற்குத் தோழிகண்ணுயினுந் தலைமகன் கண்ணுயினும் உரைமுறை நிகழ்வதல்லது தலைமகள் உரையாளென்பது பெற்றும். அது,

"யான்ற *னறிவ ருனறி யலளே
யாங்கா குவள்கொ ருனே
பெருமுது செல்வ ரொருமட மகளே." (குறுந்-337.)

என்பது தலைமகள் கட்டுரையாதிருத்தலின் தலைமகன் தமரினெய்தல் வேண்டினமையிற் கட்டுரையின்மையின் வரைவுகடாதலாயிற்றென்பது. ஒழிந்தனவும் அவ்வாறே வரைவுகடாதற்கு ஏற்றவாறு உரையிற்கொள்க.

என்று ஆயிரு நான்கே அழிவில்கூட்டம்—என்றெண்ணப்பட்ட மெய்ப்பாடெட்டும் பின் அழியாத கூட்டத்திற்கு ஏதுவாம் என்றவாறு. அஃதாவது வரைந்தெய்துங் கூட்டமென உணர்க. (உரு)

வரைந்தெய்தியபின் தலைமகள் தன்னோடுகூடிய மெய்ப்பாடெட்டு

272. தெய்வ மஞ்சல புரையறந் தெளித
லில்லது காய்த லுள்ள துவர்த்தல்
புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாக்க
மருண்மிக வுடைமை யன்புதொக நிற்றல்
பிரிவாற் றுமை மறைந்தவை யுரைத்தல்
புறஞ்சொன் மாணக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே.

*'அறிவலே' என்பதும் பாடம்.

இஃது அழிவில்கூட்டம் நிகழ்ந்தபின்னர் வருதற்குரிய மெய்ப்பாடு இவையென்கின்றது.

இதன்பொருள்: இவ்வெண்ணப்பட்ட பதினென்றும் மேற்கூறிய அழிவில்கூட்டமெனப்படும், என்றவாறு.

செப்பியபொருளென்பது அழிவில்கூட்டமன்றே, அதற்கு முற்படும் மெய்ப்பாடெட்டனையும் அழிவில்கூட்டமென்றதுபோல அதற்குப் பிற்படும் மெய்ப்பாட்டினையும் அழிவில்கூட்டமென்பான் மேற்கூறிய அழிவில்கூட்டமே இவையுமெனக் கூறியவாறு. எனவே, வரைந்தெய்திய பின்னர்த் *தலைமகள் மனத்து நிகழ்வன இவையென்பது கூறினனும்.

1தெய்வமஞ்சலென்பது, தலைமகற்குத் தொழுகுலமாகிய தெய்வமும் அவற்கு ஆசிரியராகிய தாபதரும் இன்னோரென்பது அவனுணர்த்தப்பட்டு உணர்ந்த தலைமகள் அத்தெய்வத்தினையஞ்சி ஒழுகுமொழுக்கம் அவள்கட்டோன்றும், அங்ஙனம் பிறந்த உள்ளநிகழ்ச்சியைத் தெய்வமஞ்சலென்றனென்பது. மற்றுத் தனக்குத் தெய்வந் தன் கணவனுதலான் அத்தெய்வத்தினைத் தலைமகளஞ்சுதல் எற்றுக்கெனின், அவனின் தான் வேறல்லளாக மந்திரவிதியிற் கூட்டினமையின் அவனன் அஞ்சப்படுந் தெய்வந் தனக்கும் அஞ்சப்படுமென்பது. அல்லதூஉந் தலைவற்கு ஏதம் வருமெனவும்

"சினவாடச் சிறக்குளின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ". (கலி-16.)

---

*'தலைமகன் மனத்து' என்னும் முன்னச்சுப்பிரதியிலுள்ள பாடம் பொருத்தமின்று.

என்பது, தெய்வத்திறநோக்கித் தெருமந்ததாம்; * என்னை அவற்கிலவெனவும் அன்னவெனவுந் தாம்வேண்டிய குறை முடியாது பிரிந்தார்மாட்டு ஏதஞ்செய்யுங்கொலென்றஞ்சி உரைத்தவாறு.

" அச்சா ருக வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னுகுவல்." (கலி-75.)

என்பதும் அது. இவை,

' ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்' (தொல்-கற்-5.)

தலைமகள்கருத்தின்கண் நிகழுங் குறிப்பென்பது.

2 புரையறந்தெளிதலென்பது, தனக்கொத்த இல்லறம் இன்னதென்று தலைமகள் மனத்துப் படுதல். அது,

" விரியுளைக் கலிமான் றேரொடும் வந்த
விருந்தெதிர் †கோடலின் மறப்ப லென்றும்" (கலி-75.)

என வரும். இஃது அவனைநெ சொல்லாடாது ஊடியிருப்பேனையின், விருந்துகொண்டு புகுதரும், அதனை ஊடலின்மறப்பேனென்றமையிற் புரையறந்தெளிதலாயிற்று.

3 இல்லதுகாய்தலென்பது, களவின்கட்போலாது தலைமகற்கு இல்லாததனை உண்டாக்கிக்கொண்டு காய்தல். அது,

" நற்ரு ரகலத்துக் கோர்சார் மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
மூட்டுப்பா டாகலு முண்டு"

---

* இடைத்த பிரதிகளைக்கொண்டு இச்சொற்றொடர்ப் பொருள் தெரிந்து திருத்தக்கூடாமையின், இஃது இருந்தபடியே விடப்பட்டது.

† 'கோடலே' என்பதும் பாடம்.

என வரும். இது கடவுளரையே கண்டு தங்கினானாயினும் நெட்டிருங்கூந்தற் கடவுளரையே கண்டாயென்று இல்லது சொல்லிக் காயுமாகலின் அப்பெயர்த்தாயிற்று.

4 உள்ளதுவர்த்தலென்பது, தலைமகனாற் பெற்ற தலையளி உள்ளதேயாயினும், அதனை உண்மையென்றேதெளியாது அருவருத்துநிற்கும் உள்ளநிகழ்ச்சி. அது "கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்" என்னும்பாட்டினுள்,

"வேப்புநனை யன்ன நெடுங்கண் ணீர்ஞெண்
டிரைதேர் வெண்குரு கஞ்சி *யயல
வொலித்த பகன்றை யிருஞ்சேற் றள்ளற்
றிதலையின் வரிப்ப வோடி †விரைபுத
னீர்மலி மண்ணளைச் செறியு மூர" (அகம்-176.)

என்புழித் தலைமகன் வாயில்வேண்டச் சென்றானைப் பிறர் கூறும் பழிக்கு வந்தாயென்றமையின் இஃது உள்ள துவர்த்தலாயிற்று.

"பட்டுழி யறியாது பாகனைத் தேரொடும்
விட்டவள்வர னோக்கி விருந்தேற்றுக் கொளநின்றாய்"

என்பதும் அது.

5 புணர்ந்துழியுண்மையென்பது, முன்கூறிய இல்லது காய்தலும் உள்ளதுவர்த்தலுமாகிய விகாரமின்றிப் புணர்ச்சிக் காலத்துச் செய்வனசென்ற உள்ளநிகழ்ச்சி. அது,

"குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதா—மொளியிழா
யூடி யிருப்பினு மூர னறுமேனி
கூட லினிதா மெனக்கு" (ஐந்திணை, 50-30.)

---

* 'அயல, தொலிந்த பகன்றை' என்பதும் பாடம்.

† 'விரைந்துதன்' என்பதும் பாடம்.

என்பது. ஏன்னை? புணர்ந்துழியுண்மை கூறினுள் விகார மின்றி யாதலின்.

6 பொழுதுமயப்பாக்கமென்பது, களவின்கட் பகற்குறி யும் இரவுக்குறியுமென வரையறுத்தாற்போல்வதோர் வரை யறையின்மையின் அப்பொழுதினை மறுத்தலாகிய ஆக்க மென்றவாறு. எனவே, களவுக்காலத்துப் பொழுது வரைந் தபட்ட இடர்ப்பாட்டினீங்கிய மனமகிழ்ச்சி ஆக்கமெனப் படும். அது,

"அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் *மலர்ந்த தூம்புடைத் திரள்கா
லாம்பல் குற்றுநர் நீர்வேட் டாங்கவ
ளிடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் ரோன்றி யாநுமக்
கரியே மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே." (குறுந்-178.)

என்பதனுள், தொழுது காண்பிறையில் தோன்றினமென் பது களவுக்காலத்து இடையீடுபெருகிற்றெனக் கூறி அங் ஙனம் வரைந்தபொழுதினை மறுத்தகாலத்து நடுங்கலானீ ரென்றமையின் இஃது அப்பொருட்டாயிற்று.

7 அருண்மிகவுடைமையென்பது, களவுக்காலத்துப்போ லத் துன்பமிகுதலின்றி அருண்மிகத் தோன்றிய நெஞ்சின ளாதல். அது,

† "நின்ற சொல்லர் நீடுதோன் றினிய
ரென்று மென்றேள் பிரிபறி யலரே" (நற்றிணை-1.)

என வரும்.

---

* 'மலர்' என்பதும் பாடம்.

† 'நின்ற சொல்லி னீடுதோ றினியர்' என்பதும் பாடம்.

8 அன்புதொகை நிற்றலென்பது, *களவுக்காலத்து விரிந்த அன்பெல்லாம் இல்லறத்தின்மேற் பெருகிய விருப்பினானே ஒருங்குதொகை நிற்றல்.

"எம்போற், புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுங்கா னின்னின்
றுறைவா ளென்ன சுடத்தளோ மற்றே"

என்புழிப் புதல்வர்ப்பயந்து நின்னின் றுறையுங்கடத்தினம் யாமென்றமையின் இஃது அன்புதொகை நிற்றலாயிற்று.

9 பிரிவாற்றுமையென்பது, களவிற் பிரிவாற்றுதல் வேண்டுமாறுபோலக் கற்பினுட் பிரிவாற்றுதல் வேண்டப்படாது; என்னை? புறத்தார்க்குப் புலனாகாமை மறைத்தல் கற்பிற்கு வேண்டுவதன்றாகலி னென்பது.

"இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிளிவெனக்
கடனிறந்து செயல்குழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போ லருழுதேத்த வயங்கிய கற்பினு
டடமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை" (கலி-2.)

என்புழி இனைய கற்பினாற்பிரியாமை பொருளாயினன்றி நும்மால் தரப்படும்பொருள் பொருளாகுமோ என்றதன் கருத்தாவது, பிரிவாற்றுமையின் இவள் இறந்துபடுவள், பின்னை அப்பொருள்கொண்டு யாற்றும் இல்லறம் யாண்டையதெனத் தலைமகள் பிரிவாற்றுமை கூறியவாறுயிற்று.

10 மறைந்தவையுரைத்தலென்பது, களவுக்காலத்து நிகழ்ந்தனவற்றைக் கற்புக்காலத்துக் கூறுதல். அவை,

---

* 'களவுக்காலத்துப்போலத் தன்பமிகுதலாற் பிரிந்த' என்பதும் பாடம்.

"களவினு ணிகழ்ந்த வருமையைப் புலம்பி
யலமர லுள்ளமொ டளவிய விடத்தும்" (தொல்-கற்-5.)

ஏன்புழித் தோன்றிய மனக்குறிப்பு. அது,

"முயங்கல் விடாஅ லிவையென மயங்கி
யானோ மென்னவு மொல்லார் தாமற்
றிவைபா ராட்டிய பருவமு முளவே
யினியே, புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்
திதலை யணிந்த தேங்கொண் மென்முலை
நறுஞ்சாந் தணிந்த சேழ்கிள ரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுத றாமஞ் சினரே" (அகம்-26.)

என்பது. முன்னிலைப்புறமொழியாகலான் மறைந்த ஒழுக்கத்துக்கண் நிகழ்ந்தபொருளைக் கற்பினுள் உரைத்தவாறாயிற்று.

॥ புறஞ்சொன்மாணாக்கிளவியென்பது, தலைமகற்கு வந்த புறஞ்சொல்லின் பொல்லாங்கு குறித்து எழுந்த கிளவி. அவற்கு வரும் பழிகாத்தலுங் *தனக்கு அறமாதலின் அதுவுங் கற்பின்கண்ணே நிகழுமென்பது. அது,

"களிறுகவர் கம்பலை போல
வலரா கின்றது †பலர்வாய்ப் பட்டே" (அகம்-96.)

என்றாற் போல்வன.

கிளவியொடுதொகைஇ யென்பது, இதனோடுந் தொகுத்தென்றவாறு. சிறந்தபத்தும் என்பது, விதந்தோதிய பத்தும். செப்பிய பொருள் என்பது, அழிவில்கூட்டமெனச்

---

* 'தனக்கு ஆமாகலின்' என்பதும் பாடம்.

† 'பலவாய்ப்பட்டே' என்பதும் பாடம்.

செப்பிய கற்பின் கண்வரும் மெய்ப்பாடெனப்படும் இவை யும் என்பது.

மற்றுப் பதினென்றனெயெண்ணிச் சிறந்தபத்து இவை யென்ற தென்னையெனின், அதனை,

"ஒன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே" (தொல்-மர-1.)

என்ற மரபியற் சூத்திரம்போல மொழிமாற்றியுரைக் கப்படும். அங்ஙனஞ் சிறந்த பத்தும் புறஞ்சொன் மாணைக் கிளவியொடு தொகைஇயெனக் கூட்டியுரைக்க. சிறந்த பத்தென்றதனான் இவையன்றிக் கற்பினுள் வரும் மெய்ப்பாடு பிறவுமுளவேற் கொள்க. (உசு)

273. பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டிருவு நிறுத்த காம வாயி
னிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே.

இதுவும் அம்மெய்ப்பாட்டுப் பகுதியே கூறுகின்றது; மேற் களவியலுள்,

'ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப' (தொல்-கள-2.)

என்றான், அவ்வொப்பினது பகுதி இத்துணைக்குறிப்பு உடைத்தென்ப துணர்த்தினமையின்.

இதன்பொருள்: ஒத்த பிறப்பும் ஒத்த ஒழுக்கமும் ஒத்த ஆண்மையும் ஒத்த பிராயமும் ஒத்த உருவும் ஒத்த அன்பும் ஒத்த நிறையும் ஒத்த அருளும் ஒத்த அறிவும் ஒத்த செல் வமுமெனப் பத்துவகைய தலைமகளொப்பினது பகுதி, என்றவாறு.

இவை தலைமகற்கு மெய்ப்பாடெனப்படாவேவெனின் படுமாயினும் அஃது ஒப்பினது வகையென்றதனானே தலை யகட்கே உரிமை கொளப்படும். குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னையெனின், பிறப்பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத்தக்க ஒழுக்கங் குடிமை எனப்படும்; குடிப்பிறந்தாரது தன்மையைக் குடிமையென்றுரென்பது; அதனை ஊராண்மையெனவுஞ் சொல்லுப. ஆண்மை புருடர்க்காம். அஃது ஆள்வினையெனப்படும். இது தலைமகட்கொப்பதன்றாலெனின், குடியாண்மையென்புழி ஆண்மையென்பது இருபாற்கும் ஒக்குமாதலின் அமையுமென்பது. யாண்டென்பது ஒத்தவாறென்னையெனின், பன்னீராண்டும் பதினேழியாண்டுமே பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவமென்பது *ஒத்தினுள் ஒப்பமுடிந்தமையின் அதுவும் ஒப்பெனவேபடும். 'உருவுநிறுத்தகாமவாயி' லென்பது, பெண்மைவடிவும் ஆண்மைவடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்தவழி அவற்றுமேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பென்றவாறு.

இங்ஙனம் ஓதியவகையான் இவை ஒன்பதாகலிற் பத்தாமாறென்னையெனின், காமவாயிலெனப்பட்ட இயற்கையன்பு வடிவுபற்றியல்லது தோன்றுமையானும், குணம்பற்றித் தோன்றுவன செயற்கையன் பாகலானும், உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினையினும் உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்தெண்ணிக் கொண்டாமென்பது. என்னை?

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் வாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு." (குறள்-64-2.)

---

* 'வேதத்தின்' என்பதும் பாடம்.

என்புழிக் கற்றறிதலென்பதனை இரண்டாக்கி ஐந்தென் பவாகலின்.

அஃதேதல், உருவென்பது குறிப்பின்றுகலின் மெய்ப்பா டாமா றென்னையெனின், அவ்வுருவுபற்றி மனத்தின் கட் பிறப்பதோர் தருக்குண்டன்றே அதனுன் அது மெய்ப்பா டெனப்படும். நிறையென்பது மறைபிறரறியாமை நெஞ் சினை நிறுத்தல். அருளென்பது, எல்லாவுயிர்க்கும் இடுக் கண்செய்யாத *அருளுடையராயிருத்தல். அதுவுங் காமத் திற்கு இன்றியமையாததோர் குறிப்பு. உணர்வென்பது அறிவுடைமை; அஃதாவது உலகியலாற் செய்யத்தகுவது அறிதல். திருவென்பது, பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றுந் திருத்தகவிற் றாகியதோர் உள்ளநிகழ்ச்சி. அது வினையுள்ளுடைமை யெனவும் படும். இவையெல்லாம் இருவர்க்குந் தம்மின் ஒக்கும் பகுதியெனவும் அவைபற்றி மெய்ப்பாடு பிறக்குமெனவுங் கூறியவாறு.

'வகை' யென்றதனுன் ஆண்மைவகை பெண்மைவகை யெனவுங், குடிமைவகையென்பது இருவர்க்கும் இளமைப் பருவத்தே தங்கிய ஒழுக்கமேயெனவும், பிறப்பினதுவகை அந்தணர்க்கு நான்கும் அரசர்க்கு மூன்றும் வணிகர்க்கு இர ண்டும் வேளாளர்க்கு ஒன்றும் பிறப்புவகையெனப்படுமென வுங் கூறுக. இனி, 'ஏவன்மரபின் ஏனோர்' (தொல்-அகத்-24) பாங்கினும் 'அடியோர் பாங்கினும் வினைவலபாங்கினும்' (தொல்-அகத்-23) தம்மின் ஒத்த பிறப்புக்காரணமாக உள்ளத்துவருங் காமக்குறிப்பு முதலாயினவுங் கொள்க.

* 'அருளுடையனுயிருத்தல்' என்பதும் பாடம்.

இவ்வெண்ணப்பட்டன ஒத்துவரினன்றி அறிவுடையார்கட் காமக் குறிப்பு நிகழாமையின் இவற்றையும் ஈண்டு மெய்ப் பாடென்றே நினைனென்பது. அடியோர்பாங்கினும் விளைவல பாங்கினும் வரும் இக்குறிப்பு முதலாயவற்றை இலேசினுற் கொண்டான் அவை பிறழ்ந்துவருமாகலினென்பது.

உதாரணம்:

"அவனுந்தா,
னேன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறுவென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்." (கலி-39.)

என்பது பிறப்பொப்புமை.

"உள்ளினெ னல்லன் யானே புள்ளிய
வினைமுடித் தன்ன வினியோண்
மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே."

என்பது தலைமகன் தனது இல்லறத்தைத் தலைமகள்மேல் வைத்துச் சொல்லினமையிற் குடிமையாயிற்று.

"கேள்கே டுன்றவுங் கிளைஞ ராரவுங்
*கேடில் கேளிர் கெழீஇயின ரொழுகவு
மாள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்து" (அகம்-93.)

என்புழி இன்னகாரணத்திற் பிரிந்துபோந்து வினைமுடித்தன மாயினும் அவளை "முயங்குகஞ் சென்மோ" என்றமையின் தன் ஆள்வினைக்குத் தக்க பெண்மையான் அவள் ஆற்றி

*'கேடில் கேளிர்' என்பதும் பாடம்.

யிருந்தா லென்பதூஉங் கருதியகருத்திறைற் காமக்குறிப்புப் பிறந்தமையின், அஃது ஆண்மையாயிற்று.

"என்றே ளெழுதிய தொய்யிலும் யாழினின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்" (கலி-18.)

என்பது யாண்டு.

"மூல்லை முகையு முருந்து நிரைத் தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரம ருண்கண்ணு
நல்லேன்யா னென்று *நலத்தகை நம்பிய
†சொல்லாட்டி நின்னெடு சொல்லாற்ற கிற்பாரியார்"
(கலி-108.)

என்பது உருவு.

"நின்மக ளுண்கண் பன்மா ணோக்கிச்
சென்றோன் மன்றவக் குன்றகிழ வோனே
பகன்மா யந்திப் படுசுடு ரைமயத்
தவன்மறை தேய நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்" (அகம்-48.)

என்பது உருவுநிறுத்த காமவாயில்,

"கண்ணியன் வில்லன் வருமென்னே நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந்து" (கலி-37.)

என்புழி முன்னத்திற் காட்டுதலல்லது தானுரையா னென்பது தலைமகனிறையுடைமை கூறிய வாறு,

"அவன்வயிற்
சேயேன்யன் யானுந் துயருழப்பேன்" (கலி-37.)

---

*'நலதக' என்பதும் பாடம்.

†'சொல்லாட்கு' என்பதும் பாடம்.

எனத் தன்னிறையுடைமை காரணத்தாற் காமக்குறிப்பு நிகழ்ந்தவாறு,

"பெண்ணன் றுரைத்த னமக்காயின்" (கலி-37.)

என்பதும் அது. இது மீதாழி கூற்றன்றேவெனின், அதுவுந் தலைமகள்குறிப்பெனவே படுமென்பது முன்னர்க் கூறினு மென்பது.

"தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினை தேரின்" (அகம்-4.)

என்பது அருள்பற்றிப் பிறந்த காமக்குறிப்பு.

"அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதரும்" (அகம்-22.)*

என்னும் பாட்டினுள்,

'தன்னசை யுளத்து ணன்னசை வாய்ப்ப"

இருவருணாவும் ஒத்தவாறு; தலைமகள் குறிப்பு உணர்ந்துவந்தனனென்றமையின். இது 'செல்வம்புலன்' (தொல்-மெய்ப்-11) என்புழிப் புலனெனப்படாது காமத்திற்கே உரித்தாகிய உணர்வாகி வேறு கூறப்பட்டது.

"நெய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல னினமுலைமேற்
றொய்யி லெழுதவும் வல்லன்றன் கையிற்
சிலைவல்லான் போலுஞ் செறிவினு னல்ல
பலவல்லன் றோளாள் பவன்" (கலி-143.)

என்பது திருவினுற் காமக்குறிப்புப் பிறந்தவாறு. என்னை? இனையன வல்லனுதல் செல்வக்குடிப்பிறந்தாரை அறிவிக்குமாகலின் அது காமக்குறிப்பினை நிகழ்த்துமென்பது. இது தலைமகட்குமொக்கும்.

---

* இச்செய்யுளை (க-உரை) 167-ஆம் பக்கத்திற் காண்க.

"உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா னின்னி
னிழிந்ததோ கூனின் பிறப்பு" (கலி-94.)

என்பதும் பிறப்புவகையின்பாற்படும். பிறவும் இவ்வாறே கொள்க. (உரு)

274. நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
யின்புற லேழைமை மறப்போ டொப்புமை
யென்றிவை யின்மை யென்மனர் புலவர்.

இது காமக்குறிப்பாகாதன கூறுகின்றது.

இதன்பொருள்: நிம்பிரி—பொருமைதோன்றுங் குறிப்பும்; அவை இங்ஙாட் சிறிதுபொறுத்தாயென்றாற் போல்வன: கொடுமை—கேடுசூழ நினையுந் தீவினையுள்ளமும்; வியப்பு—தலைமகள்பால் தெய்வத்தன்மைகண்டான்போல் வியந்தொழுகுதலும்; இனிக் குணத்தின்மேற் கொண்டு தன்னைவியத்தலெனினும் அமையும்: புறமொழி—புறங்கூற்றும்; வன்சொல்—கண்ணோட்டமின்றிச் சொல்லுஞ் சொற்களும்; பொச்சாப்பு—கடைப்பிடியின்றி னெஞ்சிற் திருத்தலும்; மடிமை—சோம்புள்ளமும்; குடிமை—இவள் இழிந்தபிறப்பினளெனத் தன்னை நன்குமதித்தொழுகுதலும்; இன்புறல்—ஒருவரொருவரிற் றமே இன்புறுகின்றாராகநினைத்தலும்; ஏழைமை—நுழைந்தவுணர்வினரன்றி வரும் வெண்மையும்; மறப்பு—மறவியும்; ஒப்புமை—இன்னாளையொக்கும் இவளென்று அன்புசெய்தலும்; என்று இவை இன்மை என்மனர் புலவர்—இவையெல்லாம் இன்றி வருந் தலைமகன்கண் நிகழும் மெய்ப்பாடென்று சொல்லுவர் புலவர், என்றவாறு.

எனவே, அவைதம்மை வரையறுத்துக்கூறாது அவற்றுக்காகாதன வரையறுத்துக் கூறினானென்பது. தலைமகட்குரிய மெய்ப்பாடாயின வரையறுத்துக் கூறினமையின் அவற்றுக்காகாதன கூறல்வேண்டுவதன்றென்பது. ஆகாதவற்றுக்கு உதாரணங்காட்டலாவதில்லை. (உசு)

மெய்ப்பாடுகளை அறிதற்குக் கருவிகிறவையனல்.

275. கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதினுணரு
முணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியி
னன்னயப் பொருள்கோ ளெண்ணருங்குரைத்தே.

இது மேற்கூறிய மெய்ப்பாட்டிற்கெல்லாம் புறனடை.

'எள்ள லிளமை பேதைமை மடனென்
றுள்ளப்பட்ட நகைநான்கு' (தொல்-மெய்ப்-4.)

என்புழி நகைக்கேதுவாகிய பொருள்கூறியதல்லது அப்பொருள்பற்றிப் பிறந்த நகையுணர்வு புலப்படுமாறு இன்னவாறென்றிலன். இனி 'உடைமையின்புறல்' (தொல்-மெய்ப்-12) என்றற்றொடக்கத்தனவினும் அவ்வாறு எண்ணியதல்லது அவை உணருமாற்றுக்குக் கருவி கூறியதிலன். அங்ஙனமே பிறவுங் கூறியதிலனாகலான் அதனை ஒருவாற்றாற் கூறுகின்றான்.

இதன்பொருள்: கண்ணானுஞ் செவியானும் யாப்புற அறியும் அறிவுடையார்க்கல்லது மெய்ப்பாட்டுப்பொருள் கோடல் ஆராய்தற்கு அருமையுடைத்து, என்றவாறு.

மற்று மனத்துநிகழ்ந்த மெய்ப்பாட்டினைக் கண்ணானுஞ் செவியானுமுணர்தலென்பதென்னையெனின், மெய்ப்பாடு பிறந்தவழி உள்ளம்பற்றி முகம் வேறுபடுதலும் உரை வேறுபடுதலுமுடைமையின் அவை கண்ணானுஞ் செவியானுமுணர்ந்து கோடல் அவ்வத் துறைபோயினாரது ஆற்றலென்பது கருத்து.

"இரண்டறி களவினங் காத லோளே
முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நன்னெஞ் கங்கு ணம்மோ ரன்னன்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
யமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே." (குறுந்-312.)

என்பதனுள் அமராமுகத்தளாகுதலுந் தமரோரன்ன ளாகுதலுந் தலைமகற்குப் புலனுகலின் அவை கண்ணுணர் வெனப்படும். "ஒழிகோ யானென வழிதகக் கூறி" என் புழித் தலைமகன்மனத்து நிகழ்ந்தவழிவெல்லாம் ஒழிகோ யானென்ற உரையானே உணர்ந்தமையின் அது செவியுணர் வெனப்படும். இங்ஙனம் உணர்தலும உணர்வுடையார்க்கன் றிப் பெரிதும் அரிதென்பரின் 'கண்ணருங்குரைத்'தென்ரு னென்பது. (உஎ)

மெய்ப்பாட்டியல் முற்றிற்று. *

* இவ்வியலுரையும் இதற்குப் பின்வரும் இயல்களினுரையும் போராசிரியர் உரையென்பது ஆராய்ச்சியால் தெளியப்பட்டது. இதற்கு முன்னிய இயல்களின் உரையிறுதியில் 'நச்சினார்க்கினியர் செய்த காண்டிகையுரை முடிந்தது' என்று ஏடுகளில் எழுதப்பட்டிருப்பதுபோல இவ்வியலுக்கு எழுதப்படவில்லை; 'மெய்ப்பாட்டியல் முற்றிற்று' என்றே உள்ளது.

ஏழாவது

உவமவியல்.

உவமையின் பொதுவிலக்கணமும் வகையும்

276. வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின் உவமவியல் என்னும் பெயர்த்து. உவமம் என்பது ஒருபொருளோடு ஒருபொருளினை ஒப்புமைகூறுதல். இதனானே இவ்வோத்து நுதலியதூஉம் உவமப்பொருளே கூறுதலாயிற்று. மற்று அகம்புறம் என்பனவற்றுள் இஃது என்ன பொருள் எனப் படுமோவெனின், அவ்விரண்டுமெனப்படும்; மெய்ப்பாடு போல என்பது. என்னை?

'உவமப் பொருளி னுற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான'' (தொல்-உவம-20)

என மேல்வருகின்றதாகலின்.

மற்றிவ்விருதிணைப்பொருளும் உவமம்பற்றி வழக்கினுள் அறியப்படுதலானும், உவமம்பற்றியும் பொருள் கூறுகின்றானென்பது மேல் அகத்திணையியலுள் உவமத்தினை இரண்டாக்கி ஓதினான்; உள்ளுறையுவமம் ஏனையுவமமென. அவ்விரண்டனையும் ஈண்டு விரித்துக் கூறுகின்றவாறு. அவற்றுள் ஈண்டு ஏனையுவமத்தினை முற்கூறினான், அஃது அகத்திணைக்கே சிறந்ததின்றாயினும் யாப்புடைமை நோக்கி; உலக வழக்கினுஞ் செய்யுள்வழக்கினும் வருமாகலானுமென்பது.

ஆமையுடைமை.

அஃதேல் உள்ளுறையுவமஞ் செய்யுட்கே உரிமையின் அதனைச் செய்யுளியலுட் கூறுகவெனின், உவமப்பகுதியாதலொப்புமை நோக்கி ஓரினப்பொருளாக்கி ஈண்டுக் கூறினுமியினும் வருகின்ற செய்யுளியற்கும் இயையுமாற்றான் அதனை ஈற்றுக்கண் வைத்தான, அது செயயுட்குரித்தென்னுங் கருத்தாவென்பது. எனவே, எழுத்தினுஞ் சொல்லினும் போலச் செய்யுட்குரியன செயயுட்கென்றே ஓதலும் ஒருவகையாற் பெற்றாம். மற்றுப் 'பாடல்சான்ற புலனெறி வழக்கம்' அல்லாத வழக்கு ஆராயப் பயந்ததென்னையெனின், அப்புலனெறிவழக்கிற்கு உறுப்பாகிய வழக்காராய்தலும் அதற்கு உபகாரமுடைத்தாதலானென்றவாறு. மற்றிதுமேல் எவ்வோத்தினுடனியையுடைத்தோவெனின், மேற் பொருள்புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயையுடைத்து; என்னை? உவமத்தானும் பொருள்புலப்பாடே கூறுகின்றானாகலின். எங்ஙனமோவெனின், ஆபோலும் ஆமா என்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டிட் சென்ற வழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையேபற்றி ஆமா இதுவென்று அறியுமாகலானென்பது. இவ்வோத்தின் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், உவமத்திற்கெல்லாம் பொதுவிலக்கணங் கூறி அவற்றது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: தொழிலும் பயனும் வடிவும் வண்ணமும் என்னும் நான்கெனப்படுங் கூறுபட வரும் உவமத்தோற்றம், என்றவாறு.

உவமமென்பதனை வினைமுதலாகிய நான்கினொடுங்கூட்டி வினையுவமம் பயனுவமம் மெய்யுவமம் உருவுவமமெனப் பெயர்கூறப்படும்.

வினையாற் பயப்பது பயனுதலின் பயத்திற்கு முன வினை கூறப்பட்டது ; அதுபோலப் பிழைப்பிலுல் தோன்றும் நிறத்தினை அதிற்குப் பின் வைத்தான், பயனும பொருளாக நோக்கி மெய்யினையும அதனுடன்வைத்தானென்பது. மற்றுமெய்யெனப்படுவது பொருளாதலின் அதன் புடை பெயர்ச்சியாகியவினை பிற்கூறுகவெனின், வினையுவமந் தன் னுருபு தொக்குநில்லாது விரிந்தேநிறற்கு சிறப்புடையனவும் உளவாகநோக்கி அது முற்கூறினனென்பது. அது புலிமறவனெனத் தொகாது புலியன்ன மறவனென விரிந்தே நிற்றலும், புலிப்பாய்த்துளெனத் தொக்குவருதலும் உடைத் தென்பது. தொகை நான்கென எண்ணிக்கொடுத்தான்.

வரலாறு: புலியன்னமறவனென்பது வினையுவமம், அதுபாயுமாறே பாய்வனென்னுந் தொழில்பற்றி ஒப்பித்த மையின் ; அற்றன்றித் தோலும் வாலுங் காலும முதலாகிய வடிவும ஏனைவண்ணமும் பயனும் ஒவ்வா வென்பது ; ஒழிந்த வற்றிற்கும் இஃதொக்கும.

"மாரி யன்ன *வண்கைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே" (புறம்-133.)

என்பது பயவுவமம் ; என்னை? மாரியான் விளைக்கப்படும் பொருளும் வண்கையாற் பெறும் பொருளும் ஒக்கு மென்றவாறு. துடியிடையென்பது மெய்யுவமம் ; அல்கு லும் ஆகமும் அகன்றுகாட்ட அஃகித் தோன்றும் மருங்கு லால் துடி அதனோடு ஒத்தது பொன்மேனியென்பது உருவுவமம் ; பொன்னின்கண்ணும் மேனியின்கண்ணுங் கிடந்த நிறமே ஒத்தன, பிற ஒத்திலவென்பது. இங்ஙன்

* 'வண்மை' என்பதும் பாடம்.

கும்பற்றி உவமந் தோன்றுமென்பது கருத்து. 'உவமத் 'தோற்றம்' என்பது மூன்றுவதன் தொகை ; உவமத்தாற் பொருள் தோன்றுந் தோற்றமென்றவாறு.

மற்று ' அடைகினைமுதல் ' (தொல்-சொல்-கிளவி-26) என்றுற்போல அடையெனவே இங்ஙாற்பகுதியும் அடங்கக்கூறிப் பண்புத்தொகையென்புழி வண்ணம் வடிவு முதலாயின அடங்கியவாறுபோலப் பண்பென்று அடக்குதல்செய்யாது ஈண்டு நான்கெனப் பகுத்ததென்னையெனின், இது பொருளாராய்ச்சியாகலாற் *கட்புலனும் பண்பும் உற்றுணரும் பண்பும் வேறுக நோக்கி வடிவினையும் உருவினையும் வேறுபடுத்தான் ; என்னை ? வடிவுபற்றிய பண்பினை † இரவின்கண் உற்றுணரப்படும்; வண்ணமாயின் அவ்வாறு உற்றுணரப்படாதென்பது. அல்லாக்காற் பகற்குறிக்கட் கூறப்படும் வண்ணம் முதலாயினவும் இரவுக்குறிக்கண் எய்துவான் சொல்லும் வடிவும் பண்பும் ஒன்றுகக் கூறினனென்பது. அல்லதூஉம், உணர்த்துகின்ற தினைப்பொருளினை எளிதிற் புலப்படுத்தலுபகாரம் நோக்கியும் அவ்வாறு பகுத்தானென்பது.

‡ " களிற்றிரை தரீஇய பார்வ லொதுக்கி
ஞெளித்தியங்கு மரபின் வயப்புலி போல" (அகம்-22.)

என்புழிப் பார்வலொதுக்கமாகிய வினை பண்பெனப் படாது. என்னை ? பண்பென்பது குறிப்பின்றி நிகழுங் குண

* இவ்வாற்றும் கட்புலனும் பண்பு 'வடிவு' என்பதும், உற்றுணரும் பண்பு 'உரு' என்பதும் பெற்றும்.

† 'இரவின் கண் உற்றுணரப்படும்' என்பதற்கு 'இரவின் கண் உருவாக உற்றுணரப்படும்' என்பது பொருளாக உரைக்க.

‡ இச்செய்யுள் 167-ஆம் பக்கத்திற் காண்க.

மாகலினென்பது. அடையெனினும் அதுவேயெனக் கூறி மறுக்க. எனவே, பார்வலொதுக்கமெனப்பட்ட வினைப் பகுதியாற் பிழையாமற் கோடற்குப் பார்வலொதுங்கிநின்றானென்பதும் பிறர்க்கஞ்சிப் பார்வலொதுங்குகின்றானல்லனென்பதுஞ் சொல்லியவன் தலைமைக்கேற்ற உவமையாதலின், அது பொருட்டோற்றமாயிற்று. "மாரியன்ன வண்மை" (புறம்-133) என்பதூஉம் பண்பாயின், அதன் நிறத்து மேற்கொண்டு வண்மையுங் கரிதெனல்வேண்டுமாகலின் அது பண்பென அடங்காது.

"அணைத்தோள்" (சலி-87) என்பதும் அது

"உருவுகிள ரோவினைப் பொலிந்த பாவை
யியல்கற் றன்ன வொதுக்கினள்" (அகம்-141.)

என்றக்கால், வடிவுபற்றி உவமங்கொள்ளவே, உயிரில்லாதாள்போல, அச்சமின்றி, இரவிடை வந்தாளெனனும் பொருள்தோன்றும், வடிவு பண்பெனப்படாது; பண்பு

"மாரிப் பீரத் தலர்சில கொண்டே" (குறுந்-98.)

காட்டி,

"இன்ன ளாயின ணன்னுதல்" (குறுந்-98.)

என்றவழிக், குறித்த பருவங் கழிந்ததென்னும் பொருண்

உருவுவமம் இவ்வாறு பொருளுணர்த்துதற் பகுதி நோக்கி உவமப்பகுதியென்றான் என்பது. என்றாற்கு, இந்நான்கு பகுதியேயன்றி அளவுஞ் சுவையுந் தண்மையும் வெம்மையும் நன்மையுந் தீமையுஞ் சிறுமையும் பெருமையும் முத

லாயின பற்றியும் உவமப்பகுதி கூறாரோவெனின், அவை யெல்லாம் இந்நான்கனுள் அடங்குமென்றற்கும் அந்நான்கும் இன்னபொருட்பகுதி உடையவென்றற்குமன்றே அவற்றை 'வகைபெற வந்த' என்பானாயிற்றென்பது. "பறைக்குர லெழிலி" (அகம்-73) என்றக்காற் பறையும் எழிலியும் ஒத்தல் வினைபற்றி உவமை கொள்வான் ஒன்றற்குக் குரல் கூறி ஒன்றனை வாளாது கூறினானாயினும் வினையுவமத்தின் வகை யெனப்படும்.

"கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி"(கலி-51.) என்பதூஉம் அதன்வகை.

'வந்த' என்றதனான் இல்லாத வினை வருவித்துஞ் சொல் லப்படும். அவை "விசும்புரிவதுபோல்" (அகம்-24) என வும், "மணிவாழ் பாவை நடைகற் றன்ன" எனவும், "வான் றோய் வன்ன குடிமையும்" எனவும் வரும்.

இவை[1] உவமையும் பொருளும் ஆகிய வினைபற்றி வந்தில வாகலின் அதன் வகையெனப்பட்டன. 'அன்ன' 'ஆங்க' என் பன இடைச்சொல்லாகலின் வினைப்பின்னும் வந்தன. "நடை கற்றன்ன" என்புழிக் கறறு என்னும் வினையெச்சந் தன்னெச் சவினை இகந்ததாயினும் அஃது உவமப்பகுதியாகலான் அங் ஙனம்வருதலும் வகையென்றதனானே கொள்ளப்படும்.

"கொன்றன்ன வின்னா செயினும்" (குறள்-11-9.)

என்பதும் அது.

"இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்"(குறள்-31-8.)

என்பது வினைப்பெயர்பற்றி உவமஞ் சென்றது.

1 உவமையாயும் உவமேயமாயும் நற்குந்தொழில் பற்றி வந்தன.

பொன்மரம் போலக் கொடுக்குமென்பது பயவுவமத்தின்பகுதியாய் அடங்கும்; என்னை? மழைத்தொழிலாகிய பெயலாற் பயந்த விளையுளுடன் இடையிட்டுப்போய் உவமங் கொள்ளாது கொடைப்பொருள் இரண்டும் ஒத்தமையின் மெய்யுவமம் எனப்படாது, கொள்வார்க்குப பயம்ஒத்தலாற் பயவுவமத்தின்வகையாயிற்று. நிலம்போலுங்கொடை என்பதும் அது.

"தெம்முனையிடத்துச்சேயர்கொல்" என்னும் எல்லைப் பொருண்மை மெய்யுவமத்திற்கு வகையெனப்படும், அஃது அன்னவாகலினென்பது. இடைகிடந்த நிலம் இரண்டினையும் வடிவுபற்றி உவமஞ்செய்தானென்பது. மற்றுச் சேய்மை அணுமைக் குணமாம் பிறவெனின், அற்றன்று; துடியிடை என்றவழி அதன இடைநுணுக்கமுங் குணனாகும், அவ்வாறு கொள்வார்க்கு என்பது; எனவே நிறப்பண்பு அல்லனவெல்லாம் மெய்யுவமத்தின் வகையெனப்படுவனவாயின. குணமாதலொப்புமையான் அவை நிறப்பண்பிற்கு இனமெனவும் படும். அவ்வாறு திரிபுடைமையின் அவற்றை விதந்தோதாது வகையென்றதனாற் கொண்டானென்பது. "தளிர்சிவந்தாங்குச் சிவந்த மேனி" யென்பது உருவுவமத்தின் வகையெனப்படும்; என்னை? உவமத்தாற் கொள்ளப்பட்டுப் பொருள் செம்மை நிறமாயினும் அதனை வினைவிரித்தாங்கு விரித்தமையின் அவ்வேறுபாடுநோக்கி வகையெனப்பட்டது. பிறவும் அவ்வாறே கொள்க. இப்பகுதியுடைமைநோக்கி 'வகைபெறவந்த' என்றானென்பது. சிவந்தாங்கு சிவந்த (க)

வினை முதலாய நான்கும் கலந்து வரும்.

277. விரவியும் வரூஉ மரபின வென்ப.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது; நான்கென மேல் தொகைகொடுத்தமையின் அவை வேறு வருத

லெய்தியதனை அவ்வாறேயன்றி விரவியும் வரும் என்றமை யின்.

இதன்பொருள்: அந்நான்கும் ஒருபொருளோடு ஒரு பொருள் உவமஞ்செய்யும் வழி ஒன்றேயன்றி இரண்டும் மூன்றும் விரவியும் வரும் அதன் மரபு, என்றவாறு.

"செவ்வானன்ன மேனி" (அகம்-கடவுள் வாழ்த்து) என வண்ணம் ஒன்றுமேபற்றி உவமஞ்சென்றது.

னிலங்குபிறை யன்ன விளங்குவால் வையெயிற்று"
(அகம்-கடவுள் வாழ்த்து.)

என்றவழி வண்ணத்தோடு வடிவுபற்றி உவமஞ்சென்றது.

"காயா மென்சினை தோய நீடிப்
பஃறுடுப் பெடுத்த வலங்குகுலைக் காந்த
ளணிமலர் நறுந்தா தூதுந் தும்பி
கையாடு வட்டிற் றோன்று
மையாடு சென்னி மலைகிழ வோனே" (அகம்-107:)

என்புழி ஆடுதற் றொழில்பற்றியும் வடிவுபற்றியும் வண் ணம் பற்றியும் வந்தது. பிறவுமன்ன.

'மரபின்'வென்றதனன் அவை அவ்வாறு விராய்வருத லும் மரபே, வேறு வேறு வருதலே மரபெனப்படாதெனக் கொள்க. (உ)

278. உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை. ச

இஃது எய்தாதது எய்துவித்தது.

இதன்பொருள்: உவமையெனப்பட்டது உயர்ந்த பொருளாகல்வேண்டும், என்றவாறு.

எனவே, உவமிக்கப்படும் பொருள் இழிந்துவரல் வேண்டுமென்பது.

"அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்" (பத்து-பட்டின-298) எனவும், "மாரி யீகை மழைத்தோட் சோழர்" எனவுங், "கடல்கண்டன்ன கண்ணகன பரப்பின்" (அகம்-176) எனவும், "பொன்மேனி" எனவும் வரும்.

இவற்றுள் உவமையுயர்ச்சியானே உவமிக்கப்படும் பொருட்குச் சிறப்பெய்துவித்தவாறு கண்டுகொள்க.

'உள்ளுங்காலை' என்றதனான் முன்னத்தினுணருங்கிளவியான் உவமங்கோடலும், இழிந்தபொருள் உவமிப்பினும் உயர்ந்த குறிப்புப்படச் செயல்வேண்டுமெனவுங் கொள்க. அவை 'என்யானை' 'என்பாவை' என்றவழி அவைபோலும் என்னுங் குறிப்புடையான், பொருள் கூறிற்றிலனாயினும், அவன் குறிப்பினான் அவை வினையுவமையெனவும் மெய்யுவமையெனவும் படும். இவற்றுக்கு நிலைக்களங் காதலும் நலனும் வலியுமென்பது சொல்லுதும், அவை பற்றாது சொல்லுதல் குற்றமாகலின். (சூ 279-80)

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ சனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு" (குறள்-109-1.)

என்பது ஐயுற்று முன்னத்தான் உவமஞ்செய்தது. தாமரையன்று முகமேயெனத் துணிந்தவழியும், மழையன்று வண்டிருத்தலிற் குழலேயெனப் பொருட்குக் காரணங்கொடுத்தவழியும், மதியங்கொல்லோ மறுவில்லையென்று உவமைக்குறைபாடு கூறுதலும்,

"நுதலு முகனுந் தோளுங் கண்ணு
மியலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ

யைதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலு மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று" (கலி-55.)

என்பனவுமெல்லாம் அவை. இவற்றுண் மலையுஞ் சுனையும் உவமையின்மையின் அவற்றைப் பிறையோடும் மதியோடும் உடன்வைத்து உவமைபோலக்கூறி எதிர்மறுத்தது என்னையெனின், அவையாமாறு 'முதலுஞ் சினையும்' என்புழிச் (தொல்-உவம-6) சொல்லுதும்.

'என்ற வியப்பவென் றவை யெனை' (தொல்-உவம-11) என மேல்வருஞ் சூத்திரத்துள் என்றவென்பதோர் உவம வுருபு கூறினமையின், "வாயென்றபவளம்" எனவும் "வாய் பவளமாக" எனவும் "வாய்பவளம்" எனவும் வருவனவும் அக்குறிப்புவமையின் பகுதியெனவேபடும். இவற்றை வேறு வேறு பெயர்கொடுத்து விரித்துக்கூறுது 'முன்னத்தினுணர்' வனவே இவையெல்லாமென்னுந துணிய இலேசினைக் கூறி ஒழிந்ததென்னையெனின், இவற்றுச் செய்யுள் செய்வார் செய்யும் பொருட்படைப்பதுதி எண்ணிறந்தனவாகலின், அப்பகுதியெல்லாங் கூறுது பொதுவகையான் வரையறைப்பதும் இலக்கணமேகூறி யொழிந்தாரெனன்பது. வாயென்றபவளமெனவும் வாய்பவளமாகவெனவும் வாய் பவளமெனவும வந்த பவளத்துவிப்புவமைகளை இக்காலத்தார் உருவகமென்றே வழங்குப.* இனி வாய் பவளமென

* தண்டியலங்காரம் வீரசோழியம் முதலான பிற்றை ஞான்றை நூலுடையார் வடநூலார் மதமே பற்றி உவமை ஒன்றனையே வாளா பலபெயர்களாற் பெருக்கி அவற்றுளும் அஃது அடங்காமை கண்டு இலேப்புற்றார். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய உவமப் பகுதியே பெரிதும் பொருத்த முடைத்தாய் எல்லா அணிகளையுந் தன்னுள் அடக்கி நிற்றல் காண்க.

வுங் கண் கருவிளையெனவும் பெயர்ப்பயனிலைவரின் அவற்றை ஒற்றுமைகாட்டி உருவகம் என்றாராகலின் அதுவும் உவமை யெனவே படுமென்பது. (௩)

உவமை பிறக்குமிடம்.

279. சிறப்பே நலனே காதல் வலியோ
டந்நாற் பண்பு நிலைக்கள மென்ப.

இதுவும் எய்தாதது எய்துவித்தது.

இதன்பொருள்: வினை பயன் மெய் உரு என்பனபற்றி உவமை கூறுங்கால் இவைநான்கும் இடனாகப் பிறக்கும் உவமை, என்றவாறு.

நிலைக்களமென்பது அவை அவ்வாறு உவமை செய்தற்கு முதலாகிய நிலைக்களனென்றவாறு.

"முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந" (பத்து-பொருந-54-57.)

என்பது சிறப்பினாற் பெற்ற உவமமாகலிற் சிறப்புநிலைக்களனாகப் பிறந்தது.

ஆதியம் "ஓவத் தன்ன விடனுடை வரைப்பின்" (புறம்-251.)

என்புழி அந்நகரினது செயற்கைநலந் தோன்றக் கூறினமையின் அதற்கு நிலைக்களன் நலனாயிற்று.

ஏழாவுவமை "பாவை யன்ன *பலராய் மாண்கவின்" (அகம்-98.)

என்புழி மகள்கட் காதல் காரணமாக உவமைபிறந்தது. 'என்யானை' யென்பதும் அது.

* 'பாலார்' என்பதும் பாடம்.

"அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்"

(பத்து-பட்டின-298.)

என ஒருவன் வலிகாரணமாக உவமம்பிறந்தமையின் அதற்கு நிலைக்களம் அவன் வலியாயிற்று.

இவ்வாறு கூறவே உயர்ந்தபொருளின் இழிந்ததெனப் பட்ட பொருள் யாதானும் இயைபில்லதொன்று கூறலாகாதெனவும், உவமையொடு முழுதும் ஒவ்வாமைமாத்திரையாகி அதனோடொக்கும் பொருண்மை உவமிக்கப்படும்பொருட்கண்ணும் உளவாகல்வேண்டுமெனவுங் கூறி, அவைதாமும் பிறர் கொடுப்பப் பெறுவனவும் ஒருபொருட்கண் தோன்றிய நன்மைபற்றியவுங் காதன் மிகுதியால் உளவாகக்கொண்டு உரைப்பனவுந் தன்றன்மையால் உளவாயின வலிபற்றினவுமென நான்காமென்றவாறு. இவற்றுக்கெல்லாம் வினை பயன் மெய் உரு என்னும் நான்குந் தலைப்பெய்யுமென்பது.

சிறப்பென்பது, உலகத்துள் இயல்புவகையானன்றி விகாரவகையாற் பெறுஞ் சிறப்பு. நலனென்றது அழகு. காதலென்பது அந்நலனும வலியும் இல்வழியும் உண்டாக்கியுரைப்பது. வலியென்பது தன்றன்மையானே உள்ளதோர் வலியெனக்கொள்க. இவற்றை நிலைக்களமெனவே இவை பற்றாது உவமம் பிறவாதென்பதாம். தன்மேல் வருகின்ற பகைவனைப் பகைவன் புலிபோலுமென்று வீரக்குறிப்பு அழியாமற் கூறுங் குறிப்பு இன்மையின் அவ்வுவமைக்குத் தோற்றம் ஆண்டில்லைத் தன்வினையுவமமாகலின் திரியாதாயினுமென்பது. (ச)

இதுவுமது.

280. கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்.

இது மேற்கூறிய நிலைக்களத்திற்கு ஓர் புறனடை.

பொருள: அந்நிலைக்களம் நான்கேயன்றிக் கிடுபொருளோடு ஐந்தெனவும் படும், என்றவாறு.

கிழக்கிடுபொருளென்பது கீழ்ப்படுக்கப்படும்பொருள்;

"கிளைஇய குரலே கிழக்குவீழ்ந் தனவே" (குறுந்-336.)

—ன்புழிக் கீழ்வீழ்ந்தன என்பதனைக் கிழக்குவீழ்ந்தன ன்பவாகலின். ஒரு பொருளின் இழிபு கூறுவான் உவமத் ான் இழிபு தோன்றுவித்தலின் அதுவும் நிலைக்களமா மென்றவாறு. அவை,

"உள்ளூ தரவியிற் பைப்பய நுணுகி"

எனவும்,

"அரவுநுங்கு மதியி னுதலொளி கரப்ப"

எனவும் வரும்.

இவை பொருளன்றி உவமையுங் கிழக்கிடப்பட்டன பாலெனின், அங்ஙனமாயினும் அவை பொருளோடு சார்த்தி நோக்க உயர்ந்தன வெனப்படும். (௫)

முதல் சினை பற்றி வேறு வருங்கால் இவ்வாறு வரல் வேண்டும் என்று.

281. முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கு நுதலிய மரபி னுரியவை யுரிய.

இது மேற் கூறிவருகின்ற உவமை முதல் சினை பற்றி வருங்கால் இன்னவாறாகவென்கின்றது.

இதன்பொருள்: முதற்பொருளுஞ் சினைப்பொருளும் என்னும் அவ்விரண்டுபொருட்குங் குறித்தவகையான் மரபு படவரின் உரியவை உரியவாம், என்றவாறு.

இதன் கருத்து, முதலொடு முதலுஞ் சினையொடு சினையும் முதலொடுசினையுஞ் சினையொடு முதலும் வேண்டியவாற்றான் உவமஞ்செய்தற்கு உரியவெனவும், அங்ஙனஞ் செய்யுங்கால் மரபு பிறழாமைச் செய்யப்படுமெனவுங் கூறியவாறு:

"வரைபுரையு மழகளிற்றின்மிசை" (புறம்-38.)

என்பது முதற்கு முதலே வந்து உவமையாயிற்று.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந்-கடவுள் வாழ்த்து.)

என்பது சினைக்குச் சினையே வந்து உவமையாயிற்று.

"நெருப்பி னன்ன சிறுகட் பன்றி" (குறுந்-160.)

என்பது முதல் உவமமாகப் பொருள் சினையாகி வந்தது.

"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுகின் செம்மலைக் காணூஉ"

என்பது சினையுவமமாக உவமிக்கப்படும் பொருண் முதலாயிற்று.

'நுதலிய மர'பென்றதனால், "விசும்பினன்ன சூழ்ச்சி" என்றக்கால் விசும்பென்பது முதலாதல் கருதியுணர்தல் வேண்டும், முதற்சினைப்பகுதி அதற்கு இன்மையினென்பது.

இனி,

"வேயமன் றன்று மலையு மன்று" (கலி-55.)

என்றவழியும், மலைநோக்காது மலையுள் வேயெழும் இடங் கருதி அவ்விடமன்றென்றவாறெனக் கொள்க.

"பூவமன் றன்று சுனையு மன்று" (கலி-55.)

என்பதற்கும் ஒக்கும்.

உரிய என்றது 'உரியவை' என்றதனால் திணையும் பாலும் மயங்கிவரும் உவமையுங் கொள்ளப்படும். அவை,

"மாரி யானையின் வந்துகின் றனனே" (குறுந்-161.)

என்பது

"கூவற் குராலான் படுதய
லுயர்திணை யுமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் றோழி நோய்க்கே"

என்பது உயர்திணைப்பான் மயங்கிற்று.

"சடம்பமர் நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்"
(பத்து-பெரும்பாண்-75.)

என்பது ஒருமைப்பன்மைமயங்கிற்று.

"இலங்குபிறை யன்ன விளங்குவால் வையெயிற்று"
(அகம்-கடவுள் வாழ்த்து.)

என்பது அஃறிணைப்பால் மயங்கிற்று. பிறவுமன்ன.

இக்கருத்து அறியார் இவற்றையுஞ்

"செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்கு"

(தொல்-சொல்-கிளவி-16.)

என்புழி இலேசுகொண்டு உரைப்ப. (சு)

தொகையுவமையிற் பொதுத்தன்மை அறிதல்.

282. சுட்டிக் கூறா வுமம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே.

இஃது எய்தாதது எய்துவித்தது.

இதன்பொருள்: உவமத்திற்கும் பொருட்கும் பொது வாகிய ஒப்புமைக்குணம் நான்கினையும் விதந்துசொல்லி உரையாதவழி அவ்விரண்டினையும் எதிர்பெய்து கூட்டி ஆண்டுப் பொருந்தியதொன்று பொருந்தியதுபற்றி வினை பயன் மெய் யுருவென்னும் நான்கினுள் இன்னதென்று சொல்லப்படும், என்றவாறு.

பவளம்போற் செந்துவர்வாயென்பது சுட்டிக் கூறிய வுவமம்; என்னை? இரண்டிற்கும் பொதுவாகிய செம்மைக் குணத்தினைச் சொல்லியே உவமஞ்சொல்லினமையின். அது பவளவாயென்கின்றவழிச் சுட்டிக் கூறா வுவமமாம். ஆண்டுப் பவளத்தினையும் வாயினையுங் கூட்டிப்பார்த்துச் செம்மைக் குணம்பற்றி உவமஞ் செய்ததென்று அறியப்படும்; அல் லாக்கால், வல்லென்ற கல்லிற்கும் மெல்லென்ற இதழிற்கும் உள்ளதோர் ஒப்புமை ஆண்டில்லையென்பது. பிறவு மன்ன. (எ)

283. உவமையும் பொருளு மொத்தல் வேண்டும்.

இதுவும் அது.

இதன்பொருள்: உவமானமும் * பொருளுந் தம்மின் ஒத்தனவென்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும், என்றவாறு.

மயிற்றோகைபோலுங் கூந்தல் என்பதன்றிக் காக்கைச் சிறகன்ன கருமயிர் என்று சொல்லின், அஃதொத்ததெனப் படாதென்றவாறு. புலிபோலப் பாய்ந்தான் என்பதன்றிப் பிழையாமற் பாயும் என்பதபற்றிப் பூசைபோலப் பாய்ந்தான் எனின், அதுவும் ஒப்பென்று கொள்ளாது உலகமென்றவாறு. ஈண்டு ஒத்தவென்பதனை "ஒத்ததறிவான்" (குறள் 22-4) என்பதுபோலக் கொள்க. (அ)

உவமையும் உவமமாகக் கூறப்படுமென்பது.

284. பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினு
மருளறு சிறப்பினஃ் துவம மாகும்.

(4) விரிந்த உவமை.

இது மேற்கூறியவாறன்றி வருவதோர் உவமவிகற்பங் கூறுகின்றது.

இதன்பொருள்: "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" (தொல்-உவம-3) என்புழி உவமம் உயர்ந்துவரல் வேண்டுமென்றான், இனிப்பொருளினை உவமமாக்கி உவமையை உவமிக்குப்படும் பொருளாக்கி மயங்கக்கூறுங் காலும் அஃது உவமம்போல உயர்ந்ததாக்கி வைக்கப்படும், என்றவாறு.

"வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை" (பத்து-சிறுபாண்-72-73.)

---

* முன் அச்சுப்பிரதியிலுள்ள 'உவமையும்' என்னும் பாடம் முன் வந்ததனையே பின்னுங்கூறிச் சூத்திரப்பொருளோடு மாறுபடுதலின், 'பொருளும்' என்னும்பாடமே பொருத்தமுடைத்தாமென்க.

என்றவழி, வருமுலையுந் திருமுகமும் ஈண்டு உவமையாகி முகையும் பூவும் பொருளாயின; ஆண்டு முலையும் முகமும் உயர்ந்தவாகச் செய்தமையின் அவையே உவமமாயின.

இவை உவமத்தொகையாங்கால் முலைக்கோங்கம் முகத் தாமரை எனப்படும். இவற்றை வேறு உருவகமென்றும் பிறர்மயங்குப. சிறப்பென்றதனான் ஒப்புமை மாத்திரையன்றித் தான் புனைந்துரைக்கக் கருதிய முலையினையும் முகத்தினையும் உயர்ந்தபொருளாகிய உவமத்தினும் உயர்ந்தவாகச் சிறப்பித்துரைத்தானென்பது. 'மருளறு சிறப்பின்' என்றதனான் அங்ஙனஞ் சிறப்பிக்குங்கால் மயக்கந்தீரச் சிறப்பித்தல் வேண்டும். அஃது உலகினுள் உயர்ந்ததென்று ஒப்ப முடித்த பொருளினையுஞ் சிறப்பித்தற்கு உவமஞ்செய்பவோ வெனிற் செய்யாரென்பது; என்னை? முகமொக்குந் தாமரை என்றால் முகத்திற்குந் தாமரைக்குஞ் சிறப்புடைமை மயங்கி வாராது, பின்னும் முகத்திற்கே சிறப்பாமென்பது கருத்து. அஃதெனப்பட்டது பொருளாகலான் 'உயர்ந்ததன்மேற்று' என்னும் விதி அப்பொருட்கு எய்துவிக்க. (௯)

பெருமையும் சிறுமையுமாய வேமைகளும் சிறப்பிற் றீராவாயிற் கொள்ளப்படும்.

285. பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீராக்
குறிப்பின் வரூஉ நெறிப்பா டுடைய.

இஃது உவமத்திற்கு ஆவதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: இறப்ப உயர்வும் இறப்ப இழிவும் உவமிக்குங்கால் இன்னாவாகச் செய்யாது சிறப்புடைமையில் தீராவாகிக் கேட்டார் மனங்கொள்ளுமாற்றான் வருதலை வழக்கு வலியாகவுடைய, என்றவாறு.

"அவாப்போ லகன்றத னல்குன்மேற் சான்றே
ருசாஅப்போல வுண்டே நுசுப்பு"

என்றவழி, உலகத்தார் அவாப்போலப் பெரிதாகிய அல்கு லெனக் கழிபெரும் பரப்பிற்றாகக் கூறினும் அது சிறப்பிற் றீராக் குறிப்பிற்றுதல் வழக்குண்டாகலின் உடம்படப் படும் என்றவாறு.

"மாக்கட னடுவ ணெண்ணுட் பக்கத்துப்
*பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்" (குறுந்-129.)

என்றவழிக், கடல்போன்றது கூந்தலெனவும், கடனடு எழுந்த எண்ணுட் பக்கத்து மதிபோன்றது நுதலெனவுங் கூறினன். அதனைக் கடல்போலும் மயிரென்றதும் பலகா லதப் பரப்புடைய மதிபோன்றது நுதலென்றதுங் கழியப் பெரியவாயினும், அது வழக்காதலிற் சிறப்பிற் றீராது மனங் கொள வந்ததெனவே படும்.

"சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்" (பத்து-திருமுரு-43.)

என்பதும் அது.

"சான்றே ருசாஅப்போல வுண்டே நுசுப்பு"

என்றவழியும், நுண்ணுணர்வின் ஆராய்ச்சி ஒருவர்க்கும் புலனுகாததனை ஒக்கும் இடையென்றமையின் அதுவுங் கழி யச் சிறிதாக உவமித்தார்.

"யானை யினையவர் நட்பொரீஇ காயினையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்" (நாலடி-22-3.)

---

* 'பகுவெண்டிங்கள்' என்பதும் பாடம்.

என்பதும் அது. இவையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீராக் குறிப்பின் வந்த வழக்காதல் அமைந்தனவென்பது. பிறவு மன்ன.

இவ்வாறன்றி மேருமால்வரை காம்பொத்து விண்முகடு குடையொத்து விண்மீன்கணம் முத்துப்போன்றனவென வடிவுபற்றி உவமங்கூறுதல் தமிழ்வழக்காகின்றதென்பது.

இனி,

"வள்ளத்தி னீர்கொண் டுமிழ்ந்த முலைச்சாந்து மறுகிற்பரந்
தள்ளல் யானை யெல்லா மடிவழுக் கினவே"

என்பதோவெனின், அவ்வாற்றானும் இன்பங் கொள்வார்க்கு அவையும் இழுக்கில என்பது.

"சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி" (பத்து-பட்டின-44-45.)

என்பதோவெனின், யாதென்ற துணையானே பேர்யாதெனக் கொண்டு உலகிறந்தனவாகாமைக்கன்றே,

"ஏறுபொரச் சேறுகித்
தேரோடத்துகள் கெழுமி (பத்து-பட்டின-46-47.)

என்பதாயிற் றென்பது, (கo)

உவம உருபுகள் இவை யெனல்.

286. அவைதாம், அன்ன வேய்ப்ப வுறழ வொப்ப
வென்ன மான வென்றவை யெனஅ
வொன்ற வொடுங்க வொட்ட வாங்க
வென்ற வியப்ப வென்றவை யெனஅ
வெள்ள விழைய விறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப வாங்கவை யெனஅக்

காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப வாங்கவை யெனுஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ வாங்கவை யெனுஅ
நாட நளிய நடுங்க நந்த
வோடப் புரைய வென்றவை யெனுஅ
வாரு றவையு மன்ன பிறவுங்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே.

இஃது உவமத்தினையும் பொருளினையும் ஒப்பிக்குங்கால் இடைவருஞ்சொல் இனைத்தென்கின்றது. 'அவைதா'மென்பது, வினை பயன் மெய் யுரு வென்னு நான்குவமையுமென்றவாறு.

இதன்பொருள்: இவை எண்ணப்பட்ட முப்பத்தாறு சொல்லும் இவையே போல்வன பிறவும் வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் வேறுபடு குறிப்பினவாகி வரும், என்றவாறு.

'ஆறுறவையு' மென்பது அவை முப்பத்தாறு மென்றவாறு; 'பல்குறிப்பின'வென்பது, அவை இடைச்சொல்லாகித் தொகுத்து வருவனவுந் தொகாதே நிற்பனவும் வினைச்சொல்லாகி வேறுபட நிற்பனவுமெனப் பலவாமென்றவாறு.

இவ் ஓதிய வாய்பாடெல்லாம் நான்கு உவமத்திற்கும் பொதுவென்பது ஈண்டுக் கூறி, இனி அவை சிறப்புவகையான் உரியவாறிதுவென்பது மேற்கூறுகின்றான். 'பிறவும்' என்பதனான் எடுத்தோதினவேயன்றி, நேர நோக்க தினைப்ப மலைய ஆர அமர அனைய வர வர்ப்ப செத்து அற்ற

கெழுவ என்றற்றொடக்கத்தன பலவும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றி வருவனவும் எனவென் எச்சங்கள் பற்றி வருவனவும் பிறவுமெல்லாங் கொள்க. ஈண்டு எடுத்தோதியவற்றுள் வரையறை வகையவென மேற் கூறப்படுவன பொதுவகையான் வருமாற்றுக்கும் உதாரணம் அவற்றை உரிமைவகையான் உதாரணங்காட்டும்வழிக் காட்டுதும். ஆண்டு எடுத்தோதாதன ஆறெனப்படும். அவை ஒன்ற என்ற மாற்ற பொற்ப நாட நடுங்க என்பன. அஃதேல் ஆண்டு வரையறை கூறப்பட்டன எண்ணென்கு மூப்பத்திரண்டாயினவாறென்னை? மூப்பதியாகல் வேண்டுமால் அவையினின், அவற்றோடு புறனடையாற் வற்றுள்ளும் நேர்நோக்க என்னும் இரண்டு கூட்டி னென் ஆண்டென்பது.

அவை பொதுவகையான் வருமாறு:

"வேலொன்று கண்ணோர்மேல் வேட்கைநோய் தீராமோ
கோலொன்று கண்ணென்று கொண்டு"

என்பது வினையுவமம்.

"மழையொன்று வண்டடக்கை வள்ளிபோற் பாடி"

என்பது பயனுவமம்.

"வேயொன்று தோளொருபால் வெற்பொன்று தோளொருபால்"

என்பது மெய்யுவமம்.

"குன்றியுங் கோபமு மொன்றிய வுடுக்கை"

என்பது உருவுவமம்.

ஒழிந்தனவும் இவ்வாறே நான்குபகுதியும் பற்றி வருமாறு கண்டுகொள்க.

"வாயென்றபவளம்" என்றது பண்புவமைபற்றி வந்தது. இது "வாயாகியபவளம்" என்று ஆக்கச் சொல்லாணும் வரும். "மணிநிற மாற்றிய மாமேனி" என்பது உருவுவமம். "மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்" என்பது மெய்யுவமம். "வேயொடு நாடிய தோள்" என்பது நாடவென்பது வந்த மெய்யுவமம். "படங்கெழு நாக நடுங்கு மல்குல்" என்புழி நடுங்கவென்பது மெய்யுவமம்பற்றி வந்த வாறு. இவ்வோதிய வாய்பாட்டோடு பொருந்த வருஞ் சொல்லெல்லாம் பல்குறிப்பினவென்பதனாற் கொள்ளப் படும். இப்பகுதியெல்லாம் புறனடையாற் கொள்வனவற்றிற்கும் ஒக்கும். இச்சொற் பரப்பெல்லாம் நோக்கி,

"உவமச் சொல்லே வரம்பிகந் தனவே"

என்று ஒதி உரைப்ப; * அவை அவ்வச்சொல்லுள் அடங்குமாற்றான் வரம்பிகந்தனவாகாவென்பது.

இனிப் 'பிறவு' மென்றதனான் ஓதப்பட்டன வருமாறு:

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று" (குறள்-3-2.)

என்பதனுள் துணைப்பவென்பதூஉம் அற்றென்பதூஉம் வந்தன.

"குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்." (குறள்-97-5.)

என்று அனையவென்பது வந்தது. பிறவுமன்ன.

* இங்ஙனமே 'செய்யுளியல்' 102 - ஆஞ் சூத்திரத்திற்கும் இவர் உரை உரைக்குமாறு காண்க.

"கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" (குறுந்-9.)

என இன் வேற்றுமையும் உவமவுருபோடு வந்தது.

"குளித்துப் பெயலிற் கண்பனி மல்க"

என்பது உவமவுருபின்றி இன்னுருபு தன்பொருட்கண ணும் வந்தது.

*"தூதுணம் புறவெனத் துதைந்தனின் னெழினலம்"(கலி-56.)

என்பது எனவெனைச்சத்தால் உவமம் வந்தது. பிறவு மன்ன.

இவை எல்லாம் வரைவின்றி கான்குவமமும்பற்றி வரு மாறு கண்டுகொள்க. ஐந்தாம் வேற்றுமைப்பொருள் வந்த உவமங்களும் பிறவும் உவமத்தொகை யெனப்படா, தொ கைப்படாமையினென்பது. அங்ஙனந் தொகைப்பட்டவழி யும் மற்று மேலுரிமை கூறுகின்றதாமென்பது "மதியொத் ததூ மாசற்றதிருமுகம்" என்றவழி உவமமாயினும் உவ மத்தொகை யெனப்படாது, தொகைப்பாடின்மையினென் பது. (கக)

287. அன்ன வாங்க மான விறப்ப
வென்ன வுறழத் தகைய நோக்கொடு
கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்.

இது மேற் பொதுவகையாற் கூறியவாறன்றி வினையுவ மைக்கட் சிறந்து வருவன இவையென வரைந்துகூறுகின் றது.

இதன்பொருள்: இவ்வெட்டும் வினையுவமம், என்ற வாறு.

* 'தூதுணும்' என்பதும் பாடம்.

"எரியகைந் தன்ன தாமரைப் பழனத்து" (அகம்-106.)

எனவுங்

"கயலா டியானையின் முகனமர்ந் தாங்கு"

எனவுங்

"கயமூழ்கு மகளிர் கண்ணின் மாறும்" (குறுந்-9.)

எனவும்

"புலி விறப்ப வொலிகோற்றீ"

எனவும்

"புலியென்னக் கலிசிறந் தராஅய்"

எனவும்

"மின்னுறழ் நிமைப்பிற் சென்னிப் பொற்ப" (பத்து-திரு-85.)

எனவும்

"பொருகளிற் றெருத்திற் புலித்தகைப் பாய்த்துள்"

எனவும்

"மாலைக்கு நோக்கு மடநடை யாயத்தார்"

எனவும் வரும்.

இனிக்,

"கார்மழை முழக்கிசை கடிச்சும்"

எனவும்

"யாழ்கெழு மணிமிடற் றந்தணன்"

(அகம்-கடவுள் வாழ்த்து.)

எனவும்

"ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல" (அகம்-22.)

எனவும்

"ஒழுகை நோன்பக டொப்பக் குழீஇ"

எனவுங்

"குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்"

(பத்து-பெரும்பாண்-13.)

எனவும் பிறவாய்பாட்டாற் சிறுபான்மை வரும் வினையுலமும் பொதுவினியாற் கொள்ளப்படும். பிறவுமன்ன. (கூ)

288. அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது.

இதன்பொருள்: வினைக்கே உரிமை யெய்தியதாகக் கூறிய அன்னவென்பது நான்குவமைக்கும் உரிமையொக்க வரும், என்றவாறு.

அவை "மாரி யன்ன வண்கை" (புறம்-133) எனவும் "இலங்கு பிறையன்ன விலங்குவால் வையெயிற்று" (அகம்-கடவுள்வாழ்த்து) எனவுஞ் "செவ்வானன்ன மேனி" (அகம்-கடவுள்வாழ்த்து) எனவும் ஒழிந்த மூன்றற்கும் பெருவரவினன் வந்தவாறு வழக்குநோக்கி உணர்க. (கஉ)

289. எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
வென்றுங் கெட்டே பயனிலை யுவமம்.

இது முறையானே பயனிலையுவமைக்குச் சிறந்த வாய்பாடு இவையென்பதுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: இவை எட்டும் பயனிலையுவமம், என்றவாறு.

"எழிலி வான மெள்ளினன் றருஉங்
கவிகை வண்கைக் கடுமான் ரேன்றல்"

எனவும்,

"மழைவிழை தடக்கை வயவா வெழிலி"

எனவும்,

"புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல"

எனவும்,

"விண்பொருபுகழ் விறல்வஞ்சி" (புறம்-11.)

எனவும்,

"கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி"

எனவும்,

"இருநிதி மதிக்கும் பெருவள் ளீகை"

எனவும்,

"வீங்குசுரை நல்லான் வென்ற வீகை"

எனவும்,

"விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும்
வரையாது சுரக்கு முரைசா ரோன்றல்"

எனவும் இவை ஒதியமுறையானே பயவுவமைபற்றி வந்தன.

இவை எட்டும் 'பெருவரவின' வெனவே, சிறுவரவினுன்

"அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்"

எனவும்,

"மகன்ரு யாதல் புரைவதா லெனவே" (அகம்-16.)

எனவும்,

"ஊறுரீ ரமிழ்தேய்க்கு மெயிற்ரூய்" (கலி-20.)

எனவும்,

"பல்லோர் கீகர்ப்ப வர்த வுவகை
யெல்லா மென்னுட் பெய்தந் தற்றே"

எனவும்,

"யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலே யலேத்தரூஉம்"
(கலி-29.)

எனவும்,

"உருமெனச்சிலைக்கு மூக்கமொடு"

எனவும்,

"யாழ்செத், திருங்கல் விடரளை யசுணமோர்க்கும்"
(அகம்-88.)

எனவுஞ்,

"செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை" (பத்து-திரு-5.)

எனவும்,

"விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்து"
(பத்து-மலைபடு-2.)

எனவும் வரும். பிறவுமன்ன.

மேலைச் சூத்திரத்திற் சொல்லியவாறே இதற்கும் வேண்டுவன உரைத்துக்கொள்க. (கச)

மெய்யுவமவுருபுகள்.

290. கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய
வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென்
றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்.

இது முறையானே மெய்யுவமத்திற்குரிய வாய்பாடு கூறுகின்றது.

இதன்பொருள்: இவ்வெட்டும் மெய்யுவமம், என்ற வாறு.

"நீர வார நிகழ்மலர் கடுப்ப"

எனவும்,

"மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப" (அகம்-5.)

எனவும்,

"ஞெவ்மருள் பணைத்தோள் வில்லிழை ளெகிழ"
(ஐங்குறு-318.)

எனவும்,

"உரல்புரை பாவடி" (கலி-21.)

எனவும்,

"முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை"

எனவும்,

"பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்"

எனவும்,

"செந்தீ யோட்டிய வெஞ்சுடர்ப் பரிதி"

எனவுங்,

"கண்ணெடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை"

எனவும் இவை ஓதிய முறையானே மெய்யுவமத்துக்கண் வந்தவாறு.

இவற்றை உரிமைகூறிப் பெருவரவினவெனவே ஒழிந்தனவுஞ் சிறுபான்மை வருமென்பதூஉம் அவை பொதுச்சூத்திரத்தான் அடங்குமென்பதூஉங் கொள்க. அவை,

"கடல்போ லுரன்றல் காடிறந் தோரே" (அகம்-1.)

எனவும்,

"அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி" (அகம்-11.)

எனவும்,

"புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்" (அகம்-12.)

எனவுஞ்,

"சேயித ழுணைய வாகி"

எனவும்,

"மாவெண்ழில் வேய்வென்ற தோளாய்நீ வரிற்றுங்கும்"

எனவுங்,

"*கண்போன் மலர்ந்த சுனையும்"

எனவும்,

"நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த" (கலி-22.)

எனவும்,

"முழவுறழ் தடக்கையி னியல வேந்தி" (பத்து-திரு-215)

எனவும் வரும்.

இவை புறனடையாற் கொண்டனவும் எடுத்தோதியன வும் பொதுவிதியான் வந்தவாறு. (கஇ)

உரு (நரு) உவம உருபுகள்

291. போல மறுப்ப வொப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்
றெரித்துவரு கிளவி யுருவி னுவமம.

இது நான்காம் எண்ணுமுறைமைக்கண் நின்ற உருவுவ மத்திற்குரிய வாய்பாடு கூறுகின்றது.

இதன்பொருள்: இவ்வெட்டும் உருவுவமம், என்ற வாறு.

அவை,

"தன்சொல் லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே" (ஐங்குறு-41.)

எனவும்,

"மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா"

எனவும்,

"ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்"

எனவும்,

---

* 'கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்' என்பது பத்து—திரு முருகாற்றுப்படை-75.

"வெயிலொளி காய்த்த வினங்குமணி யழுத்தின"

எனவும்,

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்"

(அகம்-கடவுள்வாழ்த்து.)

எனவும்,

"தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி"

எனவும் வரும்.

களிய நந்த என்பன இக்காலத்து அரியபோலும். அவை வந்தவழிக் கண்டுகொள்க.

இனி இவைபோல உரியவன்றி உருவுவமத்திற்கண்ணும் பொதுச்சூத்திரத்தான் வருமெனப்பட்ட வாய்பாடு சிறுவரவின வருமாறு:

"தளிதலைத் தலைஇய மழையே ரைம்பால்"

எனவும்,

"நெருப்பெனச் சிவந்த வுருப்பவிர் மண்டிலம்" (அகம்-31.)

எனவும்,

"செயலையந் தளிரேய்க்கு மெழிலை மங்கலம்" (கலி-15.)

எனவும்,

"ஆயிதழ் புரையு மலர்கொ ளீரிமை"

எனவும்,

"பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி" (கலி-21.)

எனவும்,

"எரியுரு வுறழ விலவ மலர" (கலி-33.)

எனவும்,

"பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"(பத்து-திருமுரு-2)

எனவும்,

"பொன்னுரை கடுக்குந் திதலையர்" (பத்து-திருமுரு-145.)

எனவும்,

"தீயி னன்னவொண்செங் காந்தட்
டேவற் கலித்த புதுமுகை யூன்செத்து"
(பத்து-மலைபடு-145-146.)

எனவும் வரும். பிறவுமன்ன. (கசு)

292. தத்த மரபிற் றோன்றுமன் பொருளே.

இது நான்கு உவமைக்கும் ஒரோவொன்று எட்டாகக் கூறிய வாய்பாட்டிற்கெல்லாம் புறனடை.

இதன்பொருள்: இன்னதற்கு இன்னவாய்பாடு உரிய வென்றற்குக் காரணம் என்னையென்றார்க்கு, அவை தத்தம் வரலாற்று முறைமையானே அவ்வவ பொருடோன்ற நிற் கும், என்றவாறு.

(புலிபாய்ந்தாங்குப் பாய்ந்தானென வினையுவமத்திற்கு வந்த ஆங்கென்கிளவி தளிராங்குச் சிவந்தமேனியெனிற் பொருந்தாது.) இனி எள்ளவென்பது பயவுவமைக்கு ஏற்கு மென்றான், அது புலியெள்ளும் பாய்த்துளெனலாகாது; என்னை? புலிக்கு வலிகூறினன்றி அதனோடு உவமிக்கப் பட்ட சாத்தற்குப் புகழாகாதாகலானென்பது. ஒருவனை வென்றிகூறுங்கால் அவனோடு ஒப்பிக்கின்ற புலியேற்றினை அவனைக்கண்டு எதிர்நிற்கலாற்றாது புறக்கொடுத்ததெனலும், நடுங்கிற்றெனலும், கண்சிம்புளித்ததெனலும் அவற்குப் புகழாமென்பதே கருதிக்கூறின் கூறின உவமை வெளிப்பாடு மின்றி அவற்கது புகழுமாகாதென்பது கருத்து. இனி மழையினைக் கொடைக்கு இழித்துச்சொல்லவும் பெறுப வன்றே, அவ்வாறு சொல்லினும் அதனை அவனின் இழித்த தோக்காது உலகமாதலின்.) விழைய வீழ புல்ல மதிப்ப வெல்ல என்பனவும் உவமை தான் பொருளை யொத்தற்கவா

வினவென்று பொருள்தோன்ற நிற்குமென்றவாறு. கள்ள வென்பதூஉம் அதன்குணம் அதன்கண் இல்லாமற் கதவிற் றென்னும் பொருட்டு. பொருவவென்பதூஉம் மழையினை யும் ஒருவனையும் உறழ்ந்துணைச் சிறந்தனெனச் சொல்லு தல். இவ்வாற்றான் இவை உரிமைகூறப்பட்டன.

இனி மெய்யுவமத்திற்கு உரியவெனப்பட்டனவும் அவ் வாறே ஒரு காரணமுடைய போலும். கடுப்ப என்றக்கால் வினைக்கும் பயத்திற்கும் ஏலாது; என்னை? கடுத்தலென்பது ஐயுறுதல். புலியோடு மறவனை ஐயுறவேண்டுவதோர் காரண மின்மையானும், மழையின் விளைத்த பயத்தோடு உவமித்த லின் மழையோடு ஒருவனை ஐயஞ்செய்தல் வேண்டுவதின் மையானும், வடிவுகண்டவழி ஐயம்பிறக்குமாகலானும், உரு வென்பது குணமாகலாற் பொருள்வேற்றுமை அறிந்தவழி ஐயஞ்செல்லாதாகலானும், மெய்க்குரிமை கூறினனென்பது எய்த்தலென்பதூஉம் பொருந்துதலாகலின் வடிவிற்கேற்கும். மருள புரைய ஒட்ட ஒடுங்க என்பனவுங் கடுத்தல்போலும் பொருண்மைய; என்னை? மருட்சியும் புரையுணர்வுங் கவர்த் தலைக் காட்டுதலானும், ஒட்ட ஒடுங்க என்பனவும் இரண் டனை ஒன்றென்னும் பொருண்மையவாகலானுமென்பது. நிகர்த்தலும் அவ்வினப்பொருளென்பதனைக் காட்டுதலின் வடிவிற்கேற்றது. ஒடுவென்பதும் ஒடுதற்றொழில் வடிவிற் கல்லதின்மையின் அவ்வடிவிற்கேற்றது. பண்பாயிற், பண்பு, நிறப்பண்பு, ஒடிற்றெனலாகாமையின்.

உருவுவமம் வாய்பாட்டிற்கு காரணங் கூறுங்கால போலுமென்பது இடைச்சொல்லாகலானும், மரீஇவந்த வினைப்பாற் பட்டதாகலானும், அதற்குக் காரணங்கூறப் படாதென்பது. அஃதேல், அதனை இவ்வெட்டற்கும் முன்பு

கூறியதென்னை, பொருளுடையவற்றைப் பிற்கூறி யெனின், அதுவும் அன்னவென்பதுபோல மற்றை மூன்று உவமத்தும் பயின்றுவருமென்பது எய்துவித்தற்கென்பது. மறுப்ப ஒப்ப என்பன முதலாயினவும் ஒருகாரணமுடையவென்பது ஆசிரியன் பெருவரவினவாக உரிமைப்படுத்துக் கூறினமையின் அறிந்தாம். அல்லதூஉம் 'மரபிற் றோன்றும்' என்றதனுன் இவையெல்லாம் மரபுபற்றி அறியல்வேண்டும் எனவே தலைச்சங்கத்தார் முதலாயினர் செய்யுட்களுள் அவ்வாறு பயின்று வருமென்பது அறிந்தாமன்றே, இவ்வாறு சூத்திரஞ் செய்தலானென்பது. (கள)

உவமை எட்டாகுமன்றே.

293. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.

இதுவும் மேலனவற்றையே பகுக்கின்றது.

இதன்பொருள்: வினை பயன் மெய் உரு என்னப்பட்ட நான்கும் எட்டாம் பகுதியும் உண்டு, என்றவாறு.

அவை உவமத்தொகை நான்கும் உவமவிரி நான்குமென எட்டாதலும் உடையவென்றவாறு. அவை புலியன்னபாய்த்துள் புலிப்பாய்த்துள் எனவும், மழையன்ன வண்கை மழைவண்கை எனவும், வேயன்னதோள் வேய்த்தோள் எனவும், பவளத்தன்னவாய் பவளவாய் எனவுந் தொகைவிரிபற்றி நான்கும் எட்டாயினவாறு. சொல்லோத்தினுள் இவ்வாய்பாடு விரிந்துவருமாறு கூறுது ஈண்டுத் தொகையாராய்ச்சிப்பட்ட மாத்திரையானே கூறினன், அவ்வுவமத்தான் ஈண்டுக் கூறப்படுதல் பொருளினவாகலானும், இடைச்சொல்லேயன்றிப் பொருள்பயப்பனவும் அவ்வுருபாகலானும், அதன் விரிவினை ஈண்டுப் பெயர்த்து கூறி

அதன் தொகையொடு படுப்ப இத்துணைப்பகுதியவாம் அந்நால்வகையுவமமும் என்றானென்பது.

இதுவு மொருகருத்து: முன்னர் எவ்வெட்டாகக் கூறி (உவமஉருபுகள்) யவை ஒவ்வொன்றும் இரண்டு கூறாகி எட்டாம் பகுதியுடைய (ஆ 287) என்றவாறு. யாங்ஙனமெனின் அன்ன என்னுஞ் சொன்முதலாகிய எட்டனுள் அன்ன ஆங்க மான என்ன எனப்பட்ட நான்கும் வேறொரு பொருளை உணர்த்தாமையின் ஓரினமாகி ஒன்றாகவும், விறப்ப உறழ தகைய நோக்க என்னும் நான்கும் ஒருபொருளுடைமையின் ஒருபொருளாகவும் இவ்வாறே இனநோக்குதற் குறிப்பினவாயிற்று; இவ்வாற்றான் இரண்டெனவும் படும் எட்டுமென்றவாறு. இதனது பயன் இவ்விரண்டு கூற்றான் அடக்கப்படும் வினையுவமச்சொல் எட்டும் என்றவாறு. *விறத்தல், இனமாகச் செறியுமென்னும் பொருட்டு. உறழ்ச்சியுந் தன் இனமாகக்கொண்டு மாறுதற் பொருட்டேயாம். தகுதி அதுவெனப்படுவது என்னும் பொருண்மைத்தாகலின் அவற்றோடொக்கும். நோக்கென்பதூஉம் அவ்வாறே இனமாக்கி நோக்குதற்பொருட்டு. இவ்வாற்றான் இரண்டெனவும்படும் எட்டுமென்றவாறு. இதனது பயன் ஓதிய வாய்பாடு எண்ணான்கற்கும் இன்னவாய்பாடும் இன்னவாய்பாடும் ஒருபொருளவென்று அறிதலுந், தத்தம் மரபிற் பொருள்தோன்ற வருமென்பதும், இடைச்சொல்லென்றலும், ஒப்பில்வழியாற் பொருள்செய்யினும் இசைச்சொல்லாகா, தெரிநிலைவினை உருபாயினும் என்பதறிவித்தலுமெனக்கொள்க. மேல்வருகின்றனவற்றிற்கும் இஃ

* 'விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே' என்று உரியியலில் ஆசிரியர் கூறினாராகலின் இச்சொல் இப்பொருட்டாதல் காண்க.

இனிப் பயவுவமைவாய்பாடு எட்டனுள்ளும் எள்ள பொருவ கள்ள வெல்ல என்னும் நான்கும் உவமத்தினையிழித் தற் பொருளவாகி ஒன்று யடங்கும். என்னை? மழையைப் பொரீஇச் சொல்லுதலும் அதனது தன்மைக்குணங் கொள் ளப்படுதலும் வெல்கையும் அதனை எள்ளுதல்போல்வான் இழித்து வினையே காட்டுதலின். இனி விழைய புல்ல மதிப்ப வீழ என்னும் நான்கும் உவமிக்கப்படும்பொருளினை உயர்த் தாமையானும் உவமத்தினை இழித்துக்கூறுமையானும் அவை நான்கும் ஒருபொருளெனப்பட்டன. இவ்வாற்றாற் பய வுவமையெட்டும் இரண்டாயினவென்பது.

மெய்யுவமை இரண்டாங்கால் ஐயப்பொருட்கண் நான் குந் துணிபொருட்கண் நான்குமென இரண்டாம். கடிப்ப மருள புரைய ஓட என்னும் நான்கும் ஐயப்பொருளவாகி ஒன்றும். ஓடவென்பது உவமத்தின்கண்ணும் பொருளின் கண்ணும் உணர்வுகவர்ந்தாடிற்றென்னும் பொருள்தான் றவுஞ் சொல்லின் அதுவும் ஐயமெனப்பட்டதுபோலும். இனி ஏய்ப்ப ஒட்ட ஒடுங்க நிகர்ப்ப என்னும் நான்கும் ஐய மின்றி உவமையும் பொருளும் ஒன்றென உணர்வுதோன்றும் வாய்பாடாகலின் இவை நான்கும் ஒன்றெனப்பட்டு இவை யெட்டும் இரண்டாயின.

இனி உருவின்கண்ணும் போல ஒப்ப நேர களிய என் னும் நான்கும் மறுதலையின்றிச் சேர்ந்தனவென்று கோடற்கு வாய்பாடாகி வருதலின் அவையும் ஒன்றெனப்பட்டன. 'களியென் கிளவி செறிவு மாகும்' (தொல்-சொல்-உரி-27) என்றதனுல் அதனெடு சேர்ந்தனென்னும் பொருட்டேயா யிற்று. இனி மறுப்ப காய்த்த வியப்ப நந்த என்னும் நான் கும் உவமையோடு மறுதலைதோன்றி நிற்கும் பொருளவாக

லின் நான்கும் ஒன்றெனப்பட்டு இவையும் இரண்டாயின. *நந்துதலென்பது கேடு. வியத்தலென்பது உவமையான் வியக்கத்தக்கது பொருளெனவே அதன்கண் அக்குணமின்றென மறுத்தவாறாம். காய்த்தலென்பதூஉம் உவமையைக் காய்ப்பித்தலாகலின் அதுவும் மறுத்தலென்பதன் பொருளெனப்பட்டது.

இவ்வாறு இவையெல்லாந் தொகுப்ப எட்டாதலும் உண்டென்பது இதன்கருத்து. இவற்றுட் பலவற்றையுஞ் செயவெனெச்ச வாய்பாட்டால் ஓதியது என்னையெனின்? அஃது உடம்பொடு புணர்த்தலென்பதனான் இடைச்சொல்லும் உரிச்சொல்லும், வினைச்சொற்போல நிற்குமெனவும், அதனானே பெயரெச்சமும் வினையெச்சமும் முற்றுமாகி நிற்குமெனவும், அவையுந் தெரிநிலைவினையுவமையாய் வருமெனவும் அறிவித்தற்கென்க. இவற்றை இவ்வாறு எட்டாகச் சொல்லுதல் பெரிதும் நுண்ணுணர்விற்றெனவுணர்க.

மெய்ப்பாடு எட்டன் வழிப் பெருமையும் சிறுமையும் தோன்றும்

294. பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பாடெட்டன் வழிமருங் கறியத் தோன்று மென்ப.

இது மேற்கூறிய உவமை இன்னுமொருவாற்றான் எட்டெனப்படுமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : பெருமைபற்றியுஞ் சிறுமைபற்றியும் ஒப்புமைகொள்ளப்படும் உவமை மேற்கூறிய மெய்ப்பாடெட்டன்வழித் தோன்றுமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

---

* "நந்துதொறும் மாட்ட" என்னும் முல்லைப்பாட்டடியினும் இஃது இப்பொருட்டாதல் காண்க.

மெய்ப்பாடு எட்டென்பன,

'நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகை' (தொல்-மெய்ப்-3.)

என மெய்ப்பாட்டியலுண் மேற்கூறப்பட்டன.

"களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா" (அகம்-16.)

என்பது நகையுவமம்; என்னை? தலைமகனைக் கண்டறியாதாள்போலக் கரந்தொழுகுகின்ற பரத்தை அவனோடு ஒப்புமைகண்டு தனிநின்று விளையாடும் புதல்வனைக்கொண்டு மகிழ்கின்றாளை, வாயிற்கதவம் மறைந்து நின்ற தலைமகள் நீயும் அம்மகவிற்குத் தாயேகாண் என்றவழிக், களவுகண்ட பொருளோடு கையகப்பட்ட கள்வர்போலச் செய்வதறியாது தடுமாறி முகம் வேறுபட்ட நிலைமையை உவமித்துச் சிரித்தமையின் நகையுவமமாயிற்று.

"கலங்கவிழ்த்த நாய்கன்போற் கனைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்"

என்பது அவலவுவமை; கலங்கவிழ்த்த நீகாமன்போலப் புலம்பினாளென்றமையின் அப்பெயர்த்தாயிற்று.

"பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமெ னெஞ்சு"
பையலும்
(முத்தெள்ளாயிரம்-88.)

என்பது இளிவரலுவமம்; என்னை? தலைமகன்மாட்டு இன்பவிளையாட்டெய்துவார் பலரையுங்கண்டு நெஞ்சு தீரப் புன்கணெய்தித் தனிநின்றும் புகப்பெறாது இளிவந்தமையின் அப்பெயர்த்தாயிற்று.

"ஈரத்து ளின்னவை தோன்றி னிழற்கயத்து
ணீருட் குவளைவெந் தற்று." (கலி-41.)

என்பது மருட்கையுவமம் ; என்னை? நிழற்கயத்தின் குவளை வேவன வின்மையின் இஃது அற்புதமாயிற்று.

"சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து" (நாலடி-13-6.)

என்பது அச்சமாகலின் அச்சவுவமை.

"மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் கிளைநாப்பட்
கல்லுயர் னஞ்சாரற் கலந்தியலு நாடகேள்." (கலி-52.)

என்பது பெருமிதவுவமை.

"கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணைக் கினையே" (புறம்-42.)

என்பது வெகுளியுவமம்.

"பாடிச் சென்ற பரிசிலர் போல
வுவவினி வாழி தோழி" (அகம்-65.)

என்பது உவகையுவமை, பிறவுமன்ன.

இவற்றுள் எண்வகை மெய்ப்பாடும்பற்றி உவமை எட்டெனப்படுமென்று அறிந்து கூறினான்.

"பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீரா"
(தொல்-உவம-10.)

என்புழிப் * பெற்றமாகலின் மெய்ப்பாடெட்டன்வழித்

---

* 'பெற்றம்' என்பதற்கு எழுவாயாகப் 'பெருமையுஞ் சிறுமையும்பற்றி வருதல்' என்னுஞ் சொற்றொடர் பின்னே வந்தது. இங்ஙனம் ஒரோவழி எழுவாய் பின் நிற்றலுமுண்டு.

தோன்றுமென்றது 'மருங்கறிய' வென்றதனாற் பெருமையுஞ் சிறுமையும் பற்றி வருதல் வழிமருங்கெனவும் அவை பற்றாது மெய்ப்பாடு எட்டும்பற்றி வாளாதே உவமை வருதல் செவ்விதெனவுங் கொள்ளப்படும்.

"நீருட் குவளைவெந் தற்று" (கலி-41) என்பது பெருமைபற்றியது. என்னை? உலகநடையிறந்தோர் உவமை கூறி அதனோடு தலைமகன் ஈரத்தினை ஒப்பித்தமையின்.

"களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா" (அகம்-16.)

என்பது தனக்குரிகராமல் இழித்துரைத்தமையிற் சிறுமை பற்றிவந்ததாம்.

உவமையும் மெய்ப்பாடும் பொருள்களை அறிவிப்பனவாகி அவை வேறுவேறுபொருள் அறிவித்தலின் ஒத்து வேறுடையனவாயினுஞ் சிறுபான்மை மயங்கியும் வருமென்றற்கு இது கூற வேண்டியதென்பது. (கசு)

295. உவமப் பொருளி னுற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான.

இஃது எய்தாதெய்துவித்தனுதலிற்று: உவமையோடு பொருள் ஒவ்வாதெனவும் ஒப்புமை சார்த்திக் கொள்ளுமா

இதன் பொருள்: உவமப்பொருளின்—உவமையெனப்பட்ட பொருளான்; இன் உருபு ஆன் உருபின்கண் வந்தது: உற்றதுணருந் தெளிமருங்குள—உவமிக்கவரும் பொருட்குற்றமெல்லாம் அறிந்து துணியும் பகுதியுமுள; திறத்தியலான—அங்ஙனந் துணியப்படும் பொருட்டிறம் பலவாகிவரும் இலக்கணவகையான், என்றவாறு.

அப்பகுதி பலவும் உற்றுணராமற் சொல்லியவழியும், அஃது உணரவருமென்பது கருத்து. திறத்தியல எனப் பட்ட பகுதியாவன, மேற்கூறப்பட்ட மெய்ப்பாடெட்டும் பற்றி உவமங்கொள்ளுங்கால், உற்றதுணருந் தெளிமருங் கென உவமானவடைக்கு உவமேயவடை குறைந்துவருவன வும், யாதும் அடையின்றி வருவனவுமென்று இவ்விரண்டும், உற்றுணராமற் சொல்லியவழி, அவற்றுக்கும் உவமைப்பொ ருளே தெளிமருங்காமெனவும், வாளாதே உவமஞ்செய்து உற்றுணர்த்தாதவழியும் அதுவே தெளிமருங்காமெனவும் இன்னோரன்ன கொள்க. உதாரணம்:

"களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங் நோயா" (அகம்-16.)

என்றவழிக் கண்டோர்க்கெல்லாம் பெருநகையாகக் கள வுண்டாகப்படுநரிற் கவிழ்ந்து நிலங்கினையாவென உற்ற துணரக் கூறியதிலனையினுங் கையொடுபட்ட களவுடையார் போல நின்றாளென்னும் உவமைப்பொருளானே எள்ளுதற் பொருள் தோன்றி நகை புலப்படுவதாயிற்று.

"சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றற்றென"
(புறம்-82.)

என்னும் பாட்டினுள் உவமப்பொருளாகிய "*போழ் தாண்டிசிக்குப்" பல அடை கூறி அதனோடு உவமிக்கப்படும் போர்த்தொழிலினை யாதுமோர் அடையின்றி வாளாது கூறினையினும் உவமப்பொருளானே போர்த்தொழிற் குற் றதும் உணரக் கூறினனும். என்னை? உண்டாட்டுங் கொடை யும் உரனொடு நோக்கி மறத்தலும் முதலாகிய உள்ளக்கருத்

* 'போழ்தாண்டு ஊசி எனப்பிரித்து, வாரைத்தைக்கும் ஊசி எனப்பொருளுரைக்க.

தினை ஒருகணத்துள்ளே பலவேந்தரை ஒருங்குவென்றற்கு நிரைகின்றது போர்த்தொழிலென்பது தெளியப்பட்டமையின்.

"உழுத நோன்பக டழிதின் ருங்கு" (புறம்-125.)

எனவும்,

"மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி" (புறம்-180.)

என்றாற்போல்வனவும் அவை.

இனி வாளாதே உவமஞ்செய்து உற்றதுணர்த்தாத வழித் தெளியுமாறு :

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து." (குறள்-67-7.)

என்பதனுள் அவன் செய்கைவன்மை கூறாயினும் அச்சாணியென்று உவமப்பொருள் தானே அச்செய்கை வன்மை கூறிற்று.

"வேனிற் புனலன்ன நுங்தையை நோவார் யார்" (கலி-84.)

என்பதும் அது. ஒழிந்தனவு மன்ன.

இனி, உவமத்தின் உற்றதுணர்கவென்றது 'பொரு' ளென்றதனாற் பொருட்கு அடுத்த அடையும் உவமவடைக் கேற்றது உணரப்படாதன கொளப்படுமென்பது. அது,

"பாசடை நிவந்த கணைக்கா னெய்த
லினமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மாணும்" (குறுந்-9.)

என்றவழிப் பாசடைநிவந்த் கணைக்காலென நெய்தலாகிய பொருட்கு வந்த அடையிரண்டுங் கண்ணெனப்பட்ட

உவமத்திற்கேற்ப வாராமையான் அவை தெளிமருங்கில வென்று களைந்துகொள்க. ஒழிந்தனவு மன்ன.

மற்றுப் "புறமதி யன்ன திருமுக மிறைஞ்சி" என்ற வழி அகத்துத் தோன்றும் மறுப்போலப் புறத்துமறு மதிக்கில்லையென்பதூஉம் புறமதிபோலக் கறைதீர்ந்த முகமென்பதூஉம் உவமப்பொருளின் உற்றதுணருந் தெளிமருங்கென்றதனாற் கோடுமோவெனின், அங்ஙனங் கொள்ளாமைக்கன்றே வருகின்ற சூத்திரமென்பது. (உ0)

உவமப்பொருள் மரபு பற்றி யறியப்படுமென்றல்.

296. உவமப் பொருளை யுணருங் காலை
மரீஇய மரபின் வழக்கொடு படுமே.

இது மேலதற்கோர் புறனடை; மேல் உவமப்பொருளானே உற்றதுணரச் செயல்வேண்டுமென்றான் இனி அங்ஙனம் உணருமாறு இது கூறினானாதலின்.

இதன் பொருள் : உவமப்பொருளான் உற்றதுணருங் காலை மரீஇவந்த வழக்கொடுபடுத்து அறியப்படும், என்றவாறு :

அது வருமாறு :

"களவுடம் படுநரிற் சவிழ்ந்து நிலங் கிளையா" (அகம்-16.)

என்பது களவுடம்படுநர்க்குள்ள வேறுபாடு உலகத்து அடிப்படவந்த வழக்காதலான் அஃது ஏதுவாக அதனையும் அறிந்துகொள்ளப்படுமென்றவாறு. எனவே, உலகத்து வழக்கினுள் அடிப்படத்தோன்றும் உவமையாயிற்றாயினும் உவமப்பொருள் புலப்பாடு செய்யாது, "புறமதிபோலுமுகம்" என்றது போல வென்பது இதன் கருத்து. (உக)

(பாடம்) யும்

அடையும் பொருளுமாக உவமவியல் ஞமாக வரும் ப 125

மேயத்திற்கு அடையும் பொருளுமாகவே உவமம் கூறவேண்டு

297. இரட்டைக் கிளவி யிரட்டை வழித்தே.

இஃது எய்தாததெய்துவித்தது; அடையொடு வந்த பொருளொடு புணர்க்குமாறு கூறினமையின்.

இதன் பொருள்: இரட்டைக்கிளவி—அடையும் அடையடுத்தபொருளுமென இரண்டாகச் சொல்லப்படுங் கிளவி; இரட்டைவழித்தே—அடையும் அடையடுத்த பொருளுமென இரண்டாக்கி நிறுத்தப்படும் உவமையின் வழித்து என்றவாறு. அது,

அடை உவமை

"பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்" பொன்

(பத்து-பெரும்பாண்-220.)

என வரும்.

தன் பைம்பூண் புடைத்த செஞ்சுவட்டினையும் மார்பினையும் பொன்னுரையோடுங் கல்லோடும் உவமித்தமையின் இரட்டைக்கிளவி இரட்டைவழித்தாயிற்று. இரட்டைக் கிளவியெனப் பொருளினை முற்கூறியதனான் இரண்டுபொருளினை ஒன்றாகக் கூட்டி உவமிக்கக் கருதினான் உவமையினையும் இரண்டு ஒன்றாக்கியே உவமிக்குமென்பது கருத்து. உம்மையான் ஒற்றைக்கிளவியும் இரட்டைவழித்தாகி வருவனகொள்க. அது,

"கருங்கால் வேங்கை வீயுகு துறுக
லிரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை" (குறுந்-47.)

என வரும். இரும்புலிக்குருளையென்றதனையே துறுகல்லோடும் வேங்கைவீயோடும் ஒப்பித்தமையின் இப்பெயர்த்தாயிற்று. (உஉ)

உள்ளுறை உவமம் இவ்வாறு வருமென்

298. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபிற் கூறுங் காலைத்

இது மேலெல்லாம் ஏனையுவமங் கூறி உள்ளுறையுவமம் உணர்த்துதல் நுதலிற்று. மேல் 'இசைதிரிந்திசைக்கு' மெனப்பட்டவற்றின் பகுதியாயினும் இதனை ஆண்டுக்கூறாது ஈண்டுக் கூறினன் உள்ளுறையுவமமாகலானும் இவ்வோத்து உவமவியலாகலானுமென்பது.

இதன் பொருள்: பிறிதொடு படாது—உவமையோடு உவமிக்கப்படும் பொருள் பிறிதொன்றுதாராது; பிறப்பொடு நோக்கி—உவமவிலங்களுட் பிறந்த பிறவிகளோடு சார்த்தி நோக்கி; முன்னை மரபிற் கூறுங்காலை—கருத்தினன் இதற்கு இஃது உவமையென்று சொன்னமரபினைற் கூறுங்காலை; துணிவொடு வருஉம் துணிவினோர் கொளினே—இன்ன பொருட்கு இஃது உவமமாயிற்றென்பது துணிந்து கொள்ளத் தோன்றும, அவ்வாறு துணிந்துகொள்ளும் உணர்வுடையோர்கொள்ளின், என்றவாறு.

எனவே, அஃது எல்லார்க்கும் புலனன்று நல்லுணர்வுடையோர்க்கே புலனென்பதூஉம் அவர் கொள்ளச் செய்ய வேண்டுமென்பதூஉங் கூறியவாறு. இதனனே செய்யுளுட் பயின்றுவருமென்பது கூறினனும். அவற்றிற்கு உதாரணம் மேற்காட்டுதும். மற்றிதனை உவமையென்ற தென்னை? உவமையும் உவமிக்கப்படும்பொருளுமாக நிறீஇக் கூறுதலினெனின் அங்ஙனங் கூறுதலினும் உவமம்போன்று பொருள் கொள்ளப்படுதலின் அதனை உவமையென்றான். அஃது ஒப்பினகிய பெயரென்பது; என்னை? இவற்றை உவமப் போலியென்பது கூறுமாகலின். (உஉ)

உள்ளுறை உவமையின் வகை.

299. உவமப் போலி யைந்தென மொழிப.

இது மேற்கூறிய உள்ளுறையுவமை ஐவகைப்படு மென்கின்றது.

இதன் பொருள்: உள்ளுறையுவமை ஐந்துவகையெனக் கூறுவர் புலவர், என்றவாறு.

அவையைந்துமாமாறு முன்னர்ச் சொல்லுதும். இத னது பயம் ஏனையுவமத்துறற்கு நிலைக்களம் ஐந்து ஒதினுன் அவ்வாறே இதற்கு நிலைக்களம் ஒதாது அவை போறலின், அவையே நிலைக்களமாமென்றலும் ஏனையுவமத்துள் ஒருசாதி யோடு ஒரு சாதியினை உவமித்தல் வழக்கன்றுயினும் உள்ளு றையுவமத்திற்கு அமையு மென்றலு மென்பது. (உசு)

உள்ளுறை ஐந்து.

300. தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின் வினையினும் பயத்தினு முறுப்பினு முருவினும் பிறப்பினும் வருஉந் திறத்திய லென்ப.

இது மேற்கூறிய ஐந்தும் இவையென்கின்றது.

இதன் பொருள்: வினைபயன் மெய் உருவென்ற சான்கி னனும் பிறப்பினனும் வரும் மேற்கூறிய ஐந்தும், என்ற வாறு.

உறுப்பென்றது மெய்யினை; உடம்பினை உறுப்பென்ப வாகலானும் மெய்யுவமமெல்லாம் உறுப்பினையே பற்றி வருதல் பெரும்பான்மைய வென்றற்கும் அவ்வாறு கூறினு னென்பது. 'தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்' என்ற தனன் ஏனையுவமத்தினும் உள்ளுறை யுவமமே செய்யுட்கும் பொருளிலக்கணத்திற்குஞ் சிறந்ததென்பது. அவை வரு மாறு:

"கரும்புடு *பாத்திக் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
†புதல்வ னீன்றவெம் முயங்க
லதுவே தெய்யகின் மார்புசிதைப் பதுவே." (ஐங்குறு-65.)

என்பது விளையுவமப்போலி; என்னை? தாமரையினை விளைப்பதற்கன்றிக் கரும்புகுதற்குச் செய்த பாத்தியுள் தானே விளைந்த தாமரை சுரும்பின் பசி தீர்க்கு மூரனென் றுள். இதன் கருத்து, அது காதற்பரத்தையர்க்கும் இற் பரத்தையர்க்கும் என்றமைக்கப்பட்ட கோயிலுள் யாமுமுள மாகி இல்லறம் பூண்டு விருந்தோம்புகின்றனம் அதுபோல வென்பதாகலான் உவமைக்குப் பிறிதொரு பொருள் எதிர்ந் து உவமஞ்செய்யாது ஆண்டுப் பிறந்தனவற்றொடு நோக் கிக் கருத்திறை கொள்ளவைத்தலின் இஃது உள்ளுறை யுவ மமாயிற்று. அவற்றுள்ளும் இது சுரும்பு பசிகளையுந் தொழி லோடு விருந்தோம்புதற்றொழில் உவமங்கொள்ள நின்றமை யின் விளையுவமப் போலியாயிற்று. இங்ஙனங் கூறவே இதனை இப்பொருண்மைத் தென்பதெல்லாம் உணருமா றென்னையெனின் முன்னர்த்

"துணிவொடு வருஉந் துணிவிலோர் கொளினே"
(தொல்-உவம-23.)

எனல் வேண்டியது இதன் அருமை நோக்கியன்றே யென்பது. அல்லாக்காற் கரும்புகுபி பாத்திக் கலித்த தா மரை சுரும்புபசிகளையும் பெரும்புன லூர என்பது பயமில வென்பது கூறலா மென்பது.

---

* 'பாத்தியிற் கலித்த வாம்பல்' என்பதும் பாடம்.

† 'புதல்வனை யீன்றவென் மேனி முயங்கன்மோ' என்பதும் பாடம்.

"கரைசேர் வேழங் கரும்பிற் பூக்குந்
துறைகே ழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே
யல்ல னென்னுமென் றடமென் றோளே."*

என்பது பயவுவமப்போலி. இதனுள் தலைமகன் கொடுமைகூறியதல்லது அக்கொடுமைக் கேதுவாகிய தொன்றுவிளங்கக் கூறியதிலளாயினும் இழிந்த வேழம் உயர்ந்த கரும்பிற் பூக்குமெனவே அவற்றிற்கும் இழிபுயர்வாமென்ப தொன்றில்லை எல்லாரும் இன்பங் கோடற்குரியர் தலைமகற் கென்றமையின் யாமும் பரத்தையரும் அவற்கு ஒத்தன மென்றமையின் அவை கூறினளென்பது.

"நீருறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை †வயாஅ மூர
புளிங்காய் வேட்கைத் தன்றுகின்
மலர்ந்த மார்பிவள் †வயாஅ நோய்க்கே." (ஐங்குறு-51.)

என்பதும் அது. நீருறை கோழி நீலச் சேவலை அதன் கூருகிர்ப்பெடை நினைந்து கடுஞ்சூலான்வந்த வயாத் தீர்தற் பயத்தவாகும், அதுபோல நின்மார்பு நினைந்து தன்வயவு நோய்தீரும் இவளுமென்றவாறு. புளிங்காய் வேட்கைத் தென்பது, நின்மார்புதான் இவள் நயவாதாயினும் இவடானே நின்மார்பை நயந்து பயம்பெற்றுள்போலச் சுவைக்

* இப்பாட்டின் கடைமூன்றடியும் ஒத்து முதலடிமட்டும் வேறுபட்டுள்ளது ஐங்குறுநூற்று அச்சுப்பிரதியில் 11-வது செய்யுள். இதன் முதலடி யொத்துக் கடை மூன்றடியும் வேறுபட்டுள்ளது ஐங்குறுநூற்று 12-ஆவது செய்யுள்.

† 'வயாவும்' என்பதும் பாடம்.

கொண்டு சிறிது வேட்கை தணிதற்பயத்தளாகும்; புளிபங் காய் நினைய வாய்நீர் ஊறுமாறுபோல என்பது.

"ஒன்றே னல்லெ னென்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதான் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனெ
டொன்றேன் றோழி யென்றிசி னனே" (குறுந்-208.)

என்பது மெய்யுவமப்போலி; என்னை? மிதியுண்டு வீழ்ந்த வேங்கை குறையுயிர்ராடு மலர்ந்தாற்போல யானும் உளேனுயிரேன னென்றமையின்.

* "வண்ண வொண்டழை நடங்க வ்லிழை
யொண்ணுத லரிவை பண்ணை பாய்ந்தெனக்
கண்ணுறங் குவளை நாறித்
தண்ணெண் றிரினே பெருந்துறைப் புனலே"
(ஐங்குறு-73.)

இஃது உருவுவமம். நீ புனலாடிய ஞான்று பரத்தை பாய்ந்தாடிய புனலெல்லாந் தண்ணென்றதெனக் கூறியவழி, அத்தடம்போல இவள் உறக்கலங்கித் தெளிந்து தண்ணென் றுளென்பது கருதியுணரப்பட்டது; அவளொடு புனல்பாய்ந் தாடிய இன்பச் சிறப்புக்கேட்டு நிலையாற்றுளென்பது கருத் து. இது நிறமன்றுலெனின் நிறமும் பண்பாகலின் அந் நிறத்தோடு நிறமல்லாத பண்புங் கொள்ளப்படுமென்பது

---

* "வண்ண வாண்டமை துளங்குவா லிழையே" என்பதும் பாடம்.

"வண்ணவெண்டழை" "தண்ணெண் குவளை" "கண்ணுறங் குவளை" என்பனவும் பாடம்.

"வகைபெறவந்த உவமத்தோற்றம்' (தொல்-உவம-1) என் றுரைத்தாரை மறுத்துரைத்தாராயிற்று.

"பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூர
வெங்கலந் தொலைவ தாயினுந்
தன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த மார்பே" (ஐங்குறு-63.)

என்பது பிறப்புவமப்போலி. நல்லகுலத்திற் பிறந்தும் இழிந்தாரைத் தோய்ந்தமையான் அவர் நாற்றமே நாறியது, அவரையே பாதுகாவாய், மேற்குலத்துப்பிறந்த எம்மைத் தீண்டலென்பாள் அஃதெல்லாம் விளங்கக் கூறுது பொய்கைப் பள்ளிப் பிறந்த நீர்நாய் முன்னுள் தின்ற வாளை மீன் புலவு நாற்றத்தோடும் பின்னுளும் அதனையே வேண்டும் ஊரன் என்றமையின் பரத்தையர் பிறப்பு இழிந்தமையுந் தலைவிபிறப்பு உயர்ந்தமையுங் கூறி அவன் பிறப்பின் உயர்வுங் கூறினமையின் இது பிறப்புவமப் போலியாயிற்று.

இவை யெல்லாங் கருதிக் கூறிற் *செய்புட்குச் சிறப்பாமெனவும், வாளாது நீர் நாய் வாளை பெறூஉமூரனென்றதனுள் ஒரு பயமின்றெனவுங் கொள்க. பிறப்பொடு வருஉக் கிறத்தவென்றது தலைமகனுல் இவ்வாறு கிறப்பாடு வேறுமுளவென்பதூஉங்கொள்க. அவை,

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவலூ ரென்ப, அதனற்
றன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்பு மூர்கிழ வோனே" (ஐங்குறு-41.)

---

*முன் அச்சுப்பிரதியிலுள்ள 'செய்புட்குச் சிறப்பின்று' என்னும் பாடம் பின்வரும் சொற்றொடரோடு இயைந்து பொருள் பயவாமையின் 'செய்புட்குச் சிறப்பாம்' என்பதே திருத்தமான பாடம்.

என்றவழித் தன் பார்ப்புத் தின்னும் அன்பில் முதலே பென்பது இன்னுந் தலைமகனது கொடுமைக்கு உவமையா யிற்று. வெண்பூம் பொய்கைத்து அவனூரென்பது தலை மகள் பசப்புநிறம்பற்றி உவமையாயிற்று. ஆதலான் வினை யுவமமும் உருவுவமும் ஒரு செய்யுளுள்ளே தொடர்ந்து ஒருங்குவருதலும் உடையவென்பது. அவை "தன்பார்ப் புத் தின்னு மன்பின் முதலியொடு * * * பொன்போற் செய்யு மூர்கிழவோன்" என்றவழி, இன்னதிறத்தனென்றது னுனே இத்தன்மைத்தாகிய ஊரனே யானெனச் சொல்லுத லுந், தலைவனூரின்கணுள்ளன சொல்லத் தலைவற்கேயன் றித் தலைவிக்கேற்ற உவமைதோன்றச் செய்தலுமென உவ மங்கூறியவழி உள்ளுறையுவமங் கோடலும், பிறவாறு வரு வனவுளவாயினும் எல்லாங்கொள்க.

"தேர்வண் கோமான் றேனூ ரன்னவிவள்" (ஐங்குறு-55.) என்பது அவனூரனையாளென வந்தது.

"வெண்பூம் பொய்கைத்து அவனூர்" (ஐங்குறு-41) எனத் தலைவனூரின் உள்ளதொன்றனால் தலைவிக்குவமையே பிறப்பித்தவாறுயிற்று. அல்லாக்கால், வெள்ளையாம்பலடை கரை என்றதனாற் பயமின்றென்பது. (உரி)

இதனையும் தோழியும் இவ்வாறு உள்ளுறைசொல்ல வேண்டுமென்று

301. கிழவி சொல்லி னவளறி கிளவி
தோழிக் காயி னிலம்பெயர்ந் துரையாது.

இது மேற்கூறிய உள்ளுறையுவமைக் காவதோர் இலக் கணம்.

இதன் பொருள் : ஐந்துவகைப்பட்ட உவமப்போலியும் பிறிதொடுபடாது பிறப்புநோக்கி உணரக் கூறியவழி அக்

கூற்றுத் தலைமகட்குந் தோழிக்குங் உரித்தாங்கால், தலைவிக் காயின் அவளறியுங் கருப்பொருளானே செய்யல்வேண்டும்; தோழிக்காயின் அங்நிலத்துள்ளன வெல்லாஞ் சொல்லவும் பெறும்; பிறநிலத்துள்ளன அறிந்து சொல்லினளாகச் செய்யுள் செய்யப்பெறு மென்றவாறு.

இதனது பயம், தலைமகள் இங்நிலத்துள்ளனவெல்லாம் அறியுந் துணைப் பயிற்சியிலளெனவும் அவளாயத்தாராயின் இங்நிலத்துள்ளன அறியச் சிறைந்த தின்றெனவுங் கூறியவாறு.

"ஒன்றே னல்ல னென்றுவன்"*(குறுந்-208) என்னும் பாட்டினுட், பொருகளிறுமிதித்த நெரிதாள் வேங்கை மரம் படப்பையிலுள்ள தாகலானுந் தன்னைப் பூக்கொய்யப் படுமாகலானும் அஃது அவளறிகிளவி யெனப்பட்டது. "தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலை" (ஐங்குறு-41) என்பது தோழி கூற்று. என்னை? அவற்றின் செய்கை யெல்லாம் அறியாளன்றே தலைமகள் பெரும் பேதையாதலி னென்பது. அதிகாரத்தானின்ற உள்ளுறையுவமை யென்பதனை அவளறிகிளவி யென்றதற்குப் பெயர்ப்பயனிலையாகவும் நிலம்பெயர்ந்துரையா தென்னும் முற்றுவினைக்குப் பெயராகவும் வேறுவேறு சொல்லிக்கொள்க. (உசு)

302. கிழவோற் காயி னுரனெடு கிளக்கு
மேனோர்க் கெல்லா மிடம்வரை வின்றே.

இதுவும் அது.

இதன் பொருள்: கிழவோன் சொல்லும் உள்ளுறையுவமந் தன்னுடைமை தோன்றச் சொல்லப்படும், ஏனைரெனப்

* இச்செய்யுள் முழுவதையும் 130 ஆம் பக்கத்திற் காண்க.

பட்ட பாங்கனும் பாணனு முதலாயினார் சொல்லுங்காலை மேற்கூறிய வகையானே இடம் வரையப்படாது தாந்தாம் அறிந்த கிளவியானும் நிலம்பெயர்ந்துரையாத பொருளானும் அந்நிலத்துள்ள பொருளானும் உள்ளுறையுவமை சொல்லப்பெறுப, என்றவாறு.

"கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்றாக்
காதற் குழவிக் கூறுமுலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருது
மொண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே."
(ஐங்குறு-92.)

என்றவழித் தாய்போன்று நும்மைத் தலையளிப்பலெனத் தலைமகன் தலைமைதோன்ற உரனொடு கிளந்தவாறு காண்க. ஒழிந்தோராயின் வரையறையின்மையிற் காட்டாமாயினும். அவை வந்துழிக் காண்க. (உஎ)

இன்பமும் இன்பமும் தோன்ற வேள மபிவிருமம்

303. இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியு
முவம மருங்கிற் றோன்று மென்ப.

இதுவும் மேலதற்கே யாவதோர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: மேற்கூறப்பட்ட உள்ளுறையுவமம் இன்ப துன்பங்கள் தோன்றச் சொல்லவும்படும், என்றவாறு.

"கழனி மரத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை சதுஉ மூரன்" (குறுந்-8.)

என்பது பலவகை யின்பமும் வருந்தாது பெறுவரென்பதற்கு உவமையாகிவருதலின் இனிதுறுகிளவி யெனப்பட்

" தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத்து " (ஐங்குறு-24.)

என்பது தலைமகன் கொடுமைகூறினமையின் துனியுறுகிளவி யாயிற்று.

இவ்விருபகுதியும்படச் செய்யப்படும் மேற்கூறிய உள்ளுறையுவமமென்பது இதன் கருத்து.

மருங்கென்னும் மிகையானே ஏனையுவமத்தின்கண்ணும் இப்பகுதிகொள்ளப்படும். அவை,

" மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே "
(குறுந்-71.)

என்பது இனிதுறு

" கராத்தின் வெய்யவோ தோள் " என்பது துனியுறுகிளவி. (உஅ)

இதனி உள்ளுறை கூறும் நிலம்.

304. கிழவோட் குவம மீரிடத் துரித்தே.

இஃது அவ்வுள்ளுறையுவமையை வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தலைமகள் இரண்டிடத்தல்லது உள்ளுறையுவமை சொல்லப்பெறாள், என்றவாறு.

இரண்டிடமென்பன மருதமும் நெய்தலும்; அந்நிலத்துப்பிறந்த பொருள்பற்றியல்லது உள்ளுறையுவமஞ் சொல்லுதல் கிழத்திக்குரித்தன்றென்பது கருத்து. இவ்விடத்து உரிமையுடைத்தெனவே குறிஞ்சிக்கண் அத்துணையுரித்தன்றென்றவாறு.

" தாமரை, வண்டூது பனிமல ராரு மூர
யாரையோ நிற்புலக்கேம்" (அகம்-46.)

என்றவழி வண்டு பனிமலரெனப் பிறர்க்குரிய மகளி ரெனவும் அவரை நயப்பாயெனவும் உள்ளுறையுவமம் மரு தத்துக்கண் வந்தது.

"அன்னை வாழிவேண் டன்னை கழிய
முண்டக மலருந் தண்கடற் சேர்ப்ப
னென்றே றிறந்தன ளெயி
*னென்னுங் கொல்லவ னயந்தோ டோளே."(ஐங்குறு-108.)

என்பது நெய்தல். இதனுட் கழியமுண்டகமலருமென முள்ளுடையதனைப் பூமலருமென்று உள்ளுறுத்ததனுள் இருவர்காமத்துறைக்கண்ணும் ஒருதலை இன்ன ஒருதலை இனிதென்றுளென்பது. என்றேறிறந்தனனென்பது முள் ளுடைமையோடொக்க, என்னுங்கொல்லவ னயந்தோடோ ளென்றவழி அவன் அன்பிற் பிரியாமைகூறினமையின் முண் டகமலர்ச்சியோ டொப்பிக்கப்படும். பிறவும் அன்ன.

"குன்றக் குறவன் புல்வேய் குரம்பை
மன்றி டிளமழை மறைக்கு நாடன்
புரையோன் வாழி தோழி விரைபெய
†லரும்பனி யளைஇய கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்துவந் தனனே"

(ஐங்குறு-252.)

என்னுங் குறிஞ்சிப்பாட்டினுள் வறுமைகூர்ந்த புல் வேய்குரம்பையை மழை புறமறைத்தாற்போல வாடைசெய் யும் நோய்தீர்க்கவந்தானென்று உள்ளுறையுவமஞ் செய்த வாறு கண்டுகொள்க.

---

*"எவன்கொன் மற்றவ னயந்த தோளே" என்பதும் பாடம்.

†"அரும்பனி யசைஇய கூதிர்" என்பதும் பாடம்.

இனிக் கிழவோட்குவமம் பிரிவிடத்துரித்தென்பது பாடமாக உரைப்பாருமுளர். யாதானுமொருநிலத்தாயினும் பிரிந்திருந்தவிடத்து உள்ளுறையுவமங் கூறப்பெறுங் கிழத்தியென்பது இதன் கருத்து. பெருந்தண்வாடையின் முந்துவந்தோனென்பது பிரிவன்றாகலின் ஈரிடமென்றலே வலிதென்பது. (உகூ)

தலைவன் உள்ளுறை கூறும் நிலன் வரையறையில்லை

305. கிழவோற் காயி னிடம்வரை வின்றே.

மேல் 'உரனொடு கிளக்கும்' (தொல்-உவம-27) என்றதல்லது இன்னவழிச் சொல்லப்பெறுந் தலைமகனென்றிலன், அதனான் அவற்கு எல்லா நிலனும் உரியவாமென்கின்றானென்பது.

இதன் பொருள் : தலைமகற்கு இடவரையறை இல்லை, என்றவாறு.

வரையறையில்லனவற்றுக்கு வரையறைகூறாமே முடியாவோவெனின், அங்ஙனமாயினுங் கிழத்திக்குந்தோழிக்கும் இடம்வரையறுத்ததனைக் கண்ட மாணாக்கன் இவ்வாறே தலைமகற்கும் இடம்வரையறையுண்டுகொலென்று கருதிற் கருதற்கவென்றற்கு இது கூறினானென்பது. (௩௦)

தோழி செவிலி உள்ளுறை.

306. தோழியுஞ்செவிலியும்பொருந்துவழிநோக்கிக் கூறுதற் குரியர் கொள்வழி யான.

இது தோழியுஞ் செவிலியும் உள்ளுறையுவமங் கூறுமிட முணர்த்துதல்நுதலிற்று.

இதன் பொருள் : காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்துமாற்றான் உள்ளுறையுவமங் கூறப்பெறுப தோழியுஞ் செவிலியும், என்றவாறு.

காலமுமிடனும் பொருந்துதலென்பது வெளிப்படக் ளவாது முன்னத்தான்மறைத்துச் சொல்லவேண்டியவழி வ்வாறு சொல்லப்பெறுப அவரு மென்றவாறு. இங்ஙனங் டறவே, 'ஏனோர்க் கெல்லா மிடம்வரை வின்று' என்றவழி எல்லாரும் உள்ளுறையுவமஞ் சொல்லப்பெறுவரென்பது பட்டது. அதனை நற்றாயும் ஆயத்தாருந் தந்தையுந் தன்னை யரும் உள்ளுறையுவமை கூறப்பெறுரெனவுந் தோழிகூறின் நிலம்பெயர்ந்துரையாத பொருளான் ஒருவழிக் கூறுமென வுஞ் செவிலிக்காயின் இடம்வரைவின்றெனப்பட்டவகை யாற் பொருந்தும்வழிக் கூறுதற்குரியளெனவுங் கூறினுமெம் இச்சூத்திரத்தானென்பது. 'கொள்வழி'யென்றதனால் தோ ழிக்குப்போல நிலம்பெயர்ந்துரையாதபொருளான் உள்ளு ள்றையுவமங்கூறுதலே செவிலிக்குமுரித்தென்பது கொள்க. மற்றிவையெல்லாம் அகப்பொருட்கே யுரியவாக விதந் தோதிய தென்னை? புறப்பொருட்கு வாராதனபோல, எனின் ஆண்டுவருதல் அரிதாகலின் இவ்வாறு அகத்திற்கே கூறினுனென்பது.

"வன்புலக் கேளிர்க்கு * வருவிருந் தயரு
மென்புல வைப்பி னன்னுட்டுப் பொருக" (புறம்-42.)

என்றக்காற், பகைவேந்தரை வென்றிகொள்ளுங்கால்அவர் தாமே தத்தம்பொருள் பிறர்க்களிப்பாரென்னும் பொருள் தோன்றினுந் தோன்றுமென்பதல்லது ஒருதலையாக உள் ளுறையுவமங் கோடல்வேண்டுவதன்று. என்னை?

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனெடு
பின்னே நின்று முதலைத் தவரூர்" (ஐங்குறு-21.)

---

* "வருவிருந்தமரும்" என்பதும் பாடம்.

என்றாற்போலக் கூறுது அங்காட்டுக் கருங்களமர் முத லாயினர் வருந்தாமற் பெறும் பொருள் பிறர்க்கட்டார்க்கு விருந்துசெய்யத்தகுமென்று அங்காட்டினது வளமை கூறினமையினென்பது. தோழி பொருந்தியவழிக் கூறு மாறு முன்காட்டப்பட்டன. செவிலிபொருந்தவழிக் கூறு வனவுங் கண்டுகொள்க. இலக்கணமுண்மையின் ஆவையும் உளவென்பது கருத்து. (சுக)

வேறுபடவருமுவமம்.

307. வேறுபட வந்த வுவமத் தோற்றங்
கூறிய பருங்கிற் கொள்வழிக் கொளாஅல்.

இதுமேலெல்லாம் இருவகையுவமமுங் கூறி இன்னும் வேறுவமப்பகுதியே கூறுவான் எய்தாதெய்துவித்தது.

இதன் பொருள்: வேறுபடவந்த உவமத்தோற்றம்— வேறுபாடுதோன்ற வந்த வுவமச்சாதி; தோற்றமெனினும் பிறப்டெனினுஞ் சாதியெனினும் ஒக்கும்: கூறிய பருங்கிற் கொள்வழிக் கொளாஅல்— அங்ஙனம் வேறுபடவந்தனவாயி னும் மேற்கூறிய பகுதியானே கொள்ளுமிடனறிந்து கொ ளுத்துக, என்றவாறு.

கொளுவுதலென்பது கொளாவென்பதாயிற்று.

வேறுபடவருதலென்பது: [1]உவமைச்சமும் பொருட்சமும் ஒப்புமையாமாறு படக் கூறுதலும், [2]ஒப்புமைகூறுது பெயர் போல்வனவற்று மாத்திரையானே மறுத்துக்கூறுதலும், [2]ஒப்புமைமறுத்துப் பொருளோடாட்டிக்கூறுதலும், [3]ஒப்புமை மறுத்தவழிப் பிறிதோருவமை நாட்டுதலும், [4]உவமையும்

---

[1]தண்டியலங்கார நூலார் இதனை 'விரியுவமை' எனவும், [2]இதனை 'உண்மையுவமை' எனவும், [3]இதனை 'மறபொருளுவமை' எனவும் கூறுவர். [4]வீரசோழிய நூலார் இதனைத் 'தடையுவமை' என்பர்.

பொருளும் முற்கூறி பிறீஇப் பின்னர் மற்றைய ஒவ்வாவென் றலும், [5]உவமைக்கு இருதிணைகொடுத்துப் பொருளினை வாளாதுகூறுங்கால் உவமையினை இரண்டாக்கி ஒன்றற்குக் கூறிய அடை ஒன்றற்குக் கூறாதுகூறுதலும், [6]ஒப்புமை தோன்றவுபட உவமித்து மற்றொரு குணங்கொடுத்து நிரப்பு தலும், [7]ஒவ்வாக்கருத்தினை ஒப்புமைகோடலும், [8]உவமத் திற்கன்றி உவமத்திற்கு எதுவாகிய பொருட்குச் சில அடை கூறி அவ் அடையானே உவமிக்கப்படும் பொருளினைச் சிறப் பித்தலும், [9]உவமானத்தினை உவமேயமாக்கியும் அது விலக்கி புங் கூறுதலும், [10]இரண்டு பொருளானே வெவ்வேறுகூறிய வழி ஒன்று ஒன்றற்கு உவமையென்பது கொள்ளவைத்த லும், இன்னோரன்ன வெல்லாம் வேறுபடவந்த உவமத் தோற்றமெனப்படும்.

இவற்றைக் கூறியமருங்கிற் கொளுத்துதலென்பது, முற்கூறிய ஏனையுவமத்தின்பாலும் பிற்கூறிய உள்ளுறையுவ மத்தின்பாலும் படுத்து உணரப்படுமென்பது. ஏனையுவமத் தின்பாற்படுத்தலென்பது வினை பயன் மெய் உரு என்ற நான்கும்பற்றி வருதலும் அவற்றிக்கு ஓதிய ஐவகை நிலைக் களனும்பற்றி வருதலுமெனக்கொள்க. உள்ளுறையுவமத் தின்பாற்படுத்தலென்பது, இவ்வேனையுவமம்போல உவமை யும்பொருளுமாகி வேறுவேறு விளங்க வாராது குறிப்பினற்

வீரசோழியநூலார் 5இதனை 'உம்மையுவமை' என்பர். 6இதனை 'இசையுவமை' என்பர். 7இதனைக் 'கருத்துவமை' என்பர். 8தண்டியலங்கார நூலார் இதனை 'மோகவுவமை' என்பர். 9இது 'விலக்கு வமை' யின்பாற்படும். 10இது 'வேற்றுப் பொருள் வைப்பு' என் பர். இவற்றிற்கெல்லாம் உதாரணச் செய்யுட்கள் தண்டியலங்கார வுரையினும், வீரசோழிய வுரையினுங் காண்க.

கொள்ளவருதலின் இக்கருத்தினுனே இதனை எண்டு வைப்பாணயிற்று. வரலாறு :

கூ. " வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போசம் வேண்டிப் பொதுச்சொற் பொருஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
வொடுங்கா வுள்ளத் தோம்பா வீசைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்ஙன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வுரைதி புறச்சொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
யகலிரு விசும்பி னுனும்
* பகல்விளங் கலையாற் பல்கதிர் விரித்தே. (புறம்-8.)

என்னும் பாட்டினுட் "கடந்தடு தானைச் சேர லாதனை" என்னுந்தனை உவமத்திற்குவந்த அடையினைப் பொருட்கு மறுத்துக்கொள்ள வைத்தானென்பது. என்னை ? வெஞ்சுடர் வழி என்னுந் தனை உவமத்திற்குரிய அடையினைப் பொருட்கு மறுத்துக் கொள்ளவைத்தானென்பது. இனிப் "பொழுதென வுரைதி" என்பது தொடங்கிப் பாட்டுமுடிகாறும் பொருட்குரிய அடையினை உவமத்திற்கு மறுத்துக் கொள்ளவைத்தானென்பது. என்னை ? வெஞ்சுடர்வழித் தோன்றிய அரசனைத் தண்சுடரோடு பழிப்பான் பொருளே உவமஞ்செய்தானென்பது. மொழியினுமென்றதனாற் பொருளினை உவமையாகக் கூறாது உள்ளுறையுவமம் போலக் கொள்ளவைத்துப் பின்னர் உவமத்திற்கு அடையாயவற்றுள், "வையங் காவலர் வழிமொழிந் தொழுக" என்றுன்

* புறநானூற்றுரையாசிரியர் 'டசல்விளங்குதியால்' என்று பாடங்கொண்டு வீங்குசெலன் மண்டிலத்தை ஞாயிற்று மண்டிலமெனக் கொள்கின்றார்.

வழிமொழிதலென்பது வேற்றரசர்க்குத் தன்றன்மையென வேறின்மித் தன்னகப்படுத்துவார் தம்மொழியொடுபடுத்தது. ஒதிர்க கோளுஞ் செல்லத் தாணுஞ் செல்லும் மதியமென்று எதிர்மறுத்துக் குற்றங்கூறிக் குறிப்புப்பட வைத்தானென்பது. "போகம் வேண்டிப் பொதுச்சொற் பொருளது" எனவே இன்பநுகர்வு முற்றுச்சிறப்பில்லாக் கட்டுரை பெய்தானெனவும் அவனோடு உவமிக்கின்ற மதியமாயின் இருபத்தெழுவர் மகளிரோடு போகந்துய்த்துச் சிறப்பில்லாத கட்டுரைபுரையுமென்று எதிர்மறுத்துக்கொள்ளவைத்தான். சிறப்பின்மையென்பது, எல்லார்க்கும் ஒத்தவாற்றான் அறஞ்செய்பாது உரோகணிமேற் கழிபெருங்காதலினைப் படுதல்போல்வன. "இஞ்சிமி தென்னு மூக்கந் துரப்ப" எனவே, எஞ்ஞான்றுந் தன்னெல்லுக்கண்ணே வரும் மதிமண்டிலமென்று எதிர்மறுத்துக்கொள்ளப்படும். "ஓங்காவுள்ளம்" எனவே, அம்மதியந் தேய்ந்தொடுங்குமென்பது கொள்ளப்படும். "ஓம்பாவீகை" எனவே, ஈடாறும் ஓராவேவார் கலிபாகப் பல்லுயிர்க்கும் இன்பம் பயக்குமாற்றால் தருவதல்லாது தானுடையதெல்லாம் ஒருகாலெகாடாத மதியமெனப்படும். "கடந்தடுதானை" எனவே, மதிக்குத் தானைபாகிய தாரகையெல்லாம் பகைக்கதிராகிய பரிதிமண்டிலத்துக்குத் தோற்குமென்றனும். இவ்வாற்றான் உவமான அடையெல்லாம் எதிர்மறுத்துக்கொள்ளப்பட்டன.

இனிப் பொருட்குரிய அடையும் அவ்வாறே எதிர்மறுத்துக்கொள்ளப்படுமென்றவாறு. "வீங்குசெலன்மண்டில" மெனவே, கடைபாயினர் கதியிற்செல்லு மதியமென்று பாட்டுடைத்தலைவன் தலைபாயினர்கதியிற் செல்லுமென்றான்.

"பொழுதனவரைதியனவே, காடோறும் காழிகைவேறு பட்டு எறித்தியென்றதனன் அவன்பொழுது செய்யானெனவும், "புறக்கொடுத்திறத்தி" யெனவே, தோற்றோர்போன்று ஒளிமழுங்கிச் செறிகின்றுயெனவும், விளங்கித்தோன்றலென்பதனல் தொடர்கின்ற சுடர்போல விளங்கிப் பிறர்தோற்றுடக்காயும் இவனெனவும், "மாறிவருதி" யெனவே, திங்கடோறும் மாறிப்பிறத்தி யென்பதனன் இவன் கிலைபெற்றுனெனவும், "மலைமறந்தொளித்தி" யெனவே மலைச்சார்ந்தவழித் தோன்றுயென்பதனன் இவன் தன்னேட்டுமலைமீக் கூறுமென வும், "அகலிருவிசும்பினனு" மெனவே, இவன் இவ்வுலகத்து கிலைபேறுடையனெனவும், "பகல்விளங்காய்" எனவே, இவன் இருபொழுதும் விளங்குமெனவுங் கொள்ளப்படும். முற்பகுதியும் பிற்பகுதியும் வேறுபடுதலின் வேறுபடவந்த தாயிற்று. மற்றையவும் அன்ன.

இக்கூறிய அடையெல்லாம், வினை பயன் மெய் உருவெனக் 'கூறிய மருங்கிற் கொள்வழிக்' கொளுவுவதாகக் காட்டுவனவற்றிற்கும் இஃதொக்கும்.

"கண்ண னவனிவன் மாறன் கமழ்துழாய்க்
கண்ணி யவற்கிவற்கு வேம்புதார்—வண்ணமு
மாய னவனிவன் சேயன் மரபொன்றே.
யாய னவனிவன் கோ."

என்பது, பெயருந்தாரு முதலாயினபற்றி மாயனென்று உவமங்கருதி மறுத்துரைத்தவாறு. பெயரென்பது பொருளுணர்த்துதலின் அதனை வடிவின்பாற் படுத்துணர்க.

"அடிநோக்கி ஞெழ்கடல் வண்ணன்றன் மேனிப்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரோன்—முடிநோக்கித்

தேர்வளவு ஞத றெளிந்தேன்றன் சென்னிமே
லாரலங்க ரேன்றிற்றுக் கண்டு.''

என்பதனுள் ஆழ்கடல்வண்ணனையுங் கொன்றைத்தா ரோனையும் உவமைகூறியவற்றை மறுத்துத் தேர்வளவனெனத் தெளிந்தேனெனப் பொருளேயே நாடுதலின் அஃது உவமம்வேறுபட வந்ததாயிற்று.

'' இந்திர னென்னி னிரண்டேகண் ணேறூர்ந்த
வந்தரத்தா னென்னிற் பிறையில்லே—யந்தரத்துக்
கோழியா னென்னின் முகமொன்றே கோதையை
யாழியா னென்றுணரற் பாற்று.''

என்பதனுள் இந்திரனையும் இறையோனையும் முருகனையும் ஒப்புமறுத்து நெடியோனே உவமங்கூறலின் ஒப்புமை மறுத்துப் பிறிதுநாட்டியது.

ரு.1 '' சுற்றவிற் காமனுஞ் சோழர் பெருமகனுங்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார்—பொற்றொடி
யாழி யுடையான் மகன்மாயன் சேயனே
கோழி யுடையான் மகன்.''

என்பதனுன் உவமையும் பொருளும் முன் ஒருங்குநிறீஇப் பின்னர் ஒவ்வாமைகூறுதலின் இதுவும் பின்னும் வேறுபட வந்ததாயிற்று.

2 '' புனலுட்டர் சோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுப—புனலுடை
னேற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார் மாயவ
னேற்றிரந்து கொண்டமையா னின்று.''

என்பதும் அது.

நீ '' ஊர்ச்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலி
னீர்த்துறை படியும் பெருங்களிறு போல
வினியை பெரும வெமக்கே '' (புறம்-94.)

யும் பாட்டினுள் உவமையாகிய பொருளினை யானையுங் குதிரையுமென இரண்டாக்கி யானைக்கே ஊர்க்குறுமாக்கள் வெண்கோடுகழாலின் நீர்த்துறைபடியுமென்னும் அடைகூறி ஊர்க்குறுமாக்கள்போல் அவரைத் தன்னருங் கூட்டத்திற்குச் சொல்லாமையின் இதுவும் வேறுபடவந்த உவமத் தோற்ற மெனப்பட்டது.

எ "முதிர்கோங்கின் முகையென முசஞ்செய்த குரும்பையெனப்
பெயறுளி முகிழெனப் பெருத்தகின் னிளமுலை" (கலி-56.)

என்றவழி முதிர்கோங்கும் முற்றியகுருப்பையும் பெரிய வாகலின் அவைபோலப் பெருத்த தின் இளமுலையென்றல் ஒத்தது, பெயறுளிமுகுளஞ் சிறிதாக இவற்றோடு அதனை உடன்கூறி அப்பெயறுளி முகுளத்திற்கில்லாத பெருமைக்குணம் பொருட்குப் பின்னர் விதந்துகூறுதலின் அதுவும் வேறுபடவந்த உவமையாயிற்று.

அ "மக்களே போல்வர் கயவ ரவரன்ன
* வொப்பாரி யாங்கண்ட தில்." (குறள்-108-1.)

என்பது ஒவ்வாப்பொருளை ஒப்புமைகொண்டது; என்னை? மக்களைக் கயவர் ஒவ்வாரெனலுங் கருத்தினன் மக்கள்போல்வர் கயவரென்றமையின் அதுவும் வேறுபட்டவந்த உவமையாயிற்று.

கூ "நெடுந்தோட் டிரும்பனை நீர்சிழல் புரையக்
குறும்பல முரிந்த குன்றுசேர் சிறுநெறி"

என்பதனுள் உவமையாகிய நிழல் பொருட்கெய்தியது உவமனியனன்றே, அதற்கு நெடுந்தோடும் பெருமையும்

* 'ஒப்பாரி' என்னுஞ் சொல் ஒப்புமை என்னும் பொருட்டு.

அடையாகக் கூறினன்; கூறவே, பணிநிழலோடொக்குங் குன்றஞ்சேர் சிறுநெறி முடிந்தவழிச் சென்றுபுகும் ஊர்க் குவமை நெடுந்தோடென்று கொள்ளவைத்தமையின் அதுவும் வேறுபடவந்த உவமையாயிற்று.

கூ "மண்படுதோட் கிள்ளி மதவேழ மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்—விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியுந் தன்னுருவந்
தேயுந் தெளிவிசும்பி னின்று"

என்பதனுள் உவமானத்தினை உவமேயமாக்கி அதனையே விலக்கினர். என்னை? வெண்குடையென்று யானைக்குத்தமென்று மதியினைக் குடையுடனெப்பிப்பான் மதியினைக் குடையாகவே கூறித், தேயுந்தெளிவிசும்பினின்று என்பதனைக் குடையோடு உவமைகூறியதை விலக்கினமையின் அதுவும் வேறுபடவந்த உவமத்தோற்றமாயிற்று.

கூஎ. "அகர முதல வெழுத்தெல்லாம்" என்றவழி இரண்டு பொருள் வேறுவேறு கூறியதன்றி, அகரமுதல எழுத்தெல்லாம் அதுபோல என்றுணும், ஆதிபகவன்முதற்று உலகம் அதுபோல என்றுணும் ஒன்றுகத் துணியுமாற்றுன் உவமையும் பொருளுங் கூறுமையின் அதுவும் வேறுபடவந்த உவமமாயிற்று. பிறவும் அன்ன. இவை ஏனையுவமத்திற்கெல்லாம் பொதுவிலக்கணம். (கூஉ)

அவ்வாதெனக் கூறி உவமையாக்கலும் உள்ளது.

308. ஓரிக் கூறலு மாரிய பண்பே.

இதுவும் ஏனையுவமத்திற்காவதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: ஓரிக்கூறலும்—ஒக்குமெனக் கூறாது ஒவ்வாதெனக் கூறுதலும்; உம்மை இறந்தது தழீஇயிற்று:

மரீஇயபண்பு—அதுவும் உவமையாதற்கு அடிப்படவந்த வழக்கு என்றவாறு.

உதாரணம்:

"யாங்ஙன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்"
(புறம்-8.)

எனவும்,

"மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி" (குறள்-112-8.)

எனவும் வரும்.

"நின்னோரனையைநீ" என்பதும் அது. இவற்றுள் யாங்ஙனம் ஒத்தியோவென்பது ஒவ்வாயென்னும்பொருட்டு. காதலைவாழிமதி யென்றவழியும் யான்காதலியாமையால் மதியமே அவள் வாண்முக மொவ்வாயென்றலின் ஒரீஇக் கூறிற்று. இதுவும் மரீஇய பண்பாகலானும் உள்ளுறையுவமம் போலக் குறிப்பினான் உவமங்கோட லொப்புமையானும் ஈண்டு வைத்தானென்பது. பண்பென்றதனான் அதுவும் இலக்கணத்தோடொக்கும் என்றவாறு. இவற்றையும் வேறுபடவந்த உவமமென்னாமோவெனின், உவமையும் அவ்வழி மாறுபடவருமாறு உவமத்துக் கூறினான், உவமையின்மை கூறுதலும் உவமையெனப்படுமென்றற்கு இது கூறினானென்பது. இவற்றுள்ளும் வேறுபடவந்த இலக்கணம் மேலைச்சூத்திரத்துள் அடங்கும். (௩௩)

உவமையாமையும் சிறுமையும் தோன்றாமையும் கூறும்

309. உவமத் தன்மையு முரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான.

இஃது எய்தாதது எய்துவித்தது; மேல் ஏனையுவமங் கூறுங்கால் உவமிக்கப்படும் பொருட்குப் பெருமையுஞ்

சிறுமையுஞ் சிறப்பக் கூறல்வேண்டுமென்றான் அவ்வாறன்றி உவமமுங் கொள்ளப்படுமென்றமையின்.

இதன் பொருள்: உவமத்தன்மையும் உரித்தென மொழிப—விகாரவகையாற் பெருமையுஞ் சிறுமையும் ஒருபொருட்குக் கூறுது பட்டாங்கு உவமங்கூறுதலும் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர்; பயனிலை புரிந்த வழக்கத்தான—அதனானும் ஒருபயன் தோன்றச் சொல்லுதனெறிப்பாட்டின்கண், என்றவாறு. அது,

"பாரி பாரி யென்று பலவேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்" (புறம்-107:)

என்னும் பாட்டினுள் உலகளித்தற்கு மாரியும் உண்டென மாரியை உவமித்துச் சிறப்பித்துக்கூறுவான் மாரியைச் சிறப்பித்துப் பாட்டுடைத்தலைவனாகிய பாரியை உயர்த்துக் கூறுதான்போல இயல்பினன் உவமைகூறினானும்; இது மாரிக்கும் பாரிக்கும் ஒரிழிவில்லையென்னுந் தன்மைபடக் கூறலே அவனுயர்வுகூறுதலிற் பயனிலைபுரிந்த வழக்கெனப்படுமென்பது.

"கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் பெஃகின்
வில்லோர் தானை வீங்கப் பெய்த
வப்புனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்படர் ரன்ன செங்குழை யகந்தோ
றிழுதி னன்ன தீம்புழற் றுய்வா
யுழுதகாண் டுளைய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
தப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோர் மீமிசை னினைத்திற் பரிக்கும்" (அகம்-9.)

என்பதும்,

"நீரை யிலவத் தலங்குசினை பயந்த
பூவாயம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
நியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி * நெடுந்தக
ரீத்தலை வேய்ந்த வேய்ப்புறக் குரம்பை"

(பத்து-பெரும்பாண்-83.)

என்றாற்போல்வனவும் அது.

"கொல்லிணைப்பொலிந்த" என்பதனுள் இந்திலத்தின் மக்கள் அம்பினை உவமைபாக்கி ஆண்டையவாகிய இருப்பை யின் பூங்கொத்தை உவமிக்கப்படும் பொருளாக்கியும் உவம நிலத்திற்கேற்ற வெண்ணெய்த்திரளொடு கழன்ற பூவினை உவமஞ்செய்தும் அந்நிலத்தியல்பு கூறினமையின் அது பாலை நிலம்புரிந்த வழக்கெனப்பட்டது. பிறவும் அன்ன.

உவமத்தன்மையுமென்ற உம்மையான் உவமத்தன்மை யேயன்றி வாளாது தன்மைகூறுதலும் அந்நிலத்திற்கே யுரியனவெனப்படுவனவுங் கொள்க. அவை,

"மான்றேர்ப் பள்ளி மகவொடு மூடங்கி
மீன்பிணை வொழியப் போகி நோன்கா
ழிரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோ
ளுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருளிலக் கரம்பைப் படுநீ ருடி
நண்புல் லடக்கிய வெண்ப லெயிற்றியர்
பார்வை யாத்த பறைத்தான் வினவி
னீழன் முன்றி னிலவுரற் பெய்து"

(பத்து-பெரும்பாண்-82.)

---

* 'நெடுந்திடர்' என்பதும் பாடம்.

என்றவழி உவமஞ்செய்யாது அந்நிலத்தியல்பு கூறப் பட்டதாயினும் உவமத்தாற் பொருட்பெற்றி தோன்றச் செய்தாற்போல அந்நிலத்திற்குப் பயம்பாடு வெளிப்படச் செய்யாமையின் உவமவிலக்கணத்துள் இதனையும்இலேசினற் கொண்டாமென்பது. அற்றன்று, 'மாபேதானும்' (தொல்-செய்-80) என்புழி நாற்சொல்லியலெனச் சொற்றன்மையுங் கூறப்பட்டமையின் உவமையாராய்ச்சியுள் அது கூறுனென் பது. உம்மை இறந்தது தழீஇயிற்று; என்னை? உயர்ந்ததன் மேற்றன்றி உயர்திழிபுடைத்தல்லாத தன்மையுவமையுங் கொள்க வென்றமையின். (ரூ)

தடுமாறு உவமம்.

310. தடுமா றுவமங் கடிவரை யின்றே.

இதுவும் உவமத்திற்கேயாவதோர் இலக்கணமுணர்த்து தல் நுதலிற்று.

இதன் பொருள்: தடுமாறுவமம்—உவமையும் பொரு ளும் வேறு நிறீஇ இதுபோலும் இதுவென்னுது அவ்விரண் டினையும் உவமையுறச் சொல்லுந் தடுமாறுவமம்; இனி அவ் வாறன்றி உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமை யாக்கியுந் தடுமாறச் சொல்லுதலுந் தடுமாறுவமமெனப்படும்; கடிவரை இன்று—அவ்விரண்டும் உவமமென்று சொல்லற் பாட்டிற் கடியப்படா, என்றவாறு.

"அரிமலர்ந் தன்னகண் ணம்மா கடைசி
திருமுகமும் திங்களுஞ் செத்துத்—தெருமந்து
வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காகி
யையத்து நின்ற தரா"

என்பதனுள் உவமையினையும் பொருளினையும் வேறு வேறு துணியாது ஐயுற்று வையத்தும் வானத்துஞ் செல்லாது அராவென்றமையின் இது தடுமாறுவமமாயிற்று.

"தளிர்பெற்று வைகிய தண்சுனை நீல
மளிபெற்றார் கண்போன் மலரு—மளிபெற்ற
நல்லார் திருமுகத் தோற்றத் தளிபெற்ற
கல்லாரம் போன்மலருங் கண்."

என்புழி நீலத்தோடு கண்ணினையும் கண்ணினோடு நீலத்தினையும் ஒன்றற்கொன்று உவமையாக்கியும் பொருளாக்கியும் ஒருங்கே தடுமாறக் கூறினமையின் இதுவுந் தடுமாறுவமமெனப்பட்டது. பிறவும் அன்ன. (௩௫)

உவமைக் கவமை இல்லையெனல்

311. அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே.

இஃது எய்தியது மறுத்தது; என்னை? வேறு ஒரு பொருளோடு ஒருபொருளை உவமித்து நிறீஇ அப்பொருளோடு பிறிதொரு பொருளை யுவமித்தலும் உவமையென்று கொள்ளுவானாயினும் அது கொள்ளப்படாது பொருள் விளங்காமையினைக் கூறி விலக்கியமையின்.

இதன்பொருள்: அடுக்கிய தோற்றம்—உவமையும் பொருளும நிறுத்தி அடுக்கிய தோற்றம்; விடுத்தல் பண்பு—சிறப்பினவாகக் கொள்ளப்படா, என்றவாறு.

"மதியத் தன்ன வாண்முகம் போலும்
பொதியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை"

என்றக்கான் மதியத்தன்ன வாண்முகத்தினைத் தாமரையென்றமையின அவை ஒன்று ஒன்றனோடு பொருந்தாவென்பது கருத்து.

"இலங்கு வளையன்ன நலங்கே ழாம்பற்
போதினன்ன தாதவிழ் கைதை"

என்றக்கால், ஒன்று ஒன்றமைந்து ஒருவண்ணத்ததாய உவமைக்கேற்பினும் ஒன்றற்கொன்று உவமையாய் நின்றது. நின்றுழி, மற்றும் அதனோடு உவமங் கொள்ளப்படாது, இது வரையறையுடைமையின் விலக்கப்பட்டது. மற்று,

"ஈர்ந்து நிலந்தோய் விரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சி"

(பத்து-சிறுபாண்-19.)

என்பதனுள்ளும் அடுக்கியதோற்ற மெனப்படாதோவெனின், படாதன்றே; யானைக்கைபோலுங் குறங்கு; குறங்கு போலும் வாழையென அடுக்கிச்சொல்லாது குறங்கினையுடையானென்று துணித்துக் கூறியபின்னர்க் குறங்கென மால்வரை ஒழுகிய வாழையென்றதனாலிதனென்பது. தோற்றமென்றதனான் உவமையும் பொருளுமாக நிறீஇ உவமவுருபு தோன்றக் கூறுங்கால் அடுக்கப்படுவதென்பது. (கூசு)

உவமை நிரனிறையாகவருமாறு.

312. *நிரனிறுத் தமைத்த நிரனிறை சுண்ணம்
வரைநிலை வைத்த மூன்றலங் கடையே.

இதுவும் எய்தாதன வரையறையுடைமையிற் கூறியவற்றோடு இனமாகலின் உவமத்திற்காவதொன்று துணர்த்துதல் துதலிற்று.

---

* இச்சூத்திரத்துக் கூறிய பொருள்கோள் நான்கின் இயல்புணர்த்தும் சொல்லதிகாரம், எச்சவியல் "அவற்றுள் நிரனிறைதானே" என்னுஞ் சூத்திரமுதல் ஐந்தானும் உணர்க.

இதன் பொருள்: நிரனிறுத்து அமைத்த நிரனிறை —உவமையையும் நிரலே நிறுத்துப் பொருளினையும் நிரலே நிறுத்து ஒப்புமைகூறின் அது நிரனிறையெனப்படும்; சுண்ணம் வரைநிலை வைத்த மூன்றலங்கடையே—சுண்ணத்தினை வரைந்த நிலைமையான்வந்த சுண்ணமும் அடிமறியும் மொழிமாற்று மென்னும் மூன்றுமல்லாத இடத்து, என்றவாறு.

சுண்ணத்தினை வரைந்த நிலைமையான் வந்தனவெனவே சுண்ணந்தவிர மூன்றுளவோவெனின் அதனை ஒருவரை விலக்க மூவரும் வந்திலரென்றாற்போலக் கொள்க. உதாரணம்:

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்."

என வரும்.

நிரனிறுத்தலென்னுது 'அமைத்த'வென்றதனான் நிரனிறையன்றி அமைத்துக் கொள்வதும் உண்டு; அது,

"களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றுந்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே"*

என வரும். பிறவும் அன்ன.

என்றார்க்கு, நிரனிறுத்தமைத்த நிரனிறை எனை வரை நிலைவைத்த மூன்றலங்கடையே எனினது சுணணத்தினை வரைந்தோதியது என்னையெனின், அவை மூன்றுஞ் சுண்ணம்போலச் சுண்ணஞ் செய்யப்படுதலின் அவ்வாற்றாற்

* இச்செய்யுள் முழுவதையும் 29-ஆம் பக்கத்திற் காண்க.

தொர்ந்துகிடப்ப வுவமையுங் கூறின் அது பொருள்விளக்கா தென்பது அறிவித்தற்கென்பது. என்னை? அடிமறியுள் ஓரடியுள் உவமங்கூறி ஓரடியுட் பொருள்வைத்தால் இனிது பொருள்கொள்ளாது அடிமறிக்குங் காலைப் பிறிதுபிறிதாக வுடைத்து. இனி ஓரடியுள் உவமங்கூறிப் பின்னர் எத்துணையுஞ் சென்று பொருள்கூறி மொழிமாற்றிக் கொள்ளவைப்பின் அதுவும் உவமத்தாற் பொருள் தோன்றுது. சுண்ணத்திற்கும் அஃதொக்கும்.

இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையுஞ், சொல்லதிகாரத்தினுள்ளுஞ், செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்றன சிலபொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல்செய்தாருமுளர். அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணங் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன்றாகியும வருந் தாங்காட்டிய இலக்கணத்திற் சிதையாவழியுமென்பது. என்னை?

> "நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது
> கூஉய்க் குழாஅ முடன்சொட்கு—மாய்படை
> பன்றி யனையர் பகைவேந்த ராங்கவர்
> சென்றெவன் செய்வர் செரு."

என்ற வழி, நாய்போலும் நட்புடையர் படையாளரென்பது விளையுவமம்; பன்றியனையர் பகைவேந்தரென்பது காய்க்குப் பகையாகிய பன்றிபோலவென்பது. வேற்

---

* இக்கூறுகின்றதனை "மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும், பான்மாறு படுதலும் பாகுபாடெய்" என்னுந் தண்டியலங்கார சூத்திரப்பொருளோடு ஒத்துநோக்குக.

றுவேந்தர் பகைவராதலால் அவ்வுவமை விலக்கரிது. அன்றுமாயினும் அஃதணியெனப்படாது ; உவமைதான் உயர்ந்த தின்மையின். அது குற்றமன்றேவெனின்,

"பேரூ ரட்ட கள்ளிற்
கோரிற் கோரிற் றேருமா னின்னே" (புறம்-300.)

என்பது குற்றமன்றுகலின் அதுவுங் குற்றமன்றெனப் படும். இனிப் பொன்மாலையும் பூமாலையும் போலப் பொலிவு செய்தலின் இதுவுங் குற்றமாகாது மேலதே குற்றமென் பது. அற்றன்று, இன்னசொல்லும் இன்னபொருளுமுடை யன பொன்மாலையெனவும் பூமாலையெனவும் வரையறுத்துக் கூறலன்மையின் அதனனும் அதனைக் குற்றமென்று இலக் கணத்தார் கூறின் நிரம்பாது. அல்லதூஉம் பொருளதிகா ரத்துட் பொருட்பகுதிகளெல்லாஞ் செய்யுட்கு அணிபாக லான் அவை பாடலுட் பயின்றவையெனப்பட்டன. என்ற தனன் அவையெல்லாந் தொகுத்து அணியெனக் கூறுது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில்

இனி இரண்டுபொருளெண்ணியவற்றை விளைப்படுக் குங்கால் ஒருங்கென்பதோர் சொற்பெய்தல் செய்யுட்கு அணியென்ப. பிறவும் இன்னோரன்ன பலவுஞ் செய்யுட் கணியாமென்பது அவர்கருத்து. ஒருங்கேயென்பதியன்றி மூன்றுதாழிசையுண் மூன்றுபொருள்கூறி எனவாங்கு என் பதொருசொல்லான் முடிந்தவழியும் எனவாங்கு என்பதோர் மொழி எனவென்பது ஓரலங்கார மெனல் வேண்டுமாக லான் அவ்வாறு வரையறுத்துக் கூறலமையா தென்பது பிறவும் அன்ன.

இனி அவற்றைப் பொருளுறுப்பென்பதல்லது அணி யென்பவாயிற் சாத்தனையுஞ் சாத்தனுணியப்பட்ட முடி புந் தொடியும் முதலாயவற்றையும் வேறு கண்டாற்போல அவ்வணியுஞ் செய்யுளின் வேறுகல் வேண்டுமென்பது.

இனிச் செய்யுட்கணிசெய்யும் பொருட்படை எல்லாங் கூறது சிலவே கூறி ஒழியின் அது குன்றக்கூறலாமென்பது. அவை யாவையெனின்,

"அகனமர் கேள்வ னகற்சி தீர்த்தற்கு
மகனெடு புகுந்த மகவுநிலை யெனுஅ
மறுக்குங் காலை மறுத்துரை மொழியாது
குறிப்புவேறு கொளீஇய குறிப்புநிலை யெனுஅப்
புலவிக் கண்ணும் போக்கின் கண்ணு
மழுதலு மழாஅதலு மூயங்கலு மென்றாங்
கிருவகைப் பட்ட மங்கல மெனுஅப்
புலம்புறு காலை யறிவொடு படாது
புலம்புகொள வந்த செய்வினை யெனுஅ
வின்னே ரன்ன பல்பொருட் பகுதி
நன்னெறிப் புலவர் நாட்டல்வகை யுடைய"

என்றோர் சூத்திரஞ் செய்யின் அவையும் அலங்காரமெனப் படுமென்பது. அவற்றுக்கு உதாரணம் :

"ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்" (அகம்-5.)

என்பது மகவுநிலை.

"ஓவச் செய்தியி னொன்றுநினைக் தொற்றி" (அகம்-5.)

என்பது, குறிப்புநிலை ; என்னை ? தலைமகன் போக்கினை உவக்குங் குறிப்பல்லாத குறிப்பாகலின் அஃதணியெனப் படும்.

"தம்மூச் செறுப்ப வழுதாள்" (குறள்-132-8.)

என்பது புலவியுளழுத மங்கலம்;

"பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
* * * *
மோயின ளுயிர்த்த காலை" (அகம்-5.)

என்பது போக்கின்கண் அழாத மங்கலநிலை;

"விளிநிலை கேளா டுயிரண் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்ததன் கூரெயிறு தோன்ற" (அகம்-5.)

என்பது அறிவொடு படாது புலம்பு கொளவந்த செய்வினை; என்னை? கேளாது கேட்டான்போல் வந்தமையின். அதுவும் அலங்காரமெனப்படுமென்று சூத்திரஞ் செய்து கொள்ளல் வேண்டுஞ் செய்யுட்கு அணி வேறு கூறினென்பது.

இனி, இங்ஙனங் கூறினவெல்லாங் குற்றமென்று கொள்ளப்படா; என்னை? வேறு காரணமுணரப்பெறாது பிறழ்ந்து இடையறவுபட்ட காலை இடர்ப்பட்டுச் செய்தன வாதலான் அவையும் அவ்வாற்றானமையு மென்பது.

இனி *ஆனந்தவுவமை யென்பனசில குற்றம் அகத்தியனார் செய்தாரெனக் கூறுபவாகலின் அவையிற்றை எவ்வாறு கோடுமெனின், அவைகள்தாம் அகத்துள்ளும் பிறசான்றோர் செய்யுளுள்ளும் வருதலிற் குற்றமாகா; அகத்தியனாற் செய்யப்பட்ட மூன்று தமிழினும் அடங்காமை வேறு ஆனந்த

---

* இங்ஙனமே நச்சினார்க்கினியரும் "நீயினன்ன ஒண்செங் காந்தள்" என்னும் மலைபடுகடாத்து அடியுரையிற் கூறுமாறு காண்க.

வோத்தென்பது ஒன்றுசெய்தாராயின் அகத்தியமூர் தொல் காப்பியமும் நூலாகவந்த சான்றோர் செய்யுங் குற்றம்வேறு படாவென்பது. அஃதேற், செய்யுட்கு இவை யணியென் பதூஉம் இவை குற்றமென்பதூஉம் மூன்றதிகாரத்துள்ளும் இவ்வாசிரியர் யாண்டுங் கூறாராவெனின், செய்யளியலில் முப்பத்தாறான்குறிப்புக்கூறி அவற்றதியைபு கல்லிசைப் புல வர் செய்யுளுறுப் பெனவும் அவை தொடர்ந்த தொடர்நிலை என்வகையாற் றொடர் நிலைச்செய்யுட்கு வனப்பெனவும் பகுத்தோதிய இலக்கணத்திற் பிறழ்ந்தவை எல்லாங் குற்ற மென்பதூஉம் கொள்ளவைத்தானென்பது. (உள)

உவமவியல் முற்றிற்று.

எட்டாவது

செய்யுளியல்

313. மாத்திரை யெழுத்திய லசைவகை யெனுஅ
யாத்த சீரே யடியாப் பெனுஅ
மரபே தூக்கே தொடைவகை யெனுஅ
நோக்கே பாவே யளவிய லெனுஅத்
திணையே கைகோள் கூற்றுவகை யெனுஅக்
கேட்போர் களனே காலவகை யெனுஅப்
பயனே மெய்ப்பா டெச்சவகை யெனுஅ
முன்னம் பொருளே துறைவகை யெனுஅ
மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையி
னுறு தலையிட்ட வந்நா லைந்து
மம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபே புலனே யிழைபெனுஅப்
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், செய்யுளியலென்னும் பெயர்த்து; செய்யுளிலக்கணம் உணர்த்தினமை யான் அப்பெயர்த்தாயிற்று. எனவே, ஒத்துறுப்புதலியதனுஞ் செய்யு ளிலக்கணமுணர்த்தலென்பது பெற்றும். மேற் பாயிரத்துள்,

'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளும்' (தொல்-பாயிரம்.)

ஆராய்வலென்று புகுந்தமையால், எழுத்தினுஞ் சொல்லினும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேண்டுவன விராய்க்கூறிப், பொருளதிகாரத்துள்ளும் இதுகாறும் பெரும்பான்மையும் வழக்கிற்கு வேண்டுவனவே கூறிவந்தான், அப்பொருள்பற்றிச் செய்யுள் கூறுமாதலின் இவ்வதிகாரத்துட் செய்யுளிலக்கணமெல்லாந் தொகுத்துக் கூறுகின்றது இவ்வோத்தென்பது. எனவே, முற்கூறிய எழுவகையோத்தும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் பொதுவென்பதூஉம் இது செய்யுட்கே உரித்தென்பதூஉம் பெற்றும். மற்றிதனை யாப்பதிகாரமென வேறே ரதிகாரமாக்கி உரைப்பாருமூளர்; அங்ஙனங் கூறின் வழக்கதிகார மெனவும் வேறுவேண்டுமென மறுக்க. அல்லதூஉம் எழுத்துஞ் சொல்லும் பொருளுமென *மூன்றற்கு மூன்றதிகாரமாக்கி அதிகார மொன்றற்கு ஒன்பதோத்தாகத் தந்திரஞ்செய்ததனோடு மாறுகொளாம் இதனை வேறதிகாரமென்பார்க்கென்பது. மற்று, †ஒத்து நுதலியதெல்லாம் நுதலுவதன்றே ஒத்தினுள்வைத்த சூத்திரம்; அதனான், இதன் மூதற்சூத்திரம் என்னுதலிற்றேவெனின், இவ்வோத்தினுளுணர்த்தப்படுகின்ற செய்யுட்குறுப்பாவன இவையெனவே, அவற்றது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: இக்கூறப்பட்ட முப்பத்துநான்கும் பெயரிசைப்புலவர் செய்யப்படுஞ் செய்யுட்கு உறுப்பாமென அவ்வாறு செய்தல் வன்மையாற் கூறினர் புலவர், என்றவாறு.

அப்பெயர், பெயர்; அம்முறை, முறை; அத்தொகை, தொகை. தொகை ஆறுதலையிட்ட அந்நாலைந்துமெனவும், ‡எட்டெனவும் இருவகையால் தோன்றக் கூறியது வேனையபோலாமல் எட்டுறுப்பும் ஒரோ செய்யுட்கு ஒரொவொன்றேயும் வருமென்பதறிவித்தற்கும் அவை தாம் அச்செய்யுள் பலதொடர்ந்தவழியே பெரும்பான்மையும் உறுப்பாமென்பதறிவித்தற்கும் என்க. எனவே, ஒழிந்த உறுப்பிருபத்தாறும் ஒன்றொன்றனை இன்றியமையாவென்பது பெற்றும்.

---

* ‘மூன்றும்’ என்பதும் பாடம்.

† ‘ஒத்து அதிகாரம்’ என்பதும் பாடம்.

‡ ‘எட்டெனவுங் கூறினர்’ என்பதும் பாடம்.

இனி *மாத்திரையென்பது, எழுத்திற்கோதிய மாத்திரைகளைச் செய்யுள் விராய்க்கிடக்கும் அளவையென்றவாறு. மாத்திரையது மாத்திரையினை ஈண்டு மாத்திரையென்றான். அது 'மாத்திரையளவும்' (தொல்-செய்-2) என்றதனாற் பெற்றாம். எழுத்தியல்வகையென்பது, மேற்கூறிய எழுத்துக்களை இயற்றிச்சொள்ளுங் கூறுபாடு. அசைவகையென்பது, அசைக்கூறுபாடு; அவை இயலசையும் உரியசையுமென இரண்டாம். யாத்தசிரென்பது, பொருள்பெறத் தொடர்ந்து நிற்குஞ் சிரென்றவாறு; எனவே, அசைபலதொடர்ந்து சீராங்கால் அவ்வசையுந் தத்தம்வகையாற் †பொருள்பெற நிற்றலும் அவ்வாறன்றிச் சீர் முழுதும் ஒரு சொல்லாங்கால் அவ்வசை பொருள்பெறாது நிற்றலும் அடங்கின. தேமா என்று அசை பொருள் வேறு பெற்றன; சாத்தன் எனப் பொருள் வேறு பெறாது நின்ற அசையாற் சீர்யாத்து நின்றது. பொருள்பெறநின்ற எழுத்தும் அசையுஞ் சிறப்புடையவென்பாருமுளர். அற்றன்று, பொருள்படநிற்பன எழுத்து யாண்டுமின்மையானும் பொருள்பெறநின்ற அசையானுகிய தேமாவென்னுஞ் சீரும் அவ்வசைசசிறப்பினாற் சிறப்புடைச் சீரெனப்படாமையானுஞ் சாத்தனெனத் தன்பொருளொடு தான் துணிந்து நின்றவழி அதுவுஞ் சிறப்புடைச் சீரெனவும்படுமாதலானுமென்பது. அடியென்பது, அச்சீர் இரண்டும் பலவுந் தொடர்ந்தாவதோர் உறுப்பு. யாப்பென்பது, அவ்வடிதோறும் பொருள்பெறச் செய்வதோர் செய்கை. மரபென்பது, காலமுமிடனும்பற்றி வழக்குத் திரிந்தக்காலுந் திரிந்தவற்றுக்கேற்ப வழுப்படாமைச் செய்வதோர் முறைமை. மற்றுச் சொல்லோத்தினுட் கூறிய மரபிற்கும் மரபியலுள் உரைப்பனவற்றுக்கும் இதற்கும் வேற்றுமையென்னையெனின் இது செய்யுட்கே உரித்து, அவை வழக்கிற்குஞ் செய்யுட்கும் பொதுவென்பது. ‡ அல்லதூஉம்

---

* "'மாத்திரை' என்றது எழுத்திற் குரித்தாக எழுத்ததிகாரத்தோதிய மாத்திரைகள் தத்தம் அளவின் இறந்து பாவின் ஒசை வேறுபாடுகளையுணர்த்தி விராஅநிற்கும் நிலையை" என்னும் நச்சினார்க்கினியருரை இதனில் வேறுபடுகின்றது.

† 'பொருள்பெற்று' என்பதும் பாடம்.

‡ இவ்வடி மூன் அச்சுப்பிரதியிலில்லை; வேறோர் எட்டுப் பிரதியிற் கண்டது.

அவற்றது வேறுபாடு முன்னர் அகத்திணையியலுள் கூறிவந்தாம். அக்கென்பது, பாக்களைத் துணித்து நிறுத்தல். *தொடைவகையென்பது, தொடைப்பகுதிபலவுமென்றவாறு ; அவை வரையறையுடையனவும் வரையறையில்லனவுமென இருவகைய. இப்பகுதியெல்லாம் அடியாற் கோடலின் அடிக்கும் இஃதொக்கும். நோக்கென்பது, மாத்திரைமுத லாகிய உறுப்புக்களைக் கேட்டோர்க்கு நோக்குப்படச்செய்தல். †பா என் பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ்சொல்லுந் தெரி மற் பாடமோதுங்கால், அவன்சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்னசெய்யுளென்று உணர்தற்கேதுவாகிப் பரந்துபட்டுச்செல்வ தோர் ஓசை. ‡அளவியலென்பது, அப்பா வரையறை. திணையென்பது, அகம்புறமென்று அறியச்செய்தல். கைகோளென்பது, அவ்வத்திணை யொழுக்கவிகற்பம் அறியச்செய்தல் ; அது களவுங் கற்பும். கூற்று வகையென்பது, அச்செய்யுள் கேட்டாரை இது சொல்லுகின்றார் இன்னரென உணர்வித்தல். இவை யென்பது பாடமாயின், எண்ணிய மூன்றினையுந் தொகுத்தவாறே பிறிதில்லை. கேட்போரென்பது இன் னார்க்குச் சொல்லுகின்றதிதுவெனத் தெரித்தல். $களனென்பது, முல்லை குறிஞ்சி முதலாயினவும் இரவுக்குறி பகற்குறி முதலாயினவும் உணரச்செய்தல். மற்றுத் தன்மை முன்னிலை படர்க்கையுமாம். §கால வகையென்பது, சிறுபொழுது பெரும்பொழுதென்னுங் காலப்பகுதி

---

* "'தொடைவகை' என்றது எழுத்துச் சொற்பொருள்களை எதிரெதிர் நிறீஇத் தொடுக்கின்ற தொடைப்பகுதிகளை" என்னும் நச்சிணார்க்கினியருரையில் தொடையினிலக்கணம் பெறப்படுதலின் அஃதீண்டு ஒத்துநோக்கற் பாலதாம்.

† 'நோக்குதல்-பயன்கோடல்' என்பது நச்சிணார்க்கினியர் உரை.

‡ 'அளவியல் என்பது அடிவரையறை' என்பது நச்சிணார்க்கினியர் உரை.

$ "'களன்' என்றது இயற்கைப்புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் முதலியன உணரச்செய்தலை" என்பர் நச்சிணார்க்கினியர்.

§ 'காலமென்பது முக்காலத்தும் திணைநிகழ்ச்சிக்கண்ணே பொருள் நிகழ்ச்சி யுணரக்கூறலை' என்பது நச்சிணார்க்கினியருரை.

முதலாயின. பயனென்பது, சொல்லியபொருளாற் பிறிதொன்று பயப்பச்செய்தல். மெய்ப்பாடென்பது சொற்கேட்டோர்க்குப் பொருள் கண்கூடாதல். எச்சவகையென்பது, சொல்லப்படாத மொழிகளைக் குறித்துக்கொள்ளச்செய்தல்; அது கூற்றினுங் குறிப்பினும் வருதலின் வகையென்றான். *முன்னமென்பது, உயர்ந்தோரும் இழிந்தோரும் ஒத்தோருந் தத்தம்வகையான் ஒப்பச் சொல்லுதற்குக் கருத்துப்படச் செய்தல். பொருளென்பது, புலவன் தான் தோற்றிக்கொண்டு செப்வதோர் பொருண்மை. துறைவகையென்பது, முதலுங்கருவும் முறை பிறழவந்தாலும் இஃது இதன்பாற் படுமென்று ஒருதுறைப்படுத்தற் கேதுவாகியதோர் கருவி அச்செய்யுட் குளதாகச்செய்தல்; அவையும் புலவாதலின் வகையென்றானென்பது. †மாட்டென்பது, பல்வேறு பொருட்பரப்பிற்றாயினும் அன்றாயினும் நின்றதனெடு வந்ததனை ஒரு தொடர்கொளீஇ முடித்துக்கொள்ளச்செய்தல். வண்ணமென்பது, ஒருபாவின்கண் நிகழும் ஓசைவிகற்பம். எஞ்ஞெண்பதெண்ணிடைச் சொல். யாப்பியல்வகையின் ஆறுதலையிட்ட அந்நாலைந்துமென்பது, யாப்பிலக்கணப்பகுதியாகிய இருபத்தாறு மென்றவாறு. இவை யாப்பிற்கு இன்றியமையாத இலக்கணப்பகுதியவென விதந்தோதலே, இனிக் கூறும் உறுப்பெட்டும் இன்றியமையாமை இல்லையென்றவாறு. 'அம்மை யழகு தொன்மை தோலே-விருந்தே யியைபே புலனே யிழை பெனுமப்-பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ'யென்பது இக்கூறப்பட்ட எண்வகைவனப்பொடு முன்னர்க்கூறிய இருபத்தாறுந் தொகுப்ப முப்பத்துநான் குறுப்பா மென்றவாறு.

மற்றிவற்றை வனப்பென்று கூறற்குக் காரணம் அவற்றைக் கூறும்வழிச் சொல்லுதும். நல்லிசைப்புலவர் செய்யுளென்பது, இவ் வுறுப்பினைத்துங் குறையாமற் செய்யப்படுவன நல்லிசைப்புலவர் செய்யுஞ் செய்யுளெனப்படு மென்றவாறு. நல்லிசைப்புலவர் செய்யுள்

---

* 'முன்னமென்பது கூறுவாரையும் கூறக்கேட்டோரையும் குறிப்பான் எல்லாரும் கருதும்படிசெய்தல்' என்பது நச்சினார்க்கினியருரை.

† 'மாட்டென்பது அகன்றும் அணுகியும் கிடந்த பொருள்களைக் கொண்டுவந்து தொடராகக் கூட்டிமுடித்தல்' என்பது நச்சினார்க்கினியர் உரை.

னவே, எழுவிலத்தெழுந்த செய்யுளுள்ளும் *அவ்வரையறையுடைய வற்றுக்கே இவ்விலக்கணமென்பதூஉந் திணையேகைகோளெனச்கூறும் உறுப்பு முதலாயினவெல்லாம் ஏனை அறுவகைச்செய்யுட்கும் உறுப்பாகாவென்பதூஉம் அவையொழிந்த உறுப்பினுள் ஏற்பன பெறுமாயினும் ஆண்டு வரையறையின்மையிற் கூறுனென்பதூஉம் அவை செய்தாரெல்லாம் அவற்றானே நல்லிசைப்புலவரெனப் படாரென்பதூஉம் பெற்றாம். இனி நூலும் உரையுஞ்செய்தார் நல்லிசையுடையரென்பது அவற்றை நூலினுன் உரையினுனென இதற்கு இடையின்றிவைத்தமையிற் பெறுதுமென்பது. 'வல்லிதிற் கூறி வகுத்துரைத்தன' ரென்பது,இங்ஙனங் கூறிய நல்லாசிரியரிலக்கணமே கூறியொழிந்தார்,எல்லாவற்றான் எல்லாமமையச்செய்யுஞ் சுவடுடையராகி அவ்வத்துறைபோயினர் தாமும் என்றவாறு. எனவே, இவ்வுறுப்பமையச்செய்தனவே செய்யுளெனப் படுவனவென்று சிறப்பித்தவாறு. மற்றுக் கூறியெனவும் உரைத்தனரெனவும் இருசாற் சொல்லியதென்னையெனின், அச்செய்யுளானேகூறி அவற்றுப் பொருளுரைத்தா ரென்றவாறு. என்றார்க்குச் செய்யுட்குற்றம் ஈண்டோதாரோவெனின்,ஓதல்வேண்டுமே? இவ்விலக்கத்துப் பிறழ்ந்துங் குன்றியும் வருவனவெல்லாம் வழுவென்பதறியவத்தானல்லனே, ஆசிரியனென்பது. மற்றுச் செய்யுளுறுப்பு ஈண்டோதினுர் செய்யுள் யாண்டோதுப வெனின், அறியாது கடாயினுய், உறுப்பென்பன உறுப்புடைப்பொருளின் வேறெனப்படா ; பொருள் எனப்படுவன உறுப்பே,அவற்றதீட்டத்திணை முதலென வழங்குபவாகலான் உறுப்பினையே சொல்லியொழிந்தார் ; முதற்பொருளதிலக்கணமென உறுப்பிலக்கணத்திணையே வேறுபடுத்துக் கூறலாவதின்மையானும் உறுப்புரைப்பவே அவ்வுறுப்புடையபொருள் வழக்கியலாற் பெறலாமாகலானுமென்பது.

மற்று யாத்தசிரேயடியாப்பென்றதென்னை ? †தூஉயென்பதோர் உறுப்புப் பிறர் வேண்டுபவாலெனின், இவருஞ் சீரதுதொழிலே வேண்டுப, தளைத்தலிற் றூஉயாதலானும் வேறுபொரு

* 'அடிவரையறை' என்பதும் பாடம்.

† யாப்பருங்கலநூலாரும், யாப்பருங்கலக் காரிகையாரும் 'தூஉ' யென்பதோர் உறுப்புவேண்டினர்; இவர் பின்றைக் காலத்தினர்.

னென வேண்டாரென்பது ; என்னூர்க்கு அசையின்றிச் சீருமில்லை, சீரின்றி அடியுமில்லையாம் பிறவெனின், அற்றன்று, உறுப்பும் உறுப் புடைச்செய்யுளும்போல அவை கொள்ளப்படுந் தலையென வேறொரு ன்மையான் கொள்ளான் ; என்னை ? அது குறளடியென வேறுறுப் பாயினமையின் என்பது ; தலையென்றதனைக் கோடுமேல் அதனைக் குறளடி யெனலாகாதென்பது. அல்லதூஉம், ஈரசைகூடி ஒருசீரா யினவாறுபோல இருசீர்கூடியவழி அவ்விரண்டனையும் ஒன்றென்று கோடல்வேண்டும் ; கொள்ளவே, நாற்சீரடியினை இடைதுணித்துச் சொல்லுவதன்றி நான்குபகுதியானெய்திக் கண்டம்படச் சொல்லு மாறில்லையென்க. யாத்தசீரென்றதனானே அசைதொறுந் துணித் துச் சொல்லப்படா சீரென்பதூஉம் அச்சீரான் அடியானவழிச் சீரியைந்திற்றது சீரெனவே படுமென்றதனாற் சீரெல்லாந் துணித்துச் சொல்லப்படு மென்பதூஉங் கூறினன் இவ்வாசிரியனென்பது. அற் றன்றியும், அவ்வாறு தலைகொள்வார் சீரா னடிவகுப்பதூஉங் குற்ற மென மறுக்க. மற்றுத் தொடை கூறியதென்னை ? அடியிரண்டு தொடுத்தற் றொழிலல்லதின்மையினெனின், அற்றன்று, தொடுத்தற் றொழின்மாத்திரையானே தொடையென்றனல்லன், அவ்வடிக்கண் ணின்ற எழுத்துஞ் சொல்லும் பிறபொருளாகலான் அவற்றானே தொடைகொண்டமையின் வேறுறுப்பென்றனென்பது. அஃதேற், சீருஞ் சீரும் இயைந்தவழி அவையிடமாகவின்ற அசையால் தலை கொள்ளாமோவெனின், கோடுமன்றே, அதனை அடியென்னுமாயின் என முற்கூறியவாறே கூறி மறுக்க. அல்லதூஉம் அவ்விரண் டசையுங் கூடிச் சீராமன்றோவெனின் என்பது. மற்று நாற்சீரடியுள் இருசீ ரியைந்தவழிக் குறளடி யென்னுமாகலின் அதனைத் தலையென் னுமோவெனின், அங்ஙனங்கொள்ளின் இருசீரடிக்கட் டலைவேண்டா தாகும் ; ஆகவே, ஒருவழிக்கொண்டு ஒருவழிக்கொள்ளாமை மயங்கக் கூறலென்னுங் குற்றமாமென்பது. அல்லதூஉம், அங்ஙனமன்றி வருமாயின் அடிக்கெல்லாம் பொதுவகையால் தலையுறுப்பெனப்படாது எழுத்தும் அசையும்போல யாண்டும் வருவனவெல்லாம் உறுப்பெனப் படுவனவென்றற்கு "இணைநான்முடிபு தன்னொன் மேற்றே" என்ப தனாற் காக்கைபாடினியார் ஓதிய தலையிலக்கணம் ஈண்டுங் கோட

வேண்டுமெனின், அஃதே கருத்தாயின் இவர்க்கும் அவர் மூடிவே பற்றித் தலைதலையடல்வேண்டும். அல்லதூஉம், அவர்க்கு இலையான காக்கைபாடினியார் தலைகொண்டிலரென்பது இதனுற் பெற்றும். தலைவேண்டினுர் பிற்காலத்தோ ராசிரியரென்பது.* என்னை ?

"வடக்குந் தெற்குங் குணச்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
†நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்"

எனக் கூறி வடவேங்கடந்தென்குமரியெனப் பனம்பாரனுர் கூறியவாற் றுனே எல்லைகொண்டார் காக்கைபாடினியார். ஒழிந்த காக்கை பாடினியத்து,

"வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்"

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் குமரியாறுள்ள காலத்தா ரல்லரென்பதூஉங், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன்றென்பதூஉம் பெற்றும். பெறவே, அவர் இவரோடு ஒருசாலைமாணாக்கரல்லரென்பது எல்லார்க்கும் ாரல்வேண்டுமென்பது.‡

* 'தொல்காப்பியரோடு ஒருசாலை மாணாக்கராகிய காக்கைபாடினி யாரும் உறுப்பென்னுர். பின்தோன்றிய காக்கைபாடினியார் முதலி யோர் கொள்வர். அது பொருந்தாது' என்பது நச்சினர்க்கினியருரை.

† 'நூலதின் முறைமை' என்பதும் பாடம்.

‡ "பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்றுர் சிலப்பதிகாரத்துப். ஆசிரியர் தொல் காப்பியனுரும் அவரோடு ஒரு காலத்தினரான பனம்பாரனுர், பெருங் காக்கை பாடினியார் முதலியோருந் தெற்கின் கண்ணதான 'குமரிநாடு' கடல் கொள்ளப்படாமுன் இருந்தவராதலின் அவரெல்லாம் தெற்கே கடலெல்லை கூறுராயினுர். கடலுள் அமிழ்ந்த பெருந்தமிழ்த் தேய மான 'குமரிநாட்டை' ஆங்கிலத்திற் பௌதிக நூல்வல்லார் இலெமூ ரியா என வழங்குவர். வடமொழியிற் 'சதபத பிராமணத்'தும் குமரி நாடு கடல்கொண்டமை சொல்லப்பட்டது.

மற்றிது முறையாவதென்னையெனின், மாத்திரை எழுத்தினது குணமாதலானும் அசையுஞ் சீரும் அடியுந்தூக்கும் டாவும் வண்ணங்களுமென்று இவ்வோரன்னவெல்லாம் மாத்திரை நிமித்தமாகத் தோன்றுவனவாதலானும் அது முன்வைத்தான். அச்குணத்திற்குரிய எழுத்தினை அதன்பின் வைத்தான். அவ்வெழுத்தான் அசையும், அசையாற் சிருஞ், சீரான் அடியும், அவ்வடிபெற்றவழி அதனை ஆக்குமாறறியக்கூறும் யாட்பும் அவ்வடியகத்தன சொல்லும் பொருளுமாகலான் அதன்பின் மரபும் வைத்தான். அவ்வடியிரண்டினைத் தொடுக்குங்கால் அவற்றை ஓரடியென ஒரு தொடர்ப்பட்டாமைத் துணிப்பது தூக்காகலான் அதனைத் தொடைச்குமுன் வைத்தான். அவ்வடியிரண்டு தொடுத்தவழியுங் கொள்ளப்படும் நோக்கென்பதறிவித்தற்கு அதனைத் தொடைப்பின் வைத்தான். அவ்வடி இரண்டும்பலவுந் தொடர்ந்தவழி முழுவதுங் கிடப்பது பாவாகலான் அதனை அதன்பின் வைத்தான். அப்டாத் துணிந்த துணிவினை எண்ணுதலான் அளவினை அதன்பின் வைத்தான். திணையுந் திணைக்குறிப்பாகிய ஏழுசலாறும் அவ்வொழுச்சத்தவாகிய கூற்றும் அதன்பின் வைத்தான். சேட்டோருங் சேட்கும் இடனும் அதுபோலப் புலப்படாத சாலமும் இவற்றுற் படனும் படனது பரத்துவரும் மெய்ப்பாடும் இவற்றினெல்லாம் ஒழிந்துன்ற எச்சமும் அவ்வெச்சத்தோடுங் கூட்டியுணரப்படும் முன்னமும் அம்முறையான் அதன்பின் வைத்தான். *அவற்றிற்செல்லாம் பொதுவாகிய பொருளை அதன்பின் வைத்தான். அப்பொருட் பிறழ்ச்சியை ஒருதுறைப்படுக்குந் துறையை அதன்பின் வைத்தான். மேல் எச்சமும் மாட்டு மின்றியும் வருவதுமென்பவாகலான் மாட்டினைத் துறைவகையின்பின் வைத்தான். அவற்றுள் எச்சத்தினை முன் ஓதினான் அது செய்யுட்கணின்றி வருஞ் சிறபான்மையாதலானென்பது. வண்ணம் பாவினது பகுதியுறுப்பாதலான் அதனை அவற்றுப்பின் வைத்தான். வனப்பினை எல்லாவற்றுக்கும் பின்வைத்தான், அவற்றை ஒன்றொன்றாக நோக்குங்கால் அவ்வெட்டுமின்றியுஞ் செய்யுள் செய்பவாகலி னென்பது.

* பொருட்டொடர்புக்கு இன்றியமையா இவ்வடி முன் அச்சுப் பிரதியில் விடுபட்டது.

மற்றிவ்வுறுப்பினையெல்லாம் ஆசிரியன்குறியென்றுமோ உலகுகுறி யென்றுமோவெனின், அவ்விருதிறத்தானும் எற்பனவறிந்து கொள்ளப்படுமென்றெழுதிக. இவற்றை உயிருடையதனுறுப்புப் போலக் கொளின் உயிர் வேறுகூறல்வேண்டுவதாம், அவ்வாறு கூறுமையிற் கலவையுறுப்புப்போலக் கொள்க. (க)

314. அவற்றுண்,
மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனர் புலவர்.

இது நிறுத்தமுறையானே முதற்கணின்ற மாத்திரையும் எழுத்தியலு முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: மாத்திரைகள் பலதொடர்ந்து செய்யுட்கண் விராய் நிற்கும் அளவையும் எழுத்துக்களியற்றப்பட்டு எழுத்ததிகாரத்தின் வேறுபட்ட தொகைபுமென இரண்டினமும் மேல் எழுத்தோத்தினுட் கூறப்படாதனவல்ல; அவையே: அவற்றை ஈண்டு வேண்டுமாற்றுற் கொள்க என்பான் மேற்கிளந்தவகையிற் பிறழாமற்கொள்க,

அன்னவெனவே, இம்மாத்திரையளவும் எழுத்தியல் வகையும் வேறென்பதூஉம் வேறுயினும் ஆண்டுக் கூறியவற்றொடு வேறுபடாமைக்கொள்க வென்பதூஉம் உரைத்தாளும். எனவே, எல்லா வழியும் வரையாது எய்தற்பாலவாகிய மாத்திரைகள் ஒரோவழி வரையப்படுமாயினும் அவை முற்கூறுத வேறுசில மாத்திரையுமல்ல, *ஈண்டுப் பதினேந்து எழுத்தென்றுகூறிப் பயங்கோடுமாயினும் ஆண்டை முப்பத்துமூன்றெழுத்தின் வேறுபடப் பிறந்தன சில வெழுத்துமல்லவென்பான் மேற்கிளந்தன்னவென்றுனென்பது. மாத்திரைபென்றெழியாது மாத்திரையளவென்றதனுன் அம்மாத்திரையை விராய்ச்செய்யும் அளவை ஈண்டுக் கூறினுனென்பது கருத்து. மற்று, எழுத்தியல் வகையினை மாட்டேற்றுன் முப்பத்துமூன்றெனக்கொள்வ

* முன் அச்சுப்பிரதியிலுள்ள 'ஈண்டு உரைப்ப தினேந்து' எனும் பாடம் ஈண்டைக்குப் பொருளியை பின்று.

தன்றிப் பதினேந்தென்று கொள்ளுமாறென்னையெனின், எழுத் தோத்திணுட் குறிலுநெடிலும் உயிருமெய்யும் இனமூன்றுஞ் சார் பெழுத்து மூன்றுமெனப் பத்தும் இல்புவகையான் ஆண்டுப் படுத் தோதினுன், உயிர்மெய்யும் உயிரளபெடையுந் தத்தம்வகையாற் கூடி மாறும் ஐகாரம் ஒளகாரம் போலிவகையாற் கூடுமாறும் யாழ்நூலகத்து ஒற்றிசை நீளுமாறும் ஆண்டுத் தோற்றுவாய் செய்தான், செய்யவே, அவை ஈண்டுக்கூறும் எழுத்தியல்வகையோடொக்குமென்று உய்த்து உணர்ந்துகொள்ளவைத்தானென்பது. இவற்றோடு மகரக்குறுக்கமும் கூட்டிப் பதினேழெழுத்து என்பாருமுளர். அதனற் பயனென்னை யெனின் பாட்டுடைத்தலைவன் கேட்டுக்குக் காரணமாமென்பர். மற்று உயிர்மெய்த் தொடக்கத்து ஐந்தனையும் மேல்-எழுத்தென்றிலுகை லான் ஈண்டு எழுத்தியல்வகையுள் எழுத்தாக்கி அடக்குமாறென்னை யெனின் ஈண்டு அன்னவெனவே, ஆண்டு இரண்டெழுத்தின்கூட்ட மெனவும் மொழியெனவும் போலியெனவுங் கூறினுமினும் அவற்றை எழுத்தியல்வகையெனப் பெயர்கொடுப்பவே ஆண்டின்ற வகை யானே ஈண்டு எழுத்தெனப்படு மென்பதாயிற்று. இதன் கருத்து, இயலென்றதனுன் இயற்றிக்கொள்ளும் வகையான் எழுத்து இனைய தென்றுணும். வகையென்பதனுன் முப்பத்துமூன்றினைக் குறிலும் நெடிலுமென்றற் றொடக்கத்துப் பெயர்வேறுபாட்டாற் பத்துவகைப் பட இயற்றுதலுங் கூட்டவகையா னிரண்டும் போலிவகையா னிரண் டும் யாழ்நூல்வேண்டும் வகையாலொன்றுமென ஐந்துவகையா னியற்று தலுமென இருவகையுங்கொள்ளப்படும். அல்லதூஉஞ் செய்யுட்கள் அவ் வெழுத்துவகையான் இன்னேசையவாக விராய்ச்செய்தலுங்கொள்க. மற்றளபெடையை மேல் மொழியென்றுன் ஈண்டெழுத்தென்றுனுகை லின் * இதனை ஒரெழுத்தென்று கோடுமோ இரண்டெழுத்தென்று கோடுமோவெனின்,

'நெட்டெழுத் திம்ப ரொத்த குற்றெழுத்து'

(தொல்-எழுத்-மொழி-8.)

* 'இதனை ஒரெழுத்தென்றும் ஓரிரண்டெழுத்தன்றுங் கோடு மோவெனின்' என்பதும் பாடம்.

என்று கூறியவாற்றான் ஆண்டிரண்டெழுத்தெனக் கொள்ளக் கிடந்தாயினும் முன்னர்ப்போக்கி,

'அளபெடை யசைநிலை யாகலு முரித்து'

(தொல்-செய்-17.)

என்றவழி எழுத்து நிலைமையும் எய்துவிக்குமாசலான் எதிரது நோக்கி ஈண்டு ஒரெழுத்தென்று கோடுமென்பது. இனி அவற்றுட் குறிலும் நெடிலுங் குற்றுகரமும் அசைச்குறுப்பாம். மற்று,

'ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி' (தொல்-செய்-3.)

என்பதனான் ஒற்றும் அசைச்குறுப்பாகாவோவெனின், அச்சூத்திரத்தானன்றே அவை குறிலும் நெடிலும் அடுத்துவந்தும் வேறுபடாது நோன்னையாத்லெய்தியது நோக்கி அவை அசைக்குற்ப்பாகாவென்றதென்க. மற்றிடன்று கிரையாதலே விலக்காவோவெனின், அன்னதோர் விதியுண்டாயினன்றே இவை இடைபுகுந்து விலச்கவேண்டுவதென மறுக்க. நெடிலும் அளபெடையிரண்டும் *உயிரும் உயிர்மெய்யும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஐகாரச்குறுக்கமும் ஔகாரச்குறுக்கமுமெனப் பத்துந் தொடைக்கு உறுப்பாம். குறிலும் நெடிலும் அளபெடையிரண்டும் இனம் மூன்றும் ஆய்தமும் வண்ணத்திற்கு உறுப்பாம். இங்ஙனமே வேறுபடவந்த பயனோக்கி எழுத்தினை இயற்றிச்கோடலின் எழுத்தியல் வகையென்றுனென்பது. அஃதேல், ஒற்றுங் குற்றுகரமும் ஈண்டோதியதென்னையெனின், ஒற்றளபெடையான் அசைநிலையுஞ் சீர்நிலையுங்கோடலின் ஈண்டு ஒற்றுக் கூறினன். குற்றுகரமும் உயிர்மாயினும் ஒற்றுப்போல எழுத்தெண்ணி அடிவகுக்குங்கால் எண்ணப்படாதென்றற்குக் கூறினனென்பது. அஃதேல்,

† "ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்"

என்பவாகலின் அதனை ஈண்டுத் தழாஅற்கவெனின்,

---

* 'உயிரும் மெய்யும்' என்பதும் பாடம்.

† 'மெய்யீறெல்லாம் புள்ளியொடுநிலையல்' எனவும் 'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' எனவும் ஆசிரியர் எழுத்ததிகாரத் தோதிய சூத்திரங்களும் ஈண்டு ஒத்து நோக்கற்பாலனவாம்.

அவ்வாறும் அமையுமென்பது. அற்றன்று, *இதனை மேற் புள்ளி பெறுமென்றிலனுதலான் புள்ளிபெறுமென்றற்கும் 'ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்' என்றுனென்பது.

இனி ஒருசாரார் மாத்திரையென்றது †எழுத்தல்லோசையாகிய குறிப்பிசை கொண்டானென்பர். அக்குறிப்பிசை உறுப்பாகவருஞ் சான்றோர்செய்யுள் யாண்டுங் காணுமையின் நாம் அது வேண்டாமாயி னும். சிறுபான்மை ஒரோவழிவரினும் அத்துணையானே அஃது இன்றியமையாத உறுப்போடு எண்ணப்படாதென மறுக்க. உறுப் பன்று என்றார்க்குக் குறிப்பிசை யாண்டுப்பெறுதுமெனின்,

'அசையுஞ் சீரு மிசையோடு சேர்த்தி' (தொல்-செய்-11.) என்புழிப் பெறுதுமென்பது. இனி எழுத்தியல் வகையும் மேற் கிளந்தன்ன வென்பதனையும் எழுத்திலக்கணத்திற் றிரியாமற் செய் யுள் செய்கவென்றவாறென்பவெனின், அஃதே கருத்தாயிற் சொல் லோத்தினுள்ளும் எழுத்திலக்கணமாகிய மயக்கமும் கிலையும் முத லாகிய இலக்கணந் திரியாமற் சொல்லாராய்தல் வேண்டுமெனவும் இவ்வதிகாரத்துள்ளும் எழுத்தியல்வகையுஞ் சொல்லியல்வகையும் மேற்கிளந்தன்னவெனவுஞ் சூத்திரஞ் செய்வான்மன் ஆசிரியனென மறுக்க. மற்று, மாத்திரையளவைக்கு இலக்கணங் கூறுமினெனின் அதுவும் 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' என்புழி வல்லோரா றெனப் பாவொடுபொருந்தக்கொளக் கூறுதுமென்பது. அல்ல தூஉம் மாத்திரையினை அளவைப்பட கிறுத்துக என்பதோரிலக்கண மாதலின் இங்ஙனம் வரையறையுடைத்தாக நோக்கிச் செய்யுளுறுப் பென்றுணருமென்பது. மற்று மாத்திரையினை அளவைப்பட கிறுத் தாக்காற் படுங்குற்றம் என்னையெனின், அற்றன்று ; வரகு வரகு வரகு வரகு என்னும் அடியினைப் பலுட்டுப் பலுட்டுப் பலுட்டுப் பலுட்டு என கிறுத்தின் அது மாத்திரைவகையாற் சிதைவு பட்டதாம். "அம்ம

---

* 'இதனை மேற்புள்ளிபெறும் என்றிலாதான்' என்பதும் பாடம்.

† 'எடுத்த லோசை' என்னும் முன் அச்சுப்பிரதியிலுள்ள பாடம். பின்னர் கின்ற 'குறிப்போசை' என்பதனோடியையாமையின் 'எழுத்தல் லோசை' என்னும் பாடமே பொருட்பொருத்தம் உடைத்தாம் என்க.

வாழி கேளாய் தோழீ'' என்றுற் பின்னர்கின்ற இருச்சுரும மெடிலா தல் இன்னுதென்றுந் தோழியெனப் பின்னர்கின்ற சீரைக் குறுக்கின வழி இன்னுசைத்தாமென்றும் அவ்வாறே செய்யுள்செய்ப. பிற வுங் கொச்சகக் கலியுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளும் இவ்வாறே கண்டு கொள்க. (உ)

315. குறிலே நெடிலே குறிலிணை குறினெடி
லொற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரு நிரையு மென்றிசிற் பெயரே.

இது நிறுத்த முறையானே அசைவகையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: குறிலும் நெடிலுந் தனித்துவந்தும் குறில் இரண்டு இணைந்துவந்தும் குறிற்பின்னர் நெடில் இணைந்துவந்தும் அவை ஒற்றடுத்தும் முறையானே நிரனிறை வகையானே நேரசையும் நிரையசையுமென்றும், என்றவாறு.

'குறிலே நெடிலே ஒற்றொடு வருதலொடு' எனவும் 'குறிலிணை குறினெடில் ஒற்றொடு வருதலொடு' எனவும் வேறு நிரனிறீஇப் பொருளுரைக்க. மெய்ப்படநாடியென்பது பொருள்பெற ஆராய்ந்து; எனவே, இப்பெயர் ஆட்சிகாரணமே யன்றிக் குணங்காரணமாகலு முடைய வென்றவாறு. *உயிரிலெழுத்தல்லாதன தனித்துநிற்றலின் இயலசையென்னும் பொருள்பட நேரசை யென்றுயிற்று.†

அவை இரண்டு நிரைதலின் இணையசையென்னும் பொருள் பட நிரையசையென்றுயிற்று. அல்லதூஉம் மெய்ப்படநாடி என்ற தனுன் அவ்வாய்பாடே அவற்றுக்குக் காரணமென்பதூஉங்கொள்க. உடம்பொடு புணர்த்த லென்பதனுல் உதாரணமுங் கூறிய வாறு. அவை நேர்நிரையெனச் சொல்லிக் கண்டுகொள்க. அ ஆ

---

* முன் அச்சுப்பிரதியிலுள்ள 'உயிரெழுத்தல்லாதன' என்னும் பாடம் பொருட் பொருத்தமின்று.

†'இரண்டெழுத் தாகாது ஒரெழுத்தா னதலின் நேரியதன் றே ? அதனுன் நேரிய அசை நேரசை யென்றுயிற்று' என்பது நச்சி னார்க்கினியர் உரை.

எனவும், அல் ஆல் எனவும், பல பலா எனவும், புகர் புகார் எனவும், பிறவும் இவ்வாறு வருவனவெல்லாங் கொள்க. மற்றுக் குறினெடி லென எழுத்தாக ஓதியதென்னை ? சொல்லாயவழி அசையாகாவோ வெனின், அவை ஒற்றொடுவருத லென்றதனானே, சொல்லாதலும் நேர்ந்தானுகவே அவை இருவாற்றானும் அசையாமென்பது சீரின் றன்மைக்கண் வந்தது. "உள்ளார்தோழி" என நேரசை நான் கும் வந்தன. 'வரிவரால்கலாகலின்' என நிரையசை நான்கும் வந்தன. (கூ)

316. இருவகை யுகரமோ டியைந்தவை வரினே நேர்பு நிரைபு மாகு மென்பு.

இது சொல்லாத அசைக்கூறுஞ் சொல்லுகின்றது.

இதன் பொருள் : இருவகையுகர மென்பன, குற்றுகர முற்று கரங்கள். அவற்றோடு மேற்கூறிய நேரசையும் நிரையசையும் ஒரு சொல்விழுக்காடுபட இயைந்துவரின் நிறுத்தமுறையானே *நேரசை யோடொன்றிவந்த குற்றுகரமும் அதனோடு ஒன்றிவந்த முற்றுகரமும் நேர்பசையெனப்படும் ; நிரையசையோடொன்றிவந்த குற்றுகரமும் அதனோடொன்றிவந்த முற்றுகரமும் நிரைபசை எனப்படும், என்ற வாறு.

இருவகை உகரமும இருபிளவுபடாது ஒன் றுகிவரல்வேண்டும் அங்ஙனம் அசையாங்காலென்றற்கு. இருவகை உகரமும் ஒருகாலத்து ஒன்றன்பின் வாரா, வேறு வேறு வருமென் பது. இருவகை உகரமும் இறுதிக்கண் நின்று அசையாக்குமென்ப தென்னை பெறுமாறெனின், குற்றுகரம் ஈற்றுக்கணல்லது வாராமை யானும்,

'நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்' (தொல்-செய்-9.)

என்பதனானும் பெறுது மென்பது. அல்லதூஉம் நுங்தையென் னும் முதற்கட் குற்றுகரம் இறுதிக்கண் நேரசையல்லது நிரை

* இப்பகுதி முன் அச்சுப் பிரதியில் இல்லை. வேறோர் எட்டுப் பிரதியிற் கண்டமையின் ஈண்டெடுத்துச் சேர்க்கப்பட்டது.

யசை அடித்துவருதலின்மையானும் அது பெறுதுமென்பது. 'முன்னர் நேரசை நான்கும் நிரையசை நான்குமென எண்வகையான் அசை கூறி அவற்றுப்பின் இருவகையுகரமும் வருமெனவே, அவை குற்றுகரத்தோடு எட்டும் முற்றுகரத்தோடு எட்டுமாகப் பதினாறு உதாரணப் பகுதியவாய்ச் சென்றதேனும், அவற்றுட் குற்றெழுத்துப் பின்வரும் உகரம் நேர்பசையாகாதென்பது 'குறிலிணை யுகர மல்வழி யான' (தொல்-செய்-5) என்புழிச் சொல்லுதும். ஒழிந்தன குற்றுகர நேர்பசை மூன்றும் நிரைபசை நான்குமாயின. உதாரணம்: வண்டு நாகு, காம்பு; வரகு, குரங்கு, மலாடு, மலாட்டு: இவை குற்றுகரம் அடித்து நேர்பும் நிரைபும் வந்தவாறு.

இனி முற்றுகரம் இரண்டசைப்பின்னும் வருங்காற் குறிலொற்றின்பின்னும் நெடிற்பின்னுமென நேரசைக்கு இரண்டல்லதாகாது. நிரையசைக்கண்ணுங் குறிலிணைப்பின்னுங் குறினெடிற் பின்னுமல்லதாகாது. உதாரணம்: மின்னு நாணு எனவும், உருமு குலாவு எனவும் வரும். வாழ்வு, தாழ்வு, என நெடிலொற்றின் பின்னும் முற்றுகரம் வந்ததாலெனின் அவை ஆகாவென்பதூஉம் இக்காட்டிய நான்குமே ஆவனவென்பதூஉம் முன்னர் 'நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்' (தொல்-செய்-9) என்புழிச் சொல்லுதும்.

இனி, ஒருசாரார் நேர்பசை நிரைபசையென்பன வேண்டாவென்ப. என்னை? குற்றுகர முற்றுகரங்களை வேறுக்கி அலகிட அமையாதே? ஞாயிறு எனக் குற்றுகரங் குறிலிணையாய் அலகுபெறுமாறெனக் குற்றங்கூறுப. முற்றுகரமுந் தேமா வென நேரசையாயிற்றுப்போல மின்னு என்றவழியும் வேறலகுபெற அமையுமென்பது. அற்றன்று, குற்றுகரத்தினைக் குற்றெழுத்தென்ப வேறு குற்றுகரம் வேண்டாதாரும், என்றூர்க்கு வேண்டினானையுங் குற்றங்கூறுவரவர்; என்னை? குற்றியலுகரம் அரைமாத்திரைத்தாகலின் ஒற்றுப்போல ஓரசையுள் ஒடுக்கி அலகிடப்படும். அற்றன்றேற் குற்றெழுத்தாக்கி அலகுவைக்கவே அமையு மென்பதாம் அவர் கருத்து. அதற்கு விடை, குற்றுகரம் ஒற்றுப்போன்று ஒடுங்கிநில்லாது. என்னை? தன்னான் வரப்பட்ட ஒற்றுந் தானுமாகி அரைமாத்திரைத்தாகியும் ஒடுங்கி இசையாது அகன்று இசைக்கும், அதனால் ஒற்றென்றலுமாகாது;

மின்னும் ஒருமாத்திரைத் தாகாமையிற் குற்றெழுத்தெனலுமாகாது ; மற்று அதனுன் அதனை ஒற்றென அடக்கார், குற்றெழுத்தென ஏற்று அலகுகொள்ளார், இனி அதனைச் செயற்பாலதோர் அசையாக்குத லென்பது நோக்கி நேர்பசை நிரைபசையென வேண்டிஞனென்பது. அவை வண்டு தொண்டி என ஒசையொவ்வாமை செவிகருவியாக உணர்ந்துகொள்க. அஃதேதன், ஞாயிறு வலியது என்றவழிக் குறிலிணையுகரமெனக் குற்றெழுத்தாக்குவது எற்றுக்கெனின், அளபெடையை ஒசையிற்சிதையாது நிலப்படையுள் அலகுசிதைத்தாற் போலக் குற்றுகரத்தைக் குற்றெழுத்துப்போல அலகுபெறுமென்பது இலக்கணமில்லதோர் வழுவமைதி தானுயதனை இலக்கணமாக ஓர்த்துக்கொண்டு இலக்கணவகையாற் குற்றுகரமாதலே விலக்குவாரும் உளரோவென மறுக்க. அஃதாக, முற்றுகரம் ஒரு மாத்திரையாதலிற் குற்றெழுத்தாக்கி நேரும் நிரையுமாகப் பெறுவோவெனிற் பெறு. என்னை ? வண்டு வண்டு வண்டு வண்டு என நின்றவழிப் பிறந்த அகவலோசை மின்னு மின்னு மின்னு மின்னு என நின்றவழியும் பெறப்படுமாதலின், அதுவும் அதுபட்டதே பட்டு அவ்வசையே பெறுமென்றுனென்பது. அல்லதூஉம் வெண்பாட்டுற்றடி வண்டு எனக் குற்றுகரவீற்றுன் இற்றவழிக் கொல்லு என முற்றுகரவீற்றுன் இறுமாயினும் ஒத்தவோசையாம். இனி உகரவீறல்லாத தேமாவென்பதனுன் முடியாவென்பர். அதனலுங் குற்றுகரத்தின் செய்கை முற்றுகரத்திற்கும் வேண்டி நேர்பு நிரைபுகொண்டானென்பது. அற்றன்றியுங் குற்றுகரஞ் சார்ந்து தோன்றுமாறுபோல இம்முற்றுகரமும் வருமொழி காரணமாக நிலைமொழிசார்ந்து தோன்றுதலொப்புமை நோக்கியும் அதனைக் குற்றுகரம்போல ஓரசைக்கு உறுப்பாம் என்றுனென்பது.

'எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப' (தொல்-செய்-43.)

என்பதனுன் அவை அவ்வாறுதல் அறிந்துகொள்க. இவையும் ஆட்சியுங் குணமுங் காரணமாகப் பெற்ற பெயர். ஆட்சி,

'கிரையவ ணிற்பி னேரு நேர்பும்' (தொல்-செய்-75.)

எனவும்,

'நேரீற் றியற்சீர் கிரையு கிரைபும்' (தொல்-செய்-74.)

எனவும் வருமென்பது. இருவகையுகரமும் அடைந்துவந்த இயலைசை யிரண்டும் நேர்பும் கிரைபுமென்றலும் நேரும் கிரையுமென்றலும் பொருண்மையவே யாகலான் அவற்றது பெயரான் இவற்றையும் பெயர்சொடுத்தான் ஆகுபெயராக்கி யென்பது. எனவே, நேர்கிரை யின்பின் உகரம் வருதலின் நேர்புகிரைபெனக் குணங்காரணமாகவும் பெற்றும். (ச)

317. குற்றிலிணை யுகர மல்வழி யான.

இஃதெய்திய தொருமருங்கு மறுத்ததூஉம் எய்தாத தெய்துவித் ததூஉமாம் ; வழுவமைத்த தெனினும் அமையும். தனிக்குறிலாஞ் சிய நேரசைப்பின்னும் இருவகையுகரம்வந்து *நேர்பசையாதலே விலக் கினமையின் எய்தியதொருமருங்கு மறுத்ததாம். குற்றுகரங் குற்றெ ழுத்துப் போன்று அலகுபெறு மென்றமையின் எய்தாதெய்துவித்து

இதன்பொருள்: இருவகை உகரமும் இருகுறிலாகி இணைந்தவழி நேர்பசையாகாது, என்றவாறு.

கரு †முழு என முற்றுகரம் நேர்பசையாகாது கிரையசையா யிற்று. என்னுர்க்குக், குற்றுகரம் விலக்கியதென்னை ? குறிலிணைந்த வழிக் குற்றுகரமாகாதென்பது,

'நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே' (தொல்-எழு-மொழி-3.)

என்றதனுற் பெறுதும் பிறவெனின், அதுநோக்கிக் கூறினனல்லன் ; எற்புழிக்கோட லென்பதனுன், ஞாயிறு வலியது என ஓரசைப்பின்னர் வந்தவழி இது குற்றுகரமேயாமன்றே ஆண்டும் அது குறிலிணை யுகர

* 'நேர்பசையாதல் விலக்கின்மையின்' என்பதும் பாடம்.

† 'மழு' என்பதும் பாடம்.

மெனவே படுமென்பது. பட்டக்கண்ணும் குற்றுகரமேயென வழூ உமைத்தவாறு. குறிலிணையெனக் குற்றுகரத்தையும் உடம்பொடு புணர்த்தலென்பதனாற் குற்றெழுத்தென வேண்டினனென்பது பெற் றும். இங்ஙனங் குற்றுகரங் குறிலிணையாகியும் குற்றுகரமாகி எழுத் தளவெஞ்சினும் அமையுமெனவே *நுங்தையென்னும் முதற்கட் குற்றுகரமுங் குற்றெழுத்துப்போன்று அலகுபெறும் எழுத்தள வெஞ்சினுமென்பது கொள்க. †இஃது ஒன்றின முடித்த றன்னின முடித்தலென்னு முத்திவகை. (இ)

318. இயலசை முதலிரண் டேனைய வுரியசை.

இது மேற்கூறிய அசைநான்கினையும் இருகூறுசெய்து அவற்றுக் கெய்தாத தெய்துவிக்கின்றது. இனி, ஆட்சியுங்குணனும் காரண மாக வேறு வேறு பெயர்கொடுக்கின்றது இச்சூத்திரமெனவும் அமை யும்.

இதன்பொருள்: முதற்கணின்ற நேரும் நிரையும் இயற்றிக் கொள்ளப்படாது; இயற்கைவகையான் னின்றுங்குன்று தளைப்பன வாம். ஒழிந்தன விரண்டும் இயற்றிக்கொள்ளப்பட்டு இயலசையா தற்கு உரியவாம், என்றவாறு.

எனவே, எய்தாததெய்துவித்தான். இயலசை உரியசையென்று ஆளுமாகலானும் இயற்கையால் இயறலின் இயலசையெனவும் அவை செய்யுந்தொழில் செய்தற்கு உரியவாகலான் உரியசையெனவும் ஆட்சி யுங் குணனுங் காரணமாகப் பெயரெய்துவித்ததாயிற்று.‡

அங்ஙனம் இயற்றிக்கொள்ளுமாறு சீர்கூறும்வழிக் கூறுதும். (ஈ)

319. தனிக்குறின்முதலசை மொழிசிதைத்தாகாது.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்த னுதலிற்று; உகரி மயிரி என னின்றவழிக் குறிலிணையேயன்றி மூன்றெழுத்து னிறைந்த

---

* 'குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கின்—ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்' என்னூர் எழுத்ததிகாரத்தினும்.

† இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில்

‡ நச்சினார்க்கினியர் இதனையே பொருளாக உரைக்கின்றார்.

மையின் நிரையசையாகா, தனித்தனி நேரசையாகலும் மூன்று குற் றெழுத்தினுள் இரண்டு குறிலிணையாக ஒன்று நேரசையாவதும் முதற் கண்ணே கொல்லோவெனவும் எய்திய தனைவிலக்கி *விட்டிசைத்த வழித் தனிக்குறில் நேரசையாமென்பது எய்துவித்தமையின்.

இதன்பொருள்: தனிக்குறிலாஞ்சிய நேரசை முதற்கண் மொழி சிதைத்துச் செய்யப்படாது, என்றவாறு.

இங்ஙனம் முதற்கண் வரையறுப்பவே இடையும் இறுதியும் †மேலோதியவாற்றான் நேரசையாமென்பது. மொழிசிதைத்தலென் பது விட்டிசையாத மொழியை விட்டிசைத்து மொழிதல்; எனவே, விட்டிசைத்தமொழியாயின் அது மொழிசிதைத்ததெனப்படாது இயல் பாமென்பது பெற்றாம். கரு மழு என முதற்கண் மொழிசிதைத்து நேரசையாகாமையுங் குறிலிணையெனப்பட்டு நிரையசையாயினவாறுங் கண்டுகொள்க.

"அ ஆ விழந்தான்" (நாலடி-1-9.)

எனவும்,

"அ உ மறியா வறிவி லிடைமகனே
நொ அலைய னின்னுட்டை நீ."‡

எனவும் இவை விட்டிசைத்தலின் மொழிசிதையாது தனிக்குறில் முதற்கண் நேரசையாயினவாறும் அவை குறினெடிலுங் குறிலிணையு மெனப்பட்டு நிரையசையாகாதவாறுங் கண்டுகொள்க. இனி விட்டு இசைக்கும் இடந்தான் மூன்றென்பது உரையிற்கொள்க. அவை "அஆ விழந்தான்" எனக் குறிப்பின்கண்வருதலும் "அஉ மறியா"

---

* "விட்டிசைத்தல்லான் முதற்கட் டனிக்குறில் நேரசையென், றொட்டப்படாது" என்று பின்னோராண அழகசாகாரும் கூறினர்.

† 'மேலோதிய வாற்றானே யசையாமென்பது' எனவும் பாட மூண்டு.

‡"வெறிகமழ் தண்புறவின் வீங்கி யுகளு
மறிமுலை யுண்ணுமை வேண்டிப்-பறிமுன்கை
அ உ மறியா வறிவி லிடைமகனே
நொ அலைய னின்னுட்டை நீ."

னைச் சுட்டின்கண் வருதலும் ''நொ அலேயல்'' என ஏவற்கண்வரு தலுமென விட்டிசைக்குமிடந்தான் மூன்றெனப்பட்டது.* முதலசை யென்பது நேரசையென்பாருமுளர். அது விதந்தோதல் வேண்டா, தனிக்குறிலான் அசையாமெனப்பட்டது நேரசையேயென்பது பெறு மாகலான். மற்றும் 'இஉக்குறுக்கம்' (நேமிநாதம்-5) என்றவழி விட் டிசைத்து மொழிசிதையாதாகலான் அவ்விரண்டெழுத்தும் கூட்டி நேர்பசையென்னுமோவெனின் அவை பிளவுபடாற்றலின் இயைந் திலவென மறுக்க. (எ)

320. ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.

இஃது எய்தாததெய்துவித்து ஐயம் அறுத்தது.

இதன்பொருள்: மேற்கூறிய எழுத்திலக்கணவகையானும் ஈண் டோதும் அசைக்குறுப்பாமாற்றானும் எல்லாங் குற்றியலிகரம் ஒற்றெ ழுத்தியற்றேயாம், என்றவாறு.†

தேற்றேகாரம் அடுத்துக் கூறியவாறு. எனவே எழுத்தோத்தி னுண், § 'மெய்யீ றெல்லாம் புள்ளியொடு சிலேயல்'

(தொல்-எழுத்-புண-2.)

---

* இனி, ஐந்துபொருளில் விட்டிசைக்கு மென்பர் நச்சினார்க்கினி யர்; என்னை ? 'விட்டிசைத்து நேரசையாங்கால் ஏவல், குறிப்பு, தற் சுட்டு, வினா, சுட்டு என ஐந்து பொருளின்கண் விட்டிசைத்து நேரசை யாம்' என்றாராகலின்.

† 'குற்றியலிகரமாவது ஒற்றியல்பினையும் உடைத்து ; அதுவே யன்றி எழுத்தியல்பினையும் உடைத்து' என்பது நச்சினார்க்கினியர் உரை. இது பொருந்தாமை பேராசிரியர் காட்டுமாற்றானறிக.

§ 'மெய்யினியற்கை புள்ளியொடு சிலேயல்' என்பது முன் அச் சுப்பிரதியில் உள்ள பாடம். 'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' என்னுஞ் சூத்திரத்தை அடுத்து அதற்குமுன் உள்ளது 'மெய்யீறெல் லாம் புள்ளியொடு சிலேயல்' என்னுஞ் சூத்திரமேயாம். 'மெய்யினி யற்கை புள்ளியொடு சிலேயல்' என்னுஞ் சூத்திரம் 'நூன்மரபு' என் னும் வேறு இயலில் உள்ளதாகலின் அது 'குற்றியலுகரமும்' என் னுஞ் சூத்திரப் பொருளுக்குப் பயன்படுவதின்றும். ஆகலின், 'மெய் யீறெல்லாம்' என்னுஞ் சூத்திரத்தை ஈண்டெடுத்துக் காட்டுதலே உரையாசிரியர் கருத்தென்க.

எனக் கூறிக்,

'குற்றிய லுகரமு மற்றென மொழிப' (தொல்-எழுத்-புணை-3.)

ஈக் குற்றுகரத்திற்குப் புள்ளிபெறுதலுங் கூறினன்; அது போலக் குற்றிகரமும் புள்ளிபெற்றுநிற்றல் உடைத்தெனவும் ஈண்டுக் குற்றுகரம் நேர்பும் நிரைபுமாகியவாறுபோலத் தானும் ஓர் அசை யாகுங்கொல்லென்று ஐயுறுவது வேண்டா, ஒற்றுநின்றுங்கு ன்று இடலசை உரியசைகளைச் சார்ந்துவருதலும் ஒற்றுப்போல எழுத் தெண்ணப்படாமையுமுடைத்தது என்றவாறுமாயிற்று. எனவே, ஒற் றெழுத்தியற்றாயினுங் குற்றுகரம் இகரச்குறுச்சம்போலாது செய்யுட்கு உபகாரப்பட்டதோர் அசைவேறுபாடு தோன்ற நிற்குமென்றவாறு யிற்று. மற்று எண்ணப்படாதென்றது ஈண்டுக் கூறல்வேண்டுமே?

'உயிரி லெழுத்து மெண்ணப் படாஅ' (தொல்-செய்-44.)

என்புழிப் பெறுதுமாலெனின் அது குற்றுகரத்திற்கே கூறிய தென்பது ஆண்டுச் சொல்லுதும்.

உதாரணம்:

'மியாயிக மோமதி யிகுஞ்சின் னென்னும்.'

(தொல்-சொல்-இடைச்-26.)

எனவும்,

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை" (குறள்-26-4.)

எனவும் இவை இடலசைசார்ந்து ஒற்றியற்றாகிக் குற்றிகரம் வந்தவாறு. நாகியாது வரகியாது எனக் குற்றிகரம் உரியசைசார்ந்து ஒற்றியற்றாகிவந்தவாறு. அது னையும் னைபுஞ்சார்ந்து ஒற்றியற்றா மாறு இல்லேடோர்லும். இவற்றையெல்லாம் 'ஒற்றெழுத்தியற்றே' யென்பதனாற் புள்ளியிட்டெழுதுக. இது சொல்லியகாரணங், குற்று கரம் அனபாத்திரைத்தாகியும் ஒற்றியற்றாகாது நேர்பும் நிரைபும் ஆகியவாறுபோல அதற்கு இனமாகிய குற்றிகரமும் அனமாத்திரைத் தாகி வேறோரசையாகுங்கொல்லென்று ஐயுறுமற் காத்தவாறு. மற்று ஆய்தத்தினையும் ஒற்றியற்றென்னுமோவெனின் அஃது எழுத்தோத் தினுள் 'எழுத்தோரன்ன' (தொல்-எழுத்-நூன்-2) என்பதனாற் பெற்றுமென்பது. மற்று,

"முந்தியாய் பெய்த வினைகழலும்"

எனவும்,

"கினைக்கியான் சொன்ன தின்ன தின்று"

எனவும் இவை ஒற்றியற்றுகாது எழுத்தியற்றுயினவென்று காட்டுவாருமுளர். முந்தியாய் என்பது இகரவீறுமாமாகலின் அது காட்ட நிரம்பாது. அல்லதூஉம் அவை சான்றோர் செய்யுளல்லவென மறுக்க. இனி, ஒற்றும் எழுத்துமென உம்மைபோடெண்ணலு மாகாது; இவ்வோத்தினுள் 'உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ' (தொல்-செய்-44.) என ஒற்றினையும் எழுத்தென்றுணுகலின்.* (அ)

321. முற்றியலுகரமு மொழிசிதைத்துக்கொளா அ நிற்ற லின்றே யீற்றடி மருங்கினு மே.

இதுவும் ஐயம் அறுத்தது; இருவகையுகரமொடு நேரும் நிரையும் இயையின் அவை நேர்பும் நிரைபுமாமென்றன், அவற்றுண் முற்றுகரம் ஈறுகி நிற்குஞ் சொல் உலகத்து அரியவாயினவாதலிற் புணர்ச்சிக்கண் வந்த உகரமே ஈண்டு நேர்பும் நிரைபுமாவனவெனவும் புணர்ச்சிக்கண்ணும் நிலைமொழித்தொழிலாகிய உகரமும் நிலைமொழியீற்றுகெட்டு நின்ற உகரமுமே கொள்ளப்படுவன வெனவும் வரு

---

* நச்சினார்க்கினியர் 'ஒற்றெழுத்திபற்றே குற்றியலிகரம்' என்னும் இச்சூத்திரத்தைக் 'குற்றியலிகரம் ஒற்றியற்று எழுத்தியற்று' எனப் பிரித்துக் கூட்டிக் 'குற்றியலிகரமாவது ஒற்றியல்பினை யுடைத்து, அதுவேயன்றி எழுத்தியல்பினையும் உடைத்து' என்று பொருளுரைப்பர். எனினும், பேராசிரியருரையே ஆசிரியர் கருத்தறிந்த உரையாதல் சூத்திரத்துட் சொற்கிடக்கை முறையை உற்றுநோக்குவார்க்கு விளங்கும்.

ஈண்டுப் பேராசிரியர் 'ஒற்றினையும் எழுத்தென்றுணுகலின்' என்றுரைத்ததனை நச்சினார்க்கினியர் 'ஒற்றினையும் எழுத்தென்று ஓரோரிடத்துக் கூறினுரேனும், ஈண்டு ஒற்று எழுத்து எனக் கூறலின் ஒற்றல்லாவெழுத்தையுணர்த்திற்று' என வலிந்துரைகூறி மறுப்பர்.

மொழித்தொழிலாகிய ஒற்று நிலைமொழியாகிய நேர்புணரைபிற்கு உறும் பாவன கண்டு வருமொழியுகரம் ஈண்டும் அதுபோல அவற்றிற்குறும் பாங்கொல்லென்று ஐயுற்றானே ஐயுறற்கவெனவும் கூறினமையின்.

இதன்பொருள் : முற்றியலுகரம் மொழிசிதைத்துக்கொளாஅ—இருவகையுகரமு மியைந்தவை வருங்கால் வருமொழியைச் சிதைத்துப் பிரித்து அவற்றினின்று வாங்கிக் கொடுக்கப்படா ; நிற்றலின்றே மீற்றடி மருங்கினும்—அங்ஙனம் வாங்கிக்கொடுக்கப்படாவாயின், நேரசைநிரையசைப்பின்னர் முற்றுகரம் ஈறுகி வருஞ்சொல்லும். உலகத்தரியவாயின் முற்றுசரத்தால் நேர்பும் நிரைபும் ஆமாறென்னை யென்றார்க்கு அடியிறுதிக்கணல்லது முற்றுகரம் புணர்ச்சிவகையான் இடைநில்லாதன வாயின கண்டா யென்பதுணர்த்தியவாறு.

இன்றென ஒருமைகூறினமையின் எடுத்தோதிய முற்றுகரமே கொண்டு இலேசினுற் றழீஇய குற்றுகரங் கொள்ளற்க. மற்றிதனை இலேசினுற் கொண்டதென்னையெனின் நுந்தை யென்னும் ஒரு மொழிக்கணன்றி வாராமையின் அதன் சிறுவரவு நோக்கி உம்மை யாற் கொண்டானென்பது. முற்றுகரம் மொழிசிதைத்துக்கொளா வெனவே ஒற்றூர்ந்துவரினுந் தனித்துவரினும் உடன்விலக்குண்ணு மென்பது. நாணுடையரிவை என்றவழி நாணென்னும் நேரசைப் பின்னர் உடையரிவையெனத் தனித்துவந்த உகரம் நேர்பசையாகாது. வார்முரசு என்றவழி வாரென்னும் நேரசைப்பின்னர் முரசென வகரம் ஊர்ந்துவந்த உகரமும் நேர்பசையாகாது. வற்றுறுசெய்தி எனவும் பரன்முரம்பு எனவும் வந்தவழி வற்றெனவும் பரலெனவும் நின்ற நேரசை நிரையசைப்பின்னர் உறுசெய்தியெனவும் முரம்பென வும் வந்த உகரங்களும் நேர்பசை நிரைபசையாகா. நின்னுந்தை நுந்தை எனக் குற்றுகரம் வந்தவழியும் நேர்பசை நிரைபசையாகா வென்றவாறு. "நாணுத் தலையாக வைகி" (அகம்-29) என்றவழி ணகாரவீறு புணர்ச்சிவகையாற்பெற்ற உகரம் நிலைமொழித்தொழி லாகலான் அது நாகு என்னுங் குற்றுகரம்போல் ஒற்றுமைப்பட்டு நேர்பசையாயிற்று. "விழவுத்தலைக்கொண்ட" (அகம்-17) என்றக் காலும் அவ்வாறே ஆகாரவீறும் உகாரம்பெற்று நிரைபசையாயிற்று.

*"மின்னுமிளிர்ந்தன்னசெஞ்சுடர்" (அகம்-157) எனவும், "முழவு முகம்புலரா" (அகம்-205) எனவும் வருவனவும் அவை. நாணுத்தலை என்றாற்போல வரும் ஒற்றுட்பேறு முன்னர்ச்சொல்லுதும். நீர்ச்சு னிழற்கு என்ற உருபும் னிலைமொழித்தொழிலாதலான் அவையும் நேர்பசைநிரைபசையாமென்பது இதனாற் பெற்றும். நிற்றலின்றென ஒருமைகூறி முற்றுகரமே கொண்டமையிற் குற்றுகரமாயின் இடையும் இறுதியும் நின்று நேர்பும் நிரைபுமாம் என்றவாறும். அவை ஆட்டுத் தாள் சேற்றுக்கால் எனவும் "எட்டோற் கிடந்தானென் னேறு" எனவும் இடையும் இறுதியுங் குற்றுகரம் நேர்டசையாயிற்று. 'களிற் றுத்தாள்" எனவும் "வேலாண் முகத்த களிறு" (திருக்குறள், 50-10) எனவும் இடையும் இறுதியுங் குற்றுகரம் நிரைபசை யாயினவாறு. மருங்கினுமென்ற உம்மையான் அடியீற்றேயன்றி மொழியீற்றும் அவற்றிறுதி கெடநின்ற மொழிக்கண் இடைநின்ற உகரம் இறுதியாகி உரியசையாகுவனவும் உளவென்பதுகொள்க. அவை மேவுசீ ரெனவுங் கோலுகட லெனவும் உலவுகடலெனவும் விரவுகொடியெனவுங் கலனளவு நலனளவு எனவுஞ் "சுரும்புலவு கறுந்தொடையலள்" எனவும் வரும். இவை ஈற்றுநின்ற மகரங் கெட்டு உகரவீறாயின. இவற்றுள் நிரைபசை யுகரங்களை †ஆகாரவீற் றுப்புணர்ச்சி யுகர மென்னுமோவெனின், என்னுமன்றே; வருமொழி யொற்று மிகாமையினென்பது. உலவுக்கடல் விரவுத்தலையெனின் அவ்வாறே யமையுமென்பது. ‡மருங்கென்றதனான் ஈற்றடிக்கண் ணும் இறுதிக்கண்ணே முற்றுகரம் வ்லக்குண்டதெனக்கொள்க. என் னார்க்குப் "பூனைமலர்த் தாரகலம் புல்லு" எனவுங் "கண்ணரக் காணக் கதவு" (முத்தொள்ளாயிரம்) எனவும் வருமாலெனின் அவை மரூஉ வழக்கென்க. (க)

---

* 'மின்னுநிமிர்ந்தன்ன' என்பதும் பாடம்.

† 'குறியத னிறுதிச் சினைகெட வுகர-மறிய வருதல் செய்யுளு ளுரித்தே'—தொல்-எழுத்து-உயிர்-32.

‡ நச்சினார்க்கினியர் ஈற்றடிக்கண் இறுதியினும் முற்றுகரம் வரும் என்று உரைகூறித் திருக்குறளினின்றும் வேறு நூல்களினின் றும் பல உதாரணங்கள் காட்டுவர்.

328. குற்றிய லுகரமு முற்றிய லுகரமு மொற்றெடுந் தோன்றி நிற்கவும் பெறுமே.

இஃது எய்தாதது எய்துவித்தது; இவலசைகளை 'ஒற்றெடு வருதலொடு மெய்ப்பட நாடி' (தொல்-செப்-3) என்றான், உரிய சைக்கு அது கூறுதான் ஈண்டுக் கூறுகின்றமையின்.

இதன் பொருள்: மேற்கூறிவருகின்ற குற்றுகரமுற்றுகரங்கள் ஒற்றெடு நிற்கவும் பெறும் அவ்வொற்றுத் தோன்றிய ஒற்றுயின், என்றவாறு.

எனவே, அவை நிலைமொழி ஒற்றுடையவாயின் நேர்பும் நிரைபு மாகா. வருமொழி வல்லெழுத்துமிகினே யாவதென்றவாறு. அஃ தென்னை பெறுமாறெனின்,

'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி'
(தொல்-எழுத்-குற்றிய-4.)

என்றதனான் முன்னர் நிலைமொழித் தொழிலாகிய முற்றுகரம் வருமெனக்கூறிய அதிகாரத்தானே ஒற்றுத்தோன்றினென்று மகலா னும் பெறுதும்; நிலைமொழியுகரம்பெற்று வருமொழி ஒற்றெய்துவது கண்டாகலானென்பது.

உதாரணம்: "சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன் வேல்" எனவும், "நாணுத்தளையாக வைகி" (அகம்-29) எனவும், "நெருப்புச் சினந்தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை" (புறம்-125) எனவும், "கனவுக்கொனீகண்டது" (கலி-90) எனவும் இவை இருவகையுகரமும் ஒற்றடுத் துரியசையாயினவாறு. உம்மை எதிர் மறையாகலான் ஒற்றின்றிவருதலே பெரும்பான்மை. இங்ஙனம் வரு மொழியொற்றுமிகின் அவைகொண்டு நேர்பும் நிரைபுமாமெனவே உண்ணும் எனவும் நடக்கும் எனவும் நிலைமொழியொற்று கின்றவழித் தேமாவும் புளிமாவுமாவதல்லது நேர்பசையும் நிரைபசையுமாகாதென் பதாம். விக்குள் கடவுள் என்பனவும் அவை. (50)

**323. அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே.**

இது மேற்கூறப்பட்டனவற்றுக்கும் இனிவருஞ் சீர்க்குமெல்லாம் புறனடை.

இதன் பொருள்: அசைகளையுஞ் சீர்களையும் ஓசையொடு சேர்த்தி வேறுபடுத்து உணர்த்துவித்தலும் அச்செய்யுளிலக்கணத் துறைபோயினோரது நெறி, என்றவாறு.

மேன் மாத்திரை யென்பதோர் உறுப்புரைத்தான் அதனான் அசைசீர்களது ஓசையை அளந்து கூறுபடுத்து ஓசையுமுணர்த்துக. எழுத்தியல்வகைக்கும்

"குருத்துக் குறைத்துக் கொணர்ந்து நமது
கருப்புச் செறுப்புப் பரப்பு"

எனின் வெண்பாவீற்றடி இன்னோசைத்தன்றும்; 'கருப்புக் கொழுந்து கவர்ந்து' என முடிக்கின் இன்னோசைத்தாய் வெறுத் திசையின்றுமென்பது. "நிலமிசை நீடுவாழ் வார்" (குறள்-1-3) இதனுள் வாழ்வார் என்னும் மொழியை வகுத்து, வாரென நேரசைச் சீராக்கி வகுப்பவே அசையினை இசையொடுசேர்த்திற்றும். இனி நீடுகொடி என்பதனை மாவருவாய் என்று அசையுஞ்சீரும் இசையிற் சேர்த்துகவென்பாருமுளர். *இவற்றைப் பிறநூலார் வகையுளி யென்ப.

இச்சூத்திரத்து வகுத்தனருணர்த்த லென்றமையின் இனி வெண்பாவினுள் வெண்சீரொன்றி வந்தவழியும் வேற்றுத்தளைவிரவும்

* இங்ஙனங் கூறுவர் அழகசாகரர்;

"அருமேனைக்கு நீரா ரசைசீ ரடிக்கட்
பொருமேனைக்கா தோசையே நோக்கி—மருணீக்கிக்
கூம்பவுங் கூம்பா தலரவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு"

என்னும் ஒரு பழம்பாட்டை 'வகையுளி'யின் இலக்கணத்திற்குத் துணைகாரர் தமதுரையில் எடுத்துக் காட்டினர்.

இடனுடைய அவையும் இசையொடு சேர்த்தி வேறுபாடுணர்த்துக. 'மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய்' என்பது பன்னிரண்டெழுத்தடி ; 'மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய்' என்பது பதின்மூன்றெழுத்தடி ; 'மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய் மாவருவாய்' என்பது பதினான்கெழுத்தடி ; இவை மூன்றும்,

'அளவுஞ் சிந்தும் வெள்ளைச்குரிய' (தொல்-செய்-58.)

என வெண்பாவிற்கு ஓதிய அளவடியேயாயினும் இக்காட்டிய அலகிடுகையாற் கலித்தளைதட்டுத் துள்ளலோசையும் பிறக்கும். 'மாசேர்வாய் மாசேர்வாய் பாதிரி பாதிரி' எனவும், 'மாசேர்வாய் பாதிரி பாதிரி காருருமு' எனவும், 'மாசேர்வாய் பாதிரி காருருமு காருருமு' எனவும், மூன்காட்டிய மூன்றனையுமே இவ்வாறு அலகிட்டு ஓசை யூட்டக் கலித்தளை தட்டாது வெண்பாவடியேயாம். இவ்விருகூறும் ஓசையொடு சேர்த்துணர்த்துக. பதினான்கெழுத்தின் இறந்த பதினைந்துநிலனும் பதினாறுநிலனும் பதினேழுநிலனுமென இம்மூன்றும் வெண்சீர்வந் தொன்றியக்காலும் இயற்சீர்வந்தொன்றுக்காலும் ஒருஞான்றுஞ் செப்பலோசை பிறவா ; அவையும் ஓசையொடுசேர்த்தி வகுத்துணர்த்துக. அவை வருமாறு: 'புலிவருவாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய்' எனவும், 'மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்' எனவும், 'புலிவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்' எனவும் இவை வெண்சீரொன்றியுங் கலித்தளைதட்டின. இனி இவற்றை இயற்சீர்கொடுத்துச் சொல்லுங்காலுஞ் செப்பலோசை சிதையும்; என்னை ? 'காருருமு காருருமு காருருமு பாதிரி' எனவும், 'காருருமு காருருமு காருருமு காருருமு' எனவும், 'நரையுருமு காருருமு காருருமு காருருமு' எனவும் இவை இயற்சீரான் வந்தும் வேறுசீர்சந்தப்பட்டுச் செப்பலோசை சிதையாதிற்குமென்பது அசையுஞ் சீரும் இசையொடுசேர்த்தி வகுத்துணர்த்துக. இன்னோரன்ன பிறவும். பெரிதும் எஃகுசெவியும் நுண்ணுணர்வும் உடையார்க்கன்றி உணரலாகா. 'ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் மாசேர்வாய்' என்றக்கால் ஞாயிறு புலிவருவாயென இயற்சீரின்பின்னர் நிரையசைவந்து,

'சீரியை மருங்கி னோரசை யொப்பி
னாசிரியத் தளையென் றறியல் வேண்டும்'

(தொல்-செய்-56.)

என்பதனான் ஆசிரியத்தளையாயினும் அஃது ஆண்டுக் கலித்தளைப்பாற் படுமென்பது 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' என்பதனான் உணரப்படும். இனி 'ஞாயிறு புலிசேர்வாய் புலிசேர்வாய் மாசேர்வாய்' என்புழிப் புலிசேர்வாய் மாசேர்வாயென நேரொன்றிய தேனும் அது கலித்தளை யென்பது 'அசையுஞ்சீரு மிசையொடுசேர்த்தி' என்பதனான் உணரப்படும். இன்னோரன்ன பலவுமுள; அவையெல்லாம் வரையறுத்து இலக்கணங் கூறப்படா: அவற்றை அவ்வாறு வேறுபடுத்துணர்த்துதல் அவ்வத்துறை போயினார் கடனென அடங்கக் கூற

'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே'

என்றானென்பது.

உம்மையான் அடியினை வகுத்துணர்த்துதலுங் கொள்க. அது,

"நுதல திமையா நாட்ட மிகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே" (அகம்-கடவுள்வாழ்த்து.)

என்புழி இகலட்டு என்னுஞ்சீர் குறித்தபொருளை முடியநாட்டும் யாப்பென்னும் உறுப்பினுள் அடங்காது இகலட்டுக் கையதென மேலடியோடு பொருள் கூடியும், இசையொடு சேர்த்தி வகுத்துணர்த்தியதேயாம். இன்னும் இவ்விலேசானே எழுத்தலோசையும் அசையொடுஞ் சீரொடுஞ் சேர்த்தி வகுத்துணர்த்தலுங்கொள்க. அவை "சுஃஃறென்னுந் தண்டோட்டுப் பெண்ணை" என்றாற்போல்வன.

இனி, *அகவலோசை மூன்றெனவுஞ் செப்பலோசை மூன்றெனவும் அசையுஞ்சீரும் இசையொடு சேர்த்தியென வகுத்துணர்த்துவாருமுளர். அவை இயலசைமயங்கிய இயற்சீரும் உரியசைமயங்கிய இயற்சீரும் வெண்சீரும் பற்றி ஓசை வேறுபட்டுத் தோன்றுமென்க. அங்

* இங்ஙனங் கூறுவர் அழகசாகாரும், சங்கயாப்புடையாரும்.

மாயினும் அவை மும்மூன்றுக்கு வரையறுக்கப் படாமையின் ஈண்டவை கூறுனென்பது.

இனி, ஒருசாரார் அசையுஞ்சீரு மிசையொடு சேர்த்தி வகுத்துணர்த்தலென்பதனை இவ்வாறு முரைப்ப: என்னை? ஒரு செய்யுளுட்கிடந்த அசைசீர்களை ஈண்டுக் காட்டிய தேமா புளிமாவென்பன முதலாகிய உதாரணங்களோடு சேர்த்தி அவ்விரண்டனையும் ஒக்கும் வகையான் ஒசையூட்டிக் காட்டுப. அற்றன்று, இவ்வுதாரணஞ் சீரென்று வலிந்தார்க்காம் அது செய்துகாட்டல் வேண்டுவது. எல்லாச்சொல்லிற்கும் ஏற்றவாற்றான் அசையுஞ்சீரும் இசையொடனைப் பொதுவகையாற் கூறினமையின் அதுகாட்டல் வீரம்பாதென்பது. இனிக் 'கடியாறு கடியாறு கடியாறு கடியாறு' என்பதனைத் துள்ளலாகச் சொல்லிக் கலியடியெனவுங் கடியாறு என்பது நேரீறுமென்பதாயினும் அது வெண்சீரே ஈற்றசை வீரையியற்றாய் வின்றதெனச் சொல்லி அதற்கு இலக்கணம் 'வெண்சீரீற்றசை வீரையசை யியற்றே' (தொல்-செய்-29) எனப் பொருளுரைத்து, மற்று அதனைக் கலித்தளையெனவுங் காட்டுப. அற்றன்று; கடியாறென்னுஞ் சீரின் உறழ்ந்த ஆசிரிய வடியும் அதுவே வாய்பாடாக வருமாகலின். மற்று அதன்கண் துள்ளலோசை பிறந்ததாலெனின் அவற்றுக்கண் ஒரோமாத்திரை கொடுப்பத் துள்ளலோசை பிறந்ததாயினும் அசையுஞ்சீரு மிசையொடு சேர்த்திச் சொல்லுகவெனவே அங்ஙனம் மாத்திரை நீட்டிச்சொல்லாது அகவலோசைப்படச் சொல்லுகவென்பது இதனாற் பெற்றுமாகலின் அது பொருளன்றென்பது. (கக)

324. ஈரசை கொண்டு மூவசை *புணர்ந்துஞ் சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

இது முறையானே அசையுணர்த்திச் சீராமாறுணர்த்துவான் தொடங்கி அவை இத்துணைப் பகுதியவென்பதூஉம் அவற்றுப் பொதுவிலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று.

---

* 'புணர்த்தும்' என்பது உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம்.

இதன் பொருள் : இரண்டசையானும் மூன்றசையானும் ஓரோர் சொற்கள் சீரியைந்திறுவன சீரென்று சொல்லப்படும், என்றவாறு.

சீரியைந்திறுதலென்பது வழக்கியல் செய்யுளாமாற்றால் யாப்பினும் பொருள்பெறப் பகுத்துப் பதமாகி யவற்றுச்சேறல்.

உதாரணம் : சாத்தன் கொற்றன் எனவும் உண்டான் தின்றான் எனவும் இரண்டசைகொண்டு சீராயின. கானப்பேர் சாய்க்கானம் கூதாளி எனவும் உண்ணுத எனவும் இவை மூவசை புணர்ந்து சீராயின. இவை செய்யுளுள் வருமாறு :

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"

(பத்து-திருமுரு-1-2.)

என ஈரசைச்சீர் வந்தன.

"யானூடத் தானுணர்த்த யானுணரா *விட்டதற்பின்
றானூட யானுணர்த்தத் †தானுணர்ந்தான்"

(முத்தொள்ளாயிரம்.)

எனவும்,

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினும்" (பத்து-பட்டின-1-2.)

எனவும் இவை மூவசைச்சீர் வந்தன.

மற்றுச்சீரென்ற தென்னையெனின் பாணிபோன்று இலயம்படநிற்றலான் அது சீரெனத் தொழிற்பெயராம். என்னை? "சொற்சீர்த்திறுதல்" (தொல்-செய்-123) என்புழித் தொழிற்படத்தோதினமையின். இனி, இயைதலென்பது அசைவகை ஒன்றொன்றலெடு தொடர்ந்த வழியல்லாற்சீர்க்கு அலகுபெறலாகாதென்றவாறு. எனவே, அவ்வாறு

---

* 'முன் அச்சுப்பிரதியிலுள்ள விட்டபின்' என்னும் பாடம் மூவசைச் சீராகாமையின் அது பொருந்தாது.

† 'தானுணரான்' என்பதும் பாடம்.

இலயம்படின்றனவாயினும் புணர்ச்சியெய்துமென்பதாம். மற்று இற்ற தென்றதென்னை ? சீரென்பது தொழிற்பெயராதலால் அது சீரியைந் ததனவே பெறுதுமெனின், அங்ஙனங் கொள்ளிற் சீரியைந்த தொட ரெல்லாங் கூடி ஒருசீராவான் செல்லுமாகலின் இடையிடை இற்று வரல்வேண்டு மென்றற்கு அங்ஙனங் கூறினனென்பது. இதனானே ஒரோவழிப் புணர்ச்சிவிகாரம் எய்தாமையுங் கூறினனும். "வண்டுபடத் ததைந்த கண்ணி" (அகம்-1) என்புழி வல்லெழுத்து மிக்க புணர்ச்சி வகையானே சீரியைந்தன. 'போந்து போந்து சார்ந்து சார்ந்து' என்ற வழி ஒன்றோடொன்று தொடர்ந்ததேனும் இற்றதென்பதனான் இறுதி படின்றமையின் எல்லாவிறுதியும் உகரநிறையுமென்றதனாற் குற்றுகர முற்றுகரமாகாது நாலெழுத்தடியாயிற்று. இதனை எழுத்தடியென் றலே வலியுடைத்து ; வல்லொற்றுத்தொடர்மொழிக் குற்றுகரத்தால் நாலெழுத்தடி வேறுண்மையின். ஈரசைகொண்டெனவும் மூவசை புணர்ந்தெனவுங் கூறினமையான் ஒருசீர் பலசொல் தொடர்ந்துவரி னும் அவை ஒன்றுபட நிற்றல்வேண்டுமென்றவாறும். எனவே, உலகத்துச்சொல்லெல்லாம் ஈரசையானும் மூவசையானுமன்றி வாரா வென்பதுபெற்றும். இதனானே ஒருசொல்லைப் பகுத்துச் சீர்க்கு வேண்டுமாற்றான் வேறு சீராக்கியவழியும் அச்சீர்வகையானே வேறு சொல்லிலக்கணம் பெறுமென்பதுங் கொள்க. அது "மம்மர் நெஞ் சினன் றெழுதுகின் றதுவே" என்புழி கின்றது என்னுஞ்சீர் குற்றுகரவீற்றுச்சொல்லன்றே, அதனைப் பிரித்து அதுவேயென வேறுசீராக்கவே அது முற்றுகரமாகி வேறுபடுதல் கண்கூடாக் கண்டு கொள்க ; என்றார்க்கு, எனப்படுமென்ற தென்னையெனின், ஓரசையே சீர்மேல பெறுமென்றுமாயினும் அவை சீரென முன்னோதப்படா வென்றற்கென்பது. மற்று நாலசையானும் ஐந்தசையானும் உண்ணு கின்றன அலங்காரியாகின்றனெனச் சொல்வருவன உளவாலெனின், அங்ஙனம் வருஞ் சொற்கள் சிலவாகலானும் அவைதாமும் இரண்டு சொல்விழுக்காடு பிளவுபட்டுநிற்றலின் ஒருசீரெனப்படாமையானும் அவை சீராக வருஞ் செய்யுளின்மையானும் எனமறுக்க. இனி வஞ்சிப் பாவினுள் வந்த ஆசிரிய அடியினை *நாலசைச்சீர் காட்டல் வேண்டு

* "நாலசை யானும் நடைபெறு மோரசைச், சீர்மேல யெய்தலுஞ் சில விடத்துளவே" என்பர் காக்கைபாடினியார். அழுதசாகார் நாலசைச்சீரைப் பொதுச்சீர் என்பர்.

னார் இருசீரடியாக உரைப்பினும் அவை தூங்கலோசையிலவாகலா னும் அவை சீரியைந்திறுத லின்மையானும் கொள்ளானென்பது. ஈண்டு எனப்படு மென்பதேபற்றி நாலசைச்சீர் கொண்டாரும் உளர். ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டிலமென்க. (கஉ)

325. இயலசை மயக்க மியற்சீ ரேனை யுரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்.

இது சிறுத்தமுறையானே இயலசையும் உரியசையும் வேறு வேறு தம்முண் மயங்கிவரும் ஈரசைச்சீருணர்த்துகின்றது.

இதன் பொருள்: நேர்நேர் சிரைநேர் சிரைசிரை நேர்சிரை என் பன நான்கும் இயற்சீர்; நேர்புநேர்பு சிரைபுநேர்பு சிரைபுசிரைபு நேர்பு சிரைபு என்பன நான்கும் ஆசிரியவுரிச்சீர், என்றவாறு.

இவற்றுள் இயற்சீரைத் தேமா புளிமா கணவிரி பாதிரி எனவும் வாய்க்கால் வாய்த்தலை துலைவாய் துலைமுகம் எனவும் பிறவும் இன்னே ரன்ன வேறுவேறு காட்டுப. இனி வருவனவற்றிற்கும் இஃதொக் கும். ஆசிரியவுரிச்சீரை வீடுபேறு வரகுசோறு தடவுமருது பாறு குருது எனவுங் காட்டுப. அவற்றுக்குச் செய்யுள்:

"அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே" (குறுந்-216.)

என்புழிக் 'கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை' என நான் கியற்சீரும் வந்தன.

"வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்ப"
(புறம்-35.)

எனவும்,

"வண்புகழ் சிறைந்து வசிந்துவாங்கு சிமிர்தோள்"
(பத்து-திருமுரு-106.)

எனவும்,

"பூண்டுகிடந்து வளரும் பூங்கட் புதல்வன்"

எனவும்,

"நறவுண் மண்டை நுடக்கலி னிறவுக்கலித்து"

(அகம்-96.)

எனவும் இவற்றுள் வ்றுவ்று எனவும், வசிந்துவாங்கு எனவும, பூண்டுகிடந்து எனவும், இறவுக்கலித்து எனவும் நான்காசிரியவுரிச் சீரும் வந்தவாறு கண்டுகொள்க. பிறவு மன்ன.

இஃது ஆட்சியுங் குணனுங் காரணமாகப்பெற்ற பெயர். ஆட்சி, 'இயற்சீ ரிறுதிமு னேரவ ணிற்பின்' (தொல்-செய்-19) எனவும் பிறண்டும் ஆளுப. குணம், இயற்சீராகலாகனும் நான்குபாவிற்கும் இயன்று வருதலானுங் குண்ங் காரணமாயிற்று. இயல்புவகையான் ஒரோ ஒன்றுகின்ற சொற்கள் வருதல் பெரும்பான்மையாகலானும் நான்கு பாவிற்கும் பொதுவாகி இயன்றுவருதலானும் இயலசையான் வரும் ஈரசைச்சீராகலானும் இவற்றை ஒருபாவிற்குரிமை கூறுதல் அரிதாகலாகனும் இவற்றை இயற்சீரென்றான். எனவே, சொல்லின் முடியுமிலக்கணத்தால் நான்குபாவிற்கும் உரியவென்பதூஉம் ஈண்டுப் பெற்றும். அல்லதூஉம் அவற்றைத் தளைகூறும்வழி மூன்றுபாவிற் கும் உரிமைகூறிக் கலிப்பாவிற்கும் வஞ்சிப்பாவிற்கும் நேரீற்றியற்சீர் வாராவென, ஒழிந்தசீர் *வருமென்ப தூடன்பட்டமையானும் நான்கு பாவிற்கும் இயன்றுவருமென்பது பெற்றும். ஆசிரியவுரிச்சீரென்ற தூஉம் அவ்வாறே ஆட்சியுங்குணனும் நோக்கியபெயர். ஆட்சி வெண் பாவுரிச்சீர் ஆசிரியவுரிச்சீர் எனவும் பிறண்டும் ஆளுப. உரியசை மயக்கமாகலானும் ஆசிரியத்திற் குரிமையானும் இக்குறி குணங் காரண மாயிற்று. மற்றிவை இயற்சீர்போல ஒரோர் சொல்லாய் யாண்டும் நிற்றலில்லை பிறவெனின், அற்றன்று. தோன்றுவாக்கு இரங்குவாக்கு என்றாற்போல்வன உளவென்பது. இனி இவ்வியற்சீர்தாமும் இரண்டு சொற் கூடியும் ஒன்றுகியவழியே சீரெனப்படும். அதுபோல இவையும்,

* 'வருமெனப் பட்டமையானும்' என்பதும் பாடம்.

'எல்லாத் தொகையு மொருசொன் னடைய' (தொல்-சொல்-எச்ச-24) என்பதனுன் ஒருசொல்லாயினவெனினும் அமையும். மற்று ஒழிந்த இயற்சீருங் கூறுது ஆசிரியவுரிச்சீர் ஈண்டுவைத்த தென்னையெனின், இவ்விருபகுதியவற்றை இயற்சீரென்றும் ஆசிரிய வுரிச்சீரென்றும் ஆளுமாகலின் என்றவாறு. (கூ)

326. முன்னிரை யுறினு மன்ன வாகும்.

இஃது இயலசையும் உரியசையும் *மயங்கியாவன கூறுகின்றது.

இதன் பொருள்: 'உரியசை மயக்கம் ஆசிரிய வுரிச்சீர்' (தொல்-செய்-13) என மேனின்ற அதிகாரத்தான் அவ்வுரியசைப்பின்னர் நிரையசையுறினும் அவ்வுரியசைமயக்கமாகிய ஆசிரியவுரிச்சீராம், என்றவாறு.

அவை நேர்புநிரை நிரைபுநிரை என வரும். இவற்றை நீடுகொடி நாணுத்தளை †குளிறுபுலி விரவுக்கொடி எனவும் பிறவாற்றுனுங் காட்டுப. அவையெல்லாம் அறிந்துகொள்க. மற்று, இயலசையும் உரியசையும் விரவி இயற்சீராவன இலவோவெனின் உள; அவை யன்றே மேற்சொல்கின்றனவென்பது. அஃதேல், இவ்விரண்டும் இயற்சீராகாவோவெனின், அன்னவென்று மாட்டெறிந்த கருத்தினுன் அதுவும் அமையுமென்பது. என்றூர்க்கு, இவற்றை ஆசிரியவுரிச்சீ ரென்றல் குற்றமாம்பிறவெனின், பெரும்பான்மையும் ஆசிரியத்திற்கும் அதற்கினமாகிய வஞ்சிக்கும் உரியவாகலானும், ஒழிந்த இரண்டு பாவின்கண்ணுஞ் சிறு வரவினவாகலானும், வெண்பாவினுட் கட்டளை யடிக்கண் வாராவென்பது 'கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ' (தொல்-செய்-24) என வரைந்தமையாற்பெறுதுமாகலானும் இவற் றை ஆசிரியவுரிச்சீ ரென்றலே வலியுடைத்தென்பது. அன்னவென் பதனை இயற்சீரொடு மாட்டுங்கால் ஈற்றது அதிகாரம்பட இறுதிநின்ற நிரையீற்றியற்சீ ரிரண்டனோடுங் கொள்ளப்படும். கொள்ளவே, அம்

* 'மயங்கியாவனவற்றுள் இரண்டுசீர் கூறுகின்றது' என்பதும் பாடம்.

† 'களிற்றுக்கணம்' 'விரவுத்தளை' என்பனவும் பாடம்.

முறையானே நீடுகொடி என்பதனைப் பாதிரிபோலவும் குளிறுபுலி என்பதனைக் கணவிரிபோலவும் தலைகொள்ளப்படுமென்பதாம்.

அவை செய்யுளுள்வருமாறு :

"ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ" (புறம்-55.)

எனவும்,

"உவவுமதி யுருவி லேங்கல் வெண்குடை" (புறம்-3.)

எனவும்,

"ஓங்குதிரை வியன்பரப்பின்" (பத்து-மதுரை-1.)

எனவும்,

"நிலவுமணல் வியன்கானல்" (புறம்-17.)

எனவும் இவை ஆசிரியத்துள்ளும் வஞ்சியுள்ளும் வந்தவாறு.

* "தூங்குதிரை யன்னந் துயில்வதியுஞ் சோணாட்டே"

எனவும்,

"ஏடுகொடி யாக வெழுதுகோ"

எனவும் இவை வெண்பாவினுட் கட்டளையடியல்லாதவழிச் சிறு பான்மையான் வந்தன. மற்றிவையுங் கட்டளையடியென்னுமோவெனின், அற்றன்று ; அது தலைவகைகொள்ளுந்துணை இன்னோசைத் தன்றென்பது 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' (தொல்-செய்-11) என்பதனானுணர்க. இப்பகுதியறியாதார் அடியுறழ்ந்ததனைப் பய னென்னேயென்றிகழ்ப. (கசை)

327. நேரவ னிற்பி னியற்சீர்ப் பால.

இயலசை உரியசை மயக்கத்துப் பிறப்பன இரண்டியற்சீர் உணர்த்துகின்றது.

---

* 'தூங்குநிறை யன்னம்' என்பதும் பாடம். 'சேரநாட்டே' என்பதும் பாடம். இஃது இன்னோசைத் தன்று.

இதன் பொருள்: முன்னர் உரியசைப்பின்னர் நிரையசைவரின் ஆசிரியவுரிச்சீராமென்றான். அவ்வதிகாரத்தால் உரியசை யிரண்டுள் பின்னும் நேரசைவரின் அவையிரண்டும் ஆசிரியப்பாலவாம், என்ற வாறு.

அவை நேர்புநேர் நிரைபுநேர் என வரும்.

உதாரணம்: சேற்றுக்கால் வேணுக்கோல் களிற்றுத்தாள் முழு வுத்தோள் என வரும். நீத்துநீர் குளத்துநீர், போதுபூ விறகுதீ என வுங் காட்டுப. பிறவு மன்ன. *இவை இயற்சீர் நான்கினுள்ளும் எப் பாற்படுமெனின் அதிகாரத்தால் நீடுகொடி குளிறுபுலி என்பனபோல இறுதியினின்ற பாதிரி கணவிரிப்பாற்படும் மூறையானென்பது எனவே, போதுபூ பாதிரியாகவும் விறகுதீ கணவிரியாகவும் இயற்றப் படுமென்பது. இவ்வாறு கூறவே, இவை பாதிரி கணவிரி போல அசைதிரிந்து நிரையாமென்பது கொள்ளற்க. நேர்பு நிரைபு முத லாக நிரையீறுகிய சீர் தளைகொண்டாங்குக் கொள்ளப்படும் இவையுமென்பதாம். தளைகோளொக்குமெனவே எழுதளையுள்ளும் இவற்றை ஒன்றொன்றனுள் அடங்குமென்று அடக்கற்க. என்னை? இவை வேறுவேறு பட்ட அசையான் வேறுவேறு சீராயினமையினென் பது. அசைச்சீர்க்கு உரிச்சீரிலக்கணமின்மையின் இதற்கு இஃ தொப்பவாராதென்றுணர்க.

"நீத்துநீர்ப் பரப்பி னிவந்துசென் மான்றேர்"

என்புழிப் போதுபூவும் விறகுதீயும் வந்தவாறு கண்டுகொள்க: இவற்றை ஆசிரியவுரிச்சீர்ப்பின் வைத்ததென்னையெனின் இவையும் அவைபோல ஈண்டொருங்கியைதல் பெரும்பான்மையென்பது அறி வித்தற்கெனவுணர்க. (க)

328. இயலசை யீற்றுமு ஞரியசை வரினே நிரையசை யியல*வாகு மென்ப.

* 'இயற்சீர் நான்கினுள்ளும் இவ்வியற்சீர் எப்பாற் படுமெனின்' என்பதும் பாடம்.

இது மேனின்ற இயற்சீரதிகாரத்தான் ஈரசைச்சீருள் இயலசை உரியசை மயக்கத்துள் ஒழிந்துநின்ற நான்கு இயற்சீரு முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : இயலசை இரண்டின்பின்னும் உரியசை இரண்டும் ஒன்று இரண்டுசெய்து மயக்கி நான்காகுங்கால் அவ்விரண் டுரியசையும் இயலசை மயக்கமாகிய இயற்சீர்நான்கனுள் நிரையீற்ற பாதிரியுங் கணவிரியும்போல வருஞ்சீரொடு தட்கும், என்றவாறு.

அவை நேர்நேர்பு நேர்நிரைபு நிரைநேர்பு நிரைநிரைபு எனவரும். வருங்கால் நேர்முதற்சீர் இரண்டும் பாதிரிபோலவும் நிரைமுதற்சீர் இரண்டுங் கணவிரிபோலவுங் கொள்ளப்படுமென்றவாறு. எனவே, இச்சூத்திரமுஞ் சீராமாறேயன்றிச் சீர்தளைக்குமாறுங் கூறியவாறு யிற்று. இவற்றைப் போரேறு மூமருது கடியாறு மழகளிறு எனினும் இழுக்காது. (கசு)

329. அளபெடை யசைநிலை யாகலு முரித்தே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி ; மேல் எழுத்ததிகாரத்தில் ஓதப்பட்ட அளபெடையை ஆண்டு மொழியெனக்கூறினான், அவ்வாற் றானே அவை பெரும்பான்மையும் ஈண்டும் ஈரசைச்சீராகலின் ஈண்டுச் சீர்கூறியவாற்றான் *எய்தினின்றனவற்றை எழுத்துநிலைமைப்படுத்து அசைநிலையும் †வண்டினமையின்.

இதன் பொருள் : அளபெடை மேற்கூறிய இயற்சீர்நிலைமை யேயன்றி ஓரசையாய்நிற்றலும் உரித்து, என்றவாறு.

உம்மையாற் சீர்நிலையெய்தலே வலியுடைத்து. 'நிலை'யென்ற தனான் எழுத்துநிலைமையும் நேர்ந்தானும். என்னை ? அசையது நிலையைக் குறிலும் நெடிலுங் குறிலிணையுமென எழுத்தான் வகுத்தமை யின் அவை மேற்கூறிய ஈரசைச்சீர் பதினாறனுள்ளும் †என்ன சீர்ப்

---

* 'எய்தி னின்றனவற்றுக்கு' என்பதும் பாடம்.

† 'என்னை சீர்ப்பட்டன' என்பதும் பாடம்.

பாற்பட்டன வெனின் ஆசிரியவுரிச்சீராறும் போதுபூ விறகுதீ என்னும் இரண்டியற்சீரும் ஒழித்து ஒழிந்தவியற்சீர் எட்டுமாம். அங்ஙனமாதல் ஒருமொழியகத்தே உடையவென்பது. ஆஅ எனத் தேமாவாயிற்று. கடாஅ எனப் புளிமாவாயிற்று. யாஅது என ஈரெழுத்து ஞாயிரும். என்னை ? கடாஅ என்புழி அளபெடையதாகாரம்பிரித்துக் குறினெடிலாயிஞற்போல ஆகாரத்துப்பின்னின்ற அகரமுங் குற்றுகரமுங் குறிலிணையெனப்பட்டமையின். ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். ஆஅழி என்பது மூவெழுத்துப் பாதிரியாம். * வடாஅ என மூவெழுத்துப் புளிமாவாம். படாஅகை என நாலெழுத்துக் கணவிரியாம். ஆஅங்கு என ஈரெழுத்துப் போரேறும். ஆஅவது மூவெழுத்துப் பூமருது. புகாஅர்த்து என்பது கடியாறு. விராஅயது என்பது மழகளிறு. இவை ஒரோசொல்லாகிநின்று எட்டியற்சீராஞும் அளபெடைவந்தவாறு.

"தேளந் தேரும் பூஉம் புறவிற்
போஒரி துள்ளுஞ் சோஒரி நண்ணிக்
குராஅம் பிணையல் விராஅங் *குஞ்சி
குடாஅரிக் கோவலர் †அடாஅரின் வைத்த
காஎனறிச் சென்றனர் கொல்லோ
மேஎனறிச் சென்று பொருள்படைப் போரே."

என இதனுள் இயலசை மயக்கமாகிய இயற்சீர் நான்குமாகி அளபெடை வந்தன. ஒழிந்த இயற்சீரும் மேல் நான்கனுள் அடங்குமாகலின் அளபெடை நான்கென்பாருமுளர். அவை தனிநிலை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனப்படுமென்ப. ஒழிந்த இயற்சீரான் அளபெடைவந்த செய்யுளுங் கண்டுகொள்க.

வாஅழ்க என மூவசைச்சீரான் வரும் அளபெடை மொழியு முள. மற்றுப் படாஅகையெனவும் ஆஅழியெனவும் இவை மூவசைச்சீராகாவோவெனின் ஆகா; 'தனிக்குறின் முதலசை மொழிசிதைத்

* 'வடாஅது' என்பது முன் அச்சுப்பிரதியிலுள்ள பாடம். ஈண்டு 'வடாஅது என்பது மூவெழுத்துக் கணவிரியாம்' என்பது நச்சினார்க்கினியர் உரை.

† 'குறிஞ்சி' என்பதும் பாடம்.

‡ 'அடாஅ வைத்த' என்பதும் பாடம்.

தாகாது' (தொல்-செய்-7) என்புழி முதற்கணல்லது விட்டிசைத்தல் நேர்ந்திலவாகலானும் குறிலிணைந்தனவும் குறினெடிலிணைந்தனவும் நிரையாமென்றாலவாகலானுமென்பது. என்றார்க்குத், தூஉமணி கெழூஉமணி என நேர்நிரைப்பின் முற்றுகரம்வந்து நேர்பும் நிரைபுமாமாகலின் அவற்றையும் ஆசிரியவுரிச்சிரென்றலமோவெனின் என்றுதவாறு: அங்ஙனம் அளபெடையான் நேர்பசை நிரைபசை கொள்வாரும் அளபெழுந்த குற்றெழுத்து வருமெழுத்தொடு கூட்டி,

*"முதனிலை யளபெடை நேர்நே ரியற்றே
யிடைநிலை யளபெடை நிரைநே ரியற்றே"

என்பவாகலின் அளபெழுந்த மொழி நேர்பும் நிரைபுமாகாவென்பது. அவ்வாறாயினும் ஒரோர்கால் அளபெடையுகரத்தைக் கூட்டி †நேர்பு நிரைபுமென்றலமோ காசு பிறப்பென்பன தேமா புளிமா வாயினவாறுபோல வெனின், அவை தேமா புளிமா வாகாமையுந் தனிவகையொக்குமத்தூஉ மென்பதூஉம் மேற்கூறப்பட்டதாகலின் அவைபோல இவையும் நேர்பசை நிரைபசையாகாவென்பது. அல்லதூஉம்,

'நீட்டம் வேண்டி னவ்வள புடைய' (தொல்-எழுத்-தூன்-6)

எனப்பட்டது அளபெடையாகலானும் நாலுத்தனியென்பதுபோலாது இயல்பாகவந்து இயைந்த எழுத்தாகலானும் அவைபோல அளபெடை இருவகை யுகரமொடிடைந்தவை வந்தனவெனப்படாமையானும் நேர்பசை நிரைபசையாகாவென்பது. அற்றன்றியும் அவை நேர்பசை நிரைபசையாதல் ஒருவகையான் நேர்ந்தானெனினும் அவை நாலுத்தனி விரவுக்கொடியென்றுஞ் சீராதற்கு இழுக்கென்னையெனவும் நிரையிறு காலையும் ஆசிரியவுரிச்சிரென ஒதி ஆசிரியவுரிச்சிரெட்டென்பான்போல விதந்தோதிப் பயந்ததென்னை யெனவுங் கூறி மறுக்க.

---

* இச்சூத்திரத்தில் 'தனிநிலை யளபெடை' எனவும் 'இறுதிநிலை யளபெடை' எனவும் பாடங்கொண்டார் யாப்பருங்கல விருத்தி யுரைகாரர்.

† 'நேர்புநிரைபும் என்றலமோ' எனவும் பாடமுண்டு.

இனி ஒருரை : தூஉமணி கெழூஉமணி என்பன அளபெடை அசைநிலையாகியும் ஆகாதும் வருதலின் வெண்சீர்க்கும் இருநிலைமை கோடற்கென்ப. அது நீடுகொடி குளிறுபுலி என்பனவற்றிற்கும் ஒக்குமாதலானும் அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்துங்கால் அங்ஙனம் அசையாகாமையானும் அது பொருந்தாதென்பது. இங்ஙனஞ் சீர்நிலையெய்திநின்ற அளபெடைகளெல்லாம் வழக்கிற்குஞ் செய்யுட்கும் பொதுவாயினவுஞ் செய்யுட்கே உரியவாகிச் செயுள்செய்யும் புலவராற் செய்துகொள்ளப்படுவனவுமென இருவகைய. அவ்விருதிறத்தவும் 'நீட்டம் வேண்டினவ்வள புடைய' என்னும் இலக்கணத்துட்பட்டு அடங்கின. இனி, அவற்றுள் வழக்குக்குஞ் செய்யுட்கும் பொதுவாகியதனை இயற்கையளபெடையென்றுஞ் செய்யுட்குப் புலவர் செய்துகொண்டதனைச் செயற்கையளபெடையென்றும் பெயரிட்டு வழங்கப்படும். அவ்விரண்டனுள்ளும் ஈண்டு அளபெடை அசைநிலையாகலும் உரித்தெனப்பட்டது இயற்கையளபெடையென்று பெயரிட்டுவழங்கப்படும். செயற்கையளபெடை சீர்நிலையாதல் செய்யுட்கேயுரியவாறுபோல இயற்கையளபெடை அசைநிலையாகலுஞ் செய்யுட்கேயுரியதென்பது. ஆகலுமுரித்தென்ற உம்மையான் அவையிரண்டானும் *அவ்வாற்றானும் அசைநிலையாகப்படாது புணர்ச்சிவகையான் வந்த அளபெடைக்கண்ணும் பொருள்புறப்பாட்டிற்கு உரியவாகச் செய்யுள் செய்யுமிடத்தும் அவ்வாறசைநிலையாகப்படுவதென்றவாறு.

உதாரணம்:

"பலாஅக்கோட்டுத் தீங்கனிமேற் பாய்ந்தாடு கடுவன்"

எனப் பலாஅக்கோடென்புழிக்,

'குறியதன் முன்னரு மோரெழுத்து மொழிக்கு
மறியத் தோன்று மகரக் கிளவி' (தொல்-எழுத்-உயிர்-24)

எனப் பெற்ற அகரமுண்டன்றே? அதுவும் அளபெடை யெனப்படும். அதனைப் பலாஅவென்புழிப் புளிமாவென்னுஞ் சீராக அலகுவையாது நிரையசை நிலைமைத்தேயாக வைக்கப்படுமென்பது.

* 'எவ்வாற்றானும்' என்பதும் பாடம்.

"நிலம்பாயப் பட்டன்று நீணிலவா மென்றேட்
*குலம்போலப்போலக் கோவை செய"

என்புழிப் போலப்போலவெனச் சேய்மைக்குறிப்புப்படச் செய்யுள் செய்தவழியும் அளபெடை அசைநிலையாயிற்று. இனி, இவற்றை விளியும் பண்டமாற்றும் †நாவல்கூற்றும் முதலாயவற்றுள் வருமென் பாருமுளர். அங்ஙனம் வந்தது பிற்காலத்துச் செய்யுளென்ப. அல்லதூஉம் அங்ஙனம் வரையறைப்படாமையானும் நாம் முன்னர்க் காட்டினவை ஆண்டு அவற்றுள் அடங்காமையானும் அவ்வாறும் இகந்து கூறுனென்பதூஉம்படும்.

"உப்போல வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவல்"

எனப் பண்டமாற்றின்கண் வந்ததெனக் காட்டுப. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து அசைநிலைப்பாற்படுக்க. என்றூர்க்கு, இவை செய்யுளுள் தம்மோசை சிதையாவாயின் அலகிருக்கையுள் அழித்துப் பயந்ததென்னையெனின் அஃதன்றே இதனை எழுத்து நிலைப்படு மென்றற்கு உதாரணமென்பது. அஃதேற் செய்யுளின் ஓசையை அழிக்கவமையும் பிறவெனின், அற்றன்று ; அவ்வோசையைச் செய்யுட்கண்ணே அழிப்பது சந்தியிலக்கணத்தின் வழீஇயிற்றும். இனிப் பிறவற்றுக்கண்ணும் அளபெடையைச் சிதைத்துச் சொல்லின் அச் செய்யுளுட்கருதிய பொருண்மை விளங்காதாம். அது நோக்கிச் செய்யுளின்பத்தைச் சிதையாது ஈண்டு நாம் வேண்டப்பட்ட அலகிருக்கைக்கட் சிதைத்துக்கொள்க என்றுமென்பது. (கள)

330. ஒற்றள பெடுப்பினு மற்றென மொழிப.

இஃது ஒற்றளபெடையும் உயிரளபெடைபோலச் சீர்நிலையாதலேயன்றி அசைநிலையாகலும் உரித்தென மாட்டெறிந்தமையின் எய்தாததெய்துவித்தது. இதனை அசைப்படுத்து எழுத்துநிலையும் வேண்டுகின்றமையின் வழுவமைத்ததூஉமாம்.

---

* 'கலம்போலப்போலக் களவை செய' என்பதும் பாடம்.

†."'நாவல்' என்பது நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதோர் சொல்." என்பர் நன்னூல் விருத்தியுரைகாரர்.

இதன் பொருள் : ஒற்றளபெடுத்தாலும் உயிரளபெடைபோலச் சீர்நிலையெய்தலும் ஓரசையாய்நிற்றலும் உரித்து, என்றவாறு.

ஒற்றளபெடுப்பினுமெனவே, ஒற்றுக்கள் அளபெடுத்து நிற்றற்கு உரியன ; உரியவழி எல்லாம் வராது கொள்ளப்படும். அவை வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் இருவாற்றான் ஒருசொற்கு உறுப்பாய்நின்ற ஒற்றே அளபெழினும் பின்தோன்றிக்கொள்ளப்பட்ட ஒற்றளபெழினுமென இருவகைப்படும். "அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்" என்பது சொற்குறுப்பாய்நின்றது. "ஆனு நோயொடு கான லஃதே" என்பது பின்றோன்றிக்கொண்ட புள்ளி யெனப்படும். அற்றெனமொழிப என்றதனான் ஒற்றளபெடையும் உயிரளபெடைபோலத் தானுந் தன்னைபொற்றிய எழுத்துங்கூடி அளபெடை மொழியாகிச் சீர்நிலையெய்தல் பெரும்பான்மைபாகலானும் அவை இயற்கையளபெடையாகிவழி அசையாதல் சிறுபான்மை யென்பதூஉம் உயிரளபெடை முதற்கணின்ற நெட்டெழுத்துப்போல ஒற்றளபெடை முதற்கணின்ற குற்றெழுத்துத், "தனிக்குறின் முத லசை மொழிசிதைத் தாகாது" (தொல்-செய்-7) என்பதனான் விலக்குண்ணாது விட்டிசையாது முதற்கணின்று நேரசையாமென் பதூஉங் கூறியவாறு. வல்லெழுத்தாறும் ரகாரழகாரமும் ஒழித் தொழிந்த பதினேரொற்றுங் குறிற்கீழுங் குறிலிணைக்கீழும் அள பெடுத்திசைத்தும்வழிச் சீர்நிலையாதலேயன்றி அசைநிலையாகவுமுரித்துச் சிறுபான்மையென்றவாறு. அவை "கண்ண்டண்ண்ணெனக் கண் டுங் கேட்டும்" என்றவழிக் கண்ண் என்பது சீர்நிலையாகித் தேமாவா யிற்று. தண்ண்ணெனவென்றவழித்தட்பத்துச்சிறப்புரைத்தற்கு ணகர வொற்றினை அளபேற்றிச் செய்யுள்செய்தான். ஆண்டு அது மாசெல் சுரமென்னும் வஞ்சியுரிச்சீராவதனைப் பாதிரியென்னுஞ் சீரேயாமென வழுவமைத்தவாறு. குற்றுகரங் குறிலோடுகூடி நிரையாவதனைக் குறிலிணையெனக் குற்றெழுத்தாக்கி ஓதினான். அதுபோல ஒற்றள பெடையும் ஒருமாத்திரையாவதனைக் குற்றெழுத்தென்றோதாதே வெனின், அங்ஙனம் ஓதின் அவ்வளபெடை குறிலாகித் தன்முன் வந்த குறிலோடும் பின்வந்தகுறிலோடும் நெடிலோடுங் கூடி *நிரை

* 'நிரையசை யாக்குவதாவான்' என்பதும் பாடம்.

யசையாகுவதாவான் செல்லுமென மறுக்க. மற்றும் அரங்கம் என்புழிப் புலிசெல்வாடென மூவசைச்சீருமாமாகலின் இதனை மூவசைச்சீரின்பின் வைக்கவெனின், அற்றன்று; அவ்விரண்டற்கும் பொதுவகையாக இடைவைத்தானென்பது. அல்லதூஉம் ஈரசைச் சீராதலே பெரும்பான்மையாதலின் ஈண்டு ஈரசைச்சீர்ப்பின் வைத் தான் இவ்விரண்டளபெடையினையுமென்பது. மற்றும் வழக்கினுள் வரும் இயற்கையளபெடையன்றே அசைநிலையாவன, ஒற்றளபெடை வழக்கினுள் வருமோவெனின், அவையுஞ் சிறுபான்மை வழக்கினுள் வருமென்பது. சுள்ளென்றது புள்ளென்றது கள்ளென்றது துண்ணென்றது திண்ணென்றது என வரும். பிறவு மன்ன. இவை, செய்யுளகத்தல்லது பரவைவழக்கினுள் வாராவென்பாரு முளர். அவரறியார்; செய்யுட்குப் புலவர்செய்துகொண்ட அளபெடை பின்னர் அசைநிலையாகற்கு என்னை காரணமென மறுக்க. மற்று,

'அளபெடை யசைநிலை யாகலு முரித்தே' (தொல்-செய்-17.)

என வரையாதுகூறவே இச்சூத்திரமும் அடங்குமாகலின் இது மிகை யாம்பிறவெனின், அற்றன்று; எழுத்தோத்தினுள் ஒற்றளபெடுக்கு மென்பது கூறுமையின் வேறு கூறினன். அல்லதூஉம் உயிரள பெடையின் வேறுபட்டதோர் இலக்கணமுடைமையின் இதனை வேறு கூறினனென்பது. என்னை? பனஅட்டு என்றவழி உயிரளபெடை கடியாறு என்னுஞ் சீராயவாறுபோலாது கொங்கு குரங்கு எஃஃகு மின்னு என அளபெழுந்த இருவகையுகரவீற்றுச்சொற்கள் போறு கடியாறு என்னுஞ் சீரானும் ஞாயிறு வலியது என்னுஞ் சீரானுமாகாது இருவகை உகரமொடு இயைபின்றி வருதலானும் அவை வண்டு வரகு எனவும் உரியசைச்சீர்ப்பாற்பட்டு அசையாகுமாத லானும் இருவகை யுகரமோடியையாதவழிக் "கண்ண டண்ணென னக் கண்டுங் சேட்டும்" எனவுங் "கஃஃஃ றென்னுங் கல்லதர்" என் னுஞ் சீர்நிலைபெறுதலானுமென்பது. எனவே, இயற்கையுயிரளபெடை போலச் செயற்கையொற்றளபெடையும் ஒரோவழி ஓசை நிகைக்கப் படாதாயிற்று. இதனானே உயிரளபெடைபோல ஒற்றளபெடை வருகின்ற எழுத்தோடுகூடி அசையாகாதென்பதாம். ஈர்க்கு பீர்க்கு என ஈரொற்றுவின்றவழி வேறோரசையாகாதவாறுபோல ஒற்றள

பெடையும் ஒரோவழி அசைநிலைபெறுதென்பதூஉம் கூறினாரெனும். இனி, இயற்கையொற்றளபெடை சிறுபான்மை வருமாதலின் இஃது அசைநிலையாதலே பெரும்பான்மையாதலைநோக்கி மாட்டெறிந்தான் எனவும் அமையுமெனக்கொள்க.* (கஅ)

331. இயற்சீ ரிறுதிமு னேரவ ணிற்பி னுரிச்சீர் வெண்பா வாகு மென்ப.

இது சிறுத்தமுறையானே ஈரசைகொண்டு சீரியைந்திறுவன உணர்த்தி இனி மூவசைகொண்டு முடிவன உணர்த்துவானென்முந் தான் ஆவற்றுள் இது வெண்பாவுரிச்சீருணர்த்துகின்றது.

இதன்பொருள்: மேனின்ற அதிகாரத்து இயலசையாகிய இயற்சீரிறுதிக்கண் நேரசைபெறுவன நான்கும் வெண்பாவுரிச்சீரா மென்று சொல்லுவர் புலவர், என்றவாறு.

உரிச்சீர் வெண்பா, வெண்பா வுரிச்சீராமென மொழிமாற்றி யுரைக்க.

உதாரணம்: நேர்நேர்நேர் நிரைநேர்நேர் நேர்நிரைநேர் நிரை நிரைநேர் என வரும். இவற்றை மாசெல்வாய் புலிசெல்வாய் மாவரு வாய் புலிவருவாய் எனவும், †தேமாங்காய் புளிமாங்காய் கூவிளங்காய் கருவிளங்காய் எனவும் வேறுவேறுதாரணங்காட்டுப. பிறவும் அவ் வாறு வருவன அறிந்துகொள்க.

---

*ஒற்றளபெடை யுயிரளபெடைகள் செய்யுட்கு வேண்டுமாற்றை நனிவிளக்கும். "செய்யுட்களோசை சிதையுங்கால் ஈரளபும், ஐயப் பாடின்றி யிணையுமால்—மைதீரொற், றின்றியுஞ் செய்யுட் கெடி னெற்றை உண்டாக்கு, குன்றுமேல் ஒற்றளபுங் கொள்" என்னும் மாபுராணச்செய்யுளை எடுத்துக்காட்டினார் நச்சினார்க்கினியர். அழுத சாகரமும் "ஒற்றளபாய்விடின் ஓரலகாம்" என்று கூறினார்.

†அழுதசாகரர் "தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற், காமாங் கடைகாய் அடையின்வெண் பாவிற்கு" என்று கூறினர்.

அவற்றுக்குச் செய்யுள் :

"காமன்கா ணென்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை *தருவானே-யாமு
மிருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்."

இதனுட் காமன்காண் எனவும் கருவூரார் எனவும் இருகுடங்கை எனவும் யானெதிரே எனவும் நான்கு வெண்சீரும் வந்தன. இதுவும் ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெற்றபெயர். வெண்பாவிற்கும் அதன் பகுதியாகிய கலிப்பாவிற்கும் உரிமையாதலிற் குணங்காரண மாயிற்று. ஆட்சி,

'வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ
ரின்பா நேரடிக் கொருங்குவ்லே யிலவே'

(தொல்-செய்-23.)

எனவும் பிருண்டும் ஆளுமென்பது. மற்று இயற்சீரென்றவழிப் பத்து இயற்சீருங் கொள்ளாமோவெனின் அதற்கு விடை முன்னர் 'இயலசை மயக்கம்' (தொல்-செய்-13) என்புழிச் சொல்லிப்போந் தாம். இயற்சீரெனப் பொதுவகையான் ஒதியவழி இயற்சீர்பத்துங் கொள்ளாது இயலசைமயக்கமாகிய நான்கனையுங் கோடலும் ஆசிரிய வுரிச்சீரென்று பொதுவகையான் ஒதியவழி ஆறனையுங் கொள்ளாது உரியசைமயக்கமாகிய நான்கனையுமே கோடலும் வேண்டுமென்பது. அஃது இச்சூத்திரத்தானும் 'வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீர்' (தொல்-செய்-23) என்பதனானும் பெறுதும். (கக)

332. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை யான.

இஃது ஒழிந்த மூவசைச்சீ ருணர்த்துகின்றது.

இதன்பொருள் : வஞ்சிச்சீரெனக் கூறுபடுக்கப்பட்டன மேற் கூறிய வெண்சீரல்லா மூவசைச்சீரெல்லாம், என்றவாறு.

* 'வருவானே' என்பதும் பாடம்.

நேர் நிரை நேர்பு நிரைபு என்னும் நான்கனையும் மூன்றுபடியான் இழியவைத்து, முதற்கணின்ற நான்கசையும் இடைகின்ற நான்கனே டும் ஒரோவொன்று நான்காகக் கூட்டி, இறுதிகின்ற நான்கசையோடும் ஒரோவொன்றற்குப் பதினாறாக நாற்காலுறழ அறுபத்துநான்கு மூவசைச்சீர் பிறக்கும். அவற்றுள், இயலசைமருங்கின் நேரிறுவன நான்குசீருள. அவை முன்னர் வெண்சீர்நான்கெனக் கூறப்பட்டன. ஒழிந்த மூவசைச்சீர்களெல்லாம் வஞ்சியுரிச்சீரெனப்படும், என்றவாறு. அவை அறுபதுவகைப்படும். உதாரணம்: நேர்நேர்நேர் நேர்நிரை நேர் நேர்நேர்புநேர் நேர்நிரைபுநேர் எனவும், நிரைநேர்நேர் நிரைநிரை நேர் நிரைநேர்புநேர் நிரைநிரைபுநேர் எனவும், நேர்புநேர்நேர் நேர்பு நிரைநேர் நேர்புநேர்புநேர் நேர்புநிரைபுநேர் எனவும், நிரைபுநேர்நேர் நிரைபுநிரைநேர் நிரைபுநேர்புநேர் நிரைபுநிரைபுநேர் எனவும் இவை நேரீற்று மூவசைச்சீர் பதினாறு; இவற்றுள் வெண்சீரென மேற்காட்டிய நான்கும் ஒழித்து ஒழிந்த பன்னிரண்டும் வஞ்சியுரிச்சீர். இனி நிரையீற்று மூவசைச்சீர் பதினாறும் வருமாறு: நேர்நேர்நிரை நேர் நிரைநிரை நேர்நேர்புநிரை நேர்நிரைபுநிரை எனவும் நிரைநேர்நிரை நிரைநிரைநிரை, நிரைநேர்புநிரை நிரைநிரைபுநிரை எனவும், நேர்பு நேர்நிரை நேர்புநிரைநிரை நேர்புநேர்புநிரை நேர்புநிரைபுநிரை எனவும், நிரைபுநேர்நிரை நிரைபுநிரைநிரை நிரைபுநேர்புநிரை நிரைபு நிரைபுநிரை எனவும் நிரையீற்றுச்சீர் பதினாறும் வந்தன. நேர்நேர் நேர்பு நேர்நிரைநேர்பு நேர்நேர்புநேர்பு நேர்நிரைபுநேர்பு எனவும், நிரைநேர்நேர்பு நிரைநிரைநேர்பு நிரைநேர்புநேர்பு நிரைநிரைபுநேர்பு எனவும், நேர்புநேர்நேர்பு நேர்புநிரைநேர்பு நேர்புநேர்புநேர்பு நேர்பு நிரைபுநேர்பு எனவும் நிரைபுநேர்நேர்பு நிரைபுநிரைநேர்பு நிரைபுநேர்பு நேர்பு நிரைபுநிரைபுநேர்பு எனவும் இவை நேர்பீற்றுச்சீர் பதினாறும் வந்தன. நேர்நேர்நிரைபு நேர்நிரைநிரைபு நேர்நேர்புநிரைபு நேர் நிரைபுநிரைபு எனவும், நிரைநேர்நிரைபு நிரைநிரைநிரைபு நிரைநேர்பு நிரைபு நிரைநிரைபுநிரைபு எனவும், நேர்புநேர்நிரைபு நேர்புநிரை நிரைபு நேர்புநேர்புநிரைபு நேர்புநிரைபுநிரைபு எனவும், நிரைபுநேர் நிரைபு நிரைபுநிரைநிரைபு நிரைபுநேர்புநிரைபு நிரைபுநிரைபுநிரைபு எனவும் இவை நிரைபீற்றுச்சீர் பதினாறும் வந்தன. நேரீற்று வஞ்சி

யுரிச்சீர் பன்னிரண்டும் நிரையீற்றுவஞ்சியுரிச்சீர் பதினைந்தும் நேர்பீற்று வஞ்சியுரிச்சீர் பதினைறும் நிரைபீற்றுவஞ்சியுரிச்சீர் பதினைறுமாக வஞ்சியுரிச்சீர் அறுபதும் வந்தன. அவற்றுக்குச் செய்யுள் :

"மேற்கோட்டுநீர் கீழ்ப்பரந்துதன்
*விழுக்கோட்டுமேல் வியல்விசும்புதோய்ந்
தோங்குமுன்னர்க் †காம்புகழியப்
பாய்ந்துசென்றுசென் றுங்குநலிபுனின்
றெதிர்த்துமீண்டாங் கதிர்த்துக்கனைகொன்
றலங்குகோட்டுமுத் திலங்குவிலவுசெய்
தூர்திரைக் காவிரி பரக்குந் தண்டலை
மூதூ ரோனை பேரிசை வளவன்
சுரம்படர்ந்து வருந்துத லெவனே
நிரம்பா வாழ்க்கைப் பாணர் கடும்பே."

இதனுள், நேரீற்றுமூவசைச்சீர் பதினைறுள்ளும் வெண்பாவுரிச்சீர் நான்குமொழித்து ஒழிந்த பன்னிரண்டுவஞ்சியுரிச்சீரும் முறையானே வந்தன.

‡வண்டோடுவயல் வாய்புகைபரந்
தயலாலெயி னறைக்கடிகையின்
வழிபோகுவர மறித்துருபுகளர்ந்
தோங்குசென்னிலை §வாங்குகதிர்தரும்
போதுதூங்குசிலை மீதுபுகுந்துபுகுந்
தொடுங்குசெய்தொழில் வழங்குகளிக்குழாம்

நன்னர் நன்னுட் டென்னு குவகொல்
பொன்னி நன்னுட்டுப் பொருந னெங்கோன்

---

* 'விழுக்கோட்டுமெய்' என்பதும் பாடம்.
† 'காம்புகிழிய' என்பதும் பாடம்.
‡ 'வண்டோட்டுவயல்' என்பதும் பாடம்.
§ 'வாங்கு கதிர்தரீஇ' என்பதும் பாடம்.

ரூடோய் தகையு மல்லவ
ளுடுசெழு திருவிற் பீடுகெழு வேந்தே.''

இதனுள் நிரையீற்றுவஞ்சியுரிச்சீர் பதிஞறும் வந்தன.

*''வான்பொய்யா தீம்பெயல்பெய்து
மால்யாறுபோந்து கால்சுரந்துபாய்ந்து
சுரைபொய்யாது நிறைவளஞ்சான்று
வளையாதுவந்து பலாப்பழுத்துவீழ்ந்து
பாம்புகொள்ளாது வீங்குசுடர்நீண்டு
வித்துநாறு வாய்த்து முத்துக்கரும்புபூத்து
வரம்புகொள்ளாது நிரம்புபெருங்கூட்டு
விசும்புநீங்குமஞ்சு துயின்றுபெயர்ந்துபோந்து †
வாழை யோங்கிய கோழிலைப் பரக்குந்
தண்டா ணாணர்த் தென்ப வென்றும்
படுவது கூட்டுண்டு கடவது நோக்கிக்
குடிபுறந் தருஉம் வேந்த
னெடுநிலைத் தண்குடை நிழற்றுநாடே.''

இதனுள் நேர்பசையிறுதியாகியவஞ்சியுரிச்சீர் பதிஞறும் முறையானே வந்தன.

''சீற்றமிகுபு செல்சினஞ்சிறந்து
கூற்றெறுத்துவிளைபு கோள்குறித்துமுயன்று
புலிப்போத்துலவு பொலங்கொடியெடுத்துப்
‡புகவேற்றுமலைந்து பகையரசுதொலைத்து
வேந்துமீதணிபு போந்துபடத்தொடுத்து
§வீற்றுவீற்றுப்புணர்ந்து வேற்றுச்சுரும்புகிளர்ந்து
களிறுகால்கிளர்ந்து குளிறுகுரல்படைத்துச்

---

* 'வான்பெய்யாது' 'மால்யாறு பேர்ந்து' 'நிறைவளஞ்சான்று' 'வரையாதுதந்து' என்பவும் பாடம்.

† 'பேர்ந்து' என்பதும் பாடம்.

‡ 'புகலேற்றுமலைந்து' என்பதும் பாடம்.

§ 'வீற்றுவீற்றுப்புனைந்து' என்பதும் பாடம்.

சொரிந்துதூங்குகடாத்து *விரவுப்பலவுதொலைத்து
மணங்கம ழாரமொடு தயங்கச் சூடிய
வென்வேற் சென்னி பொன்னியற் புனைகழல்
பாடுபெறு பாணினும் பலவே
பாடா தோடிய நாடுகெழு வேந்தே.''

இதனுள் கிரையீற்று வஞ்சியுரிச்சீர் பதினைறும் முறையானே வந்தன. (உ0)

333. தன்பா வல்வழித் தானடை யின்றே.

இஃது அவற்றைப் பாவிற்குரிமை கூறுகின்றது.

இதன்பொருள் : இவ்வறுபது வஞ்சியுரிச்சீருந் தன்பாவினுளல்லாத ஆசிரியம் வெண்பாக் கலியினுள் வாரா, என்றவாறு.

சிறுபான்மையானுவன முன்னர்ச் சொல்லுதும். இவை ஆசிரியவுரிச்சீர் தூங்கலோசையானுகுமாறுபோல ஆசிரியவோசையும் ஆக்குங் கொல்லெனின் ஆக்காவென்பது இதனது பயன். (உக)

334. வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய.

மற்றைச்சீர் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் : வஞ்சியுரிச்சீர் பிறபாக்களை ஆக்காதவாறுபோலாது ஒழிந்த ஆசிரியவுரிச்சீரும் வெண்பாவுரிச்சீரும் இவ்வஞ்சிப் பாவினை யாக்கும், என்றவாறு.

உரிச்சீர் மேலதிகாரமாகலான் எஞ்சியவென இவ்விரண்டனையுமே கொண்டாமென்பது. வஞ்சியதுபாவினை வஞ்சியென்றுன் ஆகுபெயரான். மற்றுச் சீர்கூறும்வழிப் பாக்கூறுவதென்னையெனின் அப்பாவினை யாக்குவன சீராகலிற் சீரிலக்கணம் எய்துமென்பது. அவையாமாறு :

---

* 'விரைந்துமலர்ந்து தொலைத்து' என்பதும் பாடம்.

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்" (பத்து-பட்டின-1-3.)

எனத் தன்சீர்வரத் தூங்கலோசை பிறந்தது. "தாழ்தாழைத் தண்டண்டலை" (பத்து-பொருந-181) என்பதுவும் "புட்டேம்பப் புயன்மாறி" (பத்து-பட்டின-4) என்பதுவும் வெண்பாவுரிச்சீரால் தூங்கலோசை பிறந்தது. "புட்டேம்பப் புயன்மாறி" என்புழி, "வசை யில்புகழ் வயங்குவெண்மீன்" எனத் தனது சீரானே தூங்கலோசை பிறந்தாங்குப் பிறந்தது. "திசைதிரிந்து தெற்கேகினும்" என இயற் சீர்நிற்பத் தன்சீரானே தூங்கலோசை பிறந்தது. 'புள்ளுந்துயின்று புலம்புகூர்ந்து' என ஆசிரியவுரிச்சீரான் வஞ்சித்தூக்காயிற்று. பிறவும் அன்ன. (உஉ)

335. வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ ரின்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே.

இது கட்டளையாசிரியப்பாவினுள் அடியுறழப்படாத சீர் இவை யென்கின்றது.

இதன் பொருள்: வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆசிரியப்பா விற்கு ஒப்பவரும் நிலை இல, என்றவாறு.

இன்பாநேரடியென்பது ஆசிரியவடியென்றவாறு. ஒருங்கென்ற தனுன் இயற்சீராகிய தன்சீரேபோல வெண்சீரும் வாராதென்பதாம். இயலசை மயங்கினவே இயற்சீரெனப்படுவன எனவும், உரியசைமயங் கினவே ஆசிரியவுரிச்சீரெனப்படுவன எனவும் முன்னர்ச்சொல்லிப் போந்தாலுகலின் ஈண்டு உரியசை மயக்கத்தினையே ஆசிரியவுரிச்சீ ரென்றான். எனவே நீடுகொடி குழறுபுலி என்னும் இரண்டாசிரிய வுரிச்சீரும் ஆசிரியத்துவந்து அடியுறழுமென்பது ஈண்டுக் கொள்ளப் படும். அல்லது,

'முன்னிரை யுறினு மன்ன வாகும்' (தொல்-செய்-14)

என்ற மாட்டேற்றான் இயற்சீர்த்தன்மை சிறுபான்மை வகையான்

எய்துவித்தனவும் இப்பயனேக்கியாயிற்று. இக்கருத்து நோக்கிப் போலுங் 'கலித்தலை மருங்கிற் கடியவும் படாஅ' (தொல்-செப்-24) என்ற உம்மை இறந்ததுதழீஇயிற்றுமா மென்பது.

இனி ஒருசாரார் வெண்சீரும் ஆசிரியப்பாவினுள் வருங்கால் இயற்சீரிடையிட்டன்றி உடனியைந்துவாரா என்ப. அங்ஙனங்கொள்ளிற் கட்டளையடிக்கண்ணும் ஆசிரியவடியுள் வெண்சீரும்வந்து உறழப்பெறுமென்றலும். அல்லாதவடிக்காயின் அது போக்கி,

'இன்சீ ரியைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய வடிக்கே' (தொல்-செப்-30.)

என்புழிக் கூறப்படுமென்பது. ஈண்டு நேரடிக்கென்பது கட்டளையடிக்கென்றவாறு. (உசு)

336. கலித்தலை மருங்கிற் கடியவும் படாஅ.

இது கலிப்பாவிற் சீர்மயங்குமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மேல் ஆசிரியவடியுறழ்தற்கண் விலக்கப்படாத நிரையீற்றுநிரியவுரிச்சீர் இரண்டுங் கலிப்பாவின் அடங்குங்காற் கடிதலுமுடையகொல்லெனின் ஈண்டும் அவை விலக்கப்படா, என்றவாறு.

எனவே, நிரையீற்றுநிரியவுரிச்சீர் இரண்டுங் கலியடியுறழ்வன வாயின. கடியவும்படாவென்பது இறந்ததுதழீஇய எச்சவும்மை; ஆசிரியத்திற் கடியப்படாவாதலேபன்றி ஈண்டுக் கடிதலும்படாவென்றமையின். கலித்தலைமருங்கினென்பது வினைசெய்யிடத்துக்கண் ஏழாவது வந்தது; தலைத்தலென்பது சீர்த்தொழிலாகலின். அல்லாக்கால் இருசீராலுகிடதோர் தலையிடலுகப் பிறிதொருசீர் ஆண்டு வரல் வேண்டுமென மறுக்க. மற்றுக் கலித்தலை மருங்கின் வெண்சீர்வருக வென்றாரோவெனின், அது சொல்லவேண்டுமோ? ஆசிரியத்துத் தன்சீர் வாராதனை கூறுவதன்றி வருமென்பது கூறான், வெண்பாவிற்கும் அவ்வாறே வெண்சீர்வருமென விதந்தோதான், அதுபோல அதனியற்றாகிய கலிப்பாவிற்கும் வெண்சீர் வருமென விதந்தோதல் வேண்டுவதன்று; வஞ்சிப்பாவிற்குப்போல வேறு சிறப்பினைமையினென்

பது. அஃதேல் 'வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய' (தொல்-செய்-22) என வஞ்சிப்பாவினுள் ஆசிரியவுரிச்சீர் வருமென்று கூறல்வேண்டா வெனின் வேண்டுமன்றே, வெண்சீர்வருமென விதந்தோதுவான் ஆசிரியவுரிச்சீர் ஆண்டு விலக்குண்ணுமாகலினென்பது.

அவற்றுக்குச் செய்யுள் :

*"ஒங்குவரை யடுக்கத்துப்பாய்ந் துயிர்செகுக்குந் துறைவகேள்"

எனவும்,

"விளங்குமணிப் பசும்பொன்னின் வியலறைமேல் வீளையாடி"

எனவும் நிரையீற்றாசிரியவுரிச்சீர் கலிப்பாவினுள் வந்தன.

"வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானவனை"

எனவும்,

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்" (கலி-11.)

எனவும் இவையிரண்டும் வெண்சீரெனத் தொகுக்கப்படுதலின் வெண்சீரென்னுஞ் சொல்லின் முடியுமிலக்கணத்தான் விதந்தோதாதா மேயும் அவ்விருபாவிற்கும் உரியவாயின. மற்றுக் கலிமருங்கினென் றது தளைமருங்கினென்ற தென்னைபெனின் இவ்வாராய்ச்சியுடையன கட்டளையடியென்றதென்பது. எனவே, தளையென்று ஒதுவனவெல் லாங் கட்டளையடியே நோக்குமென்பதுபெற்றும். இங்ஙனம் வரை யறையுடையன கட்டளையடியெனவே, அல்லாத அடிக்கண் ஒழிந்த ஆசிரியவுரிச்சீரும் வருமென்பது பெறுதுமென்பது. மற்றுக் கட்டளை யடியல்லாத ஆசிரியவடியுள் உரியசைமயங்கிய ஆசிரியவுரிச்சீரும் வரு மென்பதூஉங் கூறுகவெனின், அவை விலக்குண்டது கட்டளையடிக் காதலின் விலக்காதவழித் தன்சீர் வருதல் விதந்தோதவேண்டாவென் பது முற்கூறியவாறே கொள்க. (உசை)

337. கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே.

இதுவுங் கட்டளையடிக்கு எண்ணப்பட்டதோர் சீர்வரையறை.

* "ஒங்குதிரை யடுக்கம்பாய்ந்து" என்பதும் பாடம்.

இதன் பொருள் : சலித்தலை அடிவயின்—கலிப்பாவினது கட் டளையடிக்கண் ; நேரீற்றியற்சீர் நிலைக்கு உரித்தன்று—தேமா புளிமா என்னும் இரண்டியற்சீரும் வரப்பெறா ; தெரியுமோர்க்கே—தூல்ல லோசையைத் தெரிவார்க்கு, என்றவாறு.

ஆகாவென்றவற்றைக் சாட்டலாவதில்லை, ஆகாவென்பதல்லது. கட்டளையடிக்கண் வரைந்தோததலே, அல்லனவற்றுக்கண் வருமென்ப தாம். அவை "பாஅ லஞ்செவிப் பிணைத்தாண் மானிரை" (கலி-5) எனவும், "உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையை" (கலி-38) என வும், "காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்" (கலி-39) என வும் கலியடியுள் வந்தன. இயற்சீர் பத்துள்ளும் இவையிரண்டனை யும் கலிக்கண் வாராவெனவே ஒழிந்த ஆசிரியத்துள்ளும் வெண்பா வுள்ளும் பத்தியற்சீரும் வேறவேற வந்து அடியுறழுமென்பதூஉம், இதற்காயின் எட்டியற்சீர் அடியுறழுமென்பதூஉங் கூறினாமும். எனவே ஆசிரியம், இயற்சீர்பத்தும் ஆசிரியவுரிச்சீரிரண்டுமெனப் பன்னிரண்டுசீர் பெறுவதாயிற்று. வெண்பாவும் இயற்சீர்பத்தும் வெண்சீர்நான்குமெனப் பதினான்குசீர் பெறுவதாயிற்று. கலிப்பாவடி யின் இயற்சீரெட்டும் வெண்சீர்நான்கும் ஆசிரியவுரிச்சீரிரண்டுமெனப் பதினான்குசீர் பெறுவதாயிற்று. அசைச்சீருளாவன முன்னர்ச்சொல் லுதும். இனி, வஞ்சிப்பாவிற்கும்,

'வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய' (தொல்-செய்-22.)

என முற்கூறியவாற்றான் ஈரசைச்சீர் பதினாறும் மூவசைச்சீர் அறுபத்துநான்குமென வெண்பதுசீருங்*கட்டளையடியல்வழியுரியவென வெய்துவித்ததாம். அவற்றுள் தேமா புளிமாவென்னும் இரண்டு சீரும் ஆகாத இடம் இனிச்சொல்லுகின்றான். (உரை)

338. வஞ்சி மருங்கி னுமிறுதி நில்லா.

இது வஞ்சிப்பாவினுள் வாரா இயற்சீர் கூறுகின்றது.

'கட்டளையடியில்வழி' என்பதும் பாடம்.

இதன் பொருள்: வஞ்சி மருங்கினும்—மேற்கூறிய இயற்சீர் இரண்டும் வஞ்சிப்பாவினும்; இறுதி கில்லா—ஈற்றில் நிலைமைப்படா, என்றவாறு.

வஞ்சித்தளைமருங்கி னென்னுது வஞ்சிமருங்கினென வாளாது கூறினுன் அது கட்டளையடிக்கல்லாமையின். வஞ்சிப்பாவினுட் சீர் வருங்கால் ஒழிந்த பாவிற்குப்போலச் சீரியைந்திறுதன்மாத்திரையன்றிச் சீர்தோறுந் தம்முள் வேறுபாடு தோன்றத் தூங்கப்படும். அவ்வாறு தூங்கலோசைப்பட நில்லா தேமா புளிமாவென்னும் இரண்டு சீருமென்றவாறும். உம்மை இறந்தது தழீஇயிற்று. இறுதிநில்லா வென்பது இறுதலோடுநில்லாவென்றவாறு. எனவே, தூங்கலோசைப்பட முதற்கண் வாராவென்றவாறும். என்னை? இருசீரினுள் வருஞ்சீரோடு தொடருங்கால் இறுதற்றொழில்பெறுவது நின்றசீராகலி னென்பது. இதனுனே ஒழிந்த இயற்சீரில் தூங்கலோசைப்பட நிற்கு மென்றவாறும். "கொற்றக் கொடியுயரிய" எனவும் "களிறுங் கதவெறிந்தன" எனவும் நேரீற்றியற்சீர் முதற்கண் தூங்கினவாயின.

"அகல்வயன் மலைவேலி
நிலவுமணல் வியன்கானல்" (புறம்-17.)

என ஒழிந்த இயற்சீர் தூங்கினவென்பது. இவையும் கட்டளையல்லவென்பது 'அசையுஞ் சீரும்' (தொல்-செய்-11) என்பதனுன் அறிக. இறுதிக்கண் விலக்காமையின்,

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்" (புறம்-2.)

என நேரீற்றியற்சீர் வந்தன.

இனி ஈற்றுக்கண் வருதல் சிறுபான்மையென்பாரும், * யாண்டும் இறுதிக்கண் வாராவென்பாரும் இச்சூத்திரத்தை யுரைக்குமாறு:

---

* இளம்பூரணர் 'வஞ்சிப்பாவினுள் அடியீற்றின் நில்லாது நேரீற்றியற்சீர் என்றவாறு; எனவே, அடிமுதற்கண் நிற்கப்பெறும் என்றவாறும்' என்று உரைகூறுவர்.

வஞ்சியடியிறுதிக்கண் இவை வாராவெனப் பெரும்பான்மைபற்றி ஒதினனெனவும், இஃதொருதலையாக விலக்கினனெனவுஞ் சொல்லுப. அவ்வாறு கூறின் முதற்சண் அவ்விருசீரும் வருதல் பெரும்பான்மையாதல் வேண்டுமென மறுக்க. என்றூர்க்குத் "தன்பால் வெங்கள்ளி-னெலிவே லிலங்குதடக்கை" எனவும், * "புனற்காற் புணர்மருதின்-போதப்பிய புனற்றுமரை" எனவுந், † "தேன்றுட் டுங்கரும்பின்" எனவும் வந்தனவாலெனின் அங்ஙனம் நலிந்து காட்டினவை அளபெடை வெண்சிராம்; அது செவிசருவியாக உணர்க. என்னை? "கொற்றக் கொடியுயரிய" என அளபெழாதவழித் தங்சாமையின். அல்லதூஉம், நேரீற்றியற்சீர் இறுதிச்சண் நிற்றல் பெரும்பான்மையெனப்படும்;

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீரும்." (புறம்-2.)

எனவும், "ஆழ்ந்துபட்ட கிடங்கி-னுயர்ந்தோங்கிய வாயில்" எனவும், ஒரோ செய்யுட்கண்ணே டலவந்தமையினென்பது. மருங்கென்ற தனானே நேர்நிலைவஞ்சிப்பகுதிக்கே இவ்வரையறைசொள்ளப்படும். கொள்ளவே, ‡இயனிலைவஞ்சிக்கு இவ்வரையறையின்றென்பது. மற்று "மண்டிணிந்த நிலனும்" என்பது நேர்நிலைவஞ்சியாகலின் அடிநிலையோடு அடிச்கூட்டத்துச்சண் அதற்குத் தங்கலோசை கொள்ளுமாறென்னையெனின், அஃது இலச்சண அடியன்மையின் ஈண்டாராய்ச்சியின் றென்பது. நேர்நிலைவஞ்சியுள் இலச்சண அடிச்சண் இயற்சிறெல்

---

* "புன்காற் புணர்மருது" என்பதும் பாடம்.

† "'புன்காற் புணர்மருதின்-போதப்பிய புனற்றுமரை' 'தேன்றுட் டுங்கரும்பின்' என நலிந்து கூறியவழித் தங்கின" என்பது நச்சினார்க்கினியர் உரை.

‡ 'வியனிலை வஞ்சிக்கு' என்பதும் பாடம்.

லாம் வாராவென்பது 'குறளடி முதலா வளவடி காறும்' (தொல்-செய்-57) என்புழிச் சொல்லுதும். (உசு)

339. இசைநிலை நிறைய நிற்குவ வாயி
னசைநிலை வரையார் சீர்நிலை பெறலே.

இது நான்கசையுஞ் சீராகும் இடனுமுடைய என்கின்றது.

இதன் பொருள்: ஓசைநிலை நிறையாமையாற் சீர்த்தன்மைபட நிறைந்து நிற்குமாயின் அசை நிலைமைப்பட்ட சொற்களை யெல்லாஞ் சீர்நிலைபெறுதற்கண் வரையார், என்றவாறு.

"கழறொழா மன்னர்தங் கை"* என்று நேரசைச் சீராயிற்று.

"புனலுட்ன் பேரே வரும்"† என நிரையசைச்சீராயிற்று.

"எய்போற் கிடந்தானென் னேறு" (புறப்-வெண்-மாலை-வாகை-22.)

என நேர்பசைச் சீராயிற்று.

"மேவாரை யட்ட களத்து" (களவழி-25,27,36.)

என நிரைபசைச்சீராயிற்று. பிறவுமன்ன. இவற்றை உண்மைவகையாற் சீராமென்றுன் அல்லன்;

---

* "அவிழ்ந்த தூணியசைக்கு மம்பலமுஞ் சீக்கு
மகிழ்ந்திடுவார் முன்ன மலருங்-கவிழ்ந்து
நிழறுழா யானை நெடுமான்றேர்க் கிள்ளி
கழறொழா மன்னர்தங் கை"

என இச்செய்யுள்பொயீ்யா வாக்கென்ற யாப்பருங்கலவிருத்தி 36-வது சூத்திரவுரையிற் காட்டப்பட்டது.

† "பொன்னுரை மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபோர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்-கன்னே
மனமெடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனலுடன் பேரே வரும்"

என இச் செய்யுள்முழுதும் யாப்பருங்கலவிருத்தி 12-வது சூத்திர வுரையில் எடுத்துக் காட்டப்பட்டது.

'தொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல'

(தொல்எழுத்-மொழி-17.)

என்ருற்போலக் கூறினனென்பது. இவை இன்னபாவினுள் வரு மென்பது முன்னர்ச் சொல்லுதும். இங்ஙனங் கூருக்கால் *வெண்பா வின் ஈற்றடியை முச்சீரடி யென்னுமாறு இல்லையென்பது. (உ)

340. இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே தளைவகை சிதையாத் தன்மை யான.

இஃது எய்தியதொருமருங்கு மறுத்தல் நுதலிற்று; இயலசை யிரண்டுஞ் சீர்களெறினுந் தளைகொள்ளப்படா வென்றமையின். இனி, எய்தாததெய்துவித்ததாமாம். என்னை? உரியசையால் தளைகொள்ளுமாறுணர்த்தினமையின்.

இதன் பொருள்: இயற்சீர்க்கண்ணே கூறுபடுத்து இயற்றப் படும், அவை தளைவகை சிதையாத்தன்மைக்கண், என்றவாறு.

'பாற்படுத்'தெனவே அதிகாரத்தான் இறுதிநின்ற உரியசை யிரண்டும் பகுத்துக்கொள்ளப்படும்.

நான்கியற்சீருள் இன்ன இயற்சீர்ப்பாற் படுமென்ருனெனின், 'கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்' (தொல்-செய்-25) என அதி காரம் வருகின்றமையின் தேமா புளிமாவென்னுஞ் சீர்போல இரண்ட சையுந் தளைகொள்ளுமென்றமையின் இயற்றுக வென்ருனென்பது. தாளுக இயல்வதன்மையின் இயற்றுகவெனப்பட்டது. தளைவகை சிதையாத் தன்மையானவென்று இடம் நியமித்ததென்னையெனின், சீர்வகையான் அசைச்சீரென வேறுப் நிற்றலுடைய, தளைவகை சிதை யாத்தன்மை நோக்கியே இயற்சீர்ப்பாற்படுத்து இயற்றுகவென †அடங் கக்கூறிற்றென அறிவித்தற் கெனவுணர்க.

எனவே என் சொல்லப்பட்டதாம்? இவ்வுரியசையிரண்டுஞ் சீர் வகையான் வேறு வேறு எண்ணித் தொகைபெற்றுத் தமக்கு ஒதிய அடியுறழுமெனவும், அஃதெண்ணப்பட்ட தளைவகை நோக்குங்கால்

---

* "வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்" (தொல்-செய்-72.)

† 'அடக்கம்' என்பதும் பாடம்.

வேறுவே றெண்ணுத்தொகைபெற்று இயற்சீரெனவே யடங்குமென வுங் கூறப்பட்டதாம். இன்னுந் தளைவகைக்கண்ணெனவே, கட்டளை யடிக்கண்ணதே இவ்வரையறை யென்பதூஉம் அல்லாதவழி இந்நான் கசையும் வரையறையின்மையின் தளைகொள்ளப்படாதென்பதூஉம் கூறப்பட்டதாம். அஃது ஓரசைச்சீரல்லாத சீராயின் கட்டளையடியல் வழியுந் தளைகொள்பவோவெனின், தளைகொள்ளிற் கட்டளையடி யெனப்படுமாதலின் அல்லாதவழி வந்தசீர் தளைகொண்டனவென்றல் பயனில் கூற்றுமென மறுக்க.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு" (பத்து-திருமுரு-1.) என்றவழி ஆசிரியத்துட் பிறதளை வந்ததென்று இலக்கணங் கூறி வழுவமைக்கல் வேண்டா. என்னை? அது பெருவரவிற்றாகலின்; அதனுன், வருஞ்சீர்வகையான் வந்ததென்று ஒழிதலே அமையும், வரையறை இல்லனவற்றுக்கு வரையறைகூறல் குற்றமாகலினென்பது. மற்று இவ்வுரியசைச் சீரிரண்டும் வரையாது கூறினமையின் மூன்றுபாவிற்குஞ் செல்லும்பிறவெனின் 'கலித்தளை யடிவயினேரீற் றியற்சீர் நிலைக்குரித் தன்று' (தொல்-செய்-25) எனக்கூறி ஈண்டு இவற்றை இயற்சீர்ப்பாற்படு மென்றமையின் இவையுங் கலிப்பாவிற்கு விலக்குண்டனவென்பது. எனவே, ஆசிரியத்திற்கும் வெண்பாவிற்கும் உரியசைச்சீரிரண்டும் உரியவாயின. ஆசிரியத்திற்கு மேற்கூறிய சீர் பன்னிரண்டும் இவையிரண்டுமென அடியுறழ்ஞ்சீர் பதினேன்காயின. வெண்பாவிற்கு முன்னரெய்தியசீர் பதினேன்கும் இவையிரண்டுமாக அடியுறழ்ஞ்சீர் பதினாறுயின. கலிப்பாவிற்கு மேற்கூறியசீர் பதினேன்குமேயாயின. இங்ஙனம் வகுக்கப்பட்ட சீர் நாற்பத்துநான்கினையும் சீர்வகையான் உண்மை நோக்கித் தொகுப்ப இயற்சீர்பத்தும் ஆசிரியவுரிச்சீரிரண்டும் வெண்சீர் நான்கும் அசைச்சீரிரண்டுமெனப் பதினெட்டாம்.

மேல் ஐவகை அடியெனப்பட்ட அறுநூற்றிருபத்தைந்தடியும் இச்சீர் பதினெட்டானுந் தோற்றிக்கொள்ளப்படும். இப்பதினெட்டுச் சீரும் இருவீலமை யெய்துவனவும் எத்தாதனவுமாகி முப்பத்தொன்

ருகி விரியுமாறு முன்னர் 'எழுத்தள வெஞ்சினும்' (தொல்-செய்-43) என்புழிச்சொல்லுதும். (உசு)

341. வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே.

இது வெண்சீராற் கலித்தளையாமாறுணர்த்துதல் நுதலிற்று. 'கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ' (தொல்-செய்-24) என்புழி அவ்வாசிரியவுரிச்சீராற் கலித்தளையா மென்றமையின்; அவ்வதிகாரம் இடையறாது நின்றமையின் இதுவுங் கலித்தளைக்கே இலக்கணமாயிற்று. என்றமையின் 'வஞ்சி மருங்கினும்' (தொல்-செய்-26) எனவும் 'இசை நிலை நிறைய' (தொல்-செய்-27) எனவும், 'இயற்சீர்ப்பாற்படுத்து' (தொல்-செய்-28) எனவும் இம்மூன்றுசூத்திரம் இடையிட்டனவாலெனின், அற்றன்று; கலிப்பாவிற்கு விலக்கப்பட்ட நேரீற்றியற்சீர் அதிகாரம்பற்றி இடைபுகுந்ததல்லது கலித்தளையதிகாரம் விலக்கினமையால

இதன் பொருள்: வெண்சீர் பலதொடர்ந்து ஒருகலியடியுள் நின்றவழி அவ்வெண்சீருள் ஈற்றுநின்ற சீரின் முதல்வந்த நேரசை மற்றை நிரைமுதல் வெண்சீர்வந்து முன்னைய இரண்டுங்கலித்தளையாய வாறுபோலக் கலித்தளையாம், என்றவாறு.

மேனின்ற அதிகாரத்தால் 'தளைவகை சிதையாத் தன்மைக்கண்' என்பது கூட்டியுரைக்க. எனவே, வெண்சீர்ப்பின்னர் நிரைவந்து தட்டலே சிறந்ததெனவும் நேர்வந்து தோன்றினும் அவ்வோசையே படந்து ஒருங்கர்த்தாமென்பதூஉங் கூறி அவ்வாறுங்சாலும் இறுதிச் சீரின் முதலசையே நிரையியற்றுவதெனவுங் கூறினானும். இது 'மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்-மொழியா ததனை முட்டின்றி முடித்தல்' என்னும் உத்திவகை. வெண்சீரிறுதியென்பது ஏழாவதன்தொகை; என்னை? ஈறெனப்பட்டது சீராகலின். வெண்சீருள் ஈற்றுச்சீரெனவே வெண்சீர் பலவுந் தொடர்ந்து நிரைமுதல் வந்தவழியன்றி இறுதிச்சீரொன்றியது நிரையசையியற்றுகா தென்பதாம். இதனான் நிரைமுதல் வெண்சீர்வந்து நிரை தட்டுங்கால் இயற்சீர் அடிமுதற்கண் வருமென்பதூஉங் கூறப்பட்டதாம். மற்று,

ஈறென்றது ஈற்றுச்சீரினையாயின் அச்சீரினிடையும் இறுதியும் இன்ற அசையினே நிரையசையியற்றென்று கொள்வனெனின், இன்றசீரின் ஈற்றசை வருஞ்சீரின் முதலசையோடு தட்டில் தளையாவதன்றி ஒன்றிடையிட்ட அசையுஞ் சீரும்பற்றித் தளைகொள்வாரின்மையின் அது கடாவன்றென்பது.

இனி, வெண்சீரென்பது * அஃறிணை யியற்பெயராகலானும், பன்மைவினைகொண்டு பால் அறிய வந்ததன்றுயினும் அதனை யானைக்கோடென்றாற்போல இறுதி யென்றமையானும் பன்மைப் பாற்பட உணர்க. என்னை ? பின்னேன் முன்னேன் என்றவழி அவர்க்கு முன்னும் பின்னும் வேறு சில ருளரென்பது உணர்த்துமாகலின். என்றார்க்கு, வெண்சீரிறுதி நீடுகொடி, குளிறுபுலி வந்தவழி அவற்றுள் முன்னின்ற நேர்பசை நிரைபசைகளைக் கலிப்பாவினுள் கலித்தளையாக்குதற்கு நிரையசையியற்றென்று னென்னுமோவெனின், அற்றன்று ; வெண்சீர்களின் இறுதியெனவே மூன்றுஞ்சீரும் நான்காஞ் சீரும் வெண்சீராகல்கூறி, நிரைமுதல் வெண்சீர்வந்து நிரைதட்டலென வே இரண்டாஞ்சீரும் வெண்சீராகல் வேண்டுமெனக்கூறி, நிரைதட்டு மெனவே இயற்சீராணும் ஆசிரியவுரிச்சீராணும் நிரையீறுயினவெல் லாம் முதற்கண் நிற்குமெனவுங் கூறினன். கூறவே, ஆசிரியவுரிச்சீர் இடைவில்லாவெனவும் அங்ஙனம் நிற்பிற் கலியோசையழியு மென்பதூஉமாம் இவர் கருத்தென்பது. அல்லதூஉம் வெண்சீர்க்கு உரியசை யின்மையானும் அற்றன்றென்பது. எனவே, ஈற்றுச்சீர் நிரை முத லியற்சீர்வரினும் ஆண்டுத் துள்ளலோசை ஒடுங்குமென்பதாம்.

" அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும் " (கலி-11.)

என்பது வெண்சீரிறுதி நிரையொற்றட்ட கலித்தளை.†

---

* அஃறிணை யியற்பெயரின் இலக்கணம் " தெரிவிலை யுடைய அஃறிணை யியற்பெயர், ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே " (தொல்-சொல்-பெய-17) என்னும் சூத்திரத்தான் உணர்க.

† " 'அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்' என்புழி வெண்சீரிறுதி நிரை முதலியற்சீர் தட்டலிற் றுள்ளலோசை சிறவாதாயிற்று; 'பண்டரங்க மாடுங்காற் பிணையெழி லணைமென்றோள்' போன்று" என்பர் நச்சினார்க்கினியர்.

"அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாண்" (கலி-11.) என்பது வெண்சீர்கள் பகைத்துவந்து ஈற்றுச்சீரின் முதற்கணின்ற நேரசை நிரையசைபோலக் கலியோசை கொண்டமையின் அது கலித் தளையெனப்பட்டது. இனி, வெண்சீர் நான்கும் ஒன்றிவரினும் கலித்தளையாகுமேனும், அது வெண்பாவடி யெனவும்பட்டுத் திரிவு படுதலின் அதனைக் கட்டளையடி யென்றது இறுதிக்கண் ஒரோவழி ஒருசீர் ஒன்றிவரினும் அதன் முதற்கட் பல வெண்சீர்வந்து பகைத் தலிற் கலியோசையே காட்டுமென்றுனென்பது. அஃதேற்,

"பண்டாங்க மாடுங்காற் பிணையெழி லணைமென்றோள்"
(கலி-கடவுள்வாழ்த்து.)

என்றவழி இடைநின்றசீரின் நேரசை நிரையசையியற் றென்னுமோ வெனின், அது கட்டளையடியென்பது 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' (தொல்-செய்-11) என்பதனுன் அறியப்படும். அல்லா தாரும் இவை செவிகருவியாக உணர்தற் கருமைநோக்கி அடியறியுந் தன்மை அரிதென்றுசொல்லுப. இனி, இயற்சீரானன்றித் தளை கொள்ளாமோ வென்பார் 'தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா' (தொல்-செய்-55) என்பதனுன் வெண்சீர்க்குத் தளைவிலக்கல் வேண்டி அவ்வெண்சீரினையும் இயற்சீராக இயற்றிக்கொள்ளப்படு மென்றற்கு ஒருவெண்சீரின் ஈற்றசை நிரையசையியற் றென்றுனெனக் கூறி, ஞாயிறென்னும் இயற்சீரினை மாசெல்வாயெனப் பின்னுமொரு கால் *திரிந்ததனையே திரியாமல் நிறுத்தி நிரைமுதல் வெண்சீர்வந்து நிரைதட்பினுங் கலியாமெனக் காட்டுப. அது ஞாயிறு புலிசெல்வாய் மாசெல்வாய் என வரும். இவ்வாறே, 'கலித்தளை மருங்கிற் கடியவும் படா' (தொல்-செய்-24) என்று ஆசிரியவுரிச்சீர்க்குந் திரிபுகூறுரோ வெனின், அது நினைந்திலர்போலுமென்று இகழ்ந்துரைப்பாராவர். மற்று, வெண்சீரிறுதி நிரைவந்தாற் கலித்தளையாமென்பதற்கு ஒத்து வேறுண்டாயினன்றே நேரும் நிரையுந் தட்டதனை நேரும் நிரையும் பகைத்ததெனவும் வேண்டுவதெனவும் அங்ஙனம்பொருளுரைப்பார்க்கு எவ்வாற்றுனும் இச்சூத்திரம் ஏலாதெனவுந் 'தன்சீர் வகையினுந்

* 'திரித்ததனையே' என்பதும் பாடம்.

தலைநிலை வகையினும்' (தொல்-செய்-54) என்றவழித் தன்சீராலுந் தளைகோடுமாகலானும் அது பொருந்தாதென மறுக்க. இனி, வெண்சீரின் ஈற்றசை யொன்றேயாகலான் இயற்றென்று ஒருமை கூறினான். இடைநின்ற நேரும் நிரையுங் கோடுமென்னுமையின் இங்ஙனந் திரிந்த நிலைமை வஞ்சியுரிச்சீரெனப்படும். இனி, வெண்சீரென்பது எழுவாயாயின் ஈற்றசை நிரையென்பது இயற்சீரின் பெயராதல் வேண்டும். அங்ஙனங் கருதினும் அசையென்பதனை ஒருகாற்சொல்லி ஈற்றசை நிரையசையென லாகாதென்பது. அல்லதூஉம் வெண்சீரினை இயற்சீராக்கி அவ்வியற்சீரினை வெண்சீராக்குதல் *வினையிலுழப்பாகி வரம்பின்றுமென மறுக்க. என்றார்க்குத் தன்சீருள்வழித் தளைவகை வேண்டானெனல் "அரிதாய வறனெய்தி யருளினீயோர்க் களித்தலும்" (கலி-11) என்பதூஉங் கலித்தளையன்றுகிய செல்லுமென்பது. கலிப்பாவிற்கு ஒன்றுதுவருதல் உரிமையுடைய வெண்சீரெனவே வெண்பாவிற்கு ஒன்றுதுவருதல் யாண்டுமில்லை, ஒன்றிவரினல்லதென்பது உடம்படப்பட்டது. (உக)

342. இன்சீரிணைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையா ராசிரிய வடிக்கே.

இது கட்டளையடியல்லாதவழிச் சீர்மயங்குமாறுணர்த்துதல் நுத

இதன் பொருள்: இன்னிசைத்தாகிய துணிவிற்றுகியரின் ஆசிரியவடிக்கண் வெண்சீரும் வரப்பெறும், என்றவாறு.

"இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து" (புறம்-19.)

எனத் 'தலையாலம்' என்றவழி ஆசிரியவடியுள் இன்சீரினைய வெண்சீர் வந்தது. முன்னர் வெண்சீரினை 'இன்பா நேரடிக் கொருங்கு நிலையில' (தொல்-செய்-23) என விலக்கி ஈண்டு வரையாரென்றமையின் அது கட்டளையடிக்கென்பதூஉம் இது கட்டளையடிக்கன் றென்ப.

* உழப்பு—முயற்சி.

தாகும் பெற்றும். வருகுவதாயினென்று ஒருமை கூறினமையானும் இயையவென்றதனானும் ஓரடிக்கண் ஒன்றே யாண்டும் வருவதெனக் கொள்க. (கூ0)

343. அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீ
ரொன்றுத லுடைய வோரொரு வழியே.

இது வஞ்சியுரிச்சீர் ஆசிரிய அடியுண் மயங்குமாறுணர்த்தல் நுதலிற்று.

இதன் பொருள் : கட்டளையடியல்லாதவழி இன்சீரியைய வருகுவதாயின் வஞ்சியுரிச்சீர்களும் ஒரொருவழி ஆசிரியத்துள் வரப்பெறும், என்றவாறு.

ஒருவழியென்னுது ஒரொருவழியென்ற தென்னையெனின் அறுபது வஞ்சியுரிச்சிருள்ளும் பத்துச்சீரே வருமென்பதூஉம் அவை வருங்காலும் பயின்றுவாரா வென்பதூஉம் அறிவித்தற்கென்பது. அவை மாசேர்சுரம் புலிசேர்சுரம், மாசெல்காடு, புலிசெல்காடு, மாசெல்கடறு, புலிசெல்கடறு, பாம்புசேர்வாய், பாம்புவருவாய், களிறுசேர்வாய், களிறுவருவாய் என்பன. அவற்றுக்குச் செய்யுள் :

"மாரியொடு மலர்ந்த மாத்தாட் கொன்றை
குறிஞ்சியொடு கமழுங் குன்ற நாடன்"

என மாசேர்சுரம் புலிசேர்சுரம் என்பன அடிமுதற்கண் வந்தன.

"முன்றிலாடு மஞ்ஞை மூதிலை *கறிக்கும்"

என்பது மாசெல்காடு வந்தது.

"அலரிநாறு துவர்வாய் †அமர்த்த நோக்கின்"

எனப் புலிசெல்காடு வந்தது.

"கண்போன் மலர்ந்த வண்டுமயங்கு தாமரை"

என மாசெல்கடறு வந்தது.

---

* 'கொறிக்கும்' என்பதும் பாடம்.

† 'மாத்தா ணோக்கின்' என்பதும் பாடம்.

"கரடிவழங்கு குன்று கண்டுபோகி"

எனப் புலிசெல்கடறு வந்தது.

"காடுதேரா *வுழிதரு கடுங்கண்யானை"

எனப் பாம்புசெல்வாய் வந்தது.

† "சந்துசிதைய வுழுத செங்குரற் சிறுதினை"

எனப் பாம்புவருவாய் வந்தது.

"மருந்துநாடாத் திருந்து சிலம்பிற் கைக்கும்"

எனக் களிறுசெல்வாய் வந்தது.

"கடறுகவரா வீழிந்து ‡கான்யாறு வரிப்ப"

எனக் களிறுவருவாய் வந்தது. பிறவு மன்ன. நேர் நிரையாகியும் நேர்புநிரைபாகியும் ஈறுமுதல்பெறச் சீர்வந்தது. (கூக)

344. நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே.

இது முதற்சூத்திரத்துள் 'யாத்த சீரே யடியாப் பெறுஅ' (தொல்-செய்-1) என நிறுத்தமுறையானே சீருணர்த்தி அடியுணர்த்தியவெழுந்தான், அவற்றுள் இது நாற்சீரடியுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அடியென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன நாற்சீரடி, என்றவாறு.

எனவே, இருசீரானும் மூச்சீரானும் ஐஞ்சீரானும் அறுசீர் முதலியவற்றானும் வருமாயினும் அவை சிறப்பில வென்றவாறும். இருசீரான் வருவதனை என்ன அடியென்னுமோவெனின் அடிக்கெல்லாம் எழுத்துவகையானே மேற் பெயர் கூறும். அவ்வாறே சீர்வகையானும் கொள்ளப்படுமென்பது. சுருங்கிய எழுத்தான்வருவன குறளடியென்றும் அவற்றின் ஏறிய எழுத்தான் வருவன சிந்தடியென்றும் இடைனின்றன அளவடியென்றும் அவற்றின் நெடியன நெடிலடியென்றும்

* 'அழிதரு' என்பதும் பாடம்.

† 'செந்துசிதையாச் செங்குரற் சிறுதினை' என்பதும் பாடம்.

‡ 'கண்யாறு' என்பதும் பாடம்.

அவற்றினும் நெடியன கழிநெடிலடியென்றுங் கூறுமாகலான், அவ்வாறே இருசீரடி குறளடியென்றும் முச்சீரடி சிந்தடி யென்றும் நாற்சீரடி அளவடியென்றும் ஐஞ்சீரடி நெடிலடியென்றும் அறுசீர் முதலியன கழிநெடிலடியென்றுங் கோடுமென்பது. இவற்றினெல்லாம் நாற்சீரடி சிறந்ததென்றதென்னையெனின், அளவிற்பட்டமைந்தமையானும் அது பயின்றுவருதலானுமென்பது. உதாரணம்:

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்"
(பத்து-மலைபடு-1.)

எனவும்,

"அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா னூட்ட" (நாலடி-1-1.)

எனவும்,

"அரிதாய வறனெய்தி யருளினோர்க் களித்தலும்"
(கலி-11.)

எனவும் இவை மூன்றுபாவினும் அளவடி வந்தவாறு. இவற்றது விகற்பமெல்லாம் முன்னர்ச் சொல்லுதும். (சூ)

345. அடியுள் ளனவே தளையொடு தொடையே.

மது. நாற்சீரடியது சிறப்புணர்த்துதல் நுதலிற்று. எதிரது நோக்கியதோர் கருவியெனினும் அமையும்.

இதன் பொருள்: முன்னர்க்கூறிய நாற்சீரடியுள் உள்ளனவே தளையுந் தொடையும், என்றவாறு.

மற்று, மாத்திரையும் எழுத்தும் அசையுஞ் சீரும் அவ்வடியுள்ளன அல்லவோவெனின் அற்றன்று; அவ்வடிக்கணுள்ளன வெல்லாங் கூறுகின்றுனல்லன் இதுவென்பது. என்னை? *நாந் தளைப்பகுதியாற்

---

*"எழுபது தளைப்பகுதியாற் கட்டளையடியென உறழ்வதூஉம், அறுநூற்றிருபத்தைந்தடியென வரையறைப் படுவதூஉம், பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்றென்னும் தொடைப் பகுதி கொள்ளப்படுவதூஉம் நாற்சீரடியே யாயிற்று; எனவே, நாற்சீரான் வருஞ்சீர்வகையடிக்குத் தளையுந்தொடையுங் கொள்ளின், அவை வரையறை யின்றென உணர்க. அளவடி இரண்டியைந்தும் ஒன்று வந்துந் தொடைகோடலும், ஒழிந்தவடி நான்கும் விகற்பத் தொடைகொள்ளாமையும் உணர்க." என்று நச்சினார்க்கினியர் உரை கூறினர்.

கட்டளையடியென உறழ்வதூஉம் அறுநூற்றிருபத்தைந்தடியென வரை யறை கூறுவதூஉம் அவ்வளவடியே என்றற்கு நாற்சீர்க்கண்ணது தளை யென்றுனென்பது. முன்னுஞ் சீர்வகையான் வகுக்கும் அடியன்றிக் கட்டளையடியெல்லாந் தளைவகையுடையவென விதந்தோதி வந்த தனுனே நாந் தளைகொள்வது நாற்சீரடிக்கணென்பான் அடியுள்ளது தளையென்றுனென்பது. மற்றையடிக்கட் டளை கொள்ளின் அது வரையறையின்றென்னு மாகலின் ஈண்டுவரைந்தோதினுனென்பது. அது தக்கது, மற்றுப் பொழிப்பும் ஒருூஉம் போலாத மோனை முதலிய தொடையெல்லாம் அடியிரண்டியையத் தொடுக்கல்வேண்டுமென்றே? அவற்றை அடியுள்ளனவே தொடையுமென்ற தென்னையெனின், அற்றன்று; நாந் தொடையுறழச் சீர்கொள்வதூஉம் இவ்வளவடிக்க ணென்பது கூறினுன், ஆண்டுத் தொடை கூறும்வழி வரையாது கூறு மாகலினென்பது. எனவே, கட்டளைப்படுப்பதூஉந் தொடையுறழ்தற்கு இடனுவதூஉம் நேரடியேயெனச் சிறப்பித்தவாறு. (கூகூ)

316. அடியிறந்து வருத லில்லென மொழிப.

ளைப்பாட்டிற்குந் தொடைக்கும் ஆவதோர் கருவி.

இதன் பொருள்: அறுநூற்றிருபத்தைந்து அடியுள்ளும் ஓரடி யின் இறந்துவாரா மேற்கூறிய தளையுந் தொடையும், என்றவாறு.

இதன் பொருள், மேற்கூறிய தளைவகையேயன்றி அடியோடு அடிக்கூட்டத்துத் தளைகொள்ளுங்காலும் ஓரடிக்கண்ணே வழுவாமற் கோடல்வேண்டுமெனவும், அங்ஙனமே தொடைகொள்ளுங்காலும் வந்தவந்த அடியே வரப்பெறுவதெனவுங் கூறியவாறு. எனவே, தேமா தேமா தேமா தேமா வென்னும் அடிக்கண் தொடை கொள்ளுங்கால் "வாமா னேறி வந்தான் மன்ற" என முன் வந்த அடியே வரல்வேண்டு மென்பதூஉம் அன்றித் 'தேமாஞ் சோலைத் தீந்தே னுண்டு-காமர் தும்பி யாதல் கண்டது' என வரில் தளைவழுவாகிப் பதின்மூவாயிரத்தெழு நூற்றெட்டெனப்பட்ட தொடைப்பகுதியுட் படாவென்பதூஉம் பெற் றும். இனி வெண்பாவினுள் அவை வருமாறு:

"சென்றே யறைப வொருகால் சிறுவரை
கின்றே யறைப பறையினை நன்றேகாண்" (நாலடி-3-4.)

எனப் பன்னிரண்டெழுத்தடி ஒன்றினையும் இருகாற் சொல்லிக் கூட்டி எதுகைத்தொடை கொள்ளுங்கால் அடியோடு அடிக்கூட்டத்துத் தலைவகை சிதையாது வந்தமையின் அத்தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டென வரையறைப்பட்ட தொடையுட்பட்டது.

"யாணூடத் தாணுணர்த்த யாணுணரா †விட்டபின்
ருணூட யாணுணர்த்தத் தாணுணர்ந்தான்-றேணூடு"‡
(முத்தொள்ளாயிரம்.)

என்றவழிப் பதினென்கெழுத்தடியே தொடுத்தமையின் அடியிறந்து வந்ததன்றியினுந் தலைவகை ஒன்றுமையான் இது பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டினுட்படாதாயிற்று. மண்டு வரகு வரகு வரகு என் கின்ற அடியினை மீட்டுந் தந்து தொடைகொள்ளுங்கால் மண்டு வரகு வரகு வரகு என்றது நேரொன்றுசிரியத்தளை தட்டுமாதலான் இது வழுவெனப்படுமென்பது. சலிப்பாவிற்கு அன்னதோர் வரையறை இல்லை. இருவாற்றானும் வருமென்பது. என்னை ? 'வெண்சீ ரீற்றசை கிரையசை யியற்றே' (தொல்-செப்-29) என்றாராகலின்.‖ மேலைச்சூத் திரத்தானே தலைவகை சிதையாமல் அறுநூற்றிருபத்தைந்து வகைப் படுவது நாற்சீரடியே என்பதூஉங் கூறி, அந்நாற்சீரடியே நாம் முன்னர் வேண்டுந் தொடை விகற்பத்திற் குரியவென்பதூஉங் கூறினன். இச் சூத்திரத்தானே அத்தொடைகொள்வது தம்மின் வேறுகாத இரண் டடிக்கண்ணென்பதூஉம் அறுநூற் றிருபத்தைந்தடியுள் ஒன்றினை இருகாற்சொல்லித் தொடை கொள்ளப்படுமென்பதூஉம், அங்ஙனந்

---

* 'சென்றே யெறிப' 'கின்றேயெறிப' என்பனவும் பாடம்.

† 'விட்டதற்பின்' எனவும் பாடமுண்டு ; ஆனால், இங்ஙனம் பாடம் ஓதின் இது பதினென்கெழுத்தடியாமாறில்லை.

‡ 'தேணூடு' 'தேணூறு' என்பனவும் பாடம்.

‖ 'ஏனை அகவலும் வெள்ளையுமே வரையறைப்பட்டன' என் பது நச்சினார்க்கினியருரை.

தொகுக்குங் காலும் அடியோடு அடிக்கூட்டத்தின் கண்ணும் தளை வகை சிதையாமல் வேண்டுமென்பதூஉங் கூறியவாறுயிற்று. இவற்று னெல்லாம் நாற்சீரடியே சிறப்புடைத்தென்பது பெற்றும். இன்னும் அதன் சிறப்புடைமையே கூறுகின்றுன். (நூசு)

347. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

இது, நாற்சீரடியே விசேடித்துக்கூறி, அதனது இடத்தானே பாட்டென்பதோர் முதற்பொருள் தோன்றுமென்பதுணர்த்தியவாறு. எனப்படுமென்றதனுன் இவ்வடிகளான் வந்த செய்யுளே சிறப்புடை யனவென்பதூஉஞ் சொல்லியவாறு. மாத்திரை முதலியவற்றை உறுப்புக்களான் இத்துணை மாத்திரை கொண்டது செய்யுளென்று னும், இத்துணை அசையுஞ் சீரும் தொடையுங் கொண்டது செய்யு ளென்றுனும் அளவியல் கூறிய உறுப்புக்களான் வரையறுக்கப்படா. *அடியளவே கூறச் செய்யுட் புலப்பாடாமென்பது. எனப்படும் என்ற தனுன், ஒழிந்த அடிகளானும் அவ்வாறு வருமாயினும் அவை சிறப் பிலவென்பது.

இதன் பொருள் : 'அடியின் சிறப்பென்பது'—அடி இரண்டும் பலவும் அடுத்துவந்த தொடையே பாட்டு, என்றவாறு. தலையிடை கடைச் சங்கத்தாரும் பிற சான்றோருஞ் நாற்சீரடியான் வரும் ஆசிரிய மும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையுஞ் செய்தார்; வஞ் சிப்பாச் சிறுவரவிற்றெனக்கொள்க.

"மாயோன் மார்பி லாரம் போல
மணிவரை யிழிதரு மணிகிள ரருவி
நன்பொன் வரன்று நாட
னன்புபெரி துடைய னின்னே செலினே"

என நாற்சீரடியான் ஆசிரியம் வந்தவாறு.

"மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்" (நாலடி-3-1.)

---

* 'அடியளவே கூறி' என்பதும் பாடம்.

என *அளவடியானே வெண்பா வந்தவாறு.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்" (கலி-11.)

எனக் கலிப்பா அளவடியான் வந்தது. பிறவு மன்ன. (கூடு)

348. நாலெழுத் தாதி யாக வாறெழுத்
தேறிய நிலத்தே குறளடி யென்ப. (கூசு)
349. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்ற மவ்வழி யான. (கூஎ)
350. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
யொத்த நாலெழுத் தொற்றலங் கடையே. (கூஅ)
351. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
யீரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப (கூக)
352. மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
†யீரெழுத்து மிகுதலு மிவட்பெறு மென்ப. (சo)

இவை ஐந்து சூத்திரமும் உரையியைபுநோக்கி உடனெழுதப் பட்டன.‡ நாற்சீரடி இத்துணைப்பகுதிப்படுமென அவற்றது பெயரும் முறையுந் தொகையு முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: நாலெழுத்து முதலாக ஆறெழுத்தளவும் வந்த நிலம் மூன்றுங் குறளடியெனவும், ஏழெழுத்து முதன் மூன்றுநிலனுஞ் சிந்தடியெனவும், பத்தெழுத்துமுதல் ஐந்துநிலனும் அளவடியெனவும் பதினைந்தெழுத்துமுதன் மூன்றுநிலனும் நெடிலடியெனவும் பதினெட் டெழுத்துமுதல் இருபதெழுத்துவரை மூன்றுநிலனுங் கழிநெடிலடி யெனவுஞ் சொல்லுப ஆசிரியர், என்றவாறு.

---

* 'அளவடியான் வந்தவெண்பா' என்பதும் பாடம்.

† 'ஈரெழுத்து மிகுதலும் ஈறுபெறு மென்ப' என்பதும் பாடம்.

‡ 'இவை ஐந்து சூத்திரமும், உதாரணச் சுருக்கமும் உரையியை பும் நோக்கி உடனெழுதப்பட்டன' என்பது நச்சினார்க்கினியருரை.

உசா — சம]

செய்யுளியல்

குறளடிநிலங்களை * வகுத்தொழியாது, ஒழிந்தனவும் வகுத்துரைத்தான்; அவை முதலிடைகடையென மூன்றுகூற்றான் †ஒன்றொன்றனிற் சிறப்பிழிபுடையனவென்று கொள்ளினுங் கொள்ளாமலென்பது. அவற்றுக்குச் செய்யுள் :

"‡போந்து போந்து சார்ந்து சார்ந்து
$நேர்ந்து நேர்ந்து மூசி நொந்து
வண்டு சூழ விண்டு §வீங்கி
நீர்வாய்க் கொண்டு நீண்ட நீல
||நீர்வா யூதை வீச ஊர்வாய்
மணியேர் நுண்டோ டொல்கி மாலை
நன்மணங் கமழும் பன்னெல் லூர
♦வளையேர் மென்றோ ளாயரி நெடுங்க
ணிணையீ ரோதி யேந்திள வனமுலை
யிறும்பமன் மலரிடை யெழுந்த மாவி
னறுந்தழை துயல்வரூஉஞ் செறிந்தேந் தல்கு
லணிநடை யசைஇய வரியமை சிலம்பின்
மணிமருள் ▲வணர்குரல் வளரிளம் பிறைநுத
லொளிநிலவு வயங்கிழை யுருவுடை மகளிரொடு
நளிமுழவு முழங்க வணிநிலவு தயங்குநக
ரிருந்தளவு மலரளவு சுரும்புலவு ■நறுந்தொடை

---

* 'வகுத்துரையாது ஒழிந்தன' என்பது முன் அச்சுப்பிரதியிலுள்ள பாடம். இது முரண்படுமாறு கண்டுகொள்க.

† 'ஒன்றினிற்சிறப்பு' என்பதும் பாடம்.

‡ இதனைப் 'பேர்ந்து பேர்ந்து' என்றும் படிக்கலாம்.

$ 'தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து' என்பதும் பாடம்.

§ 'நீங்கி' என்பதும் பாடம்.

|| "ஊர்வா யூதை வீச நீர்வாய்" என்பதும் பாடம்.

♦ "அமையேர்" என்பதும் பாடம்.

▲ 'வளர்குழல்' என்பதும் பாடம்.

■ 'நறுந்தொடையல்' என்பதும் பாடம். இப்பாடம் கொள்ளின் பத்தொன்பதெழுத்தான் ஆகவேண்டிய இவ்வடி, இருபதெழுத்தானாதல் கண்டுகொள்க.

கலனளவு கலனளவு கலனளவு கலனளவு
பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ
** தொருநீ மறப்ப வொழிகுவ தன்றே''*

என இதனுட் பதினேழுவிலத்து ஐவகையடியும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழி நெடிலடியென நாற்சீரடிதானே ஐவகைப்படுமென்று அவற்றது பெயரும் முறையுந் தொகையுங் கூறினான். தொகை பதினேழ்விலத்து ஐவகையடியென்பது. எண்ணிப் பார்க்க. இப்பெயரெல்லாங் காரணப்பெயர். மக்களுள் தீரக் குறியானைக் குறளனென்றும், அவனினெடியானைச் சிந்தனென்றும், ஒப்பமைந்தானை அளவிற்பட்டானென்றும், அவனினெடியானை நெடியானென்றும், அவனினெடியானைக் கழிநெடியானென்றுஞ் சொல்லுப. அவைபோற் கொள்க இப்பெயரென்பது. (சு0)

353. சீர்நிலை தானை யைந்தெழுத் திறவாது.

இது, மேலெழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட ஐவகையடிக்குஞ்

இதன் பொருள் : சீரது நிலைமைதான் ஐந்தெழுத்து இறந்து வாராது, என்றவாறு.

பெருமைக்கெல்லைகூறி வரையறுக்கவே சிறுமைக்கெல்லை வரையறைப்படாது ஒன்றுமுதலாக வருமென்பதாம். சீர்நிலைதானையென்பது பிரிநிலையேகாரம். அதனை அசைநிலையிற் பிரித்துக் கூறியவாறு. அதனை அவ்வாறு பிரித்துக்கூறவே அசைச்சீராயவழி ஐந்தெழுத்திறவாமை அவற்றுக்கில்லையென்பது கொள்ளப்படும். அஃதேல், †அவற்றுக்கெல்லை கூறினானெனின் அவை மூன்றெழுத்தினிறவாதென்பது உரையிற்கொள்க. தானென்பதனை இலேசுப்படுத்துக்கொள்ளினும் அமையும். மற்றிவற்றையுஞ் சீர்நிலைபெறுமென்பவாதலாற்

* ''ஒருநீ மறைப்ப'' என்பதும் பாடம்.
† 'அவற்றுக்கெல்லை கூறினானெனின்' என்பதும் பாடம்.

சீரென அடக்காஞவெனின், அடக்கானன்றே, அவை சீர்நிலையெய்
தியவழியும் அசையிரண்டாகாமையினென்பது. 'தனிவகை சிதை
யாத் தன்மை யான' (தொல்-செய்-28) என்று ஆண்டு வரைந்த
மையின் அதனைச் சீர்நிலையென வாளாது பொதுவகையா ஞைதான்.
அதுவே கருத்தாயின், அவற்றை நேர்பசை நிரைபசையெனக் கூறிய
தனானும், அவற்றை

'ஈரசை கொண்டு மூவசை புணர்ந்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே' (தொல்-செய்-12.)

என்றதனானும் பயந்ததென்னையென மறுக்க. அல்லதூஉம் இயற்
சீர்ப்பாற்படுத்தியற்றுகவெனவே இவைதா மியற்சிரல்ல, அவற்றது

பது. அல்லதூஉந் தேவரும் *நரகரும் மக்கட்பாற் படுத்துத் திணை
கொள்ளப்படுமென்ற தூணையானே பிறப்பானும் பெற்றியானும் மக்க
ளென வழங்கார். அதுபோல அசைநிலைத்தனையுஞ் சீர்நிலைத்தனையும்
ஒக்குமென்றதூணையானே அவை அசைச்சீரெனவே, அடையடுத்தே
சொல்லவேண்டுவனவற்றையும் வாளாதே சீரெனப்படுவனவற்றையும்
ஒருவகையானே †சீர்நிலையென மயங்கக்கூறல் குற்றமாமென்பது. மயங்
கக்கூறல் ‡குற்றமன்றென்பார் உளராயின் அவர்கருத்தினன் அதுவும்
அமையுமென்பது. ஒருசாதியல்லனவற்றைச் சாதியொன்றெனவும்
புகலார்; அதுபோலச் சீரிலக்கணமுடைய இயற்சீர் உரிச்சீர்களைச்
சீரெனக்கூறி அவ்வினத்தவல்லாத அசைச்சீரை இலேசினுற் கொண்
டானென்பது. ஒரெழுத்துச்சீர் நுந்தையென ஒன்றேயாம். இதனோடு
வண்டு என்னும் அசைச்சீர்கூட்ட இரண்டாம். ஈரெழுத்துச் சீர்
நான்கு; அவை, தேமா ஞாயிறு போதுபூ போரேறு என வரும்.
மின்னு வரகு என்னும் அசைச்சீரிரண்டனோடுங் கூட்ட ஆறும்.
மூவெழுத்துச்சீர் பத்து; புளிமா பாதிரி வலியது மேவுசீர் நன்கு

---

* 'நாகரும்' என்பதும் பாடம்.

† 'சீர்நிலைத்தனை யென மயங்கக்கூறல்' என்பதும் பாடம்.

‡ 'குற்றமென்பாருளராயின்' என்பதும் பாடம்.

பூமருது கடியாறு விறகுதீ மாசெல்வாய் நீடுகொடி எனவிவை. அரவு என்னும் உரியசைச்சீரோடுங் கூட்டப் பதிஞென்றும். நாலெழுத்துச் சீர் ஒன்பது ; அவை கணவிரி காருருமு பெருநாணு உருமுத்தீ மழ களிறு மாவருவாய் புலிசெல்வாய் நாணுவரை உரறுபுலி எனவிவை. ஐந்தெழுத்துச்சீர் மூன்று ; அவை நரையுருமு புலிவருவாய் விரவு கொடி என வரும். இக்கூறுபட்டனவெல்லாம் ஈண்டுக் காட்டுவாமா யிற்று,

'எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப' (தொல்-செய்-43.)

என வருகின்ற சூத்திரத்தினை நோக்கியென்பது. முடவுமருது என்பதனைக் குற்றுகரங் கலந்து ஐந்தெழுத்தென்று காட்டுவாருமுளர். அஃது உரியசைமயக்கமாகிய ஆசிரியவுரிச்சீராகலின் 'இன்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே' (தொல்-செய்-23) என்பதனுன் விலக்கப் பட்டதென்பது. இனி, நுந்தையென்பதனை ஈரெழுத்துச்சியென்பாரு முளர். அங்ஙனங் கூறின், 'இரண்டு தலையிட்ட முதலா கிருபஃது' (தொல்-எழுத்-புணர்-1) என்னும் எழுத்தோத்திலோடு மாறு கொள்ளுமென்பது. அது வழக்கிற்குக் கூறியது; செய்யுட்காயினவாறு கொள்ளாமோவெனின், கொள்ளாம் : செய்யுட்கண்ணு மதனை வேறெழுத்தென்று வேண்டுமாகலின். என்னை ? 'முற்றிய லுகர மொழி சிதைத்துக் கொளாஅ' (தொல்-செய்-9) எனக் குற்றியலுகர மும் வருமொழியைச் சிதைத்துக்கொள்ளப்படாதென்பது கூறினமை கலினென்பது. (சக)

354. நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்.

இஃது, ஒழிந்த வஞ்சிப்பாவினுள் வருஞ்சீர் இத்துணையெழுத் திறவாதென்கின்றது. நேர்நிலை வஞ்சியென்பது *சமனிலைவஞ்சி ;

* 'சமனிலைவஞ்சி' என்பதும் பாடம்.

அஃது இருசீரான் வருதலிற் சமனிலை வஞ்சியெனப்பட்டது. மூச்சீரான் வருவதனை *வியனிலைவஞ்சி யென்பவாகலின்.

இதன் பொருள் : இருசீரடிவஞ்சியுள் ஒருசீர் ஆறெழுத்துமாகப் பெறும், என்றவாறு.

இதற்கு மேனின்ற அதிகாரத்தாற் பெருக்கத்திற்கெல்லை கூறினான், சுருக்கத்திற்கு வரையறையுடைமையின். அது முன்னர்ச் சொல்லும். எனவே, அறுபது வஞ்சியுரிச்சீருள்ளும் ஆறெழுத்தான் வருஞ் சீருங் கட்டளையடியாய் வரப்பெறுமென்றவாறு. உம்மை இறந்தது தழீஇயிற்று. 'தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே' (தொல்-செய்-46) என்றதனுன் ஒன்றும் இரண்டும் எழுத்தாய் வருதலொழித்து, ஒழிந்த எழுத்தான் ஆறெழுத்தளவும் வஞ்சியுரிச்சீர்வருமென்பதுகொள்ளப்படும். இதனை எச்சவும்மையென்பார் எழெழுத்தானும் வஞ்சியுரிச்சீர் வருமென்ப. அங்ஙனங் கொள்ளின் இரண்டு சீராற் பதினெண்கெழுத்துளவாகிய செல்லும். செல்லவே,

"குறளடி முதலா வளவடி காறு
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப." (தொல்-செய்-57.)

என்பதனொடு மாறுகொள்ளுமென்பது.

'தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே' (தொல்-செய்-46.) என்புழி இவற்றிற்கு உதாரணங் காட்டுதும். (சூஉ)

355. எழுத்தள வெஞ்சி னுஞ் சீர்நிலை தானே குன்றலு மிகுதலு மில்லென மொழிப.

இது, மேற்கூறிய சீரெல்லாவற்றிற்கும் பொதுவிதி.

இதன் பொருள்.: ஒருசீர் இரண்டுமுதற் பதினெட்டீறாகப் பல நிலைமைப்பட்டுப் பல சீராகிச் செய்யுளுள் வருமாற்றாற் றத்தமெழுத்துக் குறைந்தும் மிகுந்தும் அளவிறப்பினும் அவ்வச்சீரெனப்பட்டுச்

* 'வியனிலைவஞ்சி' 'இயனிலைவஞ்சி' என்பவும் பாடம்.

செய்யுளுள் ஒத்த ஓசை *இருவகையும் ஒருதன்மையவேயாகச் சுருங் கிற்றும் பெருகிற்றுமில்லை, என்றவாறு.

எனவே, அவை எழுத்தெண்ணி அடிவகுக்கு மாற்றான் இரு னிலைமையும் இரண்டிறந்த பலனிலைமையும் படுவன படும். அவ்விடத்து எழுத்திற்கல்லது சுருக்கப்பெருக்கமில்லையென்பதூஉங் கூறியவாறு யிற்று. தானென மிகுத்துச்சொல்லியவதனுன் அசைச்சீர்க்கும் அவ் வாறே கொள்ளப்படும். தனவகைக்குரிடவென மேலோதிவந்த சீர் பதினுறும் அசைச்சீரிரண்டுமெனப் பதினெட்டினுள்ளும் இயற்சீர்பத்தி னுட் புளிமாவும் வெண்சீர்நான்குமென ஐந்தும் ஒருனிலைமையவேயாம். ஒழிந்தசீர் பதின்மூன்றும் இருனிலைமையெய்தி இருபத்தாறும். ஆகச் சீர் முப்பத்தொன்றுமென்பது. அவற்றுக்குதாரணம் :

நுங்தை, தேமா ; ஞாயிறு, பாதிரி ; வலியது, கணவிரி ; போதுபூ, மேவுசீர் ; போரேறு, நன்னுணு ; பூமருது, காருருமு ; கடியாறு, பெருநாணு ; விறகுதீ, உருமுத்தீ ; மழகளிறு, நரையுருமு ; என ஒன்பதியற்சீரும் இருனிலைமையாற்பதினெட்டாயின. புளிமா வென் னும் இயற்சீர் ஒருனிலைமைத்தேயாம். அல்லாதார் வரகு என்பதனுட் குற்றுகரங் கலைந்து புளிமாவிற்கு இரு னிலைமை காட்டுப ; அங்ஙனங் காட்டின் வரகென்பதுபோலப் புளிமாவும் ஓரசையாகவானும் புளிமா வென்பதுபோல வரகு என்பது இரண்டசையாகவானுங் கோடல் வேண்டும். கொள்ளவே, இச்சூத்திரத்திலோடு மாறுகோளாமென்பது. என்னை ?

> 'எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
> குன்றலு மிகுதலு மில்லென மொழிப'

என்றலுலகலின் என்பது.

நீடுகொடி †நாணுத்தளை எனவும், உரறுபுலி விரவுகொடி எனவும் னிரையீற்றுசிரியவுரிச்சீ ரிரண்டும் இவ்விரண்டாகி இருனிலைமை யெய் தியவாறு.

---

* 'இருவகையவேயாகச் சுருங்கிற்றும் பெருகிற்றுமில்லை யென்ற வாறு' என்பதும் பாடம்.

† 'நாணுவளை' என்பதும் பாடம்.

இனி, வெண்சீர்நான்கும் ஒரு நிலைமையவேயாம்.

வண்டு, மின்னு ; வரகு, அரவு ; என அசைச்சீரிரண்டும் நான்காய் இருநிலைமையவேயாம்.

இவ்வாற்றான் இவையெல்லாந் தொகுப்ப, இயற்சீர் பத்தொன்ப தும், ஆசிரியவுரிச்சீர் நான்கும், அசைச்சீர் நான்கும், வெண்சீர் நான் கும் என முப்பத்தொன்றாயின.

என்றூர்க்கு, மாவருவாய் புலிவருவாய் என்பவற்றையும் ஞாயிறு கொல் வலியதுகொல் எனக் குற்றுகரம்பெய்து இருநிலைமை கொள்ளாமோவெனிற் கொள்ளாம். அவை 'எல்லா விறுதியு முகர 'நிறையும்' (தொல்-எழுத்-குற்றி-3)' என்பதனான் முற்று கரமேயாமென்பது. இனி, முதற்கணின்ற குற்றுகரமுங்கொண்டு இருநிலைமை கொள்ளாம். என்னை ? நுந்தையென்பது ஈரசை யாகலானும் அதனை நீநுந்தையென வேறோர் சொற்பெய்து வெண்சீரெனக் காட்டின், அது 'வந்துநின்றது' என்றதுபோலச் சீர் வகையான் வேறோர் சொல்லாமாகவே அது முற்றுகரமாகலானுமென விடுக்க. என்றூர்க்குப் போதுபூ என்பதூஉம் இருநிலைமைத்தாகா தாம் பிறவெனின், அற்றன்று ; சேற்றுக்கால் யாட்டுத்தாள் வட்டுப் போர் எனப் பலவும் வருமாகலின் அஃதிருநிலைமைத்தேயாமென்பது. இனி, வஞ்சியுரிச்சீர்க்கும் இடைநின்ற குற்றுகரங்களை வன்றொடராக வருவித்துக்கொள்க. இனிச், சீரிறுதிக் குற்றுகரங்கள் நிறையாது நிற்றலும் உடையவென்பது 'சீரியைந் திற்றது சீரெனப் படுமே' (தொல்-செய்-12) என்றவழிக் கூறியவாற்றா னறிக.

இனிச் சூத்திரம் வரையாது கூறினமையின் அறுபது வஞ்சியுரிச்சீருள்ளும் இருபத்துநான்குசீர் இருநிலைமையாகவும், இருபத்தெட்டுச்சீர் நான்குநிலைமையாகவும், எட்டுச்சீர் எட்டுநிலை மையாகவுங் கொள்ளப்படும். அவற்றுள்,

இரு நிலையைப்படுவன நேரீற்றுச் சிரெட்டு, நிரையீற்றுச்சிரெட்டு, நேர்பீற்றுச்சீர்நான்கு, நிரைபீற்றுச்சீர்நான்கு என இருபத்துநான்கு

வஞ்சியுரிச்சீராம். அவை, மாபோகுவாய், மாவழங்குவாய், பாம்பு சேர்வாய், பாம்புவருவாய், புலிபோகுவாய், புலிவருவாய், களிறு சேர்வாய், களிறு வருவாய் எனவும்; மாசேர்சுரம், மாவருசுரம், மாபோகுசுரம், மாவழங்குசுரம், புலிசேர்சுரம், புலிவருசுரம், புலிபோகு சுரம், புலிவழங்குசுரம் எனவும்; மாசேர்காடு, மாவருகாடு, புலிசேர்காடு, புலிவருகாடு எனவும்; மாசேர்கடறு, மாவருகடறு, புலிசேர்கடறு, புலிவருகடறு எனவும் வரும். இவ் விருபத்துநான்கும் இருநிலைமை யால் நாற்பத்தெட்டாமென்பது. இனி,

நான்கு நிலைமைப்படுஞ் சீர் இருபத்தெட்டு வருமாறு: பாம்பு போகுவாய், பாம்புவழங்குவாய், களிறுபோகுவாய், களிறுவழங்குவாய் எனவும்; பாம்புசேர்சுரம், பாம்புவருசுரம், பாம்புபோகுசுரம், பாம்புவ ழங்குசுரம் எனவும்; களிறுசேர்சுரம், களிறுவருசுரம், களிறுபோகுசுரம், களிறுவழங்குசுரம் எனவும்; மாபோகுகாடு, மாவழங்குகாடு, புலிபோகு காடு, புலிவழங்குகாடு எனவும்; பாம்புசேர்காடு, பாம்புவருகாடு, களிறு சேர்காடு, களிறுவருகாடு எனவும்; மாபோகுகடறு, மாவழங்குகடறு, புலிபோகுகடறு, புலிவழங்குகடறு எனவும்; பாம்புசேர்கடறு, பாம்பு வருகடறு, களிறுசேர்கடறு, களிறுவருகடறு எனவும் வரும். இவற் றைப் பாம்புபோகுவாய், பாம்புமன்னுவாய், மின்னுப்போகுவாய், மின்னுக்கோலுவாய், என ஒன்று நான்காக வாய்பாடுகொடுத்து ஒட்டி யுணர்க. இவற்றுள், உரியசை முதற்கணின்ற நிரையீற்று நான்கினை யும் ஒன்று நான்குசெய்யுங்கால் பாம்புசேர்சுரம், பாம்புசேர்வது, மின் னுச்சேர்சுரம், மின்னுச்சேர்வது என்றாற்போல *வேறுவேறு வாய் பாடு கொடுத்துரைக்க. இவை யிருபத்தெட்டும் விரிப்ப நாற்றொரு பத்திரண்டு வஞ்சியுரிச்சீராம். இனி,

எடு நிலையைப்படுஞ் சீர் எட்டுமாவன, பாம்புபோகுகாடு, பாம்பு வழங்குகாடு, களிறுபோகுகாடு, களிறுவழங்குகாடு எனவும்; பாம்பு போகுகடறு, பாம்புவழங்குகடறு, களிறுபோகுகடறு, களிறுவழங்கு கடறு எனவும் வரும். இவை மும்மூன்று உரியசையுடைமையின் முதற்கணின்ற உரியசையிரண்டும் நான்குநிலைமை எய்தும். பின்னர்

* 'வெவ்வேறு' என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம்.

கின்ற உரியசையொன்றினை இருகுலேமையாக்கி அவற்றோடு முன்னர்கின்ற நான்கினையும் வேறுவேறுகூட்ட எட்டாமென்பது. உதாரணம்: பாம்புபோகுகாடு, மின்னுப்போகுகாடு, பாம்புமன்னுகாடு, மின்னுமன்னுகாடு, பாம்புபோகுகாவு, மின்னுப்போகுகாவு, பாம்புமன்னுகாவு, மின்னுமன்னுகாவு என வரும். இவ்வாறே ஒழிந்தசீர் ஏழனையும் வெவ்வேறு வாய்பாடுகொடுத்துரைக்க அறுபத்துநான்கு வஞ்சியுரிச்சீராம்.

இவ்வாற்றான் இருகுலேமையும் நான்குகுலேமையும் எட்டுகுலேமையும்பட்ட சீரெல்லாந் தொகுப்ப வஞ்சியுரிச்சீர் இருநூற்றிருபத்து நான்காமெனப்படும். இவற்றுள் எழெழுத்தும் எட்டெழுத்தும் ஒன்பதெழுத்தும் பெற்றசீர் இருபத்துமூன்றுள. அவை நேர்குலே வஞ்சிக்காகாவென்பது, 'உறழ்குலே யிலவே வஞ்சிக்கு' (தொல்-செய்-57) என்புழிச் சொல்லுதும்.

இனி, ஆசிரியவுரிச்சீர் நான்கும் ஒன்று நான்கு குலேமைப்படுமென்பதூஉம் எண்டடங்கும். நீடுகொடி *குளிறுபுலி என்பன மைப்படும். அது மேற்கூறினும். என்றார்க்கு அவற்றை யென்பதென்னை ? நீடுகொடி நீடுவது எனவும் நாணுத்தளர் நாணுவது எனவும் ஒன்று நான்காம் பிறவெனின், அற்றன்று ; நீடுவது என்பதனை அலகு வைக்குங்கால் 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' (தொல்-செய்-11) என்பதனுன் அவ்வச்சீராய் இசையாவாகலிற் பூமருது என்னுஞ் சீராக வைக்கப்படுமாகலானென்பது. (சசு)

356. உயிரி லெழுத்து மெண்ணப் படாஅ வுயிர்த்திற மியக்க மின்மை யான

இது, மேல் எழுத்தெண்ணிச் சீர்வகுத்த முறையானே ஒற்றும் ஆய்தமுங் குற்றுகரமும் ஒருங்கெண்ணப்படுதலெய்தினவற்றை விலக்கினவாறு.

---

* 'குழறுபுலி' என்பதும் பாடம்.

இதன் பொருள்: உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ-தத்தம் ஓசை இனிது விளங்கத் தந்தந்* தன்மையான் ஒலித்தற்குரிமையிலில்லாத எழுத்துக்கள் ஈண்டெண்ணப்படா; உயிர்த்திறம் இயக்கம் இன்மையான-அங்ஙனம் எண்ணப்படாதவும் எழுத்தெனப்படுதலிற் சிறிது காப்புடை பெயருந்துணையான் ஒலித்தலும் மொழிசார்ந்து ஒலித்தலும் உடையவன்றே? அங்ஙனம் ஒருவாற்றான் உயிர்க்குந் திறமுடைய வாயினும் அவ்வுயிர்க்குந்திறம் ஈண்டுச் செய்யுட்பாற் படுங்கால் உபகாரப்பட இயங்குமாறிலவாகலின் எண்ணப்படா, என்றவாறு.

மேற் சீர்தளை இருவகையமைப்படுத்த அதிகாரத்தான் ஒற்றுங் குற்றுகரமுமே ஈண்டு விலக்கிலனென்பது. இச்சூத்திரம் வலித்ததாயிற்று, 'ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்' (தொல்-செய்-8) என மேற்கூறினானெனின், போந்து சென்று சார்ந்து சார்ந்து என ஒற்றுங் குற்றுகரமும் ஒழித்தெண்ணப்பட்டமையினால் எழுத்தடியாயிற்று. பிறவும் அன்ன. (சச)

357. வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்.

இது, 'நேரிலை வஞ்சிக் காறு மாகும்' (தொல்-செய்-42) எனவும், 'தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே' (தொல்-செய்-46) எனவும் எழுத்தெண்ணி வரையறுக்கப்பட்ட சீரிரண்டு கொண்டது வஞ்சியடியென்பதுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: குறளடியே வரையறையுடைய வஞ்சியடியெனப்படுவது, என்றவாறு.

ஏகாரம் பிரிநிலை. என்னை? சிறப்புடை வஞ்சியடியைப் பிரித்து வாங்கிக்கொண்டமையின். எனவே, முச்சீரான் வரும் வஞ்சியடியும் உள. அவை கட்டளையடியல்லவென்றுணையிற்று. இங்ஙனங் கூறவே, வஞ்சியடியும் ஒருவாற்றான் உறழ்ந்துகொள்ள வழி காட்டியவாறு. இவ்வாறு கூறுக்கால் மூன்றுபாவிற்குங் கூறினன் இதற்குக் கூறியதிலனெனக் குன்றக்கூறலென்னுங் குற்றமாமென்பது. இதனை மேல்,

---

* 'விளங்கத் தந்த' என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம்.

"குறளடி முதலா வளவடி காறு
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப" (தொல்-செய்-57.)

என உறழ்நிலை ஒருவாற்றானே கூறுமென்பது. அச்சூத்திரத்தான் மூச்சீரும் உறழ்பவென்று கொள்பவெனின் அஃதே கருத்தாயின் இருசீரும் முச்சீரும் வஞ்சிக்கென்பவென்று உடனேதுவான்மன் ஏன மறுக்க. (சஇ)

358. தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே.

இது, மேற்கூறிய வஞ்சியடிக்கண்வரும் இருசீர்க்கும், பெருமைக் கெல்லை 'நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்' (தொல்-செய்-42) என்று கூறி, ஈண்டு அவை மூன்றெழுத்திற் சுருங்கினவெனச் சுருக்கத்திற் கெல்லையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : வஞ்சியடிச்சீர் மூன்றெழுத்துச் சிறுமைபெறும், என்றவாறு.

வஞ்சிச்சீர்க்கணல்லது
'வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்' (தொல்-செய்-45)
வைத்தானென்பது. இது முச்சீர்க்குரித் தன்மையானும் மூன்றெழுத்தி னிழிந்துவரும் வஞ்சியுரிச்சீர் பெரும்பான்மையும் முச்சீரடிக்கு உரிமையானும் இதன் பின் 'மூச்சீரானும் வருடமினுடைத்து' (தொல்-செய்-47) என்றனென்பது. "கொன்றுகோடுநீடு கொலைக் களிறுகடாம்" என்புழி இருசீரடிமுதற்கண் மூவெழுத்தான் வஞ்சியுரிச்சீர்வந்தது. பிறவும் அன்ன. 'நுந்தைகாடு' என ஈரெழுத்தானும் வஞ்சியுரிச்சீர் வருமெனக்கொள்க. (சசு)

359. மூச்சீ ரானும் வருமிட னுடைத்தே.

இஃது ஒழிந்த வியனிலைவஞ்சி கூறுகின்றது.

இதன் பொருள் : வஞ்சியடி மூச்சீரானும் வரப்பெறும், என்ற வாறு.

'இடனுடைத்து' என்றதனான் இம்மூன்று உறழும் அடிக்கண்ணதன்று என்றவாறு. மற்று இருசீரடி வஞ்சிக்கும் இத்துணையென அடி விரியுமாறு கூறியதிலனாகலின் இதற்கே வரையறையின்றென்றது என்னையெனின், இருசீரடிக்காயின் ஒருவாற்றான் உறழ்ச்சிகூறி வரையறுப்பதோராறு கூறினான்; இதற்கு அன்னதாமும் இன்றென்பது. மற்று உறழுமடி இல்வழி வஞ்சியடி இருசீர்த்தாகப்பெறுதோவெனின், அதற்கன்றே, மூச்சீராலும் வருமென்று உம்மைகூறி இருசீரடியுந் தழீஇக்கொண்டு இடனுடைத்தென வேறுபடுப்பானுமிற்றென்பது. இவ்விரண்டனையும் வஞ்சியடியென வரையாது கூறவே அவற்றான் வேறுவேறு வருதலும் அவை மயங்கிவருதலுமுடைத்து வஞ்சிப்பாட்டென்பது பெறுதும். இக்கருத்தானே அவற்றைக் குறளடிவஞ்சியெனவுஞ் சிந்தடிவஞ்சியெனவும் மயக்கடிவஞ்சியெனவுஞ் சொல்லுப. சிந்தடியான் வருதல் சிறுபான்மையெனக்கொள்க. (சஎ)

360. அசைகூ றொரு மவ்வயி னென.

இதுவும் அதற்கெய்தியதோர் விதி.

இதன் பொருள்: மேற்கூறிய வஞ்சியடி ரண்டன்கண்ணும் நான்கசையுங் வரப்பெறும், என்றவாறு.

எனவே, அடியெனப்பட்ட இருசீர்க்கும் மூச் ம அசைகூட்டிக்கொண்டு சொல்லப்படாவென்றவாறு. அவை,

"வாள், வலந்தர மற்றப்பட்டன
செவ்வானத்து வனப்புப்போன்றன" (புறம்-4.)

எனவும்,

"அடி, அதர்சேமலின் கண்சிவந்தன"

எனவும்,

"வண்டு, மலர்சேர்ந்து வரிபாடின"

எனவும்,

"களிறு, கதவெறியாச் சிவந்தூரைஇ
நுதிமழுங்கிய வெண்கோட்டா
னுயிருண்ணுங் கூற்றுப்போன்றன"

எனவும் முறையே நான்கையுங் கூறியின.

இனி, இடையும் இறுதியுங் கூறு மென்பாருமுளர்.* அது வஞ்சித்தாக்கு இரண்டுகொள்ளவருமாயின் அமையுமென்பது. என்றூர்க்கு, வாள் வலந்தர என்பதனை ஒருசீராகக் கோடுமெனின் யாத்தசீரென்றதனுன் வலந்தருதல் வாண்மேற்சென்று, வருகின்ற † பயனிலை மென்பது. (சே)

361. சீர்கூறு நேரடிக் குரித்தே.

இஃது எய்தாத தெய்துவித்தது.

இதன் பொருள்: தனிவகையானுஞ் சீர்வகையானும் நின்ற நேரடிக்காயின் அசைகூறுகாது சீர்கூறுகும், என்றவாறு.

‡ "அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே" (குறுந்-216.)

எனவும்,

---

* 'இச்சூத்திரம் பொதுவாய் நிற்றலின் தாக்கு இரண்டுபட இடையினும் கடையினும் கூறுய் நிற்பனவுங் கொள்க. உதாரணம்: 'கலங்கழாஅலிற், றுறை, கலக்காறுதே' எனத் துறை யென இடைக்கண் நிரையசை கூறுயிற்று. 'மாவழங்கலின் மயக்குற்றன, வழி' இதனுள் வழி யென இறுதிக்கண் நிரையசை கூறுயிற்று. 'தேரோடத் துகள்கெழுமின, தெருவு' என இறுதிக்கண் நிரைபசை கூறுயிற்று. ஒழிந்தன வந்தூழிக் காண்க.' என்பது நச்சினார்க்கினியர் உரை.

யாப்பருங்கல விருத்திகாரும், வஞ்சியுள் அடி முதல், இடை, கடை என்னும் மூன்றிடங்களிலும் தனிச்சொல் நிற்கப் பெறும் என்றூர். (யாப்பருங்கல விருத்தி 94-வது சூத்திர உரையிற் காண்க.)

† 'மறுப்பட்டன' என்னும் பயனிலை.

‡ 'அவரே' என்பது ஆசிரியம்.

* "உதுக்காண், சுரந்தாலு வண்கைச் சுவர்ணமாப் பூதன்"

எனவும்,

"அவனுந்தா, னேன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்"

(கலி-39.)

எனவும் இவை மூன்றுபாவினும் அளவடிக்கட் சீர் கூலையின வாறு. என்றூர்க்கு, நேர்பசை நிரைபசைகளையுஞ் † சீர்களிலெறு மென்றூலைகலின் அவற்றையுஞ் 'சீர் கூறுத னேரடிக் குரித்தே' என்ற தனானே கொள்வலெனின், அசைச்சீரினை வாளாது சீரென்றலென் பது 'சீர்களிலை தானே யைந்தெழுத் திறவாது' (தொல்-செய-41) என்றவழிக் கூறியவதனான் அறிக. அசைச்சீரினை வாளாது சீரென்ற மைக்கு மேலைச்சூத்திரமும் இச்சூத்திரமுந்தாமே கரியாயின வென் பது. என்றூர்க்கு, இவற்றையும் முதற்கண்ணே காட்டியதென்னை ? சூத்திரத்துள் அவ்வாறு வைத்துரைத்த தில்லையாலெனின், எற்புழிக் கோடலென்பதனான் 'முதற்கணின்று என்பது கொள்ளப்படும். இக் கருத்தானே வஞ்சிப்பாவிற்கும் அவ்வாறே கொள்க.‡ (சக)

362. ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்த

---

* 'உதுக்காண், சுரந்தாலு வண்கைச் சுவணமாப் பூதன்-பரந்தா லுப் பல்புகழ் பாடி - யிரந்தார்மாட்-டின்மை யகல்வது போல விரு ணீங்க-மின்னு மளித்தேர் மழை.' இது வெண்பா. (சுரவரன்மாப் பூதன், சுமானமாப்பூதன் என்பனவும் பாடம்.) இவ்விரண்டுமேற் கோளும் யாப்பருங்கல விருத்திகாரர் காட்டியன.

† 'நேர்பசை நிரைபசை தனையும்' என்பது முன் அச்சுப்பிரதி யில் உள்ள பாடம்.

‡ வஞ்சிப்பாவில் சீர் கூறுதற்கு, 'உலகே, முற்கொடுத்தார் பிற் கொளவும் - பிற்கொடுத்தார் முற்கொளவும்-உறுதிவழி யொழுகும்மே-அதனால், நற்றிற நாடுக நன்மை-பற்றற யாவையும் பரிவறத் துறந்தே' என்பதை மேற்கோளாகக் காட்டினர் நச்சினார்க்கினியரும், யாப்பருங் கல விருத்தியுரைகாரரும்.

**வெழுபது *வகைமையின் வழுவில வாகி
யறுநூற் றிருபத் தைந்தா கும்மே.**

இது, முன்னர்ச் சிறப்புடைத்தென வேண்டிய நாற்சீரடியினைக் குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடியென வகுத்தமை யாமாறு கூறிஞன் (தொல்-செய்-36, 37, 38, 39, 40), இனி அறு நூற்றிருபத்தைந்தென வகைப்பட்ட விகற்பமுங் கூறியவாறு.

இதன் பொருள்: மேற்கூறிய ஐவகையடியினையும் விரிக்குங் காலைப் பொருள்வகையமைந்த பதினேழ்நிலத்து எழுபதுவகைக் குற்ற † நீங்கி அறுநூற்றிருபத்தைந்தாம், என்றவாறு.

எனவே, பதினேழ்நிலத்தேறினும், எழுபதுவகைக்குற்றம் விரவச் செயினும் அறுநூற்றிருபத்தைந்தெனப்படாதென்பதாம். பதினேழ் நிலனும் ஆசிரியம்பெறுமென்பதூஉம், வெண்பாவுங் கலிப்பாவும் ஒரோ வொன்று எட்டுநிலம்பெறுமென்பதூஉம் முன்னர்ச் சொல்லுதும்.‡ அவை மூன்றுந் தொகுப்ப மும்பத்துமூன்று நிலனுயின.

வெள்ளை நிலம் பத்தென்பார்க்கு மும்பத்தைந்து நிலனும். எழுபது கூற்று வழுவெனப்பட்டன தளைவழு. தளைவழுவாவன, ஆசிரியநிலம் பதினேழனுள் வெண்டளையுங் கலித்தளையுமாகி வேற் றுத்தளை தட்ப மும்பத்துநான்கு தளை வழுவாம். வெள்ளைநிலம் § பத்தினும் ஆசிரியத்தளை பத்துங் கலித்தளை பத்துந் தட்ப இருபது தளைவழுவாம். இனிக் கலிநில மெட்டனுள் ஆசிரியத்தளை எட்டுங் கலித்தளை எட்டுந் தட்பப் பதினாறு தளை வழுவாம். இவையெல்லாந் தொகுப்ப மும்பத்தைந்து நிலத்தும் ஒன்றிரண்டுசெய்து, எழுபது தளைவழுவாயினவாறு. இது வெள்ளைநிலம் பத்தென்பாருரை.

---

* 'வகையின்' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம்.

† 'நீங்கிய' என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம். 'வழுவிலவாகி' என்பதற்குக் 'குற்றநீங்கி' என்பதே நேரிய பொரு ளாதல் காண்க. ஏடுகளில் 'நீங்கி' என்றே யுள்ளது.

‡ இவ்வியல் 52, 58, 59 ஆவது சூத்திரங்களிற் கூறுவர்.

§ 'பத்தும்' என்பது முன் அச்சுப்பிரதியில் கண்ட பாடம். இப்பாடம் பொருட்குப் பொருந்தாமை கண்டுகொள்க.

அது பொருந்தாது. என்னை ? ஆசிரியத்து நாலெழுத்தடியுள் இரண்டு தளைவழுவுங் காட்டுகவெனின் அவர்க்கு அவை *காட்டலரிது. குறிப்பசைபெய்து காட்டின் †அது கூறப்பட்ட உறுப்பினுளின்றென்றவாறு. எடுத்தோதிய எழுத்து முதல் உறுப்பினுன் வந்த அடிக்கண்ணே காட்டாதொழிதலின் அது நூன்மாறுகோளாம். அல்லதூஉம், அவ்வாறு தளைகொள்ளின் முழுவதுங் குறிப்பசையானே வரும் அடியும் ஒரெழுத்தடிமுதன் மூன்றுநிலனுங் கொள்ளல் வேண்டும். கொள்ளவே, நிலம் இருபத்தொன்றுகலுங், காட்டுந் தளைவழுத் தொண்ணூற்று நான்காகலும்பெற்று, ஞாயிறு வரகு வண்டு வண்டு வண்டு என்பது கலித்தளைதட்ப ஆசிரியவடி அன்றுவான் செல்லுமெனவுங் கூறி, மறுக்க. இனி, ஆசிரியத்துட் கலித்தளை தட்குங்கால் அவர்தாந் தளைவேண்டுமாற்றுன் வெண்சீர்நிற்ப இறுதி நிரை வரவேண்டுமாகலானுங், கட்டளையடிக்கண் வெண்சீர் வருமென்றிலகலானும் 'வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே' (தொல்-செய்-29) என்பதனுன் இயற்சீரை வெண்சீராக்கிக்கொள்ளினும் அச்சூத்திரத்துக்கு அவ்வாறு பொருளுரைப்பிற் படுங் குற்றம் ஆண்டுக் கூறினுமாகலானும் அது நிரம்பாதென்பது. அற்றன்றியும், ஒரெழுத்து முதலிய நிலங்கள் ஒரோநிலத்து இரண்டும் மூன்றுந் தளைவழுக் காட்டலாமாகலின் எழுபதுவகையின வழுவெனலுமாகாது என்பது. இனி 'அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய' (தொல்-செய்-58) என்னும் எடுத்தோத்துக் கிடப்ப இலேசினுன் இரண்டுநிலனேற்றி வெள்ளைநிலம் பத்தெனலுமாகாது. என்னை ?

'அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
யிருநெடி லடியுங் கலியிற் குரிய' (தொல்-செய்-59.)

என ஒதினுன், இதனினுஞ் சிறந்த வெண்பாவிற்கும் அங்ஙனம் ஓதுவான்மன் ஆசிரியன் அதுவே கருத்தாயினென்பது. அல்லதூஉங் கலிப்பாவினுள் வெண்சீரொன்றினுங் கலியோசை பிறக்குமென்று

---

* 'காட்டவரிய' என்பதும் பாடம்.

† 'அது கூறப்பட்ட கலித்தளை எட்டு உறுப்பினுளின்றென்றவாறு' என்பதும் பாடம்.

பதினேழெழுத்தடியான் வந்த வெண்பாவடியினைத் தாமும் கொளவாகலானும் அது கூறி னிரம்பாதென்பது.

மற்றென்னை தலைகொள்ளுமாறெனின், ஆசிரியத்துள் இயற்சீர் பத்தொன்பதும், ஆசிரியவுரிச்சீர் நான்கும், அசைச்சீர் நான்குமென இருபத்தேழாகி, 'எழுத்தள வெஞ்சினுஞ் சீர்மேலை தானே-குன்றலு மிகுதலும்' (தொல்-செய்-43) இன்றி வரும். வெண்பாவினுள் ஆசிரியவுரிச்சீர் நான்கும், அசைச்சீர் நான்கும் ஒழித்து ஒழிந்தசீர் இருபத்து மூன்றும் வெண்சீர்நான்கினோடுந் தலைப்பெய்ய அவையும் அவ்வாறே இருபத்தேழாம். கலிப்பாவிற்கு நேரீற்றியற்சீர் மூன்றொழித்து ஒழிந்த இயற்சீர் பதினைறும், ஆசிரியவுரிச்சீர் நான்கும், வெண்சீர் நான்கும் என இருபத்துநான்காம். இவை மூன்றும் பகுதியுந் தொகுப்ப எழுபத்தெட்டாயின. அவற்றுள், ஆசிரியத்துள் வந்த அசைச்சீர் நான்கினையும் வெண்பாவினுள் வந்த அசைச்சீர் நான்கினையும் ஈண்டுத் தலைகொள்ளுங்கால், இயற்சீர்ப்பாற்படுத்து அடக்குகவென்று ஆண்டுக் கூறினமையின், ஈண்டு அவற்றை இயற்சீர்ப்பாற் படுத்தடக்கின் எழுபதாகக் கொள்ளப்படும். அங்ஙனங் கொள்ளப்பட்ட சீர் ஒன்றொன்றோடு தட்குங்கால் அவ்வெழுபதுவகையாலு மன்றித் தட்குமாறில்லை. அதுநோக்கி எழுபது வகையின் வழுவிலவாகியென்ற னென்பது. அவை தட்குமாறு முன்னர்ச் சொல்லுதும்.

அங்ஙனந் தலைசிதையா அடி அறுநூற்றிருபத்தைந்தும் மூன்று பாவிற்கும் உரிய பகுதியவாம். யாங்ஙனம்? ஆசிரியவடி முந்நூற்றிருபத்து நான்கும், வெண்பாவடி நூற்றெண்பத்தொன்றும், கலியடி நூற்றிருபதுமென அறுநூற்றிருபத்தைந்தாம். 'மெய்வகை யமைந்த' என்றதனால் *நான்குசீருள்ளும் உறழ்கின்ற சீரினை அடிமுதற் கண்ணே வெளிப்படவைத்து அச்சீரின் அடியாக்கி உறழப்படுமென்பதுகொள்க. அல்லாக்கால் இடையும் இறுதியும் வைத்துறழ்தன்

* 'நான்குரிச்சீருள்ளும்' என்பது முன் அச்சுப்பிரதியிலுள்ள பாடம். உறழப்படுவது நாற்சீரடியே யாதலின், ஈண்டு நான்குசீர் என்றது, ஓரடியில் வரும் நான்கு சீரையும். முன் அச்சுப்பிரதியின் பாடம் பொருந்தாமை யறிக.

முதற்கணின்றதோர் சீர் இரண்டான் அடியாகியும் அவ்வடிமயங்கு மாகலான் அது மயங்கக் கூறலென்னுங் குற்றமாமென மறுக்க.

"எள்ளற்ற முந்நூற் றிருபத்து நான்ககவல்
வெள்ளைக்கு நூற்றெண்பத் தொன்றாகுந்—துள்ள
னவையறு நூற்றிருப தாமடி நாடி
னவையறு நூற்றிருபத் தைந்து."

ஆசிரியத்துள் வருமெனப்பட்ட சீர் இருபத்தேழும் ஒரோவொன்று பன்னிரண்டாயுறழ அகவலடி முன்னூற்றிருபத்துநான்காம். இது பயனில் வெளி.

"நால்வே றுரியசைச்சீர் நால்வே றகவற்சீர்
பால்வேறு பட்டியற்சீர் பத்தொன்ப தாக
விருபஃதேழ் சீரகவற் கீரிரண் டாதி
யிருப தெழுத்தளவு மேற்று."

"ஆசிரியப் பாவினான் கைந்தாறே ழெட்டொன்ப
தாதி நிலமாறா மைஞ்சீரா னீறு
நிரையாஞ்சீர் நேரசைச் சீர்க்கொன்றொன் றேற்ற
வரையாதொன் றேறிற்றே வந்து."

* ஒரெழுத்துச்சீரும் ஒரெழுத்தசைச்சீருஞ் சுருக்கத்திற்கெல்லையாகியசீராகலான் அவை நாலெழுத்தடிமுதற் பதினைந்தெழுத்தடியளவும் உறழும். அவை நுந்தை வண்டு வண்டு வண்டு எனவும், நுந்தை காருருமு நனிமுழவு நனிமுழவு எனவும் ஒரெழுத்துத் தேமாவடி பன்னிரண்டற்கும் முதலடியும் முடிந்தவடியுங் கண்டு கொள்க. வண்டு வண்டு வண்டு வண்டு எனவும், வண்டு காருருமு

---

* 'ஒரெழுத்துரிச்சீர்' என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம். ஒரெழுத்தானாகிய உரிச்சீர் யாண்டுமில்லை. இவ்வியல் 41-வது சூத்திரவுரையில் 'ஒரெழுத்துச் சீர் நுந்தை என ஒன்றேயாம்' என்று கூறியிருத்தல் காண்க. மற்று, 'வண்டு' என்பதோவெனின், அஃது அசைச்சீராதலால், அதனை வாளாதே சீரெனப்படுவனவற்றோடு சேர்த்துக் கூறல் குற்றமாம் என்பது முன்னமே கூறினாரென்க.

*நனிமுழவு நனிமுழவு எனவும் இவை வண்டு முதலும் முடிவுங் காட்டிய † அடி.

†இனி, நேரீற்று ஈரெழுத்துச்சீர் ஒன்றும் ஐந்தெழுத்தடி முத லாகவும், பதினெழுத்தடி யிறுதியாகவும் வரும். அது தேமா வண்டு வண்டு வண்டு எனவும், தேமா காருருமு நனிமுழவு நனிமுழவு எனவும் வரும். மின்னு வரகு என்னும் ஈரெழுத்தசைச்சீரிரண்டும் அவ்வாறேயுறழும். நிரையீற்றீரெழுத்துச்சீர் மூன்றும் ஆறெழுத்தடி முதற் பதினேழெழுத்தடியளவும் உறழும். அவை ஞாயிறு, போதுபூ, போரேறு, என்பனவற்றை முதனிறீஇ வரகு வண்டு வண்டு எனவும் நனிமுழவு நனிமுழவு நனிமுழவு எனவும் தந்து இங்ஙனமாயினவாறு கண்டுகொள்க.

இனி, மூன்றெழுத்தான் வருவன ஒன்பது சீரும் அசைச்சீரு மெனப் பத்து. அவை புளிமா, பாதிரி, வலியது, மேவுசீர், நன்னுணு, பூமருது, கடியாறு, விறகுதீ, நீடுகொடி, அரவு என்பன. இவற்றுட் புளிமாவும் ‡அரவும் ஆறெழுத்தடி முதலாகப் பதினேழெழுத்தடி யளவும் உறழ்ந்து ஒரொன்று பன்னிரண்டு நிலம்பெறும். ஒழிந்தசீர் எட்டும் நிரையீருகலின் ஏழெழுத்தாதி பதினெட்டெழுத்தடியளவும் உறழும். அவை புளிமா வண்டு வண்டு வண்டு எனவும், புளிமா காருருமு நனிமுழவு நனிமுழவு எனவும்; பாதிரி வரகு வண்டு வண்டு எனவும், பாதிரி நனிமுழவு நனிமுழவு நனிமுழவு எனவும் உறழ்ந்த வழிப் புளிமா ஆறெழுத்துமுதற் பதினேழன்காறும் உறழ்ந்தவாறும் பாதிரி ஏழெழுத்துமுதற் பதினெட்டன்சாறும் உறழ்ந்தவாறுங் கண்டு கொள்க. ஒழிந்தனவும் அன்ன.

---

* ‘நனிமுழவு’ ‘நளிமுளவு’ எனப் பிரதிபேதங்கள் உண்டு.

† ‘அடியினில் நேரீற்றடி யெழுத்துச்சீர் என்றும்’ என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம். இப்பாடம் பொருந்தாமை கண்டு கொள்க. போக்கி, ‘நிரையீற் றீரெழுத்துச் சீர் மூன்றும்’ என்றதையும் காண்க.

‡ பொருட்பேற்றுக்கு அவசியமான ‘அரவும்’ என்பது முன் அச்சுப்பிரதியில் இல்லை.

இனி, நாலெழுத்துச்சீர் ஏழு வகைய. அவை கணவிரி, காருருமு, பெருநாணு, உருமுத்தி, மழகளிறு, நாணுத்தளை, உரறுபுலி, என்பன. இவையெல்லாம் எட்டெழுத்தடிமுதற் பத்தொன்பதளவும் உயர்ந்தே ஒரோவொன்று பன்னிரண்டடிப்பெறும். அவை கணவிரி வரகு வண்டு வண்டு எனவும், கணவிரி நரையுருமு நரையுருமு நரையுருமு எனவும் வரும். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

ஐந்தெழுத்துச்சீர், நரையுருமு, விரவுகொடி என இரண்டு. அவை ஒன்பதுமுதல் இருபதின்காறும் உயரும். அவை நரையுருமு வரகு வண்டு வண்டு எனவும், கலனளவு கலனளவு கலனளவு கலனளவு எனவும் வரும். விரவுகொடிக்கும் இஃதொக்கும்.

இவ்வாற்றான் ஒரெழுத்துச்சீரிரண்டும், ஈரெழுத்துச்சீர் ஆறும், மூவெழுத்துச்சீர் பத்தும், நாலெழுத்துச்சீர் ஏழும், ஐவெழுத்துச்சீர் இரண்டுமாகச் சீர் இருபத்தேழினையும் பன்னிரண்டிற் பெருக்கிப் பெற்ற ஆசிரியவடி மூன்றாற்றிருபத்துநான்கும் * பாட்டினுந் தொகையினும் வருமாறு கண்டுகொள்க.

இனி, வெண்பாவடி நூற்றெண்பத்தொன்றும் உறழுங்கால் ஏழெழுத்தடியும் எட்டெழுத்தடியும் ஒன்பதெழுத்தடியும் பத்தெழுத்தடியும் முதலாய் நிற்பப் பதினென்கெழுத்தடியளவும் ஏறி ஒரோசீர் எட்டடிப் பெறுவனவும் ஏழடிப் பெறுவனவும் ஆறடிப் பெறுவனவும் ஐந்தடிப் பெறுவனவுமாகி முறையானே வருமென்பது.

"இயற்சீ ரசைச்சீ ரிருபத்து மூன்றே
† டுரிச்சீர்நான் கேற்றச்சீ ரொன்பதிற்று மூன்று
மயக்கறு வெண்ணேக்க ணேழ்தொடங்கி மாதே
யுயர்ச்சி பதினென்கென் றெட்டு."

"மூவெழுத்துச் சீரெல்லா மேழெழுத்தா னிரியத்
தாதிபெரு தொன்றேறிற் றுங்கதுபோ ‡னெழுத்தான்

---

* 'பாட்டு' என்றது பத்துப்பாட்டை. 'தொகை' என்றது எட்டுத்தொகையை.

† 'உரிச்சீர் நான்கேற்றி' என்பது மூன்று அச்சுப்பிரதியில் உள்ள பாடம். ‡ 'எழெழுத்தான்' என்பதும் பாடம்.

வந்தசீர் வெண்பாவிற் பத்தெழுத்தான் வாராவா
யைஞ்சீர்க்கு நான்கா முதல்''

நாலை, வண்டு, ஞாயிறு, போதுபூ, போரேறு என ஐந்தும் எழெழுத்தடிமுதற் பதினென்கெழுத்தடியளவும் உயர்ந்து ஒரோவொன்று எட்டடியுறழப் பெற்ற அடி நாற்பதாம்.

''ஞாயிறு போதுபூ போரேறு நுந்தைவண்
டேழாதி யெட்டா மடி.''

தேமா, மின்னு, வரகு, பாதிரி, வலியது, மேவுசீர், நன்னெஞ்சு, பூமருது, கடியாறு, வீறுகுதீ, மாசெல்வாய் எனப் பதினென்றும் எட்டெழுத்தடிமுதற் பதினென்கெழுத்தடியளவும் ஒரொன்று எழடியுறழப் பெற்ற அடி எழுபத்தேழாம்.

''மின்னு வரகு வலியது மேவுசீர்
நன்னெஞ்சு பாதிரிப் பூமருதே யாறுதீ
மன்னுத மாசெல்வாய் தேமா வெனப்பதினே
ரெண்ணுகு மெட்டாதி யேழ்.''

புளிமா, அரவு, கணவிரி, காருருமு, பெருவேணு, உருமுத்தீ, மழகளிறு, மாவருவாய், புலிசெல்வாய் என இவை ஒன்பதுசீரும் ஒன்பதெழுத்தடிமுதற் பதினென்கெழுத்தடியளவும் உயர்ந்து ஒரொவொன்று ஆறடியுறழப் பெற்ற அடி ஐம்பத்துநான்காம்.

''அரவு புளிமா கணவிரி வேணு
புலிசெல்வாய் காருருமுப் பேருருமுத் தீயே
மழகளிறு மாவருவா யொன்பது மென்ப
தெழுவா யிருமூன் றெனல்.''

நனிமுழவு, புலிவருவாய் என்னும் இரண்டுசீரும் பத்தெழுத்தடிமுதற் பதினென்கெழுத்தடியளவும் உயர்ந்து ஒரோவொன்று ஐந்தடியுறழப்பெற்ற அடி பத்தாம்.

---

* 'மழகன்று' என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம்.

"புலிவரு வாயு நனிமுழவு மென்னு மிவை
யீரைந்தீ ரேழுற்றீ ரைந்து.

இவையெல்லாந் தொகுப்ப வெண்பாவடி நூற்றெண்பத்தொன்
றாயின.

அவற்றுட் சில வருமாறு :

நுந்தை வரகு வரகு வரகு எனவும், நுந்தை நனிமுழவு காருருமு காருருமு எனவும் இவை எழெழுத்தடிமுதற் பதிஞன்கெழுத்தளவும் நுந்தை வந்தவாறு. வண்டென்பதற்கும் இஃதொக்கும்.

ஞாயிறு வண்டு வரகு வரகு எனவும், ஞாயிறு காருருமு மாவரு வாய் காருருமு எனவும் இவை எழெழுத்தடியும் பதிஞன்கெழுத்தடியு மாயினவாறு. போதுபூ போரேறு என்பனவற்றிற்கும் இஃதொக்கும்.

தேமா வரகு வரகு வரகு எனவும், தேமா நனிமுழவு காருருமு பாதிரி எனவும் எட்டெழுத்தடி முதலாகப் பதிஞன்கெழுத்தடியளவும் உயர்ந்து தேமா ஏழடிப்பெற்றது. ஒழிந்த பத்துச்சீர்க்கும் இஃதொக்கும்.

புளிமா வரகு வரகு வரகு எனவும், புளிமா புலிவருவாய் காருருமு தேமா எனவும் இவை ஒன்பதெழுத்தடி முதலாகப் பதிஞன்கெழுத்தடியளவும் உயர்ந்து ஆறடிப்பெற்றது. ஒழிந்த எட்டுச்சீர்க்கும் இஃதொக்கும்.

நனிமுழவு வண்டு வரகு வரகு எனவும், நனிமுழவு காருருமு பாதிரி தேமா எனவும் இவை பத்தெழுத்தடிமுதற் பதிஞன்கெழுத்தளவும் ஏறி ஐயெழுத்து நனிமுழவு ஐந்தடிப்பெற்றது. புலிவரு வாய்க்கும் இஃதொக்கும்.

இவற்றுக்கெல்லாம் பதிஞன்கெழுத்தின் ஏறியக்காற் செப்ப லோசை திரிபுடையவென்பது *வல்லார்வாய்க் கேட்டு உணர்க. என்னை ?

---

* 'வல்லார்வாய் விளம்பக்கேட்டுணர்க' என்பதும் பாடம்.

அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
யகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே' (தொல்-செய்-11.)

என்றமையின்.

" அடியி னுட்ப மறிவருங் குரைத்தே "

எனப் பிறருஞ் சொல்லுப.

இனிக் கலியடிக்குரியசீர் இருபத்திரண்டும் ஒரோவொன்று ஐந்தடியுறழ அதன் அடித்தொகை நூற்றிருபதாம்.

' அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
யிருநெடி லடியுங் கலியிற் குரிய ' (தொல்-செய்-59.)

என்பதனுன் பதின்மூன்றெழுத்தும் பதினான்கெழுத்தும் பதினைந்தெழுத்தும் பதினாறெழுத்தும் முதலாக ஒரோவொன்று ஐந்தடி உறழ்ந்து கலியடியளவு பதினேழெழுத்துமுதல் இருபதின்காறும் உயருமென்றது.

" நிரையீற் நியற்சீர் பதினாறு மேனை
நிரையீற் றகவற்சீர் நான்கு மொருநான்கு
வெண்சீருந் துள்ளற்கு வெவ்வே றிருசீரா
னைந்தா முறழ்ந்த வடி."

" ஈரெழுத்துச் சீர்பதின்மூன் றாகி யிருபதின்கா
றாதியசீர் நான்கற் குயர்வு."

ஞாயிறு, போதுபூ, போரேறு என்னும் ஈரெழுத்துச்சீர் மூன்றும் பதின்மூன்றெழுத்து முதற் பதினேழெழுத்துவரை ஒரோவொன்று ஐந்தடியுறழும்.

பாதிரி, வலியது, மேவுசீர், நன்னுணு, பூமருது, கடியாறு, விறகுதீ, மாசெல்வாய், நீடுகொடி என மூவெழுத்துச்சீர் ஒன்பதும் பதினெண்கெழுத்துமுதல் ஒரோவொன்று ஐந்தடியுறழும்.

கணவிரி, காருருமு, பெருநாணு, உருமுத்தீ, மழகளிறு, மாவருவாய், புலிசெல்வாய், நாணுவலை, உரறுபுலி என நாலெழுத்துச்சீர் ஒன்பதும் பதினைந்தெழுத்துமுதற் பத்தொன்பதளவும் ஒரோவொன்று ஐந்தடியுறழும்.

நரையுருமு, புலிவருவாய், விரவுகொடி என்னும் ஐந்தெழுத்துச் சீர் மூன்றும் பதினெறெழுத்தடிமுதல் இருபதெழுத்தடியளவும் உயர்ந்து ஒரோவொன்று ஐந்தடிப் பெறும்.

இவ்வாற்றுற் கட்டளைக் கலியடி நூற்றிருபதாமென்பது.

அவற்றுட் சில வருமாறு : ஞாயிறு புலிசெல்வாய் மாசெல்வாய் புலிசெல்வாய் எனவும், ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் புலிவருவாய் எனவும் முதலும் முடிவும் பதின்மூன்றும் பதினேழுமாகி ஈரெழுத்துப் பாதிரி ஐந்தடி யுறழ்ந்தவாறு. ஞாயிறு புலிவருவாய் எனமுதற்கண் ஆசிரியத்தளை தட்பதென்னுமோவெனின் என்னும், * 'நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்டல் - வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப' என்புழி அதனைக் கலித்தளையென்னுமாகலின். புலிசெல்வாய் மாசெல்வாய் என ஈற்றுக்கண் வெண்டளைவந்த'தென்னுமோவெனின் என்னும்,

'வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே' (தொல்-செய்-29.)

என்றுணர்கலின்.

ஒழிந்த மூவெழுத்துச்சீரும், நாலெழுத்துச்சீரும், ஐயெழுத்துச் சீரும் அவ்வாறே உறழ்ந்துகொள்க. (80)

363. ஆங்ஙனம் விரிப்பி னளவிறந் தனவே பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலே.

இஃது, ஒழிந்த அடி இந்நாற்சீரடிபோல உறழ்கவென்றார்க்கு அவையுறழாவென உறழாமைக்குக் காரணங் கூறுகின்றது.

இதன் பொருள் : அந்நாற்சீரடிபோல் மற்றையடிகளையும் விரிப்பின், அஃது இலக்கணக் கட்டளையின் இகந்துபட்டதாம், அப்பகுதியெல்லாம் அறிந்தோர் விரிக்குங்காலத்து, என்றவாறு.

அளவிறந்தன, எண்ணிறந்தன. அஃது இலக்கணங் கூறுமாறன்றென்றவாறு. அஃதெற்றுற்பெறுதுமெனின் இதன் முதனூல்செய்த ஆசிரியன் அகத்தியனார் சொல்லுமாற்றுற் பெறுதுமென்றவாறு.

* தொல்காப்பியம்—செய்யுளியல்-60.

*எனவே என்சொல்லப்பட்டதாம்? அங்ஙனம் வரையாது சிறப்புடையனவற்றுக்குஞ் சிறப்பில்லனவற்றுக்கும் ஒருங்கு இலக்கணங் கூறின் அவையெல்லாம் எடுத்தோதப்பெறுத இலக்கணத்தவாம்; அதனால் வரையறையுடையனவற்றுக்கன்றி, வாளாதே பரந்துபட்டவகையான் இலக்கணங்கூறல் பயனில் கூற்றுமெனவும் அது கருதி இதன் முதனூல்செய்த ஆசிரியருங் கூறிற்றிலரெனவுங் கூறியவாறு.

வடநூலாசிரியர் ஆறுவகைப் பிரத்தியங்களான் எழுத்துக்களைக் குருவும் இலகுவுமென இருகூறுசெய்து உறழ்ந்து பெருக்கிக் காட்டுவதோராறுமுண்டு. அவரும் இருபத்தாறெழுத்தளவும் உறழ்ந்து காட்டி, ஒழிந்தன ஞெகிழ்ந்துபோவர். அவ்வாறே †சீர்களையுங் குருவும் இலகுவும்போல இருசீரடி இத்துணையெனப் பெருக்கவும், ஒழிந்தனவும் இவ்வாறே பெருக்கவுஞ் சிதைந்ததில்லை. அங்ஙனம் பெருக்குங்காலும் ஒரடிக்குரியசீர் பத்தும் நூறும் ஆயிரமுமாக வைத்து உறழ்ந்தக்காலும் வருவதொன்றில்லை. அங்ஙனம் உறழினும் இத்துணைச்சீரான் ‡வந்த அடிக்கே உறழ்ச்சி கூறுவதென்று ஒரெல்லை கூறிக்கொள்ளல்வேண்டும். கொள்ளவே, எத்துணையிடஞ் சென்றக்காலும், இத்துணையென வரையறைப்பாடு உடையனவல்ல. அவ்வரையறை இன்மையின் அதனை அளவிலவென்பதற்கோர் காரணங் கூறல்வேண்டு மாதலான் அதுநோக்கி நாற்சீரடிச் சிறப்புடைத்தென வேறுபல காரணங்கூறி, அவற்றுக்கே வரையறைகூறி அல்லனவற்றுக்கட் சொல்லப்படாதென்றான் இச்சூத்திரத்தானென்பது. அஃதேல், அவை சிறப்புடையவற்றுக்குக் காரணங்கூறியவாற்றாற் சான்றோர் செய்யுளுட் பயின்றுவரல்வேண்டும் பிறவெனின், இந்நூல் செய்த காலத்துத் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் அவ்வாறு கட்டளையடியாற் பயின்றுவரச் செய்யுள் செய்தாரென்பது இச்சூத்திரங்களாற் பெறுதுமென்பது. இதன் முதனூல் செய்த ஆசிரியனுஞ் செய்

---

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை. எடுகளிற் கண்டது.

† 'சீர்தளையும்' என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம்.

‡ 'வந்த வந்த' என்பதும் பாடம்.

யப்பட்ட யாழ்நூலுள்ளுஞ் சாதியும் உவமத்துருவுந் திருவிரியிசையு மெனக் கூறப்பட்டவற்றுட் கட்டளைப்பாட்டுச் சிறப்புடையன சாதிப் பாட்டுக்களே. அவை இக்காலத்துப் பயின்றிலவென்று மற்றையவற் றோடு ஒக்குமெனப்படாவென்பது.

அல்லதூஉம், உலகத்து மக்கட்பிறவி பலவாயினும் நால்வகை வருணமென்ப, அவர் வரையறை யிலக்கணத்தாராகலி னென்பது. இனி, அவருள்ளும் அந்தணரும் வேளாளரும்போல இடையிருவகை யோரும் பயின்றிலரென்று சிறப்பிலராகாரென்பது.

இனிக் கடைச்சங்கத்தார் அறுநூற்றிருபத்தைந்தடியும் பயின்று வரச் செய்யுள் * செய்திலராலெனின், கட்டளையடியாற் செய்தவல்லன வேண்டாவென்பதோர் ' † ஆணையுடைமையினரல்லர். உடையவரும் இவ்வாசிரியரும் சிறப்புடைத்தென்று சொல்லப்பட்ட அளவடியாற் செய்யுள் செய்தாரென்பது. இனிப் பிற்காலத்தார் அளவடியாற் பயின்றுவரச் செய்யுள் செய்திலரென்று கடைச்சங்கத்தார் செய்யுள் செய்த அடியுஞ் சிறப்பிலவாமோவென்பது. வஞ்சியடிக்கும் வரை யறை யின்மையதொக்கும். அது முன்னர்ச்சொல்லுதும். (நிக)

364. ஐவகை யடியு மாசிரியக் குரிய.

இஃது, எய்தாததெய்துவித்தது ; மேல்வகுக்கப்பட்ட அடியினை இன்னபாவிற்குரிய அடி இவையென்று கூறுதான் அது கூறினமையின்.

இதன்பொருள்: நாலெழுத்துமுதலாக இருபதெழுத்தின்காறும் உயர்ந்த பதினேழ்விலனும் ஆசிரியத்திற்குரிய, என்றவாறு.

'மெய்வகை யமைந்த பதினேழ் விலத்த * * * அறுநூற்றிருபத் தைந்தாகும்' (தொல்-செய்-50) என்றுன், அதனை ஈண்டுப்போதந்து ஆசிரியத்திற்கு எய்துவித்தவாறு. அவற்றுக்குச் செய்யுள் ஐந்தடியுங் கூறியவழிக் காட்டப்பட்டது. மற்று 'மெய்வகையமைந்த பதினேழ்

---

* 'செய்திலாரெனின்' என்பது முன் அச்சுப்பிரதியின் பாடம்.

† 'ஆணையுடைமையின், இவ்வாசிரியரும்' எட்டுப்பிரதியின் பாடம்.

நிலத்தும்' எனவே இதுவும் அடங்காதோவெனின், அடங்காது ; பாத் தோன்றும் அந்நிலங்கள் பகுத்துக்கொள்ளப் பொதுவகையால் ஆண் டோதினனென்பது. மற்று ஐவகையடியும் ஓராசிரியத்துக்கண் வரல் வேண்டுமோவெனின், அன்னதோர் வரையறையுண்டே ? வரை யாது கூறினமையின் அவையெல்லாவற்றானும் வருக. வருங்கால் ஐந்தும் ஆசிரியத்துக்கு உரியவென்பதே கருத்து. ஒழிந்த பாவிற்கு நிலங்கூறாரோவெனின் ஆசிரியம் பதினேழ்நிலனுமுடைமையின் அக் கூறிய பதினேழ்நிலனுந் தளைவிரவுதலின் தளை அதற்குப்பின் கூறித் தளையதிகாரம்பட்டமையின் அவற்றுப்பின் ஒழிந்த பாவிற்கு நிலனுங் கூறுமென்பது.

மற்று ஆசிரியமென்பது மகரவீறுதலின், 'மஃகான் புள்ளிமுன் னத்தே சாரியை' (தொல்-எழுத்-உரு-13.) என்பதனான் அத்துச்சா ரியை பெறல்வேண்டுமெனின் அது செய்யுள்விகார மென்பாருமுளர். அற்றன்று, ஆண்டுநின்றது நான்காமுருபாயினன்றே அது கடாவாவது. அதனை எழாவதன் பொருண்மைக்கண் அக்குச்சாரியை ஈறுதிரியாது வந்ததென்று கொள்ளப்படும். (இ)

365. விராஅய் வரினு மொருஉநிலை யிலவே.

இஃது, எய்தியதிகந்து படாமைக் காக்கின்றது ; மெய்வகையமைந்த பதினேழ் நிலமெனவும், எழுபதுவகையின் வழுவெனவும் மேனி றுத்தமுறையானே ஆசிரியத்திற்குப் பதினேழ்நிலமாமாறு கூறினன். இனி எழுபதுவகையின் வழுவாயின அப்பதினேழ்நிலத்து யாண்டு மாகாதென்பது பட்டதனை இகந்துபடாமைக் கூறினமையின்.

இதன்பொருள்: தளைவிரவிவரினும் ஒருவப்படா, என்றவாறு.

மற்று, இதனைத் தளை விரவிவரினுங் கட்டளையடியாமெனப் புற னடுத்தானென்று கோடுமோ, தளைவிரவிற் கட்டளையடியாகாதென்று கோடுமோவெனின், தளைமயங்காதனவே தளைவகையடியெனவும் அல் லன கட்டளையடி யாகாவெனவுங் கோடுமென்பது. அஃதேல் தளை மயங்கின அடிக்கும் பதினேழ் நிலனுங் கோடுமோவெனின், கோடு

மன்றே? விராய்வரினுமென்ற உம்மை இறந்தது தழீஇயிற்றுகலி னென்பது. (இ)

366. தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினு மின்சீர் வகையி னைந்தடிக்கு முரிய.

இஃது, எய்தாத தெய்துவித்தது; என்னை? இடற்சீராற் கட்டளை யடியாமாறெல்லாம் 'ஐவகை யடியு மாசிரியக்குரிய' (தொல்-செய்-52) என்னுந் தூணையுங் கூறிப் பின்னும் 'விராய்வரினும் ஒருஉ ஈற்றில' (தொல்-செய்-53) எனக் கட்டளையடியன்றியும் அளவடி வருமென வும் அவை பதினேழ் சீலத்தவெனவுங் கூறி, இனி உரிச்சீராலுஞ் சீர் வரையறையடி உளவென்பதூஉம் அவ்வுரிச்சீரால் தளைவகையடி உள வென்பதூஉம் அவை பதினேழ்சீலத்தின் இகந்துவாராவென்பதூஉம் கூறுகின்றமையின்.

இதன்பொருள்: தன்சீர்வகையினும் — ஆசிரியவுரிச்சீராலும்; அதனை அதிகாரத்தாற் கொள்ளப்படும்: தளைநிலைவகையினும்—அவ் வாசிரியவுரிச்சீராலாகிய தளைநிலைமைப்பகுதியாலும்; இன்சீர்வகையி னும்—* இன் சீர்ப்பகுதியாலும்; ஐந்தடிக்குமுரிய—அவையும் மேற் கூறிய ஐவகையடிக்கும் உரியவாம், என்றவாறு.

ஐவகையடிக்கு முரியவெனவே பதினேழ்சீலத்தின் இகந்துவாரா வென்பதாம். தன்சீரென்றது வகையென்றது அவற்றை இருபகுதி யானே 'முன்னிரை யுறினு மன்ன வாகும்' (தொல்-செய்-34) என்ற தும் வெண்பாவுரிச்சீர் ஆசிரியவுரிச்சீரென்புழி உடன்கூறாது கூறிய வேறுபாடும் நோக்கியென்பது. அதனது பயம் வருகின்ற தளைவகைக் காயின் ஆசிரியவுரிச்சீராறுந் தளைகொள்ளப்படா, முன்னிரையீற்ற இரண்டுமல்லதென்றவாறு. தளைநிலைவகை சிறப்புடைமையின் அது மூற்கூறுகவெனின், அங்ஙனமாயினும் அறுவகைச்சீராலுஞ் சீர்வகை யடிவருதல் பெரும்பான்மையாகலானும், அவற்றுள்ளும் நீடுகொடி குளிறுபுலி என்னும் இரண்டுமே பற்றித் தளையேகோடல் சிறுபான்மை

* 'இதன்சீர்' என்பது முன் அச்சுப்பிரதியின் பாடம்.

நோக்கியுந் தன்சீர்வகை முற்கூறப்பட்டது. அல்லதூஉம், தனிநிலை வகை முற்கூறின் அவ்வியற்சீர்த்தனிமேற் செல்லும்; அவ்வாறன்றித் தன்சீர்த்தனியே கோடற்கும் அது பிற்கூறினுனென்பது. மற்றுத் தன்சீராஞவதனை இன்சீர்வகையோடு ஐந்தடிக்கு மூரித்தென்றதென்னையெனின், ஆசிரியவுரிச்சீர் நான்கும் கிரலேனின்றுழி அகவலோசை பிறவாதென்பது அறிவித்தற்கென்பது. எனவே, ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் இன்சீர் வரல்வேண்டுவதாம்.

இனிச் சீர்வகையினென இயற்சீர்களான் உரிச்சீர்களான் வகுத்து நிறீஇக்கொள்ளப்படும்.

உதாரணம்:

"ஓங்குகோட்டுத் தொடுத்த பாம்புபுரை யருவி"

எனவும்,

"நிவந்துதோன்று களிற்றி னிலங்குகோடு புரைய"

எனவும் இவை இயற்சீரொன்று இடையிட்ட ஆசிரியவுரிச்சீரான் வந்த நேரடி.

"பாம்புமணி யுமிழும் பாஞ லீங்குவரல்"

என்பது இயற்சீரிரண்டு இடையிட்டுவந்தது. இதுவும் 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' (தொல் - செய் - 11) என்பதனுன் அகவலோசை வழுவினவா றறிந்துகொள்க.

இனித் தன்சீரால் தனிநிலையடி வருமாறு:

"ஓங்குமலைப் பெருவிற் *பாம்புநாண் கொளீஇ" (புறம்-55.)

எனவும்,

"உவவுமதி யுருவி னேங்கல் வெண்குடை" (புறம்-3.)

எனவும் வரும்.

---

* 'பாம்புனாண் கொளீஇ' என்பதும் பாடம்.

தினைவகையென்னுது நிலையென்றதனால், அவற்று இரண்டாகிய வரிச்சிரும் அடிமுதற்கணின்று சீராவதன்றி இடைவாராவென்பது கொள்க. தினைநிலையென்னுது வகையென்ற தென்னையெனின், உரிச்சொல் தினைவழங்கின் ஓரடிக்கண் இரண்டுவரின் ஒசையுண்னு தென்ப தனர்வித்தற்கென்பது. இவையும் இன்சீர்வகையொடு வருமெனவே தன்சீர் இயற்சீரொடு தட்குமென்பதாம். அஃதேல், 'தன்சீ ருள்வழித் தினைவகை வேண்டா' (தொல்-செய்-55) என வருகின்ற சூத்திரத் தானே தன்சீர் பெறுதுமாகலின் ஈண்டுத் தினைநிலைவகையே கூறுக வெனின், இஃது ஆசிரியத்திற்குக் கூறினன்; அது வெண்பாவிற்குக் கூறினன். அல்லாக்கால் அது மிகையாமென்பது. எனவே, தன்சீர் வகை நாலெழுத்திற் குரித்தன்றென்பதூஉம், தினைவகையடிக் குறளடி முதன் மூன்று நிலத்திற்கும் உரித்தென்பதூஉம் உரையிற்கொள்க.

"ஒங்கு கோட்டுமீ துபாய்ந்து பாய்ந்து
மூசுக்கலை யாடு நாடற்
குரைப்பதை யெவன்கொனந் தோளே தோழீஇ"

என்பது ஐந்தெழுத்தால் தன்சீரடிவந்தது.

"ஆடுகொடி நுடங்கு காடு போந்து
விளங்கிழை *கோயிற் சேர்ந்தன
முழங்குக வானந் தழங்குகுரல் சிறந்தே."

என்பது எழெழுத்தால் தினைநிலையடி வந்தது. பிறவும் அன்ன.

இன்சீரென்னுது வகையென்றதனால்†இயற்சீர்ப்பாற்படுத்து இயற் றிக்கொள்ளப்பட்டது. அசைச்சிரும் இன்சீரேயாம்; தன்சீர்வகையினும் தினைநிலைவகையினும் இடையிட்டு வந்ததென்பது. இவை மேற்காட் டியவற்றுட் காணப்படும். (இசை)

---

* 'நகர்வயிற் போந்தனம்' என்பதும் பாடம்.

† 'இயற்சீர்ப் பாற்படத் தியற்றினர் கொளலே-தினைவகை சிதையாத் தன்மை யான' (தொல்-செய்-28.)

367. தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா.

*இது, மேல் ஆசிரியத்திற்குத் தன்சீர்வகையுந் தன்றளைவகையும் கூறியவழியானே வெண்பாவிற்குச் சீர்வகையுந் தளைவகையும் கூறுகின்றது.

* "இத்தினையும், அடியும், அடிக்குரிய எழுத்தும் ஒதினோர் இவ்வடிக்கண் ஒசைவேறுபாடுணர்த்துந் தளைஇலக்கணம் உணர்த்துவார், அத்தளைக்கண் வருவதோர் மரபுணர்த்திற்று. தத்தஞ்சீர்நிலை வகையானும் தளைநிலைவகையானும் இனியவோசை வேறுபாட்டினையுடைய ஐந்தடிக்குமுரிய தன்சீருள்வழித் தளைகள்வேறுபாடு கோடல் வேண்டா, என்றவாறு. எனவே, சீர்தான் ஒசையைத் தருமென்றவாறும். உரிய தன்சீரென்று ஐந்தடியானும் ஏற்றவழி நிலைபெறுந் தன்சீரென்று கொள்க; அஃதாவது, குறளடியாக ஐந்தெழுத்தினும் ஆறெழுத்தினும் ஓரசைச்சீரும் வருதலன்றி மூவசைசசீரான் வாராமை, பிறவாசிரியர்கொண்ட நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாதவஞ்சித்தளை என எழுவகையினும், வஞ்சித்தளை நிலைமொழி வஞ்சியுரிச்சீராய் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியது ஒன்றிய வஞ்சித்தளையெனவும், ஒன்றாதது ஒன்றாத வஞ்சித்தளையெனவும் வழங்குபவாகலின், அவ்விருபாற்றாயினும் தளையாற் பயனின்றென, நிலைமொழியாகிய வஞ்சியுரிச்சீர் தானே ஒசையுணர்த்துதலின் வஞ்சித்தளைகோடல் வேண்டாராயினார். இனி வெண்சீர்வெண்டளையும் வெண்சீர்நிற்ப வருஞ்சீர்வெள்ளையும் வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண்டளையாக வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை 'வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே' (தொல்-செய்-9) என ஒதுதலின் இதனை நிரையீற்றியற்சீராக்கினால் வருஞ்சீர் நேரசைமுதலியற்சீரானதும் இயற்சீர் வெண்டளையாம். அவ்வாறன்றி வருமொழியும் வெண்சீராயின் 'தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா' என்பதனைடங்கும். அதனானே யிருபாற்றாயினும் வெண்சீர்வெண்டளை கொள்ளாராயினார் இனி, ஒழிந்தநான்குதளையுங் கூறவேண்டாம், இயற்சீரான்வருதலின் எனின், அதன்கண்ணே இயற்சீர்வெண்டளை கூறவேண்டுதலின் ஆசிரியத்தளையுங் கூறவேண்டுமென்க." என்பது இளம்பூரணர் உரை.

இதன் பொருள்: தன்சீர்—வெண்சீர்; உள்வழி—வெண்சீரே வருஞ்சீராகியும் வந்தவழி; என்னை? தளைவகைக்கு இரண்டுசீர் வேண்டுதலானும் தளைவகைவேண்டாதவிடம் இதுவென்கின்றுழுகை லானுமென்பது: தளைவகைவேண்டா—தளைவகை நிலைமைகொள் ளப்படா மற்று அவ்வடிக்கண், என்றவாறு.

எனவே, வெண்சீர்நிற்ப இயற்சீர்வந்தொன்றின் வெண்டளையா மென்பதே கருத்தாயிற்று. இஃது உய்த்துக்கொண்டுணர்தலென்னும் உத்திவகை.* இதனானே வெண்சீர்க்கு வெண்சீர்வந்தொன்றுவது கட்டளையடியெனப்படாது சீர்வகையடியா மென்பது பெற்றும்.

"வெண்சீ ரொன்றின் வெண்டளை கொளாஅல்"

"வெண்சீ ரொன்றினும் வெண்டளை யாகு
மின்சீர் விரவிய காலை யான"

என்றார் காக்கைபாடினியாரும்.

வெண்சீ ரொன்றியது வெண்டளை யாகாதென்றற்குக் காரண மென்னையெனின்,

'அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை யொன்றுத் தன்மை யான' (தொல்-செய்-58.)

என்புழி, அளவுஞ் சிந்தும் அல்லாத †வேறிய நிலமெல்லாம் வெண் பாவுங் கலிப்பாவுந் தம்மில் தளைவகையொக்குமென்றுணர்கலினென் பது. எனவே, வெண்சீர் நான்கும் ஒன்றிவரின் அது கலிப்பாவிற்குஞ்

மற்றும் வஞ்சியுரிச்சீருந் தன்சீராகலின் இன்னவாறு தளை கொள்ளு மென்றுணர்வெனின், அவை தன்சீருள்வழி ஒன்றினும் ஒன்றுவாயினும், பிறசீர் வந்துழி ஒன்றினும் ஒன்றுவாயினும் வஞ்சித் தளையாகி வரையறையின்மையானும் வஞ்சியடி அறுநூற்றிருபத்தைந்

* 'இது குதலியதறிதற்பாற்படும்' என்பர் நச்சினார்க்கினியர்.
† 'வெறிய' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

தடியுட் படாமையானும் அவை கூருளியுன் ஆசிரியனென் யது. (88)

868. சீரியை மருங்கி னோரசை யொப்பி னாசிரியத் தளையென் றறியல் வேண்டும்.

—ளையடிக்கண் இயற்சீர் தட்குமாறுணர்த்துதல் நுத

இதன்பொருள்: இயற்சீர்பத்தும் பிறிதொன்றனோடு இயையுங் கால் அவை தத்தம் ஈற்றசை ஒன்றி, வருஞ்சீரின் முதலசையோ டொப்பு நிற்பின் ஆசிரியவடிக்குந் தட்கும் முறைமையென் றறியப் படும், என்றவாறு.

'ஒப்பின் ஆசிரியத்தளை'யெனவே ஒவ்வாதொழியின் வெண்டளை யென்று எதிர்மறுத்துக்கொள்ளப்படும். என்னை ?

'எடுத்த மொழியினு செப்பலு மூரித்தே'
(தொல்-சொல்-இளவ்-61.)

என்றமையின்.

" அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி" (பத்து-பெரும்பாண்-1.) என்றவழி நேரும் *னிரையும் சீரியை மருங்கின் ஓரசை ஒன்றி ஆசிரி யத்தளையாயின.

"மல்லர்க் கடந்தானிறம்போ லிருண்டெழுந்து" (ஐங்கிணை,50-1.) என்புழி முதலடி இயற்சீர் ஒன்றுது வெண்டளையாயிற்று.

மற்றுச் சீரியைமருங்கின் ஓரசையே வரினென்னுது'ஒப்பின்'என்ற தென்னையெனின், உரியசை முதலும் ஈறுமாகியவழி அவை இயலசை யோடு ஒப்புமைநோக்கித் தளைகொள்ளினல்லது தம்மோடுதாம் ஒன்று தல் கொள்ளாரென்றற்கென்பது இதனுனும் பெற்றும். போதுபூ என்பது வருஞ்சீராயவழிப் போரேறு என்பது ஓரசையொன்றிற்

* 'னிரையுமொன்றி' என்பது முன் அச்சுப்பிரதியின் பாடம்.

றென்ற ஆசிரியத்தினையென்னுமையென்பது. இனி அவை நின்ற* சீராயவழி நிரையீறாகல் அறியல்வேண்டுமென்னும் மிகையாலுங் கொள்க. இனி ஈரசையொப்பினென்பது பாடமாக உரைப்பின் நேரும் நிரையும் ஒன்றினென்றவாறுமாமெனக்கொள்க. (இசு)

369. குறளடி முதலா வளவடி காறு முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.

இது, வஞ்சியடியுறழுமாறும் அதுபெறும் நிலனும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் : நாலெழுத்துமுதலாகப் பதினெண்கெழுத்தளவும் உறழும் நிலைமையிலீ வஞ்சியடிக்கு, என்றவாறு.

இனி, முதலும் ஈறும் யாதெனப்படுமோவெனின் 'தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே' (தொல்-செய்-46) என்றதனுள் ஆறெழுத்தடி முதலாகவும், 'நேரிலை வஞ்சிக் காறு மாகும்' (தொல்-செய்-42) என்றதனுள் பன்னிரண்டெழுத்தடி யீறாகவும் உறழுமென்றவாறு. எனவே, வஞ்சியடிக்கு நிலன் எழென்பது சொல்லியவாறு. அதுவே கருத்தெனின், இச்சூத்திரம் மிகையாம் பிறவெனின், அற்றன்று. வஞ்சியுரிச்சீர் மூன்றெழுத்திற் சுருங்கா, ஆறெழுத்தின் எறுவெனவே நேரிலைவஞ்சிக்கு மூவெழுத்துச்சீர் இரண்டெந்த இருசீரடிக்கு ஆறெழுத்துமுதலாமென்பதூஉம் ஆறெழுத்துச்சீர் இரண்டுவரிற் பன்னிரண்டெழுத்தடி ஈறுமென்பதூஉம் பெறுதுமால் அவ்வச்சூத்திரங்களானேயெனின், ஆண்டு வஞ்சியுரிச்சீர்க்கு எழுத்துவரையறைகூறினான்; அவ்வடி இத்துணைநிலம் பெறுமென்றற்கு இது கூறல்வேண்டுமென்பது. அல்லதூஉம், அங்ஙனங் கொள்ளின் உய்த்துணர்ச்சியாம். இஃது எடுத்தோத்தாகலின் எடுத்தோத்துக் களைந்து உய்த்துணரா தென்பது. இனி இது கூறுக்காற் கட்டளையடிக்கண் இயற்சீர்வாரா தென்பது பெறலாகாதாம். ஆகவே, ஞாயிறு புலிசெல்சுரம் என்பது கட்டளையடியாகியசெல்லும். வஞ்சித்தாக்கின் அதுகொள்ளாமையின்

* 'நின்ற' என்பது முன் அச்சுப்பிரதியின் பாடம்.

அது விலக்கவேண்டி இது கூறினான்: என்னை ? இயற்சீர்கொள்ளின் ஓரெழுத்தானாகிய இயற்சீரும் ஆண்டேகோடல்வேண்டும் ; அது கொள்ளின் இச்சூத்திரத்திற்கு ஏலாமையினெனபது.

இனி, வஞ்சியுரிச்சீர் அறுபதும் இருநிலைமைப்படுவன இருபத்து நான்கும், நான்குநிலைமைப்படுவன இருபத்தெட்டும், எட்டுநிலைமைப்படு எட்டுச்சீருமாகி இருநூற்றிருபத்துநான்காய் விரியும்.

"இரண்டுநான் கெட்டு நிலைமைய வாகித்
திரண்ட நிலைவஞ்சிச் சீர்க - ளொருங்கே
யிருபத்து நான்கிருபத் தெட்டுட னெட்டா
யிருநூற் றிருபத்து நான்கு"*

அவ்வஞ்சியுரிச்சீர் இருநூற்றிருபத்துநான்கினுள்ளும் ஒன்ப தெழுத்துச்சீரொன்றும், எட்டெழுத்துச்சீரொன்பதும், ஏழெழுத்துச் சீர் முப்பத்துமூன்றுமாக நாற்பத்து மூன்றுவகையான் உறழும் நிலம் இல இச்சூத்திரத்தான் ஓதியவாற்றானென்பது.

"நாலாதி யீற்றன நான்கு பதினாற
னாதிய வெண்சீ ரகப்பட்ட மூவைந்து
பொய்ப்பினவ் வஞ்சி யடியுற ழாமோனை
மூவைந்து மூன்றுமூன் றொன்று"

"இரண்டெட்டு மூவெட்டு நாலேழா றைந்தொன்
றகன்றநாற் பஃதுநான் காறேழைம் பத்திரண்டு
நான்கைந்தெட் டொன்பா னறுபஃ தொன்றுநான்
காறேழு பெற்றனமூ வைந்து"

---

* "அறுபஃ தாக வகுத்த வஞ்சியுண்
மூவெண் சீர்க ளிருநிலைமை யெய்தி
நாலேழ் சீராக நான்கு நிலையெய்தி
யிருநான் கிருசீ ரிருநான்கு நிலையெய்தி
யிருநூற் றிருபத்து நான்காய் விரியும்"

என்பது நச்சினார்க்கினியர் காட்டிய சூத்திரம்.

"நாலெட்டே யேழெட் டறுபத் திரண்டிவற்று
னேழெழுத்தா றெட்டெழு பத்துமூன் றேழா
மேழெழு மும்மூன்று யெட்டெழுத்தா னேரொன்று
மாறெட் டறுபஃ தூ மூன்று"

"எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை யொக்கு
மசைக்கு வளையறை யின்மை யான"

"வஞ்சி யுரிச்சீர் நிலையுரி யுறழ்ந்து
மெல்லாங் குறைத்து மிகுத்துக் *கொளாஅல்"

எனவே, இவ்வாற்றான் வஞ்சியுரிச்சீர் எழெழுத்தும் எட்டெழுத்தும் ஒன்பதெழுத்துமிகிவரும். அவையறிந்து மாற்றுக. அவை யாவன :

களிறுபோகுவாய், களிறுவழங்குவாய், புலிவழங்குசுரம், மாவழங்கு சுரம், களிறுவருசுரம், களிறுபோகுசுரம், புலிவழங்குகாடு, பாம்பு வழங்குகாடு, களிறுவருகாடு, களிறுபோகுகாடு, மாவழங்குகடறு, புலி போகுகடறு, பாம்புவருகடறு, பாம்புபோகுகடறு, களிறுசெல்கடறு என இவை பதினேந்தும் எழெழுத்தாங்கால் உறழ்நிலை இலையெனப் படும். களிறுவழங்குவாயென்பதனை அரவுவிரவுவாயென எழெழுத் துச்சீராம். ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க. இவை பதினேந்தும் எழெழுத்தின் இகவாதன. இனி எழெழுத்துச்சீரின் இவ்விரண்டும் எட்டெழுத்துச்சீர் ஒரோவொன்றுமாகி வருவன மூன்று சீர் உள. அவை களிறுவழங்குசுரம், புலிவழங்குகடறு, களிறுவருகடறு என்பன. இவற்றைக் களிறுவிரவுசுரம், அரவுவழங்குசுரம், அரவுவிரவுசுரம் என்றாற்போல வாய்பாடு படுத்தொட்டிக்காணவே எழெழுத்துச்சீரா றும் எட்டெழுத்துச்சீர் மூன்றுமென ஒன்பதாம். களிறுவழங்குகாடு, பாம்புவழங்குகடறு, களிறுபோகுகடறு என இவை மூன்றுசீரும் ஒரோ வொன்று எழெழுத்துச்சீர்மூன்றும் எட்டெழுத்துச்சிரொன்றுமாக மூன்நான்கு பன்னிரண்டும் உறழ்நிலைமையில எனப்படும். அவை

---

* 'கொளல்' என்பதும் பாடம்.

களிறுவிரவுகாவு, களிறுவழங்குகுரவு, அரவுவிரவுகாடு, அரவுவிரவுகுரவு என எழெழுத்துச்சீர்மூன்றும் எட்டெழுத்துச்சீ ரொன்று மாயினவாறு கண்டுகொள்க. ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க. இனிக் களிறு வழங்குகடறு என்பது ஆறெழுத்துச்சீர் ஒன்றும், எழெழுத்துச்சீர் மூன்றும், எட்டெழுத்துச்சீர் மூன்றும், ஒன்பதெழுத்துச்சிரொன்று மென அதுவும் எட்டினிலைமைத்தாம். அவற்றுள், ஆறெழுத்துச் சிரொன்றும் ஒழித்து, ஒழிந்த வஞ்சியுரிச்சீரேழும் உறழ்னிலையில வஞ்சிக்கெனப்பட்டன. அவை, களிறுவழங்குகுரவு, களிறுவிரவுகடறு, அரவுவழங்குகடறு என மூன்றும் எழெழுத்துச்சீர்; களிறுவிரவுகுரவு, அரவுவழங்குகுரவு, அரவுவிரவுகடறு என மூன்றும் எட்டெழுத்துச்சீர்; அரவுவிரவுகுரவு என்பது ஒன்பதெழுத்துச்சீர் : இவையெல்லாந் தொகுப்ப் எழெழுத்துச்சீர் முப்பத்துமூன்றும் எட்டெழுத்துச்சிரொன் பதும் ஒன்பதெழுத்துச்சிரொன்றும் ஒழித்து, ஒழிந்த வஞ்சியுரிச்சீர் நூற்றெண்பத்தொன்றும் உறழ்னிலையுடையவெனக்கொள்க.*

எழெழுத்துச்சீரும் எட்டெழுத்துச்சீரும் ஒன்பதெழுத்துச்சீரும் அடியுறழ்வனவாக்கி மேன்மூன்றுசீரானும் மூன்றினிலனேற்றிப் பதி னைந்தெழுத்தடியளவும் உறழும் வஞ்சியடி என்பாருமுளர். அம் மனம் ஒன்பதெழுத்துச்சீர் இரண்டு வந்த குறளடி பதினெட்டெனப் படுதலின், வஞ்சினிலம் பதின்மூன்றுதல் வேண்டும் ஓசை நோக் காது சீர்நோக்கி உறழ்ச்சிகொள்ளினென மறுக்க.

அவை அளவடியோடு ஒத்த சிறப்பினவன்மையானும், அவற் றுக்குத் தனிவகையின்மையானும் எடுத்தோதித் தொகைகூறிற் றிலனெயினும், நாம் அவற்றை எண்ணி உணர்ந்து கூறுங்கால் ஒரு

" அவற்று ளொன்ப தெழுத் தாஞ்சீ ரொன்று
மிருநான் கெழுத்தா குஞ்சீ ரொன்பது
மேழெழுத் தெய்துவ மூப்பத்து மூன்று
மாகநாற் பத்து மூன்று மாக
நூற்றெண் பத்தொன் றடியுற மும்மே"

என்பது நச்சினார்க்கினியர் உரைச் சூத்திரம்.

சீர்த்து அடிநான்காக வஞ்சியடி எழுநூற்றிருபத்து நான்காமெனக் கொள்க. அவையுறழுங்கான் மூன்றெழுத்துச்சீர் ஆறு இ ஒன்பது உயர்வும், நாலெழுத்துச்சீர் ஏழாறி பத்தெழுத்துயர்வும், ஐயெழுத்துச்சீர் எட்டாறி பதினெனன்றுயர்வும், ஆறெழுத்துச்சீர் ஒன்பதுமுதல் பன்னிரண்டுயர்வும் பெற்று நின்ற சீரோடு மூன்றெழுத்துசசீரும் நாலெழுத்துச்சீரும் ஐயெழுத்துசசீரும் ஆறெழுத்துச்சீருந் தந்துறழ்க வென்பது. அவை:

"கால்காய்ந்தது காம்புநீடி"

என்பது ஆறெழுத்தடி.

"நல்கூர்ந்தது வில்லோர்சுரம்"

என்பது ஏழெழுத்தடி.

"வான்பெய்தது *மண்குளிர்ப்புற"

என்பது எட்டெழுத்தடி.

"தேன்பெய்தது செழுந்தரைதொறும்"

என்பது ஒன்பதெழுத்தடி.

இவை முவேழத்து மாசெல்காடு நின்றுறழ்ந்த நான்கடியும் வந்தவாறு. ஒழிந்தனவும் அன்ன.

"மண்மாய்ந்தென வுள்வீழ்ந்தது"

என்பது ஏழெழுத்தடி.

"விண்பாயந்தென மேற்றொடுத்தது"

என்பது எட்டெழுத்தடி.

"காடோங்கிய கல்கெழுசுரம்"

என்பது ஒன்பதெழுத்தடி.

---

* 'மணக்குளிர்ப்புற' என்பது முன் அச்சுப்பிரதியில் பாடம். இப்பாடம் சொன்னின் ஒருமுத்து மிருதல் காண்க.

"கோடோங்கிய குறும்பொறைமருங்கு"

என்பது பத்தெழுத்தடி.

இவை நான்கடியும் நாலெழுத்து மாசெல்சுரம் இன்றுறழ்ந்த அடி.

"மழைபெய்தென வான்வெள்ளென்று"

என்பது எட்டெழுத்தடி.

"தழைபச்செனுந் தண்ணென்காவு"

என்பது ஒன்பதெழுத்தடி.

"கமழ்பூந்துணர் கள்ளவிழ்தொறும்"

இது பத்தெழுத்தடி.

"இமிழ்தூங்கிசை யிசைசுரும்புகள்"

என்பது பதினொரெழுத்தடி.

இவை நான்கும் ஐயெழுத்துப் புலிசெல்சுரம் இன்றுறழ்ந்த அடி.

இனி, *ஒன்பதெழுத்துமுதற் பன்னிரண்டளவும் உயர மற்றை யணபோல நான்கடிபெறும்.

"அமைவிடுகொடி வஞ்சியோர்ந்து"

என்பது ஒன்பதெழுத்தடி.

"†கனைகுரலன கானக்கோழி"

என்பது பத்தெழுத்தடி.

"‡தினைப்புனத்தித ணைமறப்பெயர்"

என்பது பதினொரெழுத்தடி.

"மனைக்குறமகள் கடைப்புறந்தரும்"

என்பது பன்னிரண்டெழுத்தடி.

---

* 'ஆதெழுத்துப் புலிவருசுரம்' என்பது சண்டிருத்தல் வேண்டும்

† 'கணை' என்பதும் பாடம்.

‡ "தினைப்புனத்தித ணையற்பிரியாது" என்பதும் பாடம்.

இவ்வாறே ஒழிந்தனவும் உறழ்ந்துகொள்க.

மூன்றுபாவின்றுணைச் சிறப்பின்மையின் வஞ்சியடி ஈண்டுப்போந்து கூறிஞனென்பது. ஒழிந்த *மூச்சீரடி சிறுவரவிற்றாகலின் அதற்குக் கூறியதிலனென்பது. (இஎ)

370. அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய தளவகை யொன்றுத் தன்மை யான.

ஐ, ஆசிரியவடிக்கும் அதன் நடைத்தாகிய வஞ்சியடிக்கும் உரிய நிலங்கூறி வெண்பாவிற்குரிய நிலங் கூறுகின்றது.

இதன்பொருள் : அளவடி ஐந்துஞ் சிந்தடி மூன்றுமென எட்டு நிலம்பெறுந் தளவிரவாத்வாற்றான் வெண்பாவடி, என்றவாறு.

அளவடி முதற்கூறியதென்னையெனின், மேல் சிறுத்தமுறையாற் கொள்ளாது ஈண்டுச் சொல்லும் முறைமையாற் கூறிஞனென்பது.

"நின்று நினைந்து நெடிது பெயர்ந்து"

என்பது எழெழுத்தடி.

"அறிவறிந்தார்த் †தேறியக்கா லஞ்சுவ தில்லே."

என்பது பதினென்கெழுத்தடி.

இதனும்பர் நெடிலடியானும் வெண்பாவடி வருவன உள.‡

---

* 'மூன்றுசீரடி' என்பதும் பாடம்.

† 'தேற்றியக்கா லஞ்சுவ தில்லே' 'தேறுங்கா லஞ்சுவதொன் றில்லே' என்பனவும் பாடம்.

‡ 'இதனும்பர் நெடிலடியான் வந்தன சீர்வகையடியாம். "வான வரு நான்முகனும் வாசவனு மாமுனிவர் - ஆனவருங் காணு அரன்" எனப் பதினெறெழுத்தான் வந்த வெண்சீரொன்றிய சீர்வகை யடி. "வானவரு நான்முகனும் வாசவனுங் காணரே" என்பது துள்ள லோசைக் குணர்க. இவ்வெண்பாவை ஏந்திசைச் செப்பலெனப் பின் னுள்ளோர் கூறுவர். அவர் கூறும் ஒழுகிசையும் தூங்கிசையும் பெரும் பான்மை பதினென்கெழுத்தின் இகந்து வாராவென்றுணர்க' என்பது நச்சினார்க்கினியர் உரை.

அவை கட்டளையடி யெனப்படா, செப்பிக்கூறும் பாவாகாது செய்கைதேர்ன்றியே னிற்குமாகலினென்பது. பிறிது காரணம் உண்டாயினும் அறிந்துகொள்க. தளைவகை ஒன்றுமையென்பது வெண்பாவும் வெண்பாநடைத்தாகிய கலிப்பாவும் மயங்காமைகாரணத்தானென்றவாறு. கலியோசைமயங்கி வருவனவும் வெண்பாவடியுளவுன. அவை நெடிலடி மூன்றுனும் வருமெனக்கொள்க. ஒரோவடியே வெண்பாவடியுமாய்த், துள்ளிக் கலியடியுமாகித் தளைவகை ஒன்றுமாகலான் அம்மயக்கந் தீராதென 'அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய' என்றுனென்பது. மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய் என்றக்கால், இதனை 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' (தொல்-செய்-11) என்றதனுற் கலியோசை பிறப்பவுஞ் சொல்லிக் கண்டுகொள்க.

மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்
மாவருவாய் தேமா வரகு

என்றிதனையே ஓசையூட்ட வெண்பாவாயிற்று. இது 'மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாற்றினரே' எனக் கலியோசையாயினவாறறிக. (இஅ)

371. அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி யிருநெடி லடியுங் கலியிற் குரிய.

இது முறையானே கலிக்குரிய னிலமுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஐவகையடியினும் அளவடிமிகுதியாகிய பதின்மூன்றெழுத்தும் பதினுன்கெழுத்தும் நெடிலடியுங் கழிநெடிலடியுங் கலியடிக்குரிய, என்றவாறு.

எனவே, அதுவுந் தன் முதற்கட் பாவாகிய வெண்பாப்போல எட்டனிலம் பெறுவதாயிற்று. ஒழிந்த அடி மூன்றனுளும் ஒவ்வாதுமிக்கனிலம் இரண்டனையும் மிகுதியென்றுனென்பது.

இனி 'ஒத்தநாலெழுத் தொற்றலங் கடையே' (தொல்-செய்-38) என்பதைகொண்டு பதினேரெழுத்துமுதல் நான்குவிலனும் அளவடி யிருதியெனப்படும் எனவும், அவை கலிக்குரிய எனவுங் கொள்வாரு மூளர். அன்னவர் கொள்வார்க்கு 'ஞாயிறு கடியாறு கடியாறு கடியாறு' என்றதனைப் பதினேரெழுத்தடியென்று காட்டல்வேண்டும். அஃது அரிதாயவடியாம். ஆகலான் அற்றன்றென்பது. இனி, 'ஞாயிறு மாசேர் வாய் மாசேர்வாய் மாசேர்வாய்' என்பதாவெனின்; அது கலிப்பா வோடு தளைவகை ஒன்றிய வெண்பாவடியாகலானும், நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்பினன்றி ஞாயிறு என நின்ற நிரையீற்றியற் சீர்ப்பின்னர் நேர்வந்தாற் கலித்தளையாகாது வெண்டளையாமாகலா னுங் கட்டளையடிக்கு அவ்வாறுகோடல் குற்றமென்பது. அல்லதூஉங் கலிப்பாவிற்குப் பத்துவிலங் கொள்ளிற் கட்டளையடி அறுநூற்றிருபத் தைந்தன்றிப் பல்குமென்பது.* (இக)

372. நிரைமுதல் வெண்சீர் வந்து நிரை தட்பினும் வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப.

இதுவுங் கலித்தளைவிகற்பங் கூறுகின்றது.

இதன்பொருள் : நிரையீற்றியற்சீரும் நிரையீற்றுசிரியவுரிச்சீரும் நிற்ப நிரைமுதல் வெண்சீர்வந்து நிரையொன்றியக்காலுங் கலித்தளை யாம், என்றவாறு.

"மணிபுரை திருமார்பின் மறுத்தயங்கத் தோன்றுங்கால்," என் புழித் திருமார்பினென நிரைமுதல்வெண்சீர்வந்து மணிபுரையென் னுஞ்சீர் இறுதி நிரையொடு தட்டுக் கலித்தளையாயிற்று. எனவே நிரைமுதலியற்சீர்வந்து நிரைதட்பினும் நேர்முதல்வெண்சீர் வந்து ஒன்றுதொழியினும் அது கட்டளைவகையாற் கலியடியாகாதென்ற

* 'இனிச் சீர்வகையடியாய் இவ்விலங்களைத் தப்பி வருவனவுங் கொள்க. உதாரணம்: "ஐயிரு தலையி னரக்கர் கோமான்" "சுற்றமை வில்லர் சிலைவளர் பித்தையர்" (பாலைக்கலி-3) எனப் பதினெண்டும் பன்னிரண்டும் எழுத்தான் வந்தன'. என்பது நச்சினார்க்கினியர் உரை.

வாறு. எனின்? துள்ளற்த இயற்சீர்ப்பின் னிரைமுதல்வெண்சீர் வந்து துள்ளுவிக்கல் வேண்டுமாதலாலும் ஞாயிறு மாசேர்வாயென் பது வெண்பாவடியுமாம் ஆகலானுமென்பது. 'அடிக்கென்ப' என்றது னுன் இதுவுங் கட்டளையடிக்கே யென்பதுகொள்க. மற்று னிரை முதல்வெண்சீர் வருவது முதனின்ற இயற்சீர்ப்பின்னர் இடைனின்ற இயற்சீர்ப்பின்னரென்ப தறியுமாறென்னையெனின், அங்ஙனம் வரை யாது கூறினமையின் முதற்கண்ணதே இவ்விதியென்பதாம். அல்ல தாயும் அவ்வாறு இயற்சீரினை இடையும் வருமென்றுகொள்ளிற் பதின் மூன்றெழுத்திற் சுருங்கியிலனும் அதுபெறுவான் செல்லும். செல் லவே கலியோசை இனிது பெறலாகாவென மறுக்க. என்றார்க்குப் பின்வருஞ்சீர் மூன்றும் னிரைமுதல்வெண்சீர் வருவதென்றிலனுதலின் மூன்றுஞ்சீர் நேர்முதல் வெண்சீர்வந்தும் 'வெண்சீ ரீற்றசை னிரையசை யியற்றே' (தொல்-செய-29) என்றதனாலும் இடைனிற்பன வெண் சீரென்பது பெறுதுமாகலானும் அது கட்டளையன்றென்பது. இனி முதனின்றது னிரையீற்றியற்சீராகலான் துள்ளலோசை பிறவாமையின் அவற்றோசை குறைதீரக் கலித்தளை பலவாகி வரல்வேண்டுமென்பது. இவ்வாற்றான் ஓசைசசுருக்கம் பெருக்கம் உணர்தற்கு அருமைநோக்கி,

'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே' (தொல்-செய்-11.)

என்பாலயிற்றெனவுணர்க. இக்கருத்தினனன்றே னிரைமுதல்வெ சீர் வருகவெனவும் னிரையீற்றியற்சீர்ப் பின்னர் மாசெல்வாய் மூன்று வரினுஞ் சிறிது கலியோசை பிறக்குமாயினும் அதனைக் கட்டளையடி யென நேராலயிற்றுமென்பது.* (கூ0)

---

* 'னிரையீற் றியற்சீர்ப் பின்னர் வெண்சீரடுக்கிய வெண்டளை வரி னுஞ் சிறிது துள்ளலோசை பிறத்தலின் அதனைச் சீர்வகை யடியென் றுணர்க. உதாரணம்: "அணிமுக மதியேய்ப்ப வம்மதியை னனி யேய்க்கு – மணிதிகழ் மாமழையின் பின்னெப்பப் பின்னின்கண்" வருவனவும் பிறவுமாம்' என்பது நச்சினார்க்கினியர் உரை.

373. விரா அய தனோ டொருஉ நிலை யின்றே.

இது, சீர்வகையான்வரும் கலியடித்தனோ விரவினும் கடியப்படா தென்கின்றது; யாதனோடு விரவியோவெனின் வெண்பாவினோடு விராய்த் தட்பினுமென்றவாறு. என்னை? 'தனைவகை யொன்றுத் தன்மை யான' (தொல்-செய்-58) என வெண்பாவிற்குங் கூறினமை யின்.*

இதன் பொருள்: வெண்சீர் ஒன்றிவருதலுங் கடியப்படா கலிக்கு, என்றவாறு.

'சீர்வகையடிக்கண்' என்பது என்னை பெறுமாறெனின், 'விரா அய தனோ'வென்றமையிற் பெறுதுமென்பது. உதாரணம் 'தனைவகை யொன் றுத் தன்மை யான'(தொல்-செய்-58)என்புழிக் காட்டப்பட்டது.(சுக)

374. இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே.

இது, வெண்சீரொன்றிவரும் அடி கலிப்பாவிற்கும் உரித்தென்ற முறையானே, இயற்சீர் வெள்ளடியான் வரும் ஆசிரியத்திற்கு மயங் கியல்வகையான் நிலைக்குரித்தாகி நிற்கவும் பெறுமென்கின்றது.

இதன் பொருள்: அம்மயங்கியல்வகைதான் அப்பாவிற்கு உரிமை பூண்டுநிற்கும்; ஆசிரிய அடியோடு கூடிய கூட்டத்துக்கண், என்றவாறு.

வெண்பாவினுளாயின் ஆசிரியவடி முழுவதுந் தன்றனோயோடு வாராது. என்னை?

* நச்சினார்க்கினியர் 'வெண்சீரோடும் ஒழிந்த சீரோடும் விராஅய்த் தட்பினும்' எனக் கூறி "வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற" (பாலைக்கலி - 24) என்பதனை உதாரணம் காட்டுவர்.

"*தூஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல்
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொன்
†மாஅ மிசையான்கொ னன்ன னறுதுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு."

என்பதன் முதலடியுள்ளே தூஉத்தீம்புகை யென ஓர் ஆசிரியத் தளை வர மற்றையன வெண்டளையாகி வந்தமையின், அற்றன்றி முழுவதூஉம் ஆசிரியத்தளைவரின் வெண்பா சிதையுமாகலின் இத னையே சொல்லின்முடிவிலக்கணத்தான் வெண்பாவென்றான். எனவே, வேற்றுமைசை விராயவழித் தன்னுருபை அழிதல் இதற்குப் பெரும்பான்மையாயிற்று. ஆசிரியமாயின் அவ்வாறு அழியாதென்பது கருத்து. என்போலவோவெனின் பளிங்குடன் அடுத்த பஞ்சி வேற் றுமையால், பளிங்கு வேறுபடினல்லது பஞ்சிவேறுபடாததுபோல வென்பது. இதனானே வெள்ளையென்பது ஒப்பிலான் ஆகிய பெய ரென்பதூஉம் பெற்றும்.

* இவ்வெண்பா, "தூஉய்த் தீப்புகையத் தொல்விசும்பிற் போர்த் ததுகொல் - பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல் -கோண்மா மிசையான்கோ னன்ன னறுநுத - லார்மாமை யெல்லாம் பசப்பு" எனச் சில பாடவேறுபாடுகளுடன், பத்துப்பாட்டு அச்சுப் பிரதியில் மலைபடுகடாஅத்து உரையிறுதியில் காணப்படுகிறது.

ஆசிரியர் நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நான்மரபு ஆறாவது சூத்திர உரையில் "தூஉத் தீம்புகைத் தொல் விசும்பு".....எனச சான்றோர் செய்யுட் கெல்லாம் (அனபெடை) நான்கு மாத்திரை பெற்று நின்றன. அன்றி மூன்றுமாத்திரை பெற்றன வேல், ஆசிரியத்தளை தட்டுச் செப்பலோசை கெடுமாயிற்று. இன்னனம் அனபெடாது நின்று ஆசிரியத்தளை தட்டு நிற்பன கலிக்கு உறுப்பா கிய கொச்சக வெண்பாக்கள்; இவை அன்னவன்றென உணர்க" எனக் கூறுமாற்றான், அவர் கொண்டபாடம் 'தூஉத் தீம்புகை' என்பது தெள்ளிது. இப்பாடம் "'தூஉத் தீம்புகை' என ஓர் ஆசிரியத்தளை" வந்ததென்று பேராசிரியர் கூறுவதற்கு மூலமாண்படும்

† 'மாமிசையான் கொன்னன்று துதலார' என்பது முன் அச்சுப் பிரதிப்பாடம்.

"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய" (குறுந்-12.)

இவ்வாசிரியத்துள் எல்லாவடியும் பாவேறுபட்டு இசையாமை யின் மூதற்கணின்ற இயற்சீர் வெள்ளடி நிலைக்குரிமரபின் நின்றதா யிற்று.

"கொலைநவில் வேட்டுவன் கோள்வேட் டெழுந்த
புகர்நுதல் யானை நுதன்மீ தழுத்திய
செங்கோற் கடுங்கணை போலு மெனதது
நெஞ்சங் கவர்ந்தோ ணிரையிதழ்க் கண்ணே."*

என்பது செய்யுண்முழுவதும் இயற்சீர் வெள்ளடியான் வந்தது.

மற்று இயற்சீர்வெள்ளடியல்லது பிறவடி ஆசிரியத்துண் மயங்கப் பெறுதோவெனின், அது நிலைக்குரிமரபின் நில்லாமையின் உம்மை யால் தழீஇக்கொள்ளப்படுஞ் சிறுபான்மையென்பது. "பாஅல்புளிப் பினும் பகலிருளினும்" (புறம்-2) என்றாற்போல்வன. "மாவழங்கு பெருங்காட்டு மழகன்று காணுது" என்னும் ஆசிரியவடியினைக் கலிப்பா மயங்கிற் றென்பாரும் உளர். அது †துள்ளச்செல்லுங்கால் அள பெடுக்கவேண்டுமெனக்கூறி மறுக்க. (சூ2)

375. வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு மைஞ்சீ ரடியு முளவென மொழிப.

இஃது ஐஞ்சீரடியும் வருமாறு கூறுகின்றது.

இதன் பொருள்: மேனின்ற அதிகாரத்தாற் கலிப்பாவிற்கு ஐஞ் சீரடியும் உள, என்றவாறு.

---

* 'இது வெள்ளடி முழுதும் வந்தது என்று போராசிரியர் காட் டினார். இதனை அகவலோசை பிறக்கும் என்று கொள்ளின் இயற்சீர் வெண்டளையான் வருமென்ற கட்டளை வெண்பா இன்றுமெனமறுக்க' என்பர் நச்சினார்க்கினியர்.

† 'துள்ளச் சொல்லுங்கால்' என்பதும் பாடம்.

'வெண்டளைவிரவியும் ஆசிரியம்விரவியும்' என்றது என்னையெனின், அவ்வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும் ஆசிரியப்பாவோடு விராயும் வருமென்றவாறு. ஈண்டுத் தளையென்றது அப்பாக்களையாதலான் அப்பாக்களோடு *விரவுமெனவே, அப்பாக்களை உறுப்பாகவுரும் பிறசெய்யுட் கண்ணும் அவ்வைஞ்சீரடி வருமென்பது பெற்றும். வெண்டளையொடு விரவுமெனவே ஐஞ்சீரடி அவற்றுக்கு உரியவல்லவென்பதாம். எனவே, கலிப்பாவின்கண்வரும் ஐஞ்சீரடியாயின் அக்கலியோசைக்கு உரிமையுடைத்தென்பதாம்.

உளவெனவே, ஐஞ்சீரடி கலியினுட் பயின்றுவருமென்பதனையும் அல்லனவற்றுட் பயிலாவெனவுங் கொள்க. 'விராய தளையு மொருவழி யின்று' (தொல்-செய்-61) எனப்பட்ட கலிப்பாவிற்கு இயைபுபட்ட வெண்பாவடியும் அதற்கு இயைபுபட்ட ஆசிரியவடியுங்கூறி, அம்மூன்றனையும் உடன்கூறினுமையினும், ஆண்டுச் சிறந்தவாறே ஈண்டும் அவ்வதிகாரத்ததாக நாட்டி, ஐஞ்சீரடியும் உளவென்று ஆண்டின்ற கலிக்குக்கூறிய அவ்வடி வெண்டளைவிரவியும் ஆசிரியம்விரவியும் வருமெனப் பிறவற்றுக்குங் கூறினனென்பது.

ஐஞ்சீரடியென்பதனை அளவடி மூன்று பாவிற்கு உரித்தென்றல் அவ்வப்பாவிற்கு வேறுவேறு கொண்டாற்போல, ஐஞ்சீரடியும் பாத்தோறும் வேறுபடுத்துக்கொள்க.

உதாரணம்:

"தகைமிகு தொகைவகை யறிபுஞ் சான்றவ ரினமாக" (கலி-39.) †எனக் கலிப்பாவினுள் ஐஞ்சீரடிவந்தது.

"அரவணிந்த கொடிவெய்யோ ‡னகம்புக்கா னரசவையகன் றகற்றியே" எனக் கலியடி வெண்சீரான் வந்தது.

---

* 'விரவு கெனவே' என்பதும் பாடம்.

† 'என்னும்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

‡ 'அகம்புக்கா னரசவையகன் றகற்றியே' எனவும், 'அகம்புக்கா னரசவையகன் றகற்றியே' எனவும் பாடமுண்டு.

"கண்டகம் பற்றிக் கடக மணிதளங்க
வொண்செங் குருதியி *லோ டிட்டதே செண்டிக்
கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னு
ளழுதகண் ணீர்துடைத்த கை."

என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது.

"சிறுசோற் ருனு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் ருனு நனிபல கலத்தன் மன்னே"

(புறம்-235.)

என்பன ஐஞ்சீரான்வந்த ஆசிரியவடி. ஆசிரியத்துள் இவ்வாறு இரண்டடி ஒருங்கு நிற்குமென்பது அறிவித்தற்கு ஐஞ்சீரடிக்குச் சிறந்த கலிப்பாவோடு வைத்தான் அதனை முறைபிறழவென்பது. எனவே, வெண்பாவிற்கு ஐஞ்சீரடி ஒன்றல்லது வாராதாயிற்று. இக் கருத்தேபற்றி,

"ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாகலும்
வெண்பா யாய்பிற் குரிய வல்ல"

என்றார் †பிறருமென்க.

உம்மையான்‡ இருசீரடியும் கலியடியாம்.

"மன்று பார்த்து
னின்று தாயைக்
கன்று பார்க்கு
மின்றும் வாரா"

எனக் கொச்சகக்கலியுள் இருசீர் வந்தது.

* 'ஓடி' என்பதும் பாடம்.

† நக்கீரர் என யாப்பருங்கல விருத்தியிரால் தெரிகிறது.

‡ 'ஐஞ்சீரடியும்' என்ற உம்மைத்தான்.

மூன்றுபாவிற்கும் மூச்சீரடி உரித்தென்பது முன்னர்ச்சொல்லும் வரையாது சுறினமையின் கலிப்பாவிற்காயின் ஐஞ்சீரடி வருங்கால் தனவிரவியும் விரவாதும் வேண்டியவாறு வரப்பெறுமென்பது. (அசு)

376. அறுசீ ரடியே யாசிரியத் தளையொடு
நெறிபெற்று வருஉ நேரடி முன்னே.

இது, முறையானே அறுசீரடியுங் கலிப்பாவிற்கு உரித்தென்

இதன் பொருள்: *நாற்சீரடி முன்னும் பின்னும் அறுசீரடியும் வருதலுமுண்டு. அன்னது வருங்கால் தனக்குரிய வெண்டளையே யன்றி ஆசிரியத்தளையொடும் வழக்குப் பெற்று நடக்கும் கலிப்பாவினுள், என்றவாறு.

'நெறிபெற்றுவரும்' என்றதனாற் சிறுபான்மை நேரடி இடையிட்டன்றி ஒருசெய்யுள் முழுவதுமுந் தானே வருதலுங் கொள்க. 'ஆசிரியத்தளையொடும்' என்ற உம்மையாற் கலி தனக்குரிய வெண்டளையான் வருதலும் மயங்கிவருதலும் உரியவாம்.

"மூன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் பெயர *
வன்னைக் குரைப்ப னறிவாய் கடலேயென் றல்றிப் பெயருந்†
‡தன்மை மடவார் தணந்துருத்த வெண்முத்தம்
புன்னையரும் பேபென்னப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே
[யெம்மூர்."

---

* இதுவே எட்டுப்பிரதிப்பாடம். 'நாற்சீரடியும்' என்று முன் அச்சுப்பிரதியில் உள்ளது. அது பொருட்பேறின்மை காண்க.

† 'பேரும்' என்பதும் பாடம்.

‡ 'தன்மை மடவார் * தணந்துருத்த வெண்முத்தம் தனக்சால் கானல்' என்பதும் பாடம். இப்பாடம் கொள்ளில் இவ்வடி நேரடியாதலில்லை.

என்பது மூன்றும் அடி நேரடியாக முன்னும் பின்னும் அறுசீர் வந்தது. பிறவுமன்ன.

" கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்மூள்ளி வருதி ராயின்
அரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி யகன்று போக
நரையுருமே றுங்கைவே லஞ்சுக நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலீயோ "

என்பதன் முதலடியுள் 'வருதி ராயின்' என்பது ஆசிரியத்தளை. ஒழிந்தன வெண்டளை. முன்னென்றதனுன் இடமுன்னுங் காலமுன்னும் கொள்ளப்படும்.

"தொக்குத் துறைப்படியுந் தொண்டையஞ்செவ் வாய்மகளிர்
தோண்மேற் பெய்வான்
கைக்கொண்ட நீருட் கருங்கண் பிறழ்வ
கயலென் றெண்ணி
மெய்க்கென்னும் மெய்கல்லார் மீண்டுகரைக் கேசொரிந்து
மீள்வார் காணு
ரெக்கர் மணற்கிலேக்கு மேழை மகளிர்க்கே
யெறிநீர்க் கொற்கை."

எனச் செய்யுண்முழுவதும் அறுசீரடியே வந்தது.

"வனைபுரை கிறைபோத்து மணநாறு
*நறுநுதல் பொருட்டு வந்தோய்"

என ஆசிரியத்தளையானும் அறுசீரடி வந்தது.

மற்றுத் தளையென்றோதுவது கட்டளையடிக்கென்றீரால், ஈண்டுத் தளையென்ற தென்னையெனின், அவ்வரையறை ஒருவன்சொல்லுவது: அறுசீரடி வருங்கான் முதற்கண் நேரடி தூங்கிப் பின் இருசீரொடு தொடுத்தல் வேண்டும் என்னும். அஃது இச்சூத்திரத்திற்கேலாது;

* 'நறுநுதலார்' என்பதும் பாடம்.

நேரடிமுன் அறுசீர் வரினென்பது பதின்சீரடியாமாகலின். அல்லதூஉங் குறளடி தூங்கியுஞ் சிந்தடி தூங்கியும் அறுசீரடி வருதலின் அஃது அமையாதென்பது. என்னை?

"வாராது நீத்தகன்றார், வருமாறு பார்த்திருந்தார், வடிக்கண் போல"

என்றவழி இருசீரான் யாத்தமையின் அது தூக்கெனப்படாது;

"செங்காந்தள் கைகாட்டுங்காலஞ்,சேட்சென்றார் வாரார்கொல் பாவம்"

என முச்சீரான் யாத்தமையின் அதுவுந் தூக்கெனப்படாது; அறுசீரடியே தூக்காகக் கொண்டமையின், நேரடி முன் இருசீரடி வந்ததென்றதூஉம் பிழைக்குமென்பது. (௬௪)

377. எழுசீ ரடியே முடுகிய னடக்கும்.

இஃது, எழுசீரான்வரும் அடி கூறுகின்றது.

இதன் பொருள்: எழுசீரான் வருமளவும் அடியுள; அவை பயின்று நடப்பது முடுகியற்கண், என்றவாறு.

எனவே, முடுகாதவழி அத்துணை நடையாட்டம் இல *எழுசீரடி என்பதாம். பாவென்னும் உறுப்பு இடனாகும். ஏகாரம் பிரிநிலை.

"தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்"

எனவும்,

"கவிரிதழ் கதுவிய துவரித ழரிவையர்
கலிமயிற் கணமொடு விளையாட"

எனவும் எழுசீரடி முடுகிவந்தது. இவை பரிபாடலுள்ளுங் கலியுள்ளுங் காணப்படும். முடுகாது வரும் எழுசீரடி வந்தவழிக் கண்டு கொள்க. (௬௫)

* 'எழுசீரடிக்கு' என்பதும் பாடம்.

378. முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும்.

இஃது, எய்தாத தெய்வித்தது ; எழுசீரடியேயன்றி ஐஞ்சீரடியும் அறுசீரடியும் அராகந் தொடுக்குமென்றமையின்.

இதன் பொருள்: எழுசீரடிக்கு முன்னர் இடைகின்ற ஐஞ்சீரடியும் அறுசீரடியும் முடுகியல் நீக்கார், என்றவாறு. அவற்றுக்குச் செய்யுள்:

"காரெதிர் கலியொலி கடியிடி யுருமி னியங்கறங்க
நேரிதழ் னிரைனிரை நெறிவெறிக் கோதைய ரணிகிற்ப"
(கலி-105.)

என ஐஞ்சீரடி முடுகிவந்தது.

"மலர்மலி புகலெழ வலர்மலிர்
மணிபுரை *னிமிர்தோள் பிணை இ" (கலி-102.)

என்பது அறுசீரடி முடுகிற்று.

முதல் ஈரடிக்கும் என்ற உம்மை எச்சவும்மை. அவ்வும்மைபால் நாற்சீரடியும் இத்திணைப் பயிலாது முடுகுமென்பது.

"புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின வேறு" (கலி-103.)

என வரும்.

"இரிபெழு பதிர்பதிர் பிகழ்ந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
†வாடில் வெகுளி யெழிலேறு கண்டை யிஃதொன்று"
(கலி-104.)

என்பதனுண் முடுகியலடி இரண்டும் வந்தன.

---

* 'னிரைதோள் பிணை இ' என்பதும் பாடம்.

† 'வாடா' என்பதும் பாடம்.

மற்று இவற்றை *அராகமென்ஞமோவெனின், அதனைப் பரிபா டற்கு உறுப்பென்றமையாற் பிறவடியொடு தொடராகிற்று வரவேண் டும், †இஃது அன்ன தன்றென்பது. எழுசீரடியிற் சிறுவரவினவாக லான் ஐஞ்சீரடியினையும் அறுசீரடியினையும் வரையாரென்ருன். அவற் றினுஞ் சிறுவரவிற்ருகலின் இதனை உம்மையாற்கொண்டான். முற் றும்மையாகாதோவெனின் அதுவும் எசசப்படுதலின் அமையுமென் பது. அல்லதூஉம் முதலடியிரண்டே அன்மையின் முற்ருகாதென் பது. (சுசு)

379 ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினு மூவகை யடியு முன்னுத லிலவே.

இது, முடிகியல் இன்னபாவிற்கு உரித்தென்கின்றது ; எய்திய திகந்துபடாமற் காக்கினறதாஉமாம்: என்னை ? நாற்சீரடிமுதன் மூன் றும் அகவலோசைக்குஞ் செப்பலோசைக்கும் உரியவெனவே, அவை முடிகி ஆண்டுஞ் சேறலெய்தியதனைக் கலிப்பாவிற்கல்லது ஆகாதென் றமையின்.

இதன் பொருள்: ஆசிரியம் வெண்பா என்னும் இரண்டுபாவி னும் முடிகியலடி மூன்றும புகா, என்றவாறு.

உம்மை முற்றும்மை. மற்றை முசசீரடியோடு நான்கென்ஞனே வெனின், அஃது இவற்றுக்கு ஈண்டு ஒவ்வாது. முடிகிவருதல் பெரும்பான்மைத்தாகலின் மூவகையடியென அடையடுத்துக் கூறினு

---

* 'அராகமாவது பிறிதொன்றனோடு கூட்டி ஆற்றுவியாமல், தானேபோய் அற்றுநிற்பதாம். அது பரிபாடற் செய்யுளுறுப்பென் பர். இது (இச் சூத்திரத்துக் கூறிய முடிகியல்) பிறிதொன்றனோடு கூட்டி ஆற்றுவித்துக் கோடற் குரித்தாம். இவ் வேறுபாடு அறிக' என்பது நச்சினர்க்கினியர் உரை.

† 'இஃது' என்பது ஏட்டுப் பிரதிப்பாடம். 'அஃது' என்பது மூன் அச்சுப் பிரதியில் உள்ள பாடம்.

னென்பது. அல்லதூஉம் எழுசீரடி விலக்கானன்றே, அதனை ஆசிரிய மருங்கினும் வெண்பாமருங்கினும் மயங்குக என்றதுண்மையினென்பது.

இனி, அறுசீரடி ஆசிரியத்தளையோடும் வருமென்றது அகவலோசைக்கு உரித்தென்றமையானும், வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும் ஐஞ்சீரடியும் வருமென்றமையானும் அவற்றை அளவடியுடன் எடுத்தோதி விலக்கினான். மூவகை அடியுமென்றது ஐஞ்சீரடி முதன் மூன்றுமெனப்படுமென்பார், அளவடி முடுகுதல் ஆசிரியத்திற்கும் உரிமையின் அதுவரையறையின்றென்றலும் ஒன்று. அது,

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்" (பத்து-மலைபடு-1.)

என வரும். அதற்கு முடுகியற்றன்மை இன்றென்றது கருத்து. வஞ்சிப்பாவிற்குக் குறளஞ்சிந்தும் அல்லது இன்மையின் இவ்வாராய்ச்சி இன்றென்பது.

எனவே, ஆசிரியத்தளையோடு *முடுகிய வடியினைக் கலியடியென்றும் முடுகாத அறுசீரடி ஆசிரியத்தளையோடு நெறிபெற்று வருதற்கும் கலிப்பாவிற்குச் †சிறுபான்மையான் வருமென்பதூஉஞ் சொல்லப்பட்டது. அல்லாதார் ஐஞ்சீரடி முதலிய மூன்றுங் கலிக்குரிய, பிறபாவிற்கு உரியவல்ல என்றற்கு வந்தது இச்சூத்திரமென்ப. அற்றன்று ; அங்ஙனங் கூறில் தாம்வேண்டும் ஐஞ்சீரடி ஆசிரியத்துள்ளும் புகாதென்று மறுக்க. முன்னுதலிலவென்றது யாண்டுமாகா தென்ற வாறு. இவ்விலக்கணமெல்லாம் மேற்காட்டிய செய்யுளுள்ளே கண்டறிந்துகொள்க. (சுஎ)

380. ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்
ரேற்ற முச்சீர்த் தாகு மென்ப. (சுஅ)

381. இடையும் வரையார் தொடையுணர் வோரே.

---

* 'முடுகியலடியினை' என்பதும் பாடம்.

† 'நெறிமையான்' என்பது மூன் அச்சுப்பிரதிப்பாடம்.

இவை இரண்டுசூத்திரமும் *உரை யிடைபுநோக்கி உடனெழு தப்பட்டன. இவை, ஆசிரியத்துட் சிந்தடிவருமென்றமையின் எய்தாத தெய்துவித்தனவாம்.

இதன் பொருள்: ஆசிரியத்துள் எருத்தடியொன்றும் இடையடி யிரண்டுமாகி முச்சீரடி வரும், என்றவாறு.

முச்சீர்த்தென்று ஒருமைகூறினமையின் அஃது ஒன்றாகலும், தொடையுணர்வோ ரென்றமையின் இடைவருவன இரண்டாகலுங் கூறினனென்பது. 'இடையும் வரையார்' என்றமையான் ஈற்றயல் முச்சீர்த்தாதல் பெரும்பான்மை.

உதாரணம்:

"நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே" (புறம்-1.)

என அப்பாட்டினை முழுவதாஉங் கொள்ள ஈற்றயலடி முச்சீர்த்தாயிற்று.

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சார லுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே."

என்பதனுட் 'சார லுடன் கேண்மை' எனவுஞ் 'சாரச் சாரச் சார்ந்து' எனவும் முச்சீரடி இரண்டு வந்தன. ஏகாரம் பிரிநிலை. மற்று,

"நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே" (புறம்-235.)

என முச்சீரடி இடையும் ஒன்று வந்ததாலெனின், தோற்ற மென்றதனுன் எருத்தடி முச்சீராய காலத்துக் குட்டம்பட்டும் இனிது

* 'முறை யியைபு' என்பது முன் அச்சுப் பிரதிப் பாடம்.

விளங்கும். இடையிடை ஒன்று வருதலும் உண்டாயினும் அத்தனை இனிதன்று அது வென்பதுகொள்க. "பெரியகட் பெறினே" (புறம்-235) என இருசீரடி வந்ததாலெனின், அதனைச் சொற்சீரடி யென்று கூறுக.* "உப்பிலாஅ அவிப்புழுக்கல்-கைக்கொண்டு பிறக்கு நோக்காது" (புறம்-363) எனவுங் காட்டுப. இவை வஞ்சியடியெனப் படுமென்பது. வெண்சீரான் வஞ்சியடிவருமோவெனின், வாரா; வஞ்சிச்சீர் விரவினல்லதென்பது. "உப்பிலாஅ அவிப்புழுக்கல்" என்பதோவெனின், அது மற்றை இரு சீரடியொடு கூட்டத்துக் காட்டலாலும் வஞ்சியடிபோன்றது. (சுகூ)

382. முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்.

இது, கலிப்பாவிற்கு அளவடியும் நெடிலடியும் அதனினிறந்த அடியும் உரிமைகூறி இனிச் சிந்தடியும் உரித்தென்கின்றது.

இதன் பொருள்: கலிப்பாவினுண் முசசீரடி நிரம்பவும் நிற்கும், என்றவாறு.

நிறையநிற்றலென்பது அச்செய்யுண்முழுவதும் அவ்வடியே வருதலாம். உம்மையான் ஒரு செய்யுணிறைய வாராது ஒன்றும் இரண்டும் பலவுமாகி அம்மூசசீரடி வருதல் பெருவரவிற்றென்பது. தாங் குறைந்த அடியாதலிற் கலிப்பாவிற்கு உறுப்பாகிய சின்னத்துக் குறைய நிற்கும் இயல்பினவாயினும், நிறைய நிற்றலுடைய கொச்சகத்து னென்றவாறு. "செப்தானக் கன்வன் மகன்" (கலி-51) எனவே வெண்கலியுள் இறுதிக்கணல்லது வாராது. "நின்கண்ணுற் காண்

---

* 'இதனைக் குறளடியாக்கிக் குறளடியும் வருமென்பர் பின்பு நூல்செய்த ஆசிரியர்' என்றார் நச்சினார்க்கினியர். யாப்பருங்கல விருத்திகாரர் இருசீரடியும் மூச்சீரடியும் இடையிடை விரவிவரும் ஆசிரியமுமுள, என்றும் அவை இணைக்குறளாசிரியப்பா எனப்படு மென்றும் கூறி, காக்கைபாடினியத்தினின்றும் மேற்கோள் காட்டி னார்.

டென்மன் யான்'' (சலி-39) என்பது இடைவந்தது. எண் உறுப்பின்கண் இரண்டும் நான்கும் வருமாறு கண்டுகொள்க.

''நீர்வரக் கண்கலுழ்ந் தாங்குக்
கார்வரக் கண்டனங் காதலர்
தேர்வரக் கண்டில மன்னோ
பீர்வரக் கண்டனந் தோளே.''

என முச்சீரடி ஒருசெய்யுள் நிறையவும் வந்தவாறு.* (எ0)

383. வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.

இது, முறையானே அடியுரிமை கூறியவாற்றான் வஞ்சிப்பாவிற்குக் கூறியதிலன். எற்றுக்கு? அது, 'வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்' (தொல்-செய-45) எனவும் 'முசசீ ரானும் வருமிட னுடைத்து' (தொல்-செய்-47) எனவும் மேற் கூறப்பட்டமையின். அதுநோக்கி அடியுரிமைகூறப்படாத வஞ்சிப்பாவிற்கு வஞ்சியினது ஈற்றடியும் அவ்விருசீரடியும் முசசீரடியுமாவன சென்றதனை விலக்கி இன்ன அடியான் முடியுமென்கின்றது.

இதன் பொருள்: வஞ்சிப்பாவினது இறுதியடி ஆசிரியவடி இறுதிபோன்று இறுக, என்றவாறு.

எனவே, ஆசிரியத்திற்கு ஒதிய சீரானுந தளையானும் இறுமென்றவாறு.

''மாக்கட னிவந்தெழுந்த
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
வனையை யாகன்மாறே

* 'வெள்ளோசையினால் வருவதனைக் கலிவெண்பா வென்றும், பிறவாற்றால் வருவனவற்றை வெண்கலிப்பாவென்றும் வேறுபடுத்துச் சொல்வாரு முளர்' என்பது யாப்பருங்கலவிருத்தி.

தாயி றுவ்வாக் குழவி போல
வோவாது கூஉகின் னுடற்றியோர் நாடே." (புறம்-4.)

என மண்டிலவாசிரியத்தா னிற்றது.

செந்தூக்கியற்றேயென்ற மாட்டேற்றானே, 'ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்-றோற்ற முச்சீர்த் தாகுமென்ப' (தொல்-செய்-68) எனவும், 'இடையும் வரையார் தொடையுணர் வோரே' (தொல்-செய்-69) எனவும் எய்தியவிதி ஈண்டும் எய்துவிக்க. "அனையை யாகன் மாறே" (புறம்-4) என முச்சீரடி இடைவந்தது.

"*இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவலபாண்
மகனும்மே யெனவாங்
கொள்ளழற் †புணர்ந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே." (புறம்-11.)

இஃது ஈற்றயலடி முச்சீர்த்தாகி வந்த செந்தூக்கியற்றாகி இற்ற வஞ்சிப்பா. பிறவும் அன்ன. ஈண்டுத் தனிச்சொல் வேண்டுமென்று பிற்காலத்து நூல்செய்தாரும் உளர். அது சான்றோர்செய்யுள் எல்லா வற்றோடும் பொருந்தாமையானும், பிற்காலத்திற்செய்த நூல்பற்றி முற்காலத்துச் செய்யுட்கெல்லாம் இலக்கணஞ்சேர்த்துதல் பயனின் றுதலானும் அஃதமையாதென்பது. வஞ்சிப்பாவின் ஈற்றடி வரைந் தோதவே இடையாயின எல்லா அடியும் வரப்பெறுமென்பதாம்.

"நேரிழை மகளிர் நுணங்குநுணுக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கணங்குழை"

(பத்து-பட்டி-23-24.)

என ஆசிரியவடியும் வெண்பாவடியும் இடைவந்தன.‡ (எக)

* 'இழைபெற்றபாடினீக்கிக் குரல்புணர்ச்சீர்' என்பது முன் னுக்கப்பிரதிப்பாடம்.

† 'புரந்த' என்பதும் பாடம்.

‡ 'ஆசிரியவடியும் வெண்பாவடியும் இடைவந்தன' என்பதனால்

384. வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்.

இது, வெண்பாவிற்கு ஈறு உணர்த்துகின்றது. *ஆசிரியத்துக் கோவெனின், தனக்கோதிய அளவடியானே இறுதலின் வேறுபாடு கூறவேண்டா. எருத்தடியும் இடையும் முச்சீரான்வருமென வேறு பட்டவழிக் கூறி, அல்லாதன அளவடியாதல் கொள்ளவைத்தானென் பது.

இதன் பொருள் : வெண்பாவின் இறுதியடி ஒன்றும் முச்சீரான் அன்றி வாராது, என்றவாறு. அவை முன்னர்க் காட்டுதும். அஃதேல்,

"அட்டாலும் பால்சுவையிற் குன்ற தளவளாய்
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்"† (மூதுரை.)

என முச்சீரடி இடையும் வந்ததால் வெண்பாவினுளெனின், முச்சீர்த் தென்ஞது 'ஆகும்' என்று ஆக்கங்கூறக் கொடுத்தமையான் அத்தனை ஆக்கமின்றி இடையுஞ் சிறுபான்மை வருமெனக்கொள்க. அல்லா தார் அதனை வெண்பாவன்றென்ப. (எஉ)

பேராசிரியர் 'பட்டினப்பாலை'யினை வஞ்சிப்பாட் டென்றே கொண்டாரென்பது தெளியப்பட்டது. யாப்பருங்கலவிருத்தியுரை காரரும் 'பட்டினப் பாலையென்னும் வஞ்சி நெடும்பாட்டினுள்' என்றார். நச்சினார்க்கினியர் பேராசிரியர் மேற்காட்டிய பட்டினப் பாலையடிகளையே உதாரணங்காட்டி 'என ஆசிரியவடியும் வெள்ளடியும் இடைவந்தன' எனக் கூறுமாற்றான், அவர்க்கும் அதுவே கருத்தாதல் காண்க.

* 'ஆசிரியத்துக்கோ' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

† 'அட்டாலும் பால்சுவையிற் குன்ற தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்'

என்னும் இவ்வெண்பாவின் இடையே முச்சீரடி கண்டு மயங்கிய பிற்காலத்தார், 'கெட்டாலும்' என்பதைத் தனிச்சீராக்கி, 'தான்மீக்க வெண்மை தரும்' என இருசொற்கள் மிகையாகப் பெய்து, வெண் பாவைச் சீர்ப்படுத்திவிட்டனர்!

385. அசைசீர்த் தாகு மவ்வயி னான.

இது, மேலதற்கெய்தியதோர்விதி.

இதன் பொருள் : வெண்பாவின் இறுதிவரும் முச்சீரடிஈற்றுச் சீர் வரப்பெறாது அசைச்சீரல்லாது, என்றவாறு.

மேல் 'அசைநிலே வரையார் சீர்நிலே பெறல்' (தொல்-செய்-27) என்றான், அவற்றுள் உரியசைச்சீர் முதலும் இடையும் இறுதியும் வருமென்பான் 'இயற்சீர்ப் பாற்படுத்து' (தொல்-செய்-28) இயற்றுக என்றான். அவ்வாறே இயலசைச்சீரும் முச்சீரடி இறுதிவருமென்பது ஈண்டுக் கூறியவாறு. (எங)

386. நேரீற் றியற்சீர் நிரையு நிரைபுஞ் சீரேற் றிறாஉ மியற்கைய வென்ப.

இது, மேற் கூறப்பட்ட இயற்சீர் நான்கும் வருங்கால் இன்னழி னின்று இன்னவாறு கொள்ளப்படுமென்ப தணர்த்துதல் துதலிற்று.

இதன் பொருள் : நேரிறுதி வந்த நிரையும் நிரைபுமே இறுதிச் சீராய் நிற்பன, என்றவாறு.

எனவே, தனிவந்த நிரையும் நிரைபும் நிரைமுதற்சீர்போலத் தனிகொள்ளப்படு மென்பதாம். 'ஏற்றிறாஉம்' என்ற இலேசினான் இடைவந்த நிரைபசையும் அவ்வாறு கொள்க. அஃது 'இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளின்' (தொல்-செய்-28) என்பதனான் அடங்காதாவெனின் அடங்காது. என்னே ? அசைச்சீர்தான் அடங் குமாற்றுக்கு ஆண்டுக் கூறினான், அது பிறிதுசீர் அசைச்சீரொடு தட்கு மாற்றுக்குங் கூறல்வேண்டுமென்பது. அல்லதூஉம் ஆண்டு அள வடிச்குக் கூறினான் இது சிந்தடிக்கென்பது. வரலாறு :

"*வாரிய பெண்ணே வருகுரும்பை வாய்ந்தனபோ
லேரிய வாயினு †மென்செய்ய—கூரிடவேற்
கோட்டியானேத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
‡கோட்டுமணங் கொள்ளா மூலை." (முத்தொள்ளாயிரம்,

எனவும்,

---

* 'வாருயர் பெண்ணே' என்பதும் பாடம்.

† 'என்செய்யும்' என்பதும் பாடம்.

‡ 'கோட்டுமண்' என்பதும் பாடம்.

" அயிற்கதவம் பாய்ந்தழக்கி *யாழித்தேர் குத்தி
யெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பணிக்கடலுட்
†பாய்செய்த நாவாய்போற் ரோன்றிற்றே யெங்கோமான்
காய்சினவேற் ‡கோதை களிறு." (முத்தொள்ளாயிரம்.)

எனவும் இவற்றினுட் 'கொள்ளா' எனவும் 'கோதை' எனவும் நின்ற நேரீற்றியற்சீர் முன்னர் முலையெனவும் களிறெனவும் நிரையும் நிரை புஞ் சீரேற்றவாறும் வெண்பாட்டிற்றடி முச்சீர்த்தாயவாறும் ஆண்டு அசைச்சீராய் வந்தவாறுங் கண்டுகொள்க.

என்ரூர்க்கு, முச்சீரடியின் முதற்சீர்க்குத் தனிகூருரோ வெனின், ஆண்டுத் தனிவகையின்றியும் வருதலின், அதனை வரைந்து கூருரென்பது. என்னை? 'கோட்டுமணங் கொள்ளா முலை' எனவும் 'காய்சினவேற் கோதை களிறு' எனவும் தனி வகையான் வந்தன.

" உரு அர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
§செரு அய் வாழியென் னெஞ்சு." (குறள்-120-10.)

எனவும்,

" கலா அற் கிளிகடியுங் கானக நாட
¶விலா அர்க் கில்லை தமர்" (நாலடி-29-3.)

எனவும் தனிவகையின்றி வந்தன.‖ (எசு)

* 'ஆற்றல்சான் மன்னர்' என்பதும் பாடம்.

† 'பாய்த்தாயிந்த நாவாய்போற் ரோன்றிற்றே' என்பதும் பாடம்.

‡ 'கள்ளி களிறு' என்பதும் பாடம்.

§ இஃது எட்டுப் பிரதிப் பாடம். 'செரு அஅய்' என்பது முன் அச்சுப்பிரதியின் பாடம்.

¶ இதுவும் எட்டுப் பிரதிப் பாடம். 'இலா அஅர்க்கில்லே' என்பது முன் அச்சுப்பிரதியின் பாடம்.

‖ 'செரு அஅய் வாழி' 'இலா அஅர்க் கில்லே' என ஈரளபு கொடுத்து வெண்சீராக்கின், அவை தனிவகையான் வந்தன வாதலே

387. நிரையவ ணிற்பி னேரு நேர்பும்
வரையின் றென்ப வாய்மொழிப் புலவர்.

இஃது, ஒழிந்த அசைச்சீர் நிரையீற்றுப் பின்னன்றி வாராவென்

இதன் பொருள் : நேரீற்றியற்சீர் நின்றவழி நிரையீற்றியற்சீர் நிற்பினென்பான் 'நிரையவண் நிற்பின்' என்றான், ஆண்டு நிரையும் நிரைபும் வரில் தளைவழுவாமாதலான் நேரும் நேர்புமே வந்து சீரேற்று முடிதல் வரைவின்று, என்றவாறு.

"கொழுநனை மைந்தன் கொணர்ந்ததற் காக
முழுமுலை பாய்ந்தன பால்"

எனவும்,

"வண்டொன்று வந்தது வாரற் பணிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு" (முத்தொள்ளாயிரம்.)

எனவும் இவற்றுட் பாய்ந்தனவெனவும் பட்டினமெனவும் வந்த நிரை யீற்றியற்சீர்ப்பின்னர் நேரும் நேர்பும் வந்தன. முன்னர் 'நேரீற் றியற்சீர் நிரையு நிரைபும்' (தொல்-செய்-74) எனக் கூறி ஈண்டு நிரையவண் நிற்பினெனச் சுட்டிக்கூறியவதனானே அதுவும் நிரையீற் யன்றித் தளைவகையின்றி வந்தன வாகா. பேராசிரியர் ஈர ளபுகொண்டிலரென்பதும், 'செறுஅப் வாழி' 'இலாஅர்க்கில்லே' என ஆசிரியத்தளை தட்டு, வெண்பாவிற்குரிய தளைவகையின்றி வந் தனவென்றே கொண்டன ரென்பதும் உய்த்துணர்க. இவ்வியல் 62-வது சூத்திர வுரையினும் 'தூஉத் தீம்புகை' என வெண்பாவில் ஆசிரியத்தளை வந்ததாகக் காட்டினர். மற்று, நச்சினார்க்கினியரோ, 'தூஉத் தீம்புகை' 'இலாஅர்க் கில்லே' என ஈரளபு கொடுத்து வெண்டளை பிழைபாமற் காட்டினர். (தொலகாப்பியம், எழுத்ததி காரம் நூன்மரபு 6-வது சூத்திரம், நச்சினார்க்கினியர் உரையிற் காண்க.)

றியற்சீரென்பதூஉம் அஃதிரண்டாஞ்சீரென்பதூஉங் கொள்க. அல்லாதார் அதனை வெண்சீர்க்கும் பொதுவெனக் கூறி 'வெண்சீரீற்றசை நிரையசை யியற்றே' (தொல்-செய்-29) என்றதனான் வெண்சீரிறுதி நிரையாகஇயற்றி அதன் அடிப்பின் நேர்பசை கொடுப்ப; "எய்போற் கிடந்தானென் னேறு" என்புழிக் 'கிடந்தானென்' என நின்ற புலிசெல்வாயினைக் கணவிரியாக இயற்றி, 'நிரையவணிற்பின் நேரும் நேர்பும்' என்றதனான் ஏறு என்னும் நேர்பசை கொடுப்பர். அஃது ஈண்டு ஆராய்ச்சியின்றென்பது. என்னை? இது கட்டளையடியன்மையின். (எஇ)

388. எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே. (எசு)

389. வெண்பா வியலினும் பண்புற முடியும். (எஎ)

இவை இரண்டு சூத்திரமும் முறையானே கலிப்பாவிற்கு, அன்னதோர் அடி அதற்கு வகுத்தில்லாமையின், வகுக்கின்றது.

*என்றார்க்கு, முதலது நேரடியும் ஈற்றது சிந்தடியுமாகக் கொள்ளல் அவ்வெழு நிலையுமெனின் அங்ஙனங் கொள்ளாமைக்கன்றே 'ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்—றோற்ற முச்சீர்த் தாகு மென்ப' (தொல்-செய்-68) எனவும், 'இடையும் வரையார் தொடையுணர்வோரே' (தொல்-செய்-69) எனவுங் கூறிற்றென்பது. எழுசீர் இறுதி ஆசிரியமெனவே, ஆசிரியவடி பலவும்வந்து எருத்தடி முச்சீராக வருமென்பதுகொள்க. "அரிதாபவறன்" என்னும் (11) கலிப்பாவினுள் "இனைநல முடைய கானஞ் சென்றோர்" என்பது ஈற்றயன் முச்சீரிறுதி ஆசிரியத்தாற் கலிப்பாவாயிற்று.

"மணிநிற மலர்ப்பொய்கை" என்னும் (70) கலிப்பாவினுண்,

* ஈண்டு இருக்கவேண்டிய சூத்திரப்பொருள் முன் அச்சுப்பிரதியிலும் ஏடுகளிலும் காணப்படவில்லை. நச்சினார்க்கினியர் இவ்விரு சூத்திரங்களுக்கும் பொருளுரைக்குமாறு: 'கலிப்பா எழுசீரிறுதியாகி, ஆசிரியத்தாலும் வெண்பாவின் இறுதியாலும் முடியும், என்றவாறு.'

"மெல்லிடான் செவிமுதல் மேல்வந்தான் காலேபோ
லெல்லாந் துயிலோ வெடுப்புக மின்பெண்டி
ரில்லி னெழீஇய யாழ்தழீஇக் கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்"

என வெண்பாவியலிலுஞ் சண்புற வந்தவாறு.

பண்புறவென்பது விசேடம்; மிசமுடியு மென்றவாறு. எனவே ஈண்டுக்கூறுத இருசீரடி யானும் நாற்சீரான் வந்த கலிப்பாவடியானும் ஐஞ்சீரடியானும் முடிவன கொச்சகக் கலியுள்; அவை இத்தூணை விசேடமிலவென்றவாறு. ஈண்டுவிதந்து ஓதியவெல்லாம் பெரும்பான்மையும் ஒத்தாழிசைக் கலிச்செனவுணர்க. இடலென்றதனாற் கட்டளைவெண்பாவே வரல்வேண்டுவதில்லை எனக்கொள்க. பண்புற என்றதனான் மூன்றடியின் இழியிற் பண்புபட வாரா வெள்ளைச்சுரிதக மெனவுங் கொள்க. (எ)

390. எழுத்து முதலா வீண்டிய வடியிற் குறித்த பொருளை முடிய *நாட்டல் யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

இஃது 'யாத்த சீரே யடியாப் பெறுஅ' (தொல்-செய்-1) என நிறுத்த முறையானே அடியுணர்த்தி யாப்புணர்த்துகின்றது.

இதன் பொருள்: எழுத்துமுதலா ஈண்டிய அடியிற் குறித்த பொருள்களை முடிய யாத்தல் யாப்பாவதென்று சொல்லுவர் புலவர், என்றவாறு.

அடிக்கண்ணே முடியுமெனவே இருசீரும் மூச்சீரும் நிடப்ப முடியாதாட்டினும் நாற்சீர்கொண்டு முடியுதாட்டினும் அமையுமென்பது. மாத்திரை முதலாக வென்னுது எழுத்தென்ற தென்னையெனின், எழுத்தும் அசையுஞ் சீருங்கொண்டியன்ற ஒரோவடிக்கண்ணே இன்பஞ்செய்யும்; அது பொருட்காய் இன்றியமையாமையின் எழுத்து

* 'நாட்டில்' என்பதும் பாடம்.

முதலாகவென்ற னென்பது. ஈண்டியவடி யென்பது அவை மூன்றும் ஒன்றுகத் தொடர்ந்து ஈண்டிய அடியென்றவாறு. எனவே, இவற் றைப் பொருளன்றி வேறுவேறு செய்யாது, பொருட்டொடர்படச் செய்யவேண்டுமென்பதூஉம் (*கூறி, ஒரடிக்கட் பொருளாற் செய் யாது, ஒழிந்த அடிக்கண் ஒரு சொல்லினைப் பகுத்து வாங்கிக்கொண்டு போய் வைத்தலாமென்பதூஉம்) கூறியவாறாயிற்று. குறித்தபொரு ளென்றது அவ்வடியில் தான் வைக்கக் கருதிய பொருளைப் பிறிதோர் அடியுங்கொண்டுகூட்டாது அமைந்து †மாறச்செய்தல். 'யாப்பறிபுலவர்' என்பது அவ்வாறு செய்தல்வல்ல புலவர் அதுகூறினரென்றவாறு. அது, இதுபோலச் சீரும் பொருண்முடிய நிற்றலின் யாத்தசிலென்ற னென்பது.

"மாயோன் மார்பி லாரம் போல
மணிவரை யிழிதரு மணிகிள ரருவி
நன்பொன் வரன்று நாட
னன்புபெரி துடைய னின்சொல் லினனே."

என இது குறித்தபொருளை நாற்சீரடிதோறும் முடிய நாட்டின வாறு.

"மண்டில மழுங்க மறுகிறங் கிளர
வண்டின மலர்பரந் தாது மீமிசைக்
கண்டற் கானற் குருகின மொலிப்ப" (அகம்-259.)

என்றவழி, இருசீரானும் மூச்சீரானும் நாற்சீரானுங் குறித்த பொருளை முடிய நாட்டினவாறு கண்டுகொள்க.

மூச்சீரான் முடியநாட்டுவன ஒருசார் வெண்பாட்டினுட் பயின்று வருமெனவுணர்க.

---

* இருபிறைக்குட்பட்ட இச்சொற்றொடர் ஏட்டுப்பிரதிகளிற் காணப்படவில்லை.

† 'வரச்செய்தல்' என்பதும் பாடம்.

"முயற்கோடு சீவி முதலிசும்பு போழ்ந்தான்" என்றவழி எழுத்தும் அசையுஞ் சீரும் பொருளிலவாகி வந்தமையின் அஃதமையாது, யாப்பெனப்படாது ; சொல்லிலக்கணத்தாற் சொற்றொறும் பொருளுடையவாயினுமென்பது.

"மணிவெண் ணகைவன முலைமதி முகமலர்
விழியிணைச் செவ்வாய் மென்னடைப் டேதை."

என்றவழியும் முதலடிச்சுட் பொருட்டொடர்பினை அறுத்துக் குறைத்துச் செய்ததன்மையின் அதுவும் யாப்பறிபுலவரான் யாப்பெனப்படாதென்றவாறு. (எஅ)

391. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
யங்கத முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி
னுற்பெப ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனர் புலவர்.

இச்சூத்திரம் அரிமாநோக்கு, மேற்கூறிய யாப்பிற்கும் வருகின்ற மாபிற்கும் அப்பகுதியுரிமை கூறினமையின்.

இதன் பொருள் : பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும், பிசியும், அங்கதமும், முதுசொல்லுமென்று சொல்லப்பட்ட அவ்வேழ்நிலத்தும் 'வடவேங்கடந் தென்குமரியாயிடை' (தொல்-பாயிரம்) நாட்டார் கடாத்துகின்ற செய்யுளின் பெயரே தனக்குப் பெயராகவுமுடைத்து மேற்கூறிய யாப்பு, என்றவாறு,

எனவே, மேற்குறித்த பொருளை அடிக்கண் முடிய நாட்டல் யாப்பென்றுன், அதுவேயன்றி இப்பகுதிப்படச்செய்தலும் யாப்புறுப்பேயென்றுமாம். இவ்வேழுவகையானுஞ் செய்தன் மரபென எதிரது கோக்கிற்று. பாட்டு உரை நூல் என்பவற்றிலக்கணம் முன்னர்ச் சொல்லுதும். யாப்பின் வழியதென்பது இவ்வேழு வகைப்பட்ட யாப்பின் பெயரது மரபாகும் யாப்பாகிய உறுப்பென்றவாறு. இதனை

தல்யாப்புப்போற் கொள்க. இப்பகுதிதாந் தமிழ்நாட்டு மரபாகலின் மரபென்னும் உறுப்பு மரபென எதிரதுநோக்கிற்று. வண்புகழ் மூவனென்பது வளனுடைமையாற் புகழ்பெற்றானென்றவாறு. அஃதா வது கொடுத்துப் பெறும் புகழெனக்கொள்க. மூவரெனப்படுவார் தமிழ்நாட்டு மூவேந்தருமாயினர். தண்பொழில் வளைப்பென்பது நிலத்துக்கு நிழல்செய்யும் நாவலம்பொழிலுள் வளைந்துகொள்ளப்படும் வளைப்பினையுடையவென்றவாறு. தண்பொழில் உடைமையின் நாவ லந்தண்பொழிலெனப்பட்டது. நாற்பெயரொல்லை யகமென்பது தமிழ் நாடென்றவாறு.* வடவேங்கடந் தென்குமரியன்றிக் கிழக்கும் மேற் குங் கடலெல்லை கூறினானெனின், அறியாது கடாயினாய். வளை யறையிலவென்று கூறுதனவெல்லாங் கொள்ளப்படுவன வல்ல. வகைகூறுமையுந் தமிழ்கொள்ளப்படுங் கண்டாய். அவர் வழங்கும் யாப்பின் வழியதென்பது அந்நாட்டார் வழங்கும் யாப்புப் பகுதி அவை என்றவாறு. தமிழ் நாட்டார் வழங்கும் மரபுப் பகுதி அவையெனவே யாப்பும் மரபுங் கருதியதாயிற்று இச்சூத்திரமென்பது இதனாற் பெற்றாம். 'வடவேங்கடந் தென்குமரி யாயிடை' யென்புழி நான்கெல்லையுங் கூறினானென்பது. (எக)

392. மரபேதானும்,
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன.

இது, சிறுத்தமுறையானே மரபினை விளங்கக் கூறுகின்றது.

இதன் பொருள்: மரபேதானும்—அங்ஙனங் கூறப்பட்ட மரபு தானும்; எகாரம் பிரிநிலை; உம்மை இறந்தது தழீஇயிற்று; மேல் எழுவகையான் யாக்கப்படுதன் மரபென்றமையின், மரபேதானு மென்றானென்பது: நாற்சொல்—பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்

---

* 'நாற்பெயரெல்லையகத்தவர் வழங்கும் என்பது மலைமண்டலம் சோழமண்டலம், பாண்டியமண்டலம், தொண்டைமண்டலம் என்னும் நான்கு பெயருடைய தமிழ்நாட்டார் நடாத்தும்' என்பது நச்சினார்க் கினியர் உரை.

சொல் உரிச்சொல் ; இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் லெனினும் அமையும் :* இயலான்—நாற்சொல்லினையும் உலகத்தார் வழங்குகின்ற வழக்குவடிவினன் ; யாப்புவழிப் பட்டன—மேற்பகுத்த யாப்புவழிப் பொருத்தமுடைத்தாகிக் கிடப்பது, என்றவாறு.

அஃதாவது வழக்கெனவுஞ் செய்யுளெனவும் இடைதெரியாமல் ஒருவாய்பாட்டான் வழக்குஞ் செய்யுளுமாகி ஒரு சொற்றொடரினைச் சொல்லியதுபோலச் செய்யுள் செய்தலென்றவாறு. சாத்தனுண்டான் கொற்றனுண்டான் எனவும், சாத்தனுறங்கினன் கொற்றனுறங்கினன் எனவும், சாத்தனை யறியாதார் ஒருவரையு மறியாதார் எனவும், சாத்தனிற் கொற்றன்போமே எனவும் நின்ற வழக்கிலே முறையானே ஆசிரியமும் வெண்பாவுங் கலியும் வஞ்சியுமாகப் பரப்பப்பட்ட யாப்பு வழிப்படுத்துக் கண்டுகொள்க. "ஓதியு மோதா ருணர்விலார்" (நாலடி-27-10) என்னுஞ் செய்யுள் வழக்கிற்றாகவுஞ் சொல்லப்படும். வழக்குவடிவினனெனவே சொன்மரபும் †பொருண்மரபும் அடங்கக் கூறினன். என்னை ? பொருளின்றி நாற்சொல்லையும் வழங்காராகலின்.

எனவே, சொல்லும்பொருளும் அவ்வக்காலத்தார் வழங்குமாற்றானே செய்யுள்செய்க என்பதாயிற்று. இதனது பயன், ஒருகாலத்து வழங்கப்பட்ட சொல் ஒருகாலத்து வாராதாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய. அதொளி இதொளி உதொளி எனவுங் குயின் எனவும் நின்ற இவை ஒருகாலத்துளவாகி இக்காலத்திலவாயின. இவை முற்காலத்துளவென்பதேகொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல்செய்த காலத்துளவாயினுங் கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந்தொகை

---

* 'நாற்சொல்லாவன : இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்; பெயர், வினை, இடை, உரி என்பன இயற்சொல்லின் பாகுபாடாகலின், இயற்சொல் அந்நான்கு பாகுபாட்டானும் செய்யுட் குரித்தாயிற்று.' என்பது நச்சினார்க்கினியர் உரை.

† 'பொருளுணர்மரபின்' என்பதும் பாடம்.

யினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர்; அவற்றுக்கு இது மரபிலக்கணமாகலினென்பது.

சிப், பாட்டினுந்தோகையினும் உள்ள சொல்லே மீட்டொரு காலத்துக்கு உரித்தன்றிப்போயின் முற்காலத்துளவென்பதே கொண்டு பிற்காலத்து நாட்டிச் செய்யுள் செய்யப்பெறு என்பது.

பொருளும் இவ்வாறே காலத்தானும் இடத்தானும் வேறுபடுதலுடைய. ஒருகாலத்து அணியுங் கோலமும் ஒருகாலத்து வழங்காதனவுள. ஓரிடத்து நிகழும் பொருண் மற்றோரிடத்து நிகழாதனவுமுள. அவ்வக்காலமும் இடனும்பற்றி ஏற்றவாற்றுற் செய்யுள் செய்யவேண்டுமென்பது. ஒருகாலத்துக் குழை பெய்தா ரென்றும், ஒருகாலத்துக் குழல்படமுடித்தாரென்றும், ஆண்மக்களே ஒழிந்தகாலத்தும் அது கூறார். பதினெண்பாடைத் தேசிகமாக்கள் அணியினையுங் கோலத்தினையும் விரவிக்கூறுது அவ்வந்நாட்டார் பூணு மாற்றானும் பூனையுமாற்றானும் ஏற்பச்சொல்லுதல் மரபு.*

இனி, நான்கு நிலத்தினும் ஓரிடத்துப் பொருளை ஓரிடத்த வாகச் சொல்லுதலும் உலகொடுமலைதலுஞ் சமயங்களொடு மலை தலுங் கலியொடு மலைதலும் பிறவும் இன்னோரன்னவும் பொருண்மர பின்பாற்பட்டடங்கும். இவை நாடகவழக்கின் ஆமென்பது முன் னர் அகத்திணையியலுட் கூறினும்.

* "அட்டா னானை குட்டுவன்" (பதிற்றுப்பத்து-47) "உச்சிக் கூப்பிய கையினர்" (திருமுருகாற்றுப்படை-185) என்றாற் போல் வன கடைச்சங்கத்திற் காயின சொற்கள்; இக்காலத்திற் காகாவா யின. "வரிமணன்னெமலக் ('னெமிரப் பகல்பக' என்பதும் பாடம்) கற்பக நடக்கும்-பெருமிதப் பகட்டிற்குத் துறைபு முண்டோ" (புறம்-90), "கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன" (புறம்-102) என் றாற் போலும் உவமப்பொருள்களும் இக்காலத்திற் காகாவாயின. * * * * * "குண்டல மொருபுடை குலாவி வில்லிட—விண்ட லர்ந் தொருபுடை தோடு மின்செய" (சிந்தா-குண-159) "வண்காது

"புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்குல்" (அகம்-7)*

என்பது பருவத்துக்கேற்ற அணிகூறியது.

"கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் பெஃகின்
வில்லோர் துணி வீங்கப் பெய்த
வப்புநனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்படர் ன்ன செங்குழை யகந்தோ
றிழுதி னன்ன நீம்புழற் றுயவா
யுழுதுகாண் டலைய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோர் மீமிசை வீண்தித்திற் பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்க்
கொடுநண் ணேக்கின் மகளி ரோச்சிய
வீறைந்த பிண்டி யொண்டளிர்-நுண்பூ ணைகந் திலைப்ப" (திருமுரு. காற்றுப்படை - 30, 31.)

"அம்மல ரடியுங் கையு மணிகிளர் பவளவாயுஞ்
செம்மலர் நுதலு நாவுந் திருந்தொளி யுகிரோ டங்கேழ்
விம்மிதப் பட்டு வீழ வலத்தக மெழுதியிட்டாள்
அம்மலர்க் கண்ட முள்ளிட் டரிவையைத் தெரிவை தானே"
(சிந்தா-இலக்-69.)

என்றாற்போலும் அணியும் கோலமும் இக்காலத்திற்காகாவாயின.

* * * இனித் தமிழ்நூற்கண் வழுவமைத்தவாறன்றி ஆரிய நூல் பிறபாடையாக்கலும் வேண்டுமாற்றால் தமிழ்ச்செய்யுள் செய்தல் மரபன்றென்றுணர்க' என்பது நச்சினார்க்கினியர் உரை.

* இச்செய்யுள் முழுவதையும் (ந-உரை) 467-ஆம் பக்கத்திற் காண்க.

தொடிமா னுலக்கைத் தாண்டுரற் பாணி
நெடுமால் வளைய குடிஞையொ டிரட்டுங்
குன்றுபி னெழியப் போகி யுரந்துரந்து
ஞாயிறு படினு மூர்சேய்த் தெனாது
துணைபரி துரச்குங் தஞ்சாச் செலவி
னெம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணேங்குயர் நல்லி லொருசிறை னிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை னின்ரே ளெய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணுடை மிடைந்த கற்பின் வாணுத
லந்தீங் கிளவிக் குறுமகண்
மென்ரோள் பெறநசைஇச் சென்றவெ னெஞ்சே."

(அகம்-9.)

றவழிக் குறிஞ்சிக்கும் மூல்லைக்கும் எற்றபொருள் தத்தம் மரபிற்ரூய் வந்தன பலவுங் கண்டுகொள்க.

மற்றும் நாற்சொல்லியலென்பது வழக்காயின் அது செய்யுட் குரிய திரிசொற்கும் எற்றவாறென்னையெனின், அவையுஞ் சான்ரோர் வழங்கினவாறன்றி வேறுபட நாட்டப்பட்டாவெனவும் அவற்றுள்ளுங் காலம்பற்றித் திரிந்தன *உளவாயின் அவை தவிர்த்துச் செய்யுள் செய்யப்படுமென்றற்கும் 'நாற்சொல்லியலான்' என அடங்கக்கூறினு னென்பது. மஹையென்றதனைப் பிறங்கலென்ரொன்று இக்காலத் துச் செய்யுள் செய்யுங்கால் அப்பொருண்மையானே உயரென்று †செப்பவோவெனின் அது மரபன்று.

---

* 'உளவாயினும்' என்பதும் பாடம்.

† 'செப்பவோவெனின்' என்பதும் பாடம்.

இனிக் குடவாயிலென்பதனைக், "கொற்றச் சோழர் குடந்தை வைத்த" (அகம்-60) எனவும் உறையூரென்பதனைப் "பிறங்குநிலை வாயி லுறந்தை போக்கி" எனவும் மேலோர் திரித்தவகைபோனை இக்காலத்தும் திரித்துக்கொள்ளப்படுவன உள. அவை "களந்தை" என்றற் றொடக்கத்தன. பிறவும் இவ்வாறு வருவனவும் அறிந்து கொள்க.

"கடைபோயார் நட்பிற் கமுகனையர்" (நாலடி-22-6) என இதனுள் ஒரினத்தவாகிய புல்லே கூறி ஒழிந்த மரங்களொப்பன உளவாயினும் உடன்கூறாராயினர். இன்னோரன்னவுஞ் செய்புட்கு மரபெனப்படு மென்பது.

மற்றுப் பாட்டுரைநூலெனை ஏழுவகை வகுத்த பகுதியையுஞ் செய்புட்கு மரபென மேற்கூறினான்; அதனானே இவ்வேழுவகையா னன்றி *ஆரியாசிரியர் வேண்டுமாற்றானும் பிறபாடைமாக்கள் வேண்டுங்கட்டளையானுந் தமிழ்ச்செய்யுள் செய்தல் மரபன்றென்ற வாறு. (அ0)

393. அகவ லென்ப தாசிரி யம்மே.

இது, சிறுத்த முறையானே தூக்கு உணர்த்துவானெழுந்தான் அஃதாவது பாவினைத் துணிக்கப்படுவதாகலான் அப்பாவினை உணர்த்துகின்றானென்பது. சிறுக்கப்படுபொருள் பொன்னானும் வெள்ளியானும் ஒன்று பெற்றவழியன்றிக் கழஞ்சுந் தொடியுந் துலாமு மெனத் துலைக்கோலால் தூக்கி அளக்குமாறில்லை. அதுபோலப் பாவின்றித் தூக்கப்படுபொருள் இன்மையானும், பாவினை யெழுதிலத்

---

* 'ஆசிரியர்' என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ளபாடம். இங் ஙனம் வாளா 'ஆசிரியர்' எனக் கூறின், அஃது ஆசிரியர் அகத்திய னுரைக் குறித்துப் பின்வரும் சொற்றொடரோடு முரண்படும். என்னை? ஆசிரியர் அகத்தியனுர்செய்த அகத்தியமே, தொல்காப்பியத்திற்கும் அதன்பின்தோன்றிய நூல்களுக்கும் முதனூலும், இலக்கணமுமாகி, பெரும்பான்மையும் அம்மரபேபற்றித் தமிழ்ச்செய்யுள் செய்யப்படுத லான் என்பது.

தெழுந்த செய்யுளடி வரையறையுடைய பாட்டிற்கு இன்னவாறு வந்த தென்றறிவிப்பது தூக்காகலானும், எல்லாப்பாவினுக்குந் தூக்குப் பொதுவாகலானும் பாவொடு புணர்த்தே தூக்குணர்த்தப்பட

இதன் பொருள் : அகவல் என்பது ஆசிரியம்மே—வழக்கினுள் அகவலென்று வழங்கப்படும் பாவினை ஆசிரியத்திற்குரிய பாவென்ப, என்றவாறு.

அகவிக் கூறுதலான் அகவலெனக் கூறப்பட்டது. அஃதாவது, கூற்றும் மாற்றமுமாகி ஒருவன்கேட்ப அவற்கு ஒன்று செப்பிக்கூறுது தாங் கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவதோராறும் உண்டு. அதனை வழக்கினுள்ளார் அழைத்தலென்றுஞ் சொல்லுப. அங்ஙனஞ் சொல்லுவார் சொல்லின்கண் எல்லாந் தொடரீந்துகிடந்த ஓசை அகவலெனப்படும். அவை தச்சுவினைமாக்கள்கண்ணும், களம்பாடும் வினைஞர்கண்ணும், கட்டுங்கழங்குமிட்டு உரைப்பார்கண்ணும், தம்மில் உறழ்ந்துரைப்பார் கண்ணும், பூசலிசைப்பார் கண்ணுங் கேட்கப்படும். கழங்கமிட்டுரைப்பார் அங்ஙனமே வழக்கினுள்ளதாய்க் கூறும் ஓசை ஆசிரியப்பாவெனப்படுமென்றவாறு. (அக)

394. *அஃதான் றென்ப வெண்பா யாப்பே.

இது, வெண்பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மேற் கூறிய அகவலோசையன்றிச் செப்பிக் கூறும் ஓசையெல்லாம் வெண்பாவெனப்படும், என்றவாறு.

யாப்பென்றதனான் அப்பாக்கள் செய்யுண்முழுதும் ஒருங்கு தழீஇக் கிடக்குமென்பதுகொள்க. அகவிக்கூறுது ஒருவற்கொருவன் இயல்புவகையானே ஒரு பொருண்மைக் கட்டுரைக்குங்கால் எழும் ஓசை செப்பலோசை யெனப்படும். இவ்விரண்டுமல்லது வழக்கினுள் இன்மையான் அஃதான்றெனவே அதனிலக்கணம் †போல்வதாயிற்று. (அஉ)

---

* 'அதாஅன் றென்ப' என்பதும் பாடம்.

† 'பெறலாயிற்று' என்றார் நச்சினார்க்கினியர்.

395. * துள்ள லோசை கலியென மொழிப.

இனித் துள்ளலுந் தூங்கலும் செப்புட்கணன்றி வழக்கினுஞ் செய்யுளிலும் ஒப்பவருவனவல்ல. அவற்றுள், துள்ளலோசை உணர்த் துகின்றது.

இதன் பொருள் : துள்ளலோசையென்பது வழக்கியலாற் சொல் லாது முரற்கைப்படுமாற்றால் துள்ளச்சொல்லும் ஓசை ; அது கலிப்பா வெனப்படும், என்றவாறு. (அசு)

396. தூங்க லோசை வஞ்சி யாகும்.

இது, தூங்கலோசையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : அடியிற்றூங்காது சீர்தொறுந் தூங்குமோசை தூங்கலோசை யெனப்படும். அதுபோலும் †வஞ்சியெனப்படுவது, என்றவாறு. (அசு)

397. மருட்பா வேனை யிருசா ரல்லது தானிது வென்னுந் தனிநிலை யின்றே.

இது, மருட்பாவிற்கு வேறுபாடு இல்லை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மருட்பாவிற்கு உறுப்பாவது ஒழிந்த இரு கூறுமல்லது, தானுக வேறுபடுத்து இதுவெனக் காட்டுந் தனிநிலை யின்று, என்றவாறு.

---

* 'துள்ளுதலாவது ஒழுகு நடைத்தின்றி இடையிடை யுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற்போலக் கொள்க. உதாரணம்: "அரிதாய வறனெய்தி—" என்றவழி, "அரிதாய வறன்" என்கின்ற வழிச் செப்பலோசைத்தாகிய வெண்சீர்ப் பின்னும் வெண்டளைக்கேற்ற சொல்லொடு புணராது துண்டெழுந்த ஓசை துள்ளித்துள்ளி வந்தமை யால், துள்ளலோசையாயிற்று' என்பது உரையாசிரியருரை.

† 'வஞ்சிப்பா' என்பதும் பாடம்.

எனவே, இரண்டன் கூட்டத்துக்கண்ணது மருட்பாவாவதென்ற வாறு. பரிபாடற்கு இருசார் அன்மையின் ஈண்டுக் கூறிற்றிலர் அது மேற்கூறுப. 'ஏனை இருசார்' என்றதென்னையெனின், இச்சூத்திரத்து முன்னர் அதிகாரப்பட்டு நின்ற துள்ளலோசையுந் தங்கலோசையு மல்லது, அங்ஙனஞ் செப்புட்கு உரியவன்றி வழக்கிற்கு வருவனவாகி ஒழிந்துநின்ற செப்பலும் அகவலுமேயென்றற்கு அவ்வாறு கூறினு னென்பது. அவை இரண்டுங் கொள்ளுங்கால் நிறுத்தமுறையாற் கொள்ளாது, எதிர்சென்று கொள்ளப்படும். கொள்ளவே, செப்பண் முன்னுகவும் அகவல் பின்னுகவும் வருவதாயிற்று மருட்பா. இனி நிறுத்த முறையானே கொள்வார் வெண்பாமுதல் அகவல்பின்னுக வருவது மருட்பாவன்றெனவும், வெண்பாவொழித்து ஒழிந்தபாத் தம்முண்மயங்குவனவே மருட்பாவெனவுங் கூறுப. கலிப்பாவும் வஞ் சிப்பாவும் ஆசிரியத்தோடும் வெண்பாவோடும் மயங்கியிறினும் அவை மருட்பாவெனப்படாமையின் அது பிழைக்குமென்பது. (அடி)

398. *அவ்வியல் லல்லது பாட்டாங்குக் கிளவார்.†

இது, மேலவற்றிற்கு ஓர் வரையறை கூறுகின்றது.

---

* 'அவ்வியல்பல்லது' என்பதும் பாடம்.

† 'இது பாக்கள் எல்லாவற்றிற்கும் உரியதோர் மரபுணர்த்துதல் முதலிற்று. இதன்பொருள் : மேற்சொல்லப்பட்ட ஓசைவகையாலல் லது பாட்டாங்குக் கூறார் என்றவாறுயிற்று. பாட்டாங்குக் கூறலா வது ஓசையொழிந்து சிருந்தினையும் படக்கூறல். அவ்வாறு சொல் லுங்காற் பாட்டாங் காகாதென்பதூஉம், அடியுந்தொடையும் பெற்று வந்ததாயினும் நூலின்பாற்படுதல் உரையின்பாற்படுதல் என்பதூஉம் கூறியவாறும். அது வருமாறு: "ஐவகையடியும் விரிக்குங் காலை-மெய் வகையமைந்த பதினேழ் நிலத்து-மெழுபது வகையின் வழுவில வாகி-யறுநூற் றிருபத் தைந்தா குமே" (தொல்-செப்-50) என்பது ஆசிரி யப்பாவிற்குரிய இலக்கண முடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரி யம் எனப்படாது நூலெனப்படும் என்றுகொள்க' என்பது உரையா சிரியருரை.

இதன் பொருள் : மேற்கூறிய நான்குபாவிலக்கணத்தானல்லது பாட்டின்கண் வேறுபாக் கூறப்படாது, என்றவாறு.

இது கூறிப் பயந்தென்னையெனின், மேற்கூறிய பாக்களாற் பெயர்கூறுத செய்யுட்களும் அவை பாவாக வரினல்லது வேறு தமக்குப் பாவிலவென்பதூஉம், மருட்பா வேனை இருசாரல்லது தானிது வென்னுந் தனிநிலையின்றெனவே அவ்விரண்டன் கூட்டத்தின் கண்ணும் வேறோர் பாப் பிறக்குமென்று கொள்ளினுங் கொள்ளற்கவெனவும், பிற்காலத்து நூல்செய்யும் ஆசிரியர் பிறவகையாற் பாவுறுப்பினை மயக்கப்படவேண்டுவாருளராயின் அவரை விலக்கியுங் கூறினவாறு. அல்லதூஉம் மாணக்கன் இதன் முதனூல்செய்த ஆசிரியன் *பண்ணுந் திறனும் பகுத்தானைக்கண்டு இவற்றையும் பாவும் இனமுமாகப் பகுத்தான் கொலென்று ஐயுறுமை விலக்கி இயனூலுள் அவ்வாறு கூறிற்றிலனெனச் சொல்லினுமென்பது. நான்கு பாவினையும் 'நோக்கி ஆங்கென்றான்; ஐந்து செய்யுளோநோக்கி அவ்வியலென்றானென்பது. (அசு)

399. தூக்கியல் வகையே யாங்கென மொழிப.

இது தூக்காமா றுணர்த்துகின்றது.

இதன் பொருள் : தூக்கெனப்பட்ட உறுப்பு நடக்கும் இடவகை அச்சொல்லப்பட்ட நான்கிடமுமாம், என்றவாறு.

---

* 'இலக்கத்துப் பண்ணுந்திறனும் பகுத்தாற்போல, இயற்குப் பாவும் இனமும் பகுத்தார்கொல் என்னும் ஐயம் நீக்குவதூஉமாம். இவர் கருத்தாற் சான்றோரும் இனங்கொள்ளாராயினர்' என்பது நச்சினார்க்கினியர் உரை.

யாப்பருங்கலத்தினும் யாப்பருங்கலக் காரிகையினும், பாவும் இனமும் கொள்ளப்பட்டன. 'பண்ணுந் திறமும்போற் பாவு மினமு மாம்-வண்ணவிகற்ப வகைமையால்-பண்மேற்-றிறம்விளரிக் கில்லது போற் செப்பல கவல்-இசைமருட்கு மில்லை யினம்' என்பது யாப்பருங்கலவிருத்தி யுரையிற்கண்ட மேற்கோள்.

ஆங்கென்றது அப்பெற்றித்து என்றவாருகக்கொள்க. அவ்விடந் தாக்கு இயலும் இடப்பகுதியென்றவாறு. என்றார்க்குத் தாக்கினது இலக்கணம் ஈண்டுக் கூறியதிலதுலெனின், தாக்கென்பது சொல்லின் முடியு மிலக்கணத்திற்றது. தாக்கென்பது நிறுத்தலும் அறுத்தலும் பாடலுமென்று இன்னோரன்னவற்றுமேல் நிற்கும்; ஈண்டும் அவ் வாறே பாவினை இத்துணையடியென நிறுத்துக் கூறுபாடறிதலும், அவ் வகத்தாக்குள்வழிச் சொல்லுவாரது உறுப்பு விகாரப்பட்டு ஒடுவது போன்று அசையுமாறுங் கண்டுகொள்க. இனி, அதுதான் இன்ன பொருளை அறுத்து நிற்குமென்பான் பாக்கூறி, அப்பாவின்கண்ணது இவ்விறுதியென்றான் எனவே, இனிக் கூறுது நின்றதில்லை தாக் கிற்குவேண்டும் இலக்கணமென்பது. இக்கருத்தினானே தாக்கினைப் பாவெனினும் அமையும்.

"பாவென மொழியினுந் தாக்கினது பெடரே"

எனப் *பிறருஞ் சொல்லுப.

அகவலோசைக்கண் தாக்குவருங்கால் இருசீர்முதலா எண்சீர் காறும் பரந்து பட்ட அகவலோசையை நாற்சீர்க்கண்ணே துணித்துக் கொள்ள, அஃது ஆசிரியத் தாக்கா மென்றவாறு. இருசீரால் துணிப்ப ஆசிரியவோசையாகாது. முச்சீரால் துணிப்பினும் ஆசிரியவோசை யாம். என்னை? ஈற்றடிலடி முச்சீர்த்தாமெனவும் இடையும் வரையா ரெனவுங் கூறினமையின். அஃதேல், அடிவகையானே அறுதியுணர்த் துமாகலின் தாக்கு எவன் செய்யும் எனின், அவ்வடியினையுந் தாக்கா வன்றி உணர்த்தலாகாது; என்னை? இருசீர் முதலாப் பலசீர் தொடர்ந்தவழித் தாக்கு அறுப்புக்கொண்டன்றி இத்துணைச்சீர் கொண்ட அடி இஃதென்பது அறியலாகாமையின். அல்லதூஉம், ஆசிரியத்துள் எண்சீர் தொடர்ந்து பாச்சென்றவழி அதற்கு வரு மெனப்பட்ட முச்சீரடியும் ஐஞ்சீரடியுமாகாது நாற்சீரடி இரண்டென்று அறிதற்குக் கருவி தாக்கென்பதுகொள்க. அல்லாக்கால்,

* தத்தத்தனர் என்று ஏப்பருங்கல விருத்தியால் அறியப்படு கிறது.

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
யலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்"

(ஐங்குறுநூறு)

என்றவழி, 'உள்ளார்' 'முள்ளுடை' என்பன அடியெதுகைபாக முச்சீரடியும் ஐஞ்சீரடியுமெனக் கொண்டு மயக்கமாமென்பது.

"நரந்த நாறுந் தன்கை யாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே" (புறம்-235.)

என்றவழி எண்சீரான் இரண்டு நாற்சீரடி வந்தனவென்று கோடு மன்றே தூக்கின்றாயினென்பது.

தூங்கலோசை அளவுபோல நாற்சீரடிக்கணன்றி இருசீர்க்கண் ணுஞ், சிறுபான்மை மூச்சீர்க்கண்ணுந் தூக்குக்கொள்ளப்படும். அங் னனங் கொள்ளாக்கால் இருசீரெனவும் மூச்சீரெனவுந் தூக்கின்மி இடை தெரியப்படாவென்பது. (அ)

400. மோனை யெதுகை முரணை யியைபென நானெறி மரபின தொடைவகை யென்ப.

இது 'மரபே தூக்கே தொடைவகை பெறுஅ' (தொல்-செய்-1) என விறுத்தமுறை யானே, தூக்குணர்த்தித் தொடைவகை உணர்த்து வானெழுந்தான், *அவைதாம் இவையெனப் பெயரும் முறையுந் தொகையுமுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: மோனைத்தொடையும் எதுகைத்தொடையும் முரண்டொடையும் இயைபுத்தொடையுமென நான்கு வகைப்படுந் தொடை, என்றவாறு.

'நெறிமரபு' என்பது நெறிப்பட்ட தொடையிலக்கணம் இது வென்றவாறு. எனவே 'அளபெடை தலைப்பெய் யைந்து மாகும்' (தொல் செய்-89) என்றவழி இதுபோலச் சிறந்ததன்று அளபெடைத் தொடையென்பதாம். என்னை? அதுவும் வழுவமைத்துக்கொண்ட

* 'அவைதாம்' என்பதுமுன் அச்சுப்பிரதியில் இல்லை. ஏட்டுப் பிரதியிற் கண்டது.

எழுத்தாகலானென்பது. 'தொடைவகை' யென்பது தொடைப்பகுதி பலவுமென்றவாறு. அவை மேற்கூறுமாற்றான் மோனை நான்கும், எதுகை பதினைந்தும், முரண் ஐந்தும், இயைபு இரண்டுமென்று இவ்வகைப்படுத்தலும், இனி ஈண்டு எண்ணப்பட்ட தொடைப்பகுதிகளும் அறுநூற்றிருபத்தைந்தடியினையும் ஒரோவொன்றாகத் தம்மொடு தம்மைத் தொடுப்பனவும், அவை தம்மொடு பிறவந்தது தொடுப்பனவும், ஓரடிக்கண்ணே தொடுப்பனவும், அவற்றைக் கட்டளையடியல்லனவற்றும் ஈறாய் விராய்த்தொடுப்பனவும், கட்டளையடியல்லனவற்றைத் தம்மொடு தம்மைத் தொடுப்பனவும், தம்மொடு பிறவந்தது தொடுப்பனவுமென இன்னோரன்ன பலவுமுள. அப்பகுதியெல்லாம் அறிவித்தற்குத் 'தொடைவகை' யென்றானென்பது. (அஅ)

401. அளபெடை தலைப்பெய வைந்து மாகும்.

இஃது, எய்தியதன்மேற் சிறப்புவிதி.

இதன் பொருள் : அந்நான்கேயன்றித் தொடைவகை ஐந்தெனவும்படும் அளபெடைத்தொடையோடு தலைப்பெய்ய, என்றவாறு.

அளபெடை எழுத்தோத்தினுள் வேறு எழுத்தெனப்படாமைச் சிறப்பின்மைநோக்கி, ஈண்டுப் போதந்து கூறினானென்பது. என்றார்க்கு, மேலைச் சூத்திரத்து நானெறிமரபாவனவெனத் தொகை கூறினமையின் ஈண்டு அளபெடையுந் தொடையாமென அமையும். நான்கின்மேல் ஒன்றேறியக்கால் ஐந்தாமென்பது ஈண்டுச் சொல்ல வேண்டுவதன்று பிறவெனின், அற்றன்று; நான்கினோடு ஒன்றினையே சொல்லுகின்றானாயின் அது கடாவாவது, ஐந்தெனவும் ஆறெனவும் படுமென்றற்கு இது கூறினான். என்னை ? உயிரளபெடையும் ஒற்றளபெடையுமென அளபெடை இரண்டாதலினென்பது. அஃதே கருத்தாயின், ஆறுமாகுமென்மினெனின், அங்ஙனங் கூறின் உயிரளபெடையோடு ஒத்தசிறப்பிற்றாவான் செல்லும் ஒற்றளபெடை யென மறுக்க. உயிரின்பின்னது ஒற்றாகலான் எடுத்தோத்துப்பெறுவது உயிரளபெடையெனவும், உம்மையாற் பெறுவது ஒற்றளபெடை யெனவுங் கொள்க. உம்மை எச்சவும்மை. ஒற்றளபெடை மூன்றுபாவினுஞ்

செல்லாது; கலிப்பாவினுள் துள்ளலோசையான் இல்லாமையி னென்பது. (அக)

402. பொழிப்பு மொருஉவுஞ் செந்தொடை மரபி னமைத்தனர் தெரியி னவையுமா ருளவே.

இதுவும் அது.

இதன் பொருள்: மேற்கூறிய ஐந்துமேயன்றிப் பொழிப்புத் தொடையும், ஒருஉத்தொடையும், செந்தொடையுமென இவையுமுள, என்றவாறு.

செந்தொடைமரபென்பது செந்தொடையிலக்கண மென்றவாறு. 'அமைத்தனர்தெரியின்' என்றதனுன் அமையுமாற்றுன் அமைத்துக் கொள்ளப்படும். யாங்ஙனம்? பொழிப்பும் ஒருஉவும் ஓரடியுள்ளே வருமெனவும் செந்தொடை ஓரடியுள் வரினும் இரண்டடியானன்றி அறியவாராதெனவுங் கொள்க. இக்கருத்துநோக்கி இவை ஈண்டுப் போதந்து கூறினனென்பது. 'அவையுமாருளவே' யென்ற உம்மையான் இவைபோல ஓரடிக்கண்ணே வரும் முற்றெதுகையும், இனமுற்றெதுகையும், இரண்டந்தாதியும், *இருவகை விட்டிசைத் தொடையுங் கொள்ளப்படும். (கo)

403. நிரனிறுத் தமைத்தலு மிரட்டை யாப்பு மொழிந்தவற் றியலான் முற்று மென்ப. †

இது, நிரனிறைத் தொடையும் இரட்டைத் தொடையுமென இரண்டுதொடை கூறி, அவை முற்கூறிய தொடைப்பாற் படுமென்று அடங்கக் கூறுகின்றது.

இதன் பொருள்: நிரனிறைப் பொருள்வகையால் தொடுக்குந் தொடையும், வந்த சீரே நான்கால் தொடுக்குந் தொடையும் முன்னைத் தொடைப்பாற்பட்டு அடங்கும், என்றவாறு.

---

* 'இருவகை நிரனிறுத் தமைத்தலும் விட்டிசையும்' என்பது நச்சினார்க்கினியர் உரை. † இச்சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியருரை

யாத்தவெனினுந் தொடுத்தவெனினும் ஒன்று.

"*அடலமர் வேலேக்கி னின்முகங் கண்டே
யுடலு மிரிந்தோடு மூழ்மலரும் பார்க்குங்
கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்புந்
தடமதிய மாமென்று தாம்."

என்றவழி உடலுங் கடலுமென நிரனிறைத் தொடைமேற் கூறுமாற்றான் எதுகைத்தொடையாய் அடங்கும்.

"பரவை மாக்கடற் †றொகுதிரை வரவும்
பண்டைச் செய்தி யின்றிவள் வரவும்"

என இவ்வாறு நிரனிறுத்தலும் ஒன்று. •அஃது இயைபின்பாற்படுமென்க. ஒழிந்தனவும் அன்ன.

இரட்டைத்தொடையென்பது ஒருசொல்லே நான்கு சீருமாகி வருமென்பது. அது,

"ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்"

என வரும். இது குறையீற்றிரட்டை; இயைபுத்தொடையாய்க்கும்.

"பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
நாவீற் றிருந்த புலவீர்காள் பாடுகோ"

என்பது நிறையீற்றிரட்டை. இதுவும் இயைபாய் அடங்கிற்று.

செந்தொடையாய் அடங்குவன உளவேற் கண்டுகொள்க.

கிடைக்கவில்லை. 'நிரனிறுத் தமைத்துக் கோடலும் ஒ தொடையும் ஏற்பவும் பெறும் என்றவாறு. நிரனிறைத் தொடையாவது பொருளைச் சேரநிறுத்திப் பயனையுஞ் சேரநிறுத்தல். இரட்டைத் தொடையாவது ஓரடிமுழுதும் ஒருசொல்லே வருதல்' என்பது உரையாசிரியருரை.

* 'அடல்வே லமர்நோக்கி' என்பதும் பாடம்.

† 'தொகுதியைப் பரவும்' என்பதும் பாடம்.

மற்று இவை இவ்வாறு அடங்குவனவற்றை விதந்தோதுவது என்னையெனின், இவையுந் தொடைப்பாடு கண்டு ஐயுற்றானை ஐயமறுத்தானென்பது. எனவே, ஒழிந்தபொருள்கோள் தாமேநின்று தொடைப்பாடுகாட்டி ஐயஞ்செய்யாமையின் அவை கூறானாயினானென்பது. நிரனிறையாயின் இனைத்தென நிறுத்த பொருட் கேற்ப எதிர்பொருளும் எண்ணி நிறுத்துச் செய்யப்படுதலின் அது வேறு தொடையாங்கொலென்று ஐயஞ்செல்லுமென்பது. 'மொழிந்தவற்றியலான்' எனவே, தனக்கு வேறியல்பில்லாத செந்தொடை நீக்கப்பட்டது. பொழிப்பும் ஒரூஉவும்போல ஓரடியுள் நின்றுந் தொடைமை செய்யினும் அவை முற்றாய் அடங்கும். ஈரடிக் கூட்டத்துத் தத்தம் வகையால் தொடைமை செய்யாவென்பது. (கக)

404. அடிதொறுந் *தலையெழுத்தொப்பது மோனை.

இது, நிறுத்தமுறையானே மோனைத்தொடையாமா றுணர்த்துதல்.

இதன் பொருள்: அடிதொறும் முதற்கண் ஒரெழுத்தே வரத் தொடுப்பது மோனைத்தொடையாம், என்றவாறு.†

"கண்டற் கானற் குருகின மொலிப்பக்
கரையா டலவ னனைவயிற் செறிய"

என்பது அடிதொறும் முதலெழுத்தொன்றி மோனைத்தொடை வந்தவாறு.

"கோதை மார்பிற் கோதை யானுங்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்."

என்பதும் அது.

* 'முதலெழுத்தொப்பது' என்பதும் பாடம்.

† " 'தலையெழுத்தொப்பது' என்றற்கு அடிகளின்முதலெழுத்தும் சீர்களின் முதலெழுத்தும், என்பது பொருளாம்" என்பர் நச்சினார்க்கினியர்.

இனிவருந் தொடையும் இதுவுமெல்லாம் அறுநூற்றிருபத்தைந் தடிக்கு உரியவாகியும், பிறவடிக்கு உரியவாகியும், *வஞ்சியடிக் குரிய வாகியும், குறளடி சிந்தடிநெடிலடி கழிநெடிலடியெனும் நால்வகை அடி க்கு உரியவாகியும் வருமெனக்கொள்க.

அற்றன்று, அறுநூற்றிருபத்தைந்தடிக்கும் மோனைத்தொடை ஒன்றொன்றுகச் சென்று பெருகி அறுநூற்றிருபத்தைந்து தொடையா மென்பது. மற்று அடியிரண்டியைந்தவழியன்றே தொடையாவது? இவை அறுநூற்றிருபத்தைந்து தொடையாங்கால் இரண்டு ஓரடிக் கண்ணே வரல்வேண்டும்; வேண்டவே, அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனையென்றதனைக் மாறுகொள்ளும் பிறவெனின், இது நோக்கியன்றே 'அடியுள் ளனவே தலையொடு தொடையே' (தொல்-செய்-33) எனக் கூறி 'அடியிறந்து வருதலில்' தொல்-செய்-34) என்பானையிற்று. எனவே, அறுநூற்றிருபத்தைந்தடியுள் ஒன்றனையே இரட்டித்துத் தொடைகொள்ளவென்பது பெற்றுமன்றே, ஈண்டு அடிதொறுமெனப் பன்மைகூறலே அவற்றையே இரட்டித்தலும் பிற அடிவந்து தொடுத்தலும் எல்லாம் அடங்கக்கூறினன் ஈண்டென்பது.

'மெய்பெற மரபிற் றொடைவகை' (தொல்-செய்-101) என மேல் வனையறுக்கப்படுந் தொகை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டனுள்ளும், மோனைத்தொடை வருங்சான் மூன்றுபாவிற்கும் ஒதிய எழுபத்தெட்டுச் சிரினும் வரப்பெறும். அவ்வாறு வருங்கால், 'அடியுள்ளனவே தலையொடுதொடையே' †என்ற தலையிலக்கணமும் 'அடியிறந்து வருதலில்' எனப்படுமாசலான், அவ்வடி இரண்டன் கூட்டத்துத் தலைவழுக் கலையல் வேண்டும். கலையுங்கால் ஆசிரியத்து நாற்பத்தொன்றும், வெள்ளடியுட் பதினெட்டும் ஆக ஐம்பத்தொன் பது இலங் கலையப்படும். கலிப்பாவிற்கு அவ்வாறு கலையவேண்டுவ தில்லையென்பது.

---

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

† 'என்றதனை, இலக்கணமும்' என்று முன் அச்சுப்பிரதியிற் காணப்படுகிறது.

ஆசிரியத்து நாற்பத்தொரு சீலமாவன, தனக்கு ஒதிய இருபத் தேழுசீரும் பதினைன்கு நேராதியும் பதின்மூன்று சீரையாதியுமாத லான், அவற்றுள் நேராதி பதினைன்கும் ஒரோவொன்று பன்னிரண்டடி உறழுங்காற் பெருகிய சீலத்தின் இவ்விரண்டடியாக இருபத்தெட்டடி யும், இனி சீரையாதி பதின்மூன்றற்குஞ் சுருங்கியசீலத்தின் ஒரோ வொன்றுகப் பதின்மூன்றடியுமென நாற்பத்தொரடியுந் தம்மொடு தாம்வந் திரட்டிக்குங்கால் தளைவழுப்படுதலின், அவை தொடுக்கப் படாவென்பது.

இனி, வெண்பாவடி உறழுஞ்சீர் இருபத்தேழுள்ளும் நேராதிச் சீர் பதினைன்குஞ் சுருங்கியசீலத்துள் ஒரொன்றுகப் பதினைன்கடியும், சீரையாதிச்சீர் பதின்மூன்றனுள் ஒன்பதொழித்து ஒழிந்த நான்கு சீரும் இன்றுறழ்ந்த அடியுட் பதினைன்கெழுத்தடி நான்குமாகப் பதி னைஞ்டியுந் தம்மொடு தம்மை இரட்டித்துத் தொடுப்பத் தளைவழுவு மாகலிற் கலையப்படுமென்பது.

சீரையாதிச்சீர் நான்குமாவன, வரகு வலியது கடியாறு விறகுதீ என்பன. ஒழிந்த சீரையாதி ஒன்பது சீரும் இன்று உறழ்ந்த அடி எஞ் ஞான்றுங் கலையப்படாது தொடைப்படுமென்பது. அவை ஒன்பது மாவன, அரவு புலிமா கணவிரி பெருநாணு உருமுத்தீ மழகளிறு நரை யுருமு புலிசெல்வாய் குளிறுபுலி எனவிவை. வரகு நரையுருமு காரு ருமு பாதிரி எனவும், வலியது கடியாறு காருருமு பாதிரி எனவும், கடியாறு தேமா நரையுருமு காருருமு எனவும், விறகுதீ தேமா புலி வருவாய் காருருமு எனவும் இப்பதினைன்கெழுத்தடி நான்குந் தொடுக் குமாறில்லை. ஒழிந்த நேராதியும் இவ்வாறே சுருங்கினசீலத்து உறழ்ந்தவடி தொடுக்குமாறில்லை யென்பதூஉங் கண்டுகொள்க.

இனிக் *கலையப்படாத சீரை முதற்சீர் ஒன்பானுள்ளுஞ் சுருங் கிய எழுத்துச்சீர் ஒன்பது. பெருகிய எழுத்துசசீர் நரையுருமு புலி வருவாவென்பன.

அரவு வரகு †வரகு வரகு
எனவும்,

---

* 'தளையடையாத' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.
† இவ்விரண்டுசீரும் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

அரவு புலிவருவாய் காருருமு தேமா.

எனவும் இவைமுதலும் முடிவுங்காட்டிய அடிக்கண் அலை தம்மோடு தம்மைத் தொடுக்கப்படுதலிற் கலையுறில மிலவாயின.

நரையுருமு வண்டு வரகு *வரகு,

எனவும்,

நரையுருமுக் காருருமு பாதிரி தேமா

எனவும் ஐயெழுத்துச்சீர் முதலும் முடிவுங்காட்டிய அடியுங் கலையப்படாது தொடைப்படுமென்பது. புலிவருவாய்க்கும் இஃதொக்கும். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

இவ்வாற்றான் அறுநூற்றிருபத்தைந்தடியுள் ஐம்பத்தொன்பது கிலங்களொந்து ஒழிந்த அடி ஐஞ்ஞூற்றறுபத்தாறனும் பெற்ற மோனைத் தொடை ஐஞ்ஞூற்றறுபத்தாறெனப்படும்.

இவ்வாறே நூலாகெதுகை, அடியெதுகை, எழுத்தோடியைபு, சொல்லோடியைபு என்னும் நான்குதொடைக்கும் கலவை கலைந்து தொகை கூட்டிக்கொள்க.

இவற்றுள் ஆசிரியப்பாவினுள் வரும் அடிமோனைத்தொடை இருநூற்றெண்பத்து மூன்றும், வெண்டொடை நூற்றறுபத்து மூன்றும், கலிப்பாவிற்குரிய தொடை நூற்றிருபதுமாகி மூன்று பாவிற்குந் தொகுப்பத் தொடை ஐஞ்ஞூற்றறுபத்தாறும். ஒழிந்த நான்கற்கும் இவ்வாறே கொள்க. கொள்ளவே, இத்தொடை ஐந்தனனும்பெற்ற தொடை †இரண்டாயிரத்தெண்ணூற்று முப்பதாம் (2830). இவற்றுள் அகவற்றொடை ஆயிரத்து நானூற்றொருபத்தைந்து, வெண்டொடை எண்ணூற்றொருபத்தைந்து, கலித்தொடை அறுநூறெனக்கொள்க.

---

* இச்சீர் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டது.

† 'இரண்டாயிரத்தெண்ணூற்று முப்பத்தாறும்' என்று முன் அச்சுப்பிரதியில் உள்ளது. இது தவறுதல் தொகை கூட்டிக் கண்டுகொள்க.

"அடியெதுகை மோனை தலேயா கெதுகை
யடியியைபு தாமிரண்டென் றைந்துங்-கடியப்
படுமில மைம்பது மொன்பது மென்ப
வெழுபத்தெண் சீரடிக்கு மேற்ற."

எனவும்,

"ஒழிந்த வீலத்து வீரைபதின்மூன் றெல்லா
மொழிந்த வுயர்ந்துழி யொன்றுக்-கழிந்த
வீரையொன்றாய் நேரிரண்டாய் நாற்பத்தொன் றாகு.
மவ்வயகவற் காகா தன."

எனவும்,

"வரகு வலியது வான்சடி யாறு
விறகுதீ வெள்ளைக்கு மேனிலத்தி லொன்று
வழிவழி நேர்முதற்சீ ரேழிரண்டு மாக
வவையைம்பத் தொன்பா னசற்ற."

எனவும்,

"ஐம்பத்தொன் பானன்றி யைஞ்ஞூற் றறுபத்தா
றொன்றற் குரியவா றொட்டு."

எனவும்,

"ஐந்து தொடையா னகவற் றொடையிருநூற்
றெண்பத்து மூன்று மெனமொழிப வொன்றொன்று
வெள்ளைத் தொடைநூற் றறுபத்து மூன்றுகுந்
துள்ளற்கு நூற்றிருப தாம்."

எனவுஞ்,

"சொல்லி னவைதன் றொடையிரண் டாயிரத்
தெண்ணூற்று மூப்ப தெனல்"

வும் இவ்வாறே விரித்துரைத்துக்கொள்க. (கூ)

405. அஃதொழித் தொன்றி னெதுகை யாகும்.

இஃது இரண்டாமெண்ணு முறைமைச்சணின்ற எதுகைத்தொடையுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: இரண்டடியினும் முதனின்ற சீர் முதலெழுத்திரண்டும் ஒழிய அல்லனவெல்லாம் ஒன்றிவருதலும் ஒரோவெழுத்தே ஒன்றிவருதலுமென இங்ஙனங் கூறியவற்றுள் அஃதொழித்து அச்சீர் முழுதொன்றில் தலையாகெதுகையென்றும், இரண்டாமெழுத்தொன்றில் அடியாகெதுகை யென்றும் வழங்கப்படும். அயலெழுத்தொன்றினென்னுது முதலெழுத்தினைச் சுட்டிக்கூறுதலென்னையெனின், இவ்வாறு எதுகையாங்கான் முதலெழுத்துச்சுளின் மாத்திரை தம்மின் ஒத்துவரல் வேண்டுமென்றற்குக் கூறினனென்பது.*

உதாரணம்:

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்." (தொல் அகத்-5.)

என்பது தலையாகெதுகை.

---

* 'முற்கூறிய முதலெழுத்தினை யொழித்து இரண்டடியினும் சீர்முழுதும் ஒன்றினும், இரண்டாமெழுத்தே ஒன்றினும், ஏரடிக்கண் முதலிருசீர்க்கண் இரண்டாமெழுத்து ஒன்றினும், முதற்சீரினும் மூன்றாஞ் சீரினும் இரண்டாமெழுத்து ஒன்றினும், முதற்சீரினும் நான்காஞ்சீரினும் இரண்டாமெழுத்து ஒன்றினும், முதற்சீரொழித்து வேனைய ஒன்றினும், முதலயற்சீரொழித்து வேனைய ஒன்றினும், ஈற்றயற்சீரொழித்து வேனைய ஒன்றினும், நாற்சீரும் ஒன்றினும் தலையாகெதுகை, அடியெதுகை, இணையெதுகை, பொழிப்பெதுகை, ஒரூஉவெதுகை, கூழையெதுகை, மேற்கதுவாவெதுகை, கீழ்க்கதுவாவெதுகை, முற்றெதுகை எனக் கூறப்படும் என்றவாறு.' என்பது நச்சினார்க்கினியர் உரை. இங்ஙனமே முன்வந்த மோனைக்கும் பின்வரும் முரண், இயைபு இரண்டிற்கும் கொண்டனர். அளபெடைக்கு இணைமுதலியன கொண்டிலர்.

'அடிதொறும் முதலெழுத்தொன்றுமல் இரண்டாமெழுத்தொன்றின் எதுகையாகும் என்றவாறு. அஃதேல், முதலெழுத்துமொன்றி இரண்டாமெழுத்துமொன்றின் யாதாகுமெனின், முந்துற்ற மோனையாற் பெயரிட்டு வழங்கப்பெறும் என்றவாறு' என்பது உரையாசிரியர் உரை.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி."

(பத்து-பெரும்பாண்-1-2.)

என்பது அடியெதுகை. இதனை அடியாகெதுகையெனவும் அமையும். ஒழிந்தன கடையாகெதுகை யெனப்படும். பிறவும் அன்ன.

அஃதேல் தலையாகெதுகை யென்றதுபோலத் தலையாகுமோனையுங் கொள்ளாமோவெனின், அற்றன்று; ஆசிரியன் 'அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை' (தொல்-செய்-92) என்றலினால், அடிமோனையே கொண்டாமென்பது. என்றார்க்கு,

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்." (நாலடி 4-9.)

என்றவழி, அடிதோறும் ஒருசொல்லே வந்து தொடையாயிற்றன்றேவெனின், அஃது இரண்டடிக்கண்ணே வந்ததன்று, செய்யுண்முழுவதும் பயின்றுவந்து சுவைமைப்படாதாகலின் வழிமோனைப்பாற் பட்டடங்கும் என்க. இச்சூத்திரத்துக் காட்டப்பட்ட தொடை இரண்டும் மூன்று பாவிற்கும் *ஒதிய அறுநூற்றிருபத்தைந்து அடியோடுங்கூட்டித் தொகைசொல்லுமாறு மேலைச்சூத்திரத் துரைக்கப்பட்டது. (கக)

406. ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய.

இது, மேற்கூறிய தொடைப்பாற்பட்டு வருவன வேறுபல தொடைகண்டு அவை கூறுகின்றது.

இதன்பொருள்: ஆயிரு தொடையென்பன மோனையும் எதுகையும்; இவை இரண்டற்குங் கிளையெழுத்துக்களும் ஒன்றிவரப்பெறும், என்றவாறு.

---

* 'ஒதி' என்பதும் பாடம்.

இதன்கருத்து, அங்ஙனங் கிளையாகிவந்த வேறுபாட்டான் எல்லாத் தொடையும் வேறு பலவாமென்றவாறு. கிளையெழுத்தென்பன வருக்கமும் நெடிலும் அனுவும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் உயிருமெனவிவை. இவையெல்லாம் ஒரோகிளைமை யுடைமையிற் கிளையெனப்பட்டன.

இனி, ஆசெதுகையும் மூன்றாமெழுத்தொன்றெதுகையும் அடியெதுகைக் குரித்தாகிய இரண்டாமெழுத்தின் முன்னும்பின்னுந் தொடர்ந்துநிற்றலின் அவையுங் கிளையெனினும் அமையும். அற்றன்று; அடிமோனையுந் தலையாகெதுகையும் அடியெதுகையும் *வந்து, நுந்தை யென்னுஞ் சீர்க்கண் மூன்றாமெழுத்தொன்றிவருதன் 'மெய்பெறு மரபிற் றொடை' (தொல் செய்-101) எனப்பட்டமையின், ஆண்டு அது கிளையாகாது: மெய்த்தல் ஒத்தலென்றவழியன்றி ஈதல் காய்தலென்றவழி நெடின்மோனையாய்த் திரிபுபடுதலின் ஆசிடையெதுகையுங் கிளையாகாது. உரியவென்றதனானே இவை அத்துணையுரியவன்றா மெனக்கொள்க. மற்று நுந்தை தந்தையென்றவழி ஆண்டு முதனின்ற மோனை சிறந்ததென்னாமோவெனின் என்னாமன்றே, இரண்டாயவழி ஈரெழுத்துத் தேமாவாகலே பெரும்பான்மையாகலின். இதனானே, இது தலையாகுமோனையெனத் தலைமைகூறப்படாததுஉமாயிற்று; என்னை? தொடையென்பன பூத்தொடைபோலச் செய்யுட்குப் பொலிவுசெய்ய வேண்டுமாகலின். இக்கருத்தினானன்றே சொல்லடியியைபினைத் தலையாகியைபெனத் தலைமைகூறாராயிற்றென்பது. அடியெதுகையாயின் தலையாகெதுகைபோலச் சிறந்து காட்டுமென்பது. செந்தொடையுஞ் செய்யுட்பொலிவு செய்யுங்காற்கொன்றையுங் கடம்பும்போல நின்றவாறேநின்று தொடைப்பொலிவு செய்யுமென்பதாம். அதுவுங் கிளையெனப்படுமோவெனின், அதுவுங் கிளைமைபற்றியல்லது அனுவாகாதென்றற்கு இவற்றோடுங் கூறினானென்பது.

ஈண்டு ஓதிய கிளை உயிரும் ஒற்றுமென இரண்டாகலின் அவ்விருவாற்றானுங் கிளைமைபற்றி அனுக்கொள்ளப்படும். என்னை?

---

* 'வந்தது' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

அஆ வோயிரண் டங்காந் தியலும்' (தொல்-எழுத்-பிறப்-3) என அகர ஆகாரங் கிளையாயின. ஐகார ஔகாரம் போலிவகையான் அவை யெனப்படும். இ ஈ எ ஏ என்பனவும் உ ஊ ஒ ஓ என்பனவும் உடன் பிறப்பினவாகலான் அவையுங் கிளையெனப்படும். ஒற்றுக்கிளையென் பன தம்முன்னர்த் தாம்வருதலும் பிறவருதலுமென இரண்டு. அவற் றுள் தம்முன்னர்த் தாம்வருங்கால் வந்த உயிரே வாரா. அனுவிற்கு ஏதிய உயிரே வேறுபடவருமென்பது. இனி ஓரடிக்கண்ணுயின் ஐஞ்சீ ராலும் அறுசீராலும் வந்தவழியினும் அனுவெனப்படுமென்பது. இனித் தம் முன்னுகப் பிறவருங்கால் வந்த உயிரே வரவும்பெறு மெனக்கொள்க. பிறவருங்கால் நகரஞகரங்களும் மகரவகரங்களுஞ் சகரதகரங்களும் இனம்பற்றிக் கிளையாமென்பது. அவற்றுள் மகரவக ரங்கள் இதழ்பற்றிப்பிறத்தலிற் கிளையாயின. இவ்வாறே இ ஈ எ ஏ என்பனவும் யகரமும் மிடற்றுவளியாற் பிறத்தலானும் இயல்பொப்பு மையாலுங் கிளையா மென்பது.

ஒற்றும், உயிரும், உயிர்மெய்யும் என மூன்றுவகைபாற் கிளைமைகூறி மெய்ம்மோனை உயிர்மோனை உயிர்மெய்மோனையென வுங் கொள்ளாமோவெனின், அவை 'மெய்பெறுமரபிற் றொடை வகை' (தொல்-செய்-101) அன்மையிற் கொள்ளாமென்பது. அல் லதூஉம் அவையெல்லாங் கொள்ளிற் செந்தொடை இழவுபடுமென மறுக்க. எதுகைக்கும் இம்மோனைக்குமாறு கண்டுகொள்க.

இங்ஙனம் எண்ணிக் கிளையெனக்கூறியவற்றுள், ஏற்புழிக்கோட லென்பதனுன் வருக்கமென்பது மோனைக்கும் எதுகைக்கும் உரிமை யான், வருக்கமோனை வருக்கவெதுகையென்று இருவகைப்படும். நெடிலும்அனுவும் மோனைக்குரிய; உயிரும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஆசிடையிடுதலும் மூன்றுமெழுத்தொன்றுதலுமென்ற ஆறும் எதுகைக்கே உரியவாம். இவை பத்துத்தொடையுள்ளும் மோனைமூன்றும் வருமாறு:

"வயங்கு கதிர்கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி" (அகம்-24.)

என்பது வகரவருக்கம் முதற்கண்வந்தமையின் வருக்கமோனையா யிற்று.

"கலக்கொண்டன கள்ளென்கோ
காழ்க்கொத்தன சூட்டென்கோ."

என்பதும் அது. இவை ஒருமெய்யின் வருக்கமாகலான் வருக்க மெனப்பட்டன.

அஃதேல், உயிர்வருக்கமும் வருக்கமெனப் படாதோவெனின், அங்ஙனங்கொள்ளின் நெடிலும் அளவும் விரவும் வருக்கமும் வருக்க மெனப்படுமென மறுக்க. அல்லதூஉம் நெடிலுங் குறிலும் உளர்ந்த மெய்யிரண்டு இடைந்தவழித் தொடையாகல் வேண்டுமென்றே வெண் பது. என்றூர்க்கு, முதற்கண் உயிர்வந்ததனேபே இன்னதொடை என்றுமோவெனின், அவை அளவாய்வருவன வழிமோனையெனவும் அல்லாக்காற் செந்தொடையெனவுங் கூறுவெனென்பது. இஃது, ஓர் அடிக்கண்வரினும் ஒக்குமென்ப துய்த்துணர்க.

"மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி உரும்பின் பைங்காற் பித்திகத்து"

(பத்து-நெடுநல்-39-40.)

என்றவழிச் செந்தொடையாவதன்றி மோனைத்தொடைப்பா டின் றென்பது. இவ்வாறே குறிலும் நெடிலும் எதுகையாகாமையின் அவையும் வேண்டியதிலரென்பது.

"வெள்ளி வெள்ளி விளங்கிறைப் பணைத்தோண்
மெத்தென் சாயல் முத்துறழ் முறுவல்."

(பத்து-நெடுநல்-36-37.)

என்பது வழிமோனை.

"ஒங்குதிரை வியன்பரப்பி
னெலிமுந்நீர் யரம்பாக." (பத்து-மதுரை-1-2.)

என்பதும் அது. இவற்றை அளுமோனையெனினும் அமையும். அவை விகற்பங்கொள்ளாமோவெனிற் கொள்ளாம்.

"முன்னேத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் பெயர-
வன்னைக் குரைப்ப னறிவாய் கடலேயென் றலறிப் பேரும்"

என்னும் அறுசீரடியினும் எழுசீரடியினும் எண்சீரடியினும் *நாற்சீரடியினும் ஒப்பவருதலானும், எண்சீரடியுள் ஒருநான்குசீர் அற்றவழி ஒழிந்தநான்கனுண் முதற்கண்ணும் இடைக்கண்ணும் இனம் வந்தால் அவை வந்தவழியெல்லாந் தொடையாகாமையானுமென்பது. பிறவும் அன்ன. எதுகைக்குப்போல இனமோனைகொள்ளா தனிமெய், மொழிக்கு முதலாகாமையினென்பது.

"கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே." (குறந்-216.)

பது வருக்கவெதுகை.

"அத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி மோடி" (அகம்-7.)

என்பது வல்லினவெதுகை.

"நம்மில் புலம்பினு முள்ளுதொறு நலியுங்
தண்வர லசைஇய பண்பில் வாடை." (அகம்-58.)

என்பது மெல்லினவெதுகை.

"மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந."

என்பது இடையினவெதுகை.

"புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியுஞ்
சொல்லிய வல்ல வேனைய வெல்லாம்."
(தொல்-எழுத்-உருபியல்-30.)

என்பதும் அது.

"இமிழ்கண் முழவி னின்சீர் வாமனைப்
பயிரவன் போலவந் திசைப்பனவுந் தவிரான்"

---

* 'நாற்சீரடியினும்' என்பது எட்டுப்பிரதிகளில் இல்லை.

என்பது உயிரெதுகை. இஃது ஒற்றார்ந்த உயிர் முன்னினமையின் உயிரெதுகையாயிற்று.

"நெய்த்தோர் மீமிசை னினைத்திற் பரிக்கு
மத்த நண்ணிய வன்குடிச் சீறூர்"

என்பது யகரவொற்றிடையிட்டுவந்த ஆசிடையெதுகை. பிற ஒற்றிடையிடினும் 'மெய்பெறுமரபிற்றொடை' (தொல்-செய்-101) யாவன கொள்க.

"உவவுமதி யுருவி னேங்கல் வெண்குடை
னிலவுக்கடல் வரைப்பின் மண்ணக னிழற்ற" (புறம்-3.)

என்பது மூன்றுமெழுத்தொன்றெதுகை.

இவையும் மேற்கூறப்பட்டனவும் இனிக்கூறுவனவுமெல்லாம் நான்குபாவினும் வருமாறு கண்டுகொள்க.

இனி, மூன்றுபாவினும் அறுநூற்றிருபத்தைந்தடியோடும் இவற்றைப் பெருக்கி உணருங்கால் இவை பத்துத்தொடையானும் பெற்ற தொடை மூவாயிரத்தெண்ணூற்றறுபத்தேழு. இவற்றுள், வருக்க மோனையும், வழியோனையும், உயிரெதுகையுமென இவை மூன்றும் நான்தையென்னுஞ் சீர்க்கு எலாமையின் அச்சீர் முதற்பா இரண்டினும் உறழ்ந்த அடி இருபதும் ஒழித்து, ஒழிந்தசீர் எல்லாவற்றினுமுறழ்ந்த அடி அறுநூற்றைந்தனுள் ஐம்பத்தாறினின் கழைய ஒரோவொன்றற்குப் பெற்றதொடை ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன்பதாம்.

இவ்விலக் கணமெல்லாம் இனிக் கூறும் மூவினத்திற்கும் ஒக்கும்.

அவற்றை அகவற் றொடை இருநூற்றெழுபத்து மூன்றெனவும், வெண்டொடை நூற்றைம்பத்தாறெனவும், கலியிற் கனிவான இன்மையின் அவை நூற்றிருபஃதெனவும் பகுத்துக் காணப்படும். இம்மூன்று தொடையும், முறை ஐந்துந் தொகுப்பப் பெற்ற தொடை காலாயிரத்து மூன்நூற்றுத் தொண்ணூற்றிரண்டு (4392). இவை பிற அடிக்கண் வருங்கால் அவ்வளையறையாற் பயிலாவென உணர்க. பிறவும் அன்ன.

"வழிவருக்க மோனை யுயிர்முரணைந் தெட்டு
மொழிகின்ற தூக்கை மொழிய வழுவில
மைம்பதின்மே லாறகற்ற வைஞ்ஞூற்று நாற்பதின்மே
லொன்பதென் றோதப் படும்"

எனவும்,

"இருநூற் றெழுபத்து மூன்றகவல் வெள்ளைக்
கொருநூறறைம் பத்தா றுரிய வொருநூற்
றிருபதாந் துள்ளற் கெனல்"

எனவும்,

"நாலா யிரத்துமூ நூற்றுத்தொண் ணூற்றிரண்டி
லீரிடத்து நவிற்று"

எனவும்,

"பதின்மூன்று பாற்றொடை யேழா யிரத்தோ
டிருநூற் றிருபத் திரண்டு"

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

இனி, முன்றுமெழுத்தொன்றெதுகைக்கு வண்டு, மின்னு, தூக்கை, சேற்றுக்கால், நீடுகொடி என்னும் ஐந்துசீராலும் உறழ்ந்த அடி அறு பஃதொழித்து, ஒழிந்தசீர் இருபத்திரண்டாலும் பெற்ற அடி இரு நூற்றறுபத்துநான்கலுள்ளும், ஒன்பது நேர்முதற்சீராற் பதினெட்டும், பதின்மூன்று நிரைமுதற்சீராற் பதின்மூன்றுமாக மூப்பத்தொரு சிலம் கினைந்து கொள்ளப்பெற்ற ஆசிரியத்தொடை இருநூற்று மூப்பத்து மூன்று.

இனி, வெண்பாவினுள் நீடுகொடி வாராமையின், வண்டு, மின்னு, தூக்கை, சேற்றுக்கால் என்னும் நான்குசீரும் உறழ்ந்த அடி மூப்பத், தொன்றொழித்து, ஒழிந்தசீர் இருபத்துமூன்றாலும் பெற்ற அடி நூற் றைம்பதாகலின், அவற்றுள்ளும் நேர்முதற்சீர் பத்தும், வரகு, வலிய து, கடியாறு, விறகுநீ என்னும் நான்கும் ஆகப் பதினான்கு சீராலும், நிலம் கினைந்து பெற்ற வெண்டொடை நூற்று மூப்பத்

இவ்வாற்றான் இரண்டுபாவிற்குங் கனியுளிலம் நாற்பத்தைந்து.

கலிப்பாவினுள்ளுஞ் சேற்றுக்கால் நீடுகொடி என்னும் இரண்டும், மூன்றுமெழுத்தொன்றுதுகைக்கு ஏலாமையின், ஒழிந்த சீர் இருபத்திரண்டனையும் பெற்ற தொடை நூற்றிருபதாம்.

இவ்வாற்றான் இவை மூன்றுபாவின் தொடையுந் தொகுப்ப நானூற்றெழுபத்தொன்பதாம் (479). இம் மூன்றுமெழுத்து ஒன்றுங் கால் இரண்டாமெழுத்து ஒன்றுது வரல்வேண்டும். அல்லாக்கால் தளையாகாதுதுகையாமாகலினென்பது.

"வண்டுமின்னி ரண்டுநுந்தை சேற்றுக்கா னீடுகொடி
யென்றிரண்டு மூன்று மெழுத்திலையா னின்ற
வறுபத்தேழ் சீரா னடித்தொடை நானூற்
றெழுபத்தொன் பானு மியற்று."

எனவும்,

"வந்த பதினொன்கு மேழா யிரத்தெழுநூற்
றொன்றென் றுரைக்கப் படும்"

எனவும்,

"சேர்முத லொன்பா னிரட்டி னிரைபதின்மூன்
றுசிரியப் பாமுப்பத் தொன்றகற்றி னேர்முதற்சீர்
பத்தொடு நான்குவெண் பாவகற்ற வாங்கதற்
கற்றன நாற்பத்தைந் தாம்."

எனவும்,

"இருநூற்று முப்பத்து மூன்றகவல் வெள்ளைக்
கொருநூற்று முப்பத்தா றாகு மொருநூற்
றொருபதாங் துள்ள லொருங்கிவை மூன்று
மெதுகையாற் பெற்றனவா மீண்டு"

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

இனி, வருககவெதுகை ஆசிரியத்துள் ஏழுசீர்க்கும், வெண்பாவுள் ஐந்து சீர்க்கும், கலிப்பாவினுள் நான்குசீர்க்கும் ஏலாது. [illegible] வண்டு, மின்னு, போதது, மேலுசீர், நீடுகொடி, நானூத்தின், [illegible] என இவையேழும் ஆசிரியத்துள் ஆகாதன. இவற்றுள் நீடுகொடி

நாலுதசை இரண்டும் ஒழித்து ஒழிந்தசீர் ஐந்தும் வெண்பாவிற் கேலா. அவற்றுள்ளும் வண்டு, மின்னு, நுங்தை ஒழித்து ஒழிந்த நான்குஞ் கலிப்பாவிற்காகா வெனவுணர்க. இனி, ஆசிரியத்துள் நேர்முதற்சீர் எழும், பதின்மூன்று நிரைமுதற்சீரும் உறழ்ந்த அடி இருநூற்று நாற்பதாம். இவற்றுட் கனியும் நிலம் இருபத்தேழாம். ஆகவே அகவற்றொடை இருநூற்றொருபத்து மூன்றாயின. வெண்பாவின் ஐந்துசீரானும் மூப்பத்தெட்டடியொழித்து, ஒழிந்த அடி நூற்றுநாற்பத்து மூன்றானும் நேர்முதற்சீரொன்பதும், நிரைமுதற்சீர் நான்குமெனப் பதின்மூன்றானுங் கனியும் நிலம் பதின்மூன்றகற்றிப் பெற்ற வெண்டொடை நூற்றுமூப்பதாம். கலிப்பாவிற் கனிந்த சீர் நான்கொழித்து ஒழிந்த சீரான் அடி நூறெனப்படும். அம்மூன்றுந் தொகுப்ப வருக்கவெதுகை (443) நாலாற்றுநாற்பத்து மூன்றாயின.

> "நேர்பிரண்டு நேர்பு முதலுன்கு நுங்தையுமென்
> றாகாச்சி ரேழைந்து நான்காக வாகாத
> நாற்பதும்போய் நாலாற்று நாற்பத்து மூன்றாகித்
> தோற்றும் வருக்கத் தொடை"

எனவும்,

> "முறையா னிருநூற் றொருபத்து மூன்றே
> டொருநூற்று மூப்பதுநா றொட்டு"

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

இனி, நெடின்மோனையும், மெல்லினவெதுகையும், இடையினவெதுகையும், ஆசிடையெதுகையுமென நான்கற்கும் நிரைமுதற்சீரும்நான்தையுமெனப் பதினாற்சீர் எலாமையின், ஒழிந்த நோனிச்சீர்பதின்மூன்றனுன் ஆசிரியத்து ஒரோசீர்க்கு இரண்டுநிலங் கனிந்து பெற்றதொடை நூற்றுமூப்பதாம். வெண்பாவினுள் நேர்முதற்சீர் பதின்மூன்றும் உறழ்ந்த அடி தொண்ணூற்றுமூன்றனுன் ஒருசீர்க்கு ஒரு நிலமாகப் பதின்மூன்று நிலங்கனிந்து பெற்ற வெண்டொடை என்பதாம். கலிப்பாவிற்கு நேர்முதற்சீர் பன்னிரண்டனுற் பெற்ற தொடை அதுபதினாம். ஆக மூன்றுபாவிற்குந் தொடை ஒரோ

வொன்றற்கு இருநூற்றெழுபதாக நான்கனையும் பெற்ற தொடை (1080) ஆயிரத்தெண்பதாம்.

"இடையின மெல்லின மாசெதுகை யேனை
நெடின்மோனை நான்காகி னின்ற தொடைதா
மிருநூற் றெழுபஃ தொரொவொன்றற் கெய்து
நிரைமுதலு நுந்தையு நீத்து"

எனவும்,

"பதின்மூன் றிரட்டித் தகவலினே ராதி .*
பதின்மூன்றே வெண்பாவிற் பாற்றி யவைதொகுப்ப
மூவகை மூன்று தலையிட்ட மூப்பஃ தது
நால்வகையா னிற்க நவிற்று"

எனவும்,

"மூவகைப் பாவின் மொழிந்த தொடைத்தொகை
யாயிரத்து மேலெண்ப தாகுமாம் பாவினை
*மூன்னூற்று மூப்பதா மெண்பதாம் வெண்பாக்
கடைய கலிக்கறுபஃ தாம்"

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

இனி, வல்லினவெதுகைக்கு நிரைமுதற்சீர் பதின்மூன்றும், மின்னு, நுந்தை, மேவுசீர், நாணுத்தளையென நான்குமாகப் பதினேழு சீர் தொடைகொள்ளாமையின், ஒழிந்த நேராதிச்சீர் பத்தனுள் கனவன கனைந்து பெற்ற அகவற்றொடை நூறுகவும்; வெண்பாவிற்கு நாணுத்தளை வாராமையின் அஃதொழிக்கல் வேண்டுவதன்றாயிற்று கவே மின்னு, நுந்தை, மேவுசீர் என்னும் மூன்றொழித்து, ஒழிந்த நேராதிச்சீர் பதின்மூன்றனுள் கனவன கனைந்து கொண்ட வெண்டொடை அறுபத்தெட்டாகவும்; கலிப்பாவின் நேர்முதற்சீர் பன்னிரண்டனுள் மேவுசீர் நாணுத்தளை ஒழித்து ஒழிந்த பத்தனுளும் கலித்தொடையைம்பதாகவும் மூன்றுபாவினுளும் வல்லினவெதுகை (218) இருநூற்றொருபத்தெட்டாமென்க.

* 'மூன்நூற்று' என்பது மூன் அச்சுப்பிரதிப்பாடம்.

மூற்றுகர நேர்புநேர் முன்னுகுஞ் சீரிரண்டுங்
குற்றுகரத் தேமாவுங் கொள்ளாது மற்றை
நிரைமுதலுங் கூட்டாது நேர்முதலான் வல்லொற்
றெதுகையிரு நூற்றொருபத் தெட்டு"

எனவும்,

"இருப தகவல்பதி னென்றுவெள்ளைக் காகா
னிலமும்பத் தொன்றுக நீக்கி—வலியெதுகைக்
கிரைம்ப தாமகவல் வெள்ளைக் கறுபத்தெட்
டோரைம் பதுதுள்ளற் கொட்டு"

எனவும் இவற்றை விரித்துரைக்க.

இவையெல்லாம் *கிழமைபற்றி வந்தமையின் 'ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய' என்றுனென்பது. இப்பத்துத் தொடையாலும் முரணேந்தாலும் பெற்றதொடை (6612) ஆறுயிரத்தறுநூற் றொருபத்திரண்டெனப்படும். ஆறுயிரத்தறுநூற்றொருபத்திரண்டும் பெறும், †கிளை முரண் ஐந்தும். மேற்கூறிய மோனை எதுகையிரண்டோடும் இனிக்கூறும் முரணேந்தும் இயைபு இரண்டும் உடன்கூட்டித் தொடைகூறினும், இவற்றோடு இயைந்தமையினென்பது. இத் தொகை யெல்லாந்தொகுப்ப ‡ (9442) ஒன்பதினாயிரத்து நானூற்று நாற்பத்திரண்டாயினவாறு கண்டுகொள்க.

"மோனை யெதுகை முரணியைபு நான்கற்கு
மானவை யொன்பதி னாயிரத்து நானூற்று
நாற்பத் திரண்டாகு மோரடியே யாயினுங்
கூட்டத்துக் கொண்ட குழாம்." (கசு)

407. மொழியினும் பொருளினும் முரணுதன் [முரணே.

இது, முறையானே முரண் தொடை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : சொல்லும் பொருளும் பகைத்தல் காரணமாக முரண்டொடைவரும், என்றவாறு.

* 'கிளைமை' என்பதும் பாடம். † 'கிளையும்' எனக்கொள்க
‡ இச்சூத்திரவுரையிற் கூறப்பட்ட 6612 தொடையும், 'அடிதொறுமன்ற சூத்திரவுரையிற் கூறப்பட்ட 2830 தொடையுங்கூட்டித்தொகுப்ப

அவை ஐவகைய; சொல்லுஞ் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலுஞ், சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணுதலுஞ், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலுஞ், சொல்லும் பொருளுஞ் சொல்லொடும் பொருளொடும் முரணுதலும் என.

"செவ்வி வாய்த்த செம்பாட் டூரத்து
வெள்ளை வெண்மதி மெய்புலத் தொழிய"

என்புழிச செவ்வி வெள்ளையென்பன பொருளின்றிச சொல்லுஞ் சொல்லும முரணியன. வெள்ளையென்பது சாதிப்பெயர்.

"செந்தோடைப் பகழி வாங்கிச னெஞ்சிறந்து
கருங்கைக் கானவன் களிற்றுயிறத் தழுத்தலின்"

என்பதும் அது.

"நீரோ ரன்ன சாயற்
நீரோ ரன்னவென் னுரனவித் தன்றே." (குறுந்-95.)

என்பது பொருளும் பொருளும் முரணியது.

"தண்ணிய லற்ற தயங்கறற் கானத்து
வெந்தீர்ப் பொருணசைஇ முன்னிச சென்றோர்"

ஏன்பது சொல்லும் பொருளுஞ சொல்லொடு முரணியது.

"தீதீர் நஞ்சந் திருமிடற் றொடுக்கிய
வுவர் யன்ன வுடைபெருஞ் செல்வர்"

எனபது சொல்லும் பொருளும பொருளொடு முரணியது. இதனைச் சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணியதுபோலப் பொய்ம் பொருளோடு முரணுதல் வேண்டுமென்று கொள்ளற்க.

"செவ்வேர் சேஎய் திருமண மறுத்த
கருவிற் கானவன் வரிலவ ரிலரே, யதுபோல"

என்புழிச் சொல்லும் பொருளுஞ் சொல்லொடும் பொருளொடும் மூரணியது. பிறவும் அன்ன.

இவை ஐந்தொடையுந் தனிவகை யடிக்கண் வருங்கால் இன்னவாறு வருமென்பது மேற்கூறியவாற்றானே கொள்ளப்படும். இவை விரித்துநோக்கப் பலவாமாறும் விரித்துறழ்ந்து கண்டு கொள்க. (கூ)

408. இறுவா யொன்ற லியையின் யாப்பே.

இது, முறையானே இயைபிரண்டும் உணர்த்துகின்றது.

இதன் பொருள் : இரண்டடியும் ஈறொத்தல் இயைபுத்தொடைக் லக்கணம், என்றவாறு.

வானாதை 'இறுவாயொன்றல்' என்றலையினும் ஆண்டு ஒன்று வது பொருளியைபின்றி எழுத்துஞ்சொல்லும் ஒன்றியடையின் இயைபாமென்பது. எனவே, எழுத்தடியையும் சொல்லடியையும் என இத்தொடை இரண்டாயின.

"அவரோ வாரார் கார்வந் தன்றே
கொடிக்கு முல்லையும் கடிக்கரும் பின்றே."

என்பது எழுத்தடியையு.

409. அளபெழி னவையே யளபெடைத் தொடை யே.

இது, முறையே அளபெடைத்தொடை உணர்த்துதல்நுதலிற்று.

இதன் பொருள்: அடிமுதற்கண் எழுத்துக்கள் அளபெழுந்தன வாயின், அவை அளபெடைத்தொடை எனப்படும், என்றவாறு.

'அவை' யென்றது உயிரளபெடையும் ஒற்றளபெடையுமென் றிரண்டென்பது கோடற்கு.

"பாஅ லஞசெவிப் பணைத்தாண் மானிரை
மாஅல் யானையொடு மறவா மயங்கி" (கலி-5.

என்பது உயிரளபெடை.

"கஃஃஃ றென்னுங கல்லதர்க கானிடைச
சுஃஃஃ றென்னுந் தண்டோட்டுப பெண்ணை"

என்பது ஒற்றளபெடை.

இவை கட்டளையடியொடு தொகுக்குங்கால் உயிரளபெடை மூந்நாற்றுமுப்பத்துமூன்றும். அவை மூன்றுபாவினும் வருங்கால் உரியசைசசீர் நான்கும், உரிமுதற்சீர் எட்டும், நிரையசையுமெனப் பதின்மூன்றும் ஒழித்து, ஒழிந்தவற்றுள் வரும்.

அவை ஆசிரியத்துள் நேர்முதற்சீரேழும், நிரைமுதற்சீரேழும்; வெண்பாவினுள் நேர்முதற்சீ ரொன்பதும், நிரைமுதற்சீரொன்பதும்; கலிப்பாவினுள்ளும் உரிமுதற்சீ ரெட்டொழித்து, நேர்முதற்சீ ரெட்டும், நிரைமுதற்சீரெட்டும் எனப் பதினாறுமாக, நாற்பத்தெட்டுச்சீர்க் கண்ணும் வருமென்பது. அங்ஙனம் வருங்கால் ஆசிரியத்து நூற்று நாற்பத்தேழும், வெண்பாவினுள் நூற்றுமூன்றும், கலிப்பாவினுள் எண் பதுமாகி மூந்நாற்று முப்பத்துமூன்றும். அவை ஆசிரியத்துள் இரு பத்தொன்றும், வெண்பாவினுட் பதினெண்ணுமாக முப்பத்திரண்டி னிலக் கணந்து பெறப்பட்டன.

"உரியசைச்சீர் நான்கு முரிமுதற்சீ ரெட்டு
மளபெடைக்கு நுந்தையோ டாக—வொருநாற்பத்
தெண்சீரான் மூந்நூற்று முப்பத்து மூன்றென்ப
தொண்சீர் பெருமுறையா னுய்த்து"

எனவும்,

"நேரேழ் நிரையேழ் முதற்சீர் முதற்பாவிற்
கோரேழான் மூவேழ் நிலமிலவா - னேராதி
யொன்ப திரண்டு நிரையாதி வெண்பாவிற்
கென்றிவை முப்பத் திரண்டு."

எனவும்,

"நூலெருடு நாற்பத்தே ழாமகவ னூற்றின்மே
லாறு தொடைவெள்ளைக் காகுமா லேறுதள்ளற்
கெண்பதா மீரேழ் ரொன்பஃ தெண்ணிரண்
டென்றுமாம் பாமூன் றிடத்து."

எனவும் இவற்றை விரித்துக்கொள்க.

ஈரொற்றளபெடை கலிப்பாவினுள் வாராது; என்னை? அது துள்ளலோசை தள்ளிநிற்றலின். அங்ஙனமாதல் 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி' (தொல்-செய்-11) அறிக.

இனி, ஆசிரியத்துள் தேமா புளிமாவென்னும் இரண்டும், வெண்பாவினுள் தேமா புளிமா மாசெல்வாய் புலிசெல்வாயென்னும் நான்குமாகச் சீராறன்கண்ணும் பெற்றதொடை நாற்பத்தைந்து. இவை ஆசிரியத்திருபத்தொன்றும், வெண்பாவினு ளிருபத்துநான்கு மெனப்படும். இவை ஆசிரியத்தண்மூன்றும் வெண்பாவினுள் இரண்டுமாக ஐந்திலம் கலந்து பெறப்பட்டன. கலியுரிலம் அதனிற் சுருங்குவதில்லை.

"தேமா புளிமாவே மாபுலிசெல் வாயென்ரு
லைந்தைந்தாற் றளபாகும் - வேறு
தனித்தொலி யொன்ரு கலியுரில மூன்ரு
முதற்பாவின் வெள்ளைக் கிரண்டு."

எனவும்,

"எழுமூன்று மாசிரியத் தெண்மூன்றும் வெள்ளைக்
கழியாத வீரொற் றளபு."

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க. ஆக அளபெடைத் தொடை இரண்டுங் கூட்டிப் பெற்றதொடை (378) முந்நூற்றெழுபத் தெட்டு. ஆக முதற்றொடை இருபத்திரண்டனானும் பெற்ற தொடை (9820) ஒன்பதினாயிரத்தெண்ணூற்றிருபஃது.

"ஒன்பதி னாயிரத் தெண்ணூற் றிருபஃதா
மந்தமில் காட்சி *யளபெடைத்தே
வந்த விருபத்தி ரண்டு." (௯௭).

410. ஒருசீ ரிடையிட் டெதுகை யாயிற்
பொழிப்பென †மொழிப புலவ ராறே ‡

இது பொழிப்பெதுகையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஒருசீரிடையிட்டு எதுகையாயிற் பொழிப்பாம், என்றவாறு.

இடையிடினெனவே முதற்சீர் நிற்பதாயிற்று. எதுகையாயினெனவே மூன்றாஞ்சீரோடு தொடுப்பதாயிற்று. இவற்றுள் ஆசிரியம் களைவன களையப்பெற்ற தொடை நூற்றுநாற்பதெனவும், வெண்பா களைவன களையப்பெற்றதொடை நூற்றுமூன்றெனவுங் கொள்க.

"நிரைமுதற்சீர் பன்னிரண்டு கீழ்நிலத்துள் ஒன்ற
வருகலி முந்நூற்றெட் டாம்"

எனவும்,

"மேவுசீர் வெள்ளைக்கொன் றேற்கிளை முற்றே
லோரிரு நூற்றுமுப்பத் தெட்டாகு மாக
விருநூறு நானூறொ டேழ்பத்தைந் தாக
வருமுற்று மொன்றாம் வகை"

எனவும் இவை முற்றெதுகைக்கு உரைச்சூத்திரம்.

---

* 'அளபெடைக்கே' என்பதும் பாடம். † 'மொழிதல்' என்பதும்பாடம்.
‡ இச்சூத்திரத்தின் உரை சிதைவுபட்டிருப்பதாகத் தோற்றுகிறது.

இன்னும் 'புலவராறே' என்று மிகுத்துச் சொல்லியவுதனானே அமைவன வேறுளவெனத் தழீஇப் புகுந்தவற்றுள் ஈண்டுக் கூறாத அந்தாதித்தொடையும், மற்றைவிகற்பத்தொடையாகிய ஒரூஉத் தொடையுங் கூறிக்கொள்க. (கஅ)

411. இருசீ ரிடையிடி னொருஉவென மொழிப.

இது, நிறுத்தமுறையானே ஒருஉத்தொடை உணர்த்துகின்றது.

இதன் பொருள்: நாற்சீருள்ளும் இடையிருசீரொழித்து, ஒழிந்த முதற்சீரும் நான்காஞ்சீரும் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுப்பின் அதனை ஒரூஉவென்ப, என்றவாறு.

அதிகாரத்து ஒரூஉவெதுகையெனப்பட்டது. அதுவும் பொழிப்புப்போல வந்த எழுத்தே வருதலும், கிளையெழுத்து வந்து கிளையொரூஉ என்னப்பட்டு இரண்டாதலுமுடைத்து.

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை" (ஐங்குறு)

என்பது ஒரூஉவெதுகைத்தொடை.

"சூரலங் கடுவழி யெடுப்ப வாருற்று." (அகம்-1)

என்பது கிளையொரூஉவெதுகை.

இவை இரண்டுதொடையுங் கட்டளையடிக்கண் வருங்கால் ஒரூஉவெதுகை ஐஞ்ஞூறறிருபத்தெட்டாம்.

அவை ஆசிரியத்திற்கு உரியசீர் இருபத்தேழனுள் நேர்முதற்சீர் பதினான்கும் ஒரோவென்று உறழ்ந்தஅடி பன்னிரண்டனுட் சுருங்கிய நிலந்தொறும் ஒன்பதொன்பதாக நூற்றிருபத்தாறும், நிரைமுதற்சீர் பதின்மூன்றும் பெருகியநிலத்து ஒரோவொன்று பத்தாக நூற்றுமுப்பஃதுமாக அகவற்றொடை இருநூற்றைம்பத்தாறு; அவற்றுண் மின்னு, மேவுசீர், நாணுத்தளை என்னும் மூன்றுசீரானும் மூன்றுநிலம் முதனிலத்தகற்றிப் பெற்றதொடை இருநூற்றைம்பத்துமூன்று. வெண்டொடை இருபத்தேழுசீருறழ்ந்த அடி அனைத்தினும் பெற்ற

தொடைநிலை நூற்றெண்பத்தொன்று; இவற்றுண் மின்னு, மேவுசீர் என்னும் இரண்டனானும் முதனிலத்து இரண்டுநிலங்களைந்து பெற்றதொடை நூற்றெழுபத்தொன்பதாம். இனிக், கலிப்பாவினுள் நேர்முதற்சீர் பன்னிரண்டாகப் பெருகியநிலத்து ஒரோவொன்று களையப்பெற்றதொடை நாற்பத்தெட்டும், நிரைமுதற்சீர் பன்னிரண்டும், சுருங்கிய நிலத்து ஒரோவொன்று களையப் பெற்றதொடை நாற்பத்தெட்டுமாகக் கலிப்பாவிற்குரியதொடை தொண்ணூற்றாறும். ஆக மூன்றுபாவினும் பெற்ற ஒரூஉத்தொடை ஐஞ்ஞூற்றிருபத்தெட்டாம்.

கிளையொரூஉவும் இவ்வாறே ஐஞ்ஞூற்றிருபத்தெட்டாகவும், அவற்றுமேல் மின்னு, மேவுசீரென்னும் இரண்டும் வெண்பாவினுள் உறழ்ந்த முதனிலையிரண்டுங் களையாது கொள்ளக் கிளையொரூஉத் தொடை ஐஞ்ஞூற்றுமுப்பதாம். ஆக வொரூஉத்தொடை இரண்டனானும் (1058) ஆயிரத்தைம்பத்தெட்டாம்.

"நேராதி யாதி நிலத்தொன்ப தொன்பதா
மீரைந்தா *மாசிரியத் தீற்று நிரையாதி
யாக விருநூற்றைம் பத்துமூன் றாமாதி
நேர்புகா மூன்றனையு நீத்து.",

எனவும்,

"மேவுசீர் மின்னுக்குண் முன்னைநிலத் தோரோவொன்
றாகா வொரூஉவெள்ளைக் காதலா - னாவன
நூற்றெழுபத் தொன்பதா நோக்கு"

எனவும்,

"முன்பினின்ற நேரா நிரையாதி துள்ளற்கோ
ரொன்றொழியத் தொண்ணூற்றா றாகுங் கிளைவெள்ளைக்
கொன்றா யிரண்டா னொரூஉவிரண்டு மாயிரத்
தைம்பான்மே லெட்டா மவை."

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

---

*'ஆசிரியத் திற்று' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

மேலைப் பொழிப்பிரண்டும் முற்றிரண்டும் *'இவையிரண்டுமென விகற்பத்தொடை யுறனுலும் பெற்ற தொடை† இரண்டாயிரத்தைஞ் ஞூற்றிருபத்தொன்று.(2521).இவை ஞறுதொடையும்ஒரடிக்கண்ணே வருதலின் தனே வழுவப்பட்டனவென்று கொளையும் நிலமிலவென்பது.

இன்னும் புலவராறென்றதனுல், தொடையந்தாதியும் விட்டிசை யும் ஒரோவொன்று இரண்டாகி அசையந்தாதியுஞ் சீரந்தாதியும் விட்டி சைத்தொடையும் குறிப்புவிட்டிசையுமென நான்காம்.

ஓரடியுள் இறுதிசீருள் ஈற்றசையும்‡ மற்றையடியின் முதற் சீரின் முதலசையும் ஒன்றத் தொடுப்பது §அசையந்தாதி. அவை தொடுக்குங்காற் கட்டளையடிக்கண் உரியசைச்சீரினே அசையெனக் கொள்ளற்க; இவை பிறசீர்ப்பாற்படுத்துத் தனேகோடலின். அடியிறு திக்கட் கழியாறு மழகளிறென வந்தவழி, யாறு களிறு என்னும் இரண்டு உரியசையும் நிரையசையாக இயற்றப்பட்டன. ஆயினும் இயற்கை நிரையசையோடு தொடுக்கப்படா; இரண்டசையும் ¶ஒரு சொல்லாயினன்றி அந்தாதியாகாமையி னென்பது.

இனி, இறுதிச்சீர் முதற்சீரொடு சேரிற் சீரந்தாதியாம்.

---

*'இவையிரண்டும்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

†இத்தொகை தவருகக் காணப்படுகிறது. 2519 என்றிருத்தல் வேண்டும்.

‡'ஈற்றசையும் விட்டிசையும்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம். இது பொருட்பொருத்தமின்மையால் கண்டுகொள்க.

§'இசையந்தாதி' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். முன் அசையந்தாதி, சீரந்தாதி, விட்டிசைத்தொடை, குறிப்புவிட்டிசை என வருத்தமுறையே முதற்கண் அசையந்தாதி கூறிப், பின்னர்ச் சீரந்தாதி முதலிய கூறினின்றுராகலின், இசையந்தாதி எனப் பாடங் கொள்ளுதல் தவறுதல் காண்க. அல்லதூஉம் அசையும் அசையும் ஒன்றத்தொடுப்பது 'அசையந்தாதி' யாதலேயன்றி 'இசையந்தாதி' யாமாறில்லை யென்க.

¶'ஒருசொல்லாயினன்றே' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

உதாரணம்:

"குன்றிச் சாரற் குதித்தன கோண்மா
மாவென மதர்த்தன கொடிச்சி வான்கண்"

என்பது அசையந்தாதி.

"தரைபூஞ் சாரற் றழுத்த முல்லை
முல்லை சான்ற கற்பி னல்லோர்."

என்பது சேந்தாதி.

இது* கட்டளையடிக்கண் வருங்கால் அசையந்தாதி மூன்றிற்கு பத்தைந்தாம். (325)

அவை ஆசிரியத்துள் இரண்டு நேர்பசைசசீர்க்கும் ஒரெழுத்துத் †தேமாவிற்கும் எலாமையின் ஒழிந்த நேர்முதற்சீர் பதினென்றும் உறழ்ந்த அடி நூற்றுமுப்பத்திரண்டனுள் ஒருசீர்க்கு (‡முதனிலத் தொன்றும் இறுதி நிலத்தொன்றுமென இவ்விரண்டானும்) முதனில

---

* 'இது' என்றது பொதுவகையால் அந்தாதியைக் குறிக்கும்.

† 'தேமா விறகுதி எலாமையின்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம். 'ஒரெழுத்துத் தேமா' என்றது ஒரெழுத்தாலாகிய நேர்நேரியற்சீர்; அஃதாவது நங்கை. 'ஐவகையடியும்' என்னும் சூத்திரத்தால் ஆசிரியத்துள் வருமெனப்பட்டசீர் இருபத்தேழு. அவற்றுள் நேர்முதற்சீர் பதினென்கும், நிரைமுதற்சீர் பதின்மூன்றுமாதல் சொல்லிக் கண்டுகொள்க. நேர்முதற்சீர் பதினென்களுள், வண்டு மின்று என்னும் நேர்பசைச்சீர் இரண்டும், நங்கை யென்னும் ஒரெழுத்துச்சீர் ஒன்றும் ஆக மூன்றுசீர் எலாவெனவே ஒழிந்த நேர்முதற்சீர் பதினென்றாயின. ஆகவே, நிரைமுதற்சீருட்பட்ட 'விறகுதி'யை எண்ணிக்கொள்ளுதல் எவ்வாற்றானும் பொருத்தமுடைத்தாம்.

‡ இருநிலைக்குட்பட்ட இப்பகுதி எட்டுப்பிரதியில் இல்லை.

மிரண்டும் இறுதி யிலமொன்றுமென மும்மூன்றாக மூப்பத்து மூன் றதற்றி ஒரோசீர்க்கு ஒன்பதொன்பதாகப்பெற்றதொடை தொண்ணூற் றொன்பது. இனி யிரைமுதற்சீருள் *யிரைபசைச்சீரிரண்டும் ஒழித்து ஒழிந்த †பதினெண்டும் உறழ்ந்த அடி நூற்றுமூப்பத்திரண்டனுள் முதனிலத்தொன்றுவன இவ்விரண்டாக இருபத்திரண்டு யிலக்கனைய ஒவ்வொன்று பத்தாகப் பெற்ற தொடை நூற்றிருபதாக ஆசிரியத் துள் அசையந்தாகி இருநூற்றொன்பதாயின.

வெண்பாவினுள் அசையந்தாகி வருமிகால் நேர்பசைச்சீரிரண்டும், ஒரெழுத்துத் தேமாவும், யிரைமுதற்சீர் பதின்மூன்றுமெனப் பதினா றெழுத்து ஒழிந்த நேர்முதற்சீர் பதினெண்றும் உறழ்ந்த அடி எழு பத்தெட்டினுள் ஒரோவோர்சீர்க்கு இரண்டாக முதனிலந்தோறுங் கொள்ளவழி இருபத்திரணடொழித்துப பெற்ற வெண்டொடை ஐம் பத்தாறும்.

கலிப்பாவினுள் யிரைமுதற்சீர் ஒழித்து ஒழிந்த நேர்முதற்சீர் பன்னிரண்டனுள் தொடை அறுபதாம். ஆக மூன்றுபாவிற்கும் அசையந்தாகி மூன்நூற்றிருபத் தைநதாயினவாறு கண்டுகொள்க.

---

* 'யிரையசைச்சீரிரண்டும்' என்பது மூன் அச்சுப்பிரதிப்பாடம். இது பொருந்தாமை கண்டுகொள்க.

† 'பதின்மூன்றும்' என்பது மூன் அசசுப்பிரதிப்பாடம். ஆசிரியத்துள் வருமெனப்பட்ட இருபத்தேழு சீருள் யிரைமுதற்சீர் பதின்மூன்றே. அவற்றுள், வாரு, அரவு என்னும் யிரைபசைச்சீர் இரண்டும் ஒழித்து ஒழிந்தன பதினென்றுதலே யன்றிப் பதின்மூன் றுதலில்லை. அன்றியும், ஒவ்வொரு சீரும் பன்னிரண்டடி உறழுமாத லின், நேர் முதற்சீர் பதினெண்றும் ஒவ்வொன்று பன்னிரண்டடி உறழ்ந்து பெற்ற அடி நூற்று மூப்பத்திரண்டாயவாறுபோல, யிரை முதற்சீர் பதினெண்றும் ஒவ்வொன்று பன்னிரண்டடி உறழ்ந்து பெற்ற அடி நூற்றுமூப்பத்திரண்டாயின; பதின்மூன்று சீர்களுள் ஒன்று நூற்றுமூப்பத்திரண்டின் இருநூறாம். ஆகவே, 'பதின்மூன் றும்' எனப்பாடங்கொள்ளுதல் தவறுதல் காண்க.

"நேர்பசைச்சீர் நுந்தையொழித் தேனைப் பதிலெருமை
நேராதி முன்பினிரண் டொன்றகற்றிச் சீராக
நீக்கிய வாருக நிரைமுதல் பத்தாக
வீக்கிரு *நூற்றொன்ப தென்."

எனவும்,

"நேர்முத லொன்ப திபற்சீ ருரிவெண்சீ
ராகியினி யிவ்விரண் டாங்கொழிப்ப நேர்பொடு
வெண்பாநீ நுந்தை நிரைமுதல் வீழ்த்தசை
யந்தாதி யைம்பத்தா றும்."

எனவும்,

"நேரசை யந்தாதி யன்றிக் கலிக்கியையா
வாகலி னுங்கறுப தாம்."

எனவும்,

"அவ்வகை யந்தாதி மூந்நூற் றிருபத்தைந்
திவ்வகை மூப்பாற் கியற்ற."

எனவும் இவ்வுரைச்சூத்திரங்களான அசையடந்தாதி மூந்நூற்றிரு பத்தைந்தும் ஆயினவாறு அறிந்துகொள்க.

இனிச் சிந்தாதி நூற்றறுபத்துநான்கு. (164)

அவை ஆசிரியத்துவருங்கால் நேர்பசைசசீரிரண்டுந் தேமா விரண்டுமென நான்சனுனுந் தத்தம முதனிலந்தொடங்கி ஒரோ வொன்று அவ்வாருக நாலா றிருபத்துநான்காம். இனி நிரை முதற் சீருள் நிரைபசைசசீ ரிரண்டும் புளிமாவு மென மூன்றெழித்து ஒழிந்த பத்துச்சீரானும் வருங்கால் அவை உறழ்ந்த அடி பன் னிரண்டனுண் முதனிலம் மூன்றும் பெருகிய நிலத்திரண்டுமாக வைத்

* 'நூற்றெருபத தென்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். இது தவறுதல் கண்டுகொள்க.

தது ஒழித்து ஒரோவொன்று எவ்வேழாக எழுபதாம். *ஆக, அகவற்றொடை தொண்ணூற்று நான்காம்.

இனி வெண்பாவினுள் வருங்கால் நேர்பசைச்சீரிரண்டுந் தேமாவிரண்டும் நிரைமுதல் வெண்சீரிரண்டும் நிரைமுதல் நிரையீறுகலிற் கணவிரி எட்டுமாகச் சீர் பதினெண்கும் ஒழித்து ஒழிந்த சீர் பதின்மூன்றனையும் பெற்ற அடி தொண்ணூறாறும். அவற்றுள் வரகும் அரவும் புளிமாவும் என்னும் மூன்றும் பெற்ற அடி பத்தொன்பதாகலின், அவற்றுள் வரகிற்குப் பெருகியலிலத்து மூன்றும், அரவும் புளிமாவுஞ் சுருங்கிய நிலத்தும் பெருகியலிலத்தும் ஒரோவொன்றுக நான்குமாக எழுமொழித்து ஒரோவொன்று நான்காகப்பெற்ற அடி பன்னிரண்டாம். காருருமு, மாஉருவாய் என்னும் இரண்டனையும்பெற்ற அடி பன்னிரண்டனுள் முதனிலத்து மும்மூன்றுக ஆறெழுத்துப் பெற்ற தொடை இருமூன்றும். ப்ராதிரிபேழும் மாசெல்வாயுமென எட்டனையும் பெற்ற அடி ஐம்பத்தொன்பதாகலின் அவற்றுள் ஈரெழுத்துப் பாதிரி மூன்றுஞ் சுருங்கிய நிலத்து ஒரோவொன்றும் பெருகியநிலத்து இவ்விரண்டுமாக மும்மூன்றிருபதும், ஒழிந்த மூவெழுத்துப் பாதிரி நான்கும், மாசெல்வாயுமென ஐந்துஞ் சுருங்கியநிலத்து இவ்விரண்டாகப் பத்துமெனப், பத்தொன்பதுங் கூளந்து பெற்றதொடை நாற்பதாமெனக் கொள்க. ஆகக் கூளயும் நிலம் முப்பத்திரண்டு ஒழித்து ஒழிந்ததொடை வெண்பாவிற்கு ஐம்பத்தெட்டாயின.

இனிக் கலிப்பாவினுள் வெண்சீர் நான்கனையும் பெற்ற அடி இருபஃதாகலின், அவற்றுண் மாசெல்வாய் உறழ்ந்த அடி ஐந்தினும் எறியநிலத்திரண்டும், புளிவருவாய் உறழ்ந்த அடி ஐந்தினுஞ் சுருங்கிய நிலத்திரண்டும், ஒழிந்த மாவருவாய் புளிசெல்வாய்கள் இரண்டும் முன்னும் பின்னும் ஒரோவொன்றுக நான்காகும்; ஆக எட்டுக்கூளய ஒரோவொன்று மும்மூன்றுகப் பெற்றதொடை பன்னிரண்டாம். ஆக மூன்று பாவிற்குஞ் சீரந்தாதி நூற்றறுபத்து நான்காம்.

* பொருட்டொடர்புக்கு இன்றியமையா இச்சொல் மூன் அச்சுப் பிரதியில் இல்லை.

'வண்டொன்று தேமா விரண்டு வலிபதுபன்
னெஞ்ருடச்சீ ரந்தாதிக் கீரேழாம் நோரதி
பத்தும் புளிமா வரகிரண்டும் வெள்ளைக்கா
மொத்த கலிக்குரிச்சீர் நான்கு.''

ாவும்,

''கிரைகிரைபத் தெவ்வேழா மூன்று மிரண்டு
முதனில னீக்கிமூன் ருக வகவலி
னேராதி நான்கு மெழுவாய் கிலந்தொடங்கி
யாருகு மந்தாதிச் சீர்.''

னவும்,

''ஆக வகவற்சீ ரந்தாதி
நால்வகை யாக நவிற்று.''

னவும்,

''வரகு பெருகிலத்து மூன்றகற்றி மற்றை
யரவு புளிமா வரகிரண்டு மாற்றி
முதனிலத்துக் காருருமு மாவருவாய் மும்மூன்
றெனவுரை யந்தாதிக் கீண்டு.''

னவும்,

''ஈரெழுத்துப் பாதிரிமூன் நீரருகு மோரிரண்டாய்
மூவெழுத்துப் பாதிரிக்கு முன்னிரண்டாய் மாசெல்வா
யொன்றற்கு மவ்வா ருழித்துரைப்ப நாற்பஃதாம்
வெண்டொடைச்சீ ரந்தாதி வேறு.''

னவும்,

''விரித்தசீ ரந்தாதி வெண்டொடை பைம்ப
தெனப்படு மெட்டுமே லிட்டு.''

னவும்,

"மாசெல்வா யீற்றும் புலிவருவாய் மற்றிடத்து
மேனே யிரண்டு மிரண்டிடத்து மாக
விரண்டிரண்டு நீக்கிச்சீ ரந்தாதி தள்ளற்
கமைந்த தொடைநான்மூன் றும்."

எனவும்,

"பாத்தோறும் வந்தசீ ரந்தாதி பாற்படுப்ப
நூற்றோ டறுபத்து நான்கு."

எனவும் இவ்வாற்றானே சிரந்தாதியாமா றுரைத்தக் கொள்க.

"அந்தாதி யோரிரண்டு மாகத் தொடைநாலாற்
றெண்பான்மே லொன்பா வெனல்."

இனி, விட்டிசைத்தொடை கூறுங்கால் எழுத்திலுனும் எழுத்திலி ஓசையாலும் விட்டிசைத்தல் இருவகைப்படும்.

"அ உ மறியா வறிவி னிடைமகனே
நொ அலைய னின்னுட்டை நீ."

ன்பதெழுத்தினாலுமியது.

விட்டிசையின் இறுதியடி வல்லொற்றடுப்பின் விட்டிசை வல்லொற்றெதுகை யென்பாரும் உளர். ஆண்டு வல்லொற்றெதுகை யாமாறுகாமையின் அது வேண்டுவதன்று; வேண்டினும் விட்டிசை யெனவே அடங்குமென்பது.

"த என்று தாமிசைப்ப தாயினே தண்ணுமைகேட்
டெ என் றெழுந்தார் டலர்."

என்பது குறிப்புவிட்டிசை.

இவை சட்டளையடிச்சண் வருங்கால் ஒரோவொன்று நூற்றறுபத்து நான்காகி மூன்நூற்றிருபத்தெட்டாம். (328.)

அவை வருங்கால் நேர்பசைச் சீரிரண்டும் ஒரெழுத்துத் தேமாவும் போதுபூவிரண்டும் ஒழித்தொழிந்த தேமாவும் பாதிரியிரண்டும் ஒன்றிக் கலிப்பாவிற்குத் தொடை நாற்பஃதாகவும், இரண்டு விட்டிசையும் தொகுப்பப் பூமருதிரண்டும் நேர்முதல் வெண்சீரிரண்டுமாக ஒன்பதுசீரும் பற்றி விட்டிசைக்குமெனவுங் கொள்க. அவற்றை அகவற் றொடை ஒரோவொன்றெழுபதாகவும், வெண்டொடை ஒரோவொன்றைம்பத்து நான்காகவுங் கலிப்பாவிற்குத் தொடை நாற்பஃதாகவும் இரண்டுவிட்டிசையுந் தொகுப்பத் தொடை முந்நூற்றிருபத் தெட்டினவாறு கண்டுகொள்க. இவை ஆசிரியத்துப் பதினொன்றும் வெண்பாவினுளொன்பதுமாக இருபத்துமூன்று லிலங் களைந்து பெற்றன.

"நேர்பிரண்டு நேர்பு முதலிய சீர்நான்கு
மோரெழுத்துத் தேமாவும் விட்டிசைக் கொன்றுவா
மேனை நிரைமுதற் சீர்களு மிவ்வாறே

எனவும்,

"அகவற்கேழ் நேராதி யொன்பதும்வெண் பாவிற்
குளவென் றுரைக்கப் படும்."

எனவும்,

"வெள்ளோயு ளொன்ப தகவலி னீரேழாய்க்
கொள்ள விருபத்து மூன்றுகுந்—துள்ளலுட்
போரேறு பாதிரி பூமரு தாசெல்வாய்
மாவருவா யெட்டும் வரும்."

எனவும்,

"அகவற் கெழுபதா மைம்பத்து நான்கா
நிகரற்ற வெள்ளைக்குத் துள்ளல்—புகரற்ற
காற்பதாய் விட்டிசை நூற்றறு பத்துநான்
கேற்பதா மோரொன் றெனல்."

எனவும்,

"இருவிட் டிசைமுந்நூற் றீரொருபத் தெட்டா
வருவித்துக் கோடல் வழக்கு."

எனவும் இவற்றைப் பதினெழித்தரைக்க.

"விகற்பமா றந்தாதி விட்டிசைநான் கேற்றி
யிசைத்தவீ ரைந்து தொடையாற் றொடைத்தொகை
மூவா யிரத்தோடு மூந்நூற்று மூப்பத்தா
றுமா றறிந்த தொளல்."

"இருபத் திரண்டு மிவைபத்து மாக
வருவித்த மூப்பத் திரண்டா லொருபத்தின்
மூவா யிரத்தொரு நூற்றைம்பத் தாறைந்நூற்
றோடோரைம் பத்திரண் டேற்று"

என விவை உரைச் சூத்திரம். ஆகத்தொடை மூப்பத்திரண்டனுள் பெற்றன பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டு. (13,708)

412. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற் சொல்லியற் புலவாது செந்தொடை யென்ப.

இது, மேற் செந்தொடையாமெனக் கூறியதுணர்த்துகின்றது; எய்தாததெய்துவித்ததுமாம்.

இதன் பொருள்: மேற்கூறப்பட்ட தொடை எல்லாவற்றோடும் ஒன்றாது வரின் அதனை இயற்கைச்சொல்லாற் செய்யுள் செய்யும் புலவரது செந்தொடையென்று சொல்லுப ஆசிரியர், என்றவாறு.

எனவே, விகாரப்பட்டச் செய்யுள் செய்யுஞ் செந்தொடை இன்மை தென்றுணரும். அது,

"இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீலம்
*புலாஅல் மறுகிற் சிறுகுடிப் பாக்கத்
தினமீன் வேட்டுவர் ஞாழலொடு மலையு
மெல்லம் புலம்ப நெகிழ்ந்தன தோளே." (அகம்-269)

---

* 'புலாஅறு மறுகிற் சிறுகுடிப் பாக்கத்தின் மீன்வேட்டுவர்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

எனவும்,

"செயிரறு முகந்துரை பிதிரப் படுதிரைப்
பராரைப் புன்னை வாங்குசினை தேம்ப"

எனவும் வரும்.

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

என்பதும் அது.

இயலினென்றதனுன் இரண்டடியால் தொடை பெற்று நின்ற இரண்டடி யெதுகையாகியவை தம்முள் தொடுக்குங்காற் செவ்வன் தொடுப்பினும் அதனைச் செந்தொடை யென்னுது இரண்டடி யெதுகையென்றும், இனி ஒரடி இடையிட்டுத் தொடுத்தவழியுந் தொடர்ந்த அடி இரண்டுஞ் செந்தொடையாமாயினும் மூன்றுமடி எதுகைபடத் தொடுத்தன் மாத்திரையானே அதனை இடையிட்டெதுகையென்றுங் கொள்ளப்படும். என்னை? அவ்வெதுகை ஆண்டுச் சிறந்தமையி னென்பது. அவை முன்னர்க் காட்டுதும்.

"முன்பொழுது முன்சொல்லுந் தூரியமா மன்னலையே
பின்பொழுது பின்செல்லு நெய்தலா - னன்பிலவே
கொல்யானை வேசப்போர்க் கோற்கோதை மாறேற்ற
பல்யானை மன்னர் பரை"

என வரும். இஃது இவ்விரண்டடிகளது கூட்டத்துக் கண்ணன்றி வாராவாயினுங் கட்டளையடிக்கு அகப்பட்ட தொடையோடுங் கூறினர், கட்டளையடிச்சண் வருந் தொடையே சிறந்தனவென்று கொள்ளினுஞ் சொள்ளற்கவென்பான்; ஒழிந்த தொடையுள்ளுமென்று கூட்டித் தொடைகூறினனென்பது. இனிச் செந்தொடை கட்டளையடிக்கண் தொடையாங்கால் ஒருமுழுத்துத் தேமா ஒழித்து ஒழிந்த மூவெல்லா வற்றினும் வருமென்பது. இம்மூவகை அடியினுனும் பெற்ற தொடை யெல்லாந் தொகுப்பத் தொடை ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதாம்.

அவற்றோடும் இரண்டடியெதுகை இரண்டும் இடையீடின்றித் தொடை ஐஞ்ஞூற்றைம்பத்திரண்டாம்.

"நுந்தையில் செந்தொடை யைஞ்ஞூற்று நாற்பான்மே
லொன்பானே யோரிடையிட் டோரிரட்டி
வந்த வெதுகை யிரண்டென வைத்தைஞ்ஞூற்
றைம்பத் திரண்டென் றறி."

என்பது உரைத்தாந்திரம். ஆக மூப்பத்துமூன்று தொடையும் அறுநூற்றிருபத்தைந்து அடியுட் களாவன களைந்து பெற்ற தொடைவிரியெல்லாந் தொகுப்பப் பெற்ற தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றைந்துடன் இரண்டடியெதுகை யிரண்டும் இடையீடொன்றுங் கூட்டத் தொடை பதின்மூவாயிரத் தெழுநூற் றெட்டாயினவாறு கண்டு கொள்க.

"தொடையின் பகுதி முழுவதூஉஞ் சொன்மற்
றடியி னறுநூற் றிருபத்தைந் தாயி
னடிய திலக்கண மாமதுவென் றஞ்சிப்
பிறதொடைமூன் றேற்றினர் பின்"

இவ்வாறு தொடை கூறப்பட்ட தொடைப்பகுதியெல்லாம் அவ்வச்சூத்திரங்களோறும் எடுத்தோதாது கட்டளையடிக்கும் அல்லாவடிக்கும் பொதுவகையாற் கூறி வந்தாஞ்சிறுபான்மையினும் 'மெய்பெற மரபிற் றொடைவகை' (தொல்-செப்-101) என்னுஞ் தொடைச் சூத்திரத்திற் கேற்பதாம். அவற்றை அவ்வச்சூத்திரங்களுட்போலக் கூறி வந்ததாமென்றது. முற்கூறிய மூப்பத்து மூன்று தொடையினையும் அறுநூற்றிருபத்தைந்தடியோடு மாறியக்கால் இருபதினாயிரத் தறுநூற்றிருபத்தைந்து தொடையாகற்பாலனவாம். அன்னவை தொடைக்குக் தளைக்குமாகாதன களைந்து கொள்ளப் பதின்மூவாயிரத் தெழுநூற்றைந்தாயினவென்பது. ஆறுயிரத்துத் தொள்ளாயிரத் திருபது சிலவும் களையப்பட்டன. இங்ஙனம் இவைகளைந்து பெற்றதொடையோடும் இரண்டடியெதுகை இரண்டும் இடையீடொன்றுங் கூட்டத் தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டாயின. (600)

413. மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
யையீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே.

இது, மேற்கூறிய தொடையுள் ஒருசீரான் வரையறையுடைமையின் அவற்றை அடிக்கட்போலத் தொகுத்தோதுகின்றது. விரித்தலுஞ் தொகுத்தலுமாம். என்னை ? கட்டளையடியோடுபட்ட தொடைவிகற்பம் முற்கூறிய சூத்திரங்களுட் பெற்றமையானும் அவற்றையும் ஈண்டுத் தொகுத்துக் கூறினமையானுமென்பது.

இதன் பொருள் : மெய்பெறு மரபில் தொடைவகை-கேட்டார்க்குத் தொடைப்பாடு வெளிப்படும் இலக்கணத்தவாகிய தொடைக் கூறுபாடு; 'தாமே' என்பது பிரித்துக்கூறியவாறு; ஐயீராயிரத்தாறைஞ் ஞூற்றொடு-பதின்மூவாயிரத்தோடு ; தொண்டுதலையிட்ட பத்துக் குறை எழுநூற்றொன்பஃது-எழுநூற்றெட்டு, என்றவாறு.

தொடைப்பகுதி பதின்மூவாயிரத் தெழுநூற் றெட்டென்று சொல்லுப ஆசிரியரென்பது இதன் பொழிப்பு. மெய்பெறு மரபினவை யெனவே, விளங்கத் தோன்றுதனவுந் தொடையுளவென்பதாம். அவை இணை கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் கடையிணை கடைக்கூழை இடைப்புணர்ப்பின எனச்சொல்லுப. பிறவும் வேறுபடுத்துக் கூறுவார் கூறுவனவெல்லாம் இதனுளே தழீஇக்கொள்ளப்படுமென்பது.

தொடைவகை யென்பது கட்டளையடியோடு வருமெனப்படுமூப்பத்துமூன்று தொடையும் பிறவாற்றான் வருமெனப்பட்ட இரண்டடியெதுகையென இருகூற்றனவுமென்றவாறு. ஐயீராயிரத்தாறைஞ் ஞூற்றொடு என்பது உம்மைத்தொகை. தொண்டு தலையிட்ட என்பது ஒன்பானேயகப்படும் மொழியாகவுடைய வென்றவாறு. அது செய்த வென்னும் பெயரெச்சமாகலின் எழுநூற்றொன்பதென்னும் பெயர் கொண்டு முடியும். எனவே, எழுநூற்றொருபத்தெட்டா மென்றஞ்சிப்

பத்துக்குறை எழுநூற்றொன்பது என்றானென்பது. எனவே, ஆண்டு நின்ற ஒன்பானோடுந் தொண்டுதலையிட்ட ஒன்பானையுங் கூட்ட *எழுநூற்றெட்டாயினவென்றவாறு.

அஃதே சருத்தெனின், 'பதின்மூ வாயிரத் தெழுநூற் றெட்டென-மொழியப் பட்டன தொடைதெரி வகையே' என அமையும்; இவ்வாறு அரிதும் பெரிதுமாகச் சூத்திரஞ்செய்த தென்னையெனின், அங்ஙனமே அதனை ஞாபகப்படச் செய்தான் ஆசிரியன் ஒருகாரணம் நோக்கி. என்னை? இத்தொடைகளை அடியோடு மாறுங்காற் குறைக்கப்படுவன உளவென்பதூஉம், அவை தொண்டு தலையிட்ட ஐந்துபத்தளவும் ஆறுமுதலாகக் களையப்படுமென்பதூஉங் கோடற்கென்பது. ஒன்பதென்று இருகாற்சொல்லிய வதனான் அங்ஙனங் குறைக்கப்படு நிலங்கள் ஒன்பது பகுதியவாமெனக் கொள்க. அவையாவன, ஐம்பத்தொன்பது ஐம்பத்தாறு நாற்பத்தைந்து நாற்பது முப்பத்தொன்பது முப்பத்திரண்டு முப்பத்தொன்று இருபத்துமூன்று ஆறு என ஒன்பது பகுதியாற் குறைவனவாயின. இங்ஙனம் ஐம்பத்தொன்பது நிலத்தினவாகலால் தொண்டுதலையிட்ட பத்தென்றானெனவும் ஒன்பதுந் தொண்டுமென இருகாற் கூறியவதனான் அங்ஙனங் களையுநிலம் ஒன்பஃதெனவுங் கொள்ளப்பட்டது.

"பாய பதினா யிரமென் றிலனையீ
ராயிர மென்றா னதனானுந் - தூயதன்றிப்
பத்துங் குறைத்த பயத்தானும் ஒன்பதென்
றுய்த்துக் கொளற்பாற் றொருங்கு"

எனவும்,

"ஓரொன்ப தேற்றியு மோரொன்ப திட்டுரைத்து
மீரொன்பது மிகுத்தா னீங்கிவற்று - ளோரொன்ப
தைம்பான்மே லேறவு மைந்தந்த மாய்க்குறைத
லொன்பான் வகைத்தென்று மோர்ந்து"

எனவும்,

* 'எழுநூற்றெட்டாயின வென்பது' எனவும பாடமுண்டு.

"ஆறென்றான் மூவா யிரமென்னா தாங்கதனா
லாறந்த மாங்குறையு மாறு"

எனவும்,

"ஐம்பத்தொன் பானேழெட் டையொன் பதுநாற்பஃ
தொன்பா னுடைமுப்பஃ தெண்ணான்கு முப்பத்தொன்
றென்பா னிருபத்து மூன்றா றெனக்குறைப்ப
வொன்பான் பகுதி யுள"

எனவும் இவ்வுரைச் சூத்திரங்களான் அவை குறைக்கப்படுமா றறிந்து குறைக்க. இவற்றுள் ஒன்பது நிலங் களையப்படும் மோனைமுதலாயின தொடை ஐந்தற்கும் ஒரெழுத்துத் தேவா உரித்தென்றிராயின், அதனை நுந்தை நுந்தையென்று இருசால் தொடுக்கவேண்டும்; தொடுத்தவழி அடிமோனையுந் தலையாகெதுகையும் அடியெதுகையும் மூன்றாமெழுத்தொன்றெதுகையுமென நான்கு தொடை பெறப்படுமாகலின், அவற்றுள் அதனை என்ன தொடையென்றுமோவெனின், செய்யுள் செய்த ஆசிரியன் பலதொடைப்படச்செய்து வைத்தவழி, அவற்றுட் சில களைந்து ஒன்று கோடற்குக் காரணமின்மையின் அவையனைத்துங் கோடுமென்பது. அல்லாதார் முதனின்ற தொடையே கொண்டொழிகவென்ப.* அது குற்றம். என்னை?

"செங்காற் பைந்தினை யிதண மேறிப்
பைங்காற் சிறுகிளி கடிவோ டந்தை"

என்றவழி எதுகையும் முரணும் வந்தவழி இவற்றுண் முதற்கண் இன்னதொடையென்று துணியலாகாமையின் அது நிரம்பாதாகலான்

---

* 'தொடைபல தொடுப்பினுந் தளைபல விரவினும்
முதல்வந் ததனான் மொழிந்திசிற் பெயரே.'

என்பது **யாப்பருங்கலம்** 53-ஆவது **சூத்திரம்.** இச்சூத்திரத்துக்கு விருத்தியுரைகாரர் 'ஒரு செய்யுளகத்துத் தொடைபல தொடுத்துவந்தாலும், தளைபல விரவிவந்தாலும் அவற்றை முதல்வந்த தொடையாலும் முதல்வந்த தளையாலும் பெயர்கொடுத்து வழங்குக' எனப் பொருளுரைத்து, அவிநயம், சாக்கைபாடினியம், நத்தத்தம் முதலிய பண்டையிலக்கண நூல்களினின்று மேற்கோள் காட்டுகின்றார்.

அது வந்ததொடை யெல்லாவற்றினும் விரித்துத் தொடைகூறுதல் அமையுமென்பது. என்போலவோவெனின் எழுத்தும் அசையுஞ் சீரும் அடியும் அந்நனம் முதல் வந்ததனுன் எண்ணுந் தொகையும் பெயருங்கொடுத்து வழங்காதவாறு போலவென்பது. அல்லதூஉம், தொடைகளெல்லாந் தம்மையுணரும் மாத்திரையானே தனித்தனி வருதல் இலக்கணமென்பதூஉம் இல்லையென உணர்க. என்னை? பல உறுப்புக்கொண்டதோர் செய்யுளென்றமையின்.

இனி, ஒரெழுத்துத் தேமா முதற்கணிற்ப அடியிறுதிக்கண்ணும் இயைபு வருதலின் அச்சீர் ஈன்றுறழ்ந்த அடிக்கண் இயைபுவருதற்கு ஆராய்ச்சியின்றென்பது. ஒழிந்த தொடைக்குரியவல்லவெனப்பட்ட சீருன் அவைவாராமையும், உரியவெனப்பட்ட அவற்றுள் அவை வருமாறும் முறையிற்கொண்டு உதாரணங் கண்டுகொள்க.

இனி, இக்காலத்துள்ள ஆசிரியருன் ஒருசாரார் தொண்டுதலையிட்ட பத்துக்குறை யெழுநூற்றெருன்றுமெனப் பாடந்திரிப்பாரும், இன்னெருசாரார் *எழுநூற்றெருன்று மெனப் பாடந்திரிப்பாரும் உளர். ஒருபகுதியார் ஒன்றுமென்பன மூற்றுவினையென்ப. மெய்பெறுமரபிற் றெரடைவகை பத்துக்குறை யெழுநூறென்னும் எண்ணிலோடு ஒன்றுமெனக் கூட்டுப. பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றெருன்பது என்பது அவர்கருத்து.† ஒன்று மென்பதனை

* 'எழுநூற்றெருன்று மென்ப பாடந்திரிப்பாரும்' என்பதுமுண் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம்.

† 'தொண்டுதலையிட்ட பத்துக்குறை யெழுநூற் — றெருன்று மென்ப' எனப்பாடங்கொண்டு, 'தொடைவிகற்பம் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற் றெருன்பதாம்' எனப் பொருளுரைத்தவர் உரையாசிரியர்.

பேராசிரியர் கொண்ட பாடமேகொண்டு, 'ஒன்பது தலையிலே லைவத்த பத்துக்குறைந்த எழுநூற்றெருன்பது.....என்பது, ஆருயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றெருன்று' எனப் பொருள்வேறுகொண் டார் நச்சினார்க்கினியர்.

'பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற் றெருன்பதென் பாரும், வரம்பிலவென்பாரும் என இருதிறத்தாசிரியர்' என்றுர் யாப்பருங்கல விருத்தியுடையாரும். (யாப்பருங்கலவிருத்தி—49-வது சூத்திரவுரையிற் காண்க.)

னுட்பெயர் மூற்றுமமைபபடுத்ததென்பாரும் அதுவே கூறுப. அவரறி யார். அவ்வாறு சூத்திரஞ்செய்வது ஆசிரியர் கருத்தன்று. அல்லதூஉம், 'ஒன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே' என்பது பழம்பாடமாகலா னும் அஃதமையாதென்பது. அவ்வாறு கொள்வார்க்குத் தொடை பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாகலும் பிழைக்கு மென மறுக்க. என்னை? அறுநூற்றிருபத்தைந்தடியினையுந் தமக்குப் பொருந்துமாற்றான் இருபத்திரண்டு தொடையோடும் பெருக்குங்கால். அவர்க்கும் ஒரடிக்கண்ணே தொடைசோடல் வேண்டுமாகலானும், அங்ஙனங் கொள்ள இரட்டைத்தொடை முதலாயின அறுநூற்றிரு பத்தைந் தாகாமையானு மென்பது.* (கoக).

414. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பல்கும்.

இது, மேற்கூறிய தொடைக்காவதோர் புறனடை.

இதன் பொருள்: அறுநூற்றிருபத்தைந்து அடியோடு மாறிப் பெற்றதொடை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டெனப்பட்டனமேல். இனி அவ்வடி ஒன்றன்கண்ணேயன்றி ஒன்றிநிற்ப னின்றவடி அறு

---

* "இச்சூத்திரத்திற்குத் 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற் றொன்றுமென்ப' என்று பாடமோதிப் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூறென்பாரும் (1), இனிப் 'பத்துக்குறை யெழுநூற் றொன்றுமென்ப' என்று பாடமோதித் தொண்டுதலையிட்ட பத்துப்பத்தென்ப தென்பாரும் (2), இனித் 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்றொன்று மென்ப' என்று பாடமோதிப் பதின் மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற் றொன்பதென்பாரும் (உரையா சிரியர்) 3, இனிப் 'பத்துக்குறை யெழுநூற்றொன்பஃதென்ப' என்று பாடமோதி, இதனை மிகவும் நலிந்து பொருள்கொண்டு பதின்மூவா யிரத்தெழுநூற்றெட்டென்பாரும் (பேராசிரியர்) 4, எனப் பலபகு தியராசிரியர். இவற்றுள் நல்ல துய்த்துணர்ந்துகொள்க" என்பர் நச்சினார்க்கினியர். இதனால் நச்சினார்க்கினியர்க்கு முன் நால்வர் இந் நூற்கு உரைசெய்துள்ளனர் என்று தெரிகிறது.

நூற்றிருபத்துநான்கனையுந் தந்து தந்து தடுமாற வந்து தோன்றுந் தொடைவிகற்பமும் இருசீரடிமுதலாக எண்சீரடியீறாகக் கிடந்த அடி வேறுபாட்டின்கணெல்லாம் இத்தொடைகளைக்கூட்டவும் பிறவிகற்பத் தொடைகளைக்கூட்டவும் வருந் தொடைப்பகுதி வரையறையின்றிப் பலவாம், என்றவாறு.

வரையறை உடையனவற்றுக்கன்றி வரையறைகூறுதல் பயமின்றாகலின் ஒழிந்த விகற்பமெல்லாங் கூறியசிலங்கூறிற்றிலனென்பதூஉம்'மெய்பெறு மரபிற்றொடைவகை'(தொல்-செய்-101) எனப்பட்டன வரையறையுடைமையின் அதுகூறினானென்பதூஉஞ் சொல்லினான் இச்சூத்திரத்தானென்பது.

இனி ஐந்துதொடை, விகற்பத்தொடை பலவற்றோடுங் கூட்டவும் பிறவாற்றான் விரிப்பவும் வரம்பிலவாமென்பாருமுளர். அவை எவ்வாறு விரிப்பினும் வரம்பிலவல்லவெனமறுக்க. வரம்பிலவென்பது வரையறை கூறப்படாவென மேலுரைத்ததே உரை. * (௧௦௨)

* "(இச்சூத்திரம்) எய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துதல் நுதலிற்று. இதன் பொருள்: மேற்சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும், என்றவாறு. அவையாவன, மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்பனவற்றின்கண், இணை கூழை முற்று மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் கடையிடை கடையிணை பின்கடைக் கூழை இடைப்புணர் என வேறுபடுத்துறழ்ந்து, எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி எனவும்; உயிர்மோனை, உயிரெதுகை, நெடின்மோனை, நெடிலெதுகை, வருக்கமோனை, வருக்கவெதுகை, இனமோனை, இனவெதுகை எனவும்; மூன்றாமெழுத் தொன்றெதுகை, இடையிட்டெதுகை, ஆசெதுகை எனவும் இவ்வாறு வருவனவற்றை மேற்கூறிய வகையினான், எழுத்து வேறுபாட்டினா னுறழவும்; சீரனிறையாகிய பொருள்கோள் வகையானும், ஏகபாதம் எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப்பாக்களானும் உறழவும் வரம்பிலவாகி விரியும்" என்பது உரையாசிரியர்

415. தொடைவகை நிலையே யாங்கென மொழிப.

இதுவுமது. மேல் ஒருசாரான் வரையறையுடைமையிற் கூறும் பட்டனவென்புழி, ஒழிந்தன வரையறையின்மையிற் கூறப்படாதென வுங் கூறினானைக் கண்ட மாணாக்கன், வரம்பில்லன தொடுக்கப்படா கொல்லென ஐயுற்றானை அவையுந் தொடுக்கப்படுங் கண்டாயெனக் கூறினமையின் ஐயம் அறுத்ததெனவும் அமையும்.

இதன் பொருள் : தொடையது பகுதி வழக்கே அவ்விரண்டு மென்ப, என்றவாறு.

எனவே, அப்பகுதியுளொன்று தெரித்திலமென்பது இதன் கருத்து. ஆங்கென்றதனான் மேற்பகுத்த இரண்டிடமுங் கொள்க. ()

416. மாத்திரை முதலா *வடிநிலை காறு நோக்குதற் காரண நோக்கெனப் படுமே.

இது, சிறுத்தமுறையானே நோக்குணர்த்துகின்றது. நாற்சொல் வழக்கினைப் பாவிற்படுப்பது மரபென்றான். எனவே, ஆண்டு நோக்கி யுணரப்படுவதொன்றின்றிச செய்யுளுள்ளும் வழக்கியல்பினவாகி வெள்ளைமையுமாய்க் காட்டுவனவாயின. அவ்வாறன்றி நோக்கெண்ப தோர் உறுப்புப்பெறினே அது செய்யுளாவதாகலான் அது கூறுகின்றா னென்பது.

இதன் பொருள் : மாத்திரையும் எழுத்தும் அசைநிலையுஞ் சீரும் முதலாக அடிநிரம்புந்தொடையும் நோக்குடையவாகச் செய்தல் வன்மையாற் பெறப்படுவது நோக்கென்னும்உறுப்பாவது, என்றவாறு.†

---

* 'அடிநிறைகாறும்' என்பது நச்சினார்க்கினியர் கொண்டபாடம்.

† "மாத்திரைமுதலாக அடிநிலையளவும் நோக்குதலாகிய கருவி நோக்கென்று சொல்லப்படும். காரணமெனினும் கருவியெனினும் ஒக்கும். நோக்குதற் காரணமென்பதனை உண்டாற்றொழிலென்றாற் போலக் கொள்க. அஃதாவது, யாதானும் ஒன்றைத் தொடுக்குங்கால் கருதியபொருண் முடியுங்காறும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நின்ற நிலை. 'அடிநிலைகாறும்' என்றதனால் ஓரடிக்கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒரு நோக்காக

கேட்டார் மறித்துநோக்கிப் பயன்கொள்ளுங் கருவியை நோக்கு தற் காரணமென்றுனென்பது. அடினிலைகாறுமென்பது ஓரடிக்கண் னேயன்றியுஞ் செய்யுள் வந்த அடி எத்துணையாயினும் அவை முடி காறு மென்றவாறு. வரலாறு :

" முல்லே வைந்நுதி *தோன்ற வில்லமொடு
பைங்காற் சொன்றை மென்பிணி யவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலே தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறங் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதியுந்
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் †தேர
னுதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணுது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவி ழலரி நாறு
மாய்தொடி யரிவைவின் மாணலம் படர்ந்தே." (அகம்-4.)

ஓதலும் பலநோக்காக ஓதலும், இடையிட்டு நோக்குதலும் என மூன்றுவகைப்படும் " என்று உரைகூறி " அறுசுவையுண்டி..." "அறிவினறநெறி..." " உலகமுவப்ப .....கணவன் " என்பனவற்றை முறையே ஒருநோக்காக ஓதுதற்கும், பலநோக்காய் ஓதுதற்கும், இடையிட்டு நோக்குதற்கும் உதாரணமாகக் காட்டினர் உரையாசிரியர்.

* 'தோன்றத் தில்லமொடு' என்பதும் பாடம்.

† 'தேரின்' என்பதும் பாடம்.

என வரும். இப்பாட்டின் ஓசைமுதலியனவெல்லாங் கேட்டாரை மீட்டுந் தன்னைநோக்கி நோக்கப் பயன்கொள்ள நிற்கும் நிலைமை தெரிந்துகொள்க.

இனி, 'அடிநிலைகாறும்' என்றதனாற் செய்யுண்முழுவதும் எவ்வகையுறுப்புங் கூட்டி நோக்கியுணருமாறுங் கூறுதும். முல்லையென்பது முதலாகக் கானம் என்பதீறாக நாற்சொல்லியலான் யாப்பு வழிப்பட்டதாயினும் பருவங்காட்டி வற்புறுக்குந் தோழி பருவந் தொடங்கிய துணையேகாணென்று வற்புறுத்தினாளென்பது நோக்கியுணரவைத்தானென்பது. 'உதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்' என்னுந்துணையுந் தலைமகனது காதன்மிகுதிகூறி வற்புறுத்தினாளென்பது நோக்கியுணரவைத்தான். ஒழிந்த அடிநிலைகாறும் பிரிந்தகாலம் அணித்தெனக் கூறி வற்புறுத்தினாளென்பது நோக்கியுணரவைத்தானெனப்படும். என்னை ? முல்லையென்னாது வைந்நுதியென்றதனான் அவை அரும்பியது அணித்தென்பது பெறப்பட்டது; சின்னாள் கழியின் வைந்நுதியாகாது மெல்லென்னுமாகலின். இல்லமுங் கொன்றையும் மெல்லென்ற பிணியவிழ்ந்தனவென்றாள், கரிந்த துணை அவை முதல் கெடாது முல்லையரும்பிய காலத்து மலர்ந்தமையின். இரலை மருப்பினை 'இரும்பு திரத்தன்ன மருப்பு' என்றதூஉம் நீர்தோய்ந்தும் வெயிலுழந்த வெப்பந் தணிந்தில, இரும்பு முறுக்கிவிட்டவழி வெப்பம் மாறாவிட்டவாறுபோல வெம்பா நின்றன பின்னுமென்றவாறு. 'பரலவ லடைய விரலை தெறிப்ப' எனவே பரல் படுகுழிதோறுந் தெளிந்துநின்ற நீர்க்கு விருந்தினமாகலாற் பலகாலும் நீர்பருகியும் அப்பரல் அவலினது அடைகரைவிடாது துள்ளுகின்றனவென அதுவும் பருவந் தொடங்கினமை கூறியவாறாயிற்று. 'கருவி வானங் கதழுறை சிதறி' என்பதூஉம் பலவுறுப்புங் குறைபடாது தொக்குநின்ற மேகந் தனது வீக்கத்திடைக் காற்றெறியப்படுதலின் விரைந்து துளிசிதறினவென அவற்றையும் புதுமைகூறினாள். எனவே, இவையெல்லாம் பருவந் தொடங்கியதென்றமையின்வற்புறுத்துதற்கு இனமாயிற்று. 'தூங்குனைப் பொலிந்த கொய்சுவற் புரவி' என்பது கொய்யாத உளை பல்கியும் கொய்த உளை பலகாலுங் கொய்யவேண்டு

தலுமுடைய குதிரையென்றவாறு. எனவே, தனது மனப்புகழ்ச்சி கூறியவாறு. அத்துணை மிகுதியுடைய குதிரை பூட்டின வாரொலி விலக்காது மணியொலி விலக்கி வாராநின்றான் அங்ஙனம் மாட்சிமைப் பட்ட மான்றேரனாதலானென்றவாறு. அதற்கென்னை காரணமெனின், 'துணையொடு வதியுந் தாதுண் பறவை' எனவே பிரிதலஞ்சியென்றவாறு. மணிநாவொலி கேட்பின் வண்டு வெருவுமாகலின் அது கேளாமை மணிநாவினை இயங்காமை யாப்பித்த மாண்வினைத்தேரனாகி வாராநின்றானென இவையெல்லாந் தலைமகள் வன்புறைக்கேதுவாயின. 'கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது நெடுமபெருங் குன்றத் தமன்ற காந்தள்' : தெய்வ மலை ஆகலான் * அதனுளமன்ற காந்தளைத்தெய்வப்பூவெனக் கூறி அவை போதவிழ்ந்தாற்போல அவர் புணர்ந்த காலத்துப் புதுமணங் கமழ்ந்த நின்கைத்தொடிகள் அவை அரியவாகிப் பிரிந்தகாலத்துப் பொன்றுவடிவொத்து மணங் குறைபட்டதுணையேயால் அவர் பிரிந்துசெய்த தன்மையினென இதுவும் வன்புறைக்கே உறுப்பாயிற்று.◊

---

* 'அதனுண்மன்ற' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

[◊ நோக்கென்பதற்கு இச்செய்யுளையே நச்சினார்க்கினியரும் உதாரணமாகக் காட்டினார். அவர் கூறுமாறு : "வைந்நுனை' என்றதனால் அலருந்துணையும் மெல்லென்னாது வன்மையவாய்க் கூரிதாய் நிற்றலின் அரும்பி அணித்தென்பது கூறிற்று. 'இல்லமும் கொன்றையும் பிணி யவிழ்ந்தன' என்றது அவை மரமாகலிற் கடிதிற் கரியாவாகலிற் கடிதிற் கரிந்த முல்லைக்கு முன்னே மெல்லிய பிணியவிழ்ந்தமை கூறிற்று. காய்ந்த இரும்பு முறுக்கிவிட்டவழியும் வெப்பம் மாறாத வாறுபோல நீர் தோய்ந்தும், வெயிலுழந்த வெப்பம் இன்னும் தணிந்திலஎன்பது தோன்ற 'இரும்புதிரித்தன்ன மருப்பு' என்றார். இரலை குழிதோறும் தெளிந்து நின்ற நீர்க்கு விருந்தினவாதலிற் பலகால் நீர் பருகுதற்குப் பரலையுடைய பள்ளத்தைச் சேர நின்றது என்றதாம். இத்துணையும் பருவந்தொடங்கிய துணையே வற்புறுத்திக் கூறிற்று. 'புலம்பு' முழுவதும் நீங்கிற்றென்னாது ஒருபுடை தோன்றப் புறக்கொடுத்த தென்றமையின் அதுவும் பருவந்தொடங்கிய துணையே கூறிற்று.

இவ்வாறே பலவும் நோக்கி யுணர்தற்குக் கருவியாகிய சொல்லும் பொருளும் எல்லாம் மாத்திரை முதலா அடிநிலைகாறுமென அடங்கக்கூறி நோக்குதற்காரணம் நோக்கென்றுணென்பது. மாத்திரை முதலாயினவுந் தத்தம் இலக்கணத்தில் திரியாது வந்தமையின் அவையும் அவ்விலக்கணம் அறிவார்க்கு நோக்கிப் பயன்கொள்ளுதற்கு உரியவாயினவாறு கண்டுகொள்க. எனப்படுமென்றதனான் இவ்வாறு முழுவதும் நோக்குதற்குச் சிறப்புடைபவெனவும் இவையிடையிட்டு வந்தன சிறப்பிலவெனவுங் கொள்ளப்படும். பிறவும் அன்ன. (கoச)

தொகுதியையுடைய மேகம் காற்றின் விசையான் விரைந்த கொடுந்துளியைச் சிதறிற்றெனவே புதுமை கூறிற்று. இத்துணையும் பருவந்தொடங்கி யணித்தென்றலின் வற்புறுத்தற் கிலேசானமை நோக்கிற்று. கொய்யாத உளை பெருகுதலும் கொய்த உளை பல்காற் கொய்யப் பெருக வேண்டுதலும் கூறவே குதிரை மனச் செருக்குக் கூறிற்றும். அதன் கழுத்து வளையும்படி விசித்தவாரொலி நரம்பிற்கு ஓதிய நால்வகைக் குற்றத்தினும் (நரம்பிற்கோதிய குற்றம் நான்காவன: செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம். இவற்றுள் 'ஆர்ப்பு' என்பது மாத்திரையிறந்த சுருதி = ஒங்கவிசைத்தல். சிலப்பதிகாரம் வேனிற்காதை 29,30-வது அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையைக் காண்க.) ஆர்ப்பென்னும் குற்றம் எய்திய நரம்போசைபோல இசைப்ப என்க. 'பூத்த பொங்கர்' என்பதனுல் பசிப்பிணிதீர நுகரும் பொருளை அது குறைவறக்கொடுப்ப உண்டு மகிழ்ந்து பின்பு தாம் நுகராகின்று வதியும் எனவே, யாமும் இல்லற நிகழ்த்துதற்கும் நுகர்தற்கும் ஏற்ற பொருள்களைக் குறைவறப் பெற்றுப் பின் இன்பநுகர்தல் வேண்டும் என்பது கூறினளாம். பொங்கரிற் பசிதீர்ந்து துணையொடுவதியும் பறவையும் தாதையுண்கிற பறவையும் கலக்கமுறுதற்கு அஞ்சி மணியொலியை வீக்கிய தேரன் என்றதனுல் காதலும் அருளும் உடைமையின் அவற்றின் பிரிவிற்கும் பசிக்கும் இரங்கினனெனக் கூறவே, அவை (காதலும் அருளும்) அவற்கு நின்கண்ணும் பெருகும் என்றுளாம். வதியும்பறவை வண்டும் தேனும் என்பதும், தாதுண் பறவை சுரும்பு என்பதும்

417. ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியே நாலியற் றென்ப பாவகை விரியே.

'நோக்கே பாவே' யென நிறுத்தமுறையானே நோக்குணர்த்திப் பாவுணர்த்தியவெழுந்தான் அதனை இத்துணைப் பெயர் வேறுபாட்டதெனவும்,பொருட்குரிமையவும் அடிக்குரிமையவுமாமாறுஞ் செய்யுட்கு வரையறைவகையான் உரியவாறும் ஒரோசெய்யுட்சண் ஒரோவுறுப்புப் பற்றி வருங்கால் அவ்வுறுப்புச்சள் இத்துணையடியவாகுமெனவும் எல்லாங் கூறுவான் தொடங்கினமையின். அவற்றுள் இது, பெயர்வேறு பாடும் அஃது இனைத்தென விரியும் உணர்த்துகின்றது. இவ்வுறுப்பு வேறுபாட்டானே, உறுப்பியலாகிய செய்யுளும் இவ்வாறு பெயர் கொள்ள வைத்தானென்பது.

"எங்குமோடி யிடறுஞ் சுரும்புசாள், வண்டொள்மகிழ் தேனினங்கள்" (சிந்தா-குண-42) எனப் பின்னுள்ளோர் கூறியவாற்றானும் உணர்க. இதனுற் சேணிடை வரவையுணர்த்தும் மணியொலியை வாரொலி கேட்கும் அணியைக்கண்ணுங் சேளாயாய்னை எனவும், அவ்வாரொலி தாதுண்பறவை ஒலிச்சண் அடங்குதலின், கேட்கின்றிலை எனவும் கூறினளாயிற்று. வாரொலி நரம்போசை போறலின் பெருவரவாயிற்று. 'மாண்வினைத் தேரன்' என்றுள், அவன்றன் கருத்திற்கேற்ப வினை முடித்தமை தோன்ற; எனவே வன்புறைக் கேதுவாயின. தெய்வந்தங்கும் மலையாதலின் தெய்வமணம் நாறும் காந்தளினுடைய போதவிழாகின்ற மலர்போல அவர்புணர்ந்த காலத்துப் புதுமணம் நாறும் அரிவை எனவே, அவர் பிரிந்து சேய்த்தன்றென வன்புறைக் கேதுவாயிற்று. 'ஆய்தொடி' என்றது தோண்மெலிந்தவழி அயலார்க்குப் புறமறைத்தல் வேண்டிச் செருகுந்தன்மையின்றி அணிந்த விலையே யிடச்சும் தொடி என்றவாறும். இதுவும் பிரிந்து சேய்த்தன் றென்றவாறதாம். ஈண்டு 'மாணலம்' என்றது அவன்பிரிவுணர்த்திய காலத்துப் பிரிவிற்கு உடம்பட்டாள் போன்று உடம்படாது நின்ற லத்தை. அது மெய்ப்பாடாம். இங்ஙனம் கோடல் நோக்கென்று உணர்க."]

இதன் பொருள் : ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் வெண்பாவும் கலிப்பாவுமென நாற்கூற்றது பாக்களவற்றுவிரி, என்றவாறு.

'வகை'யென்றதனுன் உறுப்பாகிற செய்யுளின் வேறுபட நோக்கி உணரப்படும் இவ்வுறுப்பெனவும், இவற்றுள் வழக்கிற்குரியன செய்யுட்கு வந்தனவும் வழக்கிற்கேயுரியவாகிக் கூறுபடுவனவும், ஒன்றொன்றனோடு விராய்ப் பிறக்கும் பகுதியுமெல்லாங் கொள்ளப்படும். பாக்கூற்றுவிரி நான்கெனவே, பாவினை உறுப்பாகவுடைய செய்யுட்கு வரையறைகூறிற்றிலனென்பது பெற்றும். என்னை? அவற்றுப் போதுங்கால் அவற்றது பெயர்வேறுபாடும் அச்சுத்திரங்களான் அறிதுமென்பது. என்றூர்க்கு இவை நான்கேயன்றிப் பாவாமாறு கூறுதலெவனின் இவையின்றித் தூக்குப் பிறவாமையின் இப்பாவிலக்கணமும் நோக்கோத்தினுட் கூறினுலகலான் ஆண்டோதியவாறே அமையுமென்பது. இக்கருத்தேபற்றிப் "பாவென மொழியினுந் தூக்கினது பெயரே" என்றூர் இந்நூலின் வழிநூல் செய்த *ஆசிரியருமென்பது. உதாரணம் :

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
யலங்குலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்.
தகில்பொதி பவள மேய்க்கு
மகில்படு கள்ளியங் காடிறந் தோரே" (ஐங்குறு)

என்பது ஆசிரியப்பா உறுப்பாகி வந்த செய்யுள்.

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து †தெற்கேகினும்" (பத்து-பட்டின-1-2.)

என்பது வஞ்சிப்பா உறுப்பாகி வந்த செய்யுள்.

"வாரிய பெண்ணே வருகுரும்பை வாய்த்தனபோ
லேரிய வாயினு மென்செய்ய-கூரியவேற்

---

* நந்தத்தனுர் என்றூர் யாப்பருங்கல விருத்தியுரைகாரர்.
† 'தெற்கெய்தினும்' என்பதும் பாட்டம்.

கோட்டியானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமணங் கொள்ளா முலை." (முத்தொள்ளாயிரம்.)

என்பது வெண்பாவுறுப்பு வந்த செய்யுள்.

"அரிதாயவறனெய்தி" (கலி-11) என்பது கலிப்பாவுறுப்பு வந்தது. பிறவும் அன்ன.

இவை இன்ன அடியான் வந்தன வென்பது என்னையறியுமாறெனின் அதுவன்றே தூக்குப் பயம்படுகின்ற இடமென்பது. மூன்றுபாவினை நாற்சீரானும், வஞ்சிப்பாவினை இருசீரானும் முச்சீரானுந் தூக்குக்கொண்டு இத்தூக்கரமாறு உணர்ந்துகொள்க.

ஆசிரியம் வெண்பாக் கலி வஞ்சியெனச் சிறப்புமுறையாற் கூறாத தென்னையெனின், அது 'முந்து மொழிந்ததன் றலைதடு மாற்றே' (தொல்-மரபியல்-110) என்பாருமுளர். வஞ்சிப்பா முதற்கூறாமையின் அற்றன்றென்பது. மற்றென்னை கருதிடதெனின் ஆசிரியம் வெண்பாவென்று ஓதினவை வழக்கிற்குஞ் செய்யுட்கும் உரிமையின் அவையேபோறலுஞ் சிறப்புடையவென்றுகொள்வானாயினும், அற்றன்று; இவை செய்யுளிலக்கணமாகலான் அவை நான்கும் ஒத்த இலக்கணத்த செய்யுளென்றற்கு இம்முறையான் ஓதினானென்பது. இனி ஒருசாரார் இந்நான்கனையும் ஒன்று மூன்றாக விகற்பித்துக் கூறுப; என்னை? ஏந்திசை தூங்கிசை ஒழுகிசை என்றாற்போல. அற்றன்று; ஓரொழுத்துமுதல் ஐயெழுத்துச் சீரளவும் உயர்ந்த சீரான்வருஞ் செய்யுட்கு ஒன்று ஒன்றனின் வேறுபட்டொலிக்கும். அவ்வேறுபாடுதோறும் பாவேறுபடா. என்னை?

'எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப' (தொல்-செய்-43.)

என்றமையினென மறுக்க. அல்லதூஉம் அங்ஙனம் வேறுபாடு கொள்ளின் ஒரோவென்று ஐந்தாகலுந் தூங்கலோசை ஆறும் ஏழுமாகலுமுடைய வென்பது. (௧௦௫)

418. அந்நிலை மருங்கி னறமுத லாகிய மும்முதற் பொருட்கு முரிய வென்ப.

இ, பாவினைப் பொருட்குரியவாற்றான் வரையறை கூறுவான் தொடங்கிப் பொருட்குரிமை பொதுவகையான் உணர்த்துகின்றது.

இதன் பொருள் : அந்நிலைமருங்கின் - அம் மேலைச்சூத்திரத்துத் தோற்றுவாய் செய்யப்பட்ட செய்யுளினிடத்து ; அறமுதலாகிய மும் முதல் - அறம்பொருளின்பமென்பன ; அறமுதற் பொருளெனவே அவையும் அவற்றது கிலேயின்மையும் அடங்கும் : பொருட்கும் உரிய வென்ப-அப்பொருட்கெல்லாம் உரிய நான்குபாவும், என்றவாறு.

அந்நிலைமருங்கினெனவே, அவை மும்முதற்பொருட்கு உரிய வாங்காற் செய்யுளிடத்தன்றித் தாமாக உரிமை பூணுவென்பது. வீடென்பது செய்யுளுள் வாராதோவெனின் அறமுதலென்பது புறப் பாட்டெல்லையாகக் கூறினு னென்பார் நான்கு பொருளுந் தழீஇயுரை ப்ப. இனியொருசாரார் மும்முதற்பொருட்கும் உரியவென்பதனை எச்சப்படுத்திச்சொள்ப. அற்றன்று, உலகிற் பொருண்மூன்றனையுங் கூறுவான் அவற்றை மும்முதற் பொருளென்றான், அவையின்றி வீடு பெறுமாறு வேறின்மையின் வீடும் ஆண்டுக் கூறினனென்பது.* அல் லாதார் வீடென்னும் பொருண்மை செய்யுட்கண் வாராமையின் அது கூறுனென்ப. அங்ஙனங் கருதின் அறமுதற்பொருளுஞ் செய்யுட் வாராவென மறுக்க.† (கo சு)

---

* "மும்முதற்பொருளெனவே, அவற்றது துணைப்பொருளாகிய அறனிலேயின்மையும் பொருணிலேயின்மையும் இன்பநிலேயின்மையும் அடங்குமென்ப. உலகியற்பொருண் மூன்றனையும் இவையெனக் கூறி அவற்றை விடுமாறுங் கூறவே, வீடுங் கூறிற்றும். அது கூறுதற் குரிய செய்யுளும் மேற் கொச்சகமென்றுணர்க" என்றார் நச்சினார்க் கினியர்.

† "அகத்தியனுந், தொல்காப்பியனுங் வீடுபேற்றிற்கு நிமித் தம் கூறுதலன்றி, வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறுவென்று

419. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பி
னாசிரி யப்பா வெண்பா வென்றாங்
காயிரு பாவினு ளடங்கு மென்ப. (௧௦௭)

420. ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப.

இவை இரண்டு சூத்திரமும் உரையியைபுநோக்கி உடனெழுதப் பட்டன. மேற் பாவினது விரி நான்கென்றமையின் தொகையுமுண் டென்பது பெற்றாம். அவை தொகுக்குங்கால் இரண்டாகித் தொகு மென்பதூஉம், அங்ஙனம், இரண்டாமிடத்தும், யாதானும் ஒன்றடக்கி இரண்டாகா முதற்பாவென நாட்டப்படுவன இவை யெனவும், அவை முதலாகத் தோன்றி ஆண்டடங்குவன இவை யெனவும் உணர்த்து கின்றது.

இதன் பொருள் : மேற் பாக்கண் விரிந்த பகுதியை உண்மைத் தன்மை நோக்கித் தொகுப்பின் ஆசிரியமும் வெண்பாவுமேயாம். அவற்றுள் ஆசிரியத்து விகற்பமாகித் தூங்கலோசை விரிந்தடங்கும், வெண்பாவின் விகற்பமாகிக் கலிப்பா விரிந்தடங்கும்; அங்ஙனம் அடங்கி இரண்டாகும் பாவின்வகை, என்றவாறு.

"வீடுபேறுவிழைந்துநெடிதிருந்து" என அசவற்சீரான் வஞ்சித் தூக்குப் பிறந்தது. மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் என வெண்பாவினுட் கலிப்பா பிறந்தது. பிறவும் அன்ன.

உணர்க. அஃது 'அந்நிலைமருங்கின்.....' என்பதனான் உணர்க. இக் கருத்தானே வள்ளுவநாயனாரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினார்" என்பது தொல்காப்பியம்-சிறப்புப் பாயிரம்-நச்சினார்க்கினியர் உரை.

"வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகை யாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமே யாம்" என்பது திருக்குறள்-பரிமேலழகர் உரைப்பாயிரம்.

இனி, ஒரு சாரார் வஞ்சிப்பாவினுங் கலிப்பா பிறக்குமாதலின் அதுகூறி நிரம்பாதென்ப. என்னை?

"விளங்குமணிப் பசும்பொன்னின்
விசித்தமைத்துக் கதிர்காண்ற"

என்னும் இரண்டு வஞ்சியடியும் ஒரு கலியடியாகச் சொல்லப்படுமென்பது அவர் கருத்து. அற்றன்று. அவையிரண்டுமாதற்கோர் கட்டளை யழிந்த கலிப்பாவேயெனினும், வஞ்சியடியாதற்கு ஒரு காரணம் இல்லை, தலைகுலுக்கி வலியச் சொல்லினுந் தன் சீரின்மையினை மறுக்க. அல்லதூஉம் ஒன்று ஒன்றலோடு ஒக்குங்காற் பிறப்பித்தது லோடு பிறந்ததொப்ப வேண்டுமென மறுக்க.

"வல்லாமைப் *புழுக்குண்டும்
வறளடம்பின் மலர்மலர்ந்தும்" (பத்து-பட்டின-64-65.)

என்றக்காற் கலிப்பாவாகச் சொல்லியவழியும் அத்தூங்கலோசை யோடு ஒத்தல்வேண்டும், அதனின் அது பிறந்ததாயினென மறுக்க. அல்லதூஉம் அவ்விரண்டடியுங் கூட்டியவழி அகவலோசையாதலே வலிது. என்னை? தன்றலை விராய் வந்தமையின். பண்புறவென்ற தனுன் ஆசிரியப்பாவும் வெண்பாவும் இயல்பெனவும், ஒழிந்தன விகார மெனவுங் கொள்க. எனவே, வெண்பாவென்றதனுன் மூன்றுபாவி னுந் துள்ளிய கலியோசையும் ஒருவகையான் வெண்பாவெறித்தே யாம், இலக்கணக்கலியோசையன்றுயினுமென்பது கொள்க. (கoஅ)

421. வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு மூரித்தே.

இது, மேற்கூறிய 'மும்முதற் பொருட்கண்' (தொல்-செய்-106) ஒருசாரானவற்றை வாழ்த்துதல் என்பதோராறும் உண்மையின் அப் பகுதி நான்கு பாவிற்கும் உரித்தென்கின்றது.†

---

* 'இழுக்குண்டும்' என்பது முன் அச்சுப் பிரதிப் பாடம்.

† சூத்திரப் பொருள் ஏடுகளிலும் முன் அச்சுப் பிரதியிலும் காணப்படவில்லை. 'வாழ்த்தியலின் கூறுபாடு நான்கு பாவிற்கு மூரித்து' என்பது நச்சினார்க்கினியர் உரை.

நால்வகைப்பட்டது பாவாகலின் அப்பாவினை நான்கென்றான். வாழ்த்தியலென்றது 'வகை' யென்றதனான் மேற்கூறிய மும்மூதற் பொருளின் அறுவகையும் பெரும்பான்மை யெனப்படுமென்பதாயிற்று. அங்ஙனம் வாழ்த்துங்கால் தனக்குப் பயன்படுதலும் படர்க்கைப் பொருட்குப் பயன்படுதலுமென இருவகையான் வாழ்த்துமென்பதாயிற்று, முன்னிலையாக வாழ்த்துதலும் படர்க்கையாக வாழ்த்துதலும் என இருவகைப்படுமென்பதாயிற்று எல்லாங்கொள்க. அங்ஙனம் வாழ்த்தப்படும் பொருளாவன ; கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரைசரும் மழையும் நாடுமென்பன. அவற்றுட் கடவுளை வாழ்த்துஞ் செய்யுள் கடவுள் வாழ்த்தெனப்படும். ஒழிந்த பொருள்களை வாழ்த்திய செய்யுள் அறுவகை வாழ்த்தெனப்படுமென்பது.

"மானிலஞ் சேவடி யாகத் தூய்நீர்
வளிஞரல் பௌவ மூடுக்கை யாக
விசும்பு மெய்யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணுகை
வியன்றன வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரி யோனே."

(நற்றிணை-கடவுள் வாழ்த்து.)

பது தெய்வவாழ்த்து.

"யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
ருவிரு ணிழற்ற வீர்ந்தன்ரு லுலகே."

(அகம்-கடவுள் வாழ்த்து.)

ன்பதும் அது. முன்னையது தனக்குப் பயன்பட வாழ்த்தியது, பின்னது உலகிற்குப் பயன்பட வாழ்த்தியது. பிறபாவினும் மருட்பாவி பிறபொருட்கண்வந்த வாழ்த்து வந்துழிக் கண்டுகொள்க.

வாழ்த்தென்பது அறமாகலின் அறமூதலாகிய மும்மூதற்பொருள்கள் (தொல்-செய்-106) என்புழி அடக்கும்பிற, இச்சூத்திரம்

மிகையாலெனின், அற்றன்று. புறநிலை வாழ்த்து முதலியன உள; அவை நீக்குதற்கு இது விதந்தோதினனென்பது. வாழ்த்தியலென்றதனான், இயற்கைவாழ்த்தெனப்படுவன இவையெனவும் இனிவரும் புறநிலைவாழ்த்து முதலியன இயற்கைவாழ்த்தெனப்படா ஒருவகையான் வாழ்த்தென்பான் சார்த்தியுணரப்படுவதல்ல தெனவுங்கொள்க. (கo)

422. வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெரும.

இது, நாற்பாற்கும் உரித்தன்றி வரையறைப்படும் வாழ்த்து வேறுபாடு உணர்த்துகின்றது.

இதன் பொருள்: தினைச்குத் தொழுகுலமாகிய தெய்வம் தின்னைப் புறம்காப்ப, இல்லறம் முதலிய செல்வத்தாற் பழியின்றிப் பூத்த செல்வமொடு புதல்வர்ப்பயந்து, புதல்வரும் இப்பெற்றியராகி எல்லீரும் நீடுவாழ்வீராமினென்று தெய்வத்தைப் புறநிறுத்திவாழ்த்துவது புறநிலைவாழ்த்து. அங்ஙனம் வாழ்த்திய அச்செய்யுள் கலிப்பா உறுப்பாகவும் வஞ்சிப்பாவினும் வருதலில்லை, என்றவாறு.

தெய்வத்தைப் புறநிறுத்தி வாழ்த்துதலிற் புறநிலைவாழ்த்தாயிற்று. வழிபடுதெய்வம் நிற்புறங்காப்ப என்றோதினமையின் வழிபடுதெய்வம் உள்வழியே புறநிலைவாழ்த்தெனப்படுவதென்பது. எடுத்தக்கொண்ட காரியத்துக்கு ஏதுவாகிய கடவுள் நிற்ப அக்கடவுளாற் பயன்பெற தின்றருளோர் சாத்தனை முன்னிலையாக்கி அவற்குக் காரியங் கூறுதலின் இது புறநிலையாயிற்று. 'கலிநிலை வகை'யென்றதனாற் கலிவகைத்தாகிய பரிபாடற்கும் இஃதொச்சும். இனிக் கடவுளாற் காக்கப்பட்ட சாத்தனை வாழ்த்தப்படானெனவுஞ் சொல்லுப. அற்றன்று; கடவுள்வாழ்த்தென்றல் அவ்வாறு பொருள்படாமையினென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

"இமையா முக்க ணிலங்குசுடர் வாய்ந்த
வுமையொரு பாகத் தொருவன் காப்பனின்
பல்கிலைச் சுற்றமொடு கல்லிதி னந்தி
நீடுபல் வாழிய வாய்வாட் செண்ணினின்
னெருருகுடை வரைப்பி னீழற் பெற்றுக்
கிடந்த வெழுகட லுப்ப
ணகலிரு விசும்பின் மின்னினும் பலவே"

எனவும்,

"திங்க ளிளங்கதிர்போற் றெந்திங்க ளூர்த்தேவன்
மைந்தர் சிறப்ப மகிழ்சிறந்து—திங்கட்
கலைபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப
நிலைபெற்று வாழியரோ நீ."

எனவும் வரும். இனிக் கலிப்பாவினுள் வருங்காற் கடவுண் முன்னிலையாக வரும். என்னை? 'தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே' (தொல்-செய்-138) என்றமையின். அஃது வாழ்த்தியல் வகையென மேலேயடங்கிற்று. வஞ்சிப்பாவிற்கும் அவ்வாறு கொள்ளப்படும். இச்சூத்திரம் பாவென்னும் உறுப்பிற்குப் பொருள் வரையறுத்தது. மற்று 'நிற்புறங்காப்ப'வென ஒருமைகூறிப் 'பொலிமின்' எனப் பன்மைகூறியதென்னையெனின், 'வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப' வென்றமையிற் புதல்வரோடுங்கூட்டிப் பாட அமையுமென்றற்கு அவ்வாறு கூறினனென்பது. (ககo)

423. வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி வுறூஉவென வவையு மன்ன.

இதுவும் பாக்களை மூன்றாக வரையறுக்கின்றது. வாயுறை வாழ்த்தும், அவையடக்கியலும், செவியறிவுறூஉவும் என மூன்றும் மேலைப் புறனிலைவாழ்த்துப்போல் *வாழ்த்தும்பகுதியவாகலும் கலி

* 'வாழ்த்தும் பகுதியவாயினும்' என்பது முன் அச்சுப்பிரதிப்

கேவகையும் வஞ்சியும் பெருமையுமுடையவென மாட்டெறிந்த வாறு. அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும்.

இதன்பொருள்: வாய் - வாய்மொழி, உறை - மருந்து; வாயுறை யென்பது சொன்மருந்தெனப் பண்புத்தொகையாம்: இனி வாய்க்கட் டோன்றிய மருந்தென வேற்றுமைத்தொகையுமாம்: மருந்துபோற லின் மருந்தாயிற்று. அவன் சிறப்புக்கூறி வழுத்தி ஒருசாத்தற்குப் பயன்படச் சொல்லினமையின் வாயுறைவாழ்த்தெனப்படுமென்பது. மற்று 'நிற்புறங்காப்ப'வெனப் புறநிலைவாழ்த்திற்கு இடம்நியமித்தாங்கு இதற்கும் இடனியமங் கூறுரோவெனின், அது மாட்டேற்றலே அடங்குமென்பது.

அவையடக்கியல் - அவையைவாழ்த்துதல்; அவையடக்குதலென் பது இரண்டாம்வேற்றுமைத்தொகை: அடக்கியலென்பது, வினைத் தொகை; தானடங்குதலாயின் அடங்கியலெனவேண்டும், அஃதாவது, அவையத்தாரடங்குமாற்றல்*இனியவாகச்சொல்லி அவரைப்புகழ்தல்.

செவியறிவுறூஉ - ஒருசாத்தற்குச் செவியறிவுபடுத்து அவனை வாழ்த்துதல்; என அவையும் அன்ன - என்ற இம்மூன்றும் அத்தன் மையவேயாம், என்றவாறு.

தெய்வத்தொடுபட்டமையிற் புறநிலைவாழ்த்து முற்கூறி இவை பிற்கூறினான். இவற்றுள் வாயுறைவாழ்த்து முன்னிலைக்குரிமையின் அதன்பின்வைத்தான். முன்னிலைக்கே உரித்தாயினுஞ் செவியறி வுறூஉவினை ஈற்றுக்கண்வைத்தான், பயம்பெறுவானையே நீ இன்ன வருணத்தையாவாயென்று புகழ்படவாழ்த்திச் சொல்லப்படுதல் வேறு பாடுடைமையினென்பது. இங்ஙனம் வரையறுக்கின்றது நால்வகைப் பாவாகிய உறுப்பினை நோக்கியாகலின், அவற்றுள் †இவ்வுறுப்புடைய நால்வகைச்செய்யுட்கும் இவ்வுறுப்பினதிலக்கணம் எய்துவித்துக்

---

* 'தன்னை இழித்துக்கூறி அவரைப்புகழ்தல்' என்றார் நச்சினார்க்கினியர்.

† 'அவ்வுறுப்புடைய' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

கொள்ளப்படும். கொள்ளவே, ஆசிரியப்பாட்டும் வெண்பாட்டும் மருட்பாவும் எல்லாவாழ்த்திற்கும் உரியவென்பதூஉங் கலிப்பாட்டும் வஞ்சிப்பாட்டும் புறநிலைமுதலிய நால்வகைப்பொருட்கும் உரியவல்ல வென்பதூஉம் பெற்றாம். என்னை ?

'மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்றே' (தொல்-செய்-85.)

என்றமையின். (ககக)

424. வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றூங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

இது, முறைபானே வாயுறைவாழ்த்துணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: முற்பருவத்துக் கைத்தும் பிற்பருவத்து உறுதி பயக்கும் வேம்புங் கடுவும்போல வெய்யவாய் இன்சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்கு மெனக் கருதிப் பாதுகாத்துக் கிளக்குங் கிளப்பினை மெய்யாக அறிவுறுத்தலது வாயுறைவாழ்த்தெனப்படும், என்ற வாறு.

வாயுறையென்பது மருந்தாகலான் வேம்புங் கடுவும்போல என்றனென்பது. அதற்குச் செய்யுள்:

" இருங்கட லுடுத்த பெருங்கண் மானில
முடையிலை நடுவணத் திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவல
ரிடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடு பதியாகப் போகித் தத்த
காடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே
யதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
தடம்பொடி கின்ற வுயிரு மில்லை

மடங்க லுண்மை மாயமோ வன்றே
முள்ளி வேய்ந்த கள்ளியம் புறங்காட்டு
வெள்ளி போகிய வியலு ளாங்க
ணுப்பிலா அ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பிலே னீயப்பெற்று
கிலங்கல ஞக விலங்குபலி மிசையு
மின்னு வைகல் வாரா முன்னே
செய்ஃ முன்னிய வினையே
முந்நீர் வளைப்பக முழுதுடன் றுறந்தே." (புறம்-363.)

பிறவும் அன்ன.

425. அவை யடக்கியலே யரிறபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.*

இது, முறைபானே அவையடக்கியலுணர்த்துகின்றது.

இதன் பொருள் : வல்லாதன சொல்லினும் அவற்றை ஆராய்ந்து கொண்மினென அவையகத்தாரெல்லார்க்கும் வழிபடுகிளவி சொல்லுதல் அவையடக்கு, என்றவாறு.

வல்லுதலென்பது ஒன்று வல்லுதல்; ஒருவன் வல்லவற்றை வல்ல வென்பவாகலான் வல்லாதனவற்றை வல்லாவென்றுனென்பது. அதற்குச்செய்யுள் ;

"திரைத்த விரிக்கிற் றிரைப்பினு வாய்போ
லுரைத்த வுரையதனைக் கேட்டு - முரைத்த

---

* "அவையடக்கியலைக் குற்றமற ஆராயின், அறியாதன சொல்லினும் பாகுபடுத்துக் கோடல்வேண்டுமென்று எல்லாமாந்தர்க்குந் தாழ்ந்துகூறல், என்றவாறு" என்பது உரையாசிரியர் உரை.

பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சத்
தியன்றவா செய்வார் பலர்.'' *

இது †பூத்தார் அவை யடக்கு. 'அரிறபத்தெரியின்' என்றதனானே யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய கொச்சக வொருபோகினும் அவையடக்கியல் சிறுபான்மை தொடர்நிலைக்கண் வருமெனக்கொள்க. (கக)

426. செவியுறை தானே,
பொங்குத லின்றிப் புரையோர் நாப்ப
‡ணவிதல் கடனெனைச் செவியுறுத் தன்றே.

இஃது, இறுதிநின்ற செவியுறையுணர்த்துகின்றது.

இதன் பொருள் : செவியுறை - செவிமருந்து ; அதுவும் ஒப்பியலினியபெயர் : தானேயெனநின்ற ஏகாரம் பிரிநிலை. பொங்குதலின்றி- பெருக்கமின்றி; (¶புரையோர் நாப்பண் அவிதல் கடன் எனச் செவியுறுத்தன்றே)-பெரியோர் நடுவண் §அடங்கிவாழ்தல் கடப்பாடெனச் சொல்லிச் செவிக்கணிக்க உறுத்துவது செவியறிவுறூஉ, என்றவாறு.$

---

* இது பொய்கையார் பாடிய இன்னிலையில் அறத்துப்பாலின் ஐந்தாவது செய்யுளாகக் காணப்படுகிறது. †நச்சினார்க்கினியர் உரைப் பிரதியில் இச்செய்யுள் 'பூதத்தார் அவையடக்கு' என்று காணப்படுகிறது.

‡ 'கவிலுதல்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். 'அவிதல்' என்பதே ஏட்டுப்பாடம். பிற உரையாசிரியர்கள் கொண்டபாடமும் இதுவே.

¶ இருபிறைக்குட்பட்ட இப்பகுதி ஏட்டுப்பிரதிகளில்லை.

§ 'தங்கி வாழ்தல்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். 'நடுவணடங்கி' என்று ஏடெளிற் காணப்படுகிறது.

$ ''செவியறிவுறூஉவாவது பெரியோரான் நடுதலின்றித் தாழ்ந்து ஒழுகுதல் கடனெனச் செவியறிவுறுத்தல்'' என்பது உரையாசிரியர் உரை.

அஃது அடங்கி வாழ்வார்க்குப் புகழாதலான் வாழ்த்தின்பாற் பட்டது. அதற்குச்செய்யுள்:

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்" (புறம்-6.)

என்பதனுள்,

*"பணியிய ரத்தைதின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செய்தே
யிறைஞ்சுக பெருமனின் சென்னி சிறந்த
நான்மறை முதல்வ ரேந்துகை யெதிரே"(புறம்-6.)

எனவும்,

"என்றுமின்சொல் லெண்பதத்தை யாகுமதி பெரும"

எனவும்,

"பணிவுடைய †னின்சொல்ல ஞத லீலொருவற்
கணியல்ல மற்றுப் பிற" (குறள்-10-5.)

எனவும் வரும்.

இத்துணையும் பாவினது பெயரும் முறையும் எண்ணும் பொரு உரியவற்றுக்கண் வரையறையுங் கூறியவாறு. (4

427. ஒத்தா ழிசையு மண்டில யாப்புங் குட்டமு நேரடிக் கொட்டின வென்ப.‡

* 'பணீஇயர்' என்பதும் பாடம். 'பணியரத்தைதின் கொடையே' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

† 'இன்சொலன்' என்பதும் பாடம்.

‡ "இது செய்யுட்கு அடி வரையறுத்தலை நுதலிற்று. ஒத்தா ழிசைக்கலிக்கு உறுப்பாகிய ஒத்தாழிசையும், ஆசிரியப்பாவின்கண் நிலைமண்டிலம் அடிமறிமண்டிலம் என்பனவும், ஒத்தாழிசைக்கும் கொச்சகத்திற்கும் பொதுவாகிய குட்டமும் நாற்சீரடிக்கும் பொருந் தின, என்றவாறு. மேல் ஆசியப்பாவின் ஈற்றயலும் இடையினும் மூச்சீரும் இருசீரும் ஐஞ்சீரும் அறுசீரும் வருமென்றதனானே எல்லா வடியும் ஒத்துவருவனவுமுளவென மண்டிலங் கூறவேண்டிற்று. கலிப்பாவிற் சுரிதகம் ஈற்றடி மூச்சீரானும் ஈற்றயலடி முச்சீரானும் வருமென்றமையால் தாழிசையும் தரவும் நாற்சீரானல்லது பிறவாற் றான் வாராவெனக் கூறல்வேண்டிற்று. குட்டமெனினும் தரவெனி னும் ஒக்கும். இனிக் கலிக்குறுப்பாகிய சின்னங்கள் இருசீரானும் மூச்சீரானும் வருதலானும் தனிச்சொல் ஒருசீரான் வருதலானும் வேறோத வேண்டிற்று" என்பது உரையாசிரியர் உரை.

இதுவும் மேனின்ற அதிகாரத்தாற் பாவிலக்கணமே கூறுகின்றது.

இதன் பொருள் : ஒத்தாழிசைக்கலியின்கண்ணும் மண்டிலயாப்பின்கண்ணுங் குட்டம் வருங்கால் அளவடிக்குப் பொருந்தி வருந்தத்தம பாக்கள், என்றவாறு.*

பாவென்பது அதிகாரத்தாற் கொள்ளப்படும். ஒத்தாழிசைக்கலி அளவடியுஞ் சிந்தடி குறளடியும் விராய்கிற்குமாயினும் அளவல்லாவடியேனும் அளவடிக்குப் பொருந்து மாற்றுற் பாக்கொளுத்தப்படுமென்பது.

'அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்' (கலி-11) என அளவடிக்கண் துள்ளலோசை வந்தது.

* "ஒத்தாழிசையும் - ஒத்தாழ்ந்த வோசையும்; மண்டிலயாப்பும் - மண்டலித்துவரும் யாப்பும்; குட்டமும் - இருசீரும் மூச்சீருமாகிக் குறைந்து வருவனவும்; நேரடிக்கொட்டின என்ப - நாற்சீரடிக்குப் பொருந்தின என்று கூறுவர் ஆசிரியர், என்றவாறு. என்றதனால், நாற்சீரடி முரற்கைபடத்துள்ளிவருதலேடன்றித் தாழம்பட வோசை பெற்றும் வருமென்றார். அதுவே, ஒத்தாழிசையை ஒத்து மூன்றாய் வருமென்று 'ஒத்து மூன்றாகு மொத்தாழிசையே' (செய்-142) என்புழிக் கூறுமாற்றான் உணர்க. இனி நாற்சீரடியாய் வரும் ஆசிரியமும் வெண்பாவும் ஈற்றயலடியும் ஈற்றடியும் மூச்சீராய்வருமென முன்விதித்தவை ஒருகால் நாற்சீராயும் வருமென்றற்கு மண்டிலயாப்பென்றார்; அது மண்டில வாசிரியப்பாவும் மண்டிலவெண்பாவுமாம்..... இனி நாற்சீரடியாய்வரும் ஆசிரியப்பாவும் குட்டம்பட்டு வருமென்றார். ஆசிரியப்பாவிற்குக் குட்டமாவது குறளடி வஞ்சியும் சிந்தடி வஞ்சியும் பொருந்திவருதல். வெண்பாவிற்குக் குட்டமாவது ஈற்றடியேயன்றி ஏனையடியுங்குறைதல்." என்பது நச்சினார்க்கினியர் உரை.

"போரவுணர்க் கடந்தோய்நீ
புணர்மருதம் பிளந்தோய்நீ"

எனக் குறளடிக்கண்ணும் அவ்வாறே துள்ளலோசை வந்தவாறு கண்டுகொள்க.

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே"

என இஃது இடையடி குறைந்தமையிற் குட்டமென்னப்பட்டது. நரற்சீரடி யாத்துவருவன மண்டிலயாப்பெனப்படும். அவைபோலக் குட்டமும் நேரடிக்குப் பாப்பொருந்தின என்றவாறு.

ஈற்றின் மண்டிலமோதிய தென்னையெனின், அது சொல்லாக்காற் குட்டமே நேரடிக்கு ஒட்டுவதாவான் செல்லுமாகலினென்பது. மண்டிலமென்பன,

"மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே"

என்றற் றொடக்கத்தன.

ஒத்தாழிசை முன்வைத்ததென்னை யெனின், மண்டிலம்போல்வனவுங் குட்டம்போல்வனவுங் கலிப்பாவினுட் சிறுபான்மையென்றற்கென்பது. அவை அளவடிக்குரிமை யாண்டுப்பெறுதுமெனின், அவை தம்மை உறழுங்கால் ஓதிய நிலவகையானும் 'இன்சீர் வகையினைந்தடிக்கு முரிய' (தொல்-செய்-54) என்னுஞ் சீர்வகையானும் பெறுது மென்பது. இதனது பயங் குறளடிவஞ்சிப்பாப்போலப் பாவேறுபடாவென்பது. ஒட்டியென்றதனான் இத்துணை போகாது சிறுவரவிற்றாய் வரும் வெண்பாக்கண்ணுமென்பதுகொள்க. (கக௫)

428. குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்.

*இது குட்டத்திற்கோர் சிறப்புவிதி.

இதன் பொருள் : குட்டம் எருத்தடியின்கண்ணும் வரும், என்ற வாறு.

மேல் ஆராய்ச்சிப்பட்ட குட்டம் இடைவருதலன்றி ஒருபாட்டின் ஈற்றயலடிக்கண்ணே வந்தொழிதலும் உண்டன்றே ? அதுவும் பாவிற் கேற்பக் குறைக்கப்படுமென்பான் 'குட்டம் எருத்தடி யுடைத்து மாகும்' என்றான்; குறைத்தற்குக் கூறினனல்லனென்பது. இதனை இவ் வாறு கூறவே மேற்கூறிய குட்டம் ஒத்தாழிசைக்கட்போல இடை யிடை வருமென்பது பெற்றாம்.

"உடைதிரைப் பிதிர்விற் பொங்கிமுன்
கடல்போ லேன்றல் காடிறந் தோரே" (அகம்-17)

என ஈற்றயலடி முச்சீரான் வந்தது. பிறவும் அன்ன. (கக)

* "என்பது மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்.) ஈற்றயலடி முச்சீரான் வரவும் பெறும், என்றவாறு. 'எருத் தடியுடைத்து' என்றதனானே ஈற்றடலடி முச்சிரெனப் பொருள்படு மோவெனின், ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீரான் வருதலானும், தளிகியலென ஒதலானும் அவ்வாறு பொருள்படுமென்று கொள்க. .....இன்னும் குட்டமென்பதனைத் தரவுகொச்சகமாகிய கொச்சக ஒருபோகிற்கும் பெயராக வழங்கினும் அமையும். அவ்வழி ஒத்தா ழிசை என்பதனை ஒத்தாழிசைக் கலியென்க வெனத் தரவையுங் கூட்டிப் பொருளுரைக்கப்படும்" என்பது உரையாசிரியர் உரை.

"முற்கூறிய குட்டம் தரவுக்கும் உரித்தென்கின்றது. (இ-ள்.) தரவினது ஈற்றடி குறைந்துவருதலே யுடைத்தாம் என்றவாறு. எருத்து என்றது தரவை ; அஃது 'எருத்தே கொச்சகம்' (செய்-153) என்பதனால் உணர்க." என்பது நச்சினார்க்கினியர் உரை.

429. மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டுஞ் செந்தூக் கியல வென்மனார் புலவர்.

*இது, மண்டிலமுங் குட்டமும் வருமிடனுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: மேற்கூறிய மூன்றனையும் இன்ன பாவென்பது உணர்த்திலுன் அவற்றுள் இறுதிநின்ற மண்டிலமுங் குட்டமும் ஆசிரியப்பாவினை உறுப்பாகவுடைய, என்றவாறு.

†எனவே, ஒத்தாழிசையாகிற் கலிப்பாவினை உறுப்பாகவுடைத்தென்பது பெறுதும். என்னை?

•'ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே''

(தொல்-செய்-130.)

என்பவாதலான்.

மேற்கூறிய மண்டிலவாசிரியத்தினை நிலைமண்டிலமெனவும் அடிமறிமண்டிலமெனவும் பெயரிட்டு வழங்குவாரும் உளர். நின்றவாறு நின்றலும், அடிமறித்துக்கொள்ளினும் பொருள் திரியாது நின்றலுமுடையவென்பது போலும் அவர்கருத்து. அடிமறித்தல் பொருள்

* "என்பது மேற்சொல்லப்பட்டவற்றுள் மண்டிலங் குட்டம் என்பனவற்றுக்குரியதோர் ஓசைவேறுபாடுணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்.) மண்டிலமாகக்கூறப்படும் பாவும், குட்டமென்று கூறப்படும் பாவும் அகவலோசையியல்பின, என்றவாறு." என்பது உரையாசிரியர் உரை.

† "எனவே, வெண்பாவின்கண் சிறுபான்மை வருமென்றவாறாயிற்று. இரண்டும் அங்ஙனம் வருதல் சான்றோர் செய்யுளுட்காண்க" என்பர் நச்சினார்க்கினியர்.

கோட்பகுதியாகலான் அஃதமையும்; அங்ஙனங் கொள்ளின் சிரனிறை முதலிய பொருள்கோட்பகுதியானுஞ் செய்யுள் வேறுபடுமென மறுக்க. இனிக் குட்டமும் இருவகைத்தென்ப, இணைக்குறளாசிரியப்பா நேரிசையாசிரியப்பாவென. அவை அவ்வாறு கொள்ளின் இழுக்கே. 'குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்' (தொல்-செய்-116) என்று இருவகையாற் கூறினமையு னென்றலுமொன்று. இனி ஒன்றுக வழங்குதலே வலியுடைத்து. 'குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்' என ஒருமை கூறியவதனுன் ஒழிந்தவழி இரட்டித்துக் குறையவேண்டு மென்பது கொள்க. மற்று ஒத்தாழிசைக்கலியும் மண்டிலயாப்பு மென்றவழிக் கலிப்பா முற்கூறியதென்னையெனின், குட்டம் ஆண்டுப் பயின்றுவருதலின் ஆசிரியத்திற்கும் அதனை முற்கூறினுன்; இனி முறையானே வெண்பாக் கூறுமென்பது.

குட்டமென்பது வடக்குச்சொல்லாற் செய்யுளென்பாருமுளர். தாற்சொல்லானுமன்றிச் செய்யுள் செய்யப்படாமையின் அது குட்ட மென்றல் சிரம்பாது. ஒத்தாழிசையென்பதும் எல்லாச் செய்யுண்மே லுஞ் செல்லுமெனவும் உரைப்ப. பாவும் இனமுமெனப் பகுத்துரைப் பார்க்காம் அது பொருளாவதென மறுக்க. அல்லதூஉம் ஒரோவொ ன்றே வருவது ஒத்தாழிசை யெனப்படாவென்பது. செந்துக்கென் பது ஆசிரியப்பாவென்றவாறு. பாவினைத் தூக்கெனவுஞ் சொல்லுப. இயலவென்பது அப்பாவானே நடக்குமென்றவாறு. இதுவும் இன்ன செய்யுட்கு உரித்தெனப் பாவினை வரையறுத்ததேயாம். (ககஎ)

430. நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ
டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின.

9, வெண்பாவென்னும்உறுப்பினே இன்னுழிப் பாவாமெனப் பொருளுஞ் செய்யுளும் பற்றி வரையறுக்கின்றது.

இதன்பொருள்: நெடுவெண்பாட்டுங் குறுவெண்பாட்டுங் கைக்கிளையும் பரிபாடலும் அங்கதச்செய்யுளுமென ஐந்தும் தம்மின் ஒத்து வெண்பாவென்னும் உறுப்பினுளே கூறப்படும், என்றவாறு.

நெடுவெண்பாட்டென்பன தாமுடைய பன்னீரடி உயர்பு, இழிபு ஏழடியாக வருவனவென்பது. எனவே குறுவெண்பாட்டென்பன இரண்டடியான் மூன்றடியான் வருவன. குறள்வெண்பா சிந்தியல் வெண்பா வெனப்படலும் ஒன்று. எனவே நான்கடியான் வருவன அளவியலவெனப்படும். கைக்கிளைப் பொருண்மைத்தாகலின் மருட் பாவினையுங் கைக்கிளையென்றார். பரிபாடலென்பது பரிந்துவருவது; அஃதாவது கலியுறுப்புப்போலாது பலவடியும் ஏற்றுவருவது. அங் கதமென்பது முகவிலக்கு முதலாகிய விலக்குறுப்பாகியும் பிறவாற்ரு

* "என்பது, வெண்பாவாமா றுணர்த்துதல் நுதலிற்று. வெண் பாயாப்பாவது, வெண்சீராணுமியற்சீராணும் வெண்டளையாணும் செப்ப லோசையாணும் அளவடியாணும் முச்சீர்நற்றடியாணும் வருவது. இவற் றிற் கிலக்கணம் ஓதப்பட்டன. ஈண்டோதப்பட்டனவெல்லாம் அவ் வாறு வரும், என்றவாறு. இவையெல்லாம் ஓசையாலெக்குமாயி ணும், அளவாணும் தொடையாணும் பொருளாணும் இனத்தாணும் வேறுபடுத்திக் குறியிடுகின்ரரென்றுகொள்க. நெடுவெண்பாட்டா வது அளவடியின் நெடியபாட்டு. குறுவெண்பாட்டாவது அளவடி யிற் குறியபாட்டு. கைக்கிளையென்பதூஉம் அங்கதமென்பதூஉம் பொருளாலாகிய பெயர். பரிபாட்டாவது, பரிந்தபாட்டு பரிபாட் டெனவரும்; அஃதாவது, ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பல வெண்பாவுமாகிப் பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப்பெறுவது. ஒத்தவை என்றது, அளவாணும் பொருளாணும் இனத்தாணும் வேறுபடுக்கப்படாத சமனிலை வெண்பாக்கள்; அவை யாவன, நான்கடியான் வருவன" என்பது உரையாசிரியர் உரை.

னும் அவை பொருளாக வருவன. ஒத்தென்பது இல்க்கணத்தில் நிரியாதென்றவாறு. இதனது பயம் கைக்கிளை வெண்பாவினின் வரி னும் கலிப்பாவின்பாற் படுமென்பது. பரிபாடலுஞ் சிற்றுறுப்புவகை யான் ஒப்புமையுடையவென்பது கொள்க. அல்லதூஉங் குறவெண் பாட்டும் பலவாகியும் ஒன்றாய் அடங்குமென்பதூஉமாம். இனி அல்லா தார் வெண்பாவினை ஐந்தெனவுஞ் சொல்லுப. அவை தனிச்சொற் பெற்றும் பெறாதும் வருமெனவும் அவ்வாறு வருங்கால் ஈற்றடி ஒழித்து எல்லாந் தனிச்சொற்பெறுதலும் அவற்றை ஒன்றொன்ற னோடு பரிமாற்றித் தனிச்சொற்கொடுத்து உறழ்வனவுமாகிப் பலவா மென்பது. அங்கதச்செய்யுளென்பது பண்புத்தொகை. அங்கதமும் கைக்கிளையும் மற்றைப்பாக்களும் உறுப்பாக வருமெனப்படும். (ககஅ)

431. கைக்கிளை தானே வெண்பா வாகி
யாசிரிய வியலான் முடியவும் பெறுமே.

இஃது, எய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: வெண்பா உறுப்பாகி வருமென்றன் அற்றன்றி வெண்பாவினோடு ஆசிரியப்பாவும் உறுப்பாகக் கைக்கிளை வரும், என்றவாறு.

அங்ஙனம் வருவது மருட்பாவாகலாற் கைக்கிளைப்பொருளே மருட்பாவால் வருவதுடைத்தென்பது பெற்றும். பெறவே, 'கலிநிலை வகையும் வஞ்சியும் பெரு' (தொல்-செய்-110) என்புழி விலக்கப் படாத ஆசிரியப்பாவும் உறுப்பாகவருதலின் வாழ்த்தியல்வகையும் புற நிலைவாழ்த்து முதலாயினவாழ்த்துங் கைக்கிளைப்பொருளாக வரும் மருட்பாவென்பது பெற்றும். கைக்கிளை யதிகாரப்பட்டது கண்டு அதனை ஈண்டுக் கூறினன். ஒழிந்த புறநிலை வாழ்த்து முதலாயின செவியறி வுறூஉக்களும் பொருளாக மருட்பாவருமென்பது முன்னர்ச்சொல் லும். இவற்றுக்கெல்லாஞ் செய்யுளும் ஆண்டுக் காட்டுதும். (ககக)

432. பரிபா டல்லே தொகைநிலை விரியி
னிதுபா வென்னு மியனெறி யின்றிப்
பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப.

இது, பரிபாடற் காவதோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பரிபாடல் வெண்பாவுறுப்பாக இன்னபாவென்ப தணராமைப் பொதுப்பட நிற்றற்கும் உரித்து, என்றவாறு.

"மண்ணுர்ந் திசைத்த முழவொடு கொண்டதோள்
கண்ணே டெனவிழுஉங் காரிகை கண்டார்க்குத்
தம்மோடு நிற்குமோ நெஞ்சு."

எனப் பரிபாடல் உறுப்பாகவந்தது.

"ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலைத்
தீயுமிழ் திறலொடு முடிமிசை யான்வர"

என்பது வெண்டலையும் ஆசிரியத்தலையும் விராய் வந்து துள்ள லோசைபடச் சொல்லவும்படுதலின் இதுவென்னும் இயனெறியின்றிப் பொதுவாய்நின்றதெனப்படும். உம்மை இறந்தது தழீஇயிற்று. மற்று இது கலிப்பாட்டிற்கும் ஒக்கும் பிறவெனின், ஒவ்வாதாகாதே? ஆசிரி யன் இவ்வாறு கூறினமையினென்பது. அல்லதூஉங் கலிக்கு ஓதிய இலக்கணமின்மையானும் பரிபாடலெனவே படும் பெரும்பான்மையு மென்பது. தொகுத்து விரித்த பாநான்கனுள்ளும் வேறுங்கால் அது வெண்பாவினன் யாக்கப்படாது பொதுவகையான் யாக்கப்படுமென்ற வாறு. (கூ0)

433. கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தெடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

இது, மேற்கூறியவகையாற் பரிபாடற்கேற்ற பாவுறுப்பினை யெடுத்து விரிகூறி இத்துணை உள்ளுறுப்புடைத்தென்கின்றது. உள் ளுறுப்பெனக் கூறவேண்டுவதென்னை, பண்புபற்றி நான்குறுப்பான் எண்ணப்படாவோவெனின், அவை எல்லாச்செய்யுட்கும் பொதுவாக லான் அவற்றேடெண்ணுது இவற்றை இப்பாவிற்குறுப்பாகக் கூறினு னென்பது. மேல்வருகின்ற கலியுறுப்பிற்கும் இஃதொக்கும்.

இதன் பொருள்: செப்பிய நான்குறுப்புங் கலிக்குறுப்பாகச் சொல்லப்பட்ட வகையானே வரும் அவை ஈண்டும், என்றவாறு.

தனக்கென்றதனுன் அவையல்ல உறுப்புளவென்பது முன்னர்ச் சொல்லுதும்: 'சொற்சீரடியும்' (தொல்-செய்-122) என்புழிக் காண்க. கொச்சகமென்பது ஒப்பினுகிய பெயர். ஒராடையுள் ஒருவழியடுக்கியது கொச்சகமெனப்படும்.* அதுபோல ஒருசெய்யுளுட் பலகுறள் அடுக்கப்படுவது கொச்சகமெனப்பட்டது. குறிலினே பயின்ற அடி அராக மெனப்படும். சுரிதகமென்பது அடக்கியலெனப்படும். எருத்தென் பது தரவு. † இவ்வே நான்குறுப்பாகவருவது பரிபாடலென்றவாறு. பெரும்பான்மையுங் கொச்சகவுறுப்புப் பயின்றுவருதலின் அதனை முன்வைத்தான். அராகம் எழுவாயாகாமையின் அதனை இடைவைத் தான். சுரிதகமென்பது எஞ்ஞான்றும் ஈற்றதாகலான் அதனை அதன் பின் வைத்தான். எருத்தினை ஈற்றுக்கண் வைத்தான் அதனையின்றி

* கொச்சகம் என்பதற்கு நச்சினர்க்கினியர் கூறிய பொருள் இவ்வியல் 153 ஆவது சூத்திரவுரையில் கீழ்க்குறிப்பாகக் குறிக்கப் பட்டுள்ளது.

† "கொச்சகம் என்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும், ஆசிரியவடி, வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி, முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகையடியானும் அமைந்த பாக்களை உறுப்பாக வுடைத்தாகி, வெண்பா வியலாற் புலப்படத் தோன்றுவது..... அராகம் என்பது ஈரடியானும் பலவடியானும் குற்றெழுத்து நெருங்கி வரத் தொடுப்பது; பெருமைக்கெல்லை ஆறடி..... சுரிதகம் என் பது ஆசிரிய வியலானுதல், வெண்பா வியலானுதல், பாட்டிற் கருதிய பொருளை முடித்து நிற்பது. எருத்து என்பது இரண்டடி இழிபாகப் பத்தடிப் பெருமையாக வருவதோர் உறுப்பு." என்றார். உரையா சிரியர்.

யும் வரும் பரிபாடலென்றற்கும் இஃது இடைவருமென்றற்கு மென்பது.* உதாரணம்:

"'வாஞ ரெழிலி †மழைவளந் தந்த
தேனூர் சிமய மலையி னிழிதந்து
நான்மாடக் கூட லெதிர்கொள்ள வாஞ
‡மருந்தா குந்தீ நீர்மலி தூறையெம்
விருந்தையூ ரமர்ந்த செல்வனின்
றிருந்தடி தலையுறப் பரவுதுந் தொழுதே.' (இது தரவு)

'ஒருசார், அணிமலர் வேங்கை மாரதம் மிழம்
பிணிவெகிழ் பிண்டி § சிவந்துசேம் போங்கி
மணிநிறங் கொண்ட மலை;
ஒருசார், தண்ணறுந் தாமரைப் பூவி னிடையிடை

* "பாட்டிற்கு முகம் தரவாதலானும், கால் சுரிதகமாதலானும், இடை நிலைப்பாட்டாகிய தாழிசையும் கொச்சகமும் அராகமும் கொள்ளக் கிடத்தலின், எருத்து என்பது கழுத்தின் புறத்திற்குப் பெயராக வேண்டு மாதலான், அவ்வுறுப்பைத் தரவைச் சார்ந்து கிடத்தல் வேண்டுமென்று கொள்க. 'தரவே யெருத்த மராகங் கொச்சக—மடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே' என்பது அகத்தியமாதலின், தரவென்பதோர் உறுப்புங் கோடல்வேண்டு மெனின், இவ்வாசிரியர் 'கொச்சகம்' என ஒதியவதனானே, தரவு அவ்விலக்கணத்திற்படு மென்பதும் ஒன்று. பரிபாடற்கண் மலையும் யாறும் ஊரும் வருணிக்கப்படும்; 'அதுதான், மலையே யாறே யூரென்றி வற்றி—னிலைபெறு மரபி னீங்கா தாகும்' என்றாராகலின். இனிச் சுரிதக மின்றியும் பரிபாடன் முற்றுப்பெறும்; 'கொச்சக வகையி ணெண்ணெடு விராஅ—யடக்கிய லின்றி யடங்கவும் பெறுமே' என அகத்தியனார் ஒதுதலின்." என்பது இளம்பூரணர் உரை.

† 'மழைவள நந்த' என்பதும் பாடம்.

‡ 'மருந் தாகுதி' என்பதும் பாடம்.

§ 'சிவந்து' என்பதும் பாடம்.

வண்ண * வரியிதழ்ப் போதின்வாய் வண்டார்ப்பக்
கண்வீற் றிருக்குங் கயல் ;
ஒருசார், †சாறுகோ ளொத்தத் திரையென மாறுற
விளியோதை பற்றி வீழ வாரந்
திரிதரு மார்த்து நடுநரு மீண்டித்
திருநயத் தக்க வயல் ;
ஒருசார், அறத்தொடு வேதம் புணர்தவ மூற்றி
விறற்புகழ் நிற்ப விளங்கிய கேள்வித்
திறத்திரி வில்லா வந்தண ரீண்டி
யறத்திற் றிரியாப் பதி.' (இவை நான்குங் கொச்சகம்.)

'ஆங்கு, அனேயவை நல்ல நனிகூடு மின்ப
மியல்கொள நண்ணி யவை.' (இது கொண்டுநிலே.)

'‡ஊர்களிற்றன்ன, மொளியிழை யொல்கிய வேரரு நுதலரும்
புலத்தோ §டளவிய புகழணிந் தோரு
நலத்தோ டளவிய நாணணிந் தோரு
$மடையக் குடையர் புடையர் பூவேந்தி

* 'மரையிதழ்' என்பதும் பாடம்.

† 'காறுகோளொத்தத்திரை யென மாறுற' என்பதும் பாடம்.

‡ 'ஊர்களிற்றன்ன செம்மலோடு மவ்வாயிருள் பனிச்சை வரு சிலேப்புருவத் தொளியிழையோங்கிய வொண்ணுதலோரும்' என நச்சினார்க்கினியர் உரைப்பிரதியிற் காணப்படுகிறது.

§ 'அளேஇய' என்பதும் பாடம்.

$ இவ்வடிக்குமுன் 'விடையோ டிகலிய விறனடை யோரும்-நடைபட மேவு நாணிழந் தோரும் - கடனிரை திரையிற் கருநரை யோருஞ்-சுடர்மதிக் கதிரென நாநரை யோரும்' என்னும் இவ்வடி கள் அதிகமாக நச்சினார்க்கினியர் உரைப்பிரதியில் காணப்படுகின்றன.
'மடையர்குடையர்' என்பதும் பாடம்.

யிடைவொழி வின்றி *யடியுறை யாகத்
தளங்கா விழுச்சீர்த் துறக்கம் புரையு
மிருகே ழுந்தி யணிந்த †வெருத்தின்
வரைகெழு செல்வ நகர் ;
‡வண்டொடு வண்டியா ழோர்ப்பத்
தண்டா வருவியோ டுர முழவார்ப்பப்
புரீஇ, யண்டர் பாடலோ டாட லொலிக்கூடு
நறவொடு காமம் விரியாப் பிறவு
மனையவை யெல்லா மமையும்
புனையிழை பூஉ முடியு நகர்.'(இவையுமெல்லாங்கொச்சகம்.):

'மணிமரு டகைவகை நெறிசெறி யொலிவிரி கிமிர்கூந்தற்
றுணைதெளி யொளிதிகழ் தெரியலர் மகிழுண்கண் வாணு
[தலார்
மணிமயிற் றெழிலெழில் கலுழ்மலி கதழ்கடுங் கடாக்களிற்
[றண்ணலவரோ
டணிமிக வல்ல விகப்பப் பிணிநீங்க
வல்லவை யெல்லா மியைதருந் தொல்சீர்
வளாவாய் தழுவிய கல்சேர் கிடக்கைக்
குளவா யமர்ந்தா னகர்' (என்பன முடுகியலடி.)

* 'அடியுறையா ரீண்டி வினைந்தார் வினைவின் விழப்பயன்றுயிக்
தும்—தளங்கா விழுச்சீர்த் துறக்கம் புரையும்' என்பது நச்சிஞர்க்கினி
யர் உரைப்பிரதிப்பாடம்.

† 'எருத்தி—னனைகெழு' என்பதும் பாடம்.

‡ 'வண்டொடு தும்பியும் வண்டொடை யாழார்ப்ப விண்ட கட
தட மேகமோ டதிர்தரத்—தண்டா அருவியோ டிருமுழா வார்ப்ப-வரி
யுண்ட கண்ணரோ டாடவர் கூடிப்—புரிவுண்ட பாடலோ டாறுந்
தோன்றக்-கூடு நறவொடு காம மகிழ்விரிப்பக்—கூடா நறவொடு காமம்
விரும்ப—வினைய பிறவு மிவைபோல் வனவு-மனையவை யெல்லா மியை
யும்—புனையிழைப் பூமுடி நாகர் நகர்' என்பது நச்சிஞர்க்கினியர்
உரைப்பிரதிப்பாடம்.

'*திகழொளி, முந்நீர் கடைந்த வக்கால் வெய்திறம்
புகழ்சால் சிறப்பி னிருதிறத் தார்க்கு
மமிழ்து கடைய வருவலி நாணு
மிகர வருவட மாழியான் வாங்க
வரைவரை காட்டா வுளவிஞன் வையம்
புரவெதிர் கொண்டாருந் தாம்;
மணிபுரை மாமலை ஞாறிய ஞால
மணிபோற் பொறுத்தாருந் தாம்;
பணியுறுசீர்க், கல்லு றுயர்சென்னி யிமயவி ஞைகத்
தொல்புகழ் தந்தாருந் தாம்.' (இவையுங் கொச்சகம்.)

'அணங்குடை யருந்தலை யாயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத் தண்ணலை வணங்கி
நல்லடி யேத்தினிற் பரவுது
மெல்லாம் பிரியற்கவெஞ் சுற்றமொ டொருங்கே'
(என்பது ஆசிரியச் சுரிதகம்.)"

"அறமோ ருள்ளாரு மறைகாப்ப" என்னும் பரிபாடலுள்,

"செறுநர் விழையாச் செறிந்தநங் கேண்மை
யறுமுறை யாஞ மிடைக நெறிமாண்ட
தண்ணரல் வையை யெமக்கு"

இது வெள்ளைச்சுரிதகத்தான் இற்றது.

'காமங்கண்ணிய நிலைமைத்தாகும்' என்பது, காமப்பொருள் குறித்து வருமென்றவாறு. கண்ணியவென்ற அதனானே முப்பொருளு மன்றிக் கடவுள்வாழ்த்தினும் மலைவிளையாட்டினும் புனல்விளையாட்டி னும் பிறவுமெல்லாங் காமங் கண்ணியே வருமென்பது. என்னை?

* 'திகழொளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்-திகழ்பெற வாங் கித்தஞ்சீர்ச் சிரத்தொளிமகர—மறிகடல்வைத்து னிறுத்துப்புகழ்சால் சிறப்பின்—இருதிறத்தோர்க்கும்' என்பது நச்சினார்க்கினியர் உரைப் பிரதிப்பாடம்.

"எல்லாம் பிரியற்கவெஞ் சுற்றமொ டொருங்கே" எனத் துணை பிரியாமை காரணமாகத் தொழுதேதமென்றலின்.

"காமஞ் சுற்றமோ டொருங்குளின் னடியுறை
யாமியைந் தின்று பொலிகென வைகலு
மேமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழி முதல்வனின் முணிழ றொழுதே"

என்பதும் அது.

இனிச் செப்பிய நான்கென் றெண்ணப்பட்ட நான்கனையுமன்று; அன்னவற்றோடு மேற்கூறிய நான்கு பாவும் இடைவந்து விரவு மென்க. அது நோக்கிப்போலும் பரிபாடல் என்றது.

"அரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையு மேனியை மேனித்
திருவெழு மிர்ந்த மார்பினை மார்பிற்
றெரிமணி விளங்கும் பூணை மால்வரை
யொரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்கையை"

ரிடம் வந்தது. "*தின்னெக்கும் புகழ்நிழலவை" என்பது வஞ்சித்தூக்கு. பிறவும் அன்ன காட்டுப. அது பொதுவாய் நிற் றலும் உரித்தென்றதனுன் அடங்கும். இனிச் செப்பிய நான்கென் றதனுன் அராகமின்றி வருதலும், கொச்சகம் ஈற்றடி குறைந்து வருத லும் அவ்வழி அசைச்சீராகி இறுதலும் மேற்கலிப்பாவிற்குச் செப்பிய சுரிதகமாதலுங் கொள்க. (கஉக)

434. செற்சீ ரடியு முடுகிய லடியு மப்பா நிலைமைக் குரிய வாகும்.

இதுவும் பரிபாடலுறுப்பு உணர்த்துகின்றது.

இதன் பொருள்: எண்ணப்பட்ட இரண்டும் பரிபாடற்குள்ள உறுப்பாய்வரும், என்றவாறு.

---

* 'தின்னெக்குளின் புகழ்நிழலவை' என்பதும் பாடம்.

சொற்சீரும் முடுகியலுமென்னுது அடியென்றதனுன் மேற்கூறிய அடியொடு தொடர்ந்தல்லது வாராவென்பதாம். சொற்சீரடியாமாறு முன்னர்ச் சொல்லுதும். *முடுகியலடியென்பது முடுகியலோடு விராய்த் தொடர்ந்ததொன்றுகிய வெண்பாவடி. அராகமென்பது தாமே வேறுசில அடியாகி வருவன. இவையன்றிக் † குறிலிணை பயில்வன முடுகியலெனவுங் குறிலிணை விரவிவருவன அராகமெனவுஞ் சொல்லுவாரும் உளர். 'முடுகுவண்ண-மடியிறந் தோடி யதலே ரற்றே' (தொல்-செய்-234) என்பவாகலின் மேலதே யுரை. 'உரிய'வென்றதனுன் இத்துணை பயின்றுவாரா இவ்விரண்டுங் கலிப்பாவினுளென்பதுகொள்க. எனவே, அராகவுறுப்புத் தேவபாணியல்லது அக்கலிக்கண் யாண்டும் வாராதாயிற்று. (கஉஉ)

435. கட்டுரை வகையா னெண்ணெடு புணர்ந்து
மூட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியு
மொழியசை யாகியும் வழியசை புணர்ந்துஞ்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

மேலெண்ணப்பட்ட சொற்சீரடியாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: சொற்சீரடி இக்கூறிய நான்கு வகையாலும் வந்து பயிலும், என்றவாறு.

கட்டுரைவகையான் எண்ணெடுபுணர்ந்தது,

"வடவேங்கடந் தென்குமரி, யாயிடை" (தொல் - பாயிரம்.)

எனவும்,

---

* இவ்வியல் 65, 66ஆவது சூத்திரங்களும், அவற்றின் உரையும் நன்று ஒத்து நோக்கற்பாலன.

† "முடியலாவது ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானும் குற்றெழுத்துப்பயிலத் தொடுப்பது" என்றார் உரையாசிரியர்.

"அஇஈ, எஒ என்னு மப்பா லொந்தும்." (தொல்-எழுத்-நூன்-3.)

எனவும் இவை கட்டுரைக்கட் சொல்லுமாறுபோல எண்ணின மையிற் கட்டுரைவகையான் எண்ணெடுபுணர்ந்தன. இனி, மூட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகும் இயல்பாய் வருமாறு :

"னின்னெக்கும் புசழ்னிழ லவை" எனவும், "கறையணி மிடற்றினவை" "கண்ணணி நுதலி னவை" "பிறையணி சடையி னவை" எனவும் வரும்.

'மூட்டடியின்றி' என்ற இவை தாக்குப்பட்டு முடியுமடியல்ல என்றவாறு.

மேற்காட்டிய பரிபாடற் செய்யுளுள், 'ஒருசார்' என்பது ஒழியசை ; என்னை ? அது சீராகலின் அதனோடு சில அசை கூடியன்றி அசையெனப்படாமையின். 'ஆங்கு' எனவருந் தனிச்சொல் வழியசையெனப்பட்டது. என்னை ? அஃது அசையாய்னின்று சொற்சீரடியாகலின். மற்றுச் சொற்சீரடியினை அசையென்ற தென்னையெனின், இயலசை தானேயும் ஒழியசையாய் னிற்குமென்றற்கென்பது.

"ஒருஉக், கொடியிய னல்லார் குரலுற்றத் துற்ற
மூடியுதிர் பூந்தா தமொய்ம்பின வாகத்
தொடிஇய வெமக்குநீ யாரை பெரியார்க்
கடியரோ வாற்ரு தவர்" (கலி-88.)

என்புழி 'ஒருஉ' வெனனின்ற இயலசைதானே ஒழியசையாய் னின்றது.

"உருவது போலுமென் னெஞ்சு ; எள்ளித்
தொருபுட லுடைவ போலு மயில்" (கலி-33)

என்பது வழியசைபுணர்ந்த சொற்சீரடி ; என்னை ? எள்ளியென னின்றசீரின்வழித் தொருபென வந்தவசை உருவதுபோலுமென்னுந் தொடையொடு பொருந்தி, உருவதுபோலு மென்னெஞ் செள்ளித் தொருபுடனெனப் புணர்ந்து னின்ரூற்போல்வதோர் சுவையமைசெய்து னின்றமையின். கொச்சகம் இடைனிலைப் பாட்டெனப்படாமையின்

"ஆடிவ போலு மயில்" என நாலடியாலும் வருவதாயிற்று, வகை யறையின்மையின்.* இங்ஙனம் வந்தமையின் சொற்சீரடிமேல் எண்ண வும்படும். இவை கலிக்கண் வருங்கால் ஒத்தாழிசைக்கண் முடுகிய லடி வாராதென்பதனுஞ் சொற்சீரடி வருஞான்றுத் தனிச்சொல்லாகி யன்றி வாராதென்பதனுமும் உறழ்கலிக்கண்ணும் முடுகியலடி உரித்தன் றென்பதனுங் கொள்க.

சொற்சீர்த்திறுதலென்பது : ஒரெழுத்தொருமொழி முதலிய சொற்களெல்லாம் அடியிறுதிக்கண் அடிப்பட முடிந்து அடியாதலிலக் கணத்த அலையென்றவாறு. இனி, ஒழியசையினையும் வழியசை யினையுங் கூறினனென்னுமோவெனின், 'ஏக்கூ ஞத னேரடிக் குரித்து' (தொல்-செய்-49) என்றமையின் ஈண்டு அசைகூறுகாது. அல்ல தூஉம் ஆண்டுக் கூனெனப்பட்டதும் ஈண்டுச் சொற்சீரடியெனப்பட்டு அடங்கு மென்பதனுணுமுடைத்தென்பது. இவையெல்லாம் பரிபாடற் கண்ணதே கூறினனெனினும் ஒழிந்த பாவினுட் சொற்சீரடிவருமென விதந்தவழி, அதுவே இலக்கணமாக வரும் ஆண்டுமென்பது. இயல் பென்றதனானே யாண்டும் வரினும் அஃதிலக்கணமென்பது பெற்றும். அல்லதூஉம் 'தொகைநிலை விரி' (தொல்-செய்-120) என்ற மிகை யாற் பரிபாடற்கு உரியவாகக் கண்டுகொள்க. அவை யாவையோ வெனின், முடுகியலடி மேற்காட்டிய பரிபாடலுண் †"மணிமருடகை" என்பது முதலாகக் "குளவா யமர்ந்தா னகர்" என்பதீறாகக் கண்டு கொள்க. (கஉக)

---

* " 'நொந்து, நகுவனபோ னந்தின கொம்பு ; நைந்துள்ளி-யுகுவது போலுமென் னெஞ்சு ; எள்ளித் - தொகுபுட னுடிவ போலு மயில்; கையி - லுகுவன போலும் வளை' இவை முச்சீரடியான் வந் தனவும், நாற்சீரடியாய் வந்தனவுமாய் நின்றவாறுணர்தற்கு நகுவன, உகுவது, தொகுபுடன், உகுவன எனத் தொடைச் சுவடுபடுத்துக் கூறலே யவற்றின் முன்னின்ற சொற்கள் வழியசை புணர்ந்த சொற் சீரடியாயவாறு காண்க. இவை இடைநிலைப்பாட்டன்றி கொச்சக மாகலின் வரையறையின்றி, 'தொகுபுட னுடிவ போலு மயில்' என நாற்சீரடியான் வந்தது." என்றார் நச்சினார்க்கினியர்.

† இப்பாடலை 381-ஆம் பக்கத்திற் காண்க.

436. அங்கதந் தானே யரிறபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.

இது, முறையானே அங்கதச்செய்யுளுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: அது செம்பொருள் *கரந்தது என்று இருவகைத்தாம் என்றவாறு.

அங்கதமென்பது வசை; அதனை இருவாற்றாற் கூறுகவென்பான் இது கூறினனென். அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும். 'அரிறப' வென்ற தென்னெனின், அவை புகழ்போன்று வசையாதலும்பட்டுத் தோன்றும் மயக்கமுடையவாதலின் மயக்கமறத் தெரியினென்றவாறு.

"நூற்றுவர் தலையினைக் †குறங்கறுத் திடுவான்" (கலி-52)

என்பது புகழ்போன்று வசையாயிற்று; என்னை? கொன்றுளுயினுங் குறங்கினைக் கதத்தண்டுகொண்டு எற்றுதல் குற்றமாதலின் என்பதறிக. கொடைமடங்கூறுதல் வசைபோன்று புகழெனப்படும். அஃது அங்கதமாகாதென்பான் 'அரிறப'வென்றுனென்பது. பிறவும் அன்ன. (கூ-ள)

437. செம்பொரு ளாயின் வசையெனப் படுமே.

இது, முறையானே செம்பொருளங்கத முணர்த்துதல்நுதலிற்று.

இதன்பொருள்: வாய்கரவாது சொல்லப்பட்ட வசையைச் செம்பொருளங்கதமெனப்படும், என்றவாறு.

* 'கரந்துகின்று' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். இது பொருத்தமை கண்டுகொள்க. நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்குப் பொருளுரைக்குமாறு: 'வசைச்செய்யுளைக் குற்றமற வாராயிற் செம்பொருளங்கதமும், பழிதராப்பங்கதமும் என இருவகையினையுடைத்து, என்றவாறு.''

† 'குறங்கறுத்திட்டான்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

அஃது,

"இருடீர் விளக்கத் திமிழிசையார் கோவே
குருடேயு மன்றுளின் குற்ற மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள"

என்பது எழீஇயக்கோவை, அவ்வை முனிந்துபாடியது—

"எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
யெம்மிக ழாதவர் தம்மிக ழாரே
தம்புக ழிகழ்வோ ரெம்புக ழிகழ்வோர்
பாரி யோர் நள்ளி யெழினி
யாயே பேதன் *பெருந்தோண் மலையனென்
றெழுவரு ளொருவனு மல்லை யதனு
னின்னை நோவ தெவனே
மூட்டார்க் குறவாக் கட்டி போல
நீயு முளையே னின்னன் னோர்க்கே
யாயு முனனே யெம்பா லோர்க்கே
குருதியும் வெள்ளிய தேய்த்துப்
பருகுபா லனவெனச் சொல்லுகுத் தேனே"

எனவும் வரும்.

கலிப்பாட்டினுள் வருவன †வகைக்கூடத்தினுட் கண்டுகொள்க.

"அறச்சுவையினன் வையெயிற்றினன்
மயிர்மெய்யினன் மாசுடையினன்
பொய்வாயாற் புகழ்மேவலன்
மைகூர்ந்த மயலறிவினன்
மேவருஞ் சிறப்பி னஞ்சி
யாவரும் வெரூஉ மாலிக் கோவே."

* 'பொருந்தோண் மலையன்' என்பதும் பாடம்.
† 'வகைக்கூத்தினில்' என்பர் நச்சினார்க்கினியர்.

என்பது வஞ்சிப்பாட்டு. இது வெண்பாவினுன் வருதலே பெரும்பான்மை. (கூடு)

438. மொழிகரந்து சொல்லினது *பழிகாப் பாகும்.

இது, பழிகாப்பங்கதம் உணர்த்துகின்றது.

இதன்பொருள்: வசைப்பொருளினைச் செம்பொருள்படாமை இசைப்பது பழிகாப்பங்கதம், என்றவாறு.

மாற்றரசனையும் அவனிளங்கோவினையும் வசைகூறுமாறு போலாது தங்கோனையும் அவனிளங் கோனையும் வசைகூறுங்கால் தாங்கியுரைப்பர், அவைபோலப் பழிப்பனவென்றவாறு. அது,

"நன்றுய்ந்த செங்கோலாய் நாடிய னின்னிளங்கோக்
குன்றெறிந்த சேந்த னெனமதியா வன்றிறத்து
னின்றெருலிக்குந் தானையோ டெல்லா னிகர்த்தார்மேல்
வென்றெறியும் வேலே விடும்"

என வந்த வெண்டொடைச் செய்யுளுட் கண்டுகொள்க. இதனுள் "வென்றெறியும் வேலே விடும்" என்பது முனையகத்துப் படையோடு மென வசைகூறுவான் குன்றெறிந்த சேந்தனைப்போல எறிந்தானெனப் புகழ்ந்தான்போலக் கூறினனென்பது.

"இன்றுள னுயி னன்றும னென்றனி
னடுகொள் வரிசைக் கேற்பப்
பாடுவன் மன்னற் பகைவரைக் கடப்பே" (புறம்-53.)

என்பதும் அது. (கூக)

439. செய்யுட் டாமே யிரண்டென மொழிப.

மேற்கூறிய இரண்டினையுமே இவ்வகையானும் வகுக்கப்படுமென்கின்றது.

---

* 'பழிகரப்பு' எனவும் பாடம். 'மொழியினது பழிகரப்பாகும்' என்பதும் பாடம்.

இதன் பொருள்: செம்பொருட்செவியுறை, செம்பொருளங்கதம், பழிகாப்புச்செவியுறை, பழிகாப்பங்கதமென நான்கு கூறுபடும் மேற்கூறிய அங்கதமிரண்டும், என்றவாறு.

பாய்த்துள் விச்சுள் என்றாற்போலச் செய்யுள் என்பதூஉந் தொழிற்பெயர். அவையாமாறும் அவற்றது வேறுபாடும் முன்னர்ச் சொல்லுதும்.

இனி ஒருவனுரை: இவற்றுள் தொகைச்சூத்திரத்துட் 'கைக்கிளை பரிபாட் டங்கதஞ் செய்யுள்' (தொல்-செய்-118) என்று ஒதி அங்கதமுஞ் செய்யுளுமென இரண்டாக நிறுத்தான்; நிறுத்தமுறையானே அங்கதமுணர்த்திச் செய்யுளுணர்த்திய விதந்தானென்பது. அற்றன்று, எல்லாப்பாட்டுஞ் செய்யுளெனப்படுதலின் ஒன்றனையே செய்யுளெனலாகாது. அல்லதூஉம் 'அங்கதச் செய்யு ளென்மனார் புலவர்' (தொல்-செய்-129) என வருகின்ற சூத்திரத்து ஓதாமாதலான் இவையும் அங்கதச்செய்யுளே. மேலைச் சூத்திரத்துள்ளும் அங்கதச் செய்யுளென்பதே பாடமென்பதூஉம் அதனுற் பெறுதுமென்பது. அல்லாத பாடம் ஒதினும் அங்கதச்செய்யுள் செய்கைமேலென அதனைத் தாய்க்கொலையென்றது போல இரண்டாவதன் பொருண்மைப் படுத்துக்கொள்க. (கூஎ)

440.* துகளொடும்பொருளொடும்புணர்ந்தன்றியிற் செவியுறைச் செய்யு ளதுவென மொழிப.

இது, மேற்கூறிய அங்கதச்செய்யுட்பகுதி இரண்டனுள் ஒன்று கூறுகின்றது.

இதன் பொருள்: மேற் செம்பொருளும் பழிகாப்புமெனப்பட்ட இரண்டும் அங்கதச்செய்யுளெனப்படுதலேயன்றி, அதனுனே அரைசர்க்குப்பொருள்வருவாயாகச் செய்தானேயெனினும் அது செவியுறை யங்கதமெனவும் படும், என்றவாறு.

---

* 'புகழொடும் பொருளொடும்' என்பது உரையாசிரியர் கொண்ட பாடம்.

தகளாவது *படைகுடிகூழமைச்சுநட்பரணென்னும் இவற்றைப் பாதகாவாதிருத்தல். அரசியலென்பனவற்றுளே தன்கோன் அறியாமல் வருத்த அவை வருமாயின் அவற்றை உள்ளவாறுரைத்தலுமாம் ஒன்று. மாற்றரைசன் நமரது ஊரடுகின்ற நாட்டவர் யாதிவை நுதலியனவேதுவாகப் போய்ச் சார்ந்தவர்க்கு நாட்டழிவுகூறுதலுமொன்று. அன்ன பிறவும் அவற்கு உறுவகையாலானவற்றை உள்ளவாறு உணர்த்திப் பொருள்செய அவர்க்குப் பொருள்செயல்வகை கூறினமையின் அது செவியுறைப்பாற்படு மென்பது. அது,

"†அறவை யாயி னினதெனத் திறத்தன்
மறவை யாயிற் போரொடு திறத்த
லறவையு மறவையு ‡மல்லே யாகித்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
லஞ்சுத்தக §வுடைத்திது காணுங் காலே" (புறம்-44.)

என இது செம்பொருட்செவியுறை.$ பிறவும் அன்ன. இவை முகவிலக்கினுட் பயின்று வருமென்பது. இனி, மொழிசரந்து சொல்லி

---

* 'படைகுடி கூழமைச்சு நட்பர ணுறை--முடையா னரசரு ளேறு' என்பது திருக்குறள் (39-1). இதற்கு உரைவகுத்த பரிபேலழகர் 'அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார்' என்று கூறினர். ஆயினும் குறளில் ஆசிரியர் வைத்தமுறையே தகுதியுடைத்தென்பது உய்த்து நோக்குவார்க்குப் புலனும்.

† 'அறவையாயினிற்றெனத்திறவைதன்' என்பது முன் அச்சுப் பிரதிப்பாடம் ‡ 'அல்லையாயின்' என்பதும் பாடம்.

§ 'உடைத்தது' என்பதும் பாடம்.

$ நச்சினார்க்கினியர் 'நளியிருமுந்நீர்' என்னும் (35 ஆவது) புறப்பாட்டைச் செம்பொருட் செவியுறை யங்கதத்திற்கு உதாரணமாகவும், 'வள்ளியோர்ப்படர்ந்து' என்னும் (47 ஆவது) புறப்பாட்டை பழிகாப்புச் செவியுறை யங்கதத்திற்கு உதாரணமாகவும் காட்டினர்.

னும் இஃதொக்கும். இனிப், 'புகழொடும் பொருளொடும்' என்பதூஉம் பாடமாக உரைப்ப. புகழும் பொருளும் புணர்ப்பது அங்கதமாயின் அஃதமையும். மற்று, அன்ருயின் ஈண்டாராய்ச்சியின்றென்பது-என்னை ? 'வசையொடு நசையொடும் புணர்ந்தன் ருயி—னங்கதச்செய்யுள்' (தொல்-செய்-129) என மேலோதுமாதலின் இவனென்பது.* (கூஅ)

441. வசையொடு நசையொடும் புணர்ந்தன் ருயி னங்கதச் செய்யு ளென்மனர் புலவர்.

இஃது, ஒழிந்த அங்கதச்செய்யு ளுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மேற்கூறிய அங்கதச்செய்யுள் வசையேயன்றி அவ்வசையானே நசை தோன்றச்செய்வது செவியறியுறையெனப் படாது அங்கதச்செய்யுளெனவே படும், என்றவாறு.

எனவே, இல்லாதனசொல்லி நகைப்பொருட்டாகச் செய்யினும் அங்கதச்செய்யுளெனப்படும் என்றவாறு. அவை விலக்கியற்செய்யு ளுட் கண்டுகொள்க. இதுவுஞ் செம்பொருளாகியும் பழிகாப்பாகியும் வருமெனவுணர்க. எனவே, கூறப்பட்டனவெல்லாம் வெகுளியும் பொருளும் நகையும் பயப்பனவாயின. (கூக)

442. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பர்ட்டே கொச்சக மூறழொடு கலிநால் வகைத்தே.

இது, கலிப்பாவெனப்பட்ட உறுப்பினை இத்திணைப்பகுதியான் வருமென்பது வருஞ்செய்யுள்பற்றி விரிகூறுகின்றது.*

---

* "'புகழொடும் பொருளொடும்' என்று பாடமோதின் மேல் 'வசையொடு நசையொடும்' என்பது பொருந்தாதாம்" என்ருர் நச்சினர்க்கினியர்.

* "அகத்தியனு ' 'இருவயி னெத்து மொவ்வா வியலினுந்-தெரி யிழை மகளிரொடு மைந்த ரிடைவருஉங்-கலப்பே யாயினும் புலப்பே யாயினு—மைந்திணை மரபி னறிவுவரத் தோன்றிப்—பொலிவொடு புணர்ந்த பொருட்டிறமுடையது—கலியெனப் படுஉங் காட்சித் தாகும்' என இலக்கணம் ஒதுதலின் கலிப்பா அகப்பொருளென வழங்கும்" என்பது இளம்பூரணர் உரை.

இதன் பொருள் : ஒத்தாழிசை—ஒத்தாழிசையென்னும் உறுப் புடைச்செய்யுள் ; ஒத்து ஆழ் இசையை ஒத்தாழிசையென்றான்: அது வினைத்தொகையாகலின் மருவியவகையான் முடியுமென்பது: தாழிசை யென்பது தானுடைய துள்ளலோசைத்தாம்: இது முறைமையிற் பெற்றபெயர்: எனவே, தரவுவேறுபடினும் வேறுபடாதென்பதாஉம், கொச்சகக் கலிபோல்வனவற்றுள்வரும் இடைநிலைப்பாடுக்கள் அவ் வாறு தாழமுடையவன்றியும் வருமென்பதாஉங்கொள்க. இது பன்மை பற்றிப் பெற்ற பெயர், தாழிசையின்றியும் ஒத்தாழிசை சிறுபான்மை வருதலின். இனி ஒழிந்த உறுப்புநோக்கத் தாழிசை சிறந்தமையின் தலைமையாற் பெற்ற பெயரெனவும் அமையும்.

" வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய
ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வவ்வலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை
வெள்வேல் வலத்திர் பொருடரல் வேட்கையி
னுள்ளினி ரென்ப தறிந்தன னென்றோழி." (கலி-4.)

என்பது தாழ்ந்த ஓசைத்தன்றி ஒத்தாழிசைக் கலியுள் தரவுவந்தது. எனவே, இவ் வேறுபாடு கட்டளைக்கலி அல்லாதவழியென்பது பெற் றும். அதுவன்றே, இதன்றாழிசையுள்ளும் நேரீற்றியற்சீரும் வந்த தென்பது. என்னை ?

" காழ்விரி வகையார மீவரு மினமுலை
போழ்திடைப் படாமை முயங்கியு மமையாரென்
றூழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை யெவன்கொ லறியே னென்னும்." (கலி-4.)

என்புழி "அறியே னென்னும்" என ஆண்டைத் தாழிசைதோறும் இரண்டு நேரீற்றியற்சீரும் வந்தன. பிறவும் அன்ன.

"நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே ;
யிவட்கே, சுனைமா னீலங் காரெதிர் பவைபோ
லினைநோக் குண்க ணீர்ஞெல் லாவே." (கலி-7.)

எனக் கொச்சகக்கலியுள் இடைசிலேப்பாட்டுத் தாழிசையின்றி வந்தது.* பிறவும் அன்ன.

இனிக், கலிவெண்பாட்டு—கலிப்பாவாகிய வெண்பாட்டு ; இது பண்புத்தொகையாகிய முன்மொழிப்பொருட்டாயிற்று. கொச்சகமென்பதும் உறுப்பிலைற் பெற்றபெயர். உறழ்கலியென்பது பொருள்பற்றி வந்தபெயர். ஒத்தாழிசையென்பது தம்மிலைத்துவருதற் கட்டளையுடைமையானுங் கலிப்பாவிற்குச் சிறந்து வருமாகலானும் முன்வைத்தான். என்னை இது கலிப்பாவிற்குச் சிறந்தவாறெனின், நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசை அறுபத்தெட்டு வந்தனவாகலின் அது பெருவரவின எனப்பட்டுச் சிறப்புடைத்தாயிற்று. அது நோக்கி முன்வைத்தான் ; இது பாவென்னும் உறுப்பிலக்கணங் கூறுகின்ற இடமாகலின். கலிவெண்பாட்டினை ஒத்தாழிசைக்குங் கொச்சகத்திற்கும் இடைவைத்தான், அதுபோல உறுப்புடைத்தாகியும் வருமென்றற்கு. அதன்பின் கொச்சகப்பா வைத்தான் ; அத் தரவும் போக்குஞ் சிறுபான்மையின்றியும் வருதலின். எல்லாவற்றுப்பின்னும் உறழ்கலி வைத்தான் ; அவைபோலாது சுரிதகமின்றி வருதலே பெரும்பான்மையாகலானென்பது. அஃதேல் உறழ்கலியுங் கொச்சகக்கலியுள் அடங்காதே ? அதுவும் அடக்கியலின்றியும் யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடைத்தாய் வருமாலெனின், அற்றன்று. அடக்கியலின்றி வரின் அடிநிமிர்தலும் ஒழுகிசைத்தாகலும் வேண்டும். உறழ்கலியாகின் அடிநிமிராதும் ஒழுகிசையின்றியும் வருமென்பது. அத்துணையான் இதனை வேறென்பதென்னை ? ஒன்றாக ஓதுகவெனின், மேற்

* "கொச்சகத்திற் காயின் தாழிசை, 'நீயே,..... தெரிதியே' எனத் தாழம்பட்ட வோசையின்றிவரும்" என்பது நச்சினார்க்கினியர் உரை.

கூறி வருகின்ற செய்யுளெல்லாஞ் சீரும் அடியும் பாவும் பொருளு மெனச் சிலவுறுப்புவகையான் வேறுபடுகின்றதன்றிப் பிறிதின்மையின் அவ்வேறுபாடுஞ் சிலவாக நோக்கி ஒன்றென்னுமாகலின் அது கடா வன்றென்பது. அல்லதூஉம் நூல்செய்யுங்கான் மரபென்பது வேண் டும். என்னை ?

'மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூறு மிருவகை யியல' (தொல்-மர-93.)

என்பதனுன் முதனூற்சாயினும் மரபுவேண்டுதலின். அதுவன்றே நிலம் நீர் தீ வளி விசும்பென்னும் ஐம்பெரும் பூதங்களும் அவற்ற தியைபாகிய பொருளுள்களும் அஃறிணையான் வழங்கினும் பொருளின் இயைபாகிய மக்களுந் தேவரும் முதலாயிருதிணை உயர்திணைவாய்பாட் டான் வேறுபடுத்து வழங்குகின்றதென்பது. மற்று உறழ்கலியென் னும் வழக்குண்டாயினன்றே மரபொடு மாறுபடுவதெனின், மரபென ஆசிரியர் வழக்கும் அடங்குமாகலின் அது கூறினுன்; அல்லாக்கால் ஒழிந்த செய்யுளும் வேறுபாடிலவாமன்றேவென்பது. இனிப் பரி பாடலுங் கலிப்பாவினுள் அடங்குமென்பாரும் உளர். கலியும் பரி பாடலுமெனத் தொகையுள் இரண்டுதொகை தம்மின் வேறுதலின் அவ்வாறு கூறுவார் செய்யுள் அறியாதாரென்பது. அல்லதூஉம், அராகவுறுப்பில்லாத முடுகியலடியுங் கொச்சகக்கலிபல்லாத கலிப்பாவி னுள் உண்டாவதாசலுங் கொச்சகக்கலியுறழ்ந்து வருதலும் உடைய வாம். (கஉ0)

443. அவற்றுள்,
ஒத்தா ழிசைச்கலி யிருவகைத் தாகும்.

இது, முறையானே ஒத்தாழிசைக்கலியுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஒத்தாழிசைக்கலி இரண்டு கூற்றதாம் என்றவாறு.

இதனது பயம் அவை இரண்டுந் தம்முட் பகுதியுடைமவென்பது. அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும். (கஉக)

444. இடைநிலைப் பாட்டுத் தரவுபோக் கடையென
***நடைபயின் றெழுகு மொன்றென மொழிப.**

இதன் பொருள் : மேற்கூறிய ஒத்தாழிசை இரண்டனுள் ஒன்று தாழிசையுந் தரவுஞ் சுரிதகமுந் தனிச்சொலுமென நான்கு உறுப்பாகப் பயின்றுவரும், என்றவாறு.

பயின்று வருமெனவே இவ்வாறன்றிப் பயிலாது வருவனவும் அதன் பகுதியாயடங்குவனவும் உளவென்பது. அவை தாழிசைப் பின்னர் எண்ணுறுப்புவருங்கால் ஐந்துறுப்புப் பெறுதலும் அவற்றிடை அராகம்பெறின் ஆறுறுப்புவருதலுமென இவையென்ப. அற்றன்று; நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசைக்கலியின் அராகவுறுப்பும் அம்போதரங்கவுறுப்பும் பெற்றுவருவன இன்மையின் அவ்வொரு னன்றென்பது. மற்று †நடைநவின் றெழுகு மென்றதென்னையெனின் இத்துணை பயின்றுவாராது ஏனையொன்றும் என்றற்கென்பது. தாழிசையினை இடைநிலைப்பாட்டென்பவோவெனின் அவ்வாறுஞ் சொல்லுப, அச்செய்யுள் இடைநிற்றலானென்பது. இனி இடைநிலைப் பாட்டென்பது தாழிசையினை நோக்காது. என்னை ? தாழம்பட்ட வோசையல்லாதனவும் இடைநிலைப்பாட்டாய் வருமாதலினென்பது. அது,

> "காணுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
> மாணுநோய் செய்தான்கட் சென்றுய்மற் றவனைநீ
> காணவும் பெற்றுயோ காணுயோ மடநெஞ்சே."(கலி-123)

என்பது தாழிசையெனவும் இடைநிலைப்பாட்டெனவும் படும்.

---

* 'நடைநவின்றெழுகும்' என்பது உரையாசிரியர் கொண்ட பாடம்.

† எங்களிலும் பாடம் இவ்வாறே யுள்ளது. ஆயினும் இவர் கொண்டபாடம் "பயின்றெழுகும்' என்பதேயாதல் மேல் 'பயின்று வருமெனவே.....பயிலாது வருவனவும்—' என்பதுகொண்டு தெளியப்படும்.

"இன்னெலிச் சிலம்பினிற் சின்மொழி யைம்பா
றழீஇய தடவர லல்குலுண் வரிவாட
வாராது விடுவாய் தண்ணந்துறைவ தகாய்காணீ."

என்ருற்போல்வன தாழிசையல்லாத இடைச்சேபபாட்டு. இவ் விருபகுதியுங்கூட்டித் தாழிசையென்னுது இடைச்சேபபாட்டென்பது இங்ஙனந் தம்முட் பகுதியுடைமையானு மாயிற்று. ஒத்தாழிசைக்கலி இருவகைத்தென்றற்குப் பயனுந் தோற்றுவாய்செட்ட போந்ததென் பது. தரவு என்ற பொருண்மை என்னையெனின் முகத்துத் தரப் படுவதென்ப. அதனை எருத்தெனவுஞ் சொல்லுப. என்னை ? உடம் புந் தலையுமென வேறுபடுத்து வழங்கும் வழக்குவகையான் உடம்பிற்கு முதல் எருத்தென்பதாகலின். இசைநூலாரும் இத்தரவுமுதலாயின வற்றை முகம் நிலை கொச்சகம் முரியென வேண்டுப. கூத்தநூலார் கொச்சகமுள்வழி அதனை நிலையென அடக்கி முகம் நிலை முரியென மூன்றாக வேண்டுப. அவரும் இக்கருத்திற்கேற்ப முகத்திற்படுந் தரவினை முகமெனவும் இடைநிற்பனவற்றை இடைநிலை யெனவும் இறுதிக்கண் முரிந்து மாறுஞ் சுரிதகத்தினை முரியெனவுங் கூறினு ரென்பது.* செந்துறைச் செய்யுள் அடைச்சேபயப்பதின்மையின் அது சிறந்ததன்றென்று அடக்கிமொழிப. உள்ளுறுப்பின் பொருளெல் லாம் ஒருவகையான் அடக்குமியல்பிற்ருன் அடக்கியலெனவுங் குறித்த பொருளை முடித்துப்போக்குதலிற் போக்கெனவும் அவையெல்லாம் போதந்து வைத்தலின் வைப்பெனவுங் கூறிய பகுதியைப் பின்னும் பற்றிக் கூறுதலின் வாரமெனவும் எல்லாம் ஒன்றெனினை ஒத்தே

---

* "—தரவினை நிலையென அடக்கி முகத்திற்படுந் தரவினை முக நிலையென்னவும், இடை நிற்பனவற்றை இடைநிலையெனவும், இறுதி யில் நிற்பனவற்றை முரிநிலையெனவும் பரவுதற் பொருண்மையாற் பெயர்கொடுத்தார் செய்யுளியலின்கண்ணு மெனக்கொள்க. இனி, இசைத்தமிழின் வருக்கால் முகநிலை, கொச்சகம், முரி என்ப ஒரு சாராசிரியர்" என்றுரை அடியார்க்கு நல்லார். (சிலப்-கடலாடு காதை 35-ஆவது அடியின் உரைப்பகுதி காண்க.)

பெயராயின. அடைமொழியென்பது முன்னும் பின்னும் பிறவுறுப்புக்களை அடைந்தன்றி வாராது. அது தனிநின்று சீராதலின் தனிச்சொல்லெனவும்படும்.* இவை மொழியுறுப்பென்னுது பாட்டென்றதென்னையெனின், அவை தாமே பாட்டாயும் வருமிடனுடைய. வருங்கால் அவை ஒன்றும் இரண்டுமே பலவாய் வருமென்பது. இடைமொழிப்பாட்டினைத் தரவிற்கு மூற்கூறினன் அது பெயர் பெறுதலின். எனவே தரவு முன்வைத்தலே மரபாயின. ஒத்தாழிசை கூறிய முறையானே தரவு தாழிசை போக்கென்னும் மூன்றுறுப்பானுஞ் சிறுபான்மை வந்து தனிச்சொலின்றி வருதலின் தனிச்சொல்லினை இறுதிக்கண் வைத்தானென்பது. இவை போக்கிச் சொல்லுதும். (கசுஉ)

445. தரவே தாழு நாலடி யிழிபா
யாறி ரண்டுயர் பேறவும் பெறுமே.

இது, தரவின் அடியளவுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: மேற்கூறப்பட்ட தரவுதானும் நான்கடிமுதலாய்ப் பன்னிரண்டடிகாறும் வரப்பெறும், என்றவாறு.

எனவே, ஒன்பதுவிலம் பெறுந் தரவென்றவாருயிற்று. 'உயர் பேறவும்பெறும்' என்றதனாற் பன்னிரண்டடியின் இகந்துவரவும் பெறுமெனக்கொள்க. இதனை எடுத்தோதாது இலேசினாற் கொண்டான் பன்னிரண்டடியின் இகந்தன துள்ளலோசையான் வாராமையின். அது,

"நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
நேரித ழாம்ப னிரையிதழ் கொண்மார்." (கலி-75.)

என்னும் மருதக் கலிப்பாட்டானுமுணர்க. (கசுரு)

---

* 'இடைமொழிப் பாட்டெனினும் தாழிசையெனினும் ஒக்கும். போக்கெனினும், சுரிதகம் எனினும், வாரம் எனினும், அடக்கியல் எனினும் ஒக்கும். அடை எனினும் தனிச்சொல் எனினும் ஒக்கும். தனிச்சொல்லைப் பின் எண்ணியவதனான் தாழிசைதோறுந் தனிச்சொல்வரவும் பெறும் என்றுகொள்க' என்பது இளம்பூரணர் உரை.

446. இடைநிலைப் பாட்டே,
தரவகப் பட்ட மரபின வென்ப.

இது, தரவிற்குச் சுருங்கியன்றித் தாழிசை வாராதென்ப துணர்த் துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தரவின் அகப்பட்டது தாழிசை, என்றவாறு.

அகப்படுதலென்பது அகம்புறமென் றிருகூறுசெய்தவழி முற்கூற் றினுட் படுதல். முன்னென இடவகையுங் காலவகையும் பற்றியு இருகூற்றினுள் யாதானுமொன்று கொள்க. எனவே, பதிலேரடி முதல் இரண்டடிகாறும் இழிந்துவரப்பெறும்என்றவாறாயிற்று.* அது,

"கருங்கோட்டு நறும்புன்னை மலர்ச்சினை மீமிசைச்
சுரும்பார்க்குங் குழலினே டிருந்தும்பி யிசையூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண் மரபின்மால் யாழ்கொளக் கிடந்தான்போற்
பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல் ;
காணுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குல்வாய்
மாணுநோய் செய்தான்கட் சென்றுய்ம்மற் றவனீ
காணவும் பெற்றுயோ காணுயோ மடநெஞ்சே ;
பொறிகொண்ட புள்ளினம் பதிசேரும் போழ்திலுற்

---

* "(இ-ள்.) தாழிசைக்களவு தரவிற் சுருங்கிவருவது, என்ற வாறு. என்றதனால் தரவிற் கோதப்பட்ட நான்கடியின் மிகாது மூன் றடியானும் இரண்டடியானும் வரப்பெறும் என்பதாயுங்கொள்க" என் றார் இளம்பூரணர்.

"(இ-ள்.) தாழிசையாவது தரவிற்குச் சுருங்கின முறைமை யினையுடையது, என்றவாறு. அகப்படுதல் என்பது அகம் புறம் என்று இருகூறு செய்தவழி முற்கூற்றினுட்படுதல். முன் காலமுன்னும். எனவே ஆறடிமுதல் இரண்டடிகாறும் இழிந்து வரப்பெறுமென்று கொள்க" என்றார் நச்சினார்க்கினியர்.

செறிவளை நெகிழ்த்தான்கட் சென்றுய்மற் றவனீ
யறியவும் பெற்றுயோ வறியாயோ மடநெஞ்சே ;
கொல்லேற்றுச் சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனெய் செய்தான்கட் சென்றுயமற் றவனீ
புல்லவும் பெற்றுயோ புல்லாயோ மடநெஞ்சே ;
ஆங்க, எல்லையு மிரவுந் துயிறுறந்து பல்லூ
ழரும்பட ரவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் றடுமாறி
வருந்தினை யளியையென் மடங்கெழு நெஞ்சே.''

(கலி-123.)

என இது தரவகப்பட்ட ப்ரபிற்றுகித் தாழிசைவந்தது.

தரவிற் சுருங்குமென்றது அகப்படுமென்றன், தரவோடு ஒத்து வருந் தாழிசையென்பதூஉங் கோடற்கு. என்னை ? மக்களகத்துப் பிறந்தானென்றவழி அச்சாதியோடொக்கப் பிறந்தானென்பது படுமாசலின்.

''ஞாலமூன் றடித்தாய மூதல்வற்கு மூதுமுறைப்
பாலன்ன மேனியா ளணிபெறத் ததைஇய
நீலநீ ருடையேபோற் றகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப
ஊரல ரெடுத்தார்ப்ப வுள்ளாய்நீ துறத்தலிற்
கூருந்தண் ணெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
பீரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால் ;
இணையிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலிற்
புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றுணையாருட் டகைபெறத் தொன்னல மிழந்தினி
யணிவனப் பிழந்தன்ன வணைமென்றோ ளல்லாக்கால் ;
இன்றிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலி
னின்றத னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்

வென்றவே னூதியேய்க்கும் விறனல மிழந்தினி
நின்றுநீ ருகக்கலுழு நெடும்பெருங்க ணல்லாக்கால் ;
அதனால்,
பிரிவில்லாய் போல தெய்வத்திற் றெளித்தக்கா
லரிதென்னா டுணிந்தவ ளாய்நலம் பெயர்தரப்
புரியுளை *வயமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகனின் செலவே.''

(கலி-124.)

என வரும்.

பன்னிரண்டடியின் இகந்த தரவிற்கும் இவ்வாறே தாழிசை கொள்ளப்படும். மற்று மேற்கூறிய வரையறையில் தாழிசை கூறுக வெனின், ஆண்டு முறைபிறழவைத்தற்குக் காரணங்கூறிப் போந்தா மென விடுக்க. இனிவருஞ் சூத்திரத்திற்கும் இதுவே விடை. மரபினவென்றதனான் மேலைக்கொண்டும் அடிப்படவந்த மரபினாற் சுருங்குமென்பது. எனவே, நான்கடியின் உயர வாராவென்பது கொள்க. இன்னும், மரபினென்றதனாற் சிறுபான்மை ஐந்தடியானும் வருவனவும் உள.

"அரிதே தோழி நாணிறுப்பா மென்றுணர்தல்'' என்னும் நெய்தற்றிணைக் கலிப்பாட்டினுள்,

"நகைமுத லாக நட்பினு ளெழுந்த
தகைமையி னலிவ தல்லதவர் நம்மை
வகைமையி னெழுந்த தோண்முத லாகப்
பகைமயி னலிதலோ விலனா மாயிழை
பகைமையிற் கடிதவர் தகையி னலியுநோய்.'' (கலி-137.)

என ஐந்தடியால் தாழிசை வந்தது.

ஆறடியின் வருவன வந்தவழிக் கண்டுகொள்க. மற்று நான் கடியின் இழிந்ததோரடியானுந் தாழிசைவருமாலெனின் வாரா தன்றே ; 'இடைநிலைப்பாட்டே' என்றாராகலின். என்னை ? பாட் டெனப்படுவன ஓரடியான் வாராமையின். (கஉச)

* 'கலிமான்றேர் என்பதும்' பாடம்.

447. அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி.

இஃது, ஆங்கென்னுஞ் சொல் தனிச்சொல்லெனப்படுமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தாழிசைப்பின்னர் ஆங்கு, தனிச்சொல்லாய் நின்று பயிலும், என்றவாறு.

ஆங்கென்னுஞ் சொல்லினை எடுத்தோதினான் அது நடைநவின் றொழுகுமாகலின். ஆங்கென்னுஞ் சொல் பயின்று வருமெனவே அல்லாதனவும் உள இத்தினைப்பயிலாதன வென்பதுகொள்க. ஆங்கு என்பது ஏழாம்வேற்றுமை இடப்பொருள் தோன்ற நின்ற சொல்லாகலின் அஃதெல்லாச்செய்யுட்கண்ணுந் தன்பொருண்மைக் கேற்ப நிற்றல் வேண்டும் பிறவெனின், அற்றன்று ; அதனை அசைநிலையாகக் கொள்க. அல்லதூஉம், எல்லாசெய்யுளும் இதன்பொருண்மைக் கேற்பச் செய்யல்வேண்டுமென்றான் மிகைகூறிப் பயந்தனின்மையா னென்பது. அசைநிலையெய்து செய்யுள் செய்தன் மரபாகலின் அஃதமையுமென்பது. நடைநவிலாதன பொருள்பெறவருமென்பது. அவை முன்னர்க் காட்டுதும். (கஉஇ)

448. போக்கியல் வகையே வைப்பெனப் படுமே.*

இஃது, ஒழிந்த சுரிதகம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : போக்கிலக்கணப்பகுதி வைப்பென்று சொல்லப்படும், என்றவாறு.

இன்னனம் கூறப்பட்ட உறுப்பினை அடக்கியலெனவும் வாரமெனவுஞ் சொல்லுப. †அடக்கியல் வாரந் தரவோடு ஒக்கச் சொல்லப்

---

* இச்சூத்திரத்தையும் பின்வருகின்ற சூத்திரத்தையும் ஒன்றாகக் கொள்வார் இளம்பூரணர்.

† 'அடக்கியல் வாரந் தரவோடொக்கும்' என்பது இவ்வியல் 141 ஆவது சூத்திரம்.

படுமென்றவாறு. என்றதென்னோக்கியெனின், போக்குதலும் வைத்தலுமென்னும் இரண்டிலக்கணமுடைத்து; வாரமெனச் சொல்லின் முடியுமிலக்கணமே கூறுவான்போலப் போக்கினிலக்கணப் பகுதி வைப்பென்றதனைச் சுட்டிக்கூறப்படுமாகலின்.* (௧௬௬)

449. தரவிய லொத்து மதனகப் படுமே†
புரைதீ ரிறுதி நிலையுரைத் தன்றே.

இதுவுஞ் சுரிதக முணர்த்துகின்றது.

இதன் பொருள் : தரவியலொத்தும் அதனகப்படும்—சிறுபான்மை தரவும் அதனொடொத்துத் தரவின்பாகம் பெறுதலை இலக்கணமாகவுடைத்து மேற்கூறிய சுரிதகம் : புரைதீர் இறுதி நிலை உரைத்தன்றே—இடைநிலைப்பாட்டுப் பொருளென முடிபுகாட்டி நிற்கும் அதுதான், என்றவாறு.

அகப்படுமென்று அதற்கும் உம்மைகொடுத்தமையின் அஃதிலக்கணமாயிற்று. ஆகவே, அவ்விலக்கணத்திற்கேற்ற தரவின்கண்ணே ஒத்தலும் உயர்தலும் கொள்க. சுருங்கியவெல்லை, ஆசிரியத்திற்கு இழிந்தவெல்லையாகிய மூன்றடிச்சிறுமையிற் கூறாமையிற் சுருங்காது வருவதாயிற்று. ஈண்டும் அகப்படுமெனவே பன்னீரடித்தரவின் பாகமாகிய ஆறடியே சுரிதகத்திற்கு எல்லை என்பதூஉம், இழிந்தவெல்லை கூறாமையிற் பன்னீரடித்தரவிற்காய் ஈற்று மூன்றடிச்சுரிதகம் வருதலும் ஒழிந்த கலிநாலிற்கும் அவ்வாறேவருதலுங் கூறினானென்பது. இனி வெள்ளைச்சுரிதகத்துக்கும் இஃதெல்லாமொக்கும்.

இனித் தரவியலொத்தல் ஈற்றயலடி முச்சீராகி வாராது மண்டிலமாகி வருதலுஞ் சிறுபான்மையெனக் கொள்க. இறுதிநிலையென்

---

* "செய்யுள் பிறிதொன்றினை யவாவாமற் கடைபோகச் செய்தலிற் போக்கெனவும், முற்கூறிய தரவு தாழிசைகளிற் பொருள்களைக் கொண்டு தொகுத்துவைத்தலின் வைப்பெனவும்படும்" என்றார் நச்சினார்க்கினியர்.

† 'அதனகப்படும்' என்பதும் பாடம்.

வினை நனிவிரலென்றுற்போலக் கொள்க. வினையெனப்பட்டது இடைவினைப்பாட்டு. அதனிறுதியைக் கூறுமெனவே அவற்றுப்பொருள் வினை முடித்தவிடுக்குமென்பதாம். 'போக்கியல்வகையே வைப்பெனப்படும்' என்றவழி உள்ளுறுப்பின் பொருளினைத் தன்கண்வைக்கப்படுவது சரிதகமென்றதன்றி இன்ன உறுப்பின் பொருள் வைக்கப்படுமென்றிலாதான் முற்கூறியது பொதுவிதிமாத்திரையேயன்றி இடைவினைப்பாட்டின் பொருளே பெரும்பான்மையும் வைக்கப்படுமென்பதூஉம் பொதுவிதியாற் சிறுபான்மை தரவின்பொருண்மை வைத்தலுமுடைத்தென்பதூஉங் கூறினான். 'தரவியல்' என்றதனால் தரவோடொத்த பொருட்கேற்றனவுங் கொள்க.

"நச்சல் கூடாது பெரும
விச்செல வொழிதல் வேண்டுவல்" (கலி-8)

என்பது தாழிசைப்பொருண்முடிவு தன்பால் வைக்கப்படுதலின் இறுதியுரைத்தது. 'புரைதீரிறுதி' யென்றதனான் அத்தாழிசைப்பொருளேயன்றி அவற்றோடு போக்கியற் பொருள் வந்தக்கால் அவ்விரண்டினையும் புரைபடாமற் பொருந்தச்செய்கவென்பது. அது "தன்னகா விழையக்கூடுதல்" (கலி-8) எனப் போக்கியற்பொருளோடு புரைதீர்ந்திற்றது. பிறவும் அன்ன.

"இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்" (கலி-38)

என்னும் குறிஞ்சித்திணைப்பாட்டினுட் "கோடுயர்க் கல்லா தழக்கு நாடன்" என்று உள்ளுறையுவமத்தால் தலைவியது விழுமங்கூறக் கொழுநன் மலைநாடனென வைத்தமையின் அது தரவியலொத்ததாயிற்று. இனி, * "ஞாலமூன் றடித்தாய" (கலி-124) என்னும் நெய்தற்றிணைக் கலிப்பாட்டு அளவியலாற் சரிதகமொத்தது. † "கருங் கோட்டு நறும்புன்னை" (கலி-123) என்பது தரவிற்கு அடியைந்தாகச் சரிதகம் கான்கடியாய்ச் சுருங்கிற்று. அஃதேல் தரவகப்பட்டதனைச் சுருங்குதலன்றி ஒத்தற்பொருளும்படுமாயின் தரவகப்படும் போக்கென்னது தரவியலொத்தும் என்றதென்னையெனின், தரவுமென்ற உம்மையாற் சிறுபான்மை மிக்கு வரவும் பெறும் போக்கென்பது கொள்க.

"பாடின்றிப் பசந்தகண் பைதல் பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வினாயூர
வாடெழி லழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கா னினைப்பதொன் றுடையேன்மன் னதுவுந்தான்
(கலி-16.)

வன்னும் பாலைப்பாட்டுத் தாவுந் தாழிசையும் நான்கடியாயொத்தவழிச்,

"செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வர்மாட் டினையன
தெய்வத்துத் திறநோக்கித் தெருமர நேமொழி
வறனெடின் வையத்து வான்றருங் கற்பினு
ணிறனெடிப் பசப்பூர்த லுண்டெனு
• வறனெடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே." (கலி-16)

எனச் சுரிதகம் ஐந்தடியாயிற்று. (கசஎ)

450. ஏனையொன்றே,
தேவர்ப் பராவுய முன்னிலைக் கண்ணே.

இஃது, ஒழிந்த ஒத்தாழிசையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : அது முன்னிலையிடமாகத் தேவரைப்பராவும் பொருண்மைத்து, என்றவாறு.

எனவே, இஃது அகனிலைச்செய்யுளாகாதென்றவாறு. இதனுள் முன்னையது அகனிலை யொத்தாழிசையெனப்படும். மற்றிது 'வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்து' (தொல்-செய்-109) என்றவழிச் சொல்லப்பட்டதாமெனின், அஃது உறழ்கலிக்கும் வெண்கலிக்கும் கொச்சகக்கலிக்கும் பொதுவாகலின் அவற்றுக்குந் தேவபாணி விலக்கினானென்பது. மற்று முன்னிலைக்கணென்ற தென்னையெனின் தெய்வத்தினை முன்னிலையாகச்சொல்லப்பட்டனவன்றி அல்லன தேவபாணியெனத் தகாவென்பது. என்னை ? யான் இன்ன பெருஞ்சிறப்பின் இன்ன தெய்வமென்று தன்னைத்தான் புகழ்ந்து கூறி நின்னைக் காப்பேன் நீவாழியவெனத் தெய்வஞ்சொல்லிற்றாகச் செய்யுள் செய்தலும்

ஆகாது, வாழ்த்தினுள் அவ்வாறுண்டாயினென்பது. இதனானே படர்க்கையும் விலக்கினானும். ஆகவே, தெய்வம் படர்க்கையாயவழிப் புறனிலைவாழ்த்தாவதன்றித் தேவர்ப்பராயிற்றாகாது பாட்டுடைத்தலைவனோடு கூட்டிச்சொல்லுமென்றானும். இங்ஙனங் கூறவே, பாட்டுடைத் தலைவனைக் கூட்டினுங் கூட்டாக்காலுந் தேவர்ப்பராயிற்றேயாம் முன்னிலையாயினென்பது பெற்றாம். மற்றிவை பாடல்சான்ற புலனெறிவழக்கிற்கன்றித் தேவர்ப்பராயதற்கும் உரியவோவெனின் ஆண்டு அகப்பொருட்குரிமையுடைமையிற் கலியும் பரிபாடலுமென்றதனானே அத்துணையன்றிக் கடவுள்வாழ்த்துப்பொருள்படவும் வருமென்பது ஈண்டுக் கூறினானும். அதுவன்றே எனையதெனச் சிறுமைதோன்றப் பிற்கூறியதென்பது. (கூஅ)

451. அதுவே,
வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே.

இஃது, அதன்வகையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : எனையொன்றெனப்பட்ட ஒத்தாழிசை, வண்ணக ஒத்தாழிசையெனவும் ஒருபோகெனவும் இரண்டாம், என்றவாறு.

இதன் பயன் ஒத்தாழிசையெனப்படாது இவற்றளொன்றென்பது அறிவித்தவாறுயிற்று. அஃதென்னைபெறுமாறெனின், மேல் ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகுமென்றான்; பின்னர் அவ்விரண்டினுள் ஒன்றென்றற்கு வண்ணகம் ஒருபோகென வேறுபெயர் கூறவே முன்னரதே ஒருதலையாக ஒத்தாழிசைக்கலியெனப்படுவதென உய்த்துணரவைத்தமையானும் எனையொன்றென வேறுபடுத்தமையானும் பெயரும் உடன்கூறுது போத்தந்து வைத்தமையானும் அதனோடு ஒன்றினத்தவல்லவென்பது பலவாற்றானுங் கொள்ளவைத்தானென்பது. அஃதேல், வண்ணகமும் ஒத்தாழிசையெனப்படாதாம்பிறவெனின், அது மாற்றுதற்கன்றே வண்ணகம் முற்கூறி அதிகாரம்படவைப்பானுயிற்றென்பது. இக்காலத்தார் ஒருபோகினையும் ஒத்தாழிசையென்று தாழிசைபெய்து காட்டுப.

'எருத்தே சொச்சக மராகஞ் சிற்றெண்
ணடக்கியல் வாரமோ டன்னிலைக் குரித்தே'
(தொல்-செய்-153.)

என்புழித் தாழிசையுறப்பு ஒதாமையின் அது பொருந்தாது. (கஉக)

452. வண்ணகந் தானே,
தரவே தாழிசை யெண்ணே வாரமென்
றந்நால் வகையிற் றோன்று மென்ப.

இது, முறையானே வண்ணகவொத்தாழிசை யுணர்த்துகின்றது.

இதன் பொருள் : தரவுந் தாழிசையும் எண்ணும் வாரமுமென்னும் உறுப்பு முறையானே வருவது வண்ணகவொத்தாழிசையாம். என்றவாறு.

அது 'முதற்றொடை பெருகிச் சுருங்குமன் னெண்ணே' (தொல்-செய்-145) என்றவழிக் காட்டுதும். வண்ணித்துப் புகழ்தலின் வண்ணகமெனப்படும். என்னை? தரவினானே தெய்வத்தினை முன்னிலையாகத் தந்து கிறீஇப் பின்னர்த் தெய்வத்தினைத் தாழிசையானே வண்ணித்துப் புகழ்தலின் அப்பெயர் பெற்றதாகலின். ஒழிந்த உறுப்பான் வண்ணிப்பினுஞ் சிறந்த உறுப்பு அதுவென்க. எனவே, அகவிலேச் செய்யுட்டாழிசை வண்ணித்து வாராவென்பதாம். எண்ணுறுப்பாமாறு முன்னர்ச் சொல்லுதும். அவ்வெண்ணுறுப்புத்தான் நீர்த்திரைபோல வரவரச்சுருங்கிவருதலின் அம்போதரங்கமெனவும் அமைப்புமாகலின் அதனை அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பாவெனவுஞ் சொல்லுப. இனி வண்ணகமென்பது அராகமென உரைத்து அவ்வுறுப்புடையன வண்ணகவொத்தாழிசையெனவுஞ் சொல்லுவாரும் உளர். எல்லா ஆசிரியருஞ் செய்த வழிநூற்கு இது முதனூலாதலின் இவரோடு மாறுபடுதன் மரபன்றென மறுக்க. இசை நூலுள்ளும் மாறுபடின் அஃது அவர்க்கும் மரபன்றென்பது. மற்று இதற்குத் தனிச்சொல்லோதிய தில்லையாலெனின் அதனையும் அதிகாரத்தாற் கொள்க. (கசஅ)

453. தரவே தாழு,
நான்கு மாறு மெட்டு மென்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

இஃது, ஒத்தாழிசையுள் ஏனையொன்றற்குத் தரவு வேறு இலக்கணத்திற்றுகலான் அது கூறுகின்றது.

இதன் பொருள்: இது நான்குமுதற் பன்னிரண்டடியீறாக வாராது. தேவபாணிக்காயின் எட்டும் ஆறும் நான்குந் தரவடியாம், என்றவாறு.

இதனுனே தலையளவுங் கடையளவும் இடையளவுமென்பன கூறினுனும். இங்ஙனங் கூறவே ஒழிந்தவுறுப்பிற்குந் தலையிடைகடை யென்பது கொள்ளப்படும். நேரடி பற்றிய நிலைமைத்தாகும் நான்கு மென்பதனை அளவடியான் வருமென்றற்குக் கூறினுனுமென்பாரு முளர். அற்றன்ற; பிற அடி மயங்குவனவும் அளவடியுரியவென் பது முன்னர்க் கூறப்பட்டமையின். மற்றென்னைகருதியதெனின், சம நிலையின்றி வியனிலை வாராவென்பது. இனிப் 'பற்றிய' வென்ற மிகை யானை முற்கூறிய தரவுந் தாழிசையும் அளவடியான் வருதலில்லை யென்பது கொள்க. வருகின்ற ஒத்தாழிசைக்கும் பேரெண்ணிற்குஞ் சிற்றெண்ணிற்கும் இஃதொக்கும். (கசக)

454. ஒத்து மூன்றுகு மொத்தா ழிசையே.

இது, முறையானே ஒத்தாழிசை உணர்த்துகின்றது.

இதன் பொருள்: தம்மின் ஒத்த அளவினவாகலும் ஒத்தபொருள வாகலுமுடைய தேவபாணிக்கண் மூன்றுக வரும் ஒத்தாழிசை, என்ற வாறு.

இவை பொருள் ஒக்குமெனவே முன்னை அகநிலையொத்தாழி சைக்கண் வரும் இடைநிலைப்பாட்டிற் பொருள் ஒவ்வாது வருதலுஞ் சிறுபான்மைவரும். அவை,

"கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ."
(கலி-5)

என இடத்தியல் பொருளொழிய இடப்பொருளோடு உவமங் கூறினான்.

"ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
ணீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ" (கலி-5)

என இடப்பொருளொழிய இடத்தியல்பொருளோடு உவமங் கூறினமையின் வேறுபட்டன. ஒத்துவருவன முன்னர்க் காட்டினாம்.

455. தரவிற் சுருங்கித் தோன்று மென்ப.

இஃது, ஐயம் அறுத்தது; அகநிலையொத்தாழிசைகட்கு இவை போலத் தரவோடொத்து வருங்கொலென்றையுறாமைத் தரவிற்சுருங்கித்தோன்று மென்றமையின்.

இதன்பொருள்: மூவகைவண்ணத்தின் தாழிசையுஞ் சமநிலைத் தரவிற் சுருங்கித்தோன்றும், என்றவாறு.

வாளாதே தரவென்றமையின் இடையளவின்மேற் செல்லும், அடியென்றவழி அளவடிமேற்றாய போலவென்பது. தோன்றுமென்பதனான் இடைநிலையாகிய நான்கடியானும் மூன்றடியானுமன்றி ஐந்தடியானாகாதென்பது கொள்க. எண்ணோடு தொடர்தலின் இரண்டடியானாகாதென்பது பெற்றாம். இடையளவுதரவிற் சுருங்குமெனவே கடையளவுதரவினுந் தாழிசை சுருங்குமென்பது உய்த்துணரப்படும். இங்ஙனங் கூறாக்கால் ஓரடிமுதலாகத் தாழிசைகோடல் வேண்டுமஃதன்றோவென்பது. தோன்றுமென்றதனாற் கடையளவினை ஒழித்து மற்றைத் தரவிரண்டளவாகக் கொள்வாமெனக்கொள்க.* (கசங)

---

* "வாளாதே சுருங்கு மென்றாரேனும் 'தோன்றும்' என்றதனால், தரவின் பாதியாகிய நான்கடியும் மூன்றடியுமே தனக்குப் பெருமைக்கும் சிறுமைக்கும் எல்லையென்றுகொள்க. ஈரடியிரண்டும் வந்து தொடர்தலின், நான்கடித் தரவின் பாகமாகிய ஈரடித்தாழிசையாகாதாயிற்று. இங்ஙனங் கூறாக்கால் ஏழடிப்பெருமையாகத் தாழிசை கோடல்வேண்டும். இதனாற் கூறிய நான்கடியானும் மூன்றடியானுமன்றி ஐந்தடியானும் இரண்டடியானும் வாராதென்பதாயிற்று" என்றார் நச்சினார்க்கினியர்.

456. அடக்கியல் வாரந் தரவோ டொக்கும்.

இது, சுரிதகவிலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: தரவோடு ஒத்துவரும் அடக்கியல்வாரம், என்ற வாறு.

அடக்கியல்வாரமென்பது அடக்கும் இயல்பிற்றாகிய வாரமென்ற வாறு. சிறுத்தமுறையானே எண்ணுறுப்புணர்த்தாது மயங்கச்சுறிய தனானே தனிச்சொல் வருவதொன்று எண்ணீற்றினுஞ் சுரிதகத்துமுன்னும் புணர்ச்ச. அடக்கியலென்றதன் முன்னர்ப் டலவகையாற் புசழ்ப்பட்ட தெய்வத்தினை ஒருடையர்சொடுத் தடக்கினிற்றலின், வாரமென்றதன் செய்வச்சுற்றின் பச்சளைப் புசழ்ந்த அடி மிகுமாசலினென்பது.

457 முதற்றொடைபெருகிச்சுருங்குமன்னெண்ணே

இஃது, எண்ணுறப்பாமா றுணர்த்துகின்றது.

இதன்பொருள்: முதல் பெருகியவழி முதலெண், என்றவாறு.

தொடையென்றதனால் தலையெண் இரண்டு அளவடியான் ஒரு தொடையாகி வருமெனவும், பெருகியென்றதனால் இரண்டடியான் இரண்டனைநாட்டி அதுவே பற்றி முதல்பெருகிய வென்றதனால் ஒழிந்த எண்ணுத்தொடைக பெறுதலும் நேர்ந்தாலும். இதனை முதலெனவே வழிமுறை வருவனவும் எண்ணளவென்பது பெற்றும். அவை இத்துணையென்பது அறியுமாறென்னெனின்? முதற்றொடை பெருகியென்றதனால் இரண்டடியான் இரண்டனையும் நாட்டி, அதுவே பற்றிச் சுருங்குமென்றமையின் ஈரடியிற் சுருங்கி ஓரடியாதலும், ஓரடியிற்சுருங்கி இருசீராதலும், இருசீரிற்சுருங்கி ஒருசீராசவும்* படும். முதலடி இன்னதென்றில்லெய்னும் அளவடியே சொள்ளப்படும், 'நாற்சீர் சொண்ட தடியெனப் படுமே' (தொல்-செய-32) என்றலைசலின். ஆகவே இருசிரெனப்பட்டது குறளடியாயினும் இவை இரண்டு

* இங்ஙனம் 'ஒன்றற்கொன்று பாதியே சுருங்குதல் கொள்க' என்றார் நச்சினார்க்கினியர்.

தொடர்ந்தன்றி எதுகையாய் அமையாமையிற் குறளடியென்னானாயினானென்பது. ஒருசீர்க்கும் அளவடிப்படுத்துத் தொடைகோடலொக்கும். என்னை ?

"போரவுணர்க் கடந்தோய்நீ புணர்மருதம் பிளந்தோய்நீ
நீரசல மளந்தோய்நீ நிழறிகழைம் படையோய்நீ"

எனவும்,

"ஊழிநீ யுலகுநீ யுருவுநீ யருவுநீ
யாழிநீ யருளுநீ யறமுநீ மறமுநீ"

எனவும் அளவடிப்படுத்தே தொடைகொள்பவாகலின்.

அஃதேல் ஒருசீரினுஞ் சுருங்கப்பெறாதோவெனின் கந்தருவநூலின்கண்ணும் ஒருசீரிற் சுருங்கின வாராவாகலின் இவரும் பிறநூன் முடிந்தது தானுடம்படுதெலென்னும் உத்திவகையான் ஒருசீரிற் சுருங்குதல் நேராரென்பது. மற்று வழிமுறையாற் பாகஞ் சுருங்குதல் பெறுமாறென்னையெனின், 'வகார மிசையு மகாரங் குறுகும்' (தொல்-எழுத்-புள்ளி-35) என்றாற்போல மேலைக் கொண்டுவருகின்றவாற்றாற் பாகமே சுருங்குதல் பெறலாமென்பது. மன்னென்பது ஆக்கத்தின கண்ணும் வந்ததாகலிற் சுருங்கிப் டலவாமென்பதுகொள்க. எனவே, *இரண்டடியிரண்டும் ஓரடிநான்கும் இருசீரெட்டும் ஒருசீர் பதினாறுமாகி எண்பல்குமென்பது.† இருசீர் குறளடியுமாகலின் ஒருசீரான் வருவன சிற்றெண்ணெனவேபடும்.

---

* "இரண்டடியான் வருவன இரண்டும், ஓரடியான் வருவன நான்கும் சிந்தடியான் வருவன எட்டும், குறளடியான் வருவன பதினாறும் எனப் பிறநூலாசிரியர் உரைப்பர். இவ்வாசிரியர்க் கவ்வரையறையில்லை என்றவாறாம்" என்றார் உரையாசிரியர்.

† "ஈரடியும், ஓரடியும், இருசீரும், ஒருசீருமாய்ச் சுருங்கி வாராநிற்கவும், இரண்டிற்கு நான்கும், நான்கிற் கெட்டும், எட்டிற்குப் பதினாறுமாய் ஒன்றற்கொன்று உறுப்புவகையான் இரட்டிக்குமெனக் கொள்க" என்றார் நச்சினார்க்கினியர்.

ஆகவே, ஒழிந்த முதனிலையெண்ணுங் கடையெண்ணும் இடையெண்ணுமென மூன்றுங் கூட்டி எண்ணி னிற்றற்குரியவாயின. இதுநோக்கிப் போலும் எண்ணென்று அடக்காது 'சின்ன மல்லாக் காலே' (தொல்-செய்-146) என ஒருசீரினை வேறுபடுத்து மேற்கூறு

இனி அளவடியினை நாட்டியே முதற்றொடை பெருகிச் சுருங்கு மென்றமையின் அளவடியிற் சுருங்கின இருசீரும் ஒரோவழிச் சின்னமெனப்படும். இனி அல்லாதார் ஈரடியிரண்டினைப் பேரெண் ணெனவும், ஓரடி நான்கினைச் சிற்றெண்ணெனவும், கடையெண் ணினை இடையெண்ணெனவும் ஒருசீரான் வருவனவற்றை அள வெண்ணெனவுஞ் சொல்லுப.* அளவடியாக நோக்கிப் பேரெண் சிற்றெண்ணென்றலுஞ் சின்னம்பட்டவழி இடைநின்றது இடை யெண்ணுதலும் எல்லே யளவைத்தாகிய சின்னம் அளவெண்ணுதலும் அமையும். அவற்றுள் இருசீரினை முன்னின்ற சீராகவும், ஒருசீரினை இருசீராகவும் அலகுவைப்பினும் அதனை 'அசையுஞ் சீரு மிசை யொடு சேர்த்தி' (தொல் செய்-11) என்பதனுன் மறுக்க. இதற் குச் செய்யுண் முன்னர்க் காட்டுதும். (கசஅ)

458. எண்ணிடை யொழித லேத மின்றே சின்ன மல்லாக் காலே யான.

இது, மேலதற்கோர் புறனடை.

இதன்பொருள்: முற்கூறிய எண்களின்றிவருதல் செய்யுட்கு வதமின்று சின்னவெண்ணென்று மொழிந்து நில்லாவிடத்து, என்ற வாறு.

எனவே, சின்னவெண்ணெழியாது மூவகையெண்ணும் ஒழித லுஞ் சின்னவெண்ணெழியுமிடத்து மூவகையெண்ணும் ஒழியாது வருதலுஞ் சுவையுடைத்தாயிற்று. இடையென்றதனுல் தலையெண்

*யாப்பருங்கலவிருத்தி யுரைகாரர் பேரெண், சிற்றெண், இடையெண், அளவெண், எனவே கொண்டுள்ளார்.

ணும் இடையெண்ணுமல்லன எட்டு நான்சாகியும் பதினெறு எட்டாகியும் குறைந்துவருதலுங் கொள்க. மூவகையெண்ணுஞ் சின்னமும் பெற்றுவருதல் சிறப்புடைமை எதமின்றென்றதனாற்பெறுதும்.

உதாரணம்:

"'மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணிதயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கு
மிருசுடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகத்தோர் பசுங்கொடிசேர்
செந்தழற்கண் ணுதலோனுந் தேருங்கா னீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வுருவா யல்லாத
பிறவுருவு நீயென்னிற் பிறவுருவு நீயேயா
யளப்பரிய தான்மறையா னுணர்த்துதற் கரியோனே.'

(இஃது எட்டடித்தரவு.)

எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றெழிலாகி
யவ்வுயிர்க்க ணடங்கியே யருளாது நீற்றலினால்
வெவ்வினைசெய் தலையிழந்து வெம்பிறவிக் கடல்சூழ்ந்த
வவ்வினையை யகற்றுமனிற்பதுன்ன னருளன்றே ;
பல்லுயிரும் படைப்பதுனின் பண்பன்றே பகலினால்
வல்வினையின் வலைப்பட்டு வருத்தங்கூ ருயிர்தம்மை
நல்வினையே பயில்வித்து நடுக்கஞ்செய் பவைநீக்கி
யல்லல்வா யழுந்தாம லகற்றுவது மருளன்றே;
அழிப்பதுனின் றெழிலன்றே யுறைந்தாலு முயிரெல்லா
மொழித்தவற்றுள் ளுணர்வுகளை யொருவாம லுடனிறுத்தி
பழிப்பின்றிப் பலகாலு மிப்பாரிசே பயிற்றுதலி
னழிப்பதுவு மில்லையா லாங்கதுவு மருளன்றே'

(தரவின் பாகம்பற்றிய நான்கடித்தாழிசை.)

'வேள்வி யாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை;
வினையி னீங்கி விழுத்தவஞ் செய்யு
முனைவர் தமக்கு முத்தி யாயினை' (ஈரடியிரண்டு.)

'இலனென வுதந்தோர்க் கில்லையு மாயினை;
யுளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை;
யருவுரு வென்போர்க் கரையு மாயினை;
பொருவற விளங்கிய போத மாயினை' (ஓரடிநான்கு.)

'பானிற வண்ணனீ; பனிமதிக் கடவுணீ;
நீனிற வுருவுநீ; நிறமிகு கனலிநீ;
யறுமுக வொருவனீ; யானிழற் கடவுணீ;
பெறுதிரு வுருவுநீ; பெட்பன வுருவுநீ' (இருசீரெட்டு.)

விண்ணுநீ; மலையுநீ; கடலுநீ;
யெண்ணுநீ; யெழுத்துநீ; யிரவுநீ; பகலுநீ;
பண்ணுநீ; பாவுநீ; பாட்டுநீ; தொடருநீ;
யண்ணனீ; யமலனீ; யருளுநீ; பொருளுநீ'' (ஒருசீர்பதினொறு.)

'ஆங்க' (தனிச்சொல்.)

'இனையை யாகிய விறைவனின் னடியினை
சென்னியின் வாங்கிப் பன்னுள் பரவுது
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லா
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி
முற்றிய பற்றொடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவர் முத்தியை
மயலற விளித்தனின் மலரடி
யரிய வன்னு யுரிதினிற் பெறவே' (சுரிதகம்)''

இஃது எட்டடித்தரவும், தரவின் பாகம்பற்றிய நான்கடித்தாழிசை மூன்றும், ஈரடியிரண்டும், ஓரடிநான்கும், இருசீரெட்டும், ஒருசீர் பதினொறுமாகிய நால்வகையெண்ணுந், தனிச்சொல்லும், எட்டடிச்சுரி தகமும் பெற்ற தலையளவுவண்ணகப் பெருந்தேவபாணி.

''' பலியுருவிற் கேலாத படைமழுவாள் வலனேந்திப்
புலியுரிமேற் பைத்தலைதாள் பூங்கச்சை விரித்தமைத்துக்
கண்கவருந் திருமேனி வெண்ணூலின் கவின்பகைப்பத்

தண்கமழ்பூந் தாரிதழித் தலைமலைந்து பிறைதயங்க
மொழிவலத்தான் மயங்காதே முறுவலாற் றேலாதே
விழிவலத்தா னுருவழிந்தோன் வேடங்கண் ணெர்வழியாக்
கலிகெழு கடற்கச்சிக் கமழிளந் தேமாவி
னெலிதளிரு முலைச்சுவட் டுன்பிறப்ப வுலவுங்கால்'

(இவை எட்டடித்தரவு.)

'நேறறுந் திருமேனி நெடும்பகலே னிலவெறிக்க
வேறேறிக் கடைதோறு மிடுபலிக்கு வருதிரால்
ஏறேறி யிடுபலிக்கு வரும்பொழுது மிடைபிரியாக்
கூறேறும் பசும்பாகங் கொள்ளுமோ கொள்ளாதோ;
பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றன் மேலிட்டு
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப நீர்வருங்காற்
கொல்லேற்றுக் கறுகிடனுங் கொள்ளுமோ கொள்ளாதோ;
நாணுக மடந்தையர்பாற் பலிக்கென்று நடந்தக்காற்
பூணுகந் தழீஇக்கொளினுங் பொங்காது போலுமாற்
பூணுகந் தழீஇக்கொளினும் புகையுயிர்த்துப் பொங்காத
கோணுகம் யாந்தருபால் குடிக்குமோ குடியாதோ.'

தரவின் பாகம்பற்றிய நான்கடித்தாழிசை மூன்று.)

'எரிவளை தரிக்கு மிடவயிற் றெடிக்கை
பரிகல மேந்தும் பசுசிறந் ததுகொல்;
உமையவள் விலக்கவு மொலிகட னஞ்ச
மிமையவர் தம்மை யிரந்துகொண் டூனகொல்'

(இவை ஈரடி இரண்டு.)

'இடையெழு பொழில்கட்கு மிமைப்பளவிற் கொல்லேறே;
கடைதொறு மலைவிற்பக் கற்பித்த வாறென்கொல்;
இரப்புநீர் வேட்டதுகேட் டிமையவரென் பட்டனரே;
பரப்புநீர்க் கங்கையோர் படர்சடையிற் கரந்ததே.'

(ஓரடிநான்கு.)

'பூண்டன வென்பு; புனைந்தது தும்பை;
ஆண்டன பூதம்; மறைவது வேதம்;
இசைப்பன பல்வேய்; எழீஇயது வீணை;
அசைப்பன வேணி; அதிர்வன பொற்கழல்' (இருசீரெட்டி.);

'எனவாங்கு' (தனிச்சொல்.)

'எல்வளை மகளிர் நிடுபலி நசைஇப்
பல்கடை திரிதருஞ் செல்வனீற் பரவுதுங்
கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை
வென்றி வாய்த்த வன்முரள் விடலை
யிவளவ,
ளிமிழிசை வேங்கடம் போலத் தமிழ்த்து
நாவலொடு பெயரிய ஞாலங்
காவல போற்றி வாழிய நெடிதே' (சுரிதகம்.)''

இஃது எட்டடித் தரவுந் தரவிற்சுருங்கிய ஒத்தாழிசை மூன்றுஞ் சின்னமல்லா மூவகை எண்ணுந் தனிச்சொல்லுந் தரவோடொத்த அடக்கியல் வாரமும் பெற்று வந்தது.

''ஆயிரங் கதிராழி யொருபுறந்தோன் றகலத்தான்
மாயிருந் திசைசூழ வருகின்ற வரவுணர்த்த
மனக்கமல மலரினையு மலர்த்துவான் முனைத
வினக்கமல முணர்த்துவபோன் றெவ்வாயும் வாய்திறப்பக்
குடதிசையின் மறைவதூஉ மறையென்ற கொள்ளாமைக்
கடவுளர்த முறங்காத கண்மலரே கரிபோக
வாரிருளும் புலப்படுப்பா னவனேயென் றுலகறியப்
பாருலகத் திருள்பருகும் பருதியஞ் செல்வகேள்'
(இது தரவு.);

'மண்டலத்தி னிடைநின்று வாங்குவார் வைப்பாராய்
விண்டலத்திற் கடவுளரை வெவ்வேறு வழிபடுவா

ரோங்குலக முழுதுபோர்த் திருவுருவி னொன்றாகி
யாங்கவரை வேறுவே றளித்தியென் றறியாரால் ;
மின்னுருவத் தாரகைநீ வெளிப்பட்ட விடியல்வாய்
மின்னுருவத் தொடுங்குதலா னெடுவிசும்பிற் காணுதா
ரெம்மீனுங் காலைவா யிடைகரந்து மாலைவா
யம்மீனை வெளிப்படுப்பாய் நீயேயென் றறியாரால் ;
தவாமதியந் தொறுநிறையத் தண்கலை யக்கலைதேய்ந்
தவாமதிய மின்னெடுவெந் தொன்றாகு மென்றுணரார்
தண்மதியின் வெளிபுக்கங் கிருளகற்றித் தவற்றுற்கொ
லம்மதியம் படைத்தாயு நீயேயென் றறியாரால்'

(இவை தாழிசை.)

"நீராகி நிலம்படைத்தனை ; நெருப்பாகி நீர்பயந்தனை ;
ஊரொழிவிற் காற்றெழுவினை ; ஒளிகாட்டி வெளிகாட்டினை'

(இவை இருசீர் நான்கு.)

'கருவாயினை ; விடராயினை ; கதியாயினை ; விதியாயினை ;
யுருவாயினை ; அருவாயினை ; ஒன்றாயினை ; பலவாயினை'

(இவை ஒருசீரெட்டு.)

'எனவாங்கு' (தனிச்சொல்.)

'விரிதிரைப் பெருங்கட லமிழ்ததத் தன்ன
வொருமுதற் கடவுணிற் பரவுதுந் திருவொடு
சுற்றந் தழீஇக் குற்ற நீக்கித்
துன்பந் தொடரா வின்ப மெய்திக்
கூற்றுத் தலைபனிக்கு மாற்றல் சான்று
கழிபெருஞ் சிறப்பின் வழிவழி பெருகி
நன்றறி புலவர் நாப்பண்
வென்றியொடு விளங்கி மிகுகம்யா மெனவே' (சுரிதகம்)''

என்பது எட்டடித்தரவும் தாழிசையும் இருவகைச் சின்னமும் தனிச்சொல்லும் தரவோடொத்த சுரிதகமும் பெற்றுவந்த தலையளவு வண்ணகப் பெருந்தேவபாணி.

சின்னமெனவே இருசீரொட்டும் ஒருசீர் பதிலுறும் அடங்குமென்ற ராகலின், இது சின்னமல்லாக்கால் எண்ணிடையிட்டுவந்த வண்ணக வொத்தாழிசையாயிற்று.

இனி, இருசீருமன்றி ஒருசீர் பதிலுறுகிய சின்னவெண்பெற்றும் வரும். அது வருமாறு :

‘‘‘உறைபதியி னுடனயனை யுந்தியாற் படைத்தோயு
மறைசுடல்சூழ் வுலமுதலா யினைத்துலகும் புரப்போயுந்
திருவிறமே காரிபோகத் திருமேகம் பயந்தோயு
மொருவிறமே விறமாக வொள்ளெரியை யுயிர்த்தோயு
மறுவித்து மார்பென்ன மலர்மகளை வைத்தோயு
விறத்தோடு நெஞ்சொத்த வுலமடந்தை கணவனுநீ’

(இது தரவு.)

‘பின்னமா யொன்றுகும் பெருமாயை யியற்றுவா
யின்னமா டங்கெதளிய வெமக்கருளி யிமையவர்க்கு
மன்னமாப் மூன்றெருகா லறம்பயந்த வறனுநீ;
குறியாதும் பிழையாத குறிமறைய முதன்மயக்கி
வெறியாதி மலரோற்கு வெளிப்படுத்து வேறுபடுத்
தறியாத மறையெமக்கு மறிவித்த வறவனீ ;
மாணுத மதிகொடுத்து வானவரை மயக்கியுங்
கோணுத மதிவாங்கிக் கொடுத்தருளி யிமையவர்க்குக்
காணுத மதிசாட்டுங் கருணைகூர் காட்சியைநீ’

(இவை மூன்றுந் தாழிசை.)

‘வானுநீ வுலனுநீ மதியுநீ விதியுநீ
தேனுநீ டமிர்தநீ திருவுநீ யருவுநீ
யன்புநீ யருளுநீ யாதிநீ யந்தநீ
யின்பநீ துன்பநீ யின்மைநீ யுண்மைநீ’

(இவை ஒருசீர்ச்சின்னம்.)

‘எனவாங்கு’ (தனிச்சொல்.)

‘நால்வகை யுருவிற் பால்வே றுகிய
கோல முதல்வனிற் பரவுது ஞாலத்து

நல்லவை யாவை யெனாது நினாது
செல்வ நோக்கிய னொய்தினி வல்லிதிற்
றுயரொடு தொல்வினை நீங்கிப்
பெயராச் சுற்றம் பெறுகம்யா மெனவே' (சுரிதகம்.)

என வரும்.

இதனுள் தரவுந் தாழிசையும் ஒருசீர்ச்சின்னமுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் வந்தவாறு கண்டுகொள்க.

"'கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளை
யழல்விழிச் சுழல்செங்கண் ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்' (தரவு.)
"முரசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்ல
ரடியொடு முடியறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ;
கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
மலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ;
படுமணி யினநிரை பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரினொடு மருப்பொசிய வீழ்ந்தது நிறம்வேறா
வெருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ.'
(மூன்றுந் தாழிசை.)

'இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை.' (ஈரடியிரண்டு.)

'கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
யொலியிய லுவணமோங்கிய கொடியினை;
வலிமிகு சகட மாற்றிய வடியினை' (ஏரடிநான்கு.)

'போரவுணர்க் கடந்தோய்நீ; புணர்மருதம் பிளந்தோய்நீ;
நீரகல மளந்தோய்நீ; ஞழறிசழைம் படையோய்நீ''
(இருசீர் நான்கு.)

'ஊழிநீ; யுலகுநீ; யுருவுநீ; யருவுநீ;
யாழிநீ; யருளுநீ; யறமுநீ; மறமுநீ.' (ஒருசீரொட்டு.)

'எனவாங்கு' (தனிச்சொல்)

'அடுதிற லொருவனிற் பரவுது மெங்கோன்
ரூடுகெழற் சொடும்பூட் பசட்டெழின் மார்பிற்
கயலொடு சலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடச்கைச் செவ்வே லச்சுதன்
ரூன்று முதிர்கட லுலக முழுதுட
ரூன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே.' (சுரிதகம்.)''

இது நால்வகை எண்ணினுள் இறுதிநின்ற எண்ணிரண்டுஞ் பிறவும் அன்ன. (கசசு)

459. ஒருபோ கியற்கையு மிருவகைத் தாகும்.

இஃது, ஒத்தாழிசை இரண்டனுள் ஏனையொன்றனை வண்ணக வொத்தாழிசை ஒருபோகென இருவகைத்தென்றுன் அவற்றுள் ஒருபோகின் வகையுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் : ஒருபோகும் இருவகைத்தாகும், என்றவாறு.

உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. இதனது பயம் ஒருறுப்பு இழத்தலின் ஒருபோகாதல் ஒக்குமாயினும் நிகழ்கின்ற உறுப்புத் தம்மின் வேறுதல் அறிவித்தலென்பது. அது முன்னர்ச் சொல்லு தும். (கசஎ)

460. கொச்சக வொருபோ கம்போ தரங்கமென்
றெருப்ப நாடி யுணர்தல் வேண்டும்.

மேல்வகுக்கப்பட்ட இரண்டற்கும் பெயரும் முறையும்

இதன் பொருள் : கொச்சகவொருபோகும் அம்போதரங்கவொரு போகுமென இரண்டாக உணரப்படும் அவை, என்றவாறு.

கொச்சகம் இழத்தலிற் கொச்சகவொருபோகாயிற்று. *வண்ணக மொருபோகென்றவழி ஒன்றேபாகி னின்ற கொச்சகம் ஒருவழி வாரா மையின் அது கொச்சகவொருபோகாம். இனி ஏனையொன்றெனப் பட்ட ஒன்றனுள் வண்ணகப்பகுதிக்குரிய எண்ணுறுப்பு ஒருவழியின்றி யெனப் பிறந்த அன்மொழித்தொகை. அம்போதரங்கவொருபோகு என்பது பண்புத்தொகை.† இடையீடில்லாத நிலத்தினை ஒருபோ கென்பவாகலின் அஃது ஒப்பிலுங்கியபெயர். ஒருபோகென்பதனைத் திரிகோட்டவேணியென்றதுபோலக் கொள்க. (கசஅ)

461. தரவின் முகித் தாழிசை பெற்றுந்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியு
மெண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியு

* இதுவே எட்டுப்பாடம். 'வண்ணக வொரு' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம். எண்டுச் சுட்டியது 'அதுவே, வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே' என்னும் 139வது சூத் திரத்தை.

†"கொச்சக உடைபோலப் பெரும் பான்மையும் திரண்டு வருவது கொச்சகம் எனவும், பலவுறுப்புக்கள் முறையே சுருங்கியும் ஒரோ வழிப் பெருகியு முருகியும் கடைக்கண் விரிந்து நீர்த்தரங்கம் போற லின் அம்போதரங்கம் எனவும் கூறினார். இவையும் ஒத்தாழிசைப் பகுதியென்பார் போக்கிய வொத்தாழிசையானே ஒருபோகென்று ரெனக் கொள்க" என்றார் நச்சினார்க்கினியர்.

**மடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப.**

இது,முறையானே கொச்சகவொருபோகுணர்த்துதல் நுதலிற்று,

இதன் பொருள் : இந்நாற்பகுதியான்வந்தும் அமையாது பின்னரும் யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைத்தாகிவருவது கொச்சகவொருபோகாம், என்றவாறு.

'தரவின்றுகித் தாழிசைபெற்றும்' என்பது தனக்கு இனமாகிய வண்ணகத்திற்கு ஒதிய தரவின்றித் தாழிசைபெற்று மென்றவாறு. அவை பாணிப்பாட்டாகிய தேவபாணி முதலாயின எனக்கொள்க. என்றார்க்கு அவை தாழிசையாயன்றி வாராமையின் தாழிசையாயு மென்றெழுந் சூத்திரமெனின் அங்ஙனங் கூறில் தரவொடு வருந் தாழிசையிலக்கணத்தவாம் இவையுமென்றஞ்சித் தரவொடுபட்ட தாழிசையன்றிப் புறத்துள்ளன என்றற்கு அது விலக்கிலனென்பது. எனவே இவை ஒத்துமூன்றுதலும் ஒருபொருண்மேல் வருதலுந் தாழம்பட்ட ஓசையவோடாதலும் பயிலுமென்பதுஉஞ் சொல்லினாலிற்று. அங்ஙனஞ் சொல்லிய வதனானே பாணியுளெல்லாம் இரண்டடியானே தாழம்பட்ட ஓசைவிராய்வருதலும் முடுகிவருதலும் பெறுதும்.

இனித் தாழிசை மூன்றுகியவழி மூன்றடியானும் நான்கடியாலும் வரும். இனிப் பத்தும் பன்னிரண்டுமாகி ஒரு பொருண்மேல்வரும் பதிகமென்றும் அகப்பட்டு நான்கடியின் ஒன்றுது வருதலும் அங்ஙனம் வருங்கால் தாழ்ந்த ஓசை பெற்றும் பெறுதும் வருதலும் அவையும் இருசீர்முதலாக எண்சீரளவும் வருதலுமென்றின்னோரன்ன பகுதியெல்லாம் அவ்வரையறையின்றித் தழுவப்பட்டன. அஃதேல், அவற்றைத் தாழிசையென்ற தென்னையெனின் பெரும்பாலுந் தாழம்பட்ட ஓசையுற்ற வாசலினென்பது. என்றார்க்குத் தரவு விலக்கிய தனான் எண்ணுஞ் சுரிதகமும் விலக்குண்ணுவாம் பிறவெனின், அற்றன்று; தாழிசைப்பேறு விதந்தோதவே ஒழிந்தன விலக்குண்ணு

மென்பது. மற்றுத் தாழிசை பெறுவதியாதோவெனின், கொச்சக வொருபோகெனப் பொதுவகையாற் செய்யுளெனக்கொள்க. அது நோக்கிப்போலும் பலவுமெண்ணி யாப்பினும் பொருளினும் வேற் றுமையுடையதென்று ஒருமை கூறுவாளுயிற்றென்றுணர்க. அஃ தேல் இரண்டடியான் வருந் தாழிசை பேரெண்ணுகாவோவெனின், அதுவன்றே முதற்றொடை பெருகினன்றி எண்ணெனலாகாமையி னென்பது. இவை வருமாறு:

"உளையாழி யோரேழு மொருசெலுவி னடங்குதலான்
விளையாட நீர்பெரு மின்னுருவம் பராவுதுமே."

என்றாற்போலப் பாணிச்செய்யுளுட் பயின்று வருமென்பது.

இவ்வாறு பலதாழிசை தொடர்பொருளவாகலின் அவற்றைப் பல அடுக்கிவரினுந் தாழிசையாமெனவே இதற்கு வாராவெனப் பட்ட கொச்சகந் தாழிசையின்றி வெண்பாவாகி வருமென்பது உய்த் துணரப்படும். என்னை ? வெண்பாவினுன் வஞ்சி பரிபாடலுட் கொச் சகம் வருமென்றமையின். பஃறாழிசைக் கொச்சகமெனவும் அமை யும். அவை சிலவருவன சிஃறாழிசைக் கொச்சகமெனப்படும். பிற வும் அன்ன. மற்றுப் பாணியுட் புறத்திணைபலவும் விராய்வருதலின் அது தேவபாணியா மென்ற தென்னையெனின், அவையெல்லாங் காடு செழு செல்விக்கு பாணிநாட்கூழுந் தூணுங்கையுங் கொடுத்து வழி படுவதோர் வழக்குப்பற்றி அதனுட் பாட்டுடைத்தலைவனைப் பெய்து சொல்லப் படுவனவாதலான் அவையெல்லாவாற்றானுந் தேவபாணி யேயாமென்பது. என்றார்க்கு ஒரு தாழிசையோ பலதொடர்ந்த வழியோ கொச்சகவொருபோ சாவதெனின் வரையறையின்மையின் இருவாற்றானுமாமென்பது. இனித் தாழிசை மூன்றடுக்கியவழி மூன் றடியான் வருமாறு:

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாஅயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் சேளாமோ தோழி ;
பாம்பு சயிறுக் கடல்கடைந்த மாஅயவ

னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி;
கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாஅயவ
னெல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி''

(சிலப்-ஆய்ச்சியர் குரவை.)

என வரும்.

இனி நான்கடியான் வருதல் சிறுபான்மை. அவை வந்தவழிக் கண்டுகொள்க.

'தாழிசையின்றித் தர்வுடைத்தாயும்'என்பது மேற்கூறிய தாழிசையின்றித் தரவேபெற்று வருதலுமென்றவாறு. பொதுவகையானின்ற கொச்சகவொருபோகு இரண்டு தரவுடைத்தெனப்பட்டது. மேல் தரவின்றுகி யென்றல்போல ஈண்டுந் தாழிசையின்றி யென்றதனால் தாழிசைபொடுபட்ட தரவிலக்கணத்தில் திரிந்துவரும் இத்தரவெனக் கொள்க. அது தரவுகொச்சகமுந் தரவிணைக்கொச்சகமுமென இரண்டாய்வருதலும் நான்கும் ஆறும் எட்டுமாய் வருதல் கடப்பாடின் றென்பதூஉங்கொள்க. உடைத்தெனப்பட்டது தரவெனவே ஒழிந்த உறுப்பு விலக்குண்டன. ஆகியுமென்ற மிகையான் இரண்டுவருதலே பெரும்பான்மையெனவுந் தரவோடொக்கு மெனப்பட்ட சுரிதகம் பெரும்பான்மையும் பெறுஞான்று பெறுவது அதுவேயெனவுங் கொள்க. சுரிதகம்பெறுவன சுரிதகத்தரவிணையென்று வழங்குப. மேல் தனிச்சொற்கு வரையறையின்மையின் அது பெற்றும் பெறாதும் வருமென்பது. மற்றுத் தரவிலக்கணம் இழந்ததாயின் அதனைத் தரவென்று பயந்ததென்னையெனின், தாழம்பட்ட ஓசையின்றி அது வருதல் பெரும்பான்மை யென்றற்கென்பது. எனவே, யாண்டுந் தரவென்பது தாழம்பட்ட ஓசைக்கு ஒருதலைமையின்றி வருமென்பது நேர்ந்தவாருயிற்று. அது,

''நீறணிந்த திருமேனி நெருப்புருவங் கிளைத்ததுபோற்
கூறணிந்த குங்குமங்கொண் டொருமூலையோர் குறிசெய்ய

வேறணிந்த குவடெறிப்ப வேனிலாற் கெரிவிழித்த
வேறணிந்த வெல்கொடியா யெவ்வுயிர்கீற் றவிர்ந்தனவே"

என்பது தரவுகொச்சகம்.

"பூணக வென்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணக வெண்ணூலான் வாணுதலாள் பாகங்கொண்
டேணரும் பிச்சையா னுண்ணுத நஞ்சுண்டான்
வாளறு தோய்ந்த சடையான்வண் மாகத்தான்
*யானர்வஞ் செய்த விறை;
எனவாங்குப் பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
வினைமாசு தீர விளக்காகுந் தோற்றத்
தினைபோய் மறலிக்கு மச்சம் பயக்கும்
புனைபூங் கழற்றாண்மேற் பூவொடு நீர்தூவி
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
யினைநாளு மேத்துது மெந்தையை யின்னே
னினையா தொழியறந் நெஞ்சு."

என்பது தரவினைக்கொச்சகம். இது சுரிதகம் பெற்று வருவனவுந் தனிச்சொற் பெற்று வருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

மற்றுத் தேவபாணியல்லாத தொடர்பொருட் செய்யுட்கண் தரவின்றித் தாழிசை வந்ததென்னுமோ தாழிசையின்றித் தரவுடைத்தாய தென்னுமோவெனின், அவை யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய தென்றதனானே ஒன்றற்கொன்று தரவெனப்பட்டுத் தரவு கொச்சகமாமென்பது. என்னை? ஆறும் எட்டுமெனப்பட்டு வாராமையானும் மூன்றடித்தாழிசையாய் வாராமையானுந் தாழிசையெனப்படாமையின். அவை தம்பொருளொடு தாம் முடியாமையின் தரவுகொச்சகமாயின. இனி அத்தொடர்நிலையின் முதற்கண்நின்ற தேவபாணி தன்பொருளொடு தான்முடிதலின் அது விதந்தோதிய தரவுகொச்சகமாம். என்னை? எருத்தென்பது உடம்பிற்கு முதலாகலினென்பது.

---

* 'யானேர்வம்' என்றும் 'யானேர்தவம்' என்றும் பிரதி பேதங்கள் உண்டு.

'எண் இடையிட்டுச் சின்னங் குன்றியும்' என்பது வண்ணகத்திற்கு ஓதிய எண்ணுஞ் சின்னமுமின்றி ஒழிந்ததாம். தரவு தாழிசை தனிச் சொற் சுரிதகமென்னும் நான்கு உறுப்புடையதுங் கொச்சகவொரு போகாமென்றவாறு. இதற்கு இல்லாத உறுப்பே கூறி, உள்ளது கூறிலன், அல்லாத உறுப்பினையெல்லாம் அவற்றுனே கிற்றலே வேண்டியென்பது. உதாரணம்:

"ஆறறி யந்தணர்" "படுபறை பலவியம்ப" "மண்டமர்" "கொலை புழுவை" "எனவாங்கு, பாணியுந் தூக்கும்" (கலி-கடவுள்வாழ்த்து), என வரும்.

எனையொன்றெனப்பட்ட தேவபாணி ஒத்தாழிசையாகலான் உறுப்பொன்றியும் முதனிலை யொத்தாழிசையாசா. எனை ஒத்தாழி சையில் உறுப்பிழத்தல் பற்றி 'ஒப்ப நாடி யுணர்தல் வேண்டும்' (தொல்-செய்-148) என்பதனுற், சின்ன எண் கற்பவும் எண் இழந்த தெனப்பட்ட அம்போதரங்க வொருபோகுபோலக், கொச்சகமே யன்றி எண்ணுறுப்பு இழந்தநூஉங் கொச்சகவொருபோ கெனப்பட்ட ஒருபோகாமென்றுனென்பது.

'அடக்கியல் இன்றி அடிகிமிர்ந்து ஒழுகியும்' என்பது அடக்கும் இயல்பிற்றல்லாத ஈற்றதாகி ஒருதொடையான் அடிகிமிர்ந்தொழுகியு மென்றவாறு. ஒழுகுமெனவே அற்றுவாராது ஒனறேயாகி வருமென் பது. அடிகிமிருமென்றதனுன் மேல் அடியரையறுத்துச சொல்லப் பட்ட தரவு தாழிசை முதலிய உறுப்பு இதற்கில்லையென்றவாறும். அடக்கியல் வாரத்தினை அடக்கும் இயல்பின்றியெனவே இதற்கு வாரம் நேர்ந்தாலுமாகலின், ஒழுகுமென்றதனைத மாறுகொள்ளும். பிறவெனின், அங்ஙனம் படுமாயினும் ஒருகாரணம் நோக்கி அவ்வாறு நேர்ந்தானென்பது. என்னை ? அடி கிமிர்ந்தொழுகுங்கால் 'எழுசீ ரிறுதியாசிரியங் கலியே' எனவும் 'வெண்பா வியலினும் பண்புற முடியும்' எனவும் ஓதியவாற்றுனே இறுதிகிற்ப ஏனையடியெல்லாங் கலியடியாகி ஒழுகி வாரம்பட்டு கிற்குமென்று கோடற்கென்பது. ஈத தியாதார் 'வெண்பா வியலாற் பண்புற முடியும், கலியடியுடையதனை

வெண்கலியென்ப. வெண்கலியாமாறு முன்னர்ச் சொல்லுதும். உதாரணம்:

"மழைதுழைத்துப் புறப்பட்ட மதியமு ஞாயிறும்போ
லுழைமுழங்கு வலம்புரியுந் திகிரியு மொளிசிறப்ப
வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய் பச்சென்னக்
கானின்று கனல்கின்ற கதிர்முலைமேற் கவின்செய்ய
வம்மேகத் திடைப்பிறந்த நசையுருமே றதிசயிப்ப
மைமேனி மருங்கதிர நகத்தாரியே வால்புடைப்ப
விண்டோயு மதிணீல வெற்பிடைவேய் மிடைந்தாங்
கெண்டோளு மிடுநீழ லிளங்கதிர் களிகூரக்
கொதியாது கொதித்தெதிர்ந்த கோடெருமைத் தலைமிசை
மிதியாத சீறடி மிதித்தனபோற் ரோன்றத்
தாங்கிய புகர்வாளுங் சேடகமுந் தனித்தனி
வாங்கிய கோளரவு மதியமும் போன்றிலங்க
மைதொடுத்த கடற்புறஞ்சூழ் மலையென்ன மணியல்குல்
கொய்துடுத்த பொற்றுகிலின் கொழுஞ்சோதி கொழுந்
நீனின்ற படிவத்தா னெடியோனே முதற்பயந்த [தோட்ட
தாயென்று முதுமறை பரவினும்
யாயென் றல்ல தியாந்துணி யலமே."

என வரும். வெண்பாவினுன் முடியுங் கொச்சகவொருபோகு தேவபாணியாய் வந்தன கண்டுகொள்க.

யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையதெனவே யாப்பின் வேறுபடுவனவும் பொருளின் வேறுபடுவனவுமென இரண்டாம்.

அவற்றுள், யாப்பின் வேறுபடுதலென்பது மேற்சொல்லின வாறும் இனி வருகின்றவாறுமின்றி யாப்பிலக்கணத்தின் வேறுபடுதல். அவை இருசீர்முதலாக எண்சீர்காறும் வந்த அடி மேற்கூறியவாறன்றி பாநான்கே பெற்றுவருதலும் அவற்றுட் பிற அடி விராய்வருதலும் பாமயங்கிவருதலும் இரண்டும் மூன்றும் நான்கும் அடியுள் ஈற்றடி குறைதலுங், குறையாதவழி இயலசைச்சீர்வருதலும், மூன்றடியாயிற் குறையாது வருதலும், நான்கடிச்செய்யுண் முடியவும் அடியிரண்டு

மிகுதலும், இனவியலின் வேறுபடுதலுங், கடவுட்டொடர்நிலைகள் பல தரவுந் தாழிசையுமாகி இடையிடைச் செய்வனவும், அடக்கியலின்றி அடிப்பட நிமிர்ந்தொழுகுமெனப்பட்ட அடக்கியலுடைத்தாகலு மென்று இன்னோரன்ன பலபகுதியுங் கொள்ளப்படும். இப்பகுதியெல் லாம் பொருள்வேறுபட்டவழியும் நிகழுமென்பது இரண்டனையும் உடன்வைத்தோதியதனாற் கொள்ளப்படும். என்றூர்க்கு வரையறை யின்மையிற் களம்பாடு பொருநர்கட்டுரையுந் தச்சுவினைமாக்கள் சொற்றொடரும் ஏற்று இக்காலத்து உரைநிகழ்ந்தனவும் ஒலிப்பாயிர மும் முதலாயினவெல்லாங் கொச்சகமாகற்கு இழுக்கென்னையெனின், அவையே அடிவரையறையில்லன ஆறென்றவழி உரையெனப் பகுத் தோர்க்கன்றே அது கடாவாவதென மறுக்க. இவ்வாறுவந்த கொச்ச கங்களே ஒருவரையறைப்படுத்துப் பாத்தோறும் இனஞ்சேர்த்தலும் பண்ணிற்குத் திறம்போலப் பன்னிருபகுதியவாமென்பார் *உரைக்கு மாறு : விருத்தந்துறைதாழிசையென மூன்றனையும் நான்குசெய்யு ளோடும் உறழ்ந்துரைப்பப் பன்னிரண்டாமென்பது. மருட்பாவும் பரிபாடலுமோவெனின், அவற்றுக்கு அஃதாராய்ச்சியன்றெனவும் அவற்றை ஒப்பனவெல்லாம் ஒப்பெனமொழிய அடங்குமென்பதூஉம் அவர்கருத்து. இனி நூற்றைப்பதுகளியும் எழுபது பரிபாடலுமெ னச்சங்கத்தார் தொடுத்தவற்றுள் ஒன்றனையில்லையென்றூர். அஃ திக்காலத்தினும் வீழ்ந்ததின்மையின் அவரிலக்கணத்தினை வழுப் படுத்தென்பது. இனி விருத்தமுந் துறையுந் தாழிசையுமன்றி ஒப்புந் திறனுமென்றாற்போல்வன சிலகூட்டி அறுவகைச் செய்யுளோடுறழ மூப்பதாம். இனி அவற்றை விகற்பித்துநோக்க எண்ணிறந்த பகு திபவாம். என்னை ? சீரும் அடியுந் தொடையும் பாவும் முதலாயவற்

* "இவ்வாறு வந்த கொச்சகங்களே யெல்லாம் ஒரு வரையறைப் படுத்துப் பாத்தோறும் இனஞ்சேர்த்திப் பண்ணிற்குத்திறம்போலப் பின்னுள்ள ஆசிரியர் அடக்குவர். அதனை அகத்தியமும் தொல்காப் பியமும் உணர்ந்தவர், அதன் கருத்தறிந்த ஆசிரியர் அவ்வாறடக்கா மைக்குக் காரணங்கூறுவர் - அவர் கூறுமாறு:" என்று மேல்வரும் பே ராசிரியர் மறுப்புரைகளனைத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார் நச்சி னார்க்கினியர்.

ரோடு குறளடிமுதலாயவற்றை வைத்துறழவும் அவ்வடி தம்மொடு தம்மைப் பரிமாற்றவுந் தம்மொடுபிறவற்றை மயக்கவும் பல்குமாகலின்.

"கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோ நாமே"

(கொன்றைவேந்தன்-காப்பு)

என்பது இரண்டடியாகலின் வெண்பாவினுள் ஒருசாரனவற்றுக்குங் கலியுள் ஒருசாரனவற்றுக்கும் இனமென்பதுபடும். இனிச் சிருந்தலையும் நோக்க ஆசிரியத்திற் கினமெனப்படும்.

இங்ஙனம் பலவற்றுக்கினமாயினும் இரண்டடியானே ஒரு செய்யுள் வருவது வெண்பாவென்பதுநோக்கி அதற்கினமாக்கி வெண்செந்துறையென்ப. இரண்டடியும் ஒத்துவருதலானும் ஒழிந்த காரணங்களான் நேர்ந்த பாக்கட்கினமாகலே விலக்குதல் அரிதாகலானும் அங்ஙனம் இனஞ்சேர்த்துதற்கு வரையறையின்றென்பது. இனிச் சந்தஞ் சிதைந்தனவும் புன்பொருளவாய் வருவனவுஞ் செய்யுளென்பார் அவற்றைத் தாழிசையென்ப. அதற்குக் காரணமின்றென்பது. அல்லதூஉந் தாழ்ந்த ஓசையல்லா ஒன்றைத் தாழிசையெனில் தரவுதாழிசைகளுள் தாழிசையுஞ் சந்தம் அழியல்வேண்டுமென்பது. இனி விழுமியபொருளல்லாதனவற்றைத் தாழிசையென்றற்கு என்னே காரணமெனவும் மறுக்க. அல்லதூஉங்,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாஅயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தெங்குழல் கேளாமோ தோழி"

(சிலப்-ஆய்ச்சியர்குரவை)

என மூன்றும் மூன்றடியான் முடிந்ததனே ஆசிரியத்தாழிசையெனின் அதனுட்கிடந்த வெண்டளை அதற்கொன்றுதென்னுமென்பது. *இனி இதுவே நான்காகிவரிற் கலிவிருத்தமென்ப. அது,

---

* 'இனி' என்பது முன் அச்சுப்பிரதியில் இவ்வாக்கிய முடிவிற் காணப்படுகிறது.

"நெருப்புக் கிழித்து விழித்த நெற்றி
யுருப்பிற் பொடிபட் டருவிழந்த மார
னருப்புக் கணையா னடப்பட்டார் மாதர்
விருப்புச்செய லின்னே விரும்புகின் றூரே"

என்றவழி, இது நான்கடியாசிரியத்திற்குத் தாழிசையாங்கால் இழுக்கென்னையெனவும், வெண்டளைதட்டு வெண்டாழிசையாதற்கு இழுக்கென்னையெனவுங், கலித்தளையில்லது கலிப்பாவிற் கினமாயவா றென்னையெனவுங் கூறி மறுக்க. இனிக் குறளடியானுஞ் சிந்தடி யானும் வருவனவற்றை வஞ்சிப்பாவிற்கு இனமென்ப. சீரளவொப் பினும் அடி நான்காதலானும் வருஞ்சீர் இயற்சீராதலானும் பாவேறு படுதலானும் அதற்கிவை இனமாகாவென்பது. இனிக் குறளடிச்செய் யுண் மூன்றுவரில் தாழிசையெனவுஞ் சிந்தடிச்செய்யுண் மூன்று வாராவெனவுங் கூறினதற்கும் ஓர்காரணங் கூறல் அரிதென்க. ஒழிந் தனவும் இவ்வாறே இனஞ்சேர்த்திற் பிறிதொரு காரணத்தாற் பிற பாவிற்கும் அவையே இனமாதல் கூட்டி மறுக்க. என்றூர்க்கு இங்ங னம் ஒன்றற்கு இனஞ்சேர்த்தல் அரியனவற்றைக் கலிப்பாவென்ற தென்னையெனின், பெரும்பான்மையுங் கலிப்பாவிற்கேற்ற ஓசைய வாகலின் அவையெல்லாவற்றுக்கும் ஒருபரிகாரங் கொடுத்துச் சூத்தி ரத்தினுள் அடக்கினர் இவ்வாசிரியர் 'மூந்நூல் கண்டு முறைப்பட வெண்ணி' (தொல்-பாயிரம்) என்பது. இது மேலைக்கொண்டு அடிப் படவந்த மரபு. இவையெல்லாம் நான்கடியுள் வருதலே பெரும் பான்மையெனக்கொள்க. எனவே, சிறுபான்மை **பாவைப்பாட்டும் அம்மனைப்பாட்டும்** முதலாயின நான்சடியின் இகந்துவருவனவாயின.

இனி அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியது ஒழித்து, ஒழிந்த கொச்சகவொருபோகு முப்பகுதியுந் தம்முறுப்புவகையானே அளவை கொள்ளப்படும். இப்பகுதி பலவாயினும் மரபுபட்டு வந்தவகையானே செய்யுள்செய்யப்படும். இனியவற்றுட் சில வருமாறு:

"நெய்யொடு திரியொக்க
செய்யாளைச் சேர்வார்க்குப்

பொய்யாத வுள்ளமே
பொய்யாகல் வேண்டுமே.''

எனக் குறளடி நான்காக வந்தது. இது குட்டம்பட்டு வாராதென்பதன் மேற்பட்டது.

''மையணி கண்டனே வாலேர்த
மையனே யாயிரம் பேழ்வாய்ப்
பையர வம்பல பூணு
மெய்யனே மேயது வீடே.''

என்பது முச்சீரடியான் வந்த கொச்சகம். இஃது இயலசைச்சீராகி வந்தவழியுங் கண்டுகொள்க.

''பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா ஞடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.''

என்பது சிறுபான்மை மூன்றடியான் வந்து இடையடி குட்டம்பட்டது. இது கந்தருவமார்க்கத்தான் இடைமடக்கி நான்கடியாதலும் ஈற்றடி ஒருசீர்மிகுதலு முடைத்தென்பது.

''ஒரு வான்பா லொருசெ டாடவிப்
பெரு நாகமே பூணும் பெருமா
னரு வாயிலு னையினு மன்பர்க்
குரு வாயிலு னுள்ளத்தி னுள்ளே.''

என்பது கிரையசைச்சீர் முதற்கண்வந்த அளவடி நான்கான்வந்தது. அசைச்சீரின்றி அளவடி நான்கான்வருவதுந் தாழிசையின்றித் தரவுடைத்தாகியுமென்றவழித் தரவுகொச்சகமா யடங்குமென்பது.

''மண்டிணி கொண்ட மலர்க்கொன்றை மென்மாலை
கொண்டணி செஞ்சடைக் கோட்டிளந் திங்கள் போலப்
பண்டணி யாகப் பலர்தொழுங் கங்கைநீர் வைத்தா
னுண்டணி கொண்ட நஞ்சுண்பார்க் கழிந்தாமே.''

என நாற்சீரடியிரண்டும் ஐஞ்சீரடியிரண்டுமாய் வந்தது.

'இனி அறுசீ ரடியே யாசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே' (தொல்-செய்-64)

என்றதுபோல * இலக்கணங்கள் கொச்சகவொருபோகிற்கே உரித்தாகவும் இன்னும் வேறுபட்டதாகவும் வரும். அது,

"கல்லாலந் தண்ணிழற்கீழ்க் கலித்துறை யதுபயந்த காமர் [காட்சி
நல்லானை நல்லா ளொருபாக மாகிய ஞானத் தானை
யெல்லாருமேத்தத் தகுவானை யெஞ்ஞான்றுஞ் சொல்லா [டாருக்
கெல்லாந் துயரல்ல தில்லை தொழுமின் கண்டீர்."

என வரும்.

இவ்வாறே ஒழிந்தனவெல்லாம் பரிமாற்றுப்படுப்பப் பலவாகி வரும். அவை வந்தவழிக் கண்டுகொள்க.

இனி நான்கடியும் ஒத்தவழி மயங்கி வருமாறு:

"தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு தழீஇ
வென்றுதி நந்தாதை வியந்துகை துடிகொட்ட
கின்றுடி மழகளிற்றை கினைவாரே வினையிலரே"

என வரும்.

"பூணைமலர்க் கடம்பின் பூந்தார்ச் சேந்த
னிணையடி பரவுதும் யாம்"

என்பது இரண்டடியான் ஈற்றடி குறைந்து வந்தது.

"கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவாம் யாமே"
(கொன்றைவேந்தன்)

* 'இலக்கணம்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

என்பது இரண்டடியுள் ஈற்றடி குறையாது அடிதோறும் மயங்கச்சீர் இயலசையான் வந்தது. ஒழிந்த மூன்றடியும் நான்கடியும் ஈற்றடியுங் குறைதலுங் குறையாதவழி இயலசைச்சீராதலுங் கண்டுகொள்க.

"வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணனின் னிறைகழ லிறுழுதனம்."

என்பது மூன்றடியால் தரவு வாராமையின் யாப்புவேறுபட்ட கொச்சகமாயிற்று.

"கடாமுங் குருதியுங் கால்வீழ்ந்த பூச்சைப்
படாமும் புலித்தோலுஞ் சாத்தும் பரம
னிடாமுண்ட நெற்றியா னெஞ்ஞான்றுங் சங்கை
விடாமுண்ட வார்சடையான் வெண்ணீ றணிந்தென
மெய்யுறு நோயில்லை வேறோர் பிறப்பில்லை
யையுறு நெஞ்சில்லை யாவதான் றில்லை."

என நான்கடியும் முடிந்தவழி இரண்டடி வேறுவந்த கொச்சகம். ஒழிந்தனவும் பிறவேறுபாட்டான் வருவனவுமெல்லாம் வந்தவழிக் கண்டுகொள்க. இச்சொல்லப்பட்டனவெல்லாந் தரவுகொச்சகத்தின் பாற் சார்த்திக்கொள்ளப் படுவனவென்ப. வேறும் உள. அவையும் அவ்வாறுதலறிந்துகொள்க. மற்று அங்ஙனங் கூறின் இரண்டடியான் வருவன தாழிசையாகலின், "சொன்றை வேய்ந்த செல்வ *** நாமே."

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஒதலிற் சிறந்தன் றிறுழுக்க முடைமை"

(முதுமொழிக்காஞ்சி)

எனவும் வருவன தாழிசையாம் பிறவெனின், தாழிசை இலக்கணஞ் சிதையவரினுந் தாழிசைக் கொச்சகமெனவேபடுமன்றே? தரவிலக்கணம் அழிந்து தரவிரட்டித்துச் சுரிதகம்பெற்றதூஉந் தரவு கொச்சகமாயிற்றுப்போல வென்பது. அல்லதூஉம் "ஒதலிற் சிறந்தன்

றெழுக்க முடைமை'' என்பது இரண்டடியின்றி முதுமொழி யாக லானும் ''ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்'' என்பது பலவற்றுக் கும் பொதுவாகலானும் அஃது இரண்டடி வரையறையுடைய பாட் டெனப்படாது. ''கொன்றை வேய்ந்த செல்வனடி'' என்பது கந்தருவ மார்க்கமாதலின் ஈண்டை யிலக்கணமெல்லாம் பெறுதல் சிறு பான்மையெனக் கொள்க.

இனிப் பொருளினும் வேற்றுமையென்பது முற்கூறியவகையா னும் மரபுவேற்றுமையானும் ஏற்றவகையான்வந்து பொருள்வேறு படுதல். அஃதாவது, தேவரை முன்னிலையாக்கிச் சொல்லாது படர்க் கையாகச் சொல்லுதலும், மக்களைநாட்டி வெட்சி முதற் பாடாண்டிணை இறுதியாகிய புறப்பொருளான் வந்து அதனுக்குரித்தென்று கூறப் பட்டதும், அப்பொருளின் வேறுபடுதலுமெனக் கொள்க. ஏற்ற வகையாற் பொருள்வேறுபாடு கொள்கவெனவே முன்னிலை படர்க்கை யான் வரும் பொருள்வேறுபாடே இஃது ஒதியநான்கு மாமாறு. வேறுபட்டவற்றுக்குமெல்லாம் பொதுவொழிந்த வெட்சி முதற் பா டாண்டிணை இறுதியாகிய பொருள்வேறுபாடு வரையறையுடைய வென்பது. என்னை? எடுத்தோதிய நான்கனுள் எண்ணிடை யிட்டுச் சின்னங்குன்றியும் அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியும் வரும் பகுதியொழிந்து வருமாசலின் இப்பொருள் வேறுபாடு பாணிச் செய்யுள் இடையிடை விரவிவரினல்லது வேறுவாராதெனக் கொள்க. இவ்வாற்றுற் கொச்சகக்கலிப்பாவினை வரைந்தோதவே ஆசிரியப் பா வும் வெண்பாவும் ஒருபொருண்மேற் பலதொடர்ந்தவழி மூன்றும் ஐந்தும் ஏழும் ஒன்பதுமாகிவருதலும் பிறவாற்றான்வருதலும் வரை யறையிலவாயின. தேவபாணியல்லாத தொடர்நிலைச் செய்யுளெல் லாம் யாப்பு வேறுபாட்டோடு பொருள்வேறுபாடுமுடைய எனக் கொள்க. அவையெல்லாம் அவ்வச்செய்யுளுட் காணப்படும்.

> ''புகலிரும் பனிச்சோலைப் பொன்மலைபோற் பொலிந்திலங்கி
> யகல்விசும்பிற் சுடர்மாட்டி யைம்பூத மகத்தடக்கி
> மண்ணக மிருணீங்க மன்னுயிர் படைத்தக்கா
> லண்ணலேற் றெழிலூர்தி யருமறை முதல்வனும்

தண்ணறுங் கமழ்துழாய்த் தாமரைக் கண்ணனும்
வண்ணம்வே றுடம்பொன்றாய் வானவில் லனையரே.''

எனப் படர்க்கையவாய்த் தெய்வம் பராஅதலிற் பொருள் வேறு பட்டது.

''வெண்பலிச் சாந்த முழுமெய்பு மேற்பூசி
யுண்பலிக் கேதிரியு மூர்தி மேலிட்டுக்
கண்பலிக் கென்று புகுந்த கபாலிமுன்
னெண்பலித் தாளிவள் யாது.''

என்பது 'காமப்பகுதி கடவுளும் வரையார்' (தொல்-புறத்-28) எனப்பட்ட பாடாண்டிணையாகலிற் பொருள் வேறுபட்டது. ''கன்றா குணிலாக், கனியுதிர்த்த மாஅயவன்''* என்பதோவெனின், அது முல்லைநிலத்துக்குத் தெய்வமாகலானும் முல்லைநிலத்தார் தந்தெய்வத் தினை அவ்வாறு அன்புசெய்து முன்னிலைப் புறமொழியாகக் கூறுதலா னும் அது கைக்கிளை யெனப்படாதென்பது. ஒழிந்தனவும் இவ்வாறு வருவன வந்தவழிக் கண்டுகொள்க. மற்று இவற்றையெல்லாங் கொச்ச கவொருபோகென்றதென்னை? மற்றையுறுப்புப் பலவிழந்தனவாலெ னின், அங்ஙனமாயினுங் கொச்சகவொருபோகென்னும் பொதுவிதி விலக்குண்ணுமையின் இது பொதுவகையாயெனப்திய பெயரெல்லாம் அவற்றுக்குமாகுமென்று எய்துவித்தானென்பது. இனிக் கொச்சக வொருபோகென்னது ஆகுமென்றதனன் ஒருபோகென்னது கொச் சகமென்றே வழங்கினும் அமையுஞ் சிறுபான்மையென்பது கொள்க.

462. ஒருபான் சிறுமை யிரட்டியத னுயர்பே.

இஃது, அதிகாரத்தான் மேல்நின்ற †நான்கனுள் இறுதிநின்ற கொச்சகவொருபோகிற்கு அளவுணர்த்துகின்றது; ஒழிந்தவற்றுக்

---

* சிலப்பதிகாரம்—ஆய்ச்சியர் குரவை.

† மேல் 'தரவின் றுகித் தாழிசை பெற்றும் (1) - தாழிசையின் றித் தரவுடைத் தாகியும் (2) - எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும் (3)-அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியும் (4)' என்ற நான்கனுள்.

செல்லாம் உள்ளுறுப்புப்பற்றி இரண்டளவைகூறி அங்ஙனங் கூறப் படாததற்கும் அவற்றோடு இனம்பற்றி ஈண்டை அளவுகூறினமை யின்.

இதன் பொருள்: பத்தடியிற் சுருங்காது இருபதடியினோறு வரும் அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகுமெனப்பட்ட கொச்சக வொருபோகு, என்றவாறு.*

முன்னர் நால்வகையாற் பகுத்து நிறீஇ, அதற்கிடையின்றி 'அது' வென்று ஒருமையாற் சுட்டிச்கூறினமையானும் மேல் 'நிமிர்ந்தொழு கும்' என்றக்கால் அடி எத்தனையும் பலவாமென்று ஐயுறுதலை விலக்கல் வேண்டுவதாகலானும் ஏற்புழிக்கோட லென்பதனானுமெல்லாம் அதுவே சொல்லப்பட்டது. அவற்றுக்குச் செய்யுள்:

"தடங்கடற் பூத்த தாமரை மலராகி
யடங்காத முரற்சியா னருமறை வண்டிசைப்ப
வாயிரம் பேராழி யகிரிதழின் வெளிப்பட்ட
சேயிழை யெனத்தோன்றுஞ் செழுஞ்பசலி னிரவுகற்றிப்
படுவகைப் பனிப்பகை நீங்கப் பருவத்து
விடுமழை மறுத்திடினு மென்மலரின் மதுமழையா
னெடுநிலங் குளிர்கூர நீர்மைகா னிழுறுறி
யண்டங்கள் பலபயந்த வயன்முதலா மிமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை யாகலின்
ஓங்குயர் பருதிச் செல்வனின்
னீங்கா வுள்ள நிங்சன்மா ரெமர்க்கே."

என்பது பத்தடியிற் சுருங்காது இருபதடியினோறு வரும் 'அடக் கிய லென்றி யடிநிமிர்ந் தொழுகும்' (தொல்-செய்-149) எனப்பட்ட கொச்சகவொருபோகென்றவாறு. இருபதடியான் வருவது வந்த வழிக் கண்டுகொள்க. (கடுo)

---

* 'மேற்சொல்லப்பட்ட கொச்சக வொருபோகு பத்தடிச் சிறுமை யாக இருபதடிப் பெருமையாகவரும்' என்று உரைகூறினர் இளம்பூர ணர். நச்சினார்க்கினியர், பேராசிரியர் கூறியவாறே ஈற்றில் நின்ற கொச்சக ஒருபோகெனக் கொண்டு உரைகூறினர்.

463. அம்போ தரங்க மறுபதிற் றடித்தே செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.

மேனின்ற அதிகாரத்தான் இதுவுங் கடவுள்வாழ்த்துப் பொருட்டாகிய அம்போதரங்கவொருபோகிற்கு அடிவரையறை கூறுகின்றது.

இதன்பொருள்: அம்போதரங்கவொருபோகுந் தன் உறுப்பெல்லாங் கூடி அறுபதடித்தாகியும் அதன்செம்பாலாகிய முப்பதடித்தாகியும் அதன்வாரமாகிய பதினைந்தடியாகியுஞ் சிற்றெல்லையெறும், என்றவாறு.

எனவே, இது தலையளவம்போதரங்கவொருபோகும் இடையளவம்போதரங்கவொருபோகுங் கடையளவம்போதரங்கவொருபோகுமென மூன்றற்குஞ் சிற்றெல்லை கூறியவாருயிற்று. அவற்றுக்குப் பேரெல்லை கூறுமாறென்னெனின் அறுபதிற்றடித்தெனத் தலையளவிற்கு வேறுகூறி அவ்வளவைப்பற்றி அதன்செம்பாலும் அதன் வாரமுமெனப் பாகஞ்செய்து வந்தாலைகலாற் கடையளவம்போதரங்கத்திற்குச் சிற்றெல்லை பதினைந்தாம். கடையளவம்போதரங்கத்திற்குச் சிற்றெல்லை பதினைந்தாகியவழிப் பேரெல்லை முப்பதின்காறும் உயருமெனவும், இடையளவிற்குச் சிற்றெல்லை முப்பதாகியவழிப் பேரெல்லை அறுபதின்காறும் உயருமெனவுந், தலையளவிற்குச் சிற்றெல்லை அறுபதாகியவழி அதனையும் இவ்வாறே இரட்டிப்ப அதன் பேரெல்லை நூற்றிருபதாமெனவுங் கொள்ளவைத்தாணெண்பது. அங்ஙனம் நூற்றிருபதாங்கான் மேனின்ற அதிகாரத்தால் தரவிற்கெல்லை இருபஃதாகவும் அதனைஒப்ப வருதலிலக்கணத்ததாகிய அடக்கியல் இருபதடியாகவும் நாற்பதடி பெறப்படும்.

இனிச், சிற்றெண் பதினெறும் அராகவடி நான்குமாக இருபதடி பெறப்படுங் கொச்சகம் இருமூன்றாகிய பத்தடியின் இகவாது அறுபது அடிபெறு மென்றவாருயிற்று. இனிப், பதினைந்தாங்கால் தரவு இரண்டடியும், கொச்சகம் மூன்றாகி ஆறடியும், அராகவடி ஒன்றும், சிற்றெண் நான்கும், அடக்கியல் இரண்டுமெனப் பதினைந்தடியாம்.

ஒழிந்த இடையளவிற்குந் தலையளவிற்கும் இவ்வாறே வருமாறறிந்து கொள்க. இவ்வுறுப்புக்கண் மேற்கூறுகின்றுழுகலின் ஈண்டு அளவை கூறிஞனென்பது. கலிப்பாவினுள் உறுப்பிற்கெல்லாம் ஈண்டே வேறுவேறளவை கூறி வருகின்றுழுகலின் இவற்றுக்கும் அவ்வாறே ஈண்டளவைகூறி அளவியலுட் கூறுனென்பது.

'சூத்திரத் துப்பொரு ளின்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லா
மொன்ற வுரைப்ப தரையெனப் படுமே.'(தொல்-மர-103.)

என்பதனுன் இதனுள்ளுறுப்பிற்கு அடிவரையறை உய்த்துணர்ந்து *காட்டினுமாமென்பது. (கருக)

464. எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெ
ணடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே.

இது, முன்னர்க்கூறிய அம்போதரங்கவுறுப்பு இவை ஐந்து மெனக் கூறியவாறு.

இதன்பொருள்: தரவும், கொச்சகமும், அராகமும், சிற்றெண் ணும், அடக்கியல்வாரமுமென ஐந்துறுப்புடையது அம்போதரங்க வொருபோகு, என்றவாறு.

தரவெனினும் எருத்தெனினுமொக்கும்.

இனிக் கொச்சகமென்பது ஒப்பினுகியபெயர். என்னே? பல கோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகமென்ப. அது போலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்முளொப்ப அடுக்கி யுஞ் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகமென்ரு ராகலினென்பது. இக்காலத்தார் அதனைப் பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கியுங்

---

* 'காட்டினுனும்' என்பதுமுன் அச்சுப்பிரதிப்பாடம். 'காட்டி னும் நாம்' என்பதொருத்த மூடைத்தாதல் காண்க.

கொய்சகமென்று சிதைத்தும் வழங்குப.* இவை வெண்பாவாகல் பெரும்பான்மை. வழிமுறைசுருங்கியும் வரையறை யெண்ணுப் பெறும் எண்போலாது பாவினுந் தலையினும் வேறுபட்டுப் பலவாகி யும் வருங்கொச்சகமென்பது. அராகமென்பது அரற்று கடுகிச்சேறல். பிறிதொன்றுபெய்து ஆற்றவேண்டுந்துணைச் செய்வதாகிய பொன் னினை அராகித்த தென்பவாசலின், அதுவும் ஒப்பினுகியபெயரா யிற்று. என்னை? மாத்திரைநீண்டுந் துணிந்தும் வாராது குற்றெழுத் துப் பயின்று வந்து நடைபெறுதலின். சிற்றெண் என்பது நால் வகையெண்ணினும் இறுதியெண்ணனமையின் அப்பெயர்த்தாயிற்று. அவ்வுறுப்புக்களிற் கூறியபொருளை அடக்குமியல்பிற்று வாரமாகலின் அதனை அடக்கியல் வாரமென்றனன்.

அதற்குச் செய்யுள்:

"செஞ்சுடர் வடமேரு வீருமருங்கின் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடுகே டகஞ்சுழல
மாயிரு மணிப்பீலி மணியெருத்திற் ரேன்றுங்காற்
சேயொளி கடற்பிறந்த செந்தியிற் சிறந்தெறிப்ப
மறுவருந்தம் மனத்துவகைத் தழைச்சிடான்வளர்த்தெடுத்த
வறுவருந்தம் முலைசுரந் தகடருந்தூ றமுதூட்ட
வாருருவத் தெரிமுன்று மொருங்கவித்தோன் வியப்பெய்த
வீருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்
ஆங்கு,
வினையொழி காலத்து வெவ்வெயிற் சோலத்
தினைவருந் தத்த மறம்புரிந் தாங்கு
மூனையடு தோற்றத்து மூந்நான் குருவிற்

* "பலகோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகம் என்ப வாகலின் அதுபோலச சிறியவும் பெரியவும் விராய் அடுக்கியும் தம்முள் ஒப்ப அடுக்கியும் வரும் செய்யுளைக் கொச்சகமென்றார். இது, ஒப்பி னுகிய பெயர்; இக்காலத்து மகளிர்ச்சூரியதாய்க் கொய்சகமென்று வழங்கிற்று" என்றார் நச்சினார்க்கினியர்.

கனைகடல் சுட்டது கண்;
தேவரு மக்களுஞ் சீற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி போலு
மூவிருந் தோன்றன் முகம்;
மடமகள் வள்ளி மணிக்கம் பலம்போல
விடையிடை சுற்றுத லின்றுந் தவிரா
தொடையமை தார்க்கடம்பன் ரூள்;
அவ்வழி,
அடியினை சேரா தவுணர் நடங்கிப்
பொடிபொடி யாகிய போர்ப்பொடு மாய
விடியுமிழ் வானத் திடைனின்றுங் கூஉங்
கொடியணி கோழிக் குரல்;
விழுச்சீ ரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சினின் ரூர்த்தார் பலர்;
உருகெழு முருகிய முருமென வதிர்தொறு
மெரிசிற கொடுமினை தபவரு மணிமயில்;
பெருகள வருமறை பெறுநெடு மொழியொடு
பொருகள வொளியிசை புகல்வன சிலகுறள்;
சிவந்தனதிசை சிலம்பினமலை
னிவந்தனதலை நிரம்பினகுறை;
ஆர்த்தனமறை ஆடினர்பலர்
போர்த்தன துகள் பொழிந்தனமலர்;
அங்கனந் தோற்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை னினக்கே
யாமறி யளவையிற் றமிழ்புனைந் *தேத்துத
னனிதக்க தாயினு னின்னெதிர்
நாணில மாகல் வேண்டும் யாணர்க்
கடம்புங் களிமயிற் பீலியுந் தடஞ்சூனை

* 'ஏத்துக-னின்னி தக்கமாயினும்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

நீரொடு நின்வயின் மாந்த
வாராப் புலமை வருகமா ரெமக்கே''

என்பது இடையளவம்போதரங்க வொருபோகு.

இவ்வுறுப்புக்களின் அளவு வேறு வேறு கூறுராயினும் அவற்றுக்கு ஏற்றவா றறிந்துசெய்யப்படும். இது நாற்பத்து நான்கடியான் வந்தது. ஒழிந்தனவும் இவ்வாறே வரும். இவையெல்லாம் இக்காலத்து வீழ்ந்தனபோலும். மற்றுக் கொச்சகவொருபோகினை முற்கூறி அதற்கு அளவை பிற்கூறினான், இதற்காயின் அளவை முற்கூறியதென்னையெனின், அங்ஙனம் அளவைபெற்ற அம்போதரங்க வொருபோகின் அளவை இனிக் கூறுது நின்றகலிப்பா மூன்றற்கும் அளவென்ப தறிவித்தற்கென்பது. அஃதேல் இதனையும் அம்போதரங்கத்திற்களவென வரைந்தோதிய தென்னையெனின், அது தலையிடை கடையென மூன்றளவுபெறு மென்றற்கென்பது. இவ்வதிகாரத்தான் வருகின்றவற்றோடு இதற்கு வேற்றுமையிலக்கணம் ஒப்பன அறிந்துகொள்க. வருகின்ற கலிவெண்பாட்டிற்கு 'வெள்ளடியியலாற் றிரிபின்றி வரும்' (தொல்-செய்-153) என்றமையின் அதற்கு இவ்வளவை ஒவ்வாதென்பது. (கஎ)

465. ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற் றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே.

இது, சிறுத்தமுறையானே கலிவெண்பாவாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஒருபொருளேக்கருதி மற்றொரு பொருள்படவுஞ் சொற்றொடர்ந்துகிடப்பத் தொடுக்கப்பட்ட வெள்ளையடியால் திரிபின்றி வருவது கலிவெண்பாட்டாம், என்றவாறு.*

* ''ஈற்றடி யளவும் ஒரு பொருளேக்குறித்து வெள்ளடியியலாற் றிரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாம், என்றவாறு'' என்பது இளம்பூரணர் உரை.

இயலென்றதனுன் வெண்பாவிலக்கணஞ் சிதையாதவற்றுக்கே ஒருபொருள் நுதலவேண்டுவதெனவும் அவ்வாறன்றித் திரிந்துவரு வனவெல்லாம் ஒருபொருள் நுதலாவென்னுங் கலிவெண்பாவா மெனவுங் கூறியவாறு. வெண்பாவிலக்கணமென்பது கட்டளையாகி வருதலுந் தளைவகையொன்றிவருதலும் பன்னிரண்டடியும் இகந்து வாராமையுமென இவையென்பது மேற்கூறினும். அவ்வாறன்றித் திரிந்துவருங்கால் வாளாதே அசையுஞ் சீரு மிசையொடு சேராதன பாவகை சிதைந்து கலித்தளையோசை எனப்படும். அற்றன்றியுந் தனக்கோதிய சிருந் தளையுஞ் சிதைந்தவழியும் பன்னிரண்டடியின் இகந்தவழியுங் கலிவெண்பாவாதற்கு வரைந்துகூறல் வேண்டுவதன் றென்பதுமுடம் அவை ஒருபொருள் நுதலாதுவரினுங் கலிவெண் பாட்டாமெனவுங் கூறினுமும். என்னை ? ஒருபொருள் நுதலிய தினைத் திரிபின்றிமுடிந்த கலிவெண்பாட்டெனவே ஒருபொருணுதலி யும் நுதலாதும் ஈண்டுக் கூறிய வேறுபாட்டான்வருவனவெல்லாந் திரிபின்றி முடியாதாகலின் வெண்பாட்டென்பது கொள்ளவைத்த மையினென்பது. இன்னுந் திரிபின்றி முடியுமென்றதனுனே ஒரு பொருட்டின்றிப் பலவுறுப்புடைத்தாகித் திரிபுடையதாயுங் கலி வெண்பாட்டுளதென்று கொள்ளவைத்தாமும். அது முன்னர்ச் சொல்லுதும்.

உதாரணம்:

" அரும்பொருள் வேட்சையி னுள்ளந் துரப்ப
* * * சென்ற விளமை தரற்கு" (கலி-18.)

என்பது பன்னிரண்டடியான் வந்து பலபொருணுதலி அமைதலிற் கலிவெண்பாட்டாயிற்று. ஒருபொருள் நுதலியவெனவே சொல்லப் படும் பொருளின் வேறுகிக் கருதியுணரப்படும் பொருளுடையதென் பதாயும் பெற்றும். என்னை ? இப்பாட்டினுட் பெண்டன்மைக் கேலாத நுண்பொருளினைத் தலைமகனெதிர்நின்று உணர்த்துவாள் செவ்வனஞ் சொல்லாது தலைமகன் பண்டு கூறியன சிலவற்றை வாங் கிக்கொண்டு சொல்லி அவன்மறைத்தானென்பது உணர்த்துகின்று

பொருண்மை கருதி உணரவைத்தமையின் அவ்வாருயிற்று. ஒழிந்த பாக்களும் அவ்வாறு ஒருபொருணுதலுமாயினும் அங்ஙனம் நுதலிய பொருள்பற்றிச் செய்யுள் வேறுபடாமையின் ஆண்டாராய்ச்சியின் றென்பது. வெண்பாவிற் குறித்தபொருளினை மறைத்துச்சொல்லாது செப்பிக்கூறல்வேண்டுமாகலானும் இஃது அன்னதன்றி ஒருபொரு ணுதலித் துள்ளினமையானுங் கலிவெண்பாட்டெனப்பட்டதென்பது.

"மரையா மரல்கவர மாரி வறப்ப" (கலி-6.)

என்பது பதிஞ்ஞெரடியான் ஒருபொருணுதலிவந்த கலிவெண்பாட்டு. நூற்றைம்பது கலியுள்ளுங் கலிவெண்பாட்டு எட்டாகலின் அவற்றுள் ஒருபொரு ணுதலிவருவன பிறவும் உள. அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இனிப், பன்னிரண்டடியின் இகந்து ஒருபொருணுதலாது வரு மாறு:

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ
* * * நோயுங் களைகுவை மன்" (கலி-111.)

என வரும். பிறவும் அன்ன.

இனிப், பாவகை சிதைந்தனவுந் தளைவகை சிதைந்தனவும் வந்தவழிக் கண்டுகொள்க. இவையெல்லாங் காமப்பொருண் மேன வாம். எனவே, கட்டளைவகையாலுந் தளைவகையொன்றியும் வரும் வெண்பாவாயிற் காமத்திற்கே உரியவெனப்படாவாயின. பிறவும் அன்ன. இனி, அம்போதரங்கவொருபோகிற்கு இடையின்றிக் கலி வெண்பாட்டு வைத்தமையான் "வானூர்மதியம்" போலும் ஒரு சார்த் தேவபாணியுங் கலிவெண்பாட்டேயாம் ஒருபொருணுதலிவரி னென்பது. இதனுள் "ஆட்சியுலகவென்கோ" என்பது வியங் கோளாயினும் அரசன் வாழ்க்கையும் அரங்கிற்கும் ஆடற்கும் இடை யூறின்மையுஞ் சொல்லுவாயாகவென்று தெய்வத்தினை விளைப் வாய்ப் புள்வேண்டி னின்றமையின் அது குறித்துணரப்பட்டு ஒருபொருணுத

லியதாயிற்று. கந்தருவ மார்க்கத்து வரியுஞ் சிற்றிசையும் பேரிசை யும் முதலாயினபோலச் செந்துறைப்பகுதிக்கே உரியவாகி வருவன வுங் கூத்தநூலுள் வெண்டுறையும் அராகத்திற்கேயுரியவாகி வருவன வும் ஈண்டுக்கூறிய செய்யுள்போல வேறுபாடப்பெறும் வழக்கின என் பது கருத்து. இக்கருத்தானே அவற்றை இப்பொழுதும் இசைப்பா வென வேறுபெயர்கொடுத்து வழங்குப. இனி, யாப்பிலக்கணத்திற் கொப்பவே இசைநூலுட் சொல்லப்பட்ட செய்யுளும் உள. என்னை?

> "வெண்பா வியலான் விரவுறுப் பின்றித்
> தன்பா வகையொடு பொருந்திய பொருளே
> வினைவினைஞ் திற்ற விறுதித் தாகும்"

என்றவழி விரவுறுப்பின்றியென வேண்டாகூறி விரவுறுப்புடையது பொருளொன்று வினையாதென விரவுறுப்பில்லது பொருளொன்று வினைந்திற்ற இறுதித்தாகுமெனவுங் கூறினமையின். எனவே, ஈண்டு ஒரு பொருணுதலி வருமெனப்பட்ட கலிவெண்பாட்டுப் பொருள் வெளிப்படாதெனவும் விரவுறுப்புடையது வெண்பாவிய லான் வெளிப்படத்தோன்றும் பொருட்டெனவும் நேர்ந்தாரும். அது நோக்கியன்றே வருகின்ற சூத்திரத்து வெண்பாவியலான் வெளிப்படத்தோன்றுமெனக் கலிவெண்பாட்டினையே கருதி ஓதுவா ரையிற்றுமென்பது. (கஙிரு)

466. தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து மைஞ்சீ ரடுக்கியு மாறுமெய் பெற்றும் வெண்பா வியலான் வெளிப்படத்தோன்றும்.

இது, மேல் வெளிப்படுபொருட்டெனப்பட்ட வெண்கலி விர வுறுப்புடைமையின் அதனை வேறு கூறுகின்றது.

இதன்பொருள்: தரவும்போக்கும் பாட்டிடை மிடைந்தும்—தர விற்கும் போக்கிற்கும் இடையின்றிப் பாட்டாகிப் பயின்றுவருதலும்; எனவே, தரவும் போக்கும் முன்னர் ஓதியவகையானே முன் னும் பின்னும் நிற்குமென்பதூஉஞ் சுரிதகமாயின் வெள்ளையும் அக

வலுமாய்ப் பாவோடு வந்தழிப்போலத் தனிச்சொற்பெற்றும் பெரு தும் வருமென்பதூஉங் கொள்க. தரவும்போக்குமெனப் பாட்டிறுதி கின்ற போக்கினே முன்வைத்தான் அவை ஓரினத்தவாகலின். என்னை? தரவிறுதி, சீரான் இறுமாறுபோல வெள்ளைச்சுரிதகவிறுதி யும் ஒரோவழிச் சீரானே இறுதலின். அது,

"தாதுசேர் வண்டின் றகைபெறத் ததைஇய
* * * †தோகை வரிபாடக் காண்கும்" (கலி-80.)

என நான்கசையானுமின்றித் தேமாவாயிற்றது. இனிப் பாட்டினைப் போக்கின்பின் வைத்ததனாற் போக்குப்போல நாற்சீரான் இறுவன வும் அப்பாட்டுள் அமையுமென்பது. அது,

"கரந்தாங்கே யின்னுநோய் செய்யுமற் றிஃதோ
பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு." (கலி-141.)

என்றாற்போல வரும். இங்ஙனம் வைப்பவே வருகின்ற ஐஞ்சீரடுக்க லும் ஆறுமெய்பெறுதலும் அவற்றுக்கன்றி எலாவாயின. அல்லதூஉம் இதனை இறுதிவைத்தான் இதனைடொக்குமென முற்கூறப்படுங் கொச்சகத்தரவும் போக்குமின்றிப் பாட்டு முடைந்தே வருமென்பது இவ்வதிகாரத்தாற் கோடற்சென்பது. அது முன்னர்க் காட்டுதும்.

ஐஞ்சீரடுக்கியும்—வேறுகின்றதொரு சீரினை அளவடியுடன் அடுக்கிச்சொல்ல ஐஞ்சீராகியும்; ஆறுமெய்பெற்றும்—அவ்வாறே இருசீரடுக்க ஆறுசீர்பெற்றும்; மெய்யென்றதனான் அடுக்குஞ்சீர் முத லும் இறுதியும் வருமென்பது கொள்க: வெண்பா இயலான் வெளிப் படத்தோன்றும்—வெண்பாவென்னும் உறுப்பினியற்கை சிதையா மற் பொருள்புலப்படத் தோன்றும், என்றவாறு.

இயற்கை சிதையாமல் தோன்றுமெனவே கட்டளையல்லதும் எனப்பட்ட வெண்பாவிலக்கணம் இரண்டுஞ் சிதையாமை வருமென் றாயிற்று. தரவும் போக்குமெனகின்ற உம்மை எண்ணும்மை. பாட் டிடைமிடைந்தென்பது முதலாக வந்த உம்மை மூன்றும் இறந்தது

† 'கோதை பரிபாட' என்பதும் பாடம்.

தழீஇய எச்சவும்மை. என்னை? மேற்கூறிய தனிநிலைவெண்பாட்டே யன்றித் தரவுறுப்பாகவும் என்றமையின். இவ்வாறன்றி அவ்வனைத்தும் எண்ணும்மைகொள்ளின் உறுப்பினையே எண்ணல்வேண்டும். அல்லாக்கால் வினையோடு பெயரெண்ணின் அதன் உறுப்பினையே எண்ணிஞ்ஞுகலானென்பது. அல்லதூஉந் தரவும் போக்கும் முதல் வந்தும் இறுதிவந்துமென அவையும் தம்வினையான் எண்ணவும்படு மன்றேவென மறுக்க. அவற்றுக்குச் செய்யுள் கூறுங்கால் தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்துதோன்றும். அதுவே ஐஞ்சீரடுக்குப் பெற்றதென்றும் அறுசீரடுக்குப் பெற்றதென்றும் அவையிரண்டும் உடன்பெற்றுத் தோன்றுவதென்றும் இங்ஙனம் விகற்பித்துக் கூறப் படுமென்பது. அவை கட்டளைவெண்பாவான் வருதலும் ஒழிந்த வெண்பாவான் வருதலுமென விகற்பிக்கப்படாவோவெனின், அவ் விகற்பம் அடிக்கல்லது பாவிற்கின்மைபானும் ஈண்டுப் பா வேறுபடா மையானும் அங்ஙனம் பகுத்ததனாற் பயந்ததென்னையெனமறுக்க. வர லாறு:

> "சான்றவிர் ஊழியோ சான்றவி ரென்றும்
> பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
> *** என்-றுயர்நிலை தீர்த்த லுந்தலைக்கடனே" (கலி-139.)

என்பது தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச்சுரிதகத்தான் வந்தது.

இனி வெள்ளைச்சுரிதகத்தான் வந்தனவும் கண்டுகொள்க.

> "கண்டவி ரெல்லாங் கதுமென வந்தாங்கே
> பண்டறியா தீர்போல நோக்குவிர் * * *
> அருளுறச் செயினுமக் கறனுமா ரதுவே" (கலி-140,)

என்பது தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச்சுரிதகத்தாலிற்றதாகலின், இதனுள்

"என்னுனும் பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே' என்னும் அடி ஐஞ்சீரடுக்கினுள்வந்தது. என்னை?

"பாடெனிற்பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ"

என்னும் அளவடியிரண்டும் எதுகையாய் அமைந்தவழி என்னுமென வேறு நின்ற சீரொடுங்கூடி ஐஞ்சீரடுக்கினமையின். இதனுள் ஆங்கவெனத் தனிச்சொல்வந்தது. "காராரப் பெய்த" (கலி-109) என்னும் முல்லைப்பாட்டு ஐஞ்சீரடுக்கி வெள்ளைச்சுரிதகத்தானிற்றது.

"அரிதினிற் ரேன்றிய யாக்கை * * *
பொருந்தாதார் போர்வேல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்" (கலி-141.)

என்பதனுள் "வாழிசான்றீர்" "அம்ம சான்றீர்" என ஐஞ்சீரடுக்கியாங்கு அடுக்கிச் சொல்ல அறுசீராயின. இதற்கும் ஐஞ்சீர் அடுக்கியுமென்றதுபோல அறுசீரடுக்கியுமென்று அடுக்குதற்குத் தொழில் கொள்ளப்படும், ஈண்டு இரண்டளவடி தொடைப்படச் செய்தமையினென்க. இதனுள்ளும் 'என்ருங்கே' என்பது தனிச்சொல்.

"புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கட்
செயனின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது"
(கலி-142.)

என்பதனுள் "இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தனன்" என இயற்சீர் வெளையொன்றியும் பாவேறுபடாமையின் அது கலிவெண்பாட்டாயிற்றென்பது கொள்க.

இங்ஙனம் பாவேறுபடாமையினன்றே,

"உரு அர்க் குறுநோ யுளைப்பாய் கடலேச்
செரு அய் வாழியென் னெஞ்சு" (குறள்-120-10.)

என்பதனை வெண்பா என்பாமாயிற்றென்பது.* இனி,

* 'செரு அய் வாழி' என இயற்சீர் நேரொன்றியும் பாவேறுபடாமையின் வெண்பாவெனக் கொண்டார். 'செரு அஅய்' என்பதுமுண் அச்சுப்பிரதிப்பாடம். இது பேராசிரியர்கொண்ட பாடமல்லவென்பது 289 ஆம் பக்கத்துக் கீழ்க்குறிப்பிற் காட்டப்பெற்றது.

"எல்லிரா வொல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல"
(கலி-142.)

என வெள்ளைச்சுரிதகத்துள் ஐஞ்சீரடியும் வந்தது. வெண்பாவிற்கு முன்னர், 'வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு மைஞ்சீரடியு மூள' (தொல்-செய்-63) என்றமையின். மேற் கூனெனவுஞ் சொற்சீரென வுங் கூறப்பட்டனவே ஈண்டு ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றுங் கூறப் பட்டன எனவுணர்க. இதற்கு ஐஞ்சீரும் அறுசீரும் விதந்தோதவே, மேற் சிறுபான்மை பொதுவகையாற் கலிக்கு நேரப்பட்ட சொற்சீரடி ஒத்தாழிசைக்கும் முற்கூறிய கலிவெண்பாட்டிற்குமாயின் எஞ்ஞான் றும் வாராதென்பதூஉம், அதுதானும் இதற்கு வருங்கால் இருசீரின் இகந்துவாராதென்பதூஉங் கூறினமையும். இங்ஙனஞ் சொற்சீரடி விலக்கவே அதற்கினமாகிய மூவகியலும் ஒத்தாழிசைக்கு வாராதென்ப தாம். அது வெண்கலிக்கோவெனின் வெண்பா வியலான் வெளிப் படத் தோன்றுமெனவே விலக்குண்டதன்றோவென்க. இனித் தரவிற்கும் போக்கிற்கும் பாட்டிற்கும் இவ்வளவைத்தென்பது அம் போதரங்கத்திற்கு ஓதிய வகையாற் கோடுமென்றமையின் அதற்கேற்ற வகையான் வருவதன்றி வேறு வேறு வரையறையிலவென்க. பாட் டிடைமிடையின் என்றமையின் ஈண்டுப் பாட்டென்றது கொச்சகத் திற்கேயுரித்தென்பது. மற்று,

"வெண்டளை தன்றளை யியற்றளை விரவியும்
வெண்பா வுடையது வெண்கலி யாகும்"

எனத் தளைவிரவியும் வெண்பாச் சிதையாதவழிக் கலிவெண்பாட்டா மென்று *ஓர் உத்தரஞ் செய்யாரே பலவுறுப்பு வந்தவழியும் இது புறனடையாகவெனின், அற்றன்று; வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றுமெனவே இவையெல்லாம் அடங்குதலின் அது வேறு கூறு னென்பது. இனிப் பலவுறுப்பின்றி அவ்வாறு ஒருபாட்டே வரின் அதனை வெண்கலியென்பாரும் உளர். நூற்றைம்பது கலியுள்ளும்

* ஏடுகளிலும் இவ்வாறே பாடமுள்ளது. ஆயினும் 'சூத் திரஞ் செய்யாரே' என்றிருத்தல் வேண்டுமெனத் தோற்றுகிறது.

அன்னதோர் கலிவெண்பாட்டின்மையின் அது சான்றோர்செய்யுளோடு மாறுகோளாமென மறுக்க. மற்றுப் பாட்டிடைமிடைந்தென்றவழிப் பாட்டெனப்பட்டது இடைநிலைப்பாட்டென்றுமோ கொச்சகமென் றுமோவெனின், எஞ்ஞான்றுந் தாழம்பட வாராமையின் இடைநிலைப் பாட்டென்னும். துள்ளலுஞ் செப்பலுமென்னும் இருவகைக் கொச் சகமும் ஒருங்குவாராமையிற் கொச்சகமென்னும். கொச்சகமென் னும் பொதுப்பெயரான் அது கூறராயினும் வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றுமென்றதனான் வெள்ளைக்கொச்சகமெனப்படும் அவையென்பது. அஃதேற் கொச்சகமென்று ஒதுகவெனின் அம் மனம் ஒதின் இது கொச்சகக்கலியாமென்று கருதினுங் கருதற்கவென் பான் வாளாதே பாட்டென்றான். இதனாலும் பெற்றும் இது கொச் சகக்கலியல்லாமை. (கஅசை)

467. பாநிலை வகையே கொச்சகக் கலியென நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே.

இது, நிறுத்தமுறையானே அகவிலக்கொச்சகக் கலியுணர்த்து கின்றது. பாநிலைவகையென்பது உம்மைத்தொகை, பாநிலையும் வகையு மென விரியும். பாநிலையென்பது ஓரும்வேற்றுமைத்தொகை.

இதன் பொருள்: மேற்பாவினின்ற வகையானே கொச்சகக் கலியாமென்று *நூலாசிரியர் கூறித் †துணித்தனர், என்றவாறு.

அறைதலெனினுந் ‡துணித்தலெனினும் ஒக்கும். என்னை? துணித்த கரும்பினை அறைக்கரும்பென்பவாகலின். பாநிலையென்றது யாதனை நோக்கியெனின் இது கொச்சகமாதலான் அதுவும் மேலே ஒருபோகெனக் கூறப்பட்ட கொச்சகப்பாநிலை யெனக்கொள்க.

* 'இலக்கணமறிந்த புலவர் கூறினர்' எனப் பொருளுரைத்தார் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் 'நூலறிந்த ஆசிரியர் கூறித்துணித் தார்' என்றார்.

† 'துணிந்தனர்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். ‡ 'துணி தல்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். இவ்விரண்டு பாடமும் பொருந்தாமை கண்டுகொள்க.

அதனைத் †துணித்தனரென்றதனால் 'தரவின்றுகித் தாழிசைபெற்று' (தொல்-செய்-149) வருமென்ற கொச்சகத்தினை இதற்கு இயைபின்றுக முன்வைத்தமையான் அஃதொன்றனையுந் துணித்து மாற்றி அல்லாத கொச்சகப்பாவினின்ற வகையான் இவ்வகவிலேப்பாட்டுப் போல அகவிலேக்கொச்சகம் வாராவென்றுணும். வகையென்றதனான் அதிகாரத்தானின்ற வெண்கலிப்பாவினது பாவிலேயுங் கொள்ளப்படும். அஃதேல் அதனைப் பாவிலேயென்னுது வகையென்ப தெற்றுக்கெனின் வெண்கலிப்பாத்,

'தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து
* * * *
வெண்பா வியல்லான் வெளிப்படத் தோன்றும்'
(தொல்-செய்-154.)

என்றதனான் வெண்பாவிற் சிதையாது வருமென்று உறுத்துக் கூறினனென்பது. எனவே, பாவொழிந்த உறுப்பெல்லாம் பொருணுதலாது வெளிப்படத்தோன்றுங் கலிவெண்பாட்டின் உறுப்புவகையான் வருதலும் உடைத்தென்றவாறு. அங்ஙனம் வருங்கால் இடைவின்ற கொச்சகங்களே 'ஐஞ்சீ ரடுக்கலும்' (தொல்-செய்-155) என்ற கலிவெண்பாவிற்கு ஒதியவாறே கொள்க. மற்று நூலறிபுலவரென வேண்டியதென்னேயெனின், தரவு இணைந்து வாராது யாப்பின் வேறுபட்டு ஒருதரவே கொச்சகமாதலும், தரவிணைந்தவழிச் சுரிதகம்பெறுதலும், அவை தனிச்சொல்லுஞ் சுரிதகமும் உடன் பெறுதலுமெல்லாம், யாப்பின் வேறுபட்டனவென்றலும், ஒத்தாழிசை மூன்றடுக்கினும் இவற்றின் வேறுபாடறிந்து கொச்சகமெனக்கோடலும், தேவபாணியாகாதவழிக் காமப்பொருளே பற்றி வாராது, அறம் பொருளின்பம்வீடென்னும் நான்கும் பற்றிப் பொருள்வேறுபடவருதலும் பாவேறுபடவருதலும் பற்றிக், கொச்சகக்கலியென்று உணர்வோர் நூலறிபுலவரெனவும் *அல்லாதது புலனுகாதெனவும் எல்லாம்

---

* "அல்லாதார் நூலுணரார் என்பதறி வித்தற்கு 'நூனவில் புலவர்' என்றூர்" என்பது நச்சினுர்க்கினியர் உரை.

அறிவித்தற்கு நூலறிபுலவர் நுவன்றறைந்தனர் என்றுனென்பது. எனவே, கொச்சகக்கலியுள் ஒருசாரனவற்றை இனமென்று வேண்டுவ ராயின் அவை அவ்வப்பாவின் இனங்கட்கு இவ்வகையே கொச்சக மென வேறுபடுமென்றவாறுயிற்று.

உதாரணம்:

"செவ்விய *தீவிய சொல்லி யவற்றொடு * * *
மகனவ்லை மன்ற வினி" (கலி-19.)

எனவும்,

"செல்லினிச் சென்றுநீ * * *
அவலம் படுதலு முண்டு" (கலி-19.)

எனவுந் தரவினை அடுக்குதலின் தரவினைக் கொச்சகமே யெனப்படும். இது நூற்றைம்பது கலியுளொன்றுகலின் வெண்பாவாகியுந் தனித்து வரும். வருங்காற் கலிவெண்பாட்டென்றுயிற்று. ஒருபொருணுதலி இவ்வாறு வரினும் இஃதொக்கும். இது தாழிசையோடுகோடாத் தரவாகலின் வெண்பாவாகியும் வந்தன.

"மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்"(கலி-133.)

என்பது தனிச்சொல் இன்றி ஆசிரியசுரிதகம்பெற்ற கொச்சகம்.

"மின்னெளி ரவிரற லிடைபோழும் பெயலேபோல்"
(கலி-55.)

இது தனிச்சொல்லும் ஆசிரியச்சுரிதகமும் பெற்ற தரவினைக் கொச்சகம். இனிப் பல அடுக்கிய பொருட்டொடராய்வருந் தரவுகொச் சகமும் பொருட்டொடர்நிலையுள் அறம்பொருளின்பம் விராய்வருந் தரவு கொச்சகங்களும் வந்தவழிக் கண்டுகொள்க.

"வெல்புகழ் †மன்னவன் விளங்கிய வொழுக்கத்தான்"(கலி-118)

இது தரவுந் தாழிசையும் போக்கும் முறையானே வந்ததாயினும்,

* என்பதும பாடம்.
† 'மீனவன்' என்பதும் பாடம்.

'அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி'(தொல்-செய்-135)

என்னும் இலக்கணஞ் சிதையாத தரவிறுதியினுந் தாழிசையிறுதிக டோறுஞ் சொற்சீர் பலவருதலான் ஒத்தாழிசையெனப்படாது அதன் வகைத்தாய் எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றியதென்பதூஉமாயிற்று.

"அருஞ்சூர்ந்த காட்சியா னறநோக்கா *னயஞ்செய்யான்"
(கலி-120.)

எனவும்,

"நயனும் வாய்மையு நன்னர் நடுவும்" (கலி-130.)

எனவும் அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியதுபோலுங் கொச்சகம் வருங்கால் ஒத்தாழிசையும் வண்ணகமும்போலத் தனிச்சொற் பெற்றும் பெறாதும் வரும். நெய்தற்றிணைப் பாட்டுக்கும் இஃதொக்கும். அது வருமாறு:

"கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலங்கோதை"(கலி-54)

என்னுங் கலியுள் அதனுனைனத் தனிச்சொற் பெற்று அடக்கியலில்லாச் சுரிதகத்தோடு அடிநிமிர்ந்தோடிற்று.

"பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி" (கலி-21.)

என்னுங் கலிப்பாட்டுத் தனிச்சொல்லும் அடக்கியலுமின்றி அடிநிமிர்ந்தொழுகிற்று.

"எஃகிடை தொட்டகார்க் கவின்பெற்ற வைம்பால்போல்" (கலி-32) என்னும் பாலைப்பாட்டும் "அகன்ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாக" (கலி-119) என்னும் நெய்தற்றிணைப்பாட்டும் அன்னமாமாறு கண்டுகொள்க.

இனி யாப்பின் வேறுபட்ட கொச்சகவொருபோகோடொப்பன வற்றுட் சிலவருமாறு:

* 'பயஞ் செய்யான்' என்பதும் பாடம்.

"மன்று பார்த்து
னின்று தாயைக்
கன்று பார்க்கு
மின்றும் வாரா"

என்பது இருசீர் நான்கடிக் கொச்சகத்தரவு.

"தஞ்சொல் வாய்மை தேற்றி
யஞ்ச லோம்பென் றளித்த
வஞ்சமற் றவர்வாரா ராயி
னெஞ்ச னில்லாதே தானே."

என்பது முச்சீர் நான்கடித் தரவுகொச்சகம்.

"நீயலர் தூற்றத் துயிலா தெடுங்கங்குல்
வாரல ராகி யவரோ வலித்ததைந்தா
ராரலார் நாரைகா ளன்றில்கா ளன்னங்கா
ளூரலர் தூற்றயா னுள்ள முகுவேனே"

என்பது நாற்சீரடித் தரவுகொச்சகம்.

"கன்னிநீர் ஞாழற் கமழ்பூங் கானல் யான்கண்ட
பொன்னங் கொடியை யீன்றே னில்லே போலுமான்
மன்னன் காக்கு மண்மேற் கூற்றம் வரவஞ்சி
யின்ன தொன்று படைத்த தாயி னெவன்செய்கோ"

இஃது ஐஞ்சீர்நான்கடித் தரவுகொச்சகம்.

இனிக் கோவையாக்கி எழுத்தெண்ணி அளவிற்படுத்துச் செய்யினும் அவையேயாம்.*

---

* நச்சினார்க்கினியர் "கோவைபாக்கி யெழுத்தெண்ணி அளவியற்படுத்துச் செய்வனவும் தரவு கொச்சகமாம். 'திருவளர் தாமரை .....' (திருக்கோவை-1.) 'போதோ விசும்போ.....' திருக்கோவை-2.) இவை பதினேழும் பதினறுமாய் வந்த தரவு கொச்சகம்" என்றார்.

"காண்பா *னவாவினுற் காதலன்றன் காதலிமுன் னடவாகிற்ப
காண்பாலா ளாகுதலா †னன்னுதலுங் கேள்வன்பின் னடவாகிற்ப
வாண்பான்மை குன்ற வடிவே லவன்றனக்கு மஞ்சொலாட்கும்
பாண்பால் வரிவண்டு பாடு மருஞ்சுரமும் பதிபோன்றன்றே."

என்பது அறுசீர் நாலடித்தரவுகொச்சகம். பிறவும் அன்ன.

"இலங்கொளி வெண்மருப்பி னிடைக்கரந் தங்கவோ ரேந்தல் யானை
‡கலங்கரு ரெய்திக் $ கைகுலையக் கலுழிநீர் கடைவாய்ச் சோரச்
சிலம்பொழி குன்றென வின்றது செய்வ தெவன்கொ லன்னாய்"

இஃது அறுசீர் மூன்றடித் தரவுகொச்சகம்.

"தண்ணந் துறைவன் ரூர்மேற் போன
வண்ண வண்டு வாரா தற்றே
வண்ண வண்டு வாரா தாயிற்
கண்ணீர் ¶லில்லாதே சாண"

என்பது நான்காசிரியவடியுள் இறுதியடி மூச்சீரான் வந்து யாப்பு வேறுபட்டன.

"வினங்கொள் படுபுலா லுணங்கினின்று புள்ளோப்ப றலைக்கீடாகக்
கணங்கொள் வண்டார்த் துலாங்கன்னி நறுஞாழல் கையினேந்தி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் ரண்டொ
ரணங்குறையு மென்ப தறியே னறிவனே லடையேன் மன்னே"
(சிலப்-கானல்-9)

து இடையடி குறைந்துவந்தது. இஃது,

* 'காண்பான் வரவினுல்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.
† 'நன்னுதறன்' என்பதும் பாடம்.
‡ 'கலங்கருஞ் சிரெய்தி' என்பதும் பாடம்.
$ 'கதூஉங் கவளங் கடைவாய்ச்சோர' என்பதும் பாடம்.
¶ 'னிலனே காண்' என்பதும் பாடம்.

'அறுசீ ரடியே யாசிரியத் தலையொடு
நெறிபெற்று வருஉ நேரடி முன்னே' (தொல்-செய்-64.)

என்றோதப்பட்டதாயினும் பாமயங்கி வரும் பகுதிபற்றி வேறுகாட்டப் பட்டது.

"புன்னை நீழ னின்றூர் யார்கொ
லன்னை காணின் வாழாள் தோழி."

எனவும்,

"மல்ல லூர விவ்வி றேற்றூ
பல்பூங் கோதை யில"

எனவும இவை இரண்டடியான் ஈற்றடி குறையாதுங் குறைநதும வந்தன. இன்னும் மேற்கூறிய கொச்சக வொருபோகின் பகுதியுள் ஒழிந்தனவும் இவ்வாற்றான் வருவனவெல்லாம் வந்தவழிக் கண்டு கொள்க.

இனி வகையென்றதனான் வெண்கலியுறுப்புநிலை ஒத்துப் பா வேறுபடுங் கொச்சகம் வருமாறு:

"ஒன்று, இரப்பான்போ லிளிவந்துஞ் சொல்லு முலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்." (கலி-47.)

என்பது தரவுகொச்சகமுஞ் சுரிதகமும் முறையானே வந்து ஆசிரியச் சுரிதகத்தான் இற்றது. இதனுள் ஒன்றெனவும் அவனெனவுஞ் சொற்சிறந் தணிச்சொல்லும் வந்தன. இப்பாட்டு மூன்றனுளொன்று ஓரடிமிக்கு மற்றைய நான்கடியாயே வருதலின் மூன்றும் ஒருபொருண் மேல்வரினும் நூலறிபுலவரான் ஒத்தாழிசையெனப்படாக் கொச்சக மாயிற்று. பிறவும் இன்னோரன்னவற்றூற் கலியோடு இதனிடை வேறுபாடுதெரிந்து உணரப்படும், அஃதறியாதார்க்கு ஒன்றுபோலக் காட்டினுமென்பது.

"வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு" (கலி-7) என்னும்

பாட்டுத் தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்து ஐஞ்சீரடுக்கிவந்தது. இதனுள் தரவடி நான்கும் வெண்பாவாயினும் அச்செய்யுண் முழுதும் வெண்பாவன்மையிற் கொச்சகமாயிற்று. இனி அறுசீரான் வருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்" (கலி-39)

என்னுங் கொச்சகக்கலியுள்,

"என லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வனைத்
தேனி னிரூலென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்."

என இடைனின்ற கொச்சகம் ஈற்றடி குறைந்தது ;

"புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்ரே
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்ரே"

எனக் கொச்சகம் ஈற்றடி குறையாது வந்தது. இவை இரண்டும் வெண்பா. இதனுள் ஒழிந்தபா மயங்கியவாறு கண்டுகொள்க. "கொடுமிட் லஞ்சிலான் ரூர்போன் மராத்து" (கலி-36) என்னும் பாட்டினுள்,

"பாஅய்ப் பாஅப் பசந்தன்று நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்"

என மூட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடி வந்தது. "மலி திரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்" (கலி-104) என்னும் முல்லைப்பாட்டினுள்,

"இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்ஈங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்

கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
வாடா வெகுளி யெழிலேறு கண்டை....."

எனவும்,

" தாளெழு துணிபிணி விசைதவிர் வின்றித் தலைச்சென்று"

எனவும் முடுகியலடி வந்தது.

இவற்றுளெல்லாஞ் சொற்சீரடி வந்தன. ஒழிந்த கொச்சகப் பகுதியும் இவ்வாறே வந்தவழிக் கண்டுகொள்க.

இனித் தரவும் போக்குமின்றிக் கொச்சகம் பல தொடர்ந்திற்றது வருமாறு :

" காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றெடு" (கலி-85)

என்னும் மருதக்கலி உறழ்பொருட்டானமையிற் கொச்சகக்கலியா யிற்று. இவையெல்லாம் பாலிலையெனப்பட்ட கொச்சகமாமெனின், அற்றன்று ; அம்போதரங்கம் அறுபதிற்றடித்தென்றவழி அளவை மூற்கூறிய மயக்கிலென் இனியெல்லாந் தன்னளவெனப்படுமென்று புகுந்தமையின். இதற்குக் கொச்சகவொருபோகின் அளவை கொள் ளப்படாது, பாலிலைவகைத்தென்றமையின். பிறவும் அன்ன.

ரிக்கலிவெண்பாட்டெனக் கூறிய உறுப்புடைக்கலிவெண்பாட் டும் ஈண்டுப் பாலிலையெனப்பட்ட கொச்சகப்பகுதியுமென இரண்டும் கொச்சகவுறுப்புடைமையிற் கொச்சகக்கலியென ஒன்றேயாமென மேலைச்சூத்திரத்தோடு இதனை ஒன்றாக வகுப்ப. அற்றன்று; மேல் ஒருபொருள் கரந்து வெளிப்படத் தோன்றின் ஒருபொரு ணுதலியது போலக் கலிவெண்பாட்டாகாமைக்கும் வாளாது கலிப்பாவாதற்கும் காரணமென்னை யெனின், பிறிதொருகூற்றுப் பொருள் கூறுவது கலிவெண்பாட்டென்றதற்கு இடையின்றியே 'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்' (தொல்-செய்-154) கரந்த பொருட்டன்று இது; என்றமையின் இதுவும் வெண்கலியாம். அல்லதூஉம் 'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்' என வேறொரு பாவினை உறுப்

யாகக் கூறுதன் மற்றொருபாவிற்கேதுவாகக் கூறுதலாமோவென மறுக்க. ஒருபொருணுதலிய வெண்பாட்டாயின் ஒத்தாழிசைக்கலி வெண்பாட்டென மற்றையவற்றோடொத்த யாப்புடையதுபோல உடனேதாழுகலின் இதுவும் அவ்வாறு யாப்புடைத்தாகல்வேண்டு மாகலானும் அஃதமையாதென்பது. இங்ஙனம் மயங்குவாரை நோக்கி யன்றே நூனவின்றேரீக்கே இவ்வேறுபாடுணரலாவதென்று ஆசிரி யன் ஒதுவானுயிற்றென்பது. மற்று இதற்கு அளவைகொள்ளுமா றென்னை ? மேற் கொச்சகவொருபோகின் அளவு இன்னதென்றிலனு லெனின், அற்றன்று ; வண்ணகத்திற்கு ஒதிய உறுப்பு அமையவரா மையின் அது கொச்சகமேயாமெனவும் எண்ணுஞ் சின்னமும் இழந் தசேபற்றி அதுவும் ஒருபோகேயாமெனவும் அடக்கியலின்றி அடி னிமிர்ந்தோடியது வெண்பாவும் ஆசிரியமுமாகி இறுதலின் அடக் கியலில்லாச் சுரிதகம்பெற்றுத் தரவுபோல வருமெனவும் இவ்வா றன்றி ஒப்பழியவருமெனவும் மேற்கூறினுனன்றே ? அங்ஙனங் கூறவே அவ்வுறுப்புக்கள் அவ்வவ்வளவினவென்பதூஉம் அவற்றிற் சிறிய வேறுபட்டு வருமென்பதூஉம் அங்ஙனம் வேறுபடுங்கால் அடினிமிர்ந்தோடி யதன் இழிந்தவெல்லையின் ஒன்றிற்றென்பதூஉந் தெரிந்தாளும். என்னை ? அடினிமிர்ந்தோடியதற்கு இழிந்த எல்லைத்தா அடியென்றமையின். இனி அடினிமிர்ந்தோடியதொவ் வாமையின் அதற்களவை இத்துணையென்று 'ஒருபான் சிறுமை யிரட்டி யதனுயர்பு' (தொல்-செய்-150) என விதந்தோதி னுன். இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட அளவின் வேறுபட்ட வற்றையும் யாப்பின்வேறுபட்டுவருமென்றுன். எனவே, ஈரடி யானே தாழிசைக்கொச்சகம் வருமெனவும் அடினிமிர்ந்தோடியதன் றிற்றெல்லையாகிய பத்தடியளவும் *பாவைப்பாடலும் அம்மானைப்பா டலும் போலுந் தரவுகொச்சகம் வருமெனவும் அமையும். இரண்டடி யின் இழியாவெனவும் எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றியது வேறு பட்டு ஏழடியும் ஐந்தடியுமாகித் தரவுவரினும் வருமெனவும் எட்டடிப் பாகமாகிய நான்கடியின் உயரா தாழிசையெனவும் எல்லாம் ஆண்டே கொள்ளப்படுமாகலின் அவற்றுக்கு அளவைகூறியதிலனென்று கடா வருவதென்னையென மறுக்க. அஃதேல், தாழிசைக்கொச்சகமாகிய

பாணிச்செய்யுளுந் தரவுகொச்சகமாகிய தொடர்நிலைச்செய்யுளும் முழுவதும் ஒன்றுக நோக்கியக்கால் உயர்ந்த எல்லை கூறுரோவெனின், அஃது அடிவரையறையின் ஒர்செய்யுளாக்கியே அளவைகூறினுர் அவை கொச்சகமாயினுந் தரவுகொச்சகமெனப் பெயர்பெறுதலானென்பது. அஃதேல் அகநிலைக்கொச்சகத்திற்கும் அவையே அளவாம் பிறவெனின், அற்றன்று. அம்போதரங்கம் அறுபதிற்றடித்தென்றவழி அளவை முற்கூறிய மயக்கினுன் இனிக் கூறும் உறுப்புடைக் கலிப்பாவிற்கெல்லாம் அதனளவெனப்படுமென்று புகுந்தமையின் இதற்குக் கொச்சகவொருபோகின் அளவை கொள்ளப்படாது. பாநிலைவகைத்தென்னுமையின் இவற்றைத் தொகைநிலையளவின் அடியுடையவென்பது 'தொகுநிலை யளவினடியில' (தொல்-செய்-160) என்புழிச் சொல்லுதும். அஃதேற், பாநிலைவகையே கொச்சக்கலி'யென்றவழிக் கொச்சகவொருபோகோடு ஒப்பது அளவொழித்தென்பதும் வளைந்தோதுகவெனின், இருவழியொப்பனவும் உளவாகலின் அங்ஙனங் கூறினுனென்பது. அவை இரண்டடிமுதலாகப் பத்தடியளவும் வருவன தரவுகொச்சகக்கலியென மேற்காட்டிய செய்யுளுட் காணப்படும். (கநிசு).

468. கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும் போக்கின் முக லுறழ்கலிக் கியல்பே.

இது, முறையானே உறழ்கலியுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஒருவர் ஒன்று கூறுதற்கு மறுமாற்றம் மற்றொருவர் கூறிச் சென்று பின்னர் நின்றது உறழ்கலி, என்றவாறு.*

போக்கின்றெனவே தரவுபெறுதலும் பாட்டிடைமிடைதலும் ஐஞ்சீரடுக்கலும் ஆறுமெய்பெறுதலும் ஒழிந்த சொற்சீரடிபெறுதலும் பாமயங்கிவருதலும் அம்போதரங்கத்திற்கோதிய அளவை பெறுதலு

* "ஒருவர் ஒன்று கூறுதற்கு மறுமாற்றம் மற்றொருவர் கூறிச் சென்று பின்னர் அவற்றை அடக்குவதோர் சுரிதகமின்றி முடிவது உறழ்கலியாம், என்றவாறு" என்பது நச்சினர்க்கினியர் உரை.

மெல்லாம் வெண்கலிப்பாட்டிற்குப்போல மேனின்ற அதிகாரத்தாற் பெறப்படுவதாயிற்று. போக்கின்றுதல் இயல்பெனவே இயல்பின்றி விகாரவகையாற் சில போக்குடையவுமாமென்றுணும். அதுவும் 'பல பொருட்கேற்பினல்லது கோடல்' என்பதனுன் வெள்ளைச்சுரிதகம் ஒழித்து ஆசிரியச்சுரிதகமே கொள்ளப்படும். என்னை? வெள்ளைக் கொச்சகம் பலவந்தவழி ஒன்றனைச் சுரிதகமெனலாகாமையானும் அச் சுரிதகம் இரண்டும் 'போக்கியல்வகையே வைப்பெனப்படும்' (தொல்-செய்-136) எனக் கூறப்பட்ட இலக்கணத்த அல்லவாயினும் 'எழுசீ ரிறுதி யாசிரியங் கலியென' (தொல்-செய்-76) என்றவழி அப்பாட்டு முடிந்து காட்டி னிற்றலானும் அதுவே கொண்டாஞ் சிறு பான்மையென்பது. மற்றுத் தரவின்றி வருவனவும் உளவாலெனின், இதற்குத் தரவுமுதலாயின உறுப்பு விதந்தோதியதிலுகலின் அஃது ஆராய்ச்சியின்றென்பது. அற்றன்று. தரவும் போக்கும் உடன் கூறியதனுற் போக்கும் பாட்டிடைமிடைந்தும் என்னும் அதிகாரம் பற்றி ஈண்டுப் போக்கு விலக்கினமையின் அதுபொருந்தாது. மற் றென்னை கருதியதெனின், இதற்கு அதிகாரம்பட னிறீஇய கலிவெண் பாட்டு ஒதிய சூத்திரத்திற் பாட்டினை இடைகூறுது தரவும் போக்கும் உடன் கூறியதனுற் போக்கின் இலக்கணத்தனவும் பெறுமென்றுணும். அதனுனே ஈண்டு விலக்குண்ட போக்குப்போலச் சிறுபான்மை தர வின்றியும் வருமென்பது. இக்கருத்தினுனன்றே இதனைப் பாலிலை யோடு கூறுது தரவுவகைப்படுங் கொச்சகத்தின்பின்னர் வைப்பாலு யிற்றென்பது. இனிப் போக்குடையன தரவின்றி வாரா, அவை ஒரினமென்று ஒதப்பட்டமையினென்பது. மற்று இதற்குப் போக் கின்மையும் இலக்கணமாகலின் அதுபற்றியும் பெயர்கொள்ளாமோ வெனின், போக்கின்மை சிறுபான்மை கொச்சகத்திற்கும் உரிமையின் அவ்வகையுரியதோர் இலக்கணம்பற்றிப் பெயர்கூறுனென்பது. மற் றிதனையுங் கொச்சகமென்றக்கால் இழுக்கென்னையெனின், நாடகச் செய்யுட்போல வேறுவேறு துணிபொருளவாகிப் பலதொடர்ந்தமை யிற் பெரிதும் வேறுபாடுடைமை நோக்கியும் இது பொருளதிகாரமாத லாற் பொருட்பாடுபற்றியும் வரலாற்றுமுறைமைபற்றியும் வேறு செய்யுளென்றுனென்பது. என்னை?

'மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான' (தொல்-மர-90.)

எனவும் மரபியலுள் ஒதுகின்றமையினென்பது. அல்லாக்காற் கைக்கிளையுஞ் செவியறிவுறையும் வாயுறையும் புறநிலையுமென்னும் நான்கும் மருட்பாவும் ஒன்றேயாகிய செல்லுமன்றேவெனை மறுக்க.

அவற்றுக்குச் செய்யுள் ; "அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்சம்" (கலி-91) என்னும் பாட்டினுள் தரவும் பாட்டும் உடைத்தாகிய பாட்டுத் தாம் ஐஞ்சீரடுக்கியும் ஆறமைப்பெற்றும் வந்து போக்கின்றினின்று முடிந்தது. என்றூர்க்குக்,

"காணி னெகிழுமென் னெஞ்சாயி னென்னுற்றாய்
பேணுய்நீ பெட்பச் செயல்" (கலி-91.)

என்பது வெள்ளைச்சுரிதகமாகாதோவெனின், ஆகாதன்றே ? 'போக்கியல் வகையே வைப்பெனப் படும்' (தொல்-செய்-136) என்ற இலக்கணத்தான் முற்கூறியவற்றையெல்லாந் தொகுத்து இதன்கண் வைத்தில்லாமையினென்பது. அல்லதூஉம், அவ்வாறு முடிதலேயன்றி இன்னும் ஓர்கொச்சகம் பெய்து சொல்லி உறழ்ந்தவழியும் அஃதேற்பதாகலான் அஃது ஒருதலையாக அமைந்த தெனப்படாது.

"அன்னதே யாயினு மாகமற் றாயிழாய்
நின்னகை யுண்க முயங்குவாய் நின்னெஞ்ச
மென்னெஞ்சு நின்ற தெனின்."

என்றாற்போலப் பின்னுமொன்று தலைமகன் உரைத்தற்கு இடப்பட்டு நின்றமையின் இது போக்கியல்வகைத்தாகிய வைப்பெனப்படாதென்க. இனி அவ்வாறன்றி ஆசிரியச்சுரிதகம் வந்தவழி அக்கலிப்பாட்டு முடிந்துசாட்டுதலின் அதுவும் அடக்கியலன்றாயினும் அதனைச் சிறுபான்மை நோக்கித்தான் அது யாழ்நூலாசிரியன் முதனூல்பற்றியென்பது.

"நலமிக நந்திய நயவரு தடமென்றோள்." (கலி-113),

என்னும் முல்லைக்கலி போக்கிலக்கணமில்லாத ஆசிரியச் சுரிதகம் பெற்று உறழ்கலியாயிற்று. "வாரி நெறிப்பட் டிரும்புறந் தாஅழ்ந்த" (கலி-114) என்னும் முல்லைப்பாட்டுஞ் "சுணங்கணி வனமுலைச் சுடர்கொண்ட" (கலி-60) என்னுங் குறிஞ்சிப்பாட்டும் அது.

"ஒருஉநீ எங்கூந்தற் கொள்ளல்யா னின்னை
வெருஉதுங் காணுங் கடை;
தெரியிழாய், * * * பரியாஞ்
பாடில்கண் பாயல் கொள." (கலி-87.)

என்பது தரவும் போக்குமின்றி வந்த உறழ்கலி. இவற்று ஐஞ்சீரும் அறுசீரும் வந்தன. ஒழிந்த சொற்சீரடி வந்தன பிறவுங் கண்டு கொள்க.

469. ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை யாயிர மாகு மிழிபுமூன் றடியே.

இத்துணையும் பாவுறுப்புக் கூறி இனி அப்பாவினுள் உள்ளுறுப் பாகிய அடியளவை கூறுவானெழுந்தான் முறையானே ஆசிரியப்பா விற்கு அளவு கூறுகின்றானென்பது.

இதன் பொருள்: ஆசிரியப்பாவின் பெருக்கத்திற்கெல்லை ஆயிரம் அடி, சுருக்கத்திற்கெல்லை மூன்று அடி என்றவாறு.

"நீலம்" (ஐங்குறு-கடவுள் வாழ்த்து) என்னும் ஆசிரியப்பா மூன்றடியால் வந்தது. *"மாயோன் மார்பி னுரம் போல" என்பது நான்கடியான் வந்தது. "வேரல் வேலி" (குறுந்-18) என்பது ஐந்தடியான் வந்தது. "தாமரை புரையும்" (குறுந்-கடவுள்வாழ்த்து) என்பது ஆறடியான் வந்தது. "மானிலஞ்சேவடியாக" (நற்றிணை-கடவுள் வாழ்த்து) என்பது ஏழடியான் வந்தது. பிறவும் அன்ன. ஆயிரம் அடியான் வருவனவும் உளவேற் கண்டுகொள்க. ஆசிரியப் பாட்டினெல்லையென்றது அளவென்றதனான் அதனியற்றாகிய வஞ்

* இச்செய்யுளை 227 ஆம் பக்கத்திற் காண்க.

சிப்பாவிற்கும் இவ்வாறே கொள்ளப்படும். இனி வெண்பா நெறித்தாகிய கலியளவை அதனின் வேறுபடுதலின் அதற்கு வேறு விதந்து கூறுமென்பது. (கடுஅ)

470. நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே
குறுவெண் பாட்டி னளவெழு சீரே.

இது, முறையானே வெண்பாவின் அடியளவு கூறுகின்றது.

இதன் பொருள் : வெண்பாவிற்கு இரண்டும் பன்னிரண்டும் இழிபும் ஏற்றமுமாம், என்றவாறு.

மற்று இவற்றையும் 'ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை' (தொல்-செய்-158) என்றாற்போலக் கூறாது குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டுமெனப் பெயர்கொடுத்ததனாற் பயந்ததென்னையெனின், குறுமையும் நெடுமையும் அளவியலோடு படுத்துக் கொள்ளப்படுதலின் அளவியல் வெண்பாட்டும் உளவென்பதற்கும் அதுவே சிறப்புடையதென்றற்கும் அங்ஙனங் கூறினானென்பது. இனி அவற்றைத் தத்தம் வகையாகச் சுருக்கப்பெருக்கம் உணருங்கால் உய்த்துக் கொண்டுணர்தலென்பதனான் உணரப்படும். என்னை? நெடுவெண்பாட்டிற்கு உயர்ந்த அளவை பன்னிரண்டடியெனவே, அதன் பாகமாய ஆறு, அளவியல் வெண்பாவிற்கு உயர்ந்த எல்லையெனவும் நெடுவெண்பாட்டிற்கு இழிந்தவெல்லை ஏழடியெனவும் அளவியல் வெண்பாவிற்கு இழிந்தவெல்லை நான்கடியெனவுங் கொள்ளவைத்தமையினென்பது. இங்ஙனம் அளவியல்வெண்பாச் சிறப்புடைத்தாதனோக்கிப் பதினெண்கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியினேறாமற் செய்யுள்செய்தார் பிறசான்றோருமெனக்கொள்க. இக்கருத்தினானே 'அம்மை தானே யடிநிமிர் பின்று' (தொல்-செய்-235) எனக்கூறிய நெடுவெண்பாட்டு நேர்ந்திலர் ஆசிரியர் அதற்கென்பது. அஃதேல் அவ்வளவியல் வெண்பாவுள்ளும் ஆறடியானும் ஐந்தடியானும்வருதல் சிறுபான்மையவாலெனின், அங்ஙனமே செப்பிக்கூறிய மரபிற்றாகிய வெண்பாவினைப் பரந்துபடக்கூறல்

இயல்பன்றுகலின் அவற்றுள்ளுஞ் சுருங்கிய நான்கடியே சிறந்த தென்று அதனையேபற்றிப் பெரும்பான்மையுஞ் செய்யுள்செய்தாராவ ரென்பது. அஃதேற் குறளடிவெண்பா அதனினுஞ் சிறந்ததாம் பிறவெனின், அற்றன்று; செப்பிக்கூறுங்கால் தெரியக்கூறல்வேண்டு மாகலின் அளவியல்வெண்பாவே பயின்றவென்பது. நெடுவெண் பாட்டுப்போலச் சிறப்பின்றுங் குறுவெண்பாட்டுமெனின், 'சிறப் புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்' என்பதனுன் அவ்வி ரண்டினுள்ளும் அதனைப் பிற்கூறியது அச்சிறப்பு நோக்கியன்றே வென்பது. உதாரணம்:

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று" (குறள்-26-9.)

எனவும்,

"அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச் சிறந்தார்
செறிந்தமை யாராய்ந்து கொண்டு."

எனவும் இவை குறுவெண்பாட்டு.

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு மில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும். (நாலடி-1-2)

எனவும்,

"நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத்-தாண்மாய்ந்து
மூன்பக லெல்லாங் குழம்பாகிப்-பின்பகற்
*றுப்புத் துகளிற் கெழுஉம் புனலுடன்
றப்பியா ரட்ட களத்து" (களவழி-1)

எனவும்,

---

* 'துப்பிற் றுகளில்' என்பதும் பாடம்.

"நாஞற் றிசையும் பிணம்பிறங்க யானை
யடுக்குபு வேற்றிக் கிடந்த விடித்தூறி
யங்கண் விசும்பி னுருமெறிந் தெங்கும்
பெருமலைத் தூறெறிந் தற்றே *யெரிமணிப்பூ
ணேந்தெழின் மார்பத் தியறிண்டோர்ச் செம்பியன்றெவ்
வேந்தரை யட்ட களத்து." (களவழி-6)

எனவும் இவை அளவியல்வெண்பாட்டு.

"பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவின்"†

என்பதும் அது. நெடுவெண்பாட்டு வந்தவழிக் கண்டுகொள்க. (கஇஅ)

471. ‡அங்கதப் பாட்டவற் றளீவோ டொக்கும்.

அங்கதப் பாட்டிற்கும் வெண்பாவே உறுப்பாகலான் ஈண்டு வைத்தான். இதுவும் மேற்கூறிய இரண்டெல்லையும் பெறுமென்றவாறு.

"இருடூர் விளக்கத் திமிழிசையார் கோவே
குருடேயு மன்றுனின் குற்ற-மருடூர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு மூள."

---

* 'எரிமணிப் - பூணேந் தெழின்மார் பியறிண்டோர்ச் செம்பி யன்' என்பதும் பாடம்.

† "பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவி
லென்னோடு னின்ரு ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்ரு ணல்லனே பொன்னோடைக்
கியானைநன் றென்ரு ளரு மங்கலையள் யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்"

இதனைப் பலவிகற்பத்தால் வந்த ஆறடிப் பஃறொடை வெண்பாவுக்கு உதாரணமாகக் காட்டினர் யாப்பருங்கல விருத்தியுரை காரர்.

‡ 'அங்கதப் பாட்டளவ வற்றே டொச்கும்' என்பது உரையாசிரியரும், நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம்.

என்பது நான்கடியான்வந்த அங்கதம். பிறவும் அன்ன. இது மந்திரத்தின் வேறுபட்டு அடிவரத்தாயினமையின் இதுவும் வெண்பாட்டுப் போன்று அமைந்து வரல்வேண்டுமென்றற்கும் இது வேறுபாட்டெனப் படாமையின் அடிவரையின்றுகொலென்னும் ஐயந்தீர்த்தற்கும் இதற்கே ஈண்டு அளவைகூறி, அதனைநோக்கி 'கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுள்' (தொல்-செய்-118) என்று ஓதப்பட்ட கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் போலப் பலவாயினும் அவற்றுக்கு அளவையும் வெண்பாவின் அளவேயென்று அடக்கினனென்பது. நாற்பாவாக அடிவரைப்படுவன உளவாயினவற்றுக்கும் இஃதொக்குமென்பது மேற்கூறுதும். (கடுக)

472. கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள் *செவியறி வாயுறை புறநிலை யென்றிவை தொகுநிலை யளவி னடியில வென்ப.

எய்தாத தெய்துவித்தது ; அளவை கூறுதவற்றுக்கு அளவை கூறினமையின்.

இதன் பொருள் : இவை ஐந்தும் பெருமைக் கெல்லை இத்துணையெனத் தொகுத்துக் கூறுந் தன்மையுடைய அளவால் வரும் அடியையுடைய அல்ல, என்றவாறு.

கலிவெண்பாட்டென்பது ஒரு பொருணுதலுதலால் திரிபின்றி நடப்பதன்றிப் பன்னிரண்டடியின் இகந்துவந்து தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்து வாராது ஒன்றேயாகி வருவதெனக்கொள்க. கைக்கிளைச் செய்யுளென்பது, கைக்கிளைப்பொருட்கு உரித்தாய்வரும் மருட்பாவென்றவாறு. அஃதேல் ஈண்டெய்திய கலிவெண்பாட்டு மொழிந்த கைக்கிளைப்பொருண்மேல் வாராவோவெனின், வருமென்பது 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' (தொல்-அகத்-53) என்புழிக் கொண்டாமென்பது. எனவே, வெண்பாட்டல்லாதன

* நச்சினார்க்கினியர் உரையோடு கூடிய பிரதியில் 'புறநிலை வாயுறை செவியறி வென்றிவை' என்று பாடம் காணப்படுகிறது.

கலிப்பாட்டுக்கள் கைக்கிளைப்பொருண்மேல் வந்தவழியும் அவற்றுக்கு அளவை மேற்கூறியவாற்றானே அடங்குமென்பதாயிற்று. செவியறி வாயுறை புறநிலையென்பன மேற் 'கலிநிலை வகையும் வஞ்சியும் பெறுஅ' (தொல்-செய்-110) என, ஒழிந்த பாவான் வருமெனப்பட்ட பொருண்மேல் வருஞ் செய்யுள். ஆண்டோதியவற்றிற்கு ஈண்டு அளவைகூறுதலோ வெனின் அஃது ஆசிரியமும் வெண்பாவுமாகி வேறுவருதலின் முற்கூறிய வகையானே அடங்குமென்பது. மற்றுக் கொச்சகவொருபோகாகியுந் தொடர்நிலைச்செய்யுட்கண்வருமால் அவையடக்கெனின், அஃது 'யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடைய' (தொல்-செய் 149) கொச்சக வொருபோகென்றுழிக. 'தொகுநிலையளவின் அடியில' என்பது, விரவுறுப்புடைய வெண்கலியுங் கொச்சகக்கலியும் உறழ்கலியுமென்றிவற்றிற்கு மேல் அம்போதரங்கம்பெற்ற அளவினை முதலாகநாட்டிக் கொண்ட தொகைநிலையளவெனப்பட்ட அடிமேல் அடியிகந்தோடாவென்றவாறு. தொகுநிலையளவென்பது, தலையளவு இடையளவு கடையளவெனப்பட்ட அம்போதரங்கம் மூன்றற்கும் பெருகிய வெல்லையாகி அளவின்விரியாது அவற்றுக்குச் சுருங்கிய வெல்லையாகி அறுபதும் முப்பதும் பதினேந்துமெனத் தொக்குநிற்கும் அளவினவாகிய அடிமேலேறுவென்றவாறு. தொகுமளவென்னுது தொகுநிலையென்றான் மூன்றுதொகையினும் முப்பஃதாகிய இடைநிலைத்தொகையே கோடற்கென்பது. இன்னென்னும் ஐந்தாமுருபு நீக்கத்தின்கண் வந்தமையின் முப்பஃதடியின் இகந்துவரும் அடி இலவென்றவாறு. இனி, அம் முப்பஃதாகிய தொகுநிலை இவ்வைந்தற்கும் ஈண்டவடிக்கெல்லையாதலின் தொகுநிலையென்னுது அளவென்றானென்பது. ஈண்டதனை அளவுடைத்தென்பவாகலின். மற்றிங்ஙனம் இவை முப்பஃதடியின்மேல் வாராவென்று பெருக்கத்திற்கெல்லை கூறவே சுருக்கத்திற்கெல்லை வரையறையிலவென்றானும். ஆகவே, இரண்டடியானும் வருமென்றானும் பிறவெனின், அற்றன்று ; ஒருபொருணுதலிவருங் கலிவெண்பாட்டாயிற் பன்னீரடி இகவாதென்பது 'திரிபின்றி வருவது கலிவெண்பாட்டு' (தொல்-செய்-153) என்றவழிப் போதுமாகலின், ஈண்டு ஒதிய கலிவெண்பாட்டுப் பதின்மூன்றடியிற் சுருங்காதென்பது பெற்றும். இது கைக்கிளைப் பொருண்மேல் வந்ததாயி

னும் ஒக்கும். ஒழிந்த நான்கும் மருட்பாவாதலான் 'வெண்பா வாகி யாசிரிய வியலான் முடியவும் பெறும்' (தொல்-செய்-119) என்னு னுகலானும் 'வெண்பா வியலினு மாசிரிய வியலினும் பண்புற முடியும்' (தொல்-செய்-161) என வருகின்ற சூத்திரத்தானும் அவ்விரண்டு பாவின்கூட்டம் இரண்டடியாகி வாராவாகலானும் அவையும் நான் கடியிற் சுருங்காவென்பது உய்த்தச்கொண் டுணரவைத்தானென்பது. என்னை ? கைக்கிளைப் படலத்துள்,

"போற்றி வெண்பா வாகி மற்றத
னிறுதி யைஞ்சீ ராசிரி யம்மே"

என்னராகலின். மற்று ஆன்றடியிற் சுருங்காது ஆசிரியமாதலானும் இரண்டடியிற் சுருங்காது வெண்பாவாதலானும் இவ்வைந்தடியிற் சுருங்காவென்று கொள்க. இது 'பண்புற முடியும் பாவின்' (தொல்-செய்-161) என மேற்சொல்லும்.

அவற்றுக்குச் செய்யுள்: "நெஞ்சுநடுக்குறக் கேட்டு" (கலி-24) என்பது பதினேழடியான் வந்த கலிவெண்பாட்டு. "சுடர்த்தொடீ கேளாய்" (கலி-51) என்பது ஒரு பொருணுதலிப் பதிஞறடியான் வந்தது. "திருந்திழாய் கேளாய்" (கலி-65) என்பது இருபத்தொன் பதடியான் வந்த கலிவெண்பாட்டு. ஒழிந்தனவும் அன்ன. நூற் றைம்பது கலியுள்ளுங் கைக்கிளைபற்றி இவ்வாறு வருங் கலிவெண் பாட்டுக் காணுமாயினமையிற் காட்டாமாயினும். இலக்கணமுண்மை யின் இலக்கியம் பெற்றவழிக் கண்டுகொள்க.

"கனவினிற் காண்கோடா கண்ணுங் கலந்த
நனவினுண் முன்விலக்கு நாணுமின் வங்கம்
பொங்கோதம் போழ்ந்து புகாஅர்ப் பெருமானர்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று"

(முத்தொள்ளாயிரம்-59.)

இது கைக்கிளைபற்றி வந்த கலிவெண்பாட்டென்னுமோவெனின், ணுமன்றே, அது பாடாண்டிணைப் புறப்பொருளாகலானும் ஒரு

பொருணுதலுதல் ஐந்திணைக்கண்ணதேயாகலானும் பன்னிரண்டடியின் இகந்ததன்றுகலானும் வெண்பாவேயாமென்பது. இப்பொருட் பகுதியுணராதாரும், இது மரபென்பதறியாதாரும், நூற்றைம்பது கலியுள்ளும் இவை கோப்புண்டனவென்பது தேனையாதாரும் இவற்றுள் ஒரு பொருணுதலியன ஒழிந்தனவெல்லாம் வெண்பாவென்று அடிவரை கூறுதொழிப. அங்ஙனம் மரபழியக் கூறின் ஒருசாத்தனை காட்டி அவனைக் காமுற்று இவன் இன்னவாறுயிஞனென ஆசிரியத்தானும் வஞ்சியானும் பொருள்வேற்றுமையுடைய ஒருசார்க் கொச்சகமல்லாத கலிப்பாவினுனுஞ் செய்புள் செய்தலும் இனி அதனிலையாகிய ஆண்பாற் கைக்கிளை ஆசிரியத்தானும் வஞ்சியானும் வருதலும் பிறவும் இன்னேரன்னவெல்லாம் புலனெறிவழக்கினுட் காட்டல் வேண்டுமென மறுக்க. என்றூர்க்கு வரைவுகடாதற்கண்ணுந் தலைவனை அன்பிலனுகச் சொல்லுவன பாடாண்டிணைக் கைக்கிளையாகாவோ வெனின், 'அவை' சுட்டியொருவர்ப்பெயர் (தொல்-அகத்-54) கொண்ணமையின் ஆகாவென்பது. அஃதேல் "விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறை" (கலி-15) என்னுங் குறிஞ்சிப்பாட்டினுள்,

"கால்பொர நுடங்கலிற் கறங்கிசை யருவியின்
மால்வரை மலிசுனை மலரேய்க்கு மென்பதோ
புல்லாராப் புணர்ச்சியாற் புலம்பிய வென்றேழி
பல்லிதழ் மலருண்கண் பசப்பநீ சிதைத்ததை"

எனவும்,

"நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கும்" (கலி-99.) என்னும் மருதப்பாட்டினுள்,

"அறனிழ லெனக்கொண்டா யாய்குடை யக்குடைப்
புறனிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா
பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றூனே"

எனவும் இவை சுட்டியொருவர்ப் பெயர்கொள்ளாக் கைக்கினை வந்தனவாலெனின், அற்றன்று; தலைமக னன்பின்மையே மெய்ப்பாடு.

னன்றே அன்னதாவது ; இவை அன்னவின்றி வரைவுகடாவலும் ஊடலுங் காரணமாக அன்பிலனென்று இல்லதுசொல்லினமையின் அவை ஒருதலையன்பாகாவென்பது. மற்று "என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே" (புறம்-84) என்னும் புறநானூற் றுப் பாட்டும் பெண்பாற் கைக்கிளையாதலின் அதனை ஆசிரியத்தான் வாராதென்றதென்னையெனின், 'ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின' (தொல்-செய்-118) என்புழிச் சிறுபான்மை தலைவிகூற் றுமையே வருவன அமையுமென்று போதந்தாமாகலின் அதுவே பெரு விதியாகாதென்பது.

இனிக் கைக்கிளை வருமாறு:

"திருநுதல் வேரரும்புந் * * * தணங்கே" (புற-வெ-மாலை-கைக்-3). இது நெஞ்சிற்கு உரைத்தது எனத் தலைமகள் சொல்லி னது ; நற்காமமன்றுமாகலின். இக்கருத்திலுனே, இதனைப் புறத் திணையுட் கொண்டாருங் கைக்கிளைப்படலத்து,

"நெஞ்சிற் குரைத்தலுங் கேட்போ ரின்றி
யந்தர மருங்கிற் கூற்று மல்லது
சொல்லலுங் கேட்டலு மில்லே யாக
வகத்திணை மருங்கி னேவகை யாலு
மிகத்த லென்ப விவ்வயி னான"

என்றுரைனக்கொள்க.

பாடாண்கைக்கிளைச்சும் ஈண்டே அளவுகூறுகவெனின், கலி வெண்பாட்டினைக் கைக்கிளையென்னுமாயினன்றே அது கடாவாவது. மருட்பாவிற்குக் கைக்கிளைப்பகுதி உரைந்தோதல் வேண்டுவதின்மை யின் அதற்கும் அதுவே அளவாமென்பது. ஒழிந்த மருட்பா மூன்றற் கும் உதாரணம் மேற்காட்டுதும். இக்காலத்தார் எறியகடற்றிற மென்னும் பெருந்திணைப்பொருண்மேலுங் காமஞ்சாலாவிளமையோ னை ஒழிந்த மகளிரோடுங் கூட்டியுரைச்சுங் கைக்கிளைப்பொருண்மே லுங் கலிவெண்பாட்டினைப் பெயர்கொடுத்துச் செய்யுள் செய்பவால்.

அவை அவ்வாறுசெய்தற்கும் அவை முப்பதிற்றடியின் இகந்து எத் தூணையடியினும் ஏற்குமென்றற்கும் என்னே ஒத்தெனின், அவ் வாறு வருமென்பது இந்நூலுட் பெற்றிலமாயினும் இருபதின்சீர்க் கழிநெடிலடியானும் இதுபொழுது செய்யுள் செய்யுமாறுபோலக் காட்டலான் அமையும். அவை புலனெறிவழக்கிற்குச் சிறந்திலவாக ரிக.* (கசுo)

473. புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்
வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் †பாவின் வென்ப.

கைக்கிளைமருட்பாவல்லாத மருட்பாவும் அதுவேபோல வெண்பா முதலாக ஆசிரியம் பின்வந்து முடியுமென்று ஈண்டு அவற் றுக்குடம்பட்டது கண்டு கூறியவாறு. என்னே ?

. 'மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்றே' (தொல்-செய்-85.)

என்றவழி ஆசிரியம் முன்னர் கிறீஇப் பின்னர் வெண்பாவினைக் கூறி 'வெண்பா வியலினு மாசிரிய வியலினும் பண்புற முடியும் பாவின்' என்றமையின். இங்ஙனம் எண்ணப்பட்ட மூன்றுபொருட்கும் இலச்சணம் முன்னர்ப் பாவிரியோத்திலுட் கூறினவற்றுக்கு இன்ன வாறு செய்யுள் செய்க வென்றற்கு இது கூறினனென்பது.

---

* "புறப்புறப் பொருளான் வந்து இரண்டுறுப்பாயும் ஒருறுப்பா யும் பாவும் பொருளும் வேறுபட்டு வெள்ளடியின் இசந்துவரும் கலி வெண்பாவாகிய உலாச்செய்யுள் அடிவரையின்றி வருமாறும், பெருந் திணைப் பொருண்மேல்வரும் படலச்செய்யுளும் ஒருறுப்பாய் அடி யிகந்து வருமாறும் இக்காலத்துக் கூறுகின்றவற்றுட் காண்க" என்றார் நச்சினார்க்கினியர்.

† 'பாவின மென்ப என்பது' முன் அச்சுப்பிரதிப் பாடம். இவ்வா சிரியர் இனங்கொண்டிலரென்பது முன்னர் 86-வது சூத்திரவுரையிற் கூறப்பட்டது.

இதன் பொருள் : இம்மூன்றும் வெண்பா முன்னும் ஆசிரியம் பின்னுமாய் வரும், என்றவாறு.

நிறனிலைமூன்றென்றார், முற்கூறியனவெல்லாம் அகத்திணையாகலின், இவை புறத்திணையுளல்லது வாராவென்றற்கென்பது. திணைநிற நெரியினென்பது இவை மூன்றுங் கைக்கிளைமருட்பாப் போல. ஆண்பாற்கைக்கிளையும் பெண்பாற்கைக்கிளையுமாகி அகனும் புறனும்பற்றி வாராது ஒருதலையாகவே புறத்திணையென்று தெரியப் படுவனவென்றவாறு. இதன் பயன், கைக்கிளைமருட்பாப் புறத்திணையானும் வருமென்பது. இயலென இருகாற் சொல்லியவதனான் இயற்சீர்வெள்ளடியான் வெண்பாவருதல் சிறந்ததெனவும் அதற்கேற்றவகையான் ஆசிரியம் இயற்சீரான்வருதல் சிறந்ததெனவுங் கொள்க. பண்புறமுடிதலென்பது மேற் சிறுமைக்கெல்லை கூறுமையின் வெண்பாவிற் கிழிபாகிய எழுசீரின்றி எண்சீரான்வரினும் ஆசிரியத்திற்கிழிபாகிய மூன்றடி வரினும் எருத்தடி குட்டமாகி வரினும் அங்ஙனம் மூன்றடி வந்தவழி வெண்பா நான்குமுதற் பன்னிரண்டடியும் உயரினும் அவையெல்லாம் பண்பெனப்படுவனவெனவும் அல்லன சிறப்பிலவெனவுஞ் சொல்லினவாறு. இக்கருத்தினான் வெண்பாவடி வரையிலவாயினும் ஆசிரியவடி மூன்றிகவாவென்பது நேமிநாதத்துள்ளுஞ் சொல்லப்பட்டது. என்னை ?

"முச்சீ ரெருத்தின தாகி முட்டின்றி
யெச்சீ ரானு மேகாரத் திறுமே"

என்றாராகலின். 'பாவின'வென்றதனான் அவ்விரு பகுதியுந் தத்தம் பாக்கள் வேறு வேறு பெறுகிழுமென்பது. எனவே, இயற்சீர்வெண்டளை யாசிரியந் தொடுக்குங்கால்,

"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
வுலக்கல் லன்ன பாறை யேறி" (குறுந்-12.)

எனப் பாவினை ஒன்றுகத் தொடுத்தாற்போலத் தொடுத்தல் ஈண்டு அமையாதென்றுணர்ந்தும். இவை மூன்றற்கும் உதாரணங் காட்டுங்கால்

மேற் காட்டாதுநின்ற பாடாண்டிணைக் கைக்கிளைமருட்பாவிற்கு உதாரணங் காட்டியே காட்டப்படும். (கசை)

474. *பரிபாட் டெல்லை
நாலீ ரைம்ப துயர்படி யாக
வையைந் தாகு மிழிபடிக் கெல்லை.

இது, பரிபாட்டின்கண்வரும் வெண்பாவிற்கு அளவுகூறுகின்றது.†

இதன் பொருள்: பரிபாடற்கு உறுப்பாகிய வெண்பாவுக்கு நாலுறழடி பெருக்கத்திற்கெல்லையாகவும் இருபத்தைந்தடி சுருக்கத்திற்கெல்லையாகவும் பெறும், என்றவாறு.

அவை பரிபாடலுட் கண்டுகொள்க. (கசஉ)

475. அளவியல் வகையே ‡யீரிணைவகைப் படுமே.

இதன் பொருள்: இத்துணையும் அளவியலான் ஒருகூறே சொல்லப்பட்டது, என்றவாறு.

எழுநிலத்தெழுந்த செய்யுள்களுள் அடிவரையறையுடையனவற்றுக்குக் கூறினுள் ஈண்டில்லாதன அடிவரையின்றிவரும்

* 'பரிபாடல்லே' என்பது உரையாசிரியர் உரைப்பிரதியிலும், நச்சினார்க்கினியர் உரைப்பிரதியிலும் கண்ட பாடம்.

† இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இச்சூத்திரம் பரிபாட்டிற்கு எல்லை கூறுகின்றதென்றனர்.

‡ 'அிணைவகைப்படும்' என்பதும் பாடம்.

இலக்கணத்த வென்பதூஉம் இனிக்கூறுதுமென்பதாம் இதனது பயம்.* (கசுரு)

476. எழுநிலத் தெழுந்த செய்யுட் டொரியி
னடிவரை யில்லன வாறென மொழிப.

மேலைச்சூத்திரத்தான் அளவியல் வகையை வரையறைப்படுத்தான்; அடிவரையறையின்மையும் அளவியலென்பதுங் குறிப்புக் கருதா இலக்கணமாகிய செய்யுள் கூறினன் இச்சூத்திரத்தானென்பது.

இதன்பொருள்: அகமும் புறமுமாகிய எழுநிலத்துந் தோன்றிய செய்யுளே ஆராயின் அடிவரையின்றிவரும் இலக்கணத்தளவு ஆறும், என்றவாறு.

இதனுனே ஆறென்பதூஉம் ஓரளவியலாயிற்று.† (கசுச)

477. அவைதாம், நூலி னுனை வுரையி னுனை
நொடியொடு புணர்ந்த பிசியி னுனை
வேது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னுனை.

---

* இது "மேற் சொல்லப்பட்டவற்றைத் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்.) இவ்வதிகாரத்துள் அதிகரிக்கப்பட்ட அளவியல் சண்டுச் சொன்ன வகை பெறும்" என்பது இளம்பூரணர் உரை.

"இது பிறன் கோட்கூறல். (இ-ள்) யான் கூறிய அளவியலின் கூறுபாடு அத்தனைப் பகுதிப்படும், என்றவாறு. என்றது யான் சிறப்புடைத்தெனக் கூறிய பெருமைக்கெல்லை அத்தனைப்படுமென வே, பிறர் பெருமைக்கெல்லை கொள்ளாதது சிறப்பின்று என்றவாறு மிற்று" என்பது நச்சினார்க்கினியர் உரை.

† "எழுநிலமாவன, பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. அவற்றுட் 'பாட்டு' ஒழிந்த ஆறும் அடி வரையில, என்றவாறு" என்பது இளம்பூரணர் உரை.

இது மேற்கூறினிறுத்த ஆறற்கும் பெயரும் முறையு முணர்த்து தல் நுதலிற்று.

இதன்பொருள்: அடிவரையில்லன ஆறெனப்பட்ட; அவைதாம் நூலின் கண்ணவும் உரையின்கண்ணவும் நொடித்தன்மாத்திரையாகிய பிசியின்கண்ணவும் ஒருமொழிக் கேதுவாகிவரும் முதுமொழிக்கண்ண வும் மறைத்துச்சொல்லுஞ் சொல்லாற் கிளந்த மந்திரத்தின் கண்ண வுஞ் சொல்லுகின்ற பொருளே இடைகரந்து சொல்லுங் குறிப்பின் கண்ணவுமென அறுவகைப்படும், என்றவாறு.

அவற்றுக்கிலக்கணம் போக்கிச் சொல்லுதும். நூலின்கண்ணவு மென்றது சூத்திரச்செய்யுளேநோக்கிக் கூறியவாறு. அதனுள்ளும் அடி வரையுடைய ஆசிரியம்போல் அளவைபெற்று மேலே அடங்குமென் பது. இனி அச்சூத்திரப்பொருளும் உரையின்கண்ணதாகி வருவ தாகும் ஒருசெய்யுளாம். அதனது விகற்பம் முன்னர்க் கூறுதும். நொடி யொடுபுணர்ந்த பிசியும், ஏது நுதலிய முதுமொழியும் மறைமொழி கிளந்த மந்திரமுங் கூற்றிடைவைத்த குறிப்புமென நான்கும் வழக்கு மொழியாகியுஞ் செய்யுளாகியும் வருதலின் அவற்றுட் செய்யுளேயே கோடற்கு அவற்றுக்கு அளவிலவென்றுனென்பது. இவை இத்தனை யெனவே மேலேச்சூத்திரமும் அளவியலே கூறியவாறுயிற்று. இனி அவைபடும் பகுதி யாவையுங் கூறுகின்றுன். நொடியொடு புணர்ந்த வென்ற மிகையான் இதுவன்றி இதுபோல்வது பண்ணத்தியென் பதும் ஒன்று உண்டென்பதுகொள்க. அது முன்னர்ச் சொல்லுதும்.
(கசுஇ);

478. அவற்றுள்,
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே.

இது, நூலினது பொதுவிலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: நூலென்று சொல்லப்பட்டவற்று முன்னும் பின்னும் மாறுபடாது தொகுத்தும் வகுத்தும் பொருள்காட்டி அடங்கி னின்றபொருள் விரித்துச் சொல்லப்பட்டுப் பருப்பொருட்டாகாது தண்பொருட்டாகப் பொருள்விளக்கல் அதற்கிலக்கணம் அது, என்ற வாறு.

இதன் அகலம் உரையிற்கொள்க. (கசுஈ)

479. அதுவே தானு மீரிரு வகைத்தே.

அதன் வகை உணர்த்துகின்றது.

இதன்பொருள்: அந்நூற்குப் பகுதி நான்குவகையாம்,' என்ற வாறு.

அவை முன்னர்ச் சொல்லுதும். இதனது பயம், மேல் தொகை யினும் வகையினுமென்றதனானே தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு என்னும் நால்வகையாப்பிற்குந் தொகையினும் வகை யினும் பொருண்மை காட்டுதல் ஒக்குமென அவையிரண்டும் நான் காதலுமுடையவென்பது. அவை எழுத்து மூப்பத்துமூன்றெனத் தொகுத்தவழிக் குறிலும் நெடிலும் இனமுஞ் சார்ந்துவரும் மூன்று மென வகுத்தலும் 'இரண்டு தலையிட்ட முதலா கிருபஃ தறுநான் கீறு' (தொல்-எழுத்-புணர்-1) என வகுத்தலுமென்றாற்போல்வன. உயர்திணை அஃறிணையெனத் தொகுத்து ஐம்பாலென வகுத்தலும் அஃது ஒழிந்த மூவகைநூலிற்கும் இவ்வாறே ஒருவழித் தொகுத்த லும் வகுத்தலுங் கொள்க. (கசுஉ)

480. ஒருபொரு ணுதலிய சூத்திரத் தானு மினமொழி கிளந்த வோத்தி னானும் பொதுமொழி கிளந்த படலத் தானு மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென் மரபி னியலு மென்ப.

இஃது, அந்நான்கினையும் பெயரும் முறையு முணர்த்துதல் நுத

இதன்பொருள்: நூலுள் ஒருபொருளையே நுதலிவருவது சூத்திரமெனவும் இனமாகிய பொருளினையே தொகுப்பது ஒத்தெனவும் பலபொருட்கும் பொதுவாகிய இலக்கணங் கூறுவது படலமெனவும் மூன்றுறுப்பினையுடையது பிண்டமெனவுங் கூறிய மரபினுன் இயலும் நூல், என்றவாறு. (கசுஅ)

481. அவற்றுட், சூத்திரந் தானே
யாடி நிழலி னறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருணனி விளங்க
யாப்பி னுட் டோன்ற யாத்தமைப் பதுவே.

இது, முறையானே சூத்திர இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

மேல் ஓதியவற்றுள் ஒருபொருணுதலிய எனப்பட்ட சூத்திரப் பொருள் நுதலுங்கால் ஆடி சிறிதாயினும் அகன்றுபட்ட பொருளை அறிவித்தாற்போலத் தேர்தல்வேண்டாமை அவ்வகன்றபொருள் அடங்குமாற்றுன் அச்செய்யுளுள் தோன்றச் செய்து முடிக்கப்படுவது, என்றவாறு. (கசுக)

482. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

இஃது, ஒத்திலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: மேல் இனமொழிகிளந்த ஒத்தென்றுன், அவ்வினம் இனமொழி கிளக்குங்காற் சிதைந்துகிடப்பப் பல ஒத்தாகச் செய்யாது நேரினமணியை நிரலவைத்தாற்போல ஓரினப்பொருளையெல்லாம் ஒருவழியே தொகுப்பது ஒத்தாவது, என்றவாறு.

நேரினமணியெனவே ஒருசாதியாயினும் தம்மின் ஒத்தனவே கூறல்வேண்டுமென்பதாம். வேற்றுமையோத்தும் வேற்றுமைமயங்கியலும் விளிமரபும் என மூன்றன்பொருளும் வேற்றுமையென ஒரினமென்று ஒரோத்தாக வைவாது வேறு வேறு வைக்கப்படுமென்பது. உயர்மொழிப் புலவரென்பது, அங்ஙனம் நூல்செய்தல் உயர்ந்தோர் மாறு. (கஎ0)

483. ஒருநெறி யின்றி விரவிய பொருளாற் பொதுமொழி தொடரினது படல மாகும்.

இது, மேற் பொதுமொழிகிளந்த படலமெனப்பட்டதற்கு இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: ஒருநெறியவன்றிப் பல்வேறு வகைப்பட்ட பொருளெல்லாவற்றிற்கும் வேறுவேறு இலக்கணங்கூற நுதலின் அவற்றுக்குப் பொதுவாகி வருவது படலம், என்றவாறு.

பொதுமொழிகிளந்த படலமென்றவழி ஒருநெறிப்பொருட்டுப் பொதுவாகப்பட்டதனை விலக்கி ஈண்டு விரவிய பொருட்குப் பொதுவாக மொழிவதே படலமென்றுரென்ப. அவை அதிகாரங்களாமெனக் கொள்க. (கஎக)

484. மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற் றோன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப.

இது பிண்டங் கூறுகின்றது. வாளாதே மூன்றுறுப்படக்கிய பிண்டமென்றான் மேல்; (தொல்-செய்-168) ஈண்டுச் சூத்திரமும் ஒத்தும் படலமுங் கூறிய அதிகாரத்தானே அம்மூன்றனையும் அடக்கினிற்பது கூறுகின்றுனென்பது.

இதன்பொருள்: இம்மூன்று உறுப்பினையும் அடக்கி வருவது பிண்டம், என்றவாறு.

அம்மூன்றனையும் உறுப்பென்னவே, பிண்டமென்பனதாம் உறுப்பினவென்பது பெற்றும். தொல்காப்பியமென்பது, பிண்டம்; அத

னுள், எழுத்ததிகாரஞ் சொல்லதிகாரம் பொருளதிகாரமென்பன படல மெனப்படும்; அவற்றுள் ஒத்துஞ் சூத்திரமும் ஒழிந்த இருகூறு மெனப்படும். தோன்றுமொழிப் புலவர் அது பிண்டமென்ப, என்ற தனுற் பிண்டத்தினையும் அடக்கி நிற்பது வேறு பிண்டமுளதெனக் கொள்க. அது முதனூலாகிய அகத்தியம்போலும்; என்னை? அஃது இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்று மூன்று பிண்டத்தினை யும் அடக்கி நிற்றலின்.* (கஎஉ)

485. பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப.

இஃது, உரையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

பொருள்: உரைப்பகுதிவழக்கு இந்நான்காகு மென்று சொல்லுவார் புலவர், என்றவாறு.

பாட்டிடை வைத்த குறிப்பினானுமென்பது, ஒரு பாட்டு இடை யிடை கொண்டு நிற்குங்கருத்தினன் வருவனவெனப்படும். என்னை? பாட்டுவருவது சிறுபான்மையாகலின். அவை தகடூர்யாத்திரைபோல்

* "சூத்திரம் பல உண்டாகி, ஒத்தும் படலமும் இன்றுகி வரி னும்; ஒத்துப் பலவுண்டாகி, படலம் இன்றுகி வரினும்; படலம் பல வாகி வரினும் அதற்குப் பிண்டமென்று பெயராம், என்றவாறு. அவற் றுள் சூத்திரத்தாற் பிண்டமாயிற்று இறையனா் களவியல்; ஒத்தி னாற் பிண்டமாயிற்றுப் பன்னிருபடலம்; அதிகாரத்தாற் பிண்டமா யிற்று இந்நூல் என்று கொள்க. இவற்றைச் சிறுநூல், இடைநூல், பெருநூல் என்ப" என்றார் இளம்பூரணர்.

ர.* மற்றுப் பிறபாடைவிரவியும் வருவனவோவெனின், அவற்றுள் ளுந் தமிழுரையாயின எல்லாம் பாட்டிடைவைத்த குறிப்பென ஈண் டடங்கும், பிறபாடைக்காயின் ஈண்டு ஆராய்ச்சியின்றென்பது. பாவின் றெழுந்த இளவியாணுமென்பது பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொரு ளெழுதுவன போல்வன.† சூத்திரம் பாட்டெனப்படாவோவெனின், படா. பாட்டும் உரையும் நூலுமென வேறோதினமையின். அல் லாத சூத்திரத்தாற் சொல்லாத பொருளினை உரையாற் சொல்லித் தொடர்பு படுப்பது பாட்டிடை வைத்த குறிப்பாவது. இஃது அன்னதன்று, வேறொருவன் சூத்திரத்திற் கூறிய பொருளையே மற் றொருவன் கூறுகின்றுணுதலானென்பது. ஒழிந்த பாட்டிற்கும் இவ்வாறே பொருளெழுதின் அஃதொக்கும். அவை பாரதம், பருப் பதம் முதலாயின. பொருளொடு புணராப் பொய்ம்மொழியாணு மென்பது ஒருபொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை ‡ ஓர் யானையுங் குரீஇயுந் தம்முட் பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக்கியையப் பொருள்படத் தொடர்ந்தோலையான் ஒருவனுழை ஒருவன் கற்றுவரலாற்று முறையான் வருகின்றன. பொருளொடுபுணர்ந்த நகைமொழியாணுமென்பது, பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகுதற்கேதுவாகுந் தொடர்

---

* சிலப்பதிகாரத்தையும் உதாரணமாகக் காட்டினர் நச்சினார்க் கினியரும், இளம்பூரணரும்.

† "பாவின்றெழுந்த இளவியாணும் என்பது, பாக்கண் மொழி தோற்றின சொல்வகையாணும் உரையாம் என்றவாறு. அஃதாவது வழக்கின்கண் ஒரு பொருளைக்குறித்து வினவுவாரும் செப்புவாரும் கூறும் கூற்று. அதுவும் இலக்கணம் பிழையாமற் கூறவேண்டுத லாணும் ஒரு பொருளைக் குறித்துச் செய்யப்படுதலாணும் செய்யுளாம். இதனைக்குறித்தன்றே 'செப்பும் வினவும் வழாஅ லோம்பல்' (தொல்-சொல்-இள-13) என்பது முதலாகக் கூறப்பட்ட இலக்கணமென்று கொள்க" என்றார் இளம்பூரணர்.

‡ "ஓர் யானையும் குதிரையும் தம்முள் நட்பாடி" என்று நச்சி னார்க்கினியர் உரைப்பிரதியிற் காணப்படுகிறது. இதுவே சரியான பாடமென்று தோன்றுகிறது.

லை. அதுவும் உரையெனப்படும். அவ்யாவன சிறுதூரீஇயுரையும், தந்திரவாக்கியமும். போல்வனவெனக்கொள்க. இவற்றுட் சொல்லப் படும் பொருள் பொய்யெனப்படாது உலகியலாகிய நகைதோற்று மென்பது.* இவ்வகையான் உரை நான்கெனப்படுமென்றவாறு. உரை நடையென்னுது வகையென்றதனான் இவ்வுரைப்பகுதி பிறிதும் ஒன் றுண்டு. அது மரபியலுட் பகுத்துச் சொல்லுதும். (களங)

486. அதுவே தானு மிருவகைத் தாகும்.

இஃது, அவற்றின் தொகை கூறுகின்றது.

இதன் பொருள் : அந்நான்கனுண் முதலன இரண்டும் ஒன்றுக வும் ஏனைய இரண்டும் ஒன்றுகவுந் தொகுக்கப்படும் அவ்வாற்றுற் பயங் கொள்ளுங்கால், என்றவாறு.† அவையாவன கூறுகின்றான். (களச)

487. ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே யொன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.

இஃது, அவற்றது இயல்புணர்த்துதல் துதலிற்று.

இதன் பொருள் : மேனின்ற அதிகாரத்தான் இறுதிநின்ற இரண்டன் தொகுதியாகிய ஒன்று செவிலிக்கே உரித்து. ஒழிந்த இரண்டனுளுகிய ஒன்று வரைவின்றி எல்லார்க்கும் உரித்து, என்ற வாறு.‡

---

* "நகைமொழியாவது மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தா தென இகழ்ந்து கூறுதல். அவ்விகழ்ச்சியின் பின்னர்ப் பொருளு ணர்த்து முரை பிறக்குமாதலின், 'பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்' உரைவரும் என்றார்" என்பது இளம்பூரணர் உரை.

† "மேற் சொல்லப்பட்ட உரை இரண்டு வகைப்படும், என்ற வாறு. அது மைந்தர்க்கு உரைப்பனவும் மகளிர்க்கு உரைப்பனவும் ஆம்" என்பது இளம்பூரணர் உரை.

‡ "மகளிர்க்குரைக்கும் உரை செவிலிக்குரித்து; மைந்தர்க் குரைக்கும் உரை எல்லார்க்கு முரித்து, என்றவாறு" என்பது இளம் பூரணர் உரை.

தலைமகளை வற்புறுத்துஞ் செவிலியர் புனைந்துரைத்து கருவித் துப் போக்குதற்குரியரென்பது இதன் கருத்து. இக்கருத்தேபற்றிப் பிறசான்றோருஞ் "செம்முது செவிலியர் பொய்ந்நொடி பகர" என்றுரென்பது. பிறவும் அன்ன. மற்றுமென்றதனுன் அவை யன்றி வருகின்ற பிசியுஞ் செவிலியர்க்கு உரித்தென்பதுகொள்க. இனிப் பாட்டிடைவைத்த குறிப்பும் பாவின்றெழுந்த இளவியும் யாருக்கும் வரைவின்றி வருமாறு அவ்வச்செய்யுளுட் காண்க. (களஇ)

488. ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னானு
மென்றிரு வகைத்தே பிசிவகை நிலையே.

இது, முறையானே பிசி இரண்டெனப்படு மென்கின்றது.

இதன் பொருள்: தன்கட் கிடந்த ஒப்புமைக்குணத்தோடு பொருந்திவரும் உவமப்பொருளானும் மற்று இனி ஒன்றுசொல்ல ஒன்று தோன்றுந் துணிவிற்றாகச் சொல்லுஞ் சொல்லானுமென்று இவ்விருகூற்றதாகும் பிசி கூறுபடும் நிலை, என்றவாறு.

அவை "பிறைகவ்வி மலைநடக்கும்" என்பது ஒப்பொடு புணர்ந்த உவமம். அஃது யானையென்றுவது.

"முத்துப்போற் பூத்து முதிரிற் களாவண்ணன்
நெய்த்தோர் குருதி நிறங்கொண்டு வித்துதிர்த்து"

என்பது கழுகின்மேற்று.

"நீராடான் பார்ப்பா னிறஞ்செய்யா னீராடி
னூராடு நீரிற் காக்கை"

என்பது தோன்றுவது கிளந்த துணிவினுன் வந்தது. இது தெரிப் பென்றுவது. வகைநிலை யென்ற மிகையான் இவையுஞ் செவிலிக் குரித்தென்பது கொள்க. (களக)

489.* நுண்மையுஞ் சுருக்கமு மொளியு முடைமையு
மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉ
மேது நுதலிய முதுமொழி யென்ப.

இது, முதுமொழியுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கூரிதாய்ச் சுருங்கி விழுமிதா யெளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளொன்றனை முடித்தற்கு வருமாயின், அங்ஙனம் வந்ததனைப் பொருண்முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழியென்ப புலவர், என்றவாறு.

"உழுத வுழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
கழுதை செவியிரிந் தற்றூல்-வழுதியைக்
†கண்டன கண்ணீ ருகுப்பப் பெரும்பணைத்தோள்
கொண்டன மன்னே பசப்பு."

என்றவழி மற்று வழுதியைக் கண்ட கண் நீருகுப்பத் தோள் பசந்தன என்றக்கால் ஒன்றன் வினைப்பயன் ஒன்று நுகர்ந்ததென்புழிக் குறித்த பொருளியைபின்மை கூறியதாயிற்று. அதனைச் சொற்றொடர் இனிது விளக்கின்றாயினும் முற்கூறிய முதுமொழி முடித்ததென்பது. என்னை? அதன் கண்ணே அது முடித்தற்கேதுவாகிய இயைபின்மை கிடந்தமையினென்பது. இது பருப்பொருட்டன்றி நுண்ணிதாகிச் சொற்சுருக்கமுடைத்தாய் விழுமிதாகி எளிதிற் பொருடோன்றியவாறு கண்டுகொள்க. எனவே, இதுவும் இந்நாற்பகுதித்தென்றவாறு.‡(களவ)

---

* 'நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடைமையும்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

† 'கண்ட கருங்கண் இருப்ப' என்பதும் பாடம்.

‡ "பழமொழி இவ்விலக்கணம் பற்றிச் செய்தது" என்றார் நச்சினார்க்கினியர்.

490. நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திர மென்ப.

இது, மந்திரச்செய்யுளுணர்த்துதல் துதலிற்று.

இதன் பொருள்: சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையராவார் ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமன் மறைத்துச்சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திரமெனப்படும், என்றவாறு.

அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க. தானேயென்ற பிரித்தான் இவை தமிழ்மந்திரமென்றற்கும் டாட்டாகி அங்கதமெனப்படுவனவும் உள, அவை நீக்குதற்குமென உணர்க. அவை,

> "ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
> காரியத்தாற் காலக்கோட் பட்டாரே- ச்-சீரிய
> வந்தண் பொதியி லகத்தியனு ராணையாற்
> செந்தமிழே தீர்ச்சசுவா சா"

எனவும்,

> "மூரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
> பரணர் கபிலரும் வாழி—யரணிய
> வானந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோட
> னானந்தஞ் சோக்கசுவா கா"

எனவும் இவை *தெற்கண் வாயில்திறவாசப் பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப்பாட்டாயின. மேற் பாட்டுரைநூலென்புழி அங்கதமென்றோ நிலுன் இன்ன மந்திரத்தை. இஃது ஒருவனை இன்னவாற்றாற் பெரும்பான்மையுஞ் சபித்தற் பொருட்டாகலின் அப்பெயர்த்தாயிற்று. இக்கருத்தேபற்றிப் பிறரும்,

---

* 'தெற்கில் வாயில் திறவாத பட்டிமண்டபத்தார் பொருட்டு' என்பது நச்சினார்க்கினியர் உரைப்பிரதிப் பாடம்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" (குறள்-3-8.)

என்றுரைன்க. அங்கதப்பாட்டாயவழி அவற்றுக்கு அளவை அங்கதப்பாட்டளவோடு ஒக்குமென மேற்கூறினனென்பது. (கஎஅ)

491. எழுத்தெடுத்து சொல்லொடும் புணராதாகிப் பொருட்புறத்தது வே குறிப்புமொழி யென்ப.

இது, முறையானே கூற்றிடைவைத்த குறிப்புணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : எழுத்து முடிந்தவாற்றானுஞ் சொல் தொடர்ந்தவாற்றானும் அச்சொற்பற்றி பொருளானுஞ் செய்வன பொருளறியலாகாமையின், எழுத்தெடுத்து சொல்லொடும் புணராது பொருட்குப் புறத்தே பொருளுடைத்தாய் நிற்பது குறிப்பாவது, என்றவாறு.

இதனைப்பாட்டினை நூலென்றவதி வாய்மொழி யென்றோதினான், கவியாற் பொருள்தோன்றுது பின்னர் இன்னதிதுவெனச் சொல்லி உணரப்படுதலின். இனி, அதனை இதன் தொகைச்சூத்திரத்துக் கூற்றிடைவைத்த குறிப்பென்று ஓதினான் பாட்டிடைப் படுபொருள் பெரிதாகி அதனிடையே குறித்துக்கொண் டுணரினல்லது மெய்ப்படாதென்றற்கென்பது. பிறர் அவற்றைப் பொருளிசையென்று சொல்லுப.

"குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையி
னடக்கிய மூக்கின ராம்."

என வரும் இதனுட்குடமே தலையாகப்பிறந்தாரெனவுங் கொம்பெழுந்த வாயினரெனவுங் கையுட்கொண்ட மூக்கினரெனவுங் கூறியக்கால் எழுத்துஞ் சொல்லும் பொருளும் இயல்பிலவாதலுங் குறிப்பினுண் அதனைக் குஞ்சரமென்று கொண்டவாறுங் கண்டுகொள்க. பிறவும் அன்ன. மற்றிது பிசியெனப்படாதோவெனின், இது பாட்டுவடிவிற் றாகலின் அற்றன்றென்பது. அஃதேற் பாட்டெனப்படாதோவெனின்,

குறித்த பொருண் முடிய நாட்டாமையின் யாப்பழிந்து, நாற்சொல்லியலான் யாப்புவழிப்படாமையின் மரபும் அழிந்து, பிறவுறுப்புப் பலவுங் கொண்டமையிற் பாட்டெனவும் படாதென்பது. இஃது எழுத்து முதலாக ஈண்டிய அடியெனப்படாமையின் அதனையும் அடிவரையில்லனவற்றொடு ஒதினானென்பது. அல்லாதார் குறிப்பிசைவந்த செய்யுளெல்லாங் குறிப்பெனப்படுமென்ப. அங்ஙனங் கூறிற் குறிப்பிசையுடைய பாட்டினுள் வாராவாகிய செல்லுமென மறுக்க. (கஎசு)

492. பாட்டிடைக் கலந்த பொருள வாகிப் பாட்டி னியல பண்ணத்தி யியல்பே.

இது, பண்ணத்தி கூறுகின்றது.

இதன் பொருள் : பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும்போலச் செய்யப்படுவன பண்ணத்தி, என்றவாறு.

மெய்வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தியென்ப. இது எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தியென்பவென்பது. அவையாவன நாடகச்செய்யுளாகிய பாட்டும் அடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டுங் கடகண்டும் முதலாயின. அவற்றை மேலதேபோலப் பாட்டென்னாராயினார் நோக்கு முதலாயின உறுப்பின்மையினென்பது. அவை வல்லார்வாய்க்கொண்டுணர்க. (கஅ0)

493. அதுவே தானும் பிசியொடு மானும்.

இதுவும் அது.

இதன் பொருள் : மேற்கூறப்பட்ட பண்ணத்தி பிசியோடொக்கும், என்றவாறு.

அதனை ஒத்தலென்பது அதுவுஞ் செவிலிக்குரித்தென்றவாறு. பிசியொடுமென்ற உம்மையாற் 'பொருளொடு புணராப் பொய்ம்மொழி

யோடும் பொருளொடு புணர்ந்த நகையோடும்' (தொல்-செய்-173) ஒக்குமென்றுணர்க. தானுமென்ற மிகையாற் பாட்டுநடை வகைக் கூத்திற்கே உரித் தென்பதுகொள்க. (கஅக)

494. அடிநிமிர் கிளவி யீரா ருகும்.

இதுவும் அது.

இதன் பொருள் : அப்பண்ணத்தியின் அடிப்பெருக்கங் கிளச்சுங் காற் பன்னிரண்டாம், என்றவாறு.

ஆகுமென்றதனாற் சிறுபான்மை அப்பன்னிரண்டடியின் எறியும் வரப்பெறுமென்பது. ஈராருகுமென்றதனான் இது நெடுவெண்பாட் டாகி வருமெனவும் அதுபோல ஆறடியின் இகந்துவாராதெனவுங் கொள்க. (கஅஉ)

495. அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே.

இதுவும் அது.

இதன் பொருள் : அது முழுதும் அடியாகிவாராது இடையிடை ஒரோவடிப் பெற்று அல்லுழியெல்லாம் பரந்துபட்டு வரவும் பெறும், என்றவாறு.

அவை முற்காலத்துள்ளார் காணுமையிற் காட்டாமாயினும், இக்காலத்துள்ளனவேற் கண்டுகொள்க. இலக்கணம் உண்மையின் இலக்கியங் காணுமாயினும் அமையுமென்பது. (கஅங)

496. கிளரிய வகையிற் கிளந்தன தெரியி னளவியல் வகையே யனைவகைப் படுமே.

இது, மேலவற்றுக்கெல்லாம் புறனடை.

இதன் பொருள் : எடுத்தோதிய வகையாற் சொல்லியன ஆரா யின் அளவியற்பகுதி அக்கூற்றதாம், என்றவாறு.

எடுத்தோதியவகையென்பது நூலும் உரையும் நன்னான் கெனவும், பிசி இரண்டெனவும், முதுமொழியும் மந்திரமுங் கூற்றிடை வைத்த குறிப்பும் ஒரோவொன்றெனவுங் கூறிவந்த வகையாம். அவற்றை இனைத்தென்றெண்ணி அளந்தபகுதியும் அளவியலேயாமாகலின் அவ் வளவிய லடிவரையறை கூறியவாற்றானும் இருவகைப்படும் அளவிய லென்றவாறு. (கஅச)

497. கைக்கிளை முதலா வெழுபெருந் திணையு
முற்கிளந் தனவே முறைநெறி வகையின.

இது, பதின்மூன்றும் முறைமைக்கணின்ற திணையுறுப்புணர்த்து

இதன் பொருள் : கைக்கிளைமுதற் பெருந்திணையிறுவாய் எழும் முன்னர்க் கிளக்கப்பட்டன, என்றவாறு.

முறைநெறிவகையின வென்பது அவற்றுக்கு முறைமையாற் புற மெனப்பட்ட வெட்சிமுதற் பாடாண்பகுதியீறாகிய எழுபகுதியோடு மென்றவாறு. எனவே, அவற்றுக்குப் பொதுவாகிய முறையாற் கரந் தையுள்ளிட்டுப் பதினைந்துதிணையுள் ஒன்று செய்யுட்குறுப்பாகி வரல் வேண்டுமெனவும் முன்னோதியவாறே கொள்ளப்படுமெனவுஞ் சொல் லினானும். இது சொல்லாக்கால் அவை வரினும் வரும், வாராதொழிய வும் பெறுமென்பதுபடு மென்பது. இது மேல்வருகின்ற கைகோண் முதலியனவற்றுக்கும் ஒக்கும். (கஅஙி)

498. காமப் புணர்ச்சியு மிடந்தலைப் படலும்
பாங்கொடு தழாலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினு மடைந்த சார்பொடு
மறையென மொழிதன் மறையோ ராறே.

களவு கற்பெனக் காமத்திணையின் ஒழுகலான் ஆண்டுப் பரந்து பட்டனவெல்லாந் தொகுத்துக் கூறுகின்றானு, அவையுஞ் செய்புட்

குறுப்பாகலின். அவற்றுள் இது களவென்னுங் கைகோளுணர்த்து தல் நுதலிற்று.

இதன் பொருள் : காமப்புணர்ச்சியும் அது நீகழ்ந்தபின்னர் இடந் தலைப்பாடும் அதன்பின்னர்ப் பாங்கற்குச் சொல்லி அவனுற் கூடுதலும் அதன்பின்னர்த் தோழியைப் பின்னின்று குறைமுடித்துக் கோடலு மென அந்நாற் பகுதிக்கண்ணும் பொருந்திய சார்பினுற் களவொழுக் கம் இதுவென்று கருதுமாற்றுற் செய்புள்செய்தல் கந்தருவவழக்கம், என்றவாறு.

கந்தருவவழக்கம் மறையோரொழுகிய நெறியாகலான் மறையோரா றென்றுனென்பது. எனவென்பது வினையெச்சம். எனவே, பாங் கனுந்தோழியும் உணர்ந்தவழியும் அது மறையோர்வழித்தென்றவாறு. காமப்புணர்ச்சி நீகழ்ந்தன்றி இடந்தலைப்பாடு நீகழாதெனவும் அவ் விடந்தலைப்பாடு பிறர்பயத்தலரிதென்பது அவள் ஆயத்தோடுங் கூடிய கூட்டத்தான் அறிந்த தலைமகன் பாங்கனை உணர்த்தி அவனுற் குறை முடித்துக்கோடலுந் தன்வயிற் பாங்கன் அவள்வயிற் பாங்குசெய்டாலு கலின் அதன்பின்னர்த் தோழியாற் குறைமுடித்துக் கோடலுமென இந்நான்கும் முறைபான் நீகழுங் களவொழுக்கமென்றவாறு.

'வேட்கை பொருதலை யுள்ளுதன் மெலித
லாக்கந் செப்ப னுணுவரை யிறத்த
னேக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை.....' (தொல்-கள-9.)

என்பனவுங் கைகோளாகாவோவெனின், ஆகா ; கைகோளென்பது ஒழுகலாறுகளான் அவை அவற்றுட் பிறந்த உள்ளநீகழ்ச்சி ஒன்றுன் றனிற் சிறந்து பெருகியக்கால் அவ்வப்பகுதியாகுமெனக் கொள்க.

மற்றக் களவிடையுள்,

"ஆங்கனம் புணர்ந்த கிழவோன் றன்வயிற்
பாங்கி னேரிற் குறிதலைப் பெயலும்
பாங்கிலன் றமியோ னிடந்தலைப் படலும்" (இறையனர்-3.)

எனப் பாங்கற்கூட்டம் முற்கூறியதாலெனின், இது கைகோள்கூறிய இடமன்மையின் முற்கூறினும் அமையுமென்பது. மற்று இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகனைப் பாங்கன்கண்டு இவ்வேறுபாடு எற்றி லுரையிற்றென்று வினவுமன்றே? அதனுற் பாங்கற்கூட்டம் நிகழ்ந்த பின்னரன்றி இடந்தலைப்பாடு நிகழாதாம் பிறவெனின், அற்றன்று; யாழோர் கூட்டம் உலகியலாதலான் இல்லதன்றுமாகவே உலகத்தார் நிறையுடையாராகி மறைவெளிப்படாமல் ஒழுகுவாரும் மறைவெளிப் படுத்து விளம்பும் பாங்கனையுடையாரும் இல்லாதாருமெனப் பலவகை யாதலின் விதந்தல் தலையன்றென்பது. அல்லதூஉந் தன் இடந் தலைப்பாடு நிகழ்வதாயினே துணைவேண்டுமென்பது. என்னை? துணை யின்றி நிகழுங் களவு சிறப்புடைத்தாகலானும் பாங்கன் கழறுமென்று அஞ்சி அவனை முந்துற மறைத்தொழுகுமாகலானுமென்பது. கள வொழுக்கமெல்லாம் இந்நான்கு வகையானும் அடங்கும். அவற்றுக் குச் செய்யுள் "கொங்குதேர் வாழ்க்கை" (குறுந்-2) என்னும் பாட்டு இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழ்ந்த செய்யுள். "சொல்லிற் சொல் லெதிர் கொள்ளாய்" (நற்றிணை-39) என்பது இடந்தலைப்பாடு. "இடிக்குங் கேளிர் துங்குறை யாக" (குறுந்-58) என்பது பாங்கற் கூட்டத்துக்கண் வந்தது. "தலைப்பூணைக் கொளினே தலைப்பூணைக் கொள்ளும்" (குறுந்-222) என்பது தோழியிற்கூட்டம். பிறவும்

(கஅசு)

499. மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலு
மிவைமுத லாகிய வியனெறி திரியாது
மலிவும் புலவியு மூடலு முணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.

இது, கற்டென்னுங் கைகோளுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்: மறைந்தொழுகும் ஒழுகலாறு வெளிப்படுத்த லும் அதன்பின் தமர் கொடுப்பத் தான் அவர் கையாற் பெறுதலு மென்னும் இவ்விரண்டும் முதலாகிய வழக்கு நெறி திரியாது மகிழ்ச்சி

யும புலத்தலும் ஊடலும் உணர்த்தலுமென்னும் நான்குடன் பிரிவுளப்
பட ஐந்தும் புணர்ந்தது கற்பென்னுங் கைகோளாம், என்றவாறு.

இவை முதலாகிய வென்றதனால்,

'கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான' (தொல்-கற்-2.)

என்றவழிக் கூடிய வதுவைபோல்வன கொள்க. அவைதாங் கற்பெனப்படுவதல்லது ஒழுகலாறெனப்படா. என்னை ? இவரொழுக்க முமன்றி வேள்வியாசான் முதலாயினுரும் செய்விக்கும் ஒழுக்க மாகலான். அங்ஙனமாயினும் அவற்றையுங்கைகோளின்பாற் சார்த்தி யுணரப்படுமென்றற்கு ஈண்டுக் கூறினனென்பது.

இனிக் கூறும் ஐந்துந் தலைவனுந் தலைவியும் ஒழுகும் ஒழுகலா றெனவே படும். முன்னைய இரண்டும் போலப் பிறர்கொடுக்கப்பட்டன அல்லவென்பது. மலிதலென்பது இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலாயவற்றுன் மகிழ்தல். புலவியென்பது புணர்ச்சியான் வந்த மகிழ்ச்சி குறைபடாமற் காலங்கருதிக்கொண்டு பயப்பதோர் உள்ள கிகழ்ச்சி. ஊடலென்பது உள்ளத்து கிகழ்ந்ததனைக் குறிப்புமொழி யானன்றிக் கூற்றுமொழியா னுரைப்பது. அங்ஙனம் ஊடனிகழ்ந்த வழி அதற்கேதுவாகிய பொருளின்மையுணர்வித்தல் உணர்வெனப் படும். இல்லது கடுத்த மயக்கந்தீர உணர்த்துதலால் உணர்த்துத லெனவும் அதனை உணர்தலால் உணர்வெனவும்படும்; புலவிக்காயின் உணர்த்தல் வேண்டா, அது *குளிர்ப்பக்கூறலுந் தளிர்ப்பமுயங்கலும் முதலாயவற்றுன் நீங்குதலின். அம்முறையானே கூறி யவற்றுப்பின் பிரிதல் கூறினன், அஃது இவை நான்கனேடும் வேறுபடுதலின். அதனை ஊடலோடு வைக்கவே அவ்வூடலிற் பிறந்த தனியும் பிரிவின் பாற் படுமென்பதூஉங் கொள்க. என்னை ? காட்டக்காணுது கரந்து மாறுதலின். இவற்றுக்குச் செய்யுள்:

---

* 'குளிர்ப்பக் கூடலும்' என்பதும் பாடம்.

"எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே" (அகம்-194.)

என்பது மறைவெளிப்பாடு.

"தமர்தர-வோரிற் கூடி யுடன்புணர் கங்குல்" (அகம்-86.)

என்பது தமரிற்பெறுதல்.

"கேள்கேடென்ற" என்னும் (93) அகப்பாட்டினுள்,

"நலங்கே ழாகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே"

என்பது மலிதல்.

"நாணுக் கடுங்குரைய ளாகிப்
புலவி வெய்யள்யா முயங்குங் காலே"

என்பது புலவி.

"நோய்சேர்ந்த திறம்பண்ணி னின்பாண னெம்மனை
நீசேர்ந்த வில்லிஞ்ஞ் வாராமற் பெறுகற்பின்" (கலி-77.)

என்பது ஊடல்.

"விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனை *முயக்கங் காணவு
மாங்குவந் தொழியுமென் புலவி" (கலி-75.)

என்பது உணர்தல்.

"திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன்" (கலி-86.)

என்பது துனி. துனித்தலென்பது வெறுத்தல். அறுவகைப் பிரி வும் பிரிவெனவே அடங்கும். அவை மேற்காட்டப்பட்டன. (கஅஎ)

500. மெய்பெறு வகையே கைகோள் வகையே.

இது, புறத்திணைக் கைகோளுணர்த்துகின்றது.

'முயங்கக் காணவும்' என்பதும் பாடம்.

இதன் பொருள் : பொருள்கள் பெற்ற கைகோட்பகுதி அகத் திணைக் கைகோளே, என்றவாறு.

கைகோளென்பது ஒழுக்கங்கோடல். எனவே, அகத்திற்குப் புறனுயினும் புறத்திணைக்குக் கைகோள் அவ்வாறு வேறுவகைப்படக் கூறப்படாத பொதுவகையானே மறைந்த ஒழுக்கமும் வெளிப்பாடு மென இரண்டாகி அடங்கும் மறையென்றவாறு. அவை வெட்சியுள் ளும் ஒழிந்த திணையுள்ளுங் காட்டப்பட்டன. (கஅஅ).

501. பார்ப்பான் பாங்கன் பாழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
டளவியன் மரபி னறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரிய ரென்ப.

ரும உறுபபுணாத்துகின்றது.

இதன் பொருள் : எண்ணப்பட்ட அறுவருங் களவொழுக்கினுள் நிகழ்ந்த நிலைகூறினராகவல்லது ஒழிந்தோர் கூறினராகச் செய்யுள் செய்யப்படார், என்றவாறு.

பார்ப்பானென்பான் நன்றுந் தீதும் ஆராய்ந்து உறுதிகூறுவா னெனப்படும். பாங்கனென்பான் அவ்வாறன்றித் தலைமகன் வழியின் றழுகி வருமாகலின் அவனை அவன்பின் வைத்தான். தோழி அவன் போன்றும் பெண்பாலாகலின் அவளைப் பின்வைத்தான். செவிலிமாற்றஞ் சிறுவரவிற்றுதலின் அவளை அவளின்பின் வைத் தான். அவரிற் சிறந்தமையிற் சீர்த்தகு சிறப்பிற் கிழவனையுங் கிழத்தி யையும் அவர்பின் வைத்தான். அவ்விருவருள்ளுந் தலைமகனது கூற்றே பெருவரவினதாகலின் அவனை ஈற்றுக்கண் வைத்தானென் பது. உதாரணம் :

"சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை" (கலி-9.)

என்பது பார்ப்பான் கூற்று.

"காமங் காம மென்ப காம
மணங்கும் பிணியு மன்றே னீனைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்ரு விளம்புன
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே" (குறுந்-204.)

என்பது பாங்கன்கூற்று.

"ஏனல் காவ லிவளு மல்லன்"

என்பது தோழிகூற்று.

"பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தன னென்றனன்"
(குறுந்-84.)

என்பது செவிலிகூற்று.

"பாலு முண்ணுள் பழங்கண் கொண்டெ
னனிபசந் தனளே வினவுதி"

என்பதும் அது.

"கேளிர் வாழியோ கேளிர்" (குறுந்-280.)

என்பது கிழவன்கூற்று.

"விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்றி
னின்மார் படைதலி னினிதா கின்றே"

என்பது கிழத்திகூற்று. பிறவும் அன்ன. (கஅக)

502. பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
மூன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.

இதன் பொருள் : இவ்வெண்ணப்பட்ட எல்லாருஞ் சொல்லிய சொல்லாகச் செய்யுள் செய்யப்பெறுங் கற்பினுள், என்றவாறு.

முன்னுறக்கிளந்த கிளவியென்பது பொருணோக்கிற்று. இதையின் பின்னரது நாடகமாகலிற் பாணன்பின் கூத்தனைவைத்தும், பெண்பாலாகலான் விறல்பட ஆடும் விறலியைக் கூத்தன்பின் வைத்தும், அவ்வினத்துப் பரத்தையரை அதன்பின் வைத்தும், பொருட்குஞ் சிறந்தாராகலின் நற்பொருள் உணரும் அறிவரை அவர்பின் வைத்தும், எதிலராகிய கண்டோரை அவர்க்குப்பின் வைத்துங் கூறினனென்பது. இவ்வாற்றான் இவரோடு முன்னர்க் களவொழுக்கத்திற் கூறிய அறுவருங் கூறப்பெறுவரென்றவாறு. தொன்னெறிமரபின் என்றதனாற் பாகனுந் தோழனுங் கூறவும் அமையும். அவை புறப்பொருட்குச் சிறந்துவரும். அவற்றுக்குச் செய்யுள் :

"செவ்வழி நல்யா ழிசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுண் மெய்யிறுத்
தவர்திறஞ் செல்கவெனக் கண்டனென் யானே" (அகம்-14.)

என்பது பாணன்கூற்று.

"ஆடலிற் பயின்றனை யென்னை
தென்னுரை யுண்டலிற் றெளிதல் வேண்டும்"

என்பது கூத்தன் கூற்று.

"மரந்தலை மணந்த நனந்தலைக் கானத்து" (நற்றிணை-394.)

என்னும் நற்றிணைப்பாட்டுக் கண்டோர்கூற்று.

"விதையா கொன்ற முதையற் பூழி" (நற்றிணை-121.)

என்னும் நற்றிணைப்பாட்டுப் பாங்கன் கூற்று.

ஒழிந்தனவுங் கற்பியலுட் கூறியவாற்றான் அறிக. (கசo)

503. ஊரு மயலுஞ் சேரி யோரு
நோய்மருங் கறிநரு நந்தையுந் தன்னையுங்

கொண்டெடுத்து மொழியப் படுதல் எல்லது கூற்றவ ணின்மை யாப்புறத் தோன்றும்.

இதன் பொருள்: இவ்வெண்ணப்பட்ட அறுவகையோருஞ் சொல்லிய சொல்லாகச் செய்யுள்செய்யப்பெறார், என்றவாறு.

இவை களவிற்குங் கற்பிற்கும் பொது. கொண்டெடுத்துமொழி யப்படுதலல்லதென்பது இவர் கூற்றுகப் பிறர்சொல்லினல்லது இவர் தாங் கூறுரென்றவாறு. அவை

"ஊஉ ரலரெழச் சேரி சல்லென" (குறுந்-262.)

எனவும்,

"தெரிசூை நோக்கிச் * * * சாய்த்தார் தலை" (கலி-39.)

எனவும் வருவன போல்வன.

'யாப்புறத்தோன்றும்' என்றதனுன் அகத்திணைக்கண் இவ்வாறு கிலைபெற்றதென்பது. எனவே, புறத்திணைச்கண் கூறவும் பெறு மென்பது. இது நோக்கிப்போலுங் கூறுதாரையுங் கூறுவாராயிற் றென்பது. நோய்மருங்கறிநரை இடைவைத்தான் முன்னைய மூன்றும் பெண்பாலெனவும் ஒழிந்தன ஆண்பாலெனவும் அறிவித்தற்கென் பது. எனவே, நோய்மருங்கறிநர் பெண்பாலும் ஆண்பாலுமாயினு ரென்பது. (ககக)

504. கிழவன் றன்னெடுங் கிழத்தி தன்னெடு நற்றுாய் கூறன் முற்றத் தோன்றுது.

இஃது எய்தாத தெய்வித்தது. விலக்கியல் வகையாதல் விதித்த தெனவும் அமையும்.

இதன் பொருள்: கிழவனெடுங் கிழத்தியோடும் இடையிட்டு நற் றுாய் கூறுதல் நிரம்பத்தோன்றுது, என்றவாறு.

நற்றாய் என்று ஒருமை கூறியவதனால் தலைமகள் தாயையேகொள்ளப்படும். இதனானே தந்தை தன்னை யென்பன போல்வனவற்றும் இம்மெதாச்சும். முற்றவென்றதனால் தானே தலைவனுதலால் தலைவன்தமர் யாவருங்கூறார், முற்கூறப்பட்டார் அல்லரென்பதுகொள்க. முற்றுதென்னுது தோன்றுதென்றதனாற் புறத்திணைக்கண் இவை வரைவின்றி வழக்கினோடு பொருந்துமாற்றாற் கொள்ளப்படுமென்பது. கிழவன்றன்னெடும் கிழத்திதன்னெடும் கூறாரெனவே அல்லாழிச் சொல்லப்படும் நற்றாயென்பதாம். அஃது,

'எம்வெங் காம மியைவ தாயின்
* * *
மாககட் டாகுக தில்ல
* * *
மென்றோ ளஞ்ஞை சென்ற வாறே'' (அகம்-15.)

என வரும். (ககூ)

505. ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

இதன் பொருள்: தலைமகனோடும் தலைமகளோடும் இடைச்சுரத்துக்கண்டோர் மொழிதல் அறியப்பட்டது, என்றவாறு.*

ஒண்டொடிமாதர் கிழவனெனவே அவரிருவர் கூட்டத்துக்கண்ணுமன்றி அவ்விருவரோடுந் தனித்துழிக் கூற்றில்லையென்றவாறு.

---

* ''ஒண்டொடி மாதராவார் நற்றாயும் தோழியும் செவிலியும். இவரொடும் தலைவனெடும் கண்டோர் கூறுதல் காணப்பட்ட தென்றவாறும். எனவே, எனையோர் கேட்பக் கூற்றில்லை யென்றவாறு'' என்பது இளம்பூரணர் உரை. ''ஒள்ளிய தொடியினையுடைய செவிலியோடும் தலைவனெடும் தலைவியோடும் இடைச்சுரத்துக் கண்டோர் மொழிதன் முதனூலிற் கண்டதென்றவாறு'' என்பது நச்சினார்க்கினியர் உரை.

கண்டதென்ற மிகையான் இடைச்சுரத்துக்கண்டோர் செவிலிக்குரைப் பனவுங் கொள்க. அவை,

ாயண் மெல்லியண் மடந்தை
யரிய சேய பெருங்கான் யாறே''

எனவும்,

''அணித்தாய்த் தோன்றுவ தெம்மூர்
மணித்தார் மார்ப *சேர்ந்தனே செண்மே''

எனவும் வரும்.

இதனுள் ஒண்டொடி மாதர்கிழவன் எனச் செவ்வனந்தோன்றக் கூறியது தலைமகனேயாதலின்,

''வில்லோன் காலன கழலே தொடியோண்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே'' (குறுந்-7.)

என்பது செவ்விச்குக் கண்டோர் கூறியது. (கக)

506. இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கு முரியன்.

இதுவும் கூற்றுவிகற்பமே கூறுகின்றது.

இதன் பொருள் : இடைச்சுரத்து உடன்போகிய கிழத்தியோடும் இவன் நீதி நூல்வகையாற் கிளத்தற்கு முரியன், என்றவாறு.

நீதிநூல்வகையாற் கிளத்தலென்பது கிழத்திதன் தமர் இடைச் சுரத்துக் கண்ணுறின் அவர்கேட்பத் தலைவிக்குச் சொல்லுவானுய் வழக்கியல் கூறுதலு முரியனென்பது. வழக்கியலாணை யென்றதனுன் நீதிநூல் விதிபிறழக் கூறின் அஃது இராக்கதம்போன்று காட்டுமென் பது. உம்மையாற் கிழத்தியோடு வழக்கியலாணையானன்றி மருட்டிக் கூறவும் பெறுமென்பது.

---

* 'சேர்ந்தன' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

"அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழகின்
னலமென் பிணைத்தோ *ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை †யணங்குகொளத் திமிரி
கிழல்காண் டோறு நெடிய வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றேரே
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே." (நற்றிணை-9)

என்பதனுள் வருந்தாதேகுமதியெனவே *வழிபடு தெய்வங் கட்கண் டால் விடுவார் இல்லாதது போல கின்னை விடுதல் எனக்கு அறனன் றெனக் கூறி மெல்லெனச் செல்கவென மருட்டிக் கூறியவாறு காண்க. (கசுச)

50. ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங்கு முரிய முன்னத்தி னெடுத்தே.

இதுவுங் கண்டோர் கூற்று.

இதன் பொருள்: மேலைச்சூத்திரத்துக் கூறிய தலைமகனையுந் தலைமகளையும் ஒழித்து ஒழிந்தோரெனப்படுவார் கண்டோரெனப் படுப. அவர்கூற்றுங் கிழவன் கிழத்தியொடு மொழிந்தாங்கு வழக்கியலானேயிற் கிளத்தற்கும் உரியராகி முன்னத்தினெடுத்துக் கூறுப, என்றவாறு.

முன்னத்தினெடுத்தென்பது அதிகாரத்தான் அறநூற்குத்தக ஒத்திலெனெடுத்துரைப்பவென்றவாறு அவை,

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
கினையுங்கா னும்மக ணுமக்குமாங் கனையளே" (கலி-9.)

என்றற்போல்வன.

* 'எய்தினமாயின்' என்பதும் பாடம்.
† 'அணங்குபடத் திமிரி' என்பதும் பாடம்.

இவ்வாறு வழக்கியலானேயாற் கிளவாது வாளாதே அவரைக் கண்டனமெனவும் அவரின்னுழிப் புகுவரெனவுஞ் சொல்லுவன 'கண்டோர் மொழிதல் கண்டதென்ப' (தொல்-செய்-193) என் புழிக் கூறினும். (ககூ)

508. மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியு நினையுங் காலைக் கேட்குந ரவரே.

இது, கேட்போரென்னும் உறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : முன்னர்க் கூற்றிற்குரியரெனப்பட்ட பன்னிருவருட் கேட்டற்குரியார் தலைமகனுந் தலைமகளும் ஒழிந்து ஒழிந்த பதின்மரும், என்றவாறு.

அவர் கேட்பனவும் அவ்வருவர் கிளவியுமேயெனவுந் தத்தங் கிளவி கேளாரெனவுங் கூறியவாறு. மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியுமென்பதனை மேற்போயின கூற்றிற்குங் கூட்டியுரைக்க. உரைக்கவே கூறுவனவுங் கேட்பனவுமெல்லாம் அவ்விருவர் கிளவியுமேயெனவுந் தத்தங்கிளவி கூறவுங் கேட்கவும் பெறுரெனவுங் கூறியவாறாயிற்று. இங்ஙனம் விலக்குப்பட்டனவற்றுள் வேறுபடவருவனவும் மேற்கூறுகின்றும். மற்றுக் கூற்றுக்கு உரியரெனப்படுவோர் அவ்வயின் தலைவியுந் தலைவனுங் கூறக் கேளாரோவெனின் அவை தங்கிளவியாகலின் தாங்கேட்டல் விதந்தோதவேண்டுவதன்றென்பது. 'நினையுங்காலை' யென்றதனால் தலைமகள் சொல்லக்கேட்போருந் தலைமகன் சொல்லக் கேட்போருந் தலைவனுந் தலைவியுந் தம்முட் கேட்டனவற்றுக்குரியனவும் ஆராய்ந்து கொள்ளப்படும் மேற்கூறிய வகையானென்பது. எனவே, தலைமகன் கூறப் பரத்தைகேட்டலுந் தலைமகள் கூறப் பரத்தைகேட்டலும் முதலாயின புலனெறி வழக்கிற்கெய்தாதன விலக்கப்பட்டன. ஒழிந்தனவற்றுட் சில வருமாறு :

"விளங்குதொடி மூன்கை வளைந்துபுறஞ் சுற்ற
இன்மார் படைதலி னினிதா கின்றே"

என்னுந் தலைமகள் கூற்றுத் தலைமகன்கேட்டது.

"சின்கேள் புதுவது பன்னுளும் பாராட்ட
யானு மிதுவொன் றுடைத்தென வெண்ணி"

எனவும்,

"மாலையு முள்ளா ராயிற் றலைவர்
யாங்கா குவங்கொல் பாண" (அகம்-14.)

எனவும்,

"முயங்கின் றன்னைபென் மெய்யென் றசைஇ" (அகம்- 17.)

எனவும்,

"*ஒண்டா ரகலமு முண்ணுமோ பலியே" (குறுந்-362.)

எனவும்,

"எல்லீரு மென்செய்த் தென்னை நகுதிரோ" (கலி-142.)

எனவும் இன்னோரன்னவெல்லாந் தோழியும் பாணனுஞ் செவி லியுங் கண்டோரும் அறிவருஞ் சிறப்பத் தலைமகள் கூற்றுவந்தன. பிறவும் அன்ன.

"இடிக்குங் கேளிர் வந்துறை டாக" (குறுந்-58.)

எனவும்,

"எலுவ சிறுஅ ரேமமுறு நண்ப" (குறுந்-129.)

எனவும்,

"வளர்க பாக வொருவிண் கிழிய"

எனவும்,

"பேரமர் மழைக்கணின் றேழி யறியே
லாரஞ் செவ்வன் கலையா யோவென" (கலி-60.)

எனவுஞ்,

"சான்றவிர் வாழியோ சான்றவி ரென்னும்" (கலி-139.)

---

* 'தண்டாரகலமும்' என்பதும் பாடம்.

எனவும் இவை பார்ப்பானும் பாங்கனுந் தோழியுங் கண்டோருங் கேட்போராகத் தலைமகன் கூற்று நிகழ்ந்தன. பிறவும் அன்ன. இனி 'ஒன்றித்தோன்றுந் தோழி' (தொல்-அகத்-39) என்றமையின் தோழிகூற்றுந் தலைமகள் கூற்றேயாமென்பது. (ககசு)

509. பார்ப்பா ரறிவ ரென்றிவர் கிளவி யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.

இதுவுமது.

இதன் பொருள்: இது மேற்கூறிய பார்ப்பாரும் அறிவருங் கூறியகூற்றுக் கேட்போரை இன்னரென்று வரையப்படாது, என்ற வாறு.

'யார்க்கும்' என்றது அகத்திணையோர்க்கும் புறத்திணையோர்க்கு மென்றவாறு. யார்க்கும் வரைவா ரென்றதனை எச்சப்படுத்துச் சிலர்க்கு வரையப்படுமென்பது கொள்க. என்னை? பார்ப்பார்கூற்றுத் தலைமக னுஞ் செவிலியும் நற்றாயுங் கேட்பினல்லது பிறர்க்கேலா. அறிவர் கூற்றுந் தலைமகளுந் தோழியுஞ் செவிலியும் நற்றாயுங் கேட்டற்குரியர்.

புறத்திணைக்கண்ணும் பொதுவியற்கரந்தையோர்க்கும் பார்ப்பார் கிளவி இயலாவெனவும் அறிவர்கிளவி ஏற்குமெனவும் பிறவு மின்னோ ரன்ன கொள்க. யாப்பொடுபுணர்ந்தென்பது அகப்பொருளும் புறப் பொருளுமாக யாக்கப்படுஞ் செய்யுளெல்லாவற்றோடும் பொருந்து மென்றவாறு. இவர் கிளவி வரையப்படாதெனவே அவர்வாயிலாகிய வழித் தலைமகள் வாயின்மறுத்தலிலலென்பதூஉம் புறத்திணைத்தலை வர்க்கும் அவ்வாறே வழிநிற்றல் வேண்டுமென்பதூஉங் கூறியவாறு மிற்று. என்னை? அறிவரெனப்படுவார் மூன்றுகாலமுந் தோன்ற நன்குணர்ந்தோரும் புலனன்குணர்ந்த புலமையோரு மாகலானும், இனிப் பார்ப்பாரும் அவ்வாறே சிறப்புடையராகலானும், அவர்வழி நிற்றல் அவர்க்குக் கடனுகலானுமென்பது. (ககஎ)

510. *ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங் கருமந் நிகழ்ச்சி யிடமென மொழிப.

இதனுள் இடமெனப்பட்ட உறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : பலவும் ஒருவழிப்பட்டு ஓரிலக்கணத்தான் முடியுங் கருமநிகழ்ச்சியை இடமென்று கூறுப, என்றவாறு.

இடமெனினுங் களமெனினும் ஒக்கும். ஒரு செய்யுட்கேட்டால் இஃது இன்னவிடத்து நிகழ்ந்ததென்று அறிதற்கேதுவாகியதோர் உறுப்பினை இடமென்றுனென்பது. ஒரு நெறிப்படுதலென்பது ஒரு வழிப் பலவுந்தொகுத்தல். ஓரியலென்பது அவற்றுக்கெல்லாம் இலக்கணமொன்றுதல். அஃதாவது, காட்சியும் ஐயமுந் துணிவும் புணர்ச்சியும் பிரிவச்சமும் வன்புறையுமென்று இன்னோரன்ன எல்லாம் ஒரு நெறிப்பட்டு இயற்கைப்புணர்ச்சியென்னும் ஓரிலக்கணத்தான் முடியுமென்பது. கருமநிகழ்ச்சியென்பது காமப்புணர்ச்சியென்னுஞ் செயப்படுபொருணிகழ்ச்சி. அஃது இடமெனப்பட்டது. இது வினைசெய்யிடம். இலமாயின முன்னர்த் நிலையெனப்பட்டன. காலம் முன்னர்ச் சொல்லுதும்.

"எலுவ சிறுஅ ரேமமுறு நண்ப". (குறுந்-129.)

என்னும் பாட்டும்,

"சேளிர் வாழியோ சேளிர் நாளுமென்
னெஞ்சுபிணிக் கொண்ட வஞ்சில் லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாக
மொருநாள் புணரப் புணரி
னைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே"

(குறுந்-280.)

என்னும் பாட்டும் பாங்கற்கூட்டமே இடனாக ஒருவழிப்பட்டன. என்னை ? இன்வேறுபாடு எற்றினையிற்றென்று வினவிய பாங்கற்கு இதனினையிற்றென்று உரைத்ததாகும் அதற்குப் பாங்கன் கழறி

---

*இச் சூத்திரம் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைப்பிரதிகளில் இல்லை.

னானை எதிர்மறுத்ததூஉமென இரண்டும் பாங்கற்கூட்டத்துப் பட்டு ஓரியலான் முடிந்தன. அவை மேற்கூறியவகையானே கண்டு கொள்க. (கக்அ)

511. *பரத்தை வாயி லெனவிரு கூற்றுங் கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப்பய னிலவே.

இது பயனில் கூற்றுணர்த்துதல் துதலிற்று.

இதன் பொருள் : பரத்தையும் வாயில்களுமென்னும் இரண்டு வேறுபாட்டின்கண்ணும் எழுந்த கிளவி கிழத்தி கேட்பாளாகக் கருதிச் சொல்லாக்காற் பயமில, என்றவாறு.

கிழத்தியைச் சுட்டுதலெனவே பாங்காயினார் கேட்பச் சொல்லினும் அமையுமென்பதாயிற்று.

"செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதிவ
ணுலமந்து வருகஞ் சென்மோ தோழி" (அகம்-106.)

என்றக்கால் தலைவிக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லிக்கூறல் வேண்டுமென்பது. வாயில்களுந் தலைமகளை ஊடல்காப்ப அல்லது சொல்லாராசலான் தலைமகள் கேட்பாளாகச் சொல்லவேண்டுமென்பது. சுட்டாக்கிளப்புப் பயனிலவென்றதனான் வாயில்கள் கூறுவனவுங் கிழத்திக்குப் பாங்காயின தோழி கேட்பச் சொல்லினும் அமையும். அவற்றுக்குச்செய்யுள் :

"ஒருயிர் மாதராகலி
னிவளுந் தேரா துடன்றன மன்னே"

இது கிழத்திகேட்ப வாயில்கள் கூறியது. தோழிகேட்பச் சொல்லியதூஉமாம். (கக்க)

---

* 'பரத்தை வாயிலெனவிரு வீற்றும்' என்பது இளம்பூரணர் உரைப்பிரதியிலும் நச்சினார்க்கினியர் உரைப்பிரதியிலும் கண்டபாடம்.

512 வாயி லுசாவே தம்முளு முரிய.

இதன் பொருள் : மேனின்ற அதிகாரத்தால் தலைமகளைச் சுட்டி, ஒருவரொருவர்க்குரைப்பார்போல வாயில்கள் தம்முட்கூறவும் அமையும், அவையுந் தலைமகள் கேட்பன, என்றவாறு.

அதற்குச் செய்யுள் :

"தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணுணிக் காப்பா டும்மே" (குறுந்-9.)

என்பது பாணர்க்குரைத்தது. உம்மை எதிர்மறை. கேட்குநள் அவளென்றவாறன்றித் தம்முள் தாங் கேட்டல் சிறுபான்மையெனக்கொள்க. (200)

513. ஞாயிறு திங்க ளறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
யவைபல பிறவு நுவலிய நெறியாற்
சொல்லுந பேலவுங் கேட்குந போலவுஞ்
சொல்லியாங் கமையு மென்மனார் புலவர்.

இது, சேளாதன சில பொருள், கேட்பனவாகப் பொருளியலுள் வழுவமைக்கப்பட்டனவற்றை இலக்கணவகையாற் கூறினவுங் கேட்குநவும் ஆகற்கண்ணும் ஆராய்கின்றனென்பது.

இதன் பொருள் : ஞாயிறுந் திங்களும் அறிவும் நாணுங் கடலுங் கானலும் விலங்கும் மரனும் பொழுதும் புள்ளும் நெஞ்சும் இன்னோரன்னபிறவும் மேற் பொருளியலுள் 'செய்யா மரபிற் றொழிற்படுத்தடக்கியும்' (தொல்-பொரு-2) என்று பொதுவகையாற் கூறியவாற்றான் அவைதாஞ் சொல்லுவனபோலவுங் கேட்பனபோலவுஞ் சொல்லமையும், என்றவாறு.

ஈண்டுக் கூற்றும் உடன்கூறினான் மேலிவற்றை வரையறுத்துக் கூற்றிற்கு உரியவென்றிலனாகலின். புலம்புறுபொழுதென்பது மாலையும் யாமமும் எற்பாடுங் காருங் கூதிரும் பனியும் இளவேனிலும்

போல்வன. பிறவுமென்றதனால் புல் புதல் முதலியன கொள்க. அவற்றுட் சிலவருமாறு :

"கதிர்பகா ஞாயிறே கல்சேர்ந் தாயி
னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
துயிர்திரியா மாட்டிய தீ" (கலி-142.)

என்றாற்போல்வன கண்டுகொள்க. (20க)

514. இறப்பே நிகழ்வே யெதிர தெனலுந்
திறத்தியன் மருங்கிற் றெரிந்தன ருள்ளப்
பொருணிகழ் வுரைப்பது கால மாகும்.

இது, காலமுணர்த்துகின்றது.

இதன் பொருள் : *மூன்றுகாலத்தினும் நிகழ்கின்ற நிகழ்ச்சி †அச்செய்யுளுட்டோன்றச் செய்யிற் காலமென்னும் உறுப்பாம், என்றவாறு.

பொருணிகழ்ச்சியைக் காலமென்றதென்னை ? காலமென வேறு பொருள் இல்லதுபோலவெனின், அஃது ஈண்டாராய்ச்சியின்று நியாயநூலாராயீச்சி யென்க.

"வில்லோன் காலன சழலே * * * " (குறுந்-7.)

என்னும் பாட்டினுள் வில்லோனுந் தொடியோளும் பொருளெனப்படும் ; "வேய்பயி லழுவ முன்னி யோரே" என்பது அப்பொருணிகழ்ச்சியான் இறந்தகாலமெனப்படும். அப்பாட்டிற்குச் சிறந்தார் அவராகலின் அவரே பொருளாயினரென்பது.

* 'மூன்றுகாலத்தினையும்' என்பதும் பாடம்.
† 'அச்செய்யுட்டோன்ற' என்பதும் பாடம்.

"மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே"
(குறுந்-71.)

என்பது நிகழ்காலம்;

"பகலும் பெறுவையிவ டடமென் ரூரே" (கலி-49.)

என்பதெதிர்காலம்.

புறத்திற்கும் இவ்வாறே இன்றியமையாதென்பது. பெரும் பொழுது சிறுபொழுதென்பன ஈண்டுத் திணையெனப்பட்டடங்கின. என்னை? முதலுங் கருவும் உரிப்பொருளுங் கூட்டித் திணையாகலின்.

515 இதுநனி பயக்கு மிதனை னென்னுந் தொகைநிலைக் கிளவி பயனெனப் படுமே.

இது முறையானே பயனெனனனும உறபபுணா

இதன் பொருள்: இது மிகவும் பயக்கும் இதனனெனனத் தொகுத்துச் சொல்லப்படுபொருள் பயனென்னும் உறுப்பாம், என்றவாறு.

"* மாரூக் காதலர் மலைமறந் தனரே * * * மாறே."

என்னும் பாட்டுத் தோழி தூதுவிடுவாளாதற் பயன்பட வந்தது. இவ்வாறெல்லாப் பாட்டும் பயனுறுப்பாகவன்றி வாராவென்க. இவை புறத்திற்கும் ஒக்கும். (உ0ரு)

516. உய்த்துணர் வின்றித் தலைவரும் பொருளான் மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்.

இது, மெய்ப்பாட்டுறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள்: உய்த்துணர்ச்சியின்றி அவ்வடத்துவந்த சொல்லப்படும்பொருள் தானே வெளிப்பட்டாங்குக் கண்ணீரரும்பன் மெய்ம்மயிர் சிலிர்த்தன் முதலாகிய சத்துவம் படுமாற்றான் வெளிப்படச் செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம், என்றவாறு

* இச்செய்யுள் 371 ஆம் பக்கத்திற் காண்க.

கவிப்பொருளுணர்ந்தால் அதனுனே சொல்லப்படு பொருள் உய்த்து வேறுகண்டாங்கு அறிதலே மெய்ப்பாடென்றுன், அது தேவ ருலகங்கூறினும் அதனைக் கண்டாங்கறியச் செய்தல் செய்யுளுறுப்பாம் என்றவாறு. அவை,

"மையற விளங்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெரு மழலையின் விளங்குபூ ணினைத்தர"

(கலி-81.)

என்றுற்போல வருவன. தலைவரும் பொருளானெனவே நோக் குறுப்பாதல், உணர்ந்தபொருள் பிழம்பினைக் காட்டுவது; மெய்ப்பா டென்பது இதன் கருத்து. இக்கருத்திஞற் 'கவி கண்காட்டும்' எனவுஞ் சொல்லுப. (உ0ச)

517. எண்வகை யிபனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின தது**வே.**

இஃது, எய்திய திசந்துபடாமைக் காத்தது.

இதன் பொருள் : இதுவும் மேற் கூறப்பட்ட மெய்ப்பாடே, பிறி தில்லக்கணத்தனவென்று கொள்ளற்க, என்றவாறு.

எனவே,

நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகை' (தொல்-மெய்ப்-3.)

என அவை நந்நான்காமெனவும் மெய்ப்பாட்டியலுட் கூறியவா றெல்லாம் பிறவாற்றுன் வேறுபடுவனவுங் கொள்ளப்படுமென்ற வாறு. (உ0இ)

518. செல்லொடுங் குறிப்பொடு *முடிவுகொளியற்
புல்லிய நிலவி யெச்ச மாகும். [கை

இஃது, எச்சங் கூறுகின்றது.

---

* 'முடிவுகொளியல்" என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

இதன் பொருள் : கூற்றினானுங் குறிப்பினானும் முடிக்கப்படும் இலக்கணத்தோடு பொருந்திய கிளவி எச்சமென்னும் உறுப்பாம், என்றவாறு.

முடிவுகொளியற்கை யெனவே செய்யுளின்கண்ண தன்றிப் பின் கொணர்ந்து முடிக்கப்படுமென்பது பெற்றாம். உதாரணம் :

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
* * * காந்தட்டே" (குறுந்-1.)

எனச் செய்யுண்முடிந்தவழியும், இவற்றான் யாங் குறையுடையம் அல்லமென்று தலைமகற்குச்சொன்னாளேல் அது கூற்றெச்சமாம். என்னை? அவ்வாறு கூறவுஞ் சிதைந்ததின்மையின். தலைமகட்குச் சொன்னாளேல் அது குறிப்பெச்சம். என்னை? அது காண்பாயாகிற் காணெனத் தலைமகளை இடத்துய்த்து நீக்கிய குறிப்பினளாகி அது தான் கூறாளாகலினென்பது. (உ0சு)

519. இவ்விடத் திம்மொழி*யிவரிவர்க்குரியவென்றவ்விடத் தவரவர்க் குரைப்பதை முன்னம்.

இது, முன்னமென்று கூறபபட்ட உறுப்புக் கூறுகின்றது.

இதன் பொருள் : யாதோரிடத்தானும் யாதானு மொருமொழி தோன்றியக்கால் இம்மொழி சொல்லுதற்குரியாருங் கேட்டற்குரியாரும் இன்னோரென்று அறியுமாற்றான் அங்ஙனம் அறிதற்கு ஓரிடம் நாட்டி அவ்விடத்துக் கூறுவார்க்குங் கேட்பார்க்குமேற்ற செய்யுட்களாகச் சொல்லுவது முன்னம், என்றவாறு.

இவரிவர்க்குரியவென்று அறியான் செய்யுட்கேட்டானெனவும், அவ்விடத்தவரவர்க் குரைக்கவென்றான் ஆசிரியனெனவுங் கொள்க. என்றென்பது எனவென்பதுபோலச் சொல்லினெச்சமாதலும் வினையெச்சமாதலும் உடைமையின் இஃது 'எனவெ னெச்சம் வினையொடு

* 'இவரிவர்க்குரியரென்று' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

முடிமே' (தொல்-சொல்-எச்-42) என்பதோர் வினையெஞ்சி நிற்கும். அவ்வினைதான் எச்சமாகலான் உரைப்பதையென்னும் வினைகொண்டு முடியுமென்பது.

"யாரிவ னெங்கூந்தற் கொள்வா னிதுவுமோ
ரூராண்மைக் கொத்த படிறுடைத்து" (கலி-89.)

என்றக்கால் இம்மாற்றஞ் சொல்லுகின்றாள் தலைவியெனவுஞ் சொல்லப்பட்டான் தலைமகனெனவும் முன்னத்தான் அறியப்படுத்தலின் இது முன்னவுறுப்பாயிற்று. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். இவையெல்லாம், அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகக் கூறுகின்றா னென்பது. (உ0எ)

520. இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவு
மொழுக்கமு மென்றிவை யிழுக்குநெறி யின்றி
யிதுவா கித்திணைக் குரிப்பொரு ளெனாது
பொதுவா நிற்றல் பொருள்வகை யென்ப.

இது, பொருள்வகை கூறுகின்றது.

இதன் பொருள்: இன்பமுந் துன்பமும் புணர்தலும் பிரிதலும் ஒழுக்கமுமெனப்பட்ட இவை இழுக்காதவாற்றான் இத்திணைக்கு இது பொருளென்று ஆசிரியனேதிய உரிப்பொருளன்றி அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலவனற் செய்யப்படுவது பொருட்கூறெனப்படும், என்றவாறு.

வகையென்றதனாற் புலவன்றான் விரித்தல் வகைத்துப் பொருளென்றுகொள்க. அஃதன்றிச் செய்யுள் செய்தலாகாதென்பது இதன் கருத்து. அவை,

"பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ"
(அகம்-9.)

என்றாற்போலச் செய்யுள் செய்தவன் தானே வகுப்பன வெல்லாங் கொள்க. இது பாலைப்பாட்டினுள் வந்ததாயினும் முல்லை முதலாய வற்றுக்கும் பொதுவாமென்பது. பொதுமையென்பது எல்லாவுரிப் பொருட்கும் ஏற்கப் பலவேறு வகையாற்செய்தல். (உoஅ)

521. அவ்வ மாக்களும் விலங்கு மன்றிப்
பிறவவண் வரினுந் திறவகை டித்
தத்த மியலின் மரபொடு முடியி
னத்திறந் தானே துறையெனப் படுமே.

இது, துறையென்னு முறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : ஐவகை நிலத்திற்கும் உரியரெனப்படும் பல் வேறு வகைப்பட்ட மக்களும் மாவும் புள்ளும் ஒதிவந்தவாறன்றிப் படைத்துச் செயினும் அவ்வத்திணைக்கேற்ற இலக்கணமும் வரலாற்று முறைமையும் பிறழாமைச் செய்யின் அது மார்க்கமெனப்படும், என்ற வாறு.

"ஊர்க்கா னிலந்த பொதும்பரு ணீர்க்கால்" (கலி-56.)

என்னுங் கலியினுள்,

"சொழுஞ்சூழ் ஞாழன் முதிரிணர் கொண்டு
சமுமமுடித் தழுத கண்கூடு கூழை"

என நெய்தற்றலைமகள்போலக் கூறி அவளை மருதநிலத்துக் கண்டான் போல "ஊர்க்கா னிலந்த பொதும்பருள்" எனவுஞ் சொல்லிப் பின் னர்க் குறிஞ்சிப் பொருளாகிய புணர்தலுரிப்பொருளான் முடித்தான்; அவ்வாறுமயங்கச்செய்யினுங் குறிஞ்சித் துறைப்பாற்படச் செய்தமை யின் அத்துறையுறுப்பான் வந்ததென்பது. இதுவும் மேலைப் பொருள் வகைபோலப் புலவராற் செய்துகொள்ளப்படுவதாகலான் அதற்குப் பின் வைத்தானென்பது. மற்று 'எங்கில மருங்கிற் பூவும் புள்ளும்' (தொல்-அகத்-19) என்பதனுன் இது முடியாதோவெனின், அது கருப்பொருண் மயங்குதற்குக் கூறினுன், இது மக்களேயன்றித்

தலைவனுந் தலைவியும் மயங்குமாறும் நான்குதிணையும் ஒன்றொன்ற னோடு மயங்குமாறுங் கூறி அது புலவராற் செய்துகொள்ளுவதோர் உறுப்பெனவும் ஒதிவந்த இலக்கணத்ததன்றாயினும் அது பெறுமென வுங் கூறினனென்பது. (20கூ)

522 அகன்றுபொருள்கிடப்பினு மணுகிய நிலையினு மியன்றுபொருண்முடியத் தந்தனருணர்த்தன் மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.

இது, மாட்டென்னும் உறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : பொருள் கொள்ளுங்கால் அகன்று பொருள் கிடப்பச் செய்யினும் அணுகிக் கிடப்பச் செய்யினும் இருவகையானுஞ் சென்று பொருள்முடியுமாற்றாற் கொணர்ந்துரைப்பச் செய்தலே மாட் டென்னும் உறுப்பென்று சொல்லுவார் செய்யுள் வழக்கின், என்ற வாறு.

இதுவும் நால்வகைப் பொருள்கோளன்றி வேறு புலவரது செய்கை. அது,

> " முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
> வாரிருங் கூந்தல் வயங்கிழையொழிய
> வாரேன் *வாழிய நெஞ்சே " (பத்து-பட்டின-218-:20.)

என் றின்றது, பின்னர்,

> " வேலினும் வெய்ய கானமவன்
> கோலினுந் தண்ணிய தடமென் றோளே "
>
> (பத்து-பட்டின-300-301.)

எனச் செய்ததாகச் சென்றுபொருள் கோடலின் அஃது அகன்று பொருள் கிடப்பினும் இயன்று பொருண்முடிய உரைப்பதாம்.

---

* 'வாழியென் னெஞ்சே' என்பதும் பாடம்.

" திறந்திடுமின் நீயவை பிற்காண்டு மாத
நிறந்து படிற்பெரிதா மேதம் " (முத்தொள்ளாயிரம்-42.)

என்பது அணுகிய நீலையெனப்படும். மாட்டுதலென்பது கொளுத்துதல். (உகo)

523.மாட்டு மெச்சமு *நாட்ட லின்றி
யுடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே.

இது, மேற்கூறியவற்றுள் ஒரு சாரனவற்றுக்குப் புறனடை.

இதன் பொருள் : மேற்கூறிய எச்சமும் மாட்டும் இன்றியும் அச் செய்யுளுட் கிடந்தவாறே அமையச்செய்யுவும் பெறுஞ் செய்யுள், என்றவாறு.

எச்சமும் மாட்டும் என்னுது மாட்டு முற்கூறிய தென்னையெனின் எச்சம் முதலாகிய ஐந்து உறுப்பும் இவ்விதி பெறுமென்று கோடற்கு எதிர்சென்று தழீஇயினனென்பது. †உதாரணம் :

" வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி * * *
என்னு யினள்கொ லென்னு தோரே " (குறுந்-110.)

என்பது எச்சமின்றிவந்தது.

" தாமரை புரையுங் காமர் சேவடி "(குறுந்-கடவுள்வாழ்த்து.)

என்பது முன்னமின்றி வந்தது.

" மருந்தெனின் மருந்தே " (குறுந்-71.)

என்பது பொருளின்றி வந்தது.

" ஈயற்புற்றத் தீர்ம்புறத் திறுத்த " (அகம்-8.)

என்பது துறைவகையின்றி வந்தது.

" யானே யீண்டை யேனே " (குறுந்-54.)

---

* 'நாட்டமின்றி' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

† போராசிரியர் மேற்சூத்திர வுரையில் மாட்டுக்கு உதாரணமாகக் காட்டிய பட்டினப்பாலை அடிகளை நச்சினார்க்கினியர் இப்புறனடைச் சூத்திரத்துக்கு உதாரணமாகக் கொண்டுள்ளார்.

என்பது மாட்டின்றி வந்தது. இடைநின்ற மூன்றனை இலேசினாற் கொண்டு இரண்டினை எடுத்தோதினான் இவை இரண்டும் அவற்றது துணையின்றி அமையாச் சிறப்பினவல்ல என்றற்கென்பது. (உகக)

524. வண்ணந் தானே நாலைந் தென்ப.

ஏ, முறையானே ஈற்றுநின்ற வண்ணம் இத்துணைப்பகுதித் தென்கின்றது.

இதன் பொருள் : வண்ணம் இருபது வகைப்படும், என்றவாறு.

வண்ணமென்பது சந்தவேறுபாடு. நூல் பலவாகி வேறுபடினும் அவை ஈண்டடங்குமென்பதூஉம் அவ்வேறுபாட்டானெல்லாஞ் சந்த வேற்றுமை செய்யவென்பதூஉங் கூறியவாறு. அது நுண்ணுணர் வுடையார்க்குப் புலனாமென்பது. (உகஉ)

525. அவைதாம்,

பாஅ வண்ணந் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ண மெல்லிசை வண்ண
மியைபு வண்ண மளபெடை வண்ண
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணஞ்
சித்திர வண்ண நலிபு வண்ண
மகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ண
மொழுகு வண்ண மொரூஉ வண்ண
மெண்ணு வண்ண மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றாங்கன மறிப வறிந்திசி னோரே.

இது, மேற்கூறப்பட்ட வண்ணங்களது பெயர்வேறுபாடு கூறு கின்றது.

இதன் பொருள்: மேற்சொல்லிய நாலைந்து வண்ணமும் இவ்விரு பது பெயர் வேறுபாட்டினவென்று சொல்லுப அவற்றை உணர்ந்த ரியர்.

இது முறையாயினவாறென்னையெனின் இது வரலாற்று முறை மையென்றற்கு ஆங்கனம் அறிப அறிந்திலேரென்ருனென்பது. அவையாமாறு சொல்லுகின்ருன். (உகக)

526. அவற்றுட், பாஅ வண்ணஞ் சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்.

இது, கிறுத்த முறையானே பாஅவண்ண முணர்த்துதல் நுத

இதன் பொருள் : பாஅவண்ணமென்பது நூற்பா வண்ணம், என்றவாறு.

எற்றுக்கு? நூற்பாற்பயிலுமென்றமையின். இது சொற்சீரடித் தாகி வருமென்பது. இதனுட் பயிலுமெனவே அந்நூற்பாவினுளல் லது அகவலுள் இத்துணைப் பயிலாதென்பது. இது 'வடவேங்கடந் தென்குமரி' (தொல்-பாயிரம்) எனவும், 'எழுத்தெனப்படுப, அகரமுத னகர விறுவாய் மூப்பஃ தென்ப' (தொல்-எழுத்து-நூன்-1) எனவும், 'அவற்றுள், அஇஉ,எஒ என்னு மப்பா லைந்தும்' (தொல்-எழுத்-நூன்-3) எனவும் பயின்றுவரும்.

"பெரியகட்பெறினே" (புறம்-235) என்பது சொற்சீராகி அகவ லுட் பயிலாதுவந்தது. சொற்சீரடியென்றது சொற்சீரென்ருன் அடியோடு தொடராதுஞ் சொற்சீர் வருமாதலினென்பது. இவை 'நன்றுபெரிதாகும்' (தொல்-சொல்-உரிச்-45) என்ருற்போல வேருகி கின்றன. இவை கலியுள்ளும் பரிபாடலுள்ளுஞ் சொற்சீர்வருமென மேற்கூறினுமைகலின் அவற்றுள்ளுஞ் சந்தவேற்றுமைப்பட்டன பாஅ வண்ணமேயாமென்பது. (உகச)

527. தாஅ வண்ண
மிடையிட்டு வந்த வெதுகைத் தாகும்.

இதன் பொருள்: இடையீடுபடத் தொடுப்பது தாஅவண்ணம், என்றவாறு.

அவை பொழிப்பும் ஒருஉ வு மாகலின் எதுகையென வரைந்து கூறினனென்பது. அடியிடையிட்டு வருவது தொடைவேற்றுமையாவ தல்லது வண்ணவேற்றுமை யாகாதென்பது. ஒருசெய்யுளுட் பல அடிவந்தால் அவை எல்லாம் இடையிட்டுத் தொடுத்தல்வேண்டுமோ வெனின், வேண்டா; அவை வந்தவழித் தாஅவண்ண மெனப்படுமென் பது. எனவே, இவ்வண்ண வகைசலெல்லாஞ் செய்யுண்முழுவதுமே பெறுவனவாகக் கொள்ளக்கிடந்தனவல்ல. இவற்றை உறுப்பென்ற தன்மையாற் கந்தருவ நூலார் வண்ணங் கூறியவாறுபோல ஒருசெய்யு ளுட் பலவும் வரப்பெறுமென்பதாம். அவை "உலக முவப்ப வல னேர்பு திரிதரு" (திருமுரு-1) எனவும், "உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை" எனவும் வரும். பிறவும் அன்ன. (உகஇ)

528. வல்லிசைவண்ணம் வல்லெழுத்துப்பயிலும்.

இதன் பொருள் : வல்லிசைவண்ணம் வல்லெழுத்துப் பயின்று வரும், என்றவாறு.

வல்லெழுத்துப் பயின்றுவருதலான் அப்பெயர்த்தாயிற்று. "முட் டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்" (பத்து-பட்டின-218) எனவும், "முட்டாட்டாமரைத் தண்ணி" (பத்து-திருமுரு-73) எனவும் வரும். பிறவும் அன்ன. (உகஈ)

529. மெல்லிசைவண்ண மெல்லெழுத்து மிகுமே.

இதன் பொருள்; மெல்லெழுத்து மிகுவது மெல்லெழுத்துவண் ணம், என்றவாறு.

ஒரு செய்யுண்முழுவதும் ஓரினத்தெழுத்தே பயிலச்செய்தால் இன்னுதாதலின் இவை உறுப்பெனப்பட்டு இடையிட்டு வருமென்று

னென்பது. அவ்வாறு செய்யின் அவை மிறைக்கவியெனப்படும். ஒழிந்த எழுத்திற்கும் இஃதொக்கும். "பொன்னி னன்ன புன்னை நுண் டாது" என மெல்லெழுத்துப் பயின்றவாறு. (உகள)

530. இயைபு வண்ண மிடையெழுத்து மிகுமே.

இதன் பொருள் : இடையெழுத்து மிகுவது இயைபுவண்ணம், என்றவாறு.

"அரவினதிர வுரீஇய வரகு கதிரின்" என இடையெழுத்து மிக்குவந்தமையின் இயைபுவண்ணமாயிற்று. மென்மைவன்மைக்கு இடைநிகர்வாகிய எழுத்தான் வருதலின் இயைபுவண்ணமென்றார். (உகஅ)

531. அளபெடை வண்ண மளபெடை பயிலும்.

இதன் பொருள் : இரண்டளபெடையும் பயிலச் செய்வன அளபெடைவண்ணமாம், என்றவாறு.

"மராஅ மலரொடு விராஅப்ப பராஅம்" என்பது அளபெடை வண்ணம். "கண்ண டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்" (பத்துமலைபடு-352) என்பதும் அது. (உகக)

532. நெடுஞ்சீர்வண்ண நெட்டெழுத்துப்பயிலும்.

இதன் பொருள்: நெட்டெழுத்துப் பயின்றுவருவது நெடுஞ்சீர் வண்ணம், என்றவாறு.

அது "மாவா ராதே மாவா ராதே" (புறம்-273) என்பது. நெடிதாய் வருவது நெடுஞ்சீரெனப்பட்டது. (உஉ0)

533. குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும்.

இதன் பொருள் : குற்றெழுத்துப் பயில்வது குறுஞ்சீர்வண்ணம், என்றவாறு.

"குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி" (அகம்-4.)
என வரும். (உஉக)

534. சித்திர வண்ண
நெடியவுங் குறியவு நேர்ந்துடன் வருமே.

இதன் பொருள் : சித்திரவண்ணம் நெட்டெழுத்துங் குற்றெழுத்தும் ஒப்பவிரா அய்ச் செய்யப்படுவது, என்றவாறு.

அது "சார லுட நீவர லாறே" எனவரும். சித்திரவண்ணமென்பது பலவண்ணம்படச் செய்வதாகலின் அப்பெயர்த்தாயிற்று. (உஉஉ)

535. நலிபு வண்ண மாய்தம் பயிலும்.

இதன் பொருள் : ஆய்தம் பயின்று வருவது நலிபுவண்ணமாம், என்றவாறு.

அது, "அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை" (குறள்-18-8) எனவும், 'னஃகான் றஃகா லுன்க னுருபிற்கு' (தொல் எழுத்-புணர்-21) எனவும் வரும் நலிபென்பது, ஆய்தம். (உஉக)

536. அகப்பாட்டு வண்ண
முடியாத் தன்மையின் *முடித்தன மேற்றே.

இதன் பொருள்: அகப்பாட்டுவண்ணமென்பது இறுதியடி இடையடி போன்று நிற்பன, என்றவாறு.

அவையாவன, முடித்துக் காட்டும் ஈற்றசை ஏகாரத்தா னன்றி, ஒழிந்த உயிரீற்றானும் ஒற்றீற்றானும் வருவன. அவை,

'தவழ்பவை தாமு மவற்றே ரன்ன' (தொல்-மர-5.)

"உண்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய்"

எனவும்,

"கோடுயர் வெண்மண லேறி
யோடுகலன் காணுந் துறைவன் றேழி."

எனவும்,

---

* 'முடிந்ததன் மேற்றே' என்பதும் பாடம்.

"ஆணமில் பொருளெமக் கமர்ந்தனே யாடி"

எனவும், (கலி-கடவுள்வாழ்த்து.)

"சென்றீ பெருமலிற் றகைக்குநர் யாரே" (அகம்-46)

எனவும், இவை ஆசிரிய ஈற்றன.

"குளிறு குரலருவக் குன்றத் திதண்மேற்
களிறு வருவதுகண்டு வெளிலென்ன
லாயிஞன் பின்னே யணங்கிற் றுயிரளித்துப்
போயினன் யாண்டையான் போம்"

என இதனுள் இறுதியடி முடியாத்தன்மையின் முடிந்ததாகலின் அகப்பாட்டுவண்ணமாயிற்று. "கொடியுவணத் தவணரோ" எனக் கலிப்பாவுள் அரோவந்து பின் முடியாத்தன்மையின் முடிந்தது. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என்பனவற்றுன் ஆசிரியம் இறுமென வரையறுப்பாருண்மையின் அவ்வச்சொல்லானே அவை முடிந்தனவென்று கொள்வலினின், அங்ஙனம் வரையறையிலவென்பது மேற்காட்டிய உதாரணங்களால் அறிந்தாமாகலின் அச்சடா வண்ணமென வரையறுப்பார் மேற்றெனவிடுக்க. (உசு)

537. புறப்பாட்டு வண்ண முடிந்தது போன்று முடியா தாகும்.

இதன் பொருள்: புறப்பாட்டுவண்ணமென்பது இறுதியடிப் புறத்ததாகவுந் தான் முடிந்ததுபோல நிற்றல், என்றவாறு.

"*இன்ன செய்திீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே"

என்புழி ஈற்றடல் முன்னிய வினையேயென முடிந்தது போன்று முடியாதாயிற்று. (உஉ)

---

* 'இன்னுவைகல் வாராமுன்னே செயனீ முன்னிய வினையே' என்பது நச்சினர்க்கினியர் உரைப்பிரதிப்பாடம்.

538. ஒழுகு வண்ண மோசையி னெழுகும்.

இதன் பொருள்: முற்கூறிய வகையானன்றி ஒழுகியலோசையாற் செல்வது ஒழுகுவண்ணம், என்றவாறு.

ஒழிந்தனவும் ஒழுகுமாயினும் அவை வேறுவேறிலக்கணமுறையின என்பது.

"அம்ம வாழி தோழி காதல
ரின்பனி மென்ஞ வாடை யோடு
புன்கண் மாலை யன்பின்று நலிதலின்"

என வரும். (உஉசு)

539. ஒருஉ வண்ண மொரீஇத் தொடுக்கும்.

இதன் பொருள்: யாற்றொழுக்குப்போலச் சொல்லியபொருள் பிறிதொன்றனை அவாவாமை அறுத்துச்செய்வது ஒருஉண்ணம், என்றவாறு.

ஒரீஇத்தொடுத்தலென்பது எல்லாத் தொடையும் ஒரீஇச் செந்தொடையால் தொடுத்தலென்பாரும் உளர். செந்தொடையுந் தொடையாகலான் அற்றன்றென்பது. அது,

"யானே யீண்டை யேனே *யென்னலனே
யாஞ நோயொடு கான லஃதே
துறைவன் றும்மூ ரானே
மறையல ராதி மன்றத் தஃதே." (குறுந்-97.)

என வரும்.

"சிறியகட் பெறினே" (புறம்-235) என்பதும் அது.

யாப்புப் பொருணோக்கியவாறுபோல இது பொருணோக்காது ஓசையே கோடலானும் அடியிறந்து கோடலானும் யாப்பெனப் படாது. (உஉஎ)

---

* 'என்னல திலனே' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

540. எண்ணு வண்ண மெண்ணுப் பயிலும்.

இதன் பொருள் : எண்ணுப் பயில்வது எண்ணுவண்ணம், என்ற வாறு.

இஃது அடியெண்ணுப்பயிறலான் எண்ணுவண்ணமெனக் காரணப்பெயராயிற்று. அவை,

"நன்னற வியள நறும்பூ ணகத்தி
துன்னருங் கடுந்திறற் றேற்றங் காட்டினளே"

என்றாற் போல்வன.

"துதலுந் தோளுந் திதலை பல்குனும்" (அகம்-119.)

என்பதுமது. (உஉஅ)

541. அகைப்பு வண்ண மறுத்தறுத் தொழுகும்.

இதன் பொருள் : அறுத்தறுத்துப்பயில்வது அகைப்பு வண்ணம், என்றவாறு.

இது விட்டுவிட்டுச் சேறலின் அகைப்புவண்ணமென்னும் பெயர் பெற்றது.

"வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி" (குறுந்-110.)

என்புழி ஒருவழி நெடில்பயின்றும் ஒருவழிக் குறில்பயின்றும் அறுத் தொழுகிய அகைப்புவண்ணமாம். (உஉக)

542. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

இதன் பொருள் : தூங்கல்வண்ணந் தூங்கலோசைத்தாகி வருவது, என்றவாறு.

வஞ்சியென்பது, வஞ்சிக்குப்போல இதுவும் அற்றுச் சேறலுடைத்தென்பது.

"யாஞூடத் தாஞுணர்த்த யாஞுணரா விட்டபின்
ரூஞூட யாஞுணர்த்தத்* தாஞுணர்ந்தான்"
(மூத்தோள்ளாயிரம்-104.)

எனின்ற தொடர்நிலைக்கண்ணே அத்துங்கல் கண்டுகொள்க. இக் கருத்தறியாதார் கலிப்பாவினுள் வஞ்சிப்பாப் பிறக்குமெனவும் வஞ்சியுட் கலிப்பாப் பிறக்குமெனவும் மயங்குப. (உஉ0)

543. ஏந்தல்வண்ணஞ்,
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.

இதன் பொருள்: சொல்லிய சொல்லானே சொல்லப்படும் பொருள் சிறப்பச்செய்வது ஏந்தல்வண்ணம், என்றவாறு.

ஏந்தலென்பது மிகுதல்; ஒருசொல்லே மிக்குவருதலின் ஏந்தல் வண்ணமென்றுயிற்று. அது,

"வைசலும் வைகல் வரச்சண்டு மஃதுணரார்"
(நாலடி-4-9.)

என வரும். (உஉக)

544. உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்.

இதன் பொருள்: உருட்டிச் சொல்லப்படுவது அராகமாகலின் அராகந்தொடுப்பது உருட்டுவண்ணமாம், என்றவாறு.

"உருமுரறு சருவிய பெருமழை தலைஇய" (அகம்-158.)

எனவும்,

"எரியுரு வுறழ விலவ மலர" (கலி-33.)

எனவும் வரும். இது நெகிழாது உருண்டவோசையாகலிற் குறுஞ்சீர் வண்ணமெனப்படாது உருட்டுவண்ணமெனப்படு மென்பது. (உஉஉ)

545. மூடுகுவண்ண
மடியிறந் தோடி யதனை ரற்றே.

* 'தாஞுணரான்' என்பதும் பாடம்.

இதன் பொருள் : முடுகுவண்ணமென்பது அராகந்தொடுத்த அடியோடு பிற அடிபடத் தொடர்ந்தோடுவது, என்றவாறு.

அது,

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மம்பலும்" (கலி-39.)

என வரும்.

இவற்றைக் கொச்சகம் அராகமெனவுஞ் சொற்சீரடியும் முடுகிய லடியுமெனவும் பரிபாடற்கு வேறுபடுத்தோதினன் இவ்வேறுபாடு நோக்கியென்பது. (உஙஙு)

546. வண்ணந் தாமே யிவையென மொழிப.

புறனடை.

இதன் பொருள் : வண்ணமென்பன சந்தமாதலான் அச்சந்த வேற்றுமை செய்வன இவையல்லதில்லை, என்றவாறு.

நான்குபாவினுள்ளும் இவற்றை வைத்துறழவும் அவைமயங்கிய பொதுப்பா இரண்டினுள்ளும் உறழவும் நூற்றிருபதாகலும், உயிர்மெய் வருக்கமெல்லாவற்றினும் உறழ்ந்து பெருக்கின் எத்தனையும் பல வாகலும், இனிப்பிறவாற்றுற் சிலபெயர் கிறீஇ அவற்றுள் உறழ்ந்து பெருக்க வரையறையிலவாகலும் உடையவாயினும் இவ்விருபது வகையானல்லது சந்தவேற்றுமை விளங்காதென்பது கருத்து. (உஙஙு).

547. வனப்பிய நூனே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் நூய பனுவலோ
டம்மை தானே யடிநிமிர் பின்றே.

இது தொகைச் சூத்திரத்துள் 'ஆறுதலையிட்ட வந்நாலந்தும்' (தொல்-செய்-1) எனக் கூறுசெய்து கிறீஇப், பின்னர் எட்டுறுப்புக் கூறினனன்றே ? இவை அவற்றோடொத்த இலக்கணத்த அன்மை யான; என்னை ? அவை ஒரோசெய்யுட்கே ஒதிய உறுப்பாகலானும்

இவை பலசெய்யுளுந் திரண்டவழி இவ்வெண்வகையும் பற்றித் தொடுப்பதாமெனக் கூறப்பட்டதாகலானுமென்பது. இவற்றை வனப்பென்று கூறப்படுமாறென்னை? அச்சூத்திரத்துப் பெற்றிலமாகலி னெனின், வனப்பென்பது, பெரும்பான்மையும் பல உறுப்புந்திரண்ட வழிப் பெறுவதோர் அழகாகலின் அவ்வாறு கோடும். அதனாற் பல செய்யுளும் உறுப்பாய்த்திரண்டு பெருகிய தொடர்நிலையதே வனப் பென்னும் பெயர்ப்பகுதிவகையான் ஏற்பதென்பது. அஃதேல், இவ் வெட்டுந் தனிவருஞ் செய்யுட்கண் வந்தால் அழகு செய்யாவோ வெனின், அவைபோல் இவை செய்யுட்குமாகும் என்றற்கன்றே அவ் விருபத்தாறுறுப்போடும் இவற்றை ஓரினப்படுத்து ஓதியதென்பது. அஃது இயைபிற்கொப்ப வாராதென்பது முன்னர்ச் சொல்லுதும். இதனானே முன்னையுறுப்புக்கள் தொடர்நிலைச் செய்யுட்கு வருமென் பதூஉங்கொள்க. அல்லாக்கால், மாத்திரை முதலாகிய ஒரோவுறுப் பான் அழகுபிறவாதாகிய செல்லும் இவற்றையே வனப்பென்று ஒரோ செய்யுட்கே கொள்ளினென்பது. இங்ஙனம் இருபத்தாறும் எட்டு மென வகுப்பவே அவை அகமென்பன, தனிநிலைச் செய்யுண் முற் கூறப்படா, இத்தொடர்நிலைச் செய்யுட்கு முற்கூறுமென்பது. இனி, இவற்றைச் சூத்திரத்தான் வனப்பென்னுங் குறியெய்துவிக்கவேண்டு வானாகச் சூத்திரத்தை, 'வனப்பியறானே வகுக்குங் காலைச் சின்மென் மொழியாற் றாய பனுவலின்' என்பது பாடமாக உரைத்தானென்க. அதுவும் அறிந்தவாறே கொள்க.

இதன் பொருள் : சிலவாயமெல்லியவாய சொல்லோடும் யிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம், என்றவாறு.

அடிநிமிராதெனவே அம்மையென்பது முழுவதும் ஒருசெய்யு ளாகல் வேண்டும். வேண்டவே, அஃது உறுப்பன்றாகிய செல்லும். அதனை உறுப்பெனல் வேண்டுமாதலான் அடிநிமிராதெனப்பட்ட செய்யுள் உறுப்பாக அவை பலதொடர்ந்து முடிந்து ஈண்டுச் செய்யு ளாமென்பது. சிலவாகவென்பது எண்ணுச்சுருங்குதல். மெல்லிய வாய்ச் சிலவாய சொற்கள், எழுத்தினான் அகன்றுகாட்டாது சில

வெழுத்தினுன் வருவது. அடி நிமிராதென்றது ஐந்தடியின் ஏறு தென்றவாறு.

தாயபனுவலோடென்றது அறம்பொருளின்பமென்னும் மூன்றற் கும் இலக்கணஞ்சொல்லுப, வேறிடையிடை அவையன்றியுந் தாய்ச் செல்வதென்றவாறு. அஃதாவது பதினெண்கீழ்க்கணக் கெனவு ணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோசெய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம் பொருளின்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப பயின்றுவருமாறுங் காரிநாற்பது கலவழிநாற்பது முதலாயின வந்த வாறுங் கண்டுகொள்க.

"பொருள்கருவி காலம் வினையிடஞ்சே டைந்து
*மருடூர வெண்ணிச் செயல்" (குறள்-68-5.)

என்பது இலக்கணங் கூறியதாகலிற் பனுவலோடென்றுன்.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று." (குறள்-1112-2.)

என இஃது இலக்கியமாகலாற் ருயபனுவ லெனப்பட்டது. இவை தனித்துவரினும் அவ் வனப்பெனப்படும். தாவுதலென்பது இடை யிடுதல். இவ்விருவகையுஞ் செய்யுளெனப்படும். அம்மையென்பது குணப்பெயர். அமைதிப்பட்டு நிற்றலின் அம்மையென்ருயிற்று. அதனுள் உறுப்பாகிய பாட்டுக்கடோறும் மாத்திரை யுறுப்பு முதலா கிய உறுப்பினுள் ஏற்பன பலவும் வருமாறும், இவ்வனப்பினுள் ஏற் பன பலவும் வருமாறும் அறிந்துகொள்க. (உரை).

548. செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பி னெவ்வகை தானே யழகெனப் படுமே.

இஃது, இரண்டாமெண்ணுமுறைமைக்கணின்ற அழகுணர்த்து தல் நுதலிற்று.

---

* 'இருடூர' என்பதும் பாடம்.

இதன் பொருள் : திரிசொற் பயிலாது செய்யுட் பயின்றுவரும் மொழிகளாற் சேறுத்துப் பொலிவுபட்ட யாப்பின்பொருள அழகு, என்றவாறு.

அவ்வகையென்றதனால் அவை வேறுவேறு வந்து ஈண்டிய தொகைகளிலேச் செய்யுளென்றவாறு. அவையாவன நேடுந்தொகை முதலாகிய தொகையே டுமென்றவாறு. அழகு செய்யுண்மொழி யென்றதென்னையெனின் அது பெரும்பான்மையாற் கூறினான். அம் மொழியானே இடைச்சங்கத்தாருங் கடைச்சங்கத்தாரும் இவ்விலக் கணத்தாற் செய்யுள் செய்தார், இக்காலத்துச் செய்யினும் விலக்கின் றென்பது. மற்று முவடிமுப்பது முதலாயின அம்மையெனப் படுமோ அழகெனப்படுமேவெனின் தாயபனுவலின்மையின் அம்மை யெனப்படாவென்பது. இவற்றுள்ளும் ஒரோ செய்யுட்கண்ணே மாத்திரை முதலாகிய உறுப்பும் ஏற்றவகையான் வருவன அறிந்து கொள்க. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். (உசுசு)

549. தொன்மைதானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.

தொன்மையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தொன்மையென்பது உரைவிராய்ப் பழமை யவாகிய கதைப்பொருளாகச் செய்யப்படுவது, என்றவாறு. அவை பெருந்தேவனாற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன.* (உசுஎ)

550. இழுமென் மொழியான் விழுமிய துநுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்.

---

* 'சிலப்பதிகாரமும் இதன்பாற்படும்' என்றார் நச்சினார்க்கினியர்.

இது, முறையானே தோலென்னும் வனப்புணர்த்துதல் துத லிற்று. அஃதிருவகைப்படும்: கொச்சகக்கலியானும் ஆசிரியத்தானுஞ் செய்யப்படுவன. 'யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையதூ என்றவழித் தேவபாணியுங் காமமும் பொருளாகவன்றியுங் கொச்சகக் கலி வருமென்றலுங்கலான் அவை மேல் வருதல் ஈண்டுக் கொள்ளப் பட்டது.

இதன் பொருள் : இழுமென் மொழியான் விழுமியது நுவலி னும்-மெல்லென்ற சொல்லான் அறம்பொருளின்பம்வீடென்னும் விழு மிய பொருள் பயப்பச்செய்யினும்; அவை செய்த காலத்துள்ளன கண் டிலம் : பிற்காலத்து வந்தன கண்டுகொள்க. பரந்த மொழியான் அடி நிமிர்ந்து ஒழுகினும்-ஆசிரியப் பாட்டான் ஒருகதைமேல் தொடுக்கப் படினும் அவையும் பொருட்டொடர்நிலை ; தோல் என மொழிப தொன்மொழிப் புலவர் - தோலென்று சொல்லுப புலவர், என்ற வாறு.

தொன்மொழியென்றார் பழைய கதையைச் செய்தல்பற்றி. இது முன்வருஞ் சூத்திரத்தானும் பெறுதும். (உசுஅ)

551. விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே.

இதன் பொருள் : விருந்துதானும் புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலைமேற்று, என்றவாறு.

தானுமென்ற உம்மையான் முன்னைத் தோலெனப்பட்டதூஉம் பழைய கதையைப் புதிதாகச் சொல்லியதாயிற்று. இது பழங்கதை மேற்றன்றிப் புதிதாகச் சொல்லப்படுதல் ஓம்புதல் உடைமையின் உம் மையான் இறந்ததுதழீஇயிற்றெனன்பது. புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்றதென்னையெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்றூற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது. அது முத்தொள்ளாயிர மும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமெ னவுணர்க. கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப. (உசுக)

552. ஞகாரை முதலா னகாரை யீற்றுப்
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே.

இஃது இயைபுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள வென்னும் பதினொரு புள்ளியீற்றினுள் ஒன்றனை இறுதியாகச் செய்யுஞ் செய்புள் பொருட்டொடராகவுஞ் சொற்றொடராகவுஞ் செய்வது இயைபெனப் படும், என்றவாறு.

இயைபென்றதனானே பொருளும்இயைந்து சொல்லும் இயைந்து வருமென்பது கருத்து. சீத்தலைச்சாத்தனாற் செய்யப்பட்ட மணி மேகலையுங் கொங்குவேளாற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன. அவை னகார ஈற்றன் இற்றன. மற்றையீற்றன் வருவனவற்றுக்கும் ஈண்டிலக்கணம் உண்மையின் இலக்கியம் பெற்றவழிக்கொள்க. இப்பொழுது அவை வீழ்ந்தனபோலும். பரந்தமொழியான் அடிமிசைத்தொழுகிய தோலோடுதினிடை வேற்றுமை யென்னையெனின், அவை உயிரீற்றவாதல் பெரும்பான்மையாகலான் வேறுபாடுடைய சொற்றொடரான் வருதலுமுடையவென்பது. சொற்றொடரென்பது அந்தாதி யெனப்படுவதென்றதனான் உயிரீற்றுச் சொற்றொடர் சிறுபான்மை யென்பது கொள்க. (உசo).

553. சேரி மொழியாற் செவ்வி திற்கிளந்
தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே.

இது புலனுமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: சேரிமொழியென்பது பாடிமாற்றங்கள். அவற்றானே செவ்விதாகக் கூறி ஆராய்ந்து காணுமைப் பொருட்டொடரானே கொடுத்துச் செய்வது புலனென்று சொல்லுவர் புலன் உணர்ந்தோர், என்றவாறு.

அவை விளக்கத்தார்க்கூந்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வனவென்பது கண்டுகொள்க. (உசக)

554. ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி யொப்பித்
தோங்கிய மொழியா ஞங்கன மொழுகி
னிழைபி னிலக்கண மியைந்த தாகும்.

இஃது, இறுதிநின்ற இழைபிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஒற்றொடுபுணர்ந்த வல்லெழுத்து அடக்காது-வல்லெழுத்துப் பயிலாது ; குறளடி முதலா ஐந்து அடி ஒப்பித்து-இருசீரடி முதலாக எழுசீரடியளவும் வந்த அடி ஐந்தனையும் ஒப்பித்து ; ஒப்பித்தலென்பது பெரும்பான்மையான் நாற்சீரடி படுக்கப்பட்டென்ற வாறு ; ஓங்கிய மொழியான்-நெட்டெழுத்தும் அந்நெட்டெழுத்து போல் ஒசை எழும் மெல்லெழுத்தும் லகாரளகாரங்களும் உடைய சொல்லான் ; ஆங்கனம் ஒழுகின்-இவையுஞ் சேரிமொழியாற் செவ்வி திற்கிளந்து தேர்தல் வேண்டாது பொருள்படச் சென்று நடப்பின் ; இழைபின் இலக்கணம் இயைந்ததாகும் இழைபென்று சொல்லப்படும் இலக்கணத்தது, என்றவாறு.

அவையாவன, கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறைமார்க்கத்தனவென்பது. இவற்றுக்குக் காரணந் தேர்தல் வேண்டாது பொருள் இனிது விளங்கல் வேண்டுமென்றது அவினயத்திற்கு உரியவாதல் நோக்கியென்பது. மற்றிதனை வெண்டுறைச் செய்யுட்குமுன் வைப்பினெனின், இஃதிசைப்பாட்டாகலின் இனிவருகின்றது இசைத்தமிழாகலின் அதற்குபகாரப்பட்ட இதனை இறுதிக்கண் வைத்தானென்பது.* (உசஉ)

---

* "இனி, யாப்பருங்கலம் முதலியவற்றிற் கூறிய சித்திரக்கவியினையும் ஈண்டுச் சேரக் கூறுகவெனின், யந்திரமும் மந்திரமுமாய்த் தெய்வத்திற்கேயுரியவாகக் கூறும் மிறைக்கவி இம் முத்தாறுறுப்பும் போல அகனைந்திற்குரிய சான்றோர் செய்யுட்குறுப்பாய் வாரா என்றும், அகத்திணைக்குரிய மரபு வழுவிற்றென்றும் தொல்காப்பியனார் கூறுமையானும்; அவற்றிலக்கணங் கூறிய ஆசிரியரும், அவற்றிற்கு

555. செய்யுண் மருங்கின் மெய்பெற நாடி
யிழைத்த வ்லக்கணம் பிழைத்தன போல
* வருவ வுளவெனி னும் வந்தவற் றியலாற்
றிரிவின்றி முடித்த றெள்ளியோர் கடனே.

இஃது, இவ்வோத்திற்கெல்லாம் புறனடை

இதன் பொருள் : செய்யுளிடத்துப் பொருள்பெற ஆராய்ந்து தந்திரம்செய்யப்பட்ட இலக்கணத்தின் வழீஇயினபோன்று †பின் தோன்றுவனவுளவேன் முற்கூறப்பட்ட இலக்கணத்தோடு திரியாமல் முடித்துக் கோடல் அறிவுடையோரது கடன், என்றவாறு.

அவை எண்சீர் முதலாயின வரிற் கழிநெடிலடிப்பாற் சார்த்திக் கோடலும் ஏது முதலியது முதுமொழியோடு பாட்டிற்கு இயைபின்றியுந் தொடர்பு படுப்பனவும் யாப்பென்னும் உறுப்பின்பாற்கோடலும் பிறவும் ஈண்டோதாதன உளவெனின் அவையுமெல்லாஞ் செய்யுளிலக்கண முடிபாகு மென்றவாறு. (உசாக)

இலக்கியம் சான்றோர் செய்யுட்களுட் காணுமையின், வடவெழுத் தொரீஇய எழுத்தொடுபுணர்ந்த சொல்லானன்றி வடவெழுத்தாற் பெரும்பான்மை வரச் செய்யுட்டாமே செய்து இலக்கியமாகக் காட்டினாதலானும்; யாழும் மிறைக்கவியிலக்கணம் ஈண்டுக் கூறுமாயினும்'' என்பது நச்சினார்க்கினியர் உரை.

* 'வருப வுளவேனும்' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம்.

† 'பின்னென்று வருவனவுளவேன்' என்பது முன் அச்சுப் பிரதிப்பாடம். ஏடுகளில் 'பின்றோன்றுவனவுளவேன்' என்ற பாடமே காணப்படுகிறது.

செய்யுளியன் முற்றிற்று.

ஒன்பதாவது

மரபியல்

556. மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங்
கன்றும் பிள்ளையு மகவு மறியுமென்
றொன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், மரபியலென்னும் பெயர்த்து. இதனுனே ஒத்து நூதலியதூஉம் மரபு உணர்த்துதலென்பது பெற்றும். மரபென்ற பொருண்மை என்னெனின், கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுஞ் செய்யுளியலுண் மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமன்றி; இருதிணைப்பொருட்குணனுகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்றுமுறைமையும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும், அவைபற்றி வரும் உலகியன்மரபும், நூன்மரபுமென இவையெல்லாம் மரபெனப்படுமென்பது. மற்றுப் பொருள்களின் இளமைப்பற்றி வரும் மரபுகூறினுன் மூப்புப்பற்றி வரும் மரபு கூறுனுவெனின், அது வரையறையின்மையிற் கூறுனென்பது. மற்று மேலை ஒத்திலோடு இவ்வோத்திடை இயைபென்னெனின், முன்னர் வழக்கிலக்கணங் கூறியதன்பின் செய்யுளிலக்கணஞ் செய்யுளியலுட் கூறினுன், அவ்விரண்டற்கும் பொதுவாகிய மரபு ஈண்டுக் கூறினமையின் இது செய்யுளியலோடு இயைபு உடைத்தாயிற்று. மற்று வழக்கிலக்கணஞ் செய்யுட்கும் பொதுவாகலின் இவ்வினம் இரண்டற்கும் பொதுவாகிய மரபினையுஞ் செய்யுளியலின்முன் வைக்கவெனின் அவ்வாறு வழக்குஞ் செய்யுளுமென்று இரண்டுமல்லாத நூலிற்கும் ஈண்டு மரபு கூறினமையின் இது செய்யுளியலின் பின் வைக்கப்பட்டது.

இவ்வோத்தின் முதற்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் எல்லாப் பொருளின்கண்ணும் இளமைக்குணம்பற்றி கிழவுஞ் சொல் இவையென்று வரையறுத்துக் கூறுகின்றது.

இதன் பொருள்: மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்-விலக்கருஞ் சிறப்பிற்றாகிய மரபிலக்கணங் கூறின்; பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும் கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று ஒன்பதும் குழவியோடு இளமைப்பெயர் - குழவியோடு இவையொன்பதும் இளமைப்பெயர், என்றவாறு.

மேலன எட்டும் குழவியுமென இளமைப்பெயர் ஒன்பதாயின. குழவியோடொன்பதென்றது ஒன்பதுங் குழவியோடென மயங்கக்கூறியவதனாற் போத்தென்பதும் இளமைப்பெயரெனவும் பிறவும் வருவன உளவாயினுங் கொள்ளப்படும். இவற்றையெல்லாம் மேல் வரையறுத்து இன்னபொருட்கு இன்னபெயர் உரித்தென்பது சொல்லும். 'மாற்றருஞ் சிறப்பின்' என்றதனானே இவை ஒருதலையாகத் தத்தம் மரபிற் பிறழாமற் செய்யுள் செய்யப்படுமென்பதூஉம், ஈண்டுக் கூறாதனவாயின வழக்கொடுபட்ட மரபு பிறழவுஞ் செய்யுளின்பம் படின் அவ்வாறுசெய்யவென்பதூஉங் கூறியவாறாயிற்று.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி" (பெரும்பாண்-1-2.)

எனவும்,

"நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
*றென்னை கூறினள் புன்னையது நலனே"(நற்றிணை-172.)

எனவும் வரும்.

அவற்றுட் பரிதியஞ்செல்வனைப் 'பருகும்' 'காலும்' என்றலும் புன்னைமரத்தினை 'நுவ்வை'யென்றலும் மரபன்மையின் வழக்கினுண்மாற்றுதற்கு உரியவாமென்பது கருத்து.

"கிலவுக் குவித்தன்ன வெண்மணல்" (குறுந்-123.)

எனவும்,

---

* 'அன்னை' என்பதும் பாடம்.

"*இருடிணித் தன்ன வேனங் காணின்" (பத்து-மலை-247.)

எனவும்,

"இருநூற் றன்ன விரும்பல் கூந்தல்"

எனவும் வருவனவும் அவை. (க)

557. ஏறு மேற்றையு மொருத்தலுங் களிறுஞ்
சேவுஞ் சேவலு மிரலையுங் கலையு
மொத்தையுந் தகரு மூதளு மப்பரும்
போத்துங் கண்டியுங் கடுவனும் பிறவும்
யாத்த வாண்பாற் பெயரென மொழிப.

இதன் பொருள்: ஆண்பாற்பெயர் இவ்வெண்ணப்பட்ட பதினைந்தும், என்றவாறு.

'பிறவும்' என்றதனான் ஆணென்றும் விடையென்றும் வருவன போல்வனவுங் கொள்க.

இவற்றை வரையறை கூறும்வழி உதாரணங் காட்டுதும். யாத்த ஆண்பாற்பெயர் என்றதனாற் போத்தென்பது இளமைப்பெயரா மாயினும் இங்ஙனம் ஆண்பாற்குச் சிறந்துவருமாறுபோலச் சிறவாது அதற்கென்பது கொள்க. (உ)

558. பேடையும்பெடையும்பெட்டையும்பெண்ணு
மூடு நாகுங் கடமையு மளகு
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவு
மந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே.

இதன் பொருள்: கூறப்பட்ட பதின்மூன்று பெயரும் பெண்மைப் பெயர், என்றவாறு.

கடமையென்பதோர் சாதிப்பெயர் உண்டேனும் அதுவன்று, ஈண்டெண்ணப்பட்டது பெண்மைமேற்றென்று கொள்க. 'அந்தஞ்

* 'இருடிணிந்தன்ன' என்பதும் பாடம்.

சான்ற' என்பது முடிபமைந்தன இவையென்றவாறு. எனவே, ஆண் என்பது பெண்பெயராதலும் பெண் ஆணென்பன ஒருசார் புல்லிற்கும் கோதலுங் கொள்க; என்னை ? ஆனேறென்பது ஆவினுள் எறெனப் படுதலின். ஆணென்பது ஆண்பாற்குப் பொதுவாகலின் அது முடி பமையாதெனப்பட்டது. அது மேற்காட்டுதும். ஆண்மை பெண்மை புல்லிற்கின்மையின் அவையும் முடிபுடையன ஆகாவாயினுங் காயாப் பினையை ஆண்பனையென்றுங் காய்ப்பனவற்றைப் பெண்பனையென்றும் வழங்குப. இவையெல்லாம் வழச்சாகலிற் செய்யுளுள் வருமாறு அறிந்து கொள்ளப்படும். இவற்றுக்கு மேல் வரையறைகூறும்வழி உதாரணங் காட்டுதும். (கூ)

559. அவற்றுட்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை.

இது, சிறுத்தமுறையானே இளமைப்பெயருண் முற்கூறிய பார்ப் பினைக் கூறுவான் அதமேலு டொப்புமைகண்டு பிள்ளைப்பெயருங் கூறு கின்றது.

இதன் பொருள் : இவ்விரண்டும் புள்ளிளமைக்குரிய, என்ற வாறு.

இவையெல்லாம் இக்காலத்து வழக்கினுள் அரியவாகலிற் சான் றோர் செய்யுளுட் காணப்படும். அல்லன வழக்கின்மேற் காட்டுதும்.

"மேற்காட் டிருந்த பார்ப்பினங்கள்"

எனவும்,

"இல்லிறைப் பள்ளிதம் பிள்ளையொடு வதியும்" (குறுந்-46.)

எனவும்,

"பைதற் பிள்ளைக் கிளிபயிர்ந் தாங்கு" (குறுந்-139.)

எனவும் இவை பருந்தும் வாக்குருவியுங் கிளியுமென்னும் பறவை மேல் வந்தன. பிறவும் அன்ன. புள்ளுக்குலம் பலவாகலான் இச்

சூத்திரத்துள் அடங்கிய மரபு எத்துணையும் பலவாத லேக்கி முதற் சூத்திரத்துட் பார்ப்பினை முற்கூறினனென்பது. (சு)

560. தவழ்பவை தாமு மவற்றே ரன்ன.

இதன் பொருள் : பார்ப்பும் பிள்ளையுந் தவழ்பவற்றிற்கும் உரிய,

அவை ஆமையும் உடும்பும் ஒத்தியும் முதலையும் முதலாயின. ஆமையும் முதலையும் நீருள்வாழினும் நிலத்தியங்குங்கால் தவழ்பவை யெனப்படும். உதாரணம் :

• "யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே" (குறுந்-152.)

எனவும்,

• "தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலை" (ஐங்குறு-41.)

எனவும்,

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனெடு
பிள்ளை தின்னு முதலைத்தவ னூரே" (ஐங்குறு-24.)

எனவும் வரும்.

'தாமும்' என்றதனுன் ஊர்வன நடப்பனவுஞ் சிறுபான்மை பிள்ளைப்பெயர்க்கு உரியன கொள்க. அது பிள்ளைப்பாம்பென ஊர்வன மேல் வந்தது.

"பிள்ளை வெருகிற் கல்கிரை யாகி" (குறுந்-107.)

என நடப்பனமேல் வந்தது. மூங்காப்பிள்ளை என்பதும் ஈண்டே கொள்ளப்படும். பார்ப்பும் அவ்வாறே வருவன உளவேற், கொள்க. இதுவுந் தவழுஞ் சாதிக்கெல்லாம் பொதுவாகிய பரப்புடைமையின் இரண்டாவது வைத்தானென்பது. (இ)

561. மூங்கா வெருகெலி மூவரி யணிலோ
டாங்கவை நான்குங் குட்டிக் குரிய.

இது, மேல் எடுத்தோத்தானும் இலேசானும் அதிகாரப்பட்ட தவழ்வனவும் நடப்பனவும் பற்றிக் குட்டியென்னும் பெயரினையு முறை யன்றிக் கூறு

இதன் பொருள் : குட்டியெனப்படுவன இவை நான்கும், என்ற வாறு.

அவை மூங்காக்குட்டி வெருக்குக்குட்டி எலிக்குட்டி அணிற் குட்டியெனவரும். மூவரியணிலென்றதனுன் ஒழிந்த மூன்றுந் தம் மூள் ஒருபிறப்பினவாம்; இவை யொருங்கரனவே என்பதுகொள்க. ஆங்கவை நான்கும் என்றதனால் தத்துவனவற்றுக்குங் குட்டிப்பெயர் கொடுக்கப்படும். 'தவளைக்குட்டி' யெனவரும். மேல் ஊர்வனவற்றுக் குந் தவழ்வனவற்றிலக்கணம் எய்துவித்தமையாற் பாம்புக்குட்டியென் பதுங் கொள்க. மற்றுக் கீரியும் நாவியும்போல்பவற்றையுங் குட்டி யென்ஞரோவெனின், அவை பிள்ளையென்றலே பெரும்பான்மையாக லின் 'உரிய'வென்றதனாற் சிறுபான்மை குட்டியென்பதுங் கொள்க. மூங்காவின் விகற்ப மென்பாருமூளர். (சு)

562. பறழெனப் படினு முறழாண் டில்லை.

இதன் பொருள் : மேற்கூறிய நான்கும் பறழெனவும்படும், என்ற வாறு.

இவை இக்காலத்து வீழ்ந்தன. மற்று முற்கூறிய நான்கினையும் இப்பெயராலே முற்கூறுக, முதற்சூத்திரத்துள் ஒதிய முறைமைக் கேற்பவெனின், அற்றன்று; அவற்றுக்கு இப்பெயர் சிறுபான்மையென் பான் பிற்கூறினனென்பது. உறழாண்டில்லையென்ற மிகையாலே,

"கைம்மை யுய்யாக் காமர் மந்திக்
கல்லா வன்பறழ்க் கிளைமுதற் சேர்த்தி" (குறுந்-69.)

என்பதுங் கொள்க. (எ)

563. நாயே பன்றி புலிமுய லுன்கு
மாயுங் காலைக் குருளை யென்ப.

இது, முறையானே நான்காம் எண்ணு முறைமைக்கணின்ற குருளையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : நாயும் பன்றியும் புலியும் முயலும் என நான்கு குருளையென்று சொல்லப்படும், என்றவாறு.

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை"

எனவும்,

"விழியாக் குருளை மென்முலை சுவைப்பக்
குழிவயிற் றுஞ்சுங் குறுந்தாட் பன்றி"

எனவும்,

"இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை"
(குறுந்-47.)

எனவும்,

"குருளை கோட்பட லஞ்சிக் குறுமுயல்
வலையிற் றப்பா தது மன்னுயி ரமைப்ப"

எனவும் வரும்.

"சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை" (குறுந்-119.)

என்பதுங் கொள்க. (அ)

564. நரியு மற்றே நாடினர் கொளினே.

இதன் பொருள் : நரியுங் குருளையெனப்படும், என்றவாறு.

"பிணந்தின் பெண்டிர்க்குக் குருளை காட்டிப்
புறங்காட் டோரி புலவுத் தசைபெறூஉம்"

என வரும்.

'நாடினர் கொளினே'யென்றதனானே,

"வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங்
குன்ற நாடன் கேண்மை" (குறுந்-38.)

என்றாற்போல முசுவிற்குங் குருளைப்பெயர் கொடுக்க. (கூ)

565. குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்.

இதன் பொருள்: மேற்கூறிய ஐந்தினையுங் குட்டியென்றும் பறழென்றுங் கூறுதல்வரையார், என்றவாறு.

அவை நாய்க்குட்டி பன்றிக்குட்டி புலிக்குட்டி முயற்குட்டி நரிக்குட்டி என வழக்கினுள் வந்தன.

"பாகிப் பரப்பிற் பறழொடு வதிந்த"

எனவும்,

"வயநா யெறிந்த வன்பறழ் தழீஇ"

எனவும்,

"புலிப்பற ழன்ன பூஞ்சினை வேங்கை"

எனவும்,

"பதவுமெயல் பற்றி முயற்பற ழோம்புஞ்
சீறூ ரோனே நன்னுதல்"

எனவும்,

"நரிப்பற ழகவர நாய்முதல் சுரக்கும்"

எனவும் முறையானே வந்தன.

நாயெனச் செந்நாய் நீர்நாய் முதலாயினவும் அடங்குமென்பது. மூவரியணிலென்றவழிச் சொல்லப்பட்டவாறும் உய்த்துணர்க. பிறவும் அன்ன. (கo)

566. பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே.

இதன் பொருள் : மேற்கூறிய ஐந்துசாதியுள்ளும் நாயொழித்து ஒழிந்த நான்கற்கும் பிள்ளையென்னும் பெயர்க்கொடையும் உரித்து, என்றவாறு.

ஈவ செய்யுட்கண் வருவன கண்டுகொள்க. 'கொள்ளுங் காலை' யென்றதனுன் முற்கூறிய நாய்முதலாகிய நான்கும் விலக்கி நரிப் பிள்ளையென்பதே கோடலும் ஒன்று. (கக)

567. யாடுங் குதிரையு நவ்வியு முழையு
மோடும் புல்வா யுளப்பட மறியே.

இதன் பொருள் : இவ்வைந்து சாதியின் இளமைப்பெயர் மறியெனப்படும், என்றவாறு.

"மறுத்துருத் தொகுத்த பறிப்புற விடையன்"

எனவும்,

"உள்ளல் வயிற்ற வெள்ளை மறி"

எனவும் யாட்டின்மேல் வந்தன. மறிக்குதிரையெனவும் மறிநூக்கிற் றெனவுஞ் சொல்லுதலின் இது குதிரைக்கும் உரித்தாயிற்று.

"நவ்வி நான்மறி கவ்விக்கடன் கழிக்கும்" (குறுந்-282.)

எனவும்,

"மறியாடு மருங்கின் மடப்பிணை தழீஇ" (அகம்-34.)

எனவும்,

"தெறித்துநடை மரபிற்றன் மறிக்கு னிழலாகி"(குறுந்-213.)

எனவும் இவை நவ்வியும் உழையும் புல்வாயும் முறையானே மறி யென்னும்பெயர் எய்தியவாறு அவ்வச்செய்யுளுட் கண்டுகொள்க.

கவ்வியும் உழையும் புல்வாயுள் அடங்குமன்றே, அவற்றை மூன்றுக ஓதியதென்னை ? நாயென்றதுபோல அடங்காதோவெனின், மாவென்பது குதிரையும் ஆனையும் புலியுஞ் சிங்கமும் முதலாயவற்றுக்கெல்லாம் பெயராகலின் அவ்வாறு ஓதானென்பது. ஒடும்புல்வாயென்றதனானே மடனுடையன கவ்வியெனவும் இடைநீகரன உழையெனவுங் கொள்க. எட்டாம் முறைமைக்கண் ஓதிய மறியினை ஐந்தாம்வழிக் கூறியவதனானே,

"செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி" (குறுந்-187.)

என்றது போல்வன கொள்க. (கஉ)

568. கோடுவாழ் குரங்குங் குட்டி கூறுப.

இதன் பொருள் : கோட்டினையே வாழ்க்கையாகவுடைய குரங்குங் குட்டியென்று கூறப்படும், என்றவாறு.

கோடுவாழ் குரங்கெனவே குரங்கின் பிறப்புப்பகுதியெல்லாங் கொள்க. அவை குரங்குக்குட்டி முசுக்குட்டி ஊக்குக்குட்டியென்பன. உம்மை இறந்தது தழீஇயிற்றுதலான் மேற்கூறிய யாடுமுதலாகிய ஐந்துசாதிக்குங் குட்டியென்னும்பெயர் கூறப்படுமென்பது. அவை யாட்டுக்குட்டி குதிரைக்குட்டி கவ்விக்குட்டி உழைமான்குட்டி புல்வாய்க்குட்டி என வரும். (கஙு)

569. மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பு மவையு மன்ன வப்பா லான.

இதன் பொருள் : மேலைச்சூத்திரத்தெடுத்தோதிய குரங்கிற்குக் குட்டியென்னும் பெயரேயன்றி மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்புமெனப்பட்ட இந்நான்கும் குட்டியென்னும்பெயர்போல அக்குரங்கின் பகுதிக்கு உரியவாம், என்றவாறு.

"உயர்கோட்டு மகவுடை மந்திபோல" எனவும், "குரங்குப் பிள்ளை" எனவும், "வரையாடு வன்பறழ்த் தந்தை" (குறுந்-26) எனவும்,

"ஏற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே"

எனவும் வரும். அன்னவென்பதனுன் முன்னையவற்றோடொக்கும், மிகுதி குறைவு இலவென்பதாம்.

"வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்" (குறுந்-38.)

என இலேசினுற் கூறிப்போந்தமையின் ஈண்டு அது கூறுதலையினுன். அன்றி, அஃது இத்துணைப் பயிலாமையானுமென்க. ஏழாமுறை நின்ற மகவினை ஈண்டு வைத்தான் அதிகாரப்பட்ட பெயர்க்குரிமையா னென்பது. (கசு)

570. யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையு
மாறை டைந்துங் கன்றெனற் குரிய.

இதன் பொருள்: ஐந்தாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற கன்றென்னும் பெயர்க்கு இவை உரிய, என்றவாறு.

அவை யானைக்கன்று குதிரைக்கன்று கழுதைக்கன்று ஆன்கன்று என வரும்.

"கன்றுடை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவும்" (அகம்-120.)

என்பது யானைக்கன்று.

"கன்றுபுகு மாலை நின்றே னெய்தி"

என்பது ஆன்கன்று. பிறவும் அன்ன உளவேற் கொள்க. இனி, உரியவென்றதனுனே மான்கன்று குதிரைக்குட்டியென்பனவுஞ் சொல்லுப. (கஅ)

571. எருமையு மரையும் வரையா ராண்டே.

இதன் பொருள்: எருமையும் மரையுங் கன்றெனப்படும், என்றவாறு.

அவை, எருமைக்கன்று மரைமான்கன்று என்பன வழக்கு.

"மன்றுடை மரையா துஞ்சுங்
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே"

என வரும். வரையாரெனவே அவையெல்லாம்போலாது சிறுவரவின என்பது பெற்றும். (கக)

572. கவரியுங் கராமு நிகரவற் றுள்ளே.

இஃது, அவற்றொடு மாட்டெறிந்தது.

இதன் பொருள்: கவரியுங் கராமுங் கன்றெனப்படும், என்றவாறு.

கவரிமான்கன்று கராக்கன்று என வரும். 'அவற்றுள்ளே' யென்பது முற்கூறிய ஏழனுண் முதனின்ற யானையோடொக்குமென்றவாறு. இதன் பயம் 'குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை' (தொல்-மர-19) என வருகின்றபெயரும் இவற்றுக் கெய்துவித்தலாயிற்று. அது முன்னர்ச் சொல்லுதும். இவையெல்லாந் தம்மிலொத்த வரவின அன்மையின் வேறுவேறு சூத்திரஞ் செய்கின்றவாறுயிற்று. (கஎ)

573. ஒட்டக மவற்றே டொருவழி நிலையும்.

இதன் பொருள்: சிறுபான்மை ஒட்டகமுங் கன்றெனப்படும், என்றவாறு.

அது ஒட்டகக்கன்று எனவரும். 'ஒருவழி'யென்றதனானே எவற்றினும் இது சிறுபான்மை யெனவுணர்க. (கஅ)

574. குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.

இதன் பொருள்: ஒழிந்துநின்ற குழவிப்பெயர் குஞ்சரத்திற்கு உரிய, என்றவாறு.

அது,

"ஒய்யென வெழுந்த செவ்வாய்க் குழவி" (அகம்-164.)

என வரும். ஙிகரவற்றுள்ளென மேற் குஞ்சரத்தோடொக்குமெனப் பட்ட காராத்தின்குழவியுங் கவரிக்குழவியும் வந்தவழிக் கண்டு கொள்க. (கக)

575. ஆவு மெருமையு மவைசொலப் படுமே.

இதன் பொருள்: ஆவும் எருமையும் அவைபோலக் குழவிப் பெயர்க்கொடை பெறும், என்றவாறு.

குஞ்சரம் ஆணும் பெண்ணுமென இருகூற்றன வாகலான் 'அவை' யென்றான். மக்கண்மேல் வருங்காலும் இஃதொக்கும்.

"மக்கட் குழவி யெனவந் தனரே
நோவே மாகுத லறிந்துஞ்
சேயர் தோழி செய்ந்நாட் டோரே"

என்பது ஆண்குழவி.

"மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுண்ணற் றுயில்வதியும்" (பத்து-பட்டி-14.)

என்றது எருமைக்குழவி. (உ0)

576. கடமையு மரையு முதனிலை யொன்றும்.

இதன் பொருள்: இவையும் அப்பெயர்க்கு உரிய, என்றவாறு.

குஞ்சரம்போலக் குழவிப்பெயர்பெறுமென்பான் முதனிலை யொன்றுமென்றானென்பது. அவை வந்துழிக் கண்டுகொள்க. (உக)

577. குரங்கு முசுவு மூகமு மூன்று
ஙிரம்ப நாடி னப்பெயர்க் குரிய.

இதன் பொருள்: இம்மூன்றுங் குழவியென்னும் பெயர்க்கு உரிய, என்றவாறு.

'கிரம்பாடின்' என்பது மூன்றுபெயரும் ஒருபிறப்பின் பகுதியாகலின் அம்மூன்றற்கும் ஒப்பவருமென்றவாறு.

இச்சூத்தானே 'கோடுவாழ்குரங்கு' (தொல்-மர-13) என்ற வழி இம்மூன்றுங் கொண்டாமென்பது. இவற்றுக்கு உதாரணங் காணுமையிற் காட்டாமாயினும். இலக்கணம் உண்மையின் அமையுமென்பது. (உஉ)

578. குழவியு மகவு மாயிரண் டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே.

இதன் பொருள்: குழவியும் மகவு மென்னும் இரண்டுமல்லது மக்கட்கணின்ற இளமை தமக்கு வேறுபெயருடையவல்ல, என்றவாறு.

பெண்ணிளமையுமென

அவற்றை அவையெனப் பன்மைகூறினான்.

"காவல், குழவிகொள் வாரி னேம்புமதி" (புறம்-5.)

எனவும்,

"மான்றேற் பள்ளி மகவொடு முடங்கி"
(பத்து-பெரும்பாண்-89.)

எனவும் வரும்.

'கிழவவல்ல' என்ற மிகையானே ஆண்பிள்ளை பெண்பிள்ளையெனப் பிள்ளைப்பெயரும் மக்கட்பாற்படுவன கொள்க. (உங)

579. பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே.

இதன் பொருள் : பிள்ளை குழவி கன்று போத்தென்னும் நான்கும் ஓரறிவுயிரின் இளமைப்பெயர், என்றவாறு.

ஓரறிவுயிரென்பன முன்னர்ச் சொல்லப்படும். ஓரறிவுயிரென்பது பண்புத்தொகை. 'கழுகம்பிள்ளை', 'தெங்கம்பிள்ளை' எனவும், "வீழி முழைக் குழவித் தீநீர்" (பத்து-பெரும்பாண்-357) எனவும், 'பூங்கன்று' எனவும், 'போத்துக்கால்' எனவும் வரும். வீழிமுழையெனப்பட்டது தெங்கு, போத்துக்காலென்பது கரும்பு. ஓரறிவுயிர்க்குக் கொள்ளவும் அமையும் என்னும் உம்மையை எச்சப்படுத்துப் பிற வழியுங் கொள்ளப்படும். அவை 'குழவிவேனில்' 'குழவித்திங்கள்' 'குழவிஞாயிறு' எனவும்,

"பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து" (அகம்-36.)

எனவும்,

"புலிப்போத் தன்ன புல்லணற் காளை"(பெரும்பாண்-138.)

எனவும் இவையும் இளமைக்குறிப்பினவாகலிற் காட்டப்பட்டு மற்று ஓரறிவுயிர் ஈண்டுக் கூறியதென்னையெனின், குழவிப்பெ அதிகாரப்பட்டமையானென்பது. மற்றுப் புல்லும் மரனும் உயிரெனப்படுமோவெனின் அவற்றை யுயிரென்றன் மரபுபட்ட வழக்காகலின் அம்மரபுங்கோடற்குக் கூறினன், மரம் உய்ந்ததென்பவாகலின். (உசு)

580. நெல்லும் புல்லு நேரா ராண்டே.

இஃது, எய்தியது விலக்குகின்றது.

இதன் பொருள் : அந்நான்கு பெயரானும் நெல்லும் புல்லுஞ் சொல்லப்படா, என்றவாறு.

மற்றுப் 'புறக்கா ழனவே புல்லென மொழிப' (தொல்-மர-85) எனுமாகலான் மேற்காட்டிய கழுகு முதலாகிய புல்லும் விலக்குண்ணும் பிறவெனின், அற்றன்று ; புல்லென்பது பலபெயரொரு

சொல்லாகலான் நெல்லென்னும் இனத்தானே வேறுபடுத்துப் புல் லென்பது உணவின்மேற் கொள்க. (உடு)

581. சொல்லிய மரபி னிளமை தானே
சொல்லுங் காலை யவையல திலவே.

இது, புறனடைச்சூத்திரம்.

இதன் பொருள்: சொல்லிய மரபின் இளமை - 'பாடலுட் பயின்றவை நாடுங் காலை' (தொல்-அகத்-51) எனவும், 'பாடல் சான்ற புலனெறி வழக்கு' (தொல்-அகத்-53) எனவும் அகத்திணையியலுட் கூறிய புலனெறி வழக்கிற்றழுகிய இளமை; சொல்லுங் காலை

வரும் இங்ஙனம் வரையறைப்பட்டன இன்றி, என்றவாறு.

ாமையும் அவையலதிலவெனவே அதற்கு மறுதலையாகிய மூதுமையாயின் அவையலதிலவென்பதோர் வரையறைப்படுத்து இலக் கணங் கூறப்படாவென்பது கருத்து. சொல்லுங்காலை யென்றதனாற் சொல்லாத இளமைப்பெயருங் கொள்க. அவை "நன்னுட் பூத்த நாகிள வேங்கை" (அகம்-85) எனவும், 'நாகுவளை' எனவும், "கணைக் கோட்டு வாளைக் கமஞ்சூன் மடநாகு" எனவும், "எருமை நல்லான் கருநாகு பொருஉம்" (பத்து-பெரும்பாண்-165) எனவும் வரும். இவற்றுள் ஓரறிவுயிர் முதலாக ஐந்தறிவுயிரளவும் நாகென் னும் இளமைப்பெயர் வரையறையின்றிச் சென்றது. வண்டென் பதற்கும் ஒக்கும், அது விரவுப் பெயராகலின். (உசு)

582. ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனெடு நாவே
மூன்றறி வதுவே யவற்றெடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றெடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றெடு செவியே
யாறறி வதுவே யவற்றெடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

இது, மேல் அதிகாரப்பட்ட ஒரறிவுயிர் உணர்த்தும்வழி அவ்வினத்தனவெல்லாங் கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஒன்றறிவதென்பது ஒன்றனையறிவது; அஃதாவது உற்றறிவதென்பதும்: இரண்டறிவதென்பது அம்மெய்யுணர்விலோடு நாவுணர்வுடையதெனவும், மூன்றறிவுடையது அவற்றோடு நாற்றவுணர்வுடையதெனவும், நான்கறிவது அவற்றோடு கண்ணுணர்வுடையதெனவும்: ஐந்தறிவது அவற்றோடு செவியுணர்வுடையதெனவும்: ஆறறிவுடையது அவற்றோடு மனவுணர்வுடையதெனவும், அம்முறையானே நண்ணுணர்வுடையோர் நெறிப்படுத்தினர், என்றவாறு.

இது முறையாதற்குக் காரணமென்னையெனின், எண்ணுமுறையாற் கூறினரென்பது. அல்லதூஉம், எல்லாவுயிர்க்கும் இம்முறையானே பிறக்கும் அவ்வவற்றுக்கோதிய அறிவுகளென்றற்கு அம்முறையாற் கூறினரென்பது. என்னை அதுபெறுமாறெனின், நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரென்பதனைப் பெறுதும். மற்று ஒன்றுமுதல் ஐந்தீறுமிய பொறியுணர்வு மனமின்றியும் பிறப்பனபோல வேறுகூறிய தென்னையெனின், ஒரறிவுயிர்க்கு மனமின்மையின் அங்ஙனங் கூறினரென்பது. அதற்கு உயிருண்டாயின் மனமின்றுமோவெனின், உயிருடையவாகிய நந்துமுதலாகியவற்றுக்குச் செவிமுதலாய பொறியின்மை கண்டிலேமோவென்பது. அவ்வாறே ஒழிந்தவற்றிற்கும் மனவுணர்வில்லை யென்பாரும் மனமுண்டென்பாருமென இருபகுதியர். அவையெல்லாம் வல்லார்வாய்க் கேட்டுணர்க. அல்லதூஉம் பொறியுணர்வென்ப தாமே உணரும் உணர்ச்சி; அங்ஙனம் உணர்ந்தவழிப் பின்னர் அவற்றை மனஞ் சென்று கொள்ளுமென்பதென்னையெனின் மனம் ஒன்றினையினையாகிற்க மற்றொன்று கட்புலனுயக்கால் அதனைக் பொறியுணர்வுகொள்ள அதன்வழியே மனந் திரிந்து செல்லுமாலின். என்னை? மனவுணர்வு மற்றோர்பொருட்கண் இன்றகாலத்துப் பிறபொருட்கட் சென்றதெனப் படாதன்றே? பின்னர் அதனை அறிவித்தது பொறியுணர்வாகலான் அவை தம்மின்வேற்றுமை யுடையன வென்பது. அல்லதூஉந் தேனெய்யினை நாவின்பொறி உணர்ந்தவழி இன்புற்றுங் கண்ணுள் வார்த்து மெய்யுணர்வுணர்ந்தவழித் தன்புற்

றும், நிறைதாயின மான்மதத்தினை மூக்குணர்வுணர்ந்தவழி இன்புற் றுங் கண்ணுணர்வுணர்ந்தவழி இன்பங் கொள்ளாமையும் வருதலின் அவை பொறியுணர்வெனப்படும். மனவுணர்வும் ஒருதன்மைத்தாகல் வேண்டுமாலெனின், ஐயுணர்வின்றிக் கனப்போலத் தானேயுணர்வது மனவுணர்வெனப்படும். பொறியுணர்வு மனமின்றிப் பிறவாதெனின் முற்பிறந்தது மனவுணர்வாமாகவே பொறியுணர்வென்பது ஓரறிவின் ருகியே செல்லுமென்பது. அற்றன்றியும் ஒருவனுறுப் பிரண்டு தீண் டியவழி அவ்விரண்டும் படினும் ஒருகணத்துள் ஒருமனமே இருமனப் பட்டு அவ்வுறுப்பிரண்டற்கும் ஊற்றுணர்வு கெடாது கவர்ப்ப வாங் கிக் கைக்கொண்டு மீளுமென்பது காட்டலாகாமையானும் அஃதமையா தென்பது. (உஎ)

583. புல்லு மரணு மோரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, முறையானே ஓரறிவுடையனவுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : புறக்காழனவாகிய புல்லும் அகக்காழனவாகிய மரனும் ஓரறிவுடைய. பிறவும் அக்கிளைப் பிறப்பு உள்ளன, என்ற வாறு.

கிளைப்பிறப்பென்பது கிளையும் பிறப்புமென்றவாறு. கிளையென் பன புறக்காழும் அகக்காழுமின்றிப் புதலுங் கொடியும் போல்வன. பிறப்பென்பன மக்களானும் விலங்கானும் ஈன்ற குழவி ஓரறிவின ஆகிய பருவமும் எஞ்ஞான்றும் ஓரறிவினவேயாகிய என்பில் புழுவு மென இவை. இவை வேறுபிறப்பெனக் கொள்க. மற்று இவற்றுக்கு அறிவில்லை பிறவெனின், பயிலத்தொடுங்காற் புலருமாகலின் ஓரறி வுடையவென வழக்குநோக்கிக் கூறினன், இது வழக்குநூலாதலின். அஃதேல், இவை உணர்ச்சியாயின் இன்பதுன்பங் கொள்ளுமோவெ னின் அதற்கு மனமின்மையின் அது கடாவன்றென்பது. (உஅ)

584. நந்து முரளு மீரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, முறையானே ஈருணர்வுடையன வுணர்த்துதல் நுத லிற்று.

இதன் பொருள் : நந்தும் முரலும் ஈரறிவாகிய ஊற்றுணர்வும் நாவுணர்வுமுடையன. பிறவும் அக்கிளைப் பிறப்பு உள, என்றவாறு.

நர சுவைக்கோடலும் பிறிதொன்று தாக்கியவழி அறிதலு முடைமையின் மெய்யுணர்வோடு நாவுணர்வு முடையனவென்றவாறு. இவற்றுக்குக் கிளையென்பன இளிஞ்சிலும் முற்றிலும் முதலாகிய கடல்வாழ் சாதியும் பிறவுமெனக் கொள்க. பிறப்பென்பன முற்கூறிய வாறே கொள்ளப்படும். (உக)

585. சிதலு மெறும்பு மூவறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, மூவறிவின கூறுகின்றது.

இதன் பொருள் : சிதலும் எறும்பும் ஊற்றுணர்வும் நாவுணர்வும் மூக்குணர்வுமுடைய. அவற்றுக் கிளையும் பிறப்பும் அவ்வாறே மூவறி வுடைய, என்றவாறு.

இவை உற்றுணர்ந்துமீடலும் நாச்சுவைகோடலும் நெய்யுள்வழி மோந்தறிதலுமென மூன்றறிவினையுடையவாறு கண்டுகொள்க. இவற் றுக்குக் கண்ணுஞ் செவியுமின்மை எற்றுன் அறிதுமெனின், ஒன்று தாக்கியவழியன்றி அறியாமையிற் கண்ணிலவென்பதறிதும். உரப்பிய வழி ஒடாமையிற் செவியிலவென்பதறிதும். இவற்றின் கிளையென் பன ஈயன்மூதா போல்வன. பிறப்பென்பன முற்கூறியவாறே மக்கட் குழவியும் விலங்கின் குழவியும் இம்மூன்றுணர்வாகிய பருவத்தனவும் அட்டை முதலாகியவுமெல்லாங் கொள்க. (கo)

586. நண்டுந் தும்பியு நான்கறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

நண்டுந் தும்பியும் நான்கறிவினவெனவும் அந்நாலறிவினை யுடைய கிளையும் பிறப்பும் வேறுளவென்பதூஉங் கூறியவாறு.

இதன் பொருள் : நண்டிற்குந் தும்பிக்குஞ் செவியுணர்வொத்து ஒழிந்த நான்கு உணர்வும் உள அவற்றுக் கிளையும் பிறப்பும் பிறவும் உள, என்றவாறு.

மெய்யுடைமையின் ஊற்றுணர்வும் இரைகோடலின் நாவுணர்வும் நாற்றங்கோடலின் மூக்குணர்வுங் கண்ணுடைமையிற் கண்ணுணர்வுமுடையவாயின. நண்டிற்கு மூக்குண்டோவெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பதுபெற்றும். இவற்றுக்குக் கிளையென்பன வண்டுந் தேனீயுங் குழவியும் முதலாயின. பிறப்பென்பன நான்கறிவுடைய பிறசாதிகளென முற்கூறியவாறே கொள்க. (கக)

587. மாவு மாக்களு மையறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இஃது, ஐயறிவுடையன கூறுகின்றது.

இதன் பொருள் : ஐயறிவுடையன விலங்கும் அவை போல்வன ஒருசார் மானிடங்களுமாம். அக்கிளைப்பிறப்புப் பிறவும் உள, என்றவாறு.

மாவென்பன நாற்கால்விலங்கு. மாக்களெனப்படுவார் மனவுணர்ச்சியில்லாதார். கிளையென்பன எண்கால் வருடையுங் குரங்கும் போல்வன. எண்காலவாயினும் மாவெனப்படுதலின் வருடைகிளையாயிற்று. குரங்கு நாற்காலவாகலிற் கிளையாயிற்று. பிறப்பென்பினை இளியும் பாம்பும் முதலாயின. மற்றுப் பாம்பிற்குச் செவியுங் கண்ணும் ஒன்றேயாகிச் சட்செவியெனப்படுமாகலின் ஐயறிவில்லை பிறவெனின், பொறியென்பன வடிவுநோக்கின அல்லவாகலின் ஒன்றே இரண்டுணர்விற்கும் பொறியாமென்பது. இளியென்பது பறவையாகலின் அதனை வேறோதுகவெனின், முன்னையவற்றிற்கும் பறவையென்றோதியதிலனாகலான் அவ்வச்சூத்திரங்களானே எல்லாம் அடங்கு

மென்பது. மற்றுப் புல்லும் மரனும் முதலாக இவ்விரண்டு பிறப் பெடுத்தோதி ஒழிந்தனவற்றையெல்லாம் பிறவுமுளவெனப் புறனடத்தனென்னையெனின், அவை வரையறையிலவாகலின் அங்ஙனங்கூறினான். அல்லதூஉம் மக்களும் புள்ளும் விலங்கும் முதலாயின ஓரறிவினவென்றும் ஈரறிவினவென்றும் எண்ணி வரையறுக்கப் படாமையானும் அவ்வாறுகூறினனென்பது. (கூ)

588 மக்க டாமே யாறறி வுயிரே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இஃது, ஆறறிவுயிர் கூறுகின்றது.

இதன் பொருள் : மக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வேயன்றி மனமென்பதோர் அறிவும் உடையர். அக்கிளைப் பிறப்பு வேறும் உள, என்றவாறு.

முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடூஉ மகடூஉ மக்களெனப்படும். அவ்வாறு உணர்விலுங் குறைவுபட்டாரைக் குறைந்தவகை அறிந்து முற்கூறிய சூத்திரங்களானே அவ்வப் பிறப்பினுட் சேர்த்திக்கொள்ள வைத்தானென்பது. அவை ஊமுஞ் செவிடுங் குருடும்போல்வன. கிளையெனப்படுவார் தேவருந் தானவரும் முதலாயினர். பிறப்பென்றதனாற் குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையனவெனப்படும் மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராயடங்குமென்பது. தாமேயெனப் பிரித்துக் கூறினமையான் நல்லறிவுடையாரென்றதற்குச் சிறந்தாரென்பதுங் கொள்க. (கூ)

589. வேழக் குரித்தே விதந்துகளிறென்றல்
கேழற் கண்ணுங் கடிவரை யின்றே.

மக்கடாமே ஆறறிவுயிரெனப் பிரித்துக் கூறினமையால் ஆண்பாற் அதிகாரப்பட்டதுகண்டு மற்றை விலங்கினுள் ஆண்பாற்குரியன கூறிய தொடங்கியவாறு. சிறுத்தமுறையாற் கூறாது களிற்றினை முற்கூறி

னுன் அப்பொருன் விலங்கினுட் சிறந்தமையானென்பது. ஏறும் ஏற்றையும் பயின்ற வரவினவாகலின் முதற்சூத்திரத்துண் முற்கூறினனெனென்பது.

இதன் பொருள் : யானைக்கு விதந்து களிறென்றலுரித்து ; கேழற்கண்ணுஞ் சிறுபான்மைவரும், என்றவாறு.

விதந்தென்ற விதப்பினுற் களிறென்பது சாதிப்பெயர்போலவும் நிற்குமென்பது. அஃதாவது, யானையென்னுஞ் சாதிப்பெயரினைக் களிறென்னும் பெயர்வந்து சிறப்பித்தாற் "கடுங்களிற் றெருத்தல்" (கலி-2) என்றும் ஆகுமென்பது. "இரலைமானேறு" என்பதும் அதனுற் கொள்க. பன்றிக்கும் அவ்வாறு வருவனவுளவேற் கொள்க. கேழற்பன்றி என்பதனைக் களிற்றுப்பன்றியென்றுஞ் சொல்லுப. (கூசு)

590. புல்வாய் புலியுழை மரையே கவரி
சொல்லிய காமோ டொருத்த லொன்றும்.

591. வார்கோட் டியானையும் பன்றியு மன்ன.

592. ஏற்புடைத் தென்ப வெருமைக் கண்ணும்.

இவை, உரையியையுநோக்கி உடனெழுதப்பட்டன.

இதன் பொருள் : இவை ஒன்பதுபெயரும் ஒருத்தலென்னும் பெயருக்கு ஒன்றும், என்றவாறு.

இவற்றைப் பெரும்பான்மை சிறுபான்மைபற்றி மூன்றுசூத்திரத்தான் ஓதினனென்பது. உதாரணம், "காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்" என யானை ஒருத்தலென்றுயிற்று. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (கூஎ)

593. பன்றி புல்வா யுழையே கவரி
யென்றிவை நான்கு மேறெனற் குரிய. (கூஅ)

594. எருமையு மரையும் பெற்றமு மன்ன. (கக)

595. கடல்வாழ் சுறவு மேறெனப் படுமே. (சo)

இம் மூன்றுசூத்திரத்தான் ஓதிய எட்டுச்சாதியின் ஆண்பாலும் ஏறெனப்படும், என்றவாறு.

"காற்றுச்சுவ டொற்றுக் கடிபுனங் கவரு
மேற்றிளம் பன்றியி னிருளே வெரூஉம்"

எனவும்,

"வெருளேறு பயிரு மாங்கண்"

எனவும்,

"பொரிமலர்ந் தன்ன *பொறியமை மடமான்
கிரிமருப் பேற்றெழு தேரறேர்க் கோடும்" (கலி-13.)

எனவும்,

"ஏற்றினங் கவரி யெரியென வெருவப்
பூத்த விலவத்துப் பொங்க ரேறி"

எனவும்,

"ஏற்றெருமை நெஞ்சம் †வடிட்பி னிடந்திடு" (கலி-103.)

எனவும்,

"வரிமரற் பரவை மரையேறு கொறிச்சும்"

எனவும்,

"புலம்டயி ரருந்த ‡வண்ண னல்லேறு" (குறுந்-344.)

எனவும்,

"சுறவே றெழுதிய மோதிரந் தொட்டாள்" (கலி-84)

எனவும் வரும். பிறவும் அன்ன. (சo)

---

* 'பொறியமடமான்' என்பதும் பாடம்.

† 'வடிம்பி னிடந்திட்டு' என்பதும் பாடம்.

‡ 'அண்ணலேறெழு' என்பதும் பாடம்.

596. பெற்ற மெருமை புலிமரை புல்வாய்
மற்றிவை யெல்லாம் போத்தெனப் படுமே.

597. நீர்வாழ் சாதியு ளறுபிறப் புரிய. (சூ2)

598. மயிலு மெழாலும் பயிலத் தோன்றும். (சூ3)

இதன் பொருள்: போத்தென்னும்பெயர் இப் பதின்மூன்று சாதியின் ஆண்பாற்கு மூரியது, என்றவாறு.

மற்றிவையெல்லாமென்றதனாற் பன்றியும் ஒத்தியும் முதலாயினவுங் கொள்ளப்படும். நீர்வாழ்சாதியுள் அறுபிறப்பென்பன சுறாவும் முதலையும் இடங்கருங் கராமும் வராலும் வாளையுமென இவை. பயிலத்தோன்றுமென்றதனானே நாரைமுதலியனவுங் கொள்க. மற்றிவை பயிலத்தோன்றுமெனிற் சூத்திரம் வேறு செய்ததென்னை? மூதற்சூத்திரத்துள் எண்ணுக பிறவெனின், இவை பறவையுட் பயிலத்தோன்றுமாகலின் வேறோதினு னெனக. 'எறிபோத்து' 'உழுபோத்து' எனவும், "புலிப்போத் தன்ன புல்லணற் காளை" (பத்து-பெரும்பாண்-138) எனவும் 'மரைப்போத்து' எனவும் "சுவைத்தலை முதுபோத்து மறிக்கு மிழலாகும்" எனவும் வரும்.

எல்லாமென்றதனாற் பன்றிப்போத்தெனவும் வரும்.

"முதலைப் போத்து முழுமீ னருந்
பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து"

எனவும்,

"வாளைவெண்போத் துணீஇய"

எனவும் நீர்வாழ்சாதியுட் சில வருமாறு.

"மயிற்போத் தார்ந்த வயிற்படை நெடுவேள்"

எனவும்,

"போத்தோடு வழங்கா மயிலு மெழாலும்"

எனவும் வந்தவாறு.

'பயில'என்றதனால்,

"நாரைப்போத் தயிரை யாரும்"

எனவும் ஒழிந்தனவும் இவ்வாறே கண்டுகொள்க. மற்று முதலியும் இடங்கருங் காராமுந் தம்மின் வேறெனப்படுமோவெனின்,

"காராஅங் கலித்த குண்டுகண் ணகழி
யிடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்ஞிழற் கதூஉங்
கடுமுரண் முதலிய நெடுநீ ரிலஞ்சி" (புறம்-37.)

என வேறெனக் கூறப்பட்டனவென்பது.

ரிச் செம்போத்தென்பதும் ஈண்டுக் கொள்ளாமோவெனின், அது பெண்பாற்கும் பெயராகலின் ஒருபெயரே பண்புகொள்பெயரன் றென்பதுணர்க. (சஉ)

599. இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய. (சக)

600. கலையென் காட்சி யுழைக்கு முரித்தே. (சஎ)

601. நிலையிற் றப்பெயர் முசுவின் கண் ணும். (சஅ)

இவை மூன்றுசூத்திரமும் எண்ணிய மூன்றுசாதிக்கும் இரலையுங் கலையுமென்னும் ஆண்பாற் பெயர் இன்னவா றுரியவென்கின்றன.

இதன் பொருள் : இரலையுங் கலையுமென்பன புல்வாய்க்குரிய ; அவற்றுட் கலையென்பது உழைக்குரித்து ; அக்கலையென்பது முசுவிற்கு வருங்கால் உழைக்குப்போலச் சிறுவரவிற்றன்றி வரும், என்றவாறு.

"புல்வா யிரலை நெற்றி யன்ன" (புறம்-374.)

எனவும்,

"கவைத்தலை முதுகலை காலி னெற்றி" (குறுந்-213)

எனவும்,

" கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலே " (அகம்-97.)

எனவும்,

" மைபட்டன்ன மாமுக முசுக்கலே "

எனவும் வரும்.

முசுவிற்கு கிலேபெற்றதனவே அத்துணை கிலேபேறின்றிக் குரங் கிற்கு வருவனவுங் கொள்க. அது,

" கருங்கட் டாக்கலே பெரும்பிறி துற்றென " (குறுந்-69.)

என வருமாற்றுன் அறிக. (அ)

602. மொத்தையுந் தகரு முதலு மப்பரும் யாத்த வென்ப யாட்டின் கண்ணே.

இதன் பொருள்: இக் கூறப்பட்ட நான்குபெயரும் யாட்டிற்குரிய, என்றவாறு. அவை,

" வெள்யாட்டு மொத்தை "

எனவும்,

" தகர்மருப் பேய்ப்பச் சுற்றுபு திரிந்த "

எனவும்,

" உதணெடுந்-தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில் "

எனவும் வரும்.

அப்பரென்பது இக்காலத்து வீழ்ந்தது போலும். யாத்தவெண் முதலுந் கடாவென்பதும் யாட்டிற்குப் பெயராகக் கொள்க. அது,

" கிலேக்கோட்டு வெள்ளே நரல்செவிக் கடாஅய் "

(அகம்-155.)

என வரும்.

இனிக் குரங்கினே அப்பரென்றலும் கொள்க. (ஆ)

603. சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு
மாயிருந் தூவி மயிலலங் கடையே.

இதன் பொருள் : பறப்பனவற்றுள் ஆண்பாற்கெல்லாஞ் சேவற் பெயர் உரித்து, அவற்றுண் மயிற்காயின் அஃதாகாது, என்றவாறு.

"காமர் சேவ லேமஞ் செப்ப"

எனவும்,

"வலைக்கட் சேவல் வாளாது மடியின்"

எனவும்,

"தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்" (குறுந்-107.)

எனவும்,

"கானங் கோழிக் கவர்குரற் சேவல்"

எனவும்,

"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்" (குறுந்-85.)

எனவும் வரும். பிறவும் அன்ன.

'மாயிருந் தூவிமயில்' என்றதனுன் அவை தோகையுடையவாகிப் பெண்பால் போலுஞ் சாயலவாகலான் ஆண்பாற்றன்மை இலவென் பது கொள்க. எனவே, செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் சேரவும்படுமென்பது. (சஅ)

604. ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா
மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப.

இதன் பொருள் : ஏற்றையென்னுஞ்சொல் ஆற்றலொடு கூடிய ஆண்பாற்கெல்லாம் உரித்து என்றவாறு. அவை,

"குறுங்கை யிரும்புலிக் கொள்வ லேற்றை" (ஐங்குறு-216.)

எனவும்,

"செந்நா யேற்றை கம்மென வீர்ப்ப"

எனவும்,

"கொடுந்தாண் முதலைக் கொள்வ லேற்றை"

எனவும் வரும்.

இக் கருத்திலேனே,

"பிணர்மோட்டு நந்தின் பேழ்வா யேற்றை" (அகம்-245.)

எனவும்,

"புன்ருள் வெள்ளெலி மோவா யேற்றை"

அவையும் அப்பெயரானே வழங்குதல் ஆற்றலுடைய்வாகத் தோன்றும். எல்லாமென்றதனுற் சிறுபான்மை ஆற்றல் இல்லாதனவும் கொள்க. அது "சுடுகாட்டு ளேற்றைப் பினை" என்பது போன்று வருவன. பிறவும் அன்ன.

605. ஆண்பா லெல்லா மாணைனற் குரிய
பெண்பா லெல்லாம் பெண்ணைனற் குரிய
காண்ப வவையவை யப்பா லான.

இது, மேற்கூறிய ஆண்பாற்பெயர்க்கும் இனிவரும் பெண்பாற் பெயருக்கும் புறனடை.

இதன் பொருள் : ஆணென்னுஞ்சொல் எல்லாச்சாதியுள் ஆண் பாற்கும் உரித்து; பெண்ணென்னுஞ்சொல் எல்லாச்சாதியுட் பெண் பாற்கும் உரித்து; வழக்கினுள் அவ்வாறு காணப்படும் அவை, என்ற வாறு.

அவை ஆண்யானை, பெண்யானை; ஆண்குரங்கு, பெண்குரங்கு; ஆண்குருவி, பெண்குருவி என்ருற்போல்வன. இவை காணப்படும் எனவே இத்தினை விளங்கவாராது சிறவரவினுன் வருவனவுமுள

இருபாலு மல்லாதனவென்பது. ஆணலி பெண்ணலி எனவும், ஆண்பலி பெண்பலி எனவும் வரும். பிறவும் அன்ன. (60)

606. பிடியென் பெண்பெயர் யானை மேற்றே.

இது, முறையானே மூன்றும் எண்ணுமுறைமைக்கணின்றபெண்மைப்பெயர் கூறிய தொடங்கி ஆண்பாலிற் களிறு முற்கூறியவாறு போலப் பிடியினை முற்கூறியது.

இதன் பொருள் : பிடியென்னும் பெயர் யானைக்கண்ணது,

"பிடியடி முருக்கிய பெருமாப் பூசல்"

என வரும். பெயரென்றதென்னையெனின், அவை தொடங்குகின்றதென்பது அறிவித்தற்கென்பது. (61)

607. ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய.

இதன் பொருள் : ஒட்டகமுங் குதிரையுங் கழுதையும் மரையாவும் பெட்டையென்னும் பெயர்பெறும், என்றவாறு.

ஒட்டகப்பெட்டை குதிரைப்பெட்டை கழுதைப்பெட்டை மரையான்பெட்டை என வரும். (62)

608. புள்ளு முரிய வப்பெயர்க் கென்ப.

இதன் பொருள் : எல்லாப்புள்ளும் பெட்டையென்னும் பெயரான் வழங்குதற்குரிய, என்றவாறு.

அவை கோழிப்பெட்டை மயிற்பெட்டை யெனவரும். பிறவும் அன்ன. (63)

609. பேடும் பெடையு நாடி லென்றும்.

இதன் பொருள் : பேடையும் பெடையுமென்னும் இரண்டும் முன்னர்கின்ற புள்ளிற்கு ஒன்றும், என்றவாறு.

அவை குயிற்பேடை அன்னப்பெடை என வரும். 'நாடின்'என் றதனாற் பெட்டையென்பது வழக்கினுட் பயிலாவென்பது. (நெ)

610. கோழி கூகை யாயிரண் டல்லவை
சூழுங் காலை யளகென லமைபா. (ஙஙி)

611. அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே.

இதன் பொருள் : கோழியுங் கூகையும் மயிலுமென்பனவற்றுக்கு அளகென்னும் பெயர் உரியது, என்றவாறு.

"மனையுறை யளகின் வாடலோடு பெறுகுவிர்"

என்பது கோழி. பிறவும் அன்ன. (நெ)

612. புல்வாய் நவ்வி யுழையே கவரி
செல்வப் நாடிற் பிணையெனப் படுமே.

இதன் பொருள் : பிணையென்னும் பெண்பெயர்க்குரியன இவை நான்கும், என்றவாறு.

"அலங்கல் வார்கழை *யுதிரனென் றேக்கிக்
கலைபிணை விளிக்குங் கானத் தாங்கண்" (அகம்-128.)

எனவும்,

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை"

எனவும்,

"சிறுதலை நவ்விப் பிணையிற் றிரிந்த
நெரிகோட்டு"

எனவும்,

* 'முதிர்நென் றேக்கி என்பதும் பாடம்.

"கவரி மான்பிணை நரந்தங் கனவும்"

எனவும் வரும்.

'சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே' என்பது பிணையென்னுஞ் சொற்பொருளினை உண்மைநோக்கிற் பிரியாது பிணையும் பிறசாதிக்குஞ் சேவற்குஞ் சொல்லுமாயினும், மரபுநோக்கப் பிணையென்றற்குச் சிறப்புடையன இவை யென்றவாறு. (இ)

613. பன்றி புல்வாய் நாயென மூன்று
மொன்றிய வென்ப பிணவின் பெயர்க்கொடை.

இதன் பொருள் : இவை மூன்றுசாதியும் பிணவென்னும்பெயர்க் குரியன, என்றவாறு.

"நெடுந்தாட் செந்தினைக் கெழுந்த கேழல்
குறுந்தாட் பிணவொடு குறுகல் செல்லாது"

எனவும்,

"குறியிறைக் குரம்பைக் குறத்தி யோம்பிய
மடநடைப் பிணவொடு கவர்கோட் டிரலை"

எனவும்,

"நாய்ப்பிண வொடுங்கிய கிழநரி யேற்றை"

எனவும்,

"முள்ளெயிற் றம்பிணப் பசித்தெனப் பசுங்கட்
செந்நா யேற்றைக் கேழ லுக்க"

எனவும் வரும்.

'ஒன்றிய' என்றதனான்,

"ஈருயிர்ப் பிணவின் வயப்பசி களைஇயர்"

எனப் புலிக்குங் கொள்க. பிறவும் அன்ன. (இ)

614. பிணவ லெனிணு மவற்றின் மேற்றே.

இதன் பொருள்: பிணவலென்பதூஉம் அம்மூன்றற்கும் உரித்து, என்றவாறு.

"இரியற் பிணவ றீண்டலின்" என்பது பன்றி. "நான்முகப் பிணவல் சேர்கலி தாஞெழித்து" என்பதும் அது. ஒழிந்தனவும் அன்ன. (இக)

615. பெற்றமு மெருமையு மரையு மாவே.

இது, மேல் அந்தஞ்சான்றதென்னும் இலேசினுனே ஆவென்பது தழீஇக்கொண்டமையின் அஃது இன்னுழியாகா என்கின்றது.

இதன் பொருள்: ஆவென்னும் பெயர் பெற்றமும் மரையும் எருமையும் பெறும், என்றவாறு

அவை "புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி" எனவும், "கேற்றுவிலை முனேஇய செங்கட் காரா" (அகம்-46) எனவும், "மரையா மரல் கவர மாரி வறப்ப" (கலி-6) எனவும் வரும். (கூ0)

616. பெண்ணும் பிணவு மக்கட் குரிய.

இதன் பொருள்: பெண்ணும் பிணவும் உயர்திணேப் பெண்மைக்குரிய, என்றவாறு.

பெண்ணென்பது 'பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய' (தொல்-மர-50) என்றமையின், ஈண்டுக் கூறுதன் மிகையாம்பிறவெனின், அற்றன்று; அச்சூத்திரம் அஃறிணையதிகாரமாகலின், ஈண்டு விதந்தோதினுனென்பது. ஒன்றெனமுடித்தலென்பதனுன் உயர்திணை ஆணென்பதும் ஈண்டே கொள்ளப்படும். "பெண்கோ னொழுக்கம் கண்டுகொன நோக்கி" எனவும், "ஈன்பிண வொழியப் போகி" (பத்து-பெரும்பாண்-90) எனவும் வரும். "ஆண்கடை ஞகலிற் பாண் கடை ஞற்றி" என ஆணென்பது உயர்திணைக்கண் வந்தது. பிறவும்

அன்ன. பிணவென்னும் ஆகாரவிறுதி வன்கணமன்மையிற் குறியதன் இறுதிச் சினை கெட்டு உகரம்பெறுது நின்றது. மக்கட்குரியவெனவே உரியவன்றித்

" துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தென " (அகம்-146.)

எனப் புலிமுதலியனவற்றிற்குங் கொள்க. (கக)

617. எருமையு மரையும் பெற்றமு நாகே. (கஉ)

618. நீர்வாழ் சாதியு ணைந்து நாகே. (கங)

இதன் பொருள்: இந்நான்கற்கும் நாகெனும்பெயர் உரித்து, என்றவாறு.

" எருமை நல்லான் கரிநாகு பெறினுஉம் " எனவும், " உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ யூர்வயிற் பெயரும் பொழுதின் " எனவும், " நாகிள வஞையொடு பகன்மணம் புகுஉம் " (புறம்-266) எனவும் வரும். (கங)

619. மூடுங் கடமையும் யாடல பெறு.

இதன் பொருள் : இவ்விருபெயரும் யாட்டிற்கேயுரிய பெண்மைப்பெயர், என்றவாறு.

இவை இப்பொழுது வழக்கினுள் அரிய. (கச)

620. பாட்டி யென்பது பன்றியு நாயும். (கஅ)

621. நரியு மற்றே நாடினர் கொளினே. (கக)

இதன் பொருள் : பாட்டியென்று சொல்லப்படுவன பன்றியும் நாயும், நரியும், என்றவாறு.

பிறவும் அன்ன.

622. குரங்கு முசுவு மூகமு மந்தி.

இதன் பொருள் : இம்மூன்று சாதிப் பெண்பாலும் மந்தியென்னும் பெயர்பெறும், என்றவாறு.

"கைம்மை யுய்யாக் காமர் மந்தி" (குறுந்-69) எனவும், "கருமுக மந்தி செம்பி னேற்றை" எனவும் வரும்.

ஊக்கத்துக்கும் இஃதொக்கும்.

623. குரங்கி னேற்றினைக் கடுவ னென்றலு
மரம்படியில் கூகையைக் கோட்டா னென்றலுஞ்
செவ்வாய்க் கிளியைத் தத்தை யென்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலுங்
குதிரையு ளாணினைச் சேவ லென்றலு
மிருணிறப் பன்றியை யேன மென்றலு
மெருமையு ளாணினைக் கண்டி யென்றலு
முடிய வந்த வவ்வழக் குண்மையிற்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே.

இது, மரீஇவந்து முடிந்த மரபுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஆண்குரங்கினைக் கடுவனென்றலும், மரப்பொதும்பினுள் வாழுங் கூகையைக் கோட்டானென்றலும், செவ்வாய்க் கிளியைத் தத்தையென்றலும், வெருகினைப் பூசையென்றலும், ஆண்குதிரையைச் சேவலென்றலும், இருணிறப் பன்றியை ஏனமென்றலும் எருமையேற்றினைக் கண்டியென்றலும், அவ்வாறுமுடிந்த வழக்குண்மையிற் கடியப்படா கடப்பாடு அறிந்தோர்க்கு, என்றவாறு.

"கடுவனு மறியுமக் கொடியோ னேயே." ஆண்குரங்கு. இதனைக் கடியலாகாதெனப்பட்ட இழுக்கென்னையெனின், மக்கட்கும் வெருகிற்கும் அக்காலத்துப் பயின்றனபோலுமாதலின். கூகையைக் கோட்

டானென்றலும் வழக்காகலான் அமையும், மரம்பயில் கூகையென்ற தென்னையெனின், மரக்கோடு விடாமையிற் கோட்டானென்னும் பெயர்பெற்றதென்றற்கு. தத்தையென்பது பெருகிளியாதலிற் சிறு கிளிக்கும் அப்பெயர்கொடுத்த லமையுமென்றவாறு. செவ்வாய்க் கிளி யென்றதனைச் சிறுகிளிமேற்கொள்க. வெவ்வாய் வெருகென்றதனாற் படப்பை வேலியும் புதலும் பற்றி விடக்கிற்கு வேற்றுயிர்கொள்ளும் வெருகினை இல்லுறை பூசையின் பெயர்கொடுத்துச் சொல்லலும் அமையுமென்றவாறு. குதிரையைச் சேவலென்றல் இக்காலத்தரிதா யிற்று. அதுவுஞ் சிறகொடு சிவணுதாயினும் அதனைக் கடுவிசைபற் றிப் பறப்பதுபோலச் சொல்லுதல் அமையுமென்பது கருத்து. எருமை யேற்றினையுங் கண்டியென்பபோலும். அதுகாணலாயிற்றில்லை. அதனை இலக்கணவகையாலுடைய பெயரென்றலுமாம். இதுபொழு தின் றென்பது கடனறிந்தோரென்றதனால் வழக்கினுஞ் செய்யுளினும் அவை வந்தமையிற் கடப்பாடறிவோர்க்குக் கடியலாகாதென்றவாறு. இன்னும் இப்பரிகாரத்தாலே கோழியை வாரணமென்றலும், வெரு கினை விடையென்றலும் போல்வன பலவுங்கொள்க. அவை,

"கான வாரண
காடாகி விளியு நாடுடை யோரே" (புறம்-52.)

எனவும்,

"வாரணக் கொடியொடு வயிற்பட னீஇ" (திருமுரு-219.)

எனவும்,

"வெருக்கு விடையன்ன வெருணோக்குக் கயந்தலை"

எனவும் வரும். (சுஅ)

624. பெண்ணு மாணும் பிள்ளையு மவையே.

இதுவுமது. பெண் ஆணென்பன இருதிணைப்பெண்மைக்கும் ஆண்மைக்கும் பொதுவென்பன முற்கூறினன், மேல் ஒன்றற்குரிய பெயர் மீஇவந்து பிறிதொன்றற்காயவழியுங் கடியலாகாதென்கின்ற

அதிசாரத்தான் இவையும் அவ்வாறே திரியினும் கடியலாகாதென்ற வாறு.

இதன் பொருள் : பெண்ணும் ஆணும் பிள்ளையுமென வாளாது சொல்லியவழி உயர்திணைக்கேற்றன மரீஇவந்த மரபு, என்றவாறு.

மகச்குழவியென்பனவோவெனின், அவை அத்திணைப்பயின்றில உயர்திணைக்கென்பது. எடுத்தோதிய மூன்றும் ஆயின. வாளாதே பெண்வந்ததென்றவழி அஃறிணைப்பொருளென்பது உணரலாகாது, 'பெண்குரங்கு வந்தது' என விதந்தே கூறல்வேண்டுமென்பது. 'பெண் பிறந்தது' 'ஆண்பிறந்தது' 'பிள்ளைபிறந்தது' என அடையடாது சொல்லியவழி உயர்திணைக்கேயாம். அஃறிணைக்காயின் அற்றன் றென்பது. (சுக),

625. நூலே கரக முக்கோன் மணையே
யாயுங் காலை யந்தணர்க் குரிய.

இஃது, உயர்திணை நான்குசாதியும பற்றிய மரபு உணர்த்து முறையானே அந்தணர்க்குரிய மரபுபட்டுவருங் கலப்பைவேறுபாடு ற்று.

இதன் பொருள் : மூந்நூலுங் குண்டிகையும் முக்கோலும் யாமை மணையும் போல்வன அந்தணர்க்கு உரிய, என்றவாறு.

'ஆயுங்காலை' யென்றதனற் குடையுஞ் செருப்பும் முதலாயினவும் ஒப்பன அறிந்துகொள்க.

உதாரணம் :

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்"

எனவும்,

"தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே"

எனவும் வரும்.

இன்னும் 'ஆயுங்காலை' யென்றதனால், ஒருகோலுடையார் இருவருளர், அவர் துறவுறத்து நின்றாராகலின் உலகியலின் ஆராயப்படாரென்பது. முக்கோலுடையார் இருவருட் பிச்சை கொள்வானும் பிறண்டிருந்து தனதுண்பானும் உலகியலின் நீங்காமையின் அவரையே வரைந்தோதினனென்பது. மற்று அரசர்க்கும் வணிகர்க்கும் உரிய நூலினை ஈண்டு வரைந்தோதினதென்னையெனின், ஒருகோலுடையான் நூல்களைவாளுகலின் அவனுஞ் சிறுபான்மை அந்தணனெனப்படுமென்பது கோடற்குங் காரகமும் மாணையும் உடையனென்றற்குமென்பது. நூலினை முற்கூறினான் பிறப்புமுறைபானுஞ் சிறப்புமுறைபானுமென்பது. இனிக் குடிமியுங் குசையும்போல்வன வேலன், அது முன்னரும் பின்னரும் வருதலானும் மன்னரும் வணிகரும் பெறுதலானுமென்பது. (எ0)

626. படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய.

இது, முறையானே அரசர்க்குரியன கூறுகின்றது.

இதன் பொருள் : கொடிப்படையுங் கொடியுங் குடையும் முரசுங் குதிரையும் யானையுந் தேருந் தாரும் முடியும் பொருந்துவன பிறவும் அரசர்க்குரிய, என்றவாறு.

பிறவும் என்றதனாற் கவரியும் அரியணையும் அரண்முதலாயினவுங் கொள்க. தெரிவுகொள் செங்கோல் அரசரென்றதனானே செங்கோல் கொளப்பட்டது. தாரெனவே போர்ப்பூவுந் தார்ப்பூவும் அடங்கின. படையென்புழி நடைநவில் புரவியுங் களிறுந் தேரும் அடங்காவோவெனின், அடங்கும். அவைநோக்கிக் கூறினனல்லன். அவை பட்டஞ்சாத்தியவாதல் நோக்கிக் கூறப்பட்டன. அஃதேல், தேர்கூறியதென்னையெனின், அதுவும் அவைபோல அரசர்க்கே உரியதென்றுளதென்றற்கும், அதுபூண்டகுதிரையும் அவர்க்கேயுரியவென்

னுளவென்றற்குங கூறினனென்பது. இக்கருத்திலுற்போலும் கடைகவில்புரவியெனச் சிறப்பித்து அதனை முற்கூறியதென்பது. எல்லாவற்றினுஞ் சிறந்ததாதலான் முடி பிற்கூறப்பட்டது. தெரிவுகொள் செங்கோல் அரசரென்பதனுன் அரசரெல்லாந் தங்நாட்டு நன்றுந் தீதும் ஆராய்ந்து அதற்குத் தக்க தண்டஞ் செய்தற்கு உரிமையும் அதுவெனக்கொள்க. (எக)

627. அந்த ணுளர்க் குரியவு மரசர்க் கொன்றிய வருஉம் பொருளுமா ருளவே.

இது, மேலதற்கோர் புறனடை.

இதன் பொருள்: அந்தணுளர்க்கு உரியவென மேல் ஓதப்பட்டனவற்றுண் மூந்நூலும் மணையும்போல்வன அரசசாதிக்குரியவாகியும் வரும், என்றவாறு.

'பொருளுமாருள வென்றதனுன், அந்தணுளர்க் குரியனவற்றுள் வேள்விக்கலப்பைபொன்றிவருதல் பெரும்பான்மையென உணர்க. ஈண்டு அவற்றை விதந்தோதினுன் ஒழிந்த புலனெறிவழக்கினுட் பாலாமையினென்பது.

'அறுவகைப பட்ட பார்ப்பனப் பக்கமு
மைவகை மரபி னரசர் பக்கமு
மிருமூன்று மரபி னேனோர் பக்கமும்' (தொல்-புறத்-20.)

பற்றி வாகைப்பொருள் பிறத்தலின் அவற்றைப் புறத்திணையியலுட் கூறினுன். ஆயினும், ஈண்டுத் தழீஇக்கொள்ளப்படும் மரபுவகையாஞனென்பது. என்போலவெனின், 'அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு' (தொல்-எழுத்-நூன்-31) என நூன்மரபினுள் ஓதிய மூவகைச்சுட்டினை இடைச்சொலோத்தினுள் ஓதாஞயினுன், அதுபோலவென்பது. "கொன்றுசளம் வேட்ட ஞான்றை" (அகம்-36) எனவும் "அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" (புறம்-26) எனவும் அரசர்க்கு வேள்விகூறினவாறு. பிறவும் அன்ன. (எஉ)

628. பரிசில்பா டாண்டிணைத் துறைக்கிழ மைப்
நெடுந்தகை செம்ம லென்றிவை பிறவும் [பெயர்
பொருந்தச் சொல்லுத லவர்க்குரித் தன்றே.

இஃது, ஐயம் அறுத்தது; அந்தணாளர்க்குரியன அரசர்க்கு மூரியன உளவெனக் கேட்ட மாணாக்கன் அரசர்க்குரியனவும் அந்தணர்க்குரியகொல்லென்று ஐயுறுமற் காத்தமையின். இஃது எய்திய தன்மேற் சிறப்புவிதியெனினும் அமையும். என்னை? ஈண்டு ஓதப்பட்டவை அரசர்க்குரியவென்பது கொள்ளவைத்தமையின்.

இதன் பொருள்: பரிசில்–பரிசில்கடாநிலையும், பரிசில்விடையும் போல்வன; பாடாண்டிணைத்துறைக்கிழமைப்பெயர்–பாடாண்டிணைக்குரிய கைக்கிளைப் பொருள்பற்றியுங் கொடைத்தொழில்பற்றியும் பெறும்பெயர்; அவை காளை இளையோன் என்பன போல்வன: அவையும் நெடுந்தகை செம்மலென்பன முதலாயினவும் இவைபோல்வன பிறவும் புனைந்துரை வகையாற் சொல்லினல்லது சாதிவகையாற் கூறுதல் அந்தணர்க்குரித்தன்று, என்றவாறு.

பரிசில்கடாநிலையும் பரிசில்விடையும் போல்வன கூறியுங் கைக்கிளைப்பொருள் கூறியுங் கொடைத்தொழில் கூறியும் அவற்றுக்கேற்ப எடுத்தோதிய பெயர்கூறியும் அந்தணரைத் தன்மை வகையாற் செய்யுள் செய்யப் பெறுரென்பது கருத்து. புனைந்துரை வகையான் அவையாமாறு: ''எண்ணுணைப் பலவேட்டு மண்ணுணைப் புகழ்பரப்பியும்'' என வரும். கொடுத்தற்றொழில் வேள்விக்காலத்ததென வரையறுத்தலிற் பொருந்தக்கூறுதல் அவர்க்குரித்தன்றென்றுரைனென்பது. பாடாண்டிணைத்துறைப் பெயரென்னுது கிழமைப்பெயரென்றதென்னையெனின், அவை ஐந்திணைப்பெயராகி வருங்காலும் அவர்க்குரியவல்லவென்றற்கு. எனவே, அரசர்க்காயின் இவையெல்லாம் உரியவென்பவாயிற்று. மற்றுப் பாடாண்டிணைக்குரியவல்லவென மற்றைத்திணைக்கிழமைப்பெயர் உரியவாம் பிறவெனின், அஃது 'இடையிரு வகையோ ரல்லது நாடிற்-படைவகை பெறூர்' (தொல்-மர-76) என மேற்கூறி விலக்குமென்பது. (எஉ)

629. ஊரும் பெயரு முடைத்தொழிற் கருவியும்
யாருஞ் சார்த்தி யவையவை பெறுமே.

இது, மேற்கூறிய அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியனவற்றொடு ஒழிந்த சாதியோர்க்கும் ஒப்பன உடன்கூறுகின்றது.

இதன் பொருள் : நான்கு சாதியாரும் பிறந்த ஊரும் அவர்தம் பெயரும் அவர்சாதிக்கு உரித்தென்றற்கேற்ற கருவியும் யாருஞ் சார்த்தப்பட்டவை அவை பெறுப, என்றவாறு.

இம்மூன்றும் வரையறுத்துச் சொல்லப்படா எல்லாச் சாதியார்க்கும் ஒப்பச்செல்லுமென்பது கருத்து. எற்றுக்கு ? இவை சாதிபற்றி வேறுபடாப் பொருளாகலின். ஊரும் பெயருமென்பன, உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூர் நருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரியன ; உறையூர்ச் சோழன், மதுரைப்பாண்டியன் என்பன அரசர்க்குரியன ; காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணன், மதுரை அறுவைவாணிகன் இளவேட்டன் என்பன வணிகர்க்குரியன; அம்பர்கிழான் நாகன், வல்லங்கிழான்மாறன் என்பன வேளாளர்க்குரியன. இனி, உடைத்தொழிற் கருவியென்பன, அந்தணாளர்க்குச் சுருவையுஞ் சமிதைகுறைக்கும் கருவியும் முதலாயின ; வணிகர்க்கு நாவாயும் மணியும் மருந்தும் முதலாயின ; வேளாளர்க்கு நாஞ்சிலுஞ் சகடமும் முதலாயின. பிறவும் அன்ன. அவையெல்லாம் அவரவர் செய்யுட்குரியவென்பது. (எச)

630. தலைமைக் குணச்சொல்லுந் தத்தமக் குரிய
நிலைமைக் கேற்ப நிகழ்த்துப வென்ப.

இதுவும் அது.

இதன் பொருள் : அந்நான்குசாதியார் தலைமைக்குணம்படச் சொல்லுஞ் சொல்லும் அவரவர்க்குரிய நிலைமைக்கேற்ப நிகழ்த்தவும் படும், என்றவாறு.

அந்தணர் தலைமைக்குணங் கூறுங்காற் பிரமனோடு கூறியும், அரசரை மாயனோடு கூறியும், வணிகனை நிதியின்கிழவனோடு கூறியும், வேளாண்மாந்தரை வருணனோடு கூறியுந் தலைமைக்குணச்சொல் நிகழ்த்தப்படும். அவையெல்லாம் அவரவர் செய்யுளுட் கண்டு கொள்க. (எ)

631. இடையிரு வகையோ ரல்லது நாடிற்
படைவகை பெரூஉ ரென்மனர் புலவர்.

மேல் நான்கு வருணத்தாரையும் உடன் கூறிவந்தான், இது முதலும் கடையும் ஒழித்து இடைநின்ற இருவருணத்தார்க்கும் ஆவதோர் புறனடை கூறுகின்றது.

இதன் பொருள் : அரைசரும் வணிகருமல்லது படைப்பகுதி பெரூர், என்றவாறு.

படைப்பகுதியென்பன வேலும் வாளும் வில்லும் முதலாயின. நாடினென்பதனால் ஒருசார் அந்தணரும் படைக்குரியாரென்பது கொள்க. அவர் இயமனியாருந் துரோணனும் கிருபனும் முதலாயினரெனக் கொள்க. வேளாண்மாந்தர்க்கும் இஃதொக்கும். இவை விகாரமெனவும் எடுத்தோதிய வருணங்கட்கே இஃதியல்பெனவும் கொள்க.

632. வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.

இது, வணிகர் மரபு கூறுகின்றது.

இதன் பொருள் : வணிகர்க்குத் தொழிலாகிய வாணிகவாழ்க்கை உள்ளுறையாகச் செய்யுள் செய்தல் பெரும்பான்மையுமாம், என்றவாறு.

அவையும் அவர் செய்யுளிற் காணப்படுமாறு அறிந்து கொள்க.

633. மெய்தெரி வகையி னெண்வகை யுணவின்
செய்தியும் வரையா ரப்பா லான.

இன்னும் வணிகர்க்கே உரிய தொழில் கூறுகின்றது.

இதன் பொருள் : பொருள் தெரிந்த வகையான் எண்வகைக் கூலமுஞ் செய்து விலைத்தலும் அவர்கடன், என்றவாறு.

அவையும் அவர் பண்டத்தோடு உபகாரப்படுமாகலின் வரையப் படாதென்றுனென்பது. எண்வகையுணவென்பன பயறும் உழுந்துங் கடுகுங் கடலையும் எள்ளுங் கொள்ளும் அவரையுந் துவரையுமாம். (எஅ)

634. கண்ணியுந் தாரு மெண்ணினா ராண்டே.

இதுவும் அது.

இதன் பொருள் : இவையும் வணிகர்திறத்தன, என்றவாறு.

கண்ணியென்பன சூடும் பூ. தாரென்பது ஒருகுடிப் பிறந்தார்க் குரித்தென வரையறுக்கப்படுவதாயிற்று. எண்ணப்படுமெனவே அவ ரவர்க்குரியவாற்றுற் பலவாகிவரும். அவை வந்தவழிக் கண்டு கொள்க. (ஏக)

635. வேளாண் மாந்தர்க் குழுதூ ணில்ல தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

இது, வேளாண்மாந்தர்க்குக் கூறப்படுந் தொழில் கூறுகின்றது.

இதன் பொருள் : வேள்ாண்மாந்தர் பலவகைப்பட்ட தொழில ரேனும் உழுந்தொழிலே பெரும்பான்மைத்தாகலான் அதனையே சிறப் பித்துச் சொல்லுதன் மரபு, என்றவாறு.

உழுதுண்டுவாழ்வாரென்பது இதன் பொருளாயிற்று. மற்றுப் பார்ப்பியன் முதலாகிய நால்வகைத் தொழிலும் வாகையுட் கூறின மையின் இச்சூத்திரமும் மேலைச் சூத்திரங்களும் மிகையாம்பிற வெ னின், அற்றன்று ; பார்ப்பியலும் அரசியலும் வாணிகத்தொழிலுமாகி பொதுப்படனின்ற ஒதலும் வேட்டலும் ஈதலும் இவர்க்கு ஒத்தசிறப் பினவாகலானும் அவருள் வணிகர்க்கும் ஒழிந்த வேளாளர்க்கும் ஒத்த

செய்தியெனவாகிய உழவு தொழிலும் கிரைகாத்தலும் வாணிகமு மென்பன அவற்றின் ஒத்த சிறப்பினவன்றி அவற்றுள்ளும் ஒரோ வொன்று ஒரோவருணத்தார்க்கு உரியவாமாகலானும் ஈண்டு அவை விதந்துகூறினனென்பது. கிரைகாவலும் உழவுதொழிலும் வணிகர்க் கும் வேளாளர்க்குந் தம்மொறுதல்போலாது வாணிகவாழ்க்கைவேளாண் மாந்தர்க்குச் சிறுவரவிற்றெனவும் உழுதுண்டல் வணிகர்க்குச் சிறுவர விற்றெனவும் எண்வகைக்கூலத்தோடு பட்டதே பெருவரவிற்றென வுங் கூறினனென் இச்சூத்திரங்களானெனின்பது. இதனது பயம் புலனெறி வழக்கினுள் இவர்க்கு இவை சிறந்த மரபென்றலாயிற்று. (அ0)

636. வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும் வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே.

இது நான்காம் வருணத்தார்க்கோர் புறனடை.

இதன் பொருள் : வேந்தர் கொடுப்பின் வேளாண்மாந்தர்க்குப் படைக்கலமுங் கண்ணியும் பெறும்பொருளாகச் சொல்லப்படும், என்றவாறு.

வேந்து விடுதொழிலென்பது வேந்தனுற் கொடுக்கப்படுந் தண் டத்தலைமையாகிய சிறப்புக்காரணத்தானென்றவாறு; அகத்திணையிய லுள் 'உயர்ந்தோர்க்குரிய வோத்திலுள' என்புழிக் கூறப்பட்டதெ னின், வேளாளரையொழித்து ஒழிந்தோரைநோக்கிற்று அச்சூத்திர மென்பது. மேற்கூறியவற்றையும் மரபுபற்றி ஈண்டு வரையறைகூறு கின்றவாறெனக் கொள்க. அவையும் அவரவர் பாட்டுக்களுட் கண்டு கொள்க. (அக)

637. அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.

இஃது, எல்லாவற்றிலுஞ் சிறுவரவிற்றாகி அரசர்க்குரிய தொழில் அந்தணர்க்குரியவாகலின் ஈண்டுப் போதந்து கூறுகின்றது.

இதன் பொருள் : அரசர் இல்வழி அந்தணரே அவ்வரசியல் பூண்டொழுகலும் உரையப்படாது, என்றவாறு.

மக்களோத் தின்ற மன்னவர்க்குப் பின்னே மறையோரான் அரசு தோற்றப்பட்டாற்போலக் கொள்க. (அஉ)

638. வில்லும் வேலுங் குழலுங் கண்ணியுந்
தாரு மாரமுந் தேரும் வாளு
மன்பெறு மரபி னேனோர்க்கு மூரிய.

இது, முடியுடைவேந்தரல்லாக் குறுநிலமன்னர்க்குரியன கூறு கின்றது.

இதன் பொருள் : இவ்வெண்ணப்பட்டனவெல்லாம் குறுநில மன்னர்க்கு உரியன, என்றவாறு.

மன்பெறுமரபின் ஏனோரெனப்படுவார் அரசுபெறுமரபிற் குறுநில மன்னர் எனக் கொள்க. அவை பெரும்பாணாற்றுள்ளும் பிறவற்றுள் ளும் காணப்படும். (அஊ)

639. அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லை.

இஃது, எய்திய திகந்துபடாமைக் காத்தது.

இதன் பொருள் : மன்னவர்போலுஞ் செல்வத்தாராகி இழி குலத்தோர் நாடாண்டாராயினும் அவர்க்கு இவை கூறலமையாது, என்றவாறு.

'மன்பெறு மரபி னேனோர்' (தொல்-மர-83) எனவே, அரசர் வைசியரன்றிக் கீழ் அமையாவாயிற்று. (அ)

640. புறக்கா ழனவே புல்லென மொழிப
வகக்கா ழனவே மரமென மொழிப.

இது, மக்களோ வழங்குமாற்றுக்கண் மரபுகூறி இனி ஓரறிவுயிர்க்கு இன்னவாறு சொல்லுதன் மரபென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : புறத்துக் காழ்ப்புடையனவற்றைப் புல்லென வும் அகத்துக் காழ்ப்புடையனவற்றை மரமெனவுஞ் சொல்லுப, என்றவாறு.

புறக்காழனவெனவே அல்வழி வெளிறென்பதறியப்படும். அவை பனையுந் தெங்குங் கமுகும் முதலாயின புல்லெனப்படும்; இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரமெனப்படும். இங்ஙனம் வரை யறைகூறிப் பயந்த தென்னை ? புறத்தும் அகத்துங் கொடிமுதலாயின காழ்ப்பின்றியும் அகின்மரம்போல்வன இடை யிடை பொய்ப்பட்டும் புல்லும் மரனும் வருவன உளவாலெனின், இரண்டிடத்தும் ஏகாரம் பிரித்துக்கூறின்மையானும் ' எனமொழிப ' என்று இருவழியுஞ் சிறப் பித்து விதந்தமையானுஞ் சிறுபான்மை அவையும் புல்லும் மரனுமென அடங்குமென்பது.

" இரும்பனம் வில்லின் பசுந்தோட்டுக் குடம்பை "

எனவும்,

" யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவின் " (குறுந்-198)

எனவும் வரும்.

" கிலாவி னிலங்கு மணன் மருங்கிற்
புலாலஞ் சேரிப் புல்வேய் குரம்பை "

எனப் புறக்காழும் அகக்காழும் அல்லன புல்லெனப்பட்டனவென்பது. அது பனையோலையுமாகலிற் புறக்காழுடைய பனையுமாமென்பது. உரு மரக்கிளவியுமாமென்பது சிறுபான்மை. பிறவும் அன்ன. (அ)

641. தோடே மடலே யோலை யென்ரு
வேடே யிதழே பாளை யென்ரு
வீக்கே குலையென நேர்ந்தன பிறவும்
புல்லோடு வருமெனச் சொல்லினர் புலவர்.

இது, முறையானே புறக்காழனவற்றைச் சொன்மரபுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : எண்ணப்பட்ட வாய்பாடும் பிறவும் புல்லு றுப்பினைச் சொல்லும் வாய்பாடு, என்றவாறு.

பிறவுமென்றதனாற் குரும்பை நுங்கு நுகும்பு போன்றதையென்றற் றொடக்கத்தனவுங்கொள்க.

"இரும்பனை வெண்டோடு *மிலைந்தோ னல்லன்" (புறம்-45.)
எனவும்,

"மாவென மடலு மூர்ப" (குறுந்-17.)
எனவும்,

"†துகடபு காட்சி யவையத்தா ரோலை" (கலி-94.)
எனவும் வரும். ஒழிந்தனவுங் கொள்க.

"வண்டோட்டு நெல்லின் வாங்குகதிர்க் கழனி" (பத்து-ஒடு நல்-22) என்பதும் அது. 'நேர்ந்தனபிறவும்' என்பது கேட்டோரை உடம்படுவிப்பன பிறவுமென்றவாறு. "வெண்டோட்டுப் பெண்ணை வளர்ந்த நுங்கின்" எனவும் "பனைநுகும் பன்ன சினைமுதிர் வரா லொடு" (புறம்-249) எனவும் வரும். பிறவும் அன்ன. (அக)

642. இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே யரும்பே
நனையுள் ளுறுத்த வனையவை யெல்லா
மரனெடு வருஉங் கிளவி யென்ப:

இஃது, அகக்காழனவற்றுறுப்பினைச் சொல்லும் மரபுணர்த்துதல்

இதன் பொருள் : எண்ணப்பட்டனவும் பிறவுமெல்லாம் மரத் துறுப்பினைச் சொல்லும் வாய்பாடு, என்றவாறு.

---

* 'மலைந்தோ னல்லன்' என்பதும் பாடம்.

† 'துகடீர்பு' என்பதும் பாடம்.

'அனையவையெல்லாம்' என்ற புறநடையானே புல்லுந் தழையும் பொங்கரும் முதலாயின கொள்க. அவை "தேய மடைவயிற் றேக்கிலை குவைஇ" எனவும், "முறிமே யாக்கை" (பத்து-மலைபடு-313) எனவும், "யாஅ வொண்டளி ரரக்கு விதிர்த்தன" எனவும், "தோடுதோய் மலிர்நிரை யாடியோர்" எனவும், 'மேக்கெழும் பெருஞ்சினை யிருந்த தோகை" எனவும், "கொய்தழை யகைகாஞ்சித் துறையணி நல்லூரா" எனவும், "நனைத்த செருந்தி" எனவும், "அண்டர் மகளிர் தண்டழை யுடுஇயர்-மரஞ்செல மிதித்த மாஅல் போல" (அகம்-59) என்றாற்போல வருவனவுமெல்லாங் கொள்க.

மேலைச் சூத்திரத்துப் புல்லொடுவருமெனச் சொல்லினானெனவும், இச்சூத்திரத்து 'மரவொடுவருஉங் கிளவி'யெனவிம் மிகைபடக் கூறியதென்னெனின், அம்மிகையானே எடுத்தோதிய புறக்காழனவும் அகக்காழனவுமன்றி அவற்றோடு தழீஇக்கொள்ளப்படுவனவுமெல்லாம் இவற்றுக் குரிய வென்பது கொள்க. அவை ஊக்கம்புல்லுஞ் சீழகம் புல்லும் பஞ்சாய் முதலியனவும் புழற்கால் ஆம்பல் முதலியனவும் புல்லெனப்பட்டடங்கி யவற்றின்பெயரும் பெறுமென்பது. பிடாவுங் காயாமுதலிய புதலும் பிரம்புமுதலாகிய கொடியும் மரமெனப்பட்டவற்று உறுப்பின்பெயர் பெறுமென்பது. அவை ஊகந்தோடு சீழகந்தோடு எனவும் பிடவிலை காயாம்பூ முல்லைப்பூ எனவும் வரும். பிறவும் அன்ன. மற்றுப் பிறப்பு முறையால் தளிர் முற்கூறாது இலை முற்கூறியதென்னெனின் புல்லினுள் ஒருசாரன இலையெனவும் பூவெனவும் படுமென அதிகாரங்கோடற்கென்க. அவை "ஈத்திலை வேய்ந்த வேய்ப்புறக் குரம்பை" எனவும், ஆம்பலிலை தாமரையிலை எனவும், ஆம்பற்பூ தாமரைப்பூ எனவும் வரும். பிறவும் அன்ன கொள்க.

இன்னும் இவ்விலேசானே புல்லிற்குரியன மரத்திற்கு வருவனவுங் கொள்க. அவை "ஈன்றவ டிதலைபோ லீர்பெய்யுந் தளிரொடும்" (கலி-32) என ஈர்க்கென்பது மாவிலைமேல் வந்தது. பிறவும் அன்ன. (அ)

643. காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றுங் கவையு மன்ன.

இது, மேற்கூறிய இரண்டற்கும் பொதுவுறுப்புணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: இவையும் அவ்விருதிறத்தோடொக்கும், என்றவாறு.

உதாரணம்: தெங்கங்காய் கமுகங்காய் எனவும், வேப்பங்காய் மருதங்காய் எனவுங் காயென்பது அவ்விரண்டற்கும் வந்தது. பழமென்பதற்கும் இஃதொக்கும். பனந்தோல் வேப்பந்தோல், பனஞ்செதின் வேப்பஞ்செதின், தாழைவீழ் இத்திவீழ் என இவையும் இருபாற்குரியவாயின. மற்று இவையெல்லாம் வரையறையின்றிச் செல்லுமாயிற் புறக்காழன அகக்காழனவென வரையறுத்துப் பயந்ததென்னையெனின், அவ்விருபகுதியுள் அடங்கக்கூறியவெல்லாம் புல்லெனவும் மரமெனவும் படாவென்றற்கும் அவற்றுறுப்பு ஒதியவாற்றுற் புல்லின் கண்ணும் மரத்தின் கண்ணும் பெருவரவினவா மென்றற்கு மென்பது. (அஅ)

644. நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க மூலக மாதலி
னிருதிணை யைம்பா லியனெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.

இஃது, உலகியலெல்லாம் மரபிற்றிரியாமையின் அதன் சிறப்புணர்த்தி அதற்குக் காரணமுங் கூறுகின்றது.

இதன் பொருள்: நிலனுந் தீயும் நீருங் காற்றும் ஆகாயமுமென்னும் ஐம்பெரும் பூதமுங் கலந்த கலவையல்லது உலகமென்பது யிறிதில்லாமையின் அவற்றைச் சொல்லுமாறு சொல்லாது இருதிணைப்பொருளென வேறுபடுத்தும் ஐம்பாலென வேறுபடுத்தும்

வழங்குகின்ற வழக்கெல்லாம் மரபில் திரியாத சொல்லொடு தழீஇ வரல்வேண்டும், என்றவாறு.

இதன் கருத்து: நிலம்வலிது நீவெய்து நீர்தண்ணென்றது வளி யெறிந்தது விசும்பு அகலியது என அஃறிணைவழக்கினவாயினும் இவை கலந்தவழியும் அவ்வாய்பாட்டான் வழங்காது உயர்திணை வாய் பாடு வேறுகவும், அஃறிணைவாய்பாடு வேறுகவும் அவைதம்முட் பகுதியாகிய ஐந்துபாற்சொல்லும் வெவ்வேறுகவும் வழங்குகின்ற வழக்கிற்குக் காரணம் மரபல்லது பிறிதில்லை யென்றவாறு. எனவே, நிமரபினை வலியுறுத்தவாறு. மற்று நிலம் நீர் தீ வளி ஆகாயமென ஒன்று ஒன்றனுள் அடங்குமுறையாற் கூறுதல் செய்யாது மயங்கக் கூறியதென்னையெனின், அவை கலந்துங்கால் ஒரோபொருளின் கண்ணும் அம்முறையானே நிற்குங்கொலென்று கருதினுங் கருதற்க, மயங்கிநிற்குமென்றற்கு அவ்வாறு கூறினனென்பது. (அசு)

645. மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை மரபுவழிப் பட்ட சொல்லி னான.

இது, மரபினையே வற்புறீஇயது.

இதன் பொருள்: வழக்கினகத்து வரலாற்றுமுறைமை பிறழாது வருதலே தக்கது, மற்றுச் செய்யுள்செய்த சான்றோர் அதற்கேற்ற வகையாற் செய்யப்பெறுவராகலின்; என்றவாறு.

அவர்க்கு இம்மரபுவேண்டுவதன்றுகொலென்று கருதினுங் கரு தற்க. 'மரபேதானு, நாற்சொல்லியலான் யாப்புவழிப் பட்டன' (தொல்-செய்-80) என்றதனுன் மரபுவழிப்படுங்காலென்பான் 'மரபு வழிப்பட்ட சொல்லினான்' என்றனென்பது. ஆண்டுக்கூறிய மரபு உலகியலாகலான் அவ்வுலகியல் அவ்வாறுதற்குக் காரணம் ஈண்டுக் கூறிச் செய்யுட்கும் அதுவே காரணமெனக் கூறினனென்பது. இத னது பயன், செஞ்ஞாயிறென்பது வழக்கன்றாயினும் உண்மைநோக்கி அதனைச் செய்யுள்செய்யுஞ் சான்றோர் அவ்வாறு வழங்கினற்போல உயர்திணைப் பெயரனையும் ஐம்பெரும்பூதங்கள் அஃறிணையான் வழங்

குதலுண்மை நோக்கி அவ்வாறுஞ் சொல்லப்பெறுபகொலென்று ஐயுற்றானே ஐயம் அறுத்தவாறு. அஃறிணைப்பாற்கும் இஃதொக்கும். அல்லதூஉம் இன்னசெப்புட்கு இன்னபொரு ளுரித்தெனவும் இனைப் பஃதியாற் பெயர்பெறுமெனவும் மரபுபற்றியே சொல்லப்படுமென்றற் கும் இனி னிறைமொழி மாந்தர் மறைமொழிபோல்வன சில மிறைக் கவி பாடினானெனென்பதே பற்றி அல்லாதாரும் அவ்வாறு செய்தன் மரபென்றற்கும் இது கூறினானென்பது. அவை சக்கரஞ் சுழிகுளம் கோமூத்திரிகை எகபாதம் எழுகூற்றிருக்கை மாலைமாற்று என்றாற் போல்வன. இவை மந்திரவகையானன்றி வாளாது மக்களைச் செய் யுள் செய்வார்க்கு அகனைந்திணைக்கும் மரபன்றென்பது கருத்து. அல்லாதார் இவற்றை எல்லார்க்குஞ் செய்தற்குரியவென இழியக் கருதி அன்னவகையான் வேறுசில பெய்துகொண்டு அவற்றிற்கும் இலக்கணஞ்சொல்லுப. அவை இத்தினையென்று வரையறுக்கலாகா. என்னை ? ஒற்றை இரட்டை புத்தி வித்தாரமென்றாற்போல்வன பல வும் கட்டிக்கொண்டு அவற்றானே செய்யுள் செய்யினும் கடியலாகா மையின், அவற்றிற்கு வரையறைவகையான் இலக்கணங்கூற லாகா வென்பது.

"ஐயைதன் கையு ளிரண்டொழித்தை னேம்பான்மேற்
பெய்தார் பிரிவுரைத்த வில்லையால்."

எனவும்,

"கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை
*யாடா வடகி னுளுங்காணேன்." (திணை, 150-4)

எனவுஞ் சொல்லுவார் சொல்லுவனவற்றுக்கெல்லாம் வரையறை யின்மையின் அவற்றுக்கு இலக்கணங்கூறர் பண்ணத்திப்பாற் படுப் பினல்லதென்பது. (கூ0)

646. மரபுநிலை திரியிற் பிறிது பிறி தாகும்.

இது, மேற்போன வழக்கிற்குஞ் செய்யுட்கும் வருகின்ற இலக் கணத்திற்கும் பொது.

* 'ஆடா வடகினும் காணேன்போர்' என்பதும் பாடம்.

இதன் பொருள் : மரபினை நீலதிரித்துச் சொல்லுபவெனின், உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்து பிறிதுபிறிதாகும், என்றவாறு.

செவிப்புலனை ஒசைகேட்டுக் கட்புலனை பொருளுணர்வதெல்லாம் மரபுபற்றுக அல்லது மற்றில்லையென்றவாறு. (கச)

647. வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான.

இது, வழக்கினுண் மரபினைப் பிழைத்துக் கூறுவனவும் உள வென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தோர் வழங்கிய வழக்கே. என்னை ? உலகத்து நிகழ்ச்சியெல்லாம் அவரையே நோக்கினமையின், என்றவாறு.

அவரையே நோக்குதலென்பது அவராணையான் உலகநிகழ்ச்சி செல்கின்றதென்றவாறு. எனவே, உயர்ந்தோரெனப்படுவார் அத்தணரும் அவர்போலும் அறிவுடையோரு மாயினரென்பது. (கஉ)

648. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூரு மிருவகை யியல
முதலும் வழியுமென நுதலிய நெறியின.

இது, மேற்கூறப்பட்ட மரபு வழக்கிற்கேயன்றி இலக்கணஞ் செய்வார்க்கும் வேண்டுமெனவும் அவ்விலக்கணம் இனைப்பகுதித் தெனவுங் கூறுகின்றது.

இதன் பொருள் : மரபுநிலையில் திரியாமை தமக்குக் குணமாக உடையவாகி எல்லாராலும் உரைக்கப்படும் நூல் இரண்டிலக்கணத்தவாகும் முதனூலெனவும் வழிநூலெனவுங் கருதிக்கொள்ளும் அடிப்பாட்டான், என்றவாறு.

'மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்' (தொல்-மர-91) என்ப தனை இதற்குமேல் எய்துவித்தானன்றே, அதனுன் மரபுநிலை திரி யாமையே தமக்குத் தகுதியாவதெனவும் இவ்விருவாற்றுணும் ஒன்ற னுற் செய்தலே மரபெனவுங் கூறியவாறு. 'நுதலியநெறி'யென்ற தென்னையெனின், இன்னதே முதனூல் இன்னதே வழிநூலென்ப தோர் யாப்புறவில்லை; ஒருநூல்பற்றி ஒருவன் வழிநூல் செய்தவழி அவ் வழிநூல்பற்றிப் பின்னொருகாலத்து ஒருநூல் பிறந்ததாயின் அது வழிநூலெனப்பட்டு முன்னை வழிநூலே முதனூலெனப்படுமென்றற் கென்பது. இதனைச் சார்புநூலென்னுமோவெனின் வழிநூலுஞ் சார்புநூலுமாகலின் அங்ஙனங்கூறுதலையுணன். எற்றுக்கு? சார்பு நூலினைப்பற்றி ஒருநூல் பிறந்தவழிச் சார்பின்சார்பெனக் கூறல் வேண்டுவதாகலானும் அதனைச்சார்ந்து தோன்றிற் சார்பென்னுஞ் சொல்லை மும்முறைசொல்லியும் அதன்பின் தோன்றிய நூற்கு நான் முறை சொல்லியும் எண்ணிசந்தோடுதலானுமென்பது. மற்று இரண் டாமெண்ணுமுறைமைக்சணின்ற நூலினையே வழிநூலெனக்கொண்டு மூன்றுவது தோன்றிய நூலே சார்புநூலாகவும் அதன்பின்னர் நூல் செய்யப்பெறுரெனவுங் கொள்ளாமோவெனின், முதனூலிற் கிடந்த பொருளை ஓர் உபகாரப்பட வழிநூல்செய்த ஆசிரியன் செய்தக்காற் சார்புநூலெனப் பின்னர் ஓர் ஆசிரியன் நூல்செய்ததனுற் பயந்த தென்னையென்க. என்றூர்க்கு வழிநூலும் பிற்காலத்தரிதாமாயின் அதனையும் எளிதாகச் செய்தலன்றே இதனுற் பயந்ததெனின், அது தானும் பின்னொருகாலத்து அரிதாமாயின் அதனையும் எளிதாகச் செய்வானல்லனே வென்று மறுக்க. இவ்வாராய்ச்சி வேண்டாவென் றற்கன்றே இவ்விருவகையானும் வருதலே மரபென்பானுயிற்றென் றுரைக்க. ஒன்றன்வழியேயன்றியுந் தாந்தாம் அறிந்தவாற்றுணும் நூல்செய்யப் பெறுரோவெனின், அது மரபன்று; அதுநோக்கியன்றே 'மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்' என்ற விதி நூலிற்கும் எய்து வித்துப் புகுந்ததென்பது. என்னை பிறிதுபிறிதாகுமாறெனின், ஒரு பொருட்கண்ணே மாறுபட்ட இலக்கணங் கூறின் அவ்விரண்டும் அதற்கிலக்கணமாகாது. என்போல? மாணிக்க மணியினைச் செவ் வண்ணம் முதலாயின சில இலக்கணங்கூறிய நூல் இடைப்பக் கரு

வண்ணமுதலாயினவும் அதற்கிலக்கணமென்று ஒருவன் எதிர்நூலென்பதோர் நூல் பிற்காலத்துச் செய்யுமாயின் அஃது அதன் இலக்கணமெனப்படாதாகலானென்பது. மற்றுக் காலந்தோறும் வழக்கு வேறுபடுதலின் வழக்குநூலும் வேறுபட அமையும்பிற எனின்,

'வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான' (தொல்-மர-92.)

என்றமையானும் அங்ஙனங் காலந்தோறும் ஒரோர்நூல் செய்யின் வழக்கல்லது எஞ்ஞான்றும் அவ்விலக்கணத்தாற் பயமின்றாகியே செல்லுமாகலானும் அது பொருந்தாதென்பது. அல்லதூஉம் முற்காலத்து வழங்கிவந்ததனை வழுவென்றே கோடலாயினன்றே பிற்காலத்துப் பிறந்தவழக்கு இலக்கணமெனத் தழீஇக்கொள்வதென்க. இந்நூல் இலக்கணத்தினை இவ்வோத்தின் இறுதிக்கண் வைத்தான் வழக்குஞ் செய்யுளுமென்று விதந்து புகுந்த இரண்டிலக்கணமும் முடித்தல்லது அவற்றைக் கூறும் இலக்கணங் கூறலாகாமையினென்பது. இக்கருத்தறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஒத்தென்ப. அல்லதூஉம் இந்நூலிலக்கணம் வழக்கிற்குஞ்செய்யுட்குமேயன்றி அங்ஙனமாகாப் பொருண்மேவும் பண்டம் முதலாயவற்றிற்கு இலக்கணஞ் செய்யுங்காலும் யாயஞ்செய்யினுந் தமிழ்நூலதற்கிலக்கணம் எவ்வாற்றானும் இதுவே யென்றற்கும் ஈண்டுக் கூறினனென்பது. எனவே, பிறபாடைநூல்களாயின் இம்மரபு வேண்டுவதன்றாயிற்று. மற்றை முதனூலினை இன்னதென்பது துணிந்து உரையாரோவெனின், அதுவன்றே இனிக் கூறுகின்றதென்பது. (கூ)

649. வினையி னீங்கி விளங்கிய வறிவின்
மூவனவன் கண்டது முதனூ லாகும்.

மேல் ஒன்றற்கு முதனூலாகியும் ஒன்றற்கு வழிநூலாகியும் வந்து தடுமாறுமென்றான், இனி அவ்வாறன்றி ஒன்றே முதனூலாக வுஞ் சிறப்புண்மை உண்டென்கின்றது.

இதன் பொருள்: செய்வினையின் பயன் துவ்வாது மெய்யுணர் வுடையனுகிய முன்னேனுற் செய்யப்பட்டதே ஒருதலேயாக முதனூலா வது, என்றவாறு.

எனவே, மேலேச்சூத்திரத்து முதனூலும் வழிநூலுமெனப் பட்டன முதலுஞ் சினேயும் போலத் தடுமாறுமென்பதூஉம் இதுவா லின் தடுமாறுது எஞ்ஞான்றும் முதனூலாமென்பதூஉம் பெற்ரும்.

வினேயென்பன இருவினே. இன் நீக்கத்துக்கண்வந்தது. விளங் கிய அறிவென்பது முழுதும் உணரும் உணர்ச்சி. அறிவினென கின்ற இன் சாரியை. இன்ன அறிவினேடு கூடிய முனேவன் அறிவின் முனேவனெனப்படும். முன்னேனே முனேவனென்பது ஒர்சொல் விழுக்காடாம். முன்னென்பதனே முனேயென்பவாகலின்.

மற்று வினேயினென்ற வேற்றுமை கிற்பதன் கிலேயும் நீங்குவதன் நீக்கமுங் கூறுமாகலின் ஒருகாலத்து வினேயின்கணின்று ஒருகாலத்து நீங்கினுன்போலக் கூறியதென்னேயெனின், அற்றன்று ; வினேப்பயன் தொடரற்பாற்றுள்ளம் இலனென்பதன்றி அவர்க்குச கில செய்கையுன வென்பது பல்லோர்க்கும் உடம்பாடாகலின், அவ்வினேக்கணின்றே, போகமும் பாவமும் மெய்யுணர்வுபற்றித் தெறப்பட்ட வித்துப்போலப், பிறப்பில்பெற்றியனுகி நீங்குமாகலின் அவ்வாறுகூறல் அமையுமென் பது. என்னே ? குற்றங் கெடுத்த முற்ற உணர்ந்தோரும் கெடுப்ப தோர் குற்றமின்றி முழுதுணர்ந்தோரும் எல்லாம் பிறர்க்குறுதியாகிய ஆகமஞ்செய்யினுந் துறக்கம் முதலாகிய பயன்றுய்ப்பாரல்லராகலின். இனி முனேவனுற் செய்யப்படுவதோர் நூலில்லேயென்பார் அவன் வழித் தோன்றிய நல்லுணர்வுடையார் அவன்பாற் பொருள்கேட்டு முதனூல்செய்தாரெனவும், அம்முனேவன் முன்னர் ஆகமத்துப் பிறந்த தோர் மொழியைப்பற்றி அனேத்துப்பொருளுங்கண்டு பின்னர் அவற்ற வற்றுக்கு நூல்செய்தார் அவரெனவும், அவ்வாகமத்தினேயே பிற்காலத் தாரும் ஒழுக்கம் வேறுபடுந்தோறும் வேறுபடுத்து வழிநூலுஞ் சார்பு நூலுமெனப் பலவுஞ் செய்தாரெனவுங் கூறுப. அவை எவ்வாற்று ஞும் முற்ற உணர்ந்தோர் செய்த நூலன்மையின் அவை தேறப்படா.

அல்லதூஉம் அவை தமிழ்நூலன்மையின் ஈண்டு ஆராய்ச்சியில வென்பது.

மற்று மேலைச்சூத்திரத்து நுதலிய நெறியானே முதலும் வழி யுமாமெனவே, எல்லார்க்கும் முதல்வனையினன் செய்தது முதனூ லேயாமென்பது பெறுதுமாகலின், ஈண்டு இச்சூத்திரங் கூறியதென்னை யெனின், தாமே தலைவராவாரும் அத்தலைவரை வழிப்பட்டுத் தலைவ ராயினரும் பலராகலின் தாமே தலைவராயினர் நூல் செய்யின் முதனூ லாவ தெனின், அற்றன்று; தாமேதலைவராயினர் முற்காலத்துத் தமிழ்நூல் செய்திலராகலின் தலைவர்வழிநின்று தலைவனாகிய அகத் தியனாற் செய்யப்பட்டதும் முதனூலென்பது அறிவித்தற்கும், பிற்கா லத்துப் பெருமானடிகள் களவியல்செய்தாங்குச் செய்யினும் பிற்காலத் தானும் முதனூலாவதென்பது அறிவித்தற்கும், அங்ஙனம் வினையி னீங்கி வினங்கிய அறிவினன் முதனூல்செய்தானென்பது அறிவித்தற் கும் இது கூறினனென்பது. எனவே, அகத்தியமே முதற்காலத்து முதனூலென்பதூஉம் அதன்வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉம் பெற்றும்.

என்றூர்க்கு முந்துநூலெனப்பட்டன முற்காலத்து வீழ்ந்தன வெனக்கூறித் தொல்காப்பியர் அகத்தியத்தோடு பிறழவும் அவற்று வழிநூல்செய்தாரென்றக்கால் இழுக்கென்னையெனின், அது வேத வழக்கோடு மாறுகொள்வார் இக்காலத்துச் சொல்லினும் இறந்தகாலத் துப் பிறபாசாண்டிகளும் ழன்றுவகைச் சங்கத்து நான்குவருண்டீதோடு பட்டசான்றோரும் அதுகூறுரென்பது. என்னை? கடைச்சங்கத்தாருட் களவியற்பொருள்கண்ட கணக்காயனாரிகனார் நக்கீரர் "இடைச் சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம்" என்றாராகலானும், பிற்காலத்தார்க்கு உளையெழுதினோரும் அது கூறிக் களிபோக்கினாராகலானும், அவர் புலவுத்துறந்த நோன்புடையா ராகலாற் பொய்கூறாராகலானுமென்பது. இங்ஙனங் கூறுக்கால் இதுவும் மரபுவழுவென்று அஞ்சி அகத்தியர் வழித்தோன்றிய ஆசிரிய ரெல்லாருள்ளுந் தொல்காப்பியனரே தலைவரென்பது எல்லா ஆசிரி யருங் கூறுவரென்பது. எங்ஙனமோவெனின்,

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்த்த லெல்காப் பியன்ற
னூணையின் றமிழறிந் தோர்க்குக் கடனே."

இது பல்காப்பியப் புறனடைச் சூத்திரம்.

"வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானே ரேத்தும் வாய்மொழிப் பல்புக
ழானுப் பெருமை யகத்திய னென்னு
மருந்தவ முனிவ னுக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்"

என்பதனால் அகத்தியர் செய்த அகத்தியத்தினை முதனூலெனவும் அவர் வானோர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ் ஆனுப்பெருமையுடையாரெனவும் அவராற்செய்யப்பட்ட முதனூல் பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோருள் தலைவராயினர் தொல்காப்பியனுனெனவும் பன்னிருபடலத்துப் புனைந்துரைவகையாற் பாயிரச்சூத்திரத்துள் உரைக்கப்பட்டது. இனிப், பன்னிரு படலம் முதனூலாக வழிநூல் செய்த வெண்பாமாலை ஐயனாரதனாரும் இதுகூறினர். என்னை ?

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
றன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
தன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த"

எனப் பாயிரஞ் செய்தற்கு உடம்பட்டமையினென்பது.

இவற்றானெல்லாம் அகத்தியமே முற்காலத்து முதனூலென்பதூஉந் தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉம் அதுதானும் பனம்பாரனார் "வடவேங்கடந் தென்குமரி" (தொல்-பாயிரம்) எனக் குமரியாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரஞ்செய்தமையிற் சகரர்

வேள்விக்குதிரை நாடித் தொட்ட கடலகத்துப் பட்டுக் குமரியாறும் பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னையதென்பதூஉம் அவ்வழக்குநூல் ஈண்டுப் பற்றியல்லது மூன்றுவகைச் சங்கத்தாருஞ் செய்யுட்செய்திலரென்பதூஉம் ஆசிரியரும் அவர்போல்வாரும் அவர்வழி ஆசிரியருஞ் செய்யுள்செய்த சான்றோருஞ் சொல்லாதன சொல்லப்படாவென்பதூஉம் அவருடம்படாதன சொல் உளவென்று எதிர்நூலென ஒருவன் பிற்காலத்து நூல்செய்யுமாயின் தமிழ்வழக்கமாகிய மரபிலேதென் தமிழ் நூலோடும் மாறுபட நூல்செய்தானாகுமென்பதூஉம் இனித் தமிழ் நூலுள்ளுந் தமது மதத்துக்கேற்பன முதனூல் உளவென்று இக்காலத்துச் செய்துகாட்டினும் அவை முற்காலத்து இலவென்பது முற்கூறிவந்த வகையான் அறியப்படுமென்பதூஉம் பாட்டுந் தொகையும் அல்லாதன சிலநாட்டிக்கொண்டு மற்று அவையுஞ் சான்றோர்செய்யுளாயின் வழுவில் வழக்கமென்பார் உளராயின் இக்காலத்துள்ளும் ஒருசாரார்க்கல்லது அவர் சான்றோரெனப்படாரென்பதூஉம்;

கட்டளை செய்யவே காலந்தோறும் வேறுபடவந்த வழிவழக்கும் சினவழக்கும் முதலாயினவற்றுக்கெல்லாம் நூல்செய்யின் இலக்கணமெல்லாம் எல்லைப்படாது இகந்தோடுமென்பதூஉம் இறந்தகாலத்து நூலெல்லாம் பிறந்த பிறந்த வழக்குப்பற்றிக் குன்றக்கூறலென்னுங் குற்றந்தங்குமென்பதூஉம் ஒன்றுகப் புறனடுத்து ஒருசூத்திரமே செய்துபோத அமையினன்றி ஒழிந்த சூத்திரங்களெல்லாம் மிகையாமென்பதூஉமெல்லாம் படுமென்பது. (கூ)

650. வழியெனப் படுவ தகன்வழித் தாகும்.

- இது, வழிநூலாமா றுணர்த்துகின்றது.

இதன் பொருள்: முதலிய நெறியானன்றி வழிநூலென்றற்குச் சிறப்புடையது அம்முதனூல்வழிப் பிறந்த வழிநூல், என்றவாறு.

அது தொல்காப்பியம். மற்றுப் பல்காப்பியம் முதலியனவோவெனின், அவை வழிநூலே; தொல்காப்பியத்தின்வழித் தோன்றினவென்பது. என்னை?

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்த லெல்காப் பியன்ற
னூணையின் றமிழறிந் தோர்க்குக் கடனே"

என்பவாகலானும், இவ்வாசிரியர் பல்காப்பியர், பல்காயனர் முதலாயினரை அவ்வாறு கூறாராகலானுமென்பது. என்னூர்க்குத், தொல்காப்பியங் கிடப்பப் பல்காப்பியனார் முதலியோர் நூல்செய்த தெற்றுக்கெனின், அவரும் அவர்செய்த எழுத்துஞ் சொல்லும் பொருளுமெல்லாஞ் செய்திலர், செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பரந்துகிடந்ததனை இவ்வாசிரியர் சுருங்கச்செய்தலின் அருமைநோக்கிப் பகுத்துக்கூறினாராகலானும் அவர் தந்திரத்துக்கேற்ப முதனூலோடு பொருந்த நூல்செய்தாராக்கலானும் அமையுமென்பது. பிற்காலத்துக் காக்கைபாடினியாருந் தொல்காப்பியரோடு பொருந்தவே நூல்செய்தா ரென்பது. மற்று,

"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொரு துகிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே"

எனத் தெற்குக் குமரியன்றிக் கடலெல்லையாகியகாலத்துச் சிறு காக்கைபாடினியார் செய்த நூலினையும் அதன் வழிநூலென்றுமோ வெனின், ஈண்டுக்கூறிய பொருளெல்லாந் தழுவுமாற்றாற் செய்தது ஆயின், அது வழிநூலாதற்கு இழுக்கென்னையென்க. இனிச் சில குன்றக்கூறினர் தொகுத்து நூல்செய்தாராகலி னென்பாரும் உளர். ஒழிபொருளவாயினது தொகையெனப்படாமையின் அன்னனங் கூறுதல் வழிநூலிலக்கணமன்றென்பது. (கஇ)

651. வழியி னெறியே நால்வகைத் தாகும்.

இது, வழிநூல் இனைத்துவகைத்தென்கின்றது.

இதன் பொருள் : மேல் வழிநூலெனப்பட்டது நான்குவகையாற் செய்யப்படும், என்றவாறு.

இதன்பயன் ஒருநூலுள் ஒன்றல்லது பல வாராவெனவும் அதனானே நான்குவகைய வழிநூலெனவும் முதனூலாயின் ஒன்றேயாமெனவுங் கூறியவாறுயிற்று. அவையாவன மேற்கூறுப. (கக)

652. தொகுத்தல்விரித்தலுரைகைவிரிமொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டீனமர பினவே.

இந்நான்கு வகையுங் காரணமாக மேற்கூறிய நால்வகை வழிநூலும் பெறலாம், என்றவாறு.

தொகுத்தலென்பது முதனூலுள் விரிந்ததனைச் சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு அறியத் தொகுத்துக்கூறல்; விரித்தலென்பது முதனூலில் தொகுத்துக் கூறுபட்டு விளங்காது நின்றதனை விளங்குமாற்றான் விரித்துக்கூறல். தொகைவிரியென்பது அவ்விருவாறும்பற்றித் தொகுத்து முன்னிறீஇ அந்நிறுத்த முறையானே பின் விரித்துக் கூறுதல். மொழிபெயர்த்தென்பது பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ்நூலாகச் செய்வது. அதுவுந் *தமிழ்நூலுள் வழிநூற்கு மரபாமென்றவாறு. அதர்ப்படவென்பது நெறிப்படவென்றவாறு. நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும். தொகுத்தும் விரித்துந் தொகைவிரியாகவுஞ் செய்ததனாற் பயமில்லைத் தமிழர்க்கும் ஆரியர்க்குமென்பது. மொழிபெயர்த்தனவே, பொருள்பிறழாமை பெற்றும் வழக்குநூலுள்ளும் மொழிபெயர்த்தியாக்கப்படுவன உளவோவெனின் அற்றன்று ; அது வேண்டுமே ? வேதப்பொருண்மையும் ஆகமப்பொருண்மையும் கியாயநூற் பொருண்மையும் பற்றித் தமிழ்ப்படைக்குங்கால் அவற்றிற்கும் இதுவே இலக்கணமென்றற்கு மொழிபெயர்த்தலையும் இவற்றுக்கட் கூறினனென்பது. இனிப், படர்ந்துபட்ட பொருண்மை

* மூன் அச்சுப் பிரதியில் 'தமிழ்நூல் உள்வழி நூற்கு மரபாமென்றவாறு.' எனக் காணப்படுகிறது.

யவாகிய மாபுராணம், பூதபுராணமென்பன சில்வாழ்நாட்சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப்படாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உளதாயிற்றெனக்கொள்க. (கஎ)

653. ஒத்த சூத்திர மூரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
யீரைங் குற்றமு மின்றி நேரிதின்
மூப்பத் திருவகை யுத்தியொடு புணரி
னூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்.

இஃது, எல்லாநூற்கும் ஆவதோர் இலக்கணமுணர்த்துதல்

இதன் பொருள் : ஒத்த சூத்திரத்தினை உரைநடாத்தல்வேண்டினவழிப் பிறந்த காண்டிகையும், அக்காண்டிகையானும் விளங்காத காலத்து அதனையும் விளங்கக்கூறும் உரைவிகற்பத்துமாகிப் பத்து வகைக் குற்றமுமின்றி நுண்பொருளவாகிய மூப்பத்திருவகை உத்தியோடு பொருந்திவரின் அதனை நூலென்றுசொல்லுப நுண்ணிதின் உணர்ந்துரைக்கும் புலவர், என்றவாறு.

ஒத்தசூத்திரமென்றதனால் நூலின்வேறாகிய இருவகைப் பாயிரமுஞ் சூத்திரத்தோடு ஒத்த இலக்கணத்தவென்பது கொள்க. உரைப்பினென்றதனால் 'உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி' (தொல்-செய்-166) வருதலே நூலிலக்கணமெனச் செய்யுளியலுட் கூறிப்போந்தாம்; அங்ஙனம் வேறாகிப் பொருந்திவருமெனப்பட்ட உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் விளங்கிய காலமும் உண்டென்பதாம். இதனது பயம், உரையுங் காண்டிகையுமின்றிச் சூத்திரத்தானே சார்படுபொருள் உரைத்தலுமுண்டு, அஃது அவற்றையொழிய ஆகாவிக்காலத்தென்றலாயிற்று.

உரைப்பினென்னும் வினையெச்சங் கிளத்தலென்பதனோடு முடியும். வகையென்றதனான் உரையெனப்பட்டதுதானும் அக்காண்டிகையின் மெய்ப்படக்கிளந்ததேயாகலின் அவ்விரண்டுஞ் செய்யுளியலுட் கூறிவந்த உரைவிகற்பமேயென்பதுணர்த்தியவாறு. அஃதேற் காண்டிகையென்றாற்போல இதற்குப்பெயர் வேறுகூறலெனின் வேண்டியார் வேண்டியவாறு 'மறுதலைக்கடாஅ மாற்றமும்' (தொல்-மர-104) எல்லையின்றி இகந்துவருவனவெல்லாம் உரையுள் எழுதப்படாமையின், அதுவுங் காண்டிகைப்பகுதியேயென்பது அறிவித்தற்கு வேறுபெயர் கூறுது மெய்ப்படக் கிளந்த வகையென்றேபோயிருனென்பது. மற்று இல்லதற்கும் இலக்கணஞ்சொல்லுவார்போல ஈரைங்குற்றமுமின்றியென்றதென்னையெனின் அவற்றை எதிர்மறுத்துக்கொள்ளும் பத்து வகைக் குணமுங் கோடற்குத் தந்துகூறினனென்பது. அவை 'எதிர்மறுத் தினைமின் றிறத்தவு மவையே' (தொல்-மர-109) என்புழிச் சொல்லுதும். அல்லதூஉம் இவைகூறியவதனானே பிறிதொருபொருள் கொள்ளப்படும் இடங்களும் உள, அவைநோக்கி அங்ஙனங்கொள்ளாதனவுந் தொகுத்து உடன்கூறினனென்பது. அவையும் அவற்றுவிரிச்சூத்திரத்துட் கூறுதும். ஈரைங்குற்றமுமென்ற உம்மையை எச்சப்படுத்துப் பிறவுங் குற்றம் உளவென்பதுங் கொள்க. அவை முதனூலோடு மாறுகோடலும் யாப்பினுட்சிதைதலும் போல்வன. அவை முன்னர்ச்சொல்லுதும். நேரிதினென்றதனான் முதல்வன் செய்த நூலாயினும் வழிநூலாயினும் அவ் வழிநூலின் முழுவதூஉந் தெரிந்துணரும் நுண்ணுணர்வினுர்க்கே முப்பத்திருவகை உத்தியும் புலனுவதெனக்கொள்க. அவையும் முன்னர்ச்சொல்லுதும். வகையதாகியென்பது புணரினென்பதனோடு முடிந்தது. புணரினென்பது மொழிபவென்பதனோடு முடிந்தது.

ஒத்தசூத்திரத்தினை உரைநடாத்தல்வேண்டிற் காண்டிகைப் பொருளினை விளங்கச் சொல்லும் உரைவிகற்பத்ததாகியெனவே சூத்திரமுங் காண்டிகையும் உரையுமென மூன்றும் அவற்றோடு குற்றமின்மையும் உத்திவகையுங் கூட்ட நூலிலக்கணம் ஐந்தாயின. இதனது பயம், இவற்றது விரிச்சூத்திரங்களான் உய்த்துணர்வான் எடுத்தோதித்

தொகுத்துக்காட்டலாயிற்று. மற்றுக் குற்றத்தினை இடைவைத்து உத்திவகையினை ஈற்றுக்கண்வைத்ததென்னையெனின், ஈரைங்குற்றமுமின்றி வரும் இலக்கணம் முதனூற்கண் இல்லையென்பது 'முதல் வன்கண்' (தொல்-மர-106) என்புழிச் சொல்லுமாகலின், அவைபோல முதனூற்கண் உத்திவகையும் வாரா, சிறுவரவின வென்றற்கென்பது.

இனி, ஒத்தவென்றதனாற் பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிர சூத்திரமுந் தம்மின்வேறென்றலும் அவ்விருவகைப்பாயிரவுரையுஞ் சூத்திரவுரையும் வேறெழுதப்படுமென்றலுஞ் சூத்திரவுரையுட் பாயிர வுரை மயங்கிவருவன உளவென்றலும் அவ்விருவகையுரைக்கும் வேறு யினும் அவ்வுரைசெய்தான் பெயர் கூறுதன் முதலாகிய பாயிரவுரை கூற அமையுமென்றலுஞ் சூத்திரந்தானே பாயிரமில்லாதவழிப் பாயி ரம்போல நூன்முகத்து நிற்குமென்றலும் அங்ஙனம் நின்றவழிப் பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமும் உரைவகைத்தாற்பெய்துரைத் தலும் அவ்விருவகைப்பாயிரமுஞ் செய்தார் இன்னுரென்றலுமென்று இன்னுரென்ன கோடலாயிற்று. இவையெல்லாஞ் சூத்திரத்தோடு ஒத்த இலக்கணமேயாதலின் ஒத்தவென்னும் மாட்டேற்று னடங்கின.

அவை வருமாறு, "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்" என்னும் பொதுப்பாயிரமும், 'வடவேங்கடந் தென்குமரி' (தொல்-பாயிரம்) என்னுஞ் சிறப்புப்பாயிரமும் ஒழிந்த சூத்திரங்கள்போல நூற்பாவகவலாகி நூலின்வேறாகி இன்றியமையாவாயின. அவற்றிற்குச் சூத்திர வுரையோடு மயங்காமல் வேறுரையும் ஆண்டெழுதப்பட்டன. எழுத்தெனப்படுப என்னுஞ் சூத்திரத்தினை நீதீ என்பது சூத்திரமெனவும், இவ்வதிகாரம் என்னபெயர்த்தோவெனவும், இவ்வதிகாரம் யாதனை நுதலியதெனவும், அவற்றிற்கு விடைகூறலும், இவ்வதிகாரம் எனைப் பகுதியான் உணர்த்திஞனெனவுங் கூறி ஒழிந்த ஒத்திற்கும் இவ்வாறே சூத்திரவுரையோடு பாயிரவுரை மயங்கச் சொல்லியவாறும் அவற்றவற் றுட் கண்டுகொள்க.

இனி, இவ்வுரைசெய்தார் யாரோவென்றவழி, மதுரைக் கணக்காயனூர்மகனூர் நக்கீரரென உரையெழுதினுன் பெயர் கூறுதலுஞ் சூத்திரஞ்செய்தான்பெயர் கூறுதலோடு ஒத்த இலக்கணத்ததாயிற்று.

"அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டனுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்" (இறையனார்-1)

என்பது பாயிரமின்றித் தானே நூன்முகத்துனின்று இருவகைப் பாயிரவுரையும் பெய்து உரைக்கப்பட்டது. 'வடவேங்கடந் தென் குமரி' என்னுஞ் சிறப்புப்பாயிரஞ்செய்தார் பனம்பாரனாரெனவும் "வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும்" என்னும் பொதுப்பாயிரஞ்செய் தான் ஆத்திரையன் பெயராசிரியனெனவும் பாயிரஞ்செய்தான்பெயர் கூறியவாறு. 'என்பதுபாயிரம்' 'என்னுதலிற்றே'வெனப் பாயிரவுரை க்கு முகவுரைவந்தவாறு கண்டுகொள்க. பிறவும் அன்ன. (கஅ)

654. உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம் புரைதபவுடன்படக் காண்டிகைபுணர்ப்பினும் விடுத்தலும் விலக்கலு முடையோர் வகையொடு புரைதப நாடிப் புணர்க்கவும் படுமே.

இஃது, ஐயம் அறுத்தனுதலிற்று; என்னை? மேற்கூறிய சூத்திரம் உரைபெறுங்காற் காண்டிகையும் உரையும் வேறுவேறு பிறக்கக்கண்ட மாணாக்கன் ஒழிந்தனவும் ஒன்றொன்றனை ஒழித்துவருங்கொலென்று ஐயுற்றாற்குக் காண்டிகையும் உரையுமே கண்டாய் ஒன்று ஒன்றனை ஒழிந்துவருவன வென்று ஐயம் அறுத்தமையின். மேலதற்கே புற னடையெனவும் அமையும்.

• இதன் பொருள் : உரையெடுத்து அதன்முன் யாப்பினும்—காண் டிகையினை விளக்குங்கருத்திலுலும் அக்கருத்தின்றியும் அச்சூத்திரத் திற்கு உரைதொடர்ந்தெழுதினும் ; சூத்திரத்தினை அதுவென்று சுட் டினான் 'முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்து' (தொல்-சொல்-கிள-39) என்பதனு னெனவுணர்க.

சூத்திரம் புரை தப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்- அச்சூத்திரத்திற்கு இடையின்றிக் காண்டிகை பொருந்தச்செய்யினு ம்

'புரைதப' என்பதனுன் மேல் இடைபுகுமெனப்பட்ட பாயிரவுரை யின்றிச் செய்த காண்டிகைக்கும் பெரும்பான்மையெனக் கொள்க. 'உடன்பட' என்பதனுற் காண்டிகையல்லாத முகவுரைக்கண்ணே முன்னும்பின்னுங் காண்டிகைபெய்து உரைத்தலுங்கொள்க. கொள்ளவே, மூற்கூறிய ஐந்தும் ஒருங்குவருதலும் இவ்வாறே பெற்றும்.

விடுத்தலும் விலக்கலும் உடையோர் வகையொடு—கடாவிற்கு விடைகூறுவாரும் போலி மறுப்பாருஞ் சொல்லுஞ் சொற்பகுதியோடு; 'வகை' யென்றதனுன் அவ்விருபகுதியுங் காண்டிகைக்கு வருங்காற் குறிப்பினுற் கொள்ளவருமெனவும் உரைக்கண் வருங்காற் கூற்றினுற் கொள்ளவருமெனவுங் கொள்க. அஃதேற் கூற்றினுற் கோடன் 'மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்' (தொல்-மர-104) என வருகின்ற சூத்திரத்திற்பெறுதுமெனின், அற்றன்று; அது பிறன்கோள் பற்றி மறு தலைக் கடாஅ மாற்றமுங் கூறுதற்குச் சொல்லினுன்; அஃது அன்னதன்றி அறியாது விளுவுந் துணையேயாகலின் வேறென்பன. விடுத்தலெனவே விளுவினை விடுத்தல்பெற்றும். விலக்கலெனவே அஃதல்லாப் போலியை விலக்குதலென்பது பெற்றும்.

புரை தப நாடிப் புணர்க்கவும் படுமே—காண்டிகையிரண்டும் உரையிரண்டுமென்று வருகின்ற நான்கன்கண்ணும் இடை அந்தரமின்றிப் புணர்க்கவும்படும் அவ்விருபகுதியும், என்றவாறு.

அஃதாவது, காண்டிகைப்பகுதி இரண்டற்கும் விடுத்தலும் விலக்கலும் உடையோர் குறிப்பினுற் கொள்ளவைத்தலும் ஒழிந்த உரையிரண்டன் கண்ணும் அவை கூற்றினுற் கொள்ள வைத்தலு மென உணர்க. உம்மை இறந்தது தழீஇயிற்று. என்னை? காண்டிகையும் உரையும் ஒன்று ஒன்றினை ஒழித்தும் வருமென்றமையின். ஒழியாதுவருதல் உடன்படவென்றதனுல் தழுவப்பட்டது. இவற்றிற்கு உதாரணமாமாறு தத்தம்விரிச்சூத்திரத்துட்சொல்லுதும்.(கக)

655. மேற்கிளந் தெடுத்தயாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்

சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத்தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
யளக்க லாகா வரும்பொருட் டாகிப்
பலவகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென வாத்தனர் புலவர்.

இது, சிறுத்த முறையானே சூத்திரமாமா றுணர்த்துதல் நுத லிற்று.

இதன் பொருள் : மேற் கிளந்து வடுத்த யாப்பினுட் பொரு ளொடு—'சூத்திரந் தானே, ஆடி னிழலி னறியத் தோன்றி- நாடுத லின்றிப் பொருணனி விளங்க - யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே' (தொல்-செய்-169) என மேற் செய்யுளியலுள் விதந்தோ திய இலக்கணமுடைத்தாய்:

னவே, வழுவமைக்கின்ற கிளவியாக்கத்து முதற்கண்ணே யினையியலுட் கூறப்படும் இலக்கணத்தினை ஆண்டு ஓர் உபகாரப் படக் கூறியதுபோல அடிவரையின்மைக்கு ஆண்டுக்கூறியதல்லவிச் சொல்லப்பட்ட இலக்கணம், ஈண்டு இனிக் கூறுகின்ற இலக்கணத் தோடு கூட்டி மரபெனவேபடும் என்றுணர்க. ஆண்டுப் பொது வகையாற் கூறிய நூலிற்கும் இஃதொக்கும்; என்னை? பலசூத் திரந் தொடர்ந்து நூலாகி ஈண்டே மரபுகூறப்படுதலின். உரையா யின் அன்னதன்றி நால்வகையுரையுள் ஏற்பன பகுதிவேறுபடும் மரபு கூறுகின்றமையின் அது செய்யுளியலுட்கூறியவாறுபோலாதுவேறென வேபடும் ஈண்டென்பது. இனி, மூற்கூறிய பாயிர இலக்கணத்தினை இன்றியமையாது சூத்திரமென்றற்கும் இதுவே ஒத்தாகக் கொள்க. என்னை? மேற்புறத்துனின்று மேற்கிளந்தெடுத்த யாப்பெனவேபடு மாகலினென்பது. இதனது பயம் பாயிர இலக்கணங்களோடு பொருந் தச் சூத்திரஞ் செய்த லென்பதாயிற்று. இஃது ஒப்பக்கூறலென்னும் உத்திவகை. மேற்கிளந்தெடுத்த இலக்கணமாவது, ஆடினிழற்போல்

பொருளானுந் தேர்தல்வேண்டாமற் பொருட்பெற்றி உணர்கின்றுங் குச் சூத்திரத்தொடருள் இலக்கியமின்றுயினும் அதனை இதுகேட் டான் காணுமாற்றுற் செய்தலாயிற்று. இனி மேற்கினைத்தெடுத்த பாயிர இலக்கணச்சூத்திரத்தோடு பொருந்துங்காற் பொதுப்பாயிர இலக்கணம் பொருந்தா, சிறப்புப்பாயிர இலக்கணம் எட்டுமே பொருந் துவனவெனக்கொள்க. அஃதென்னைபெறுமாறெனின், மேற்கினைந்த யாப்பென்னுது எடுத்த யாப்பென்றதனானே ஒருநூற்குச் சிறப்புவகை யான் இன்றியமையாதாகி எடுத்துக்கொள்ளப்படுவது 'வடவேங்கடந் தென்குமரி' என்றுற்போலுஞ் சிறப்புப்பாயிரமாகலானும், பொதுப் பாயிரம் எல்லாநூன்முகத்தும் உரைக்கப்படுமென்றற்கும் அங்ஙனங் கூறப்பட்டது.

சில்வகை எழுத்தின் செய்யுட்டாகி—ஆடினிழலின் அறிவச்செய் யுங்கால் அதுபோல ஒருவழிப் பொருளடக்கி ஒருவழி வெள்ளிடை யிடப்பச் செய்யப்படாது பொருட்கு வேண்டுஞ் சில சொல்லாற் செய்யுஞ் செய்கைத்தாகி ; செய்யுளென்றுன் அடிவரைச் செய்யு ளின் வேறுபட்ட பொருட்பாட்டிற்றுகிய அடிவரைப்பாட்டினுட் சிறப் புடைய ஓசியத்தானும் வெண்பாவானுஞ் செய்யவும்படுஞ் சூத்திர மென்றற்கென்பது. என்னை ? மண்டிலப்பாட்டின் உடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ் செய்தமையானுஞ் சின்மென்மொழியிற் றுய பனுவல் வெண்பாட்டாகி வருமாதலானுமென்பது.

சொல்லுங் காலை உரையகத்து அடக்கி—பொருளானும் போலி யானுஞ் சொல்லுவார் சொல்லுங்கால் அவ்வுரையெல்லாந் தன்னகத் தடக்கி; நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்தாகி—பருப்பொருட் டாகிய பாயிரம்போலாது நுண்பொருட்டாகிய பொருள் கேட்டார்க்கு வெள்ளிதன்றி உள்ளுடைத்தாகி; துளக்கலாகாத் தூணைபோ லெய்தி— முன்னும் பின்னுங் கிடந்த சூத்திரங்களானே தன்னுட்பொருள் இன்றியமையாதாகலெய்தி ; எனவே, ஒன்றொன்றனை இன்றியமை யாத உறுப்புப்போலச் செய்யல் வேண்டுமென்றவா றுயிற்று; அளக்க லாகா அரும்பொருட்டு ஆகி—அளத்தற்கரிய பெரும்பொருட்டாகி; பல்வகையானும் பயன் தெரிபுடையது—பலவாற்றானும் பொருள்

விளங்க வருவது; சூத்திரத்து இயல்பென யாத்தனர் புலவர்—இவை யெல்லாஞ் சூத்திரத்திலக்கணமென்று முதனூல்செய்த ஆசிரியராற் சொல்லப்பட்டன, என்றவாறு.

இஃதியல்பெனவே இவற்றிற் சிறிய வேறுபட்டன விகாரமென்றானும்.

'உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமு முயிரும் வருவழி யியற்கை'
(தொல்-எழுத்-தொகை-21.)

என்றவழி யகரமும் உயிரும் வருவழியெனவே இது நிலைமொழித் தொழிலென்பது, ஆடிநிழலின் அறியத்தோன்றிற்று. இனி, நிலை மொழித்தொழில் வேறுகூறினமையின் 'மயங்கா மரபி னெழுத்து முறை காட்டி' (தொல்-பாயிரம்) எனப் பாயிர இலக்கணத்துடன் பொருந்துவதாயிற்று. இனி, எண்வகையாற் பரந்துபட்ட புள்ளியீற்றுச் சொல்லினை யெல்லாம் உகரமொடுபுணரும் புள்ளியென அடக்கினமையிற் சில்வகையெழுத்தின் செய்யுளுமாயிற்று. யகரமும் உயிரும் வருவழி இயற்கையென வருமொழிப்பரப்பெல்லாம் அடக்கினமையின் அதற்கும் இஃதொக்கும், இதனைப்பற்றியெழுந்த பொய்ப்பொருளும் மெய்ப்பொருளும் பலவாகலின் உரையகத்தடக்கலும் உடைத்தாயிற்று. தொகைமரபினுள்ளும் உயிர்மயங்கியலினுள்ளும் புள்ளி மயங்கியலினுள்ளுங் குற்றியலுகரப்புணரியலினுள்ளும் பரந்துபட்ட பொருளினை நுழைந்து வாங்கிக்கொள்ள வைத்தமையின் நுண்மையொடுபுணர்ந்ததூஉமாயிற்று. இச்சூத்திரம் பொருளுரைத்தவழியும் வெள்ளிதன்றி உள்ளுடைத்தாகலின் நுண்மையுடைத்தெனவும்பட்டது. 'குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்' (தொல்-எழுத்-தொகை-18) என்பதூஉம் 'ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர்' (தொல்-எழுத்து-புள்ளி-1) என்பதூஉம் முதலாயவற்றிற்கும் இஃது இன்றியமையாதாகலும் இதற்கு அவை இன்றியமையாவாகலும் உடைமையின்; துளக்கலாகாத்துணைமையெய்தியதூஉமாயிற்று. இருபத்துநான்கீறும் இருபத்திரண்டுமுதலும்பற்றி எழுந்த மொழிகளெல்

ஆம் வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் இருமொழித்தொழி லும் ஒருவகையால் தொகுத்துச்சுறினமையின் அளக்கலாகா அரும் பொருட்டாதலும் பெற்றும். இங்ஙனம் வருதல் இயல்பெனவே பிறிய வேறுபட்டுவருவன உளவாயின் அவையும் அமையுமென்றுணும்.. அவை,

'அந்நா லைந்து மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த வுயர்திணை யவ்வே'
(தொல்-சொல்-வினை-11.),

என்றாற்போல்வனவும் பிறவும் இலேசுசொல்லும் இயல்பன்றி விகார மெனப்படும். (கூ00),

656. பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற் கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்.

இது, முறையானே காண்டிகையாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : குற்றமில்லாத சூத்திரந் தனதுட்பட்ட இலக் கணத்துள் ஒன்றுங் சரவாது முடியச்செய்வது காண்டிகையாம், என்ற வாறு.

பழிப்பில்சூத்திரமென்றதனாற் காண்டிகைசெய்யத்தகாதென்று இகழ்ச்சிப்படப் பரந்தன உளவாயின் மறுத்துச்செய்கவென்பதாம். இதனை வருகின்ற காண்டிகைச்சூத்திரம் அகலவுரைக்கும் ஏற்பித்துக் கொள்க.

உதாரணம்: "எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன் அகரமுத, னகர விறுவாய் மூப்பஃது' என்று சொல்லுவார் ஆசிரியர், சார்ந்து வரலிலக்கணத்த மூன்று மல்லாத இடத்து" எனவரும். பிற வும் அன்ன. இனி மறுத்துச் செய்யுங்கால்,

'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும்' (தொல்-புறத்-5),

என்பது தெய்வச்சிறப்பினை அறியுஞ் சிறப்போடு வெவ்வாயுடைய வேலனது வெறியாட்டினை ஆடிய காந்தளுமென்றாற்போல வருவன பலவுங்கொள்க. இங்ஙனங் கூறிய உதாரணங் காட்டல்வேண்டாமையை உணர்ந்து உரைநடந்தகாலமும் உடையவாகும் முற்காலத்துநூல்க ளென்பது கருத்து. அஃதேல், உதாரணத்தோடுவருங் காண்டிகை யிலவோவெனின், அது வருகின்ற சூத்திரத்துட் சொல்லுதும். கரப் பில்லதென்னுது முடிவதென்றான் அதனுற் பரந்துபட்ட சூத்திரத் தினை அங்ஙனம் மறுத்துச்செய்யாது தொகுத்துக் காண்டிகைபான் உரைக்குங்கால் உட்பொருளெல்லாம் விளங்காமற் கரந்துசெய்தலும் உண்டென்பது கொள்க. அது 'வெறிபறி சிறப்பின் வெவ்வாய் வேலன் - வெறியாட் டயர்ந்த காந்தளும்' என்பது முதலாக இக் கூறப்பட்ட இருபத்தொரு துறைபுங் கரந்தையெனப்படுமென்றாற் போல மாட்டென்னுஞ் செய்யுளுறுப்பினைத் தோற்றுவாய் செய்து விடுதல். பிறவும் அன்ன. (கo)

657. விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா
வேது நடையினு மெடுத்துக் காட்டினு
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.

இது, மேலதற்கோர் புறனடை. எய்தியதன்மேற் சிறப்புவிதியு மாம். என்னை? காண்டிகையை மேலதனோடு இருவகைய என்ற மையின்.

இதன் பொருள்: விட்டகல்வின்றி யிரிவொடு பொருந்தி—சொற் படுபொருள் சொல்லுங்கால் தொடர்மொழிகளைத் தொகைகளை பய னிலை முதலாயவற்றுற் பகுத்துக்கூறுது பகுத்துக்கூறும் உரைவிகற் பம் போன்று மற்றப்பொருள் தோன்றி; விடுத்தலென்பது, கண்ண ழிவு; அக்கண்ணழிவான் அகன்றுபடுதல் விட்டகல்வெனப்பட்டது. அங்ஙனம் அகன்றுபடுதலின்றியெனவே, இஃது இன்னவேற்றுமைத் தொடர் இஃது இன்னபயனிலைத்தொடரென்றாற்போலச் சொன் னிகழ்ச்சியுடைத்தாயின் அஃது உரையெனப்படுமென்றவாறும்.

சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா—இது நியமச்சூத்திரம் அதிகாரச்சூத்திரமென்றாற்போல முதற்கட் சொல்லிய சூத்திரப்பெயரினை அவ்வாறாகி முடிந்த முடிபுசொல்லுதல் பொருட்டாக; ஏதுவையினும்—நியமச் சூத்திரமென்றாலும் பிறிதொன்றென்றாலும் மேற்கொண்டக்கால் இன்னது காரணத்தினெனக் காரணங்கூறும் வழக்கினாலும்; எடுத்துக்காட்டினும்—அங்ஙனங் காரணங் கூறியக்கால் அதற்கேற்பது ஒன்றாயினும் உதாரணமாயினும் வழிநூற்காயின் முதனூல் எடுத்துக்காட்டுதலாயினும் ஒன்றுபற்றியும்; மேவாங் கமைந்த மெய்ந்நெறித்து அதுவே—சூத்திரஞ்செய்த ஆசிரியன் வேண்டியதே சொல்லி விடும் பொருளிலக்கணத்திற்று மேற் கூறிவரு கின்ற காண்டிகை, என்றவாறு.

இது,'மெய்ந்நெறி' யென்பது சூத்திரத்துச் சொல்லிற் கருதிய பொருளிலக்கணம். அதனை அவன் வேண்டியாங்குச் சொல்லி முடிப்பினல்லது சூத்திரத்துச் சொற்கண் வந்த சொல்லாராய்ச்சியும் எழுத்தாராய்ச்சியும் அறியவேண்டுவனவெல்லாஞ் சொல்லாரென்பது கருத்து. இதனை ஈற்றுச்சண் வைத்ததனானே வருகின்ற உரையும் இங்ஙனம் விட்டகல்வின்றி வருதலுடைத்தெனக் கொள்க.

உதாரணம்: 'இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்' (தொல்-சொல்-கிளவி-19) என்பது தன்றன்மையான் நிகழ்பொருளை இன்னதன்மைத்தென்று சொல்லுகவென்றவாறு. அது நிலம்வலிது நீர் தண்ணிது தீவெய்து வளியுளரும் என்றாற்போல்வன. இதற்குக் கருத்தோதுதல் பாயிரவகையாற் பெறுமென்பது 'உரைப்பிற் காண்டிகை' (தொல்-மர-98) என்புழிக் கூறிவந்தாம். மற்று, 'உயர்திணை யென்று சொல்லுப ஆசிரியர் மக்கட் சுட்டின்கண், அஃறிணையென்று சொல்லுப ஆசிரியர் அவரல பிறவற்றுக்கண், அவ்விருதிணைப் பொருண் மேலும் இசைக்குஞ் சொல்லினை' யென்றக்காலும் 'வேற்றுமையெனப் பட்ட பொருள் ஏழ்' என்றக்காலும் உதாரணங்காட்டுமாறென்னை? அவற்றவற்றுட்பின் வேறு சூத்திரங்களான்,

ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு ஈவணி'

(தொல்-சொல்-கிள-2)

எனவும்,

"ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று"

(தொல்-சொல்-கிள-3)

எனவும்,

'அவைதாம், பெயர்ஐ யொடுகு
இன்அது கண்' (தொல்-சொல்-வேற்-3)

எனவும் உதாரணங் கூறுமாலெனின், அவை துளச்சலாகாத் துணைமையெய்தி நின்றமையின் அவ்வாறு உதாரணம் ஆண்டுக்காட்டாக்காலும் அமையும், அவற்றைப் பிற்கூறுமாகலினென்பது. அல்லதூஉம் எதிரதுநோக்கி உயர்திணைச்சொன் மூன்றும் அஃறிணைச் சொல் இரண்டுங் காட்டியக்காலும் இழுக்கன்றென்பது. ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும். (கஉ)

658. சூத்திரத் துப்பொரு ளன்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லா
மொன்ற வுரைப்ப துரையெனப் படுமே.

இது மேல் 'ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை மெய்ப்படக் கிளந்த வகையதாகி' (தொல்-மர-98) என நிறுத்தமுறையானே காண்டிகையினை மெய்ப்படக்கிளந்த வகை யுணர்த்துதல்நுதலிற்று.

இதன் பொருள்: மேற் 'பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்' (தொல்-மர-101) வருதலும், அதுவே ஏதுவும் எடுத்துக்காட்டும் உடைத்தாகி வருதலுமென இருவகையும் உடைத்தென்றான், இனிச் சூத்திரத்துப்பொருளன்றியும் ஒருதலையாக அதற்கு இன்றியமையாது பொருந்துவனவெல்லாம் அதனோடு கூட்டிச் சொல்லுதல் உரையெனப் படும், என்றவாறு.

அவை 'இயற்கைப் பொருளே யிற்றெனக் கிளத்தல்' (தொல்-சொல்-கிள-19) என்றவழி எடுத்தோத்தின்றி நிலம்வலிதாயிற்றென்னும் வழுவமைதிகோடலும் 'ஒத்த சூத்திரம்' என்றவழிப் பாயிரம் ஒத்த சூத்திரமென்றுகோடலும் இன்னோரன்னகொள்க. எல்லாமென்றதனாற் சூத்திரப்பொருளேயன்றி எழுத்துஞ்சொல்லும்பற்றி ஆராயும்பகுதியுடையவாதல் வேண்டும் அவ்வுரையென்பது கொள்க. இனி, மேற் காண்டிகைக்கு ஓதிய இலக்கணங்களுள் இதற்கேற்பனவெல்லாம் அதிகாரத்தாற் கொள்ளப்படும். அவை ஏதுவும் நடையும் எடுத்துக்காட்டுஞ் சூத்திரஞ்சுட்டுதலுமென்று இன்னோரன்ன கொள்க. இவையெல்லாந் தழுவுதற்குப் போலும் 'இன்றி யமையா தியைபவை யெல்லாம்' என்று எடுத்தோதுவாளுயிற்றென்பது. (கக)

659. மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானு முடிந்த நூலானு
மையபமு மருட்கையுஞ் செவ்விதி னீக்கித்
தெற்றென வொருபொரு ளொற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்ற லென்மனர் புலவர்.

இதுவுங் காண்டிகைபோல உரையும் இருவகைத்தென்பது அறியுமாற்ருன் எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்—மறுதலைமாற்றத்தினை இடைசெறித்துக் கடாவுதலும் அதற்கு மறுமாற்றமாகிய விடைகூறுதலும் உடைத்தாய்; தன் நூலானும்—உரையெழுதுவானுற் கூறப்படுகின்ற உரை தனக்கு முதனூலாகிய சூத்திரத்தானும்; இதனனே உரையின்றிச் சூத்திரமே நூலெனப்படுவதூஉமாயிற்று: முடிந்த நூலானும்—அதன் முதனூலானும்; முடிந்தநூலென்பது இணைநூலென்பாரும் உளர்: இணைவன கூறத் தான் கூருளுயின் அது குன்றக்கூறலென மறுக்க. அங்ஙனங் கொள்ளும் பொருண்மை யுளவாயின் அவை 'சூத்திரத்துப்பொருளன்றியும்' என்பதனுன் அடங்கும். மற்று முதனூலாற் கூறியபொருள் சில

குன்றக்கூறினென்போல முடிந்தநூலாற் கொள்க என்றதென்னை யெனின், அற்றன்று ; இப்பொருண்மை முடிந்தநூலினும் உண்டென்று எடுத்துக்காட்டப்படுமென்றுணைன்பது. இது, மேல் 'எது நடையினு மெடுத்துக் காட்டினும்' (தொல்-மர-102) என்றவழிப் பெறுதுமாயினும் முதனூலல்லது எடுத்துக்காட்டப்பெறுஅரென்றற்கு ஈண்டு வரைந்துகூறினனென்பது. எனவே, இணைநூலும் அவற்றுவழிநூலும் எடுத்துக்காட்டுங்கால் தனக்கு முதல்வராயினரை நாட்டி அவர் கருத்தேபற்றிப் பிறர்செய்தாரெனினல்லது பிறர்மேல் தலைமை சிறீஇ அவர்கருத்துப்பற்றி இவர் செய்தாரெனக்கூறார். அங்ஙனங் கூறின் அவர்நூற்கே உரையெழுதுவா னல்லனெனவென மறுக்க. இனி 'வினையி னீங்கி விளங்கிய வறிவின் முனைவ' (தொல்-மர-94) னுற் செய்யப்பட்ட முதனூற்காயின் முடிந்தநூல் எடுத்துக்காட்டுத லென்னும் இவ்விலக்கணமின்றென்பதுகொள்க,

ஐயமும் மருட்கையுஞ் செவ்விதின் நீக்கி—ஐயவுணர்வும் பொய்யுணர்வுஞ் செம்பொருளினன் நீக்கி ; தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇ—அச்செம்பொருள் கருவியாகக் கேட்பான் உணர்வு மருட்கை நீக்கி மெய்யுணர்ந்து தெற்றெனவும் இரட்டுறுதனீக்கி ஒற்றுமைகொளுத்தியும் ; துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்—கவர்படச் சொல்லாது ஒருபொருள் துணிந்துரைத்து மாறுதலும் அதிகாரத்தான் நின்ற உரையிலக்கணம், என்றவாறு.

மறுதலையும் மாற்றமுமென்பது கடா விடை ; ஐயமும் மருட்கையுஞ் செவ்விதினீக்கல் ஒருபுடை யொப்புமையுடைய போலியும் அதற்கு ஒன்றும் இயைபில்லாத பொய்ப்பொருளுமெனப்படும். 'பிறிது பிறிதேற்றலு முருபுதொகவருதலும்' (தொல்-சொல்-வேற்,-ம-21) என்றவழிப் பிறிதென்று ஒருகாற்சொல்ல ஆருமுருபெனவும் பின்னொருகாற் பிறிதென ஒழிந்த உருபெல்லாந் தழுவுமெனவுஞ் சொல்லுதல் போலியெனப்படும். என்னை ? அவ்வாறுவதனோ டெழாமுருபும் பிறவுருபேற்கும் வழக்குள்வழி ஒன்றனைக்கொண்டமையின் அஃது ஒருபுடையொப்புமையுடைத்தாகி அப்பொருளன்றெனவும்படாது மற்

ரென்றனைக் கோடல்பொருளெனத் துணியவும்படாது ஐயவுணர்வு செய்தமையின் அது போலியாயிற்று. இனிப், 'பிறிதுபிறிதேற்றலும் உருபுதொக வருதலும்' என்னும் இரண்டும்மையும் பொருளிலவென்று பிறிது பிறிதேற்றலும் உருபுதொக வருவதற்கண்ணென்று பொருள் கூறுதல் போல்வன சூத்திரத்தின் கருத்தறியாது பொய்யைமெய்யென்று மயங்கிய மருட்கையெனப்படும். இவ்விரண்டனையும் நீக்கி உண்மை உணர்த்துதல் உரையெனப்படுவதாயிற்று. றிற்றலென்பது றிற்க அவ்வுரையென்றவாறு. தன் நூலானும் முதனூலானும் ஐயமும் மருட்கையும் நீங்குங்கால் அவற்றுட்கிடந்த செம்பொருளானே நீக்கப்படுமென்பது இரண்டுகண்ணூலுங் கூர்மையாற் பார்த்தானென்பதுபோலக் கொள்க. (கஅச)

660. சொல்லப் பட்டன வெல்லா மாண்டு மறுதலை யாயினு மற்றது சிதைவே.

இது, வழிநூற்கே ஆவதோர் வேறுபா டுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மேற்கூறிய சூத்திரமுங் காண்டிகையும் உரையுமென்னும் மூன்றற்குஞ் சொல்லப்பட்ட இலக்கணமெல்லாஞ் சிதையாது மாட்சிமைப்படினும் முதனூலோடு மாறுகொள்ளின் அவற்றுள் எல்லாஞ்சிதைந்ததெனவேபடும் அந்நூல், என்றவாறு.

மறுதலையாயினுமென்ற உம்மை எதிரது தழீஇயிற்று; மேற்கூறும் பத்துவகைக் குற்றமுமேயன்றி வழிநூற்கு இதுவுங் குற்றமாமென்றமையின். ஈரைங்குற்றமுமின்றி என்பதனை நோக்க இறந்தது தழீஇயிற்றுமாம். இதனானே, பிற்காலத்து நூல்செய்வார் நூலிலக்கணம் பிறழாமற் செய்யினும் முற்காலத்து நூலோடு பொருண்மாறுபடச் செய்யின் அது மரபன்று வழிநூற்கென விலக்கியவாறுயிற்று. எனவே, முதனூற்காயின் இவ்வாராய்ச்சியின்றென்பது கருத்து. என்னை ? முதல்வனூன் மாறுபடுதற்கு அதன் முன்னையதோர் நூல் இன்மையினென்பது. அல்லதூஉம் 'மற்றது' என்று ஒருமை கூறினமையானும் இது வழிநூற்கே விலக்கிற்றென்பது கொள்க. மற்று

மேல் 'முதலும் வழியுமென நுதலிய நெறியின' (தொல்-மர-93). எனவே முதனூலின் வழித்து வழிநூலென்பதூஉம் மறுதலையாயிற் சிதைவென்பதூஉம் பெறுதுமாதலின் இச்சூத்திரம் மிகையாம் பிறவெனின், அற்றன்று; முதல்வழியென்பன முன்னும் பின்னுங் காட்டினன்றி மாறுபடாமைக் கூறல்வேண்டு மென்பதூஉம் பெறுதுமாகலின் அது கூறல்வேண்டுமென்பது. பெறாமாகலின் இது கூறல்வேண்டுமென்பது. அல்லாக்கான் முன்னோர்நூலின் முடிபு ஒருங்கொவ்வாமைப்பின்னோன்வேண்டும்விகற்பங்கூறுவான்செல்லுமென்பது. (கo௫).

661. சிதைவில வென்ப முதல்வன் கண்ணே.

இது, மேற்கூறிய வழிநூற்குப்போல முதனூற்கே ஆவதோர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: மேற் பொதுவகையாற் கூறப்பட்ட நூலிலக்கணம் ஐந்தனுள் ஈரைங்குற்றமுமின்றியென முன்னே ஓதிய இலக்கணம் ஒன்று; முதனூற்காயின் அம்மரபின இலக்கணம் வேண்டுவதன்று, என்றவாறு.

சிதைவிலக்கணத்தைச் சிதைவென்று ஓதினான் ஆகுபெயரானென உணர்க. மற்று 'வினையினீங்கி விளங்கிய அறிவின்' முனைவற்குச் சிதைவிலவென்பது அறிவானே உணர்வலெனின, எடுத்தோத்துக் களைந்து உய்த்துணர்தல் பயமின்றென்பது. அல்லதூஉம் முதனூற்கு முன்னையதோர் நூலினை இலக்கியமாகப் பெறினன்றே முதல்வன்றான் நூலிலக்கணஞ் செய்வது. மற்று அன்னதோர்நூலின் அவன்செய்யாத நூலிலக்கணம் யான்செய்தேனெனவும் அவற்றுச் சிதைவினையே முதனூற்கண் இல்லையென்றதூஉம் ஒழிந்த நான்கும் முதல்வனூற்கண்ணே உளவாகலின் அவற்றை இலக்கணங்கூறினான் எனவும் இனிக் குற்றங்களும் பிற்றோன்றுங்கொலென்று அஞ்சி இங்ஙனம் அவற்றை வரையறுத்து யான் பாதுகாக்கின்றேனெனவும் அங்ஙனம் பாதுகாத்து இவ்விலக்கணங்கள் ஓதிற்றும் அவன்முதனூலே இலக்கியமாகப்பெற்றனவுங் கூறியது கூறல்போல்வன வேறோர்

பொருள் விளக்குமாயிற் குற்றமன்றென்பதனையும் யானே கூறியதன்றி முதல்வனையிற் சில்வகையெழுத்தின் செய்யுட்டாகவே அவற்றை வேறுவேறு விதித்துப் பரந்துபடச் செய்யுமெனவும் இவையெல்லாம் அறிவித்தற்குச் 'சிதைவிலவென்ப முதல்வன்கண்' என்றனென்பது. மற்று முதல்வன் யாப்பே கூறுமாயின் அந்நூற்குத் தந்திரவுத்தியும் வேண்டுவதன்றும் பிறவெனின், அங்ஙனமே முதனூற்காயின் முப்பத்திருவகையுத்திவாராது சிறுபான்மையான் வருமென்றற்கன்றே ஈரைங்குற்றமுமின்றி நேரிதின் முப்பத்திருவகை யுத்தியொடு புணர்ந்ததென ஈண்டு விலக்கப்பட்ட குற்றத்தின் பின்னர் அவ்வுத்தியை வைத்தகருத்தென்பது ஆண்டுங் கூறுவாமாயிற்றென்பது. மற்று முதனூலினன் நூல் இலக்கணங் கூறுதலெவெனின் கூறினனே யன்றே? தான் ஒருவகையான் நூல்செய்து மற்று அதுவே நூலிலக்கணமெனப் பிற்காலத்தார்க்கு அறியவைத்தமையினென்பது. மற்றுச் 'சிதைவில வென்பார் யாரோவெனின் இகழ்காலத்தாசிரியரும் எதிர்காலத்தாசிரியருமென உணர்க. (கஅசு)

662. முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையுமவ்
வல்லோன் புணரா வாரம் போன்றே.

இது, முதனூலொடு மறுதலைப்படுதல் வழிநூற்குக்குற்றமென்கின்றது.

இதன்பொருள்: முதல்வழியாயினும் யாப்பினுட்சிதையும் - அதிகாரத்தானே முதனூலினைக் குற்றமின்றி வருவவென்று ஈண்டு இலக்கணங்கூறல் வேண்டுவதன்றென்றனன் இனி அம்முதனூலினை மாறுபடாமல் ஆண்டோதிய பொருண்மை கூறுமாயினும் நால்வகையாப்பினுண் முதனின்ற மூன்றும் பற்றி வழிநூற்குக் குற்றம்பிறக்கும்: மற்று மொழிபெயர்த்தலொழியக் கொள்ளுமாறென்னையெனின், யாப்பினுட் சிதையுமென்று இடமும் இடத்தியல் பொருளுமாக ஒதினமையின் அஃதொழிக்கப்படும். மற்று அஃதொழிக்குமாறென்னையெனின், தமிழ்நாட்டு வழக்கிற்கு முதனூலாகிய அகத்தியத்துண் மொழிபெயர்த்துச் செய்யவேண்டும் பொருளிலவாகலானும் பிறபா

டைக்கும் பொதுவாயின பொருளவாயின் அவையுந் தமிழ்வழக்கு நோக்கியே இலக்கணஞ் செய்யப்படுமாகலானும் அவர்க்கும் மொழி பெயர்த்தல் வேண்டுவதன்றாகலின் அதுவே ஒழிக்கப்படும். இக்கருத் திஞனன்றே 'வழியி னெறியே நால்வகைத் தாகும்' (தொல்-மர-96) என வழிநூலேயே விரித்து நால்வகை யாப்பிற்கும் உரிமை கூறிய தென்பது. அங்ஙனம் முதனூற்கு மொழிபெயர்த்தலின்மையின் யாப் பொன்றும் பற்றிச் சிதைவுபிறவாது, ஒழிந்தனபற்றி வழிநூற்குச் சிதைவுண்டாமென்பது கருத்து.

வல்லோன் புணரா வாரம் போன்றே - வாரம்புணர்ப்பான் வே றொருவனையவழி முதற்கூறு புணர்ந்தாற் புணர்ந்தவாற்றோடு பொருந் தச் செய்யாதவாறுபோல, என்றவாறு.

வாரமென்பது கூறு; என்னை ? ஒருபாட்டினைப் பிற்கூறுசொல் லுவாரை ''வாரம்பாடுந் தோரியமகளிரும்'' என்பவாகலின். யாப்பி னுட்சிதைத்தலென்பது முதனூலும் வழக்குநூலாயின் இழிந்தோர் வழக்கும் வழக்கன்றாவெனக் கூட்டிவிரித்து யாத்துச் செய்யினும், அழன் புழன் என்பனபோல்வன இக்காலத்திலவென்று களைந்து தொகுத்து யாத்துச்செய்யினுந், தொகைவிரியும் மயங்குமாற்றான் விரிந்தது தொகுத்தலென்னும் நூற்புணர்ப்பினைத் தொகைவிரி யெனும்யாப்பெனக் கூறியதல்லாதவழித் தொகுத்து யாத்தே செய்த லும் இம்மூவகை யாப்பினோடு மெய்த்திறங் கூறுவலென மொழி பெயர்த்தலே மயக்கிக் கூறுதலுமெல்லாம் யாப்பினுட் சிதைவேயாம். அது பண்ணும் பாணியும் முதலாயின ஒப்பினும் வல்லோன் புணர்ந்த இன்னிசை யதன் நீர்மைப்படக் காட்டா. வாரம் புணர்ப்பான் புறநீர தாகிய இசைபடப் புணர்த்தல் போல்வதாயிற்று. மற்று இழிந்தோர் வழக்கினைப் பிற்காலத்து உயர்ந்தோருந் தகுதிபற்றி வழங்குபவாக லான் அவையும் அமையாவோவெனின், அவை சான்றோர் செய்யுட் குதவாது; கற்றுணர்ந்தாருங் கற்றுணராதாரும் மற்று அவை கேட்டே மனமகிழ்வாரைப்பற்றி யிகழ்ந்தனவாயினும் ஒற்றுமைப்பட்டு ஒருவகை யில்லா. வெற்ற காலந்தோறும் பிறிதுபிறிதாகிக் கட்டளைப்படுத்தி

நூல்செய்வார்க்குங் கையிகந்து வரையறை யின்றுமாகலின் அஃது இலக்கணமெனப்படாதென்பது. (கரு)

664. சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
பொருளில மொழிதன் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்ன யாப்பிற் றுதல்
பழித்த மொழியா னிழுக்கங் கூற
றன்ன ரொருபொருள் கருதிக் கூற
லென்ன வகையினு மனங்கோ ளின்மை
யன்ன பிறவு மவற்றுவிரி யாகும்.

இது, சிறுத்த முறையானே ஏழைய குற்றமும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: சிதைவு எனப்படுபவை வசையற நாடின்-குற்றமென்றற்குச் சிறப்புடையனவற்றைக் குற்றந்தீர ஆராயின்: இவற்றை எனப்படுபவென்பதென்? குற்றமாதற்குச் சிறந்திலவாம் பிறவெனின்; இவ்வாசிரியர் எஞ்ஞான்றுங் குற்றத்திற்கு இலக்கணங் கூறுதலான் இலக்கணத்தோடு கூறுந்தூணைப் பயம்படுதலும் ஒருவாற்றுற் சிறப்பெனவேபடுமென்பது. அல்லதூஉம் ஒழிந்த செய்யுட்காயின் இவையனைத்தும் ஆகாவென்பது ஈண்டே தழாஅல்வேண்டுமாகலானுஞ் செய்யுட்காயின் அவை அமையாச் சிறப்பு உடைமையானும் இதுவழக்குஞ் செய்யுளுமேயன்றி அவற்றின் வேறுபடவுஞ் செய்யப்படும் நூலிலக்கணமாகலானும் எழுவகை வழுப்போல அமைவனவே கூறுதுநூலுள் வரப்பெறுதனவும் வரைந்து கூறினனென்பது. அமைவனவற் றினஞ்சார்த்தி ஒழிந்தனவுங் கூறினன்; அல்லாக்கால், அவையேகுற்றமாகி ஒழிந்தன புகுதப்பெறுவான் செல்லுமென்றஞ்சியென்பது. 'வசையற நாடின்' என்றதனுள் இன்னனம் குற்றமென்று வரையப்பட்

டனவற்றைக்கொண்டு புகுந்து மற்றொருபொருள் கொள்ளின் அவை வகையற்றனவாமென்பது. அவை கூறியதுகூறன், மாறுகொளக்கூறல், மிகைபடக்கூறல் பொருளிலமொழிதன் மயங்கக்கூறல் என்னும் ஐந்து மாயின. கூறியது கூறல் முன்னொருகாற் சொல்லிய பொருள் பின்னு மொருகாற் சொல்லுதல். அது 'உட்குவரத் தோன்று மீரேழ் துறை த்து' (தொல்-புறத்-1) எனவும், 'வந்த வீரேழ் வகையிற் றாகும்' (தொல் புறத்-3 எனவும் இருகாற்சொல்லி ஒருகாற் பயன்கொண்ட வாறு. மாறுகொளக்கூறல் 'மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை' (தொல்-எழுத்-குற்-10) என்றவழிப் புல்லினையும் மரமென அடக்கு தல். இக்கருத்து நோக்கியும் போலும் ஆண்டு 'ஒன்றென முடிப்பின் தன்னின முடித்த' லென்பதனாற் புல்லினையும் மரமென்று தழீஇயின அக்கருத்தென்பது. குன்றக்கூறல் சொல்லப்புகுந்த பொருளினை ஆ சறக்கூறாது ஒழியப்போதல்: இஃதோர் பயன்படாக்குற்றம் மிகை படக்கூறல் சில்வகை யெழுத்தின் செய்யுட்டாகச்செய்யாது சூத்திரத் துட் சிலசொன் மிகையாகச்செயதல் போல்வன: அவை 'ஆயி ரியல புணர்நிலைச் சுட்டு' (தொல்-எழுத் புண-5) என்றாற்போல்வன. இங் ஙனம் மிகைபடச செய்யுங்கான் முன்னின்ற சொல்லிற்கு ஒன்றும் இயைபில்லன கூறலாகா என்னை ? 'மூப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன' (தொல் எழுத்-நூன்-2) என்றவழி அவைதாம் மூப்பாற் புள்ளியுமெனப் பாளிலை கொண்டுமாறிப் பின்னர் 'எழுத்தோரன்ன' என்றது ஆண்டு இயைபில்லதோர் சொல்லென்று இலேசுபடாது தான் சொல்லுகின்ற பொருட்கும் இயைபுபடச் சொல்லியே மிகைப் படுத்தல் வேண்டுமென்பது. என்னை ? எழுத்தெனப்படுப எண் பதனுண் மூன்றுமே சிறப்புடையவென்பது கொண்டாலையிற் பின் னர் அம்மூன்றினையுஞ் சிறப்பில்லா மூப்பதினொடும் ஒக்குமென உவ மிக்கலாகாதெனவும் மாட்டேற்றுச் சூத்திரங்களானெல்லாம் ஒப் புமைபெறுவதல்லது சிறப்பின்மை காட்டப்படாதாகலானும் மூப் பஃதுமே சிறந்தனவென்னுங் கருத்தினையின் மூன்றுஞ் சிறப் பிலவென்பது முதற்சூத்திரத்துட் பெறப்படுமாகலின் பின்னர் இவ் விலேசு கூறிச் சிறப்பழித்தல் வேண்டாவாகலானும் பலபொருட் கேற்பி னல்லது கோடலன்றி ஐயுறற்றாறுஞ் சூத்திரஞ்செய்யாதை

லானும் எழுத்தோரன்னவென்பது ஆண்டு இனயபில்லதோர் சொல்லென்றதனை ஆண்டுப் பெய்து இலேசுகொண்டானெனல் ஆகாதென்பது. பொருளிலமொழிதல் - நூனுதலியபொருளன்றி என்மனார்புலவரென்றாற்போல வழிநூல்வாய்பாட்டு மாத்திரையே பயனாகச்செய்வன. மயங்கக்கூறல்-நிறுத்தமுறையானன்றி 'அத்தி னகர மகரமுனையில்லை' (தொல்-எழுத்-புண-23) என மயங்கக்கூறிப் பிறிதொன்று கோடல்: கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதல் - சூத்திரச்செய்யுள் கேட்போர்க்கு இன்னாதிசைப்பச செய்தல்; பழித்தமொழியான் இழுக்கங் கூறல் - முடிவில்லாத சொல்லானும இழிந்த சொல்லானும எடுத்து முடிப்பனவற்றை மறுமுடிபுபற்றி இழுக்கங் கூறலாயிற்று. தன்னானொருபொருள் கருதிக்கூறல் - முனனோராற் கூறவும்படாது வழக்கினுள்ளதுமன்றித் தன்னுள்ளே ஒரு பொருள்படைத்துக் கூறுதல்; ஆனென்பது ஒரு சொல்லெனத் தானென்பதோர் சொற்றாய் மெய்யினுள் உணரநின்றது. தன்னாற் றானொரு பொருள்படைத்துக் குறுகக்செய்தன் மூன்றாவதெனினும் இழுக்காது. என்னை? நுதலிக் கூறலென்னும் பயனிலைக்குத் தானென்னும் பெயர் வெளிப்படாது நின்றது வெளிப்படுத்துக்கொளப் பெறுதுமாகலின். என்னவகையினு மனஙகோளின்மை - எவ்வாற்றானும பொருளறிதற்கு அரிதாகச் செய்தல். இவைநான்குங் குன்றக்கூறலொடு கூட்ட ஐந்தும் எஞ்ஞான்றும் பயன்படாதனவாயின. அன்னபிறவும் அவற்றுவிரியாகும்- அவைபோல்வன பிறவும் ஈரைஙகுற்றமென்னப்பட்ட தொகை எண்ணிற்கு அவ்வாறு தொகுத்தற்கேற்ற விரியெண்ணும் இவையும் இவைபோல்வனபிறவும், என்றவாறு.

விரிந்தது தொகுத்தலென்பதனான் எதிரதுநோக்கி ஆண்டுத் தொகுத்தானாதலின் ஈண்டு அவற்றைத் தொகைகூறாது விரித்தென்றானென்பது. பிறவும் என்றதனான் வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்றுவிரித்தல் சென்று தேயந்திறுதல் நின்றுபயனின்மை என்றாற் போல்வனகொள்க. இவை மேல் ஈரைங்குற்றமுமென உம்மையால் தழுவியவற்று விரியாயின முதனூலொடு மாறுதலும், யாப்பினுட் சிதைதலும் இவைபோல ஒரோவழி வாரா; அந்நூலின் முழுவதூஉம்

கொள்ளக் கிடந்தமையின் ஈண்டனை புறனடையால் தழுவப்பட்ட வாறென்பது. இவையெல்லாம் குற்றமென்று கூளையப்படுவனவாயினும் ஈரைஞ் குற்றமுமின்றியென முதற்சூத்திரத்துள் ஒதிப்புகுந்தான், அல்லாக்கால் இவற்றுட் சில தூலுட் புகுதுமாறும் அவற்றுற் பயன் கொள்ளுமாறும் இன்மையினென்பது. பயன்கொள்ளப்படுவன ஐந் தென்பது மேற்காட்டினும்.

இனி, அப்பதினொன்குங் குற்றமேயாகி வருமாறு :

" தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பு வேற்றுமை யெனுஅ "

எனவும்,

" உருவக முவமை வழிநிலை மடக்கே
விரிசுடர் விளக்கென மீஇ வருவன "

எனவுஞ் சிலசூத்திரங்களை முதனிறீஇப் பின்னரும் அவ்வாய்பாட் டாலே,

" தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பு வேற்றுமை யென்ரும்
கெண்வகை யியல செய்யுட் கணியென
மையறு புலவர் வகுத்திரைத் தனரே "

என்ருற்போலப் பின்னரும் அவ்வாறே சூத்திரஞ்செய்தல் (1) கூறி யது கூறலாய்ப் பயன்படாதாயிற்று. என்னை ? இவற்றது வேறுபாடு தொகைச் சூத்திரத்துத் தணிந்தெண்ணியதனுனே பெற்றவழிப் பின்னும் அவ்வாறே மற்ருேர் சூத்திரஞ்செய்ததனுற் பயந்தின்மையி னென்பது.

" அன்றென வொருதலை தணிந்த குறை
நன்றறி புலவர் நாட்டுதற் குரிய "

என்ருற்போல்வன வரையாது குற்றமென்றதனையே சான்ருர்க் காயிற் குற்றமாகாதென்றல் (2) மாறுகொளக் கூறலாம், செய்யுட்கெல் லாம் அணியிலக்கணங் கூறுவான் குற்றங் கூறும்வழி வரைந்துகூறு தலின். செய்யுட்குரிய பொருட்படை யெல்லாவற்றுள்ளும் நல்லன வுந் தீயனவும் இவையென்று சொல்லப் புகுந்தான் அவற்றுட் சில சொல்லியொழிதலும் வழக்கொடு மெய்ப்பொருளும் ஆராய்வலென்று புகுந்தான் அவற்றுள் வழக்கிற்கு வேண்டுவ கூறி மெய்ப்பொருள் ஆராய்ச்சி முழுவதுஉஞ் சொல்லாது நெகிழ்ந்துபோதலும் எடுத்துக் கொண்ட நூலுட் காட்டும் இலக்கியங்களைச் சூத்திரத்தான் அடிவரை செய்வனென்று புகுந்து சில மறுத்துச் செய்து சிலவற்றுக்குச் செய் யாதுபோதல் போல்வனவுங் (3) குன்றக்கூறலா ம். அவை முடிந்த நூலிற் கண்டுகொள்க.

"இடையிடை திரியா திபனெறி மரபி
னுடைய கருப்பொரு ளொரோவழித் துவன்றவு
மியற்கை மரபி னுரிப்பொரு டோன்றவும்
பன்னிரு காலமும் நால்வகை யிடத்தொடுந்
தொன்னெறி மரபிற் ரேன்றினர் செயலே"

எனச் சூத்திரஞ்செய்து நாற்பத்தெட்டினும் நாற்பத்தெட்டு காலமுந தொக்க சூத்திரத்தால்,

"துடைப்பன துடைத்துச் செயற்கை போல
வழியிட ஞெழித்துக் காலங் கூறுவல்"

என்று புகுந்து அக்காலத்துள்ளுஞ் சிறுபொழுது கூறுது இட இலக் கணமே கூறி இடத்திற்குச் சுருங்க வேறுசூத்திரஞ் செய்தவாறு போலாது அதற்கு இன்றியமைபாதனவெல்லாங் குன்றுமற் கூறுது சென்றுபட்ட பரப்பிற்றுகச் சூத்திரஞ் செய்தல்போல்வன (4) மிகை படக்கூறலாம். அஃதாவது இன்னிளவேனிலென்பது,

"தண்ணிழ லறல்யாற் றடைகரைத் துறைதொறு
மிலங்கு மூலைக்க ணேய்ப்பக் கோங்கவிழ்ந்து

வண்டுதா தூதுந் தண்டளிக் கா
பருமல ருதிர்ந்து குருகுகமழ் பரப்பின்
மண்வயிறு குளிர்க்குந் தண்ணறுங் கயத்து
நிழலிரு நடுவ ணழலவிர் தாமரைத்
தாள்கறித் தருந்தும் வாளெயிற் றிளமீன்
புள்ளுக வெறிப வெள்ளென்று பிறழும்
பளிங்கு நெகிழ்ந்தன்ன துளங்காத் தெண்ணீர்
தளிர்குடைந்து தெவிட்டிய குயில்குனிந்து குடிப்ப
மரவந் தாழ்ந்த கரைமரச் சாரற்
றேனாறு தேறல் வேனற் கண்ணும்
வாரார் கொல்லென நீர்வார் கண்ணொடு
புலம்புடை மகடூஉக் கலங்கஞ ரெய்த
யாறுங் குளனுங் காவு மாடி
யோருயிர் மைந்தரு மகளிருங் களிப்பக்
காம விழவொடு கன்னியர் நோற்ப
நிலவுஞ் சாந்தும் பலவயிற் பயன்படத்
துன்பக் காலந் துடைத்தனர் பெறூஉ
மின்பக் கால மென்மனார் புலவர் ''

என்றாற்போலப் பற்றிக்கூறிப் பெருஞ்சூத்திரஞ் செய்த வழியும் பருவத்திற்கு வரையறையிலக்கணம் போதுதலின்றி விடுதலாயிற்று.

'அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே'
(தொல்-சொல்-இடை-4.)

எனவும்,

'அப்பா லெட்டே யும்மைச் சொல்லே'
(தொல்-சொல்-இடை-7.)

எனவும்,

'ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன'

எனவும் இன்னோரன்ன பலவும் மிகைபடச் செய்தார் இவ்வாசிரியராகலிற் பிற்காலத்து நூல்செய்தார்க்கும் மிகைபடச்செய்தல் அமையு

மென்பாருமுளர். அற்றன்று, 'யாவயின் வரினுந் தொகையின் றியலா' (தொல்-சொல்-இடை-42) எனப்பட்ட எண்ணுகளின் தொகைகூறினமையானும் வழக்காதலானும் அதுமுதலாக அல்லது சூத்திரச்செய்யுளுஞ் செய்யாராகலானும் அங்ஙனந் தொகைதொடராக்கால் இரண்டாகப்பட்டு விகாரவகையால் தொகுத்தாலுமெனவும் அவை பலசொல்லாகலால் தொகுக்கப்படுவனவல்லவெனவுஞ் சொல்லி மறுக்க. அல்லதூஉம் மன்னென்பதோர் இடைச்சொல். அது தானடைந்த சொற்பொருளன்றித் தனக்கு வேறுபொருளின்மையிற் பொருள்பற்றி மூன்றெனலாகாது, பலபொருளொரு சொல் எனப்படுவதன்றி. அதனான் அதனைநோக்கி மூன்றென்றுனல்லன், அஃது அடுத்த சொல்லினை மன்னைச் சொல்லென்றுன், அவை மூன்றன்றி எத்துணையும் பலவாயினும் ஒன்றுயினும் மூன்று புகுதிப்படுமென்று கோடற்கென்பது. ஒழிந்த இடைச்சொல்லாயினும் அவற்றிற்கும் இஃதொக்கும். மன்னைச்சொல்லென்பது வேற்றுமைத் தொகையேயன்றிப் பண்புத்தொகையாகலுமுடைத்து. மன்னடுத்த சொல்லினையும் மன்னென ஆகுபெயராற் கூறினனென்பது.

> "வழக்கு வழிப்பட்ட சொல்லீறு திரியினும்
> படைத்துக் கொண்ட சொல்லொடு சிவணித்
> திரிசொல் லென்றே செப்பினர் புலவர்
> வரிவளைப் பணைத்தோண் மடநல் லோயே"

என்றுற்போல இயைபில்லன கூறுதல் (5) பொருளிலமொழிதலாம். இவை ஒழிந்த செய்யுட்காயின் தடங்கண்ணையென்றுற்போல் வரப் பெறுமென்றற்கு ஒத்தென்னையெனின், அது செய்யுள் செய்வார் வேண்டியவாறு செய்பவாகலின் ஈண்டுச் 'சில்வகையெழுத்தின்' செய்யுட்டாகச் செய்யுறூற்கே இது விலக்கினமையின் அதன் திறத்துக் கடாவின்றென மறுக்க. (6) மயங்கக்கூறலென்பது 'மயங்காமரபி னெழுத்துமுறை காட்டுவல்' என்று புகுந்தாற்போல இன்னது சொல்லுவலென்று புகுந்தான் மெய்ந்நூலும் வழக்குநூலும் உடனுராய்தலும் ஆரியமுந் தமிழும்போல்வன உடனுராய்தலும் போல்வன. (7) கேட்போர்க்கின்னுயாப்பாவது "கதநபம" "சனுயவ" "உயிர்முன்

பின்வல்லினம்' "லரயநதாமென" என்றுற்போலச் சூத்திரச்சுருக்க மும் மொழிக்கு முதலாமெழுத்தும் ஈருமெழுத்தும் பொதுவகையான் அடங்க ஒதுதற்பயனேக்கி இங்ஙனம் இன்னுவோசைத்தாகச் சூத்திரஞ்செய்தல்போல்வன. (8) பழித்தமொழியானிழுக்கங்கூறல் "வினாமெனிறுதி பழமொடு புணரிற்-றளாவியற் றன்றி யியற்கை யாகும்" என்றுற்போல வினாமென்பதோர் வழுச்சொல்லாற் சூத்திரஞ்செய்தல். ஒன்றற்கொன்றென்பதனை "ஒன்றினுக்கொன்று" எனச் சூத்திரஞ் செய்தலும் அது. (9) தன்னுளொருபொருள் கருதிக் கூறலென்பது மலேபடுகடாத்தினை ஆனந்தக் குற்றமெனப் பிற்காலத்தாளொருவன் ஒருசூத்திரங் காட்டுதலும் பதமுடிப்பென்பதோர் இலக்கணம் படைத்துக் கோடலும்போல்வன. (10) என்னவகையினு மனங்கோளின்மை வருமாறு: 'இருதினேப் பிறந்த வைம்பாற் கிளவிக்கும்' (தொல்-சொல்-பெயர்-7) என்னுஞ் சூத்திரத்திற்கும் 'எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி' (தொல்-எழுத்-புணர்-26) என்பதற்கும் வேறுபொருள் உரைப்பாருரைக்குமாற்றான் அறியப்படும். (11) இனி மற்றென்றுவிரித்தலென்பது ஆறுறுப்பும் பாவினமுங் கூறுவலென்று புகுந்து பொருளாராய்ச்சி பலவுங் கூறுதல். இதுவும் இன்னேரன்ன மிகைபடக்கூறலாய் அடங்குமெனினும் அமையும். (12) இன்றுபயனின்மை யென்பது பிற்காலத்துத் தோன்றிய வழக்கேபற்றி அவற்றிற்குங் குற்றந்தீர இலக்கணங்காட்டியவழி அது சான்றோர் செய்யுட்குப்பயன்படாது தம்மோரன்ன செய்யுட்குப் பயன்படுதொழியச் செய்தல். அவை வந்தவழிக்கண்டுகொள்க. பாட்டியன் மரபெனக் காட்டுவனவும் அவை. (13) இனி வெற்றெனத்தொடுத்தலென்பது கேட்போர்க்கின்னுயாப்பின்பாற் பட்டு அடங்கும். (14) சென்றுதேய்ந்திறுதலென்பது சொல்லப்புகுந்த தொருபொருள் எல்லாவிடத்துஞ் சொல்லப் படுவதாகவும் ஈற்றுக்கண் மாய்ந்து மாறுவது. அதுவுங் குன்றக்கூறலாய் அடங்கும். ஒழிந்தனவும் அன்ன.

மற்றுக் கூறியதுகூறன் முன்வைத்ததென்னேயெனின், அது தாலுட்போலச் செய்யுட்கண்ணும் பயன்படவரின் அமையுமென்றற் கென்பது. அவை "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்"

(நாலடி-4-9) எனவும், "வஞ்சியான் வஞ்சியார் கோ" எனவுஞ் சொல்வகையான் இரட்டித்தவாறு. இனியமைவனவற்றிடையே குன்றக் கூறல் வைத்தான் அவற்றுத்தூணைச் சிறப்பிலவென்று ஐயுறுமை யென்பது. இவ்வாசிரியர் யாண்டும் இலக்கணமேகூறி இவ்விலக் கணத்திற் பிறழவருதலைக் குற்றமென்று கொள்ள வைப்பினன்றி இல் லாதகுற்றங்கட்கு இலக்கணங்கூறுதார் இது கூறினர் 'எதிர்மறுத் தணரின் றிறத்தவுமவை' என வருகின்ற சூத்திரத்தான் இவையும் இலக்கணத்திற்கு உபகாரப்படுதலினென்பது. (கoஅ)

665. எதிர்மறுத் துணரின் றிறத்தவு மவையே.

இது, மேற் குற்றம்பத்துங் கூறி இனிக் குணமும் பத்துளவென் கின்றது. மேலெல்லாம் இவ்வாசிரியன் இலக்கணவழக்கினையே விதந்தோதி அதனிற்பிறழ்ந்தது குற்றமென்று கொள்ளவைத்தான்; இவ்வோத்தினுள் ஈரைங்குற்றமுமென்பன சில குற்றங் கூறினான், இது மாறுகொளக்கூறலாங்கொல்லோவெனின், அற்றன்று; இவை யும் இலக்கணமே கூறினனென்பான் இவற்றையெதிர்மறுத்துக் கொள்ளவென்றனென்பது. இதனது பயன் உள்ளதுசொல்லுதலே யன்றி இல்லது சொல்லுதலும் நூலிலக்கணமென்றறிவித்தலாயிற்று. அவை 'பெயர்க்கிலக் கிளவி காலந் தோன்ற' (தொல்-சொல்-வேற்-9) எனவும், 'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது' (தொல்-சொல்-வினை-1) எனவும் வரும். எனவே, கூறியது கூறுமையும் மாறுகொளக் கூறுமையுங் குன்றக்கூறுமையும் போல்வன வும் பத்து உள நூலிலக்கணமென்றனும். மேல் ஈரைங்குற்றமு மின்றி என்றதல்லது அவற்றை நாட்டிக்கொண்டு எதிர்மறுத்துக் கோடல்பெறுமையின் இதுகூறினனென்பது. (கoக்)

666. ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பி
னுதலிய தறித லதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தன்
மொழிந்த பொருளோ டொன்ற வுவ்வயின்

மொழியா ததனை மூட்டின்று முடித்தல்
வாரா ததனுன் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராத துணர்த்தன்
மூந்து மெர்முந்ததன் றலைதடு மாற்றே
யொப்பக் கூற லொருதலை மொழியே
தன்கோட் கூறன் முறைபிற ழாமை
பிறனுடம் பட்டது தானுடம் படுத
லிறந்தது காத்த லெதிரது போற்றன்
மொழிவா மென்றல் கூறிற் றென்ற
லுன்குறி யிடுத லொருதலை யன்மை
முடிந்தது காட்ட லாணை கூறல்
பல்பொருட் *கேற்பி னல்லது கோட
லொருகுத்த மொழியான் வகுத்தனர் கோடன்
மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்
பிறன்கோட் கூற லறியா துடம்படல்
பொருளிடை யிடுத லெதிர்பொரு ளுணர்த்தல்
சொல்லி னெசசஞ் சொல்லியாங் குணர்த்த
றந்துபுணர்ந் துரைத்தன் ஞாபகங் கூற
லுய்த்துக்கொண்டுணர்த்தலொடுமெய்ப்படநாடிச்
சொல்லிய வல்ல பிறவவண் வரினுஞ
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டு
நுனித்தகு புலவர் கூறிய நூலே.

---

*'சேட்பின்' என்பது முன் அச்சுப் பிரதிப்பாடம்.

இது, முறையானே இறுதிக்கணின்ற மூப்பத்திருவகை யுத்தியுள் கூறி மற்றும் இந்நூலுள் அதிகாரம் மூன்றற்கும் வேண்டும் புறனடை யுங் கூறுத லுதலிற்று.

இதன் பொருள் : ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பின்—முற் கூறிய குற்றங்களோடு ஒப்பத்தோன்றுந் தோற்றத்தினை உடைய வாகிய உத்திக்கூற்றினை விரித்துச்சொல்லின் :

பத்துவகைக் குற்றத்தோடும் ஒத்துவருமெனவே இவையும் நூற்கணன்றி ஒழிந்த செய்யுட்கு வருங்கால் விலக்கப்படுதலும் முற் கூறிய குற்றம்போல இவையம் வேறு சில பொருள் படைத்தலு முடையவாயின. காட்சியுத்தி யென்று இவற்றைக் கூறியவதனான் நூலுட்காணப்படுமென்ற ஐந்து குற்றத்தோடும் ஒத்தல்கொள்ளப் படும், அவ்வந்நூற்குப் பயம்படவரும் பகுதியானென்பது. உத்தி யென்பது நூல்செய்யுங்கால் இயல்புவகையாகிய வழக்குஞ்செய்யுளும் போலச் செவ்வனஞ்சொல்லுதல் ஒண்மை யுடைத்தன்றும் பிற வெனின், அற்றன்று ; அவ்வாறு செய்தக்கால் நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்தாகல்வேண்டுமென்பது முன்னர்ச்சொல்லினும். ஈண்டுச்செவ்வனஞ் சொல்லாத தந்திரவுத்தி வகையும் அவ்வாறே ஒண்மையுடையவாமென்பது கருத்து. என்னூர்க்குச் செவ்வனஞ் செய்தலே உத்தியென்னுமேனவெனின், அது சொல்லாமை முடிந்த தாகலினன்றே உத்தியென்னுது இவற்றை உத்திவகையென்பானுயிற் றென்பது. அஃதேல், இவற்றை முன் தொகுத்தான்போல விரிப்பி னென்றதென்னையெனின், முன்னர் எதிரதுநோக்கி (மரபியல்-98) மூப்பத்திரண்டெனத் தொகைகூறிப் பின்னர் மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு இனத்திற்சேர்த்தியுணர்த்தல் வேண்டு மென்கின்றுழுகலான் அங்ஙனம் இனம்பற்றி அவற்றோடு அடங்கு வனவெல்லாம் அவற்று விரியாகுமென்னுங் கருத்தினுற் கூறினு னென்பது.

"அவனிவ னுவனென வருஉம் பெயரு
மவளிவ ளுவளென வருஉம் பெயரு
மவரிவ ருவரென வருஉம் பெயரும்

யான்யா நாமென வரூஉம் பெயரும்
யாவண் யாவள் யாவ ரென்னு
மாவயின் மூன்றே டப்பதி னேந்தும்
பாலறி வந்த வுயர்திணைப் பெயரே''

(தொல்-சொல்-பெயர்-8.)

என்பதனுள், 'ஆவயின் மூன்றே டப்பதி னேந்தும்' எனத் தொகுத்துக் கூறியவழி அது மிகைபடக் கூறலாகாது. என்னே? உம்மையெண்ணுகலின் தொகையின்றியுஞ் சில்வகையெழுத்திற் செய்யுட்டாக வழக்கியலானே சுருங்கச்செய்வதோர் ஆறுளதாயினும் அப்பதினேந்துமெனத் தொகுத்துக் கூறல் உத்திவகையான் அமையுமாகலினென்பது கருத்து. இங்ஙனந் தொகைகூறுதல் வெள்ளிதன்றி ஒள்ளிதாகல். அவை, பதினேந்துபெயருமே ஒருசிகரனவென்பது அறியலாகுமென்பது. இனி, 'மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே' (தொல்-செய்-101) என்னுஞ் சூத்திரம்போல்வன பிறி தொருபொருள் பயக்குமென்றலும் அச்சூத்திரத்துட் காட்டப்பட்டது. இவ்வாற்றான் இவ்வுத்திவகை எல்லாநூற்கும் இன்றியமையாவாயின. மற்று வகையெனப்படாது செவ்வனஞ்செய்யும் உத்தியாவனவாவையெனின், 'இயற்கைப் பொருளே யிற்றெனக் கிளத்தல்' (தொல்-சொல்-கிள-19) என்றாற்போலச் சொல்லியொழிவன. பிறவும் அன்ன.

விரிப்பினென்ற வினையெச்சஞ் சேர்த்தியுணர்த்தல் வேண்டுமென்ற மூற்றுவினைகொண்டு முடிந்தது. மெய்ப்படநாடியென்பனபோல்வனவற்றுக்கும் இதுவே முடிபு. அதற்கு நூலென்னும் பெயர் கொடுத்து முடிக்க. நூலையென்று ஐகாரம் விரிப்பின் வேண்டுமென்பது தன்பாலானும் பிறன்பாலானும் பெற்றதோர் பெயர்கொண்டு முடியும்.

(1) நுதலியதறிதல்—சூத்திரத்துள் ஓதிய பொருளாற் சொல்லப்படும் பயன் இல்லதுபோலச் சொல்லியதனானே அதற்கேற்ற வகையாற் கருதியுணரப்படுபொருள் இன்னதென்று கொள்ளவைத்தல்: அது,

'வேறுவினைப் பொதுச்சொ லொருவினை யிளவார்'
(தொல்-சொல்-இளவி-46.)

எனவும்,

'சிறப்பி னுகிய பெயர்நிலைக் கிளவிக்கு
மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்'
(தொல்-சொல்-இளவி-41.)

எனவும் இவை வழுவற்க வழுவமைக்க என்னும் இருபகுதியுள் வழுவமைத்தற்கெழுந்தனவென்பது கருதிலுன் ஆசிரியனென்பது அறியவந்தன. இதனை முதற்கண்வைத்துப்போய் இறுதிக்கண்ணே உய்த்துச்கொண்டுணர்தலை வைத்தான் இதுவும் அதுபோல் உய்த்துக் கொண்டுணர்தல் ஒருவகையிலுடைத்தாயினும் அதனாற் பெற்றபயன் பிறிதுமொன்று உளதாதல் வேற்றுமையுடைமையினென்பது. அது முன்னர்ச்சொல்லுதும்.

இனி, மூவகைத் தமிழ்வழக்கமும் நுதலியதும் அவற்றுள் இயற்றமிழே நுதலியதும் அதிகாரம் நுதலியதும் அதிகாரத்துள் ஒத்து நுதலியதும் ஒத்தினுட் சூத்திரம் நுதலியதுமெனவும் இவை நுதலிய தறிதற்பகுதியாய் அடங்குமென்பான் 'மனத்தினெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு இனத்திற்சேர்த்தி யுணர்த்தல்வேண்டு' மென்கின்றுனென்பது. மேல்வருகின்றவற்றுக்குமொக்கும். அஃதேல், இதனை ஆண்டுவைத்து மற்றதனை ஈண்டுவைப்பினும் இஃதொக்கும் பிறவெனின், அற்றன்று ; நூலின்வேறுகிய பாயிரத்துள்ளாயினும் இந்நுதலியதறிதல் வருதலும் உத்தியென்றற்கு இதனை முன்வைத்தானென்பது.

(2) அதிகாரமுறைமை—என்பது முன்னின்ற சூத்திரப்பொருண்மைப் பின்வருஞ் சூத்திரத்திற்கும் பெறற்பாலன பெறவைத்தல்: அவை,

'இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்' (தொல்-சொல்-இள-19) என்றவழி இற்றெனக் கிளத்த லுரிமைபூண்டதன்றே, அதனை 'செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்' (தொல்-சொல்-

இள-20) என்புழியுங்கொள்ளவைத்தலும்; 'குற்றிய லிகர நிற்றல் வேண்டும்' (தொல்-எழுத்-மொழி-1) என்பதனைக் 'குற்றியலுக ரம் வல்லா றூர்ந்து' (தொல்-எழுத்-மொழி-3) நிற்றல் வேண்டும் என்று கொள்ளவைத்தலும் போல்வன.

இனி, வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யுளியலும் பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழெனப்படும்; அச்செய்யுளின்றி அமையாத இசையிலக்கணம் இசைத்தமிழெனப்பெயரெய்தி அவ் வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப்படும்; இவ்விரண்டன்வழி நிகழ்த்துங் கூத்திலக்கணங் கூறிய நாடகத்தமிழ் அவற்றுப்பின்னர்த்தா மென முறைமை கூறுதலும்: இனி இயற்றமிழுள்ளும் எழுத்ததிகாரத் தோடுசொல்லதிகாரத்திற்குஞ் சொல்லதிகாரத்தோடு பொருளதிகாரத் திற்கும் இயைபு கூறுதலும்: அதிகாரத்துள் ஒத்துப் பலவாகலின் அவையொன்றன்பிறவென்று வைத்தற்கு இயைபு கூறுதலும்: அவ்வாறே சூத்திரத்திற்கு இயைபு கூறுதலுமெல்லாம் அதிகாரமுறைமைக்கு இனமென்று சேர்த்தியுணரப்படும். பிறவும் அன்ன.

அதிகாரமென்ற பொருண்மையென்னையெனின் முறைமை யெனவும் இடமெனவுங் கிழமையெனவுங் கொள்ளப்படும். அவற் றுள் ஈண்டு அதிகாரமென்றுழியாது முறைமையெனவுங் கூறினமை யின் அதிகாரமென்பது முறைமைப்பொருட்டன்றி முன்னோரிடத்து நிறுத்தியதன் வழிமுறையாற் பொருள்கோடல் கொள்க. என்னை ? முன்னும் பின்னும் நின்ற சூத்திரம் இரண்டனையும் ஓரிடத்தனவாகக் கருதல்வேண்டும்: அங்ஙனங் கருத்தாதலியைபுகொண்டு ஒன்றன் பொருண்மை ஒன்றற்கு வருவித்தல் அரிதாகலானும் அங்ஙனம் இடம் பற்றுக்கால் ஒருவன்செய்த நூலோடு பிறிதொருநூற்கு இயைபு கூறுதவாறுபோல எழுத்ததிகாரத்தோடு சொல்லதிகாரத்திடை இயைபுகூறல் வேண்டுவதன்றுவான் செல்லுமாதலானுமென்பது. எனவே, இடமெனப்பட்டதுதானே முறைமைப்பொருளும் படுமாயி னும் இச்சூத்திரத்துள் அதிகாரமெனவும் முறைமையெனவுங் கூறின மையின் ஈண்டு இடமுறைமையென்பதே கருத்தாயிற்று. இதனானே

உடன்பிறந்தாருள் ஒருவற்குரியது வழித்தோன்றினுர்க்கும் ஒருவழி உரியவாறுபோல முன்னர்கின்ற விதி பின்னர்வந்ததற்கும் வேண்டிய வழிக் கொள்ளப்படுமென்பது உத்திவகையாயிற்று.

இனியொருசாரார் இங்ஙனம் வரைந்துகொண்ட இடத்துள்ளே யாற்றெழுக்குப்போலவன்றி இடையிடையும் பெறுமென்பது நோக்கி அரிமாநோக்குந் தேரைப்பாய்த்துளும் பருந்துவிழுக்காடும் ஆகி வருமெனவுஞ் சொல்லுப. அவையும் இனத்திற்சேர்த்தி யுணர்த்தலே படுமென்பது.

(3) தொகுத்துக்கூறல்—தொகுத்தியாத்தநூலுள்ளுந் தொகுத்துக் கூறுதல் :

அவையாவன, எழுத்து முப்பத்துமூன்று சொல்லிரண்டு பொருளிரண்டு என ஆசிரியன்ருனே தொகை கூறுதல்போல்வன.

'இருதிணை மருங்கி னைம்பா லறிய
வீற்றினின் றிசைக்கும் பதிலே ரெழுத்தும்.'
(தொல்-சொல்-இளவி-10.)

எனப் பலசூத்திரத்து விரிந்தன தொகுத்தலும்,

'ஆவயின் மூன்றே டப்பதி னைந்தும்
பாலறி வந்த வுயர்திணைப் பெயர்.'
(தொல்-சொல்-பெய-8.)

என ஒரு சூத்திரத்து விரித்துத் தொகுத்தலும் போல்வனவும் அதன் பகுதியாய் அடங்கும்.

(4) வகுத்துமெயிந்நிறுத்தல்—அங்ஙனந் தொகுத்துக்கூறிய வழி எழுத்து முப்பத்துமூன்றென்ற தொகையினைக் குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் உயிரும் உயிர்மெய்யும் வல்லினமும் மெல்லினமும் இடையினமுமென்றாற்போலவும் உயர்திணை அஃறிணை யென்ற தொகையினை ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென்றாற்போலவும் வகுத்தல்:

'உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்.'

(தொல்-சொல்-பெய-6.)

எனவும்,

'இயற்சொ றிரிசொ றிசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்பு ளீட்டச் சொல்லே.'

(தொல்-சொல்-எச்-1.)

எனவும் வருவனவும் அவை. இவற்றுள் இருதிணையெனக்கூறிப் பெயர் மூன்று, வினை மூன்றென்றலும்; இனி அகத்திணை புறத்திணையெனக்கூறி அகம்புறமெனக்கோடலும்; இனமென்றது, அவை குற்றெழுத்து நெட்டெழுத்தென முற்கூறியனவே மற்றொரு பெயர் பெற்றுநிற்போலாது சொல்வகையான் மூன்றுவதோர் சொல் வேறு பெற்றமையினென்பது. இங்ஙனங் கொள்ளாக்கால் இருதிணைப்பெயரும் வினையும் மும்மூன்றெனல் ஆகாதன்றோவென்பது.

'சொல்லெனப் படுப பெயரே வினையென்
றுயிரண் டென்ப வறிந்திசி னோரே.'

(தொல்-சொல்-பெய-4.)

என்றவழி,

'இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.'

(தொ-சொ-தொ-5.)

என வகுத்தலும் இனி ஆராய்ந்த இயற்சொல்லொடு வேறு மூன்று சொற்கூட்டி நான்கென்றலும் அவ்வாறே இனமெனப்படும். என்னை? ஒழிந்த மூன்றுசொல்லும் இயற்சொல்லின் வேறுபட்டமை கூறுமாகலினென்பது. அஃதேல் எழுத்து முப்பத்துமூன்றெனக் கூறிப் பின்னர் இருநூற்றொருபத்தாறுயிர்மெய்க் குப்பைகோடலும் வேற்றெழுத்தாகி வருமென்பது வகுத்து மெய்ந்நிறுத்தலென்பதனுற் கொள்ளுமோவெனின், கோடுமன்றே; 'புள்ளி யில்லா வெல்லா

மெய்யும்' என்புழி, 'உருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலும்' என ஆசிரியன் இரண்டெழுத்தின் கூட்டமாகச் சூத்திரஞ்செய்திலனெயி னென்பது. மெய்யென்றதனன் வகுத்தவற்றைப் பின்னும் வகுத்து விறுத்தல் கொள்ளப்படும். என்னை ? இயற்சீர்பத்தெனவும் ஆசிரிய வுரிச்சீராறெனவும் வகுத்தவற்றை,

'இயற்சீ ரிறுதி நேரவ ணிற்பி
னுரிச்சீர் வெண்பா வாகு மென்ப.' (தொல்-செய்-19.)

என இயலசைமயக்கமாகிய நான்கனையே இயற்சீரெனவும்,

'வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ
ரின்பா நேரடிக் கொருங்குவ லிலவே.'
(தொல்-செய்-23.)

என்றவழி ஆசிரியவுரிச்சீர் ஆறனுள் இரண்டனை ஒழித்து உரியசை மயக்கமாதிய நான்கனையே ஆசிரியவுரிச்சீரெனவும் வகுத்து வின்ற மையினென்பது. மெய்யென்றதனன் வகுத்தவற்றைப் பின்னும் வகுத்துவிறுத்தல் கொள்ளப்படும். என்னை? 'இயலசை மயக்க * * * மாசிரிய வுரிச்சீர்' (தொல்-செய்-13) என்று பகுத்தோதியவாற்ற னென்பது. அக்கருத்தினனன்றே ஒழிந்த இரண்டனையுங் 'கலித் தளை மருங்கிற் கடியவும்படா' (தொல்-செய்-24) என இறந்தது தழீஇ உரைப்பானையிற்றென்பது.

(5) மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்—எடுத்தோதியபொருண்மைக்கு ஏற்ற வகையான் அப்பொருண்மைக்கட் சொல்லாததொன்றுகொள்ள வைத்தல் :

முட்டின்றி முடித்தலென்றதனன் எடுத்தோதாததும் எடுத்தோ தியதனோடு ஒக்குஞ்சிறப்பிற்றென்றவாறும். அதுபோல்வன அதற்கு இனமெனப்படும். மற்று இதனை அருத்தாபத்தியென்னுமோவெனின், என்னுமன்றே, 'பிறசி ருள்வழித் தன்றளை வேண்டிற' என்னும் பொருட்டன்றித் தன்சீரோடு இயற்சீர்வந்து தளைகொள்ளுமென

மொழியாததோர் பொருள்கோடலினென்க. இனி, 'மஃகா னுறு றும் பகர விறுதியும்' என்றவழி ஒழிந்த நான்கெழுத்தும் ஈற்றினிற்கு மென்று சோடல் போல்வனவும் அதன் இனமெனப்படும். என்னை ? ஒன்றெனமுடித்த றன்னினமுடித்தலெனினும் இழுக்காது. இனிச், 'சீரியை மருங்கி னோரசை யொப்பின்' (தொல்-செய்-56) என்றவழி ஒன்றுதது இயற்சீர்வெண்டளை யென்றுகேட்டால் அருத்தாபத்தியாலி 'எடுத்த மொழியினுஞ் செப்பலு முரித்து' (தொல்-செய்-61) என்ற வழக்கியலானே வழுவன்றி அடங்குமென்பது.

(6) வாராததனுன் வந்தது முடித்தல்—ஒருபொருண்மைக்குவேண் டும் இலக்கணம் ஈரம்ப வாராததோர் சூத்திரத்தானே அங்ஙனம் வந்த பொருண்மைக்கு வேண்டும் முடிபுகொள்ளச்செய்தல் : அது,

'தொடர லிறுதி தம்மூற் றும்வரின்
லகரம் றகரவொற் றுகலு முரித்தே.'

(தொல்-எழுத்-உயிர்-12.)

என அதற்குக் கேடு வாராத சூத்திரத்தானே லகரம் றகரவொற்றுய் வருமெனப்பிரித்துத் திரிபு கூறியதே பற்றுக லகரம் ஆண்டு நில்லாது கெடுமென்று கொள்ளவைத்ததனுனே சிற்சில வித்திப் பற்பல கொண் டாரென்று வந்த புணர்ச்சி முடித்தவாறு கண்டுகொள்க. 'எல்லா மென்னு மிறுதி முன்னர் - வற்றென் சாரியை முற்றத் தோன்றும்' (தொல்-எழுத்-உரு-17) என்றவழி எல்லாமென்னும் விரவுப்பெய ருள் உயர்திணைகூறி வற்றுச்சாரியை பெறுமையான் அது பெற்று வந்த அஃறிணைக்கூறே முடித்தலும் அது. பிறவும் அன்ன.

இனி இங்ஙனம் முடிபுகோடலன்றி ஆண்டுக் குறியிடுதலும் ஆட்சி யுங் குறியீடும் ஒருங்குநிகழ்ந்தது பின்னர் ஆட்சிக்கண் வாராமையும் வந்தவழிப் பிறவற்றோடு கூறுதலும் அதற்கு இனமெனப்படும். அவை 'அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி' (தொல்-சொல்-வினை-31) என முடிந்ததனை மீண்டும் 'நெறிப்படத்தோன்று மெஞ்சுபொருட் கிளவி' (தொல்-சொல்-எச்ச-34) எனக் குறியிடுதல் எச்சவியலுள்

வந்ததாயினும் முன்னர் அக்குறியீடுவந்ததின்மையின் அது வாராத தெனப்படுமாகலின் அஃது ஈண்டுக் குறியிடுதலாயிற்று. வினையியலுட் பெயரெச்சமென்று ஆளுதலும் அது. 'வண்ணச்சினைச்சொல் முற்றுச் சொல் என்பனவுங் குற்றியலிகரத்தைப் புள்ளியென்றலும் ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தனவாகலின் அவையும் இனி வாராமையான் வந்துழிவந்துழி அவ்வாறு ஆண்டானென்பது. இனிப் புள்ளியென மேல் ஆளவாராததனைப் புள்ளியென்று ஆள்வனவற்றொடு மயக்கங் கூறுதலென்பது, 'அவைதாங், குற்றிய லிகரங்குற்றியலுகர - மாய்த மென்ற - மூப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன' (தொல்-எழுத்-தூன்-2) என்புழிக் குற்றியலிகரம் புள்ளியென்று யாண்டும் ஆளவா ராமையானும் அதுதான் அவ்வழி வரவேண்டுதலானும் அங்ஙனம் புள்ளியென்று ஆளவருங் குற்றுகரத்தோடும் ஆய்தத்தோடும் உடன் கூறுதலாயிற்று. இங்ஙனம் உடன்கூறுக்காற் புள்ளியுங் குறிகரமு மெனச் சூத்திரம்பெறுதல் வேண்டுவதாவான் செல்லுமென்பது. இனி, 'ஆ ஏ ஓ அம்மூன்றும் விஞ' (தொல்-எழுத்-நூன்-32) என வும் 'மாறுகொ ளெச்சமும் விஞவு மையமும்' (தொல்-எழுத்-உயிர்-88) எனவுங் கூறுவனவும் அவை. என்னை ? இடைச்சொல் லோத்தினுள் விஞவென்றோதாத ஆகாரம் வாராததுடன் ஆண்டு விஞவென்று ஓதிய ஏகார ஓகாரங்களுள் 'ஆ ஏ ஓ அம்மூன்றும் விஞ' என்று உடன் கூறினமையானும் அவ்வாறு இடைச்சொல்லோத்தி னுள் எடுத்தோதாத மாறுகொளெச்சத்தோடும் ஐயத்தோடும் ஆண் டோதிய விஞவினையும் எண்ணினையும் எழுத்தோத்தினுள் விதந் துடன் கூறினமையானுமென்பது. இது நோக்கிப்போலும் 'ஈற்றசை யிவ்வைந் தேகாரம்' (தொல்-சொல்-இடை-9) என இடைச்சொல் லினை எழுத்துச்சாரியை பெய்தோதிய கருத்தானே இப்பொருண்மை கொள்ள வைப்பாளுயிற்றுமென்பது. மற்று இவை எதிரதுபோற்ற லாகாவோவெனின், அது பொருட்படைக் கண்ணதெனவும் இவை ஆட்சியுங் குறியீடும் பற்றியதோர் பகுதி யெனவுங் கூறிவிக்க. அஃதேற், குறியீட்டால் ஈண்டாராயாஞவெனின், இவை உத்தி வகையாகலானும் அதுதானே உத்தியெனப் படுமாதலானும் அதனை ஈண்டு ஆராயானென்பது.

(7) வந்ததுகொண்டு வாராததுணர்த்தல்—பின்னொருவழிவந்ததுகொண்டு முன்வாராததோர் பொருள் அறியவைத்தல் : அது,

ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகும்' (தொல்-எழுத்-உயிர்-2) என்பது. 'எஞ்சிய மூன்று மேல் வந்து முடிக்கு - மெஞ்சு பொருட் கிளவி யிலவென மொழிப' (தொல்-சொல்-எச்ச-43) என வந்தது கொண்டு மேற்கூறப்பட்ட ஏழெச்சத்திற்கும் மேல் வந்து முடிக்குஞ் சொல் வாராததனை வருமென்றுணர்ந்துகொள்ளவைத் தமையின் இதுவும் அதுவேயாயிற்று.

'ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே' (தொல்-சொல்-கிள-1) என்றவழித் திணையென்னும் பெயர் எப்பொருட்கும் எய்துவித்தல் ஒரு சூத்திரத்துள்ளே கோடலின் அதனை அதற்கு இனமென்று கொள்ளப்படும். பிறவும் அன்ன.

(8) முந்து மொழிந்ததன்றலைதடுமாற்று— முன்னொருகாற் கூறிய முறையன்றிப் பின்னொருகால் தலை தடுமாறுகக் கூறுதல் : அது,

'பன்னீ ருயிரு மொழிமுத லாகும்' (தொல்-எழுத்-மொழி-26) எனவும், 'உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா' (தொல்-எழுத் மொழி-27) எனவும், உயிரும் மெய்யும் சிறுத்தமுறையானன்றிக் 'கதநப மவெனு மாவைந் தெழுத்து-மெல்லா வுயிரொடுஞ் செல்லு மார்' (தொல்-எழுத்-மொழி-28) எனவும் மெய்பற்றி வரையறை கூறுதலும் 'எல்லா மொழிக்கு மிறுதியு முதலு-மெய்யே யுயிரென் றாயீ ரியல' (தொல் எழுத்-புண-1) என முற்கூறிய முறைபிறழக் கூறுதலுமாயின. மெய்யும் உயிரும் பற்றி விதந்து வரையறுப்பினும் அஃது இரண்டற்குஞ் செல்லுமென்று கோடற்கும், இனி இயல்பு வகையான் ஈறுக ஒருதலையாக உடையன மெய்யென்றற்கும் அவ்வாறு கூறினனென்னுமோவெனின்; அங்ஙனமே அக்கருத்தினனன்றே 'ஒத்தகாட்சி' யெனக் குற்றத்தோடு ஒப்புமைகூறி மற்றுப் பொருள் பயத்தலின் அமையுமென்று கொள்வாமாயிற்றென்பது. இனி, 'மூன்றலே யிட்ட மூப்பதிற் றெழுத்தின்' (தொல்-எழுத்-புண-1) என்றாற்போல்வன இனமெனப்படும். 'புள்ளி யில்லா

வெல்லா மெய்யும்' (தொல்-எழுத்-நூன்-17) என்பது மெய்மூற்கூறி னமையின் இதுவும் இதற்கு உதாரணமெனப்படும். மற்று மயக்கங் கூறலோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், அஃது இன் னேவற்றே' (தொல்-எழுத்-புண-17) என நிறுத்தமுறையாற் கூறுது மற்று அதனேபற்றுக மற்றொருபொருள் கொள்ளப்படும். இஃது இன்னதன்றி இங்ஙனம் மயங்கக்கூறல்வேண்டும் பொருண்மைத்தாகி வருமென்பது. அஃதேல் இது மாறுகொளக்கூறலென்னுங் குற்ற மாகாவோவெனின், ஆகாது. என்னே? இது முற்கூறிய பொரு ளினை மாறுபடாமையானும் நிறுத்தமுறை தலைதடுமாற வைக்குந் துணையாகலானுமென்பது.

(9) ஒப்பக்கூறல்—ஒன்று கூறுங்கால் இருபொருட்குறித்ததென்று இரட்டுறசசெய்தல். அது,

'இன்னி னிகர மாவி னிறுதி
முன்னர்க் கெடுத லுரித்து மாகும்'(தொல்-எழுத்-புண 18.)

என்றாற்போல்வன.

'வினையெஞ்சு கிளவியு முவமக் கிளவியும்' (தொல்-எழுத்-உயிர்-2) எனவும், 'அன்ன வென்னு முவமக் கிளவியும்' (தொல்-எழுத்-உயிர்-8) எனவும் இனமல்லனவற்றை உடனெண்ணுதலும், 'மாமரக் கிளவியு மாவு மாவும்' (தொல்-எழுத்-உயிர்-29) என மாட்டெறியுங்கால் வேறுவேறு விதியுடையனவற்றை ஒருங்கு மாட் டெறிதலும் ஆண்டு ஆறு வல்லெழுத்தினையும் உடன்கோடலும் மேலெமொழித்தொழிலொடு வருமொழித் தொழிலும் ஒப்புக்கொண்டு மாட்டெறிதலும் போல்வன ஒப்பக்கூறலென்னும் பகுதியாய் அடங்கு மென்பது.

(10) ஒருதலை மொழிதல்—ஓர் அதிகாரத்திற் சொல்லற்பாலதனை வேறு அதிகாரத்துச் சொல்லிய இலக்கணமே ஆண்டுங் கொள்ளவைத்தல் : அது,

'அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு' (தொல்-எழுத்-நூன்-31) என வும் 'ஆணும் பெண்ணு மஃறிணை யியற்கை' (தொல்-எழுத்-புள்ளி-8)

எனவும் இவை எழுத்ததிகாரத்துக் கூறியவாற்றானே சொல்லதி காரத்துள்ளும் அவ்விலக்கணங் கொள்ள வைத்தமையின் அப்பெயர்த் தாயிற்று.

உடம்பொடுபுணர்த்துச் சொல்லுவன அதற்கு இனமெனப்படும். என்னை ? விதியல்லாதது விதிபோல மற்றொருவழிச் சேறலின்.

(11) தன்கோட்கூறல்—சொல்லாதன பிறவுளவாயினும் அந்நூற்கு வேண்டுவதே கொள்வலென்றல் : அது,

'அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளவுநுவன் றிசினே.'

(தொல்-எழுத்-பிறப்-20.)

எனவும்,

'சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே'

(தொல்-எழுத்-மொழி-29.)

எனவும்,

'குற்றெழுத் தைந்து மொழிமுறை பிலவே'

(தொல்-எழுத்-மொழி-11.)

எனவும்,

'பாடலுட் பயின்றவை நாடுங காலே' (தொல்-அகத்-3.)

எனவும் வரும்.

இவ்வாற்றானே 'அளபிற் கோட லந்தணர் மறைத்து' (தொல்-எழுத்-பிறப்-20) ஆயினும் அது கூறினேனெனவும், இயற்சொல் லிற்கல்லது செய்யுளுள் மொழியாக்கங் கூறேனெனவும், வழக்குஞ் செய்யுளும் ஆராய்வலென்று புகுந்தான் பாடலுட் பயின்ற வழக்கே கூறுவலென வும் கூறுதலின் அவை தன்கோட்கூறுதலாம்.

இனி ஒன்பதுமயக்கத்துண் மெய்ம்மயக்கங்கூறி ஒழிந்தன கூரு மையும், விளித்தொகையும் பண்புத்தொகையும் எடுத்தோதி முடியா மையும்,

'நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்' (தொல்-அகத்-53.)

பற்றிப் பொருளிலக்கணங் கூறுவலென்றலும், பெரும்பான்மை கணவழக்கென்ப என்றலும், அதனுனே சிறுபான்மையை மயக்கமென்றலும், அம் ஆம் எம் ஏம் என்பன முதலாயவற்றை அங்ஙனம் பகுத்தோதுதற்பயனும், அவை வினையின்றி அவ்வினைசெய்தான்மேல் நிகழ்கின்ற கூற்றதனுமே பற்றி 'வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்' (தொல்-சொல்-இடை-2) என்று இடைச்சொல்லோடு ஒதுதலும் போல்வன அதற்கு இனமெனப்படும். என்னை? இவை தாங் கூறுவலென்று புகுந்தவற்றுள்ளும் ஒருபொருளானவற்றை வரைந்துகொண்டமையின் அவற்று விரியெனப்பட்டன.

(12) முறைபிறழாமை—காரணமின்றித் தான் சிலபொருள் எண்ணி நிறுத்தியபின்னர் அம்முறைபிறழ்ந்தாலுங் குற்றமில்வழியும் அம்முறையினையே இலக்கணமாகச் சொல்லுதல்: அது,

'பெயர் ஐ ஒடு கு இன் அது கண்விளி யென்னு மீற்ற' (தொல்-சொல்-வேற்-3) என நிறுத்தமுறையாற்பற்றி எழுவாய்வேற்று இரண்டாவது மூன்றுவதெனப் டெயர்கொடுத்தல்.

'அகரமுத னகரவிறுவாய்' (தொல்-எழுத்-நூன்-1) எனவும், ஙகக்கினேமுதலாப் பெருந்திணையிறுவாய்' (தொல் அகத்-1) எனவும், வழக்கியலானும் இலக்கணவகையானும் உள்பொருளே விதந்தே எண்ணி நிறுத்தாதவழியும், 'அவற்றுள், அஇஉஎஒ' எனவும், 'அவற்றுள், நடுவ ணைந்திணை நடுவண தொழிய' (தொல்-அகத்-2) எனவும் முறைபிறழாமற்கோடல் அதற்கு இனமெனப்படும்.

(13) பிறனுடம்பட்டது தானுடம்படுதல்—உள் பொருள் இன்றியும் வழக்கியலாற் கொள்பொருள் இதுவெனக்கூறுதல்: அது,

'பண்டியன் மருங்கின் மீஇய மரபு' (தொல்-சொல்-வேற்-ம-7.) ன்றுற்போல்வனவற்றுன் அறிக.

இனி, 'மீயென மரீஇய விடம்வரை கிளவியும்' (தொல்-எழுத்-உயிர்-48) என்புழி மேலென்பது இலக்கணமென்று எடுத்தோதிய தனை மரூஉவென்றமையின் அதுவும் அதன்பாற்படும். என்னை? முதனூலுட்கொண்டவாறறிந்து மற்று அதனைத் தான் இச்சொல் இன்னவாறுயிற்றென்று இலக்கணங்கூறுது உடம்படுதலின். மற்று அதனை இனமென்பதெற்றுக்கு? இதுதானே பிறனுடம்பட்டது தானுடம்பட்டதாகாதோ முதனூலாசிரியன் உடம்பட்டதாகலினெனின், அற்றன்று; முதனூலாசிரியனைப் பிறனென்னுமையாலும், முதனூலின் வழித்தாகியநூலுள் அவன் உடம்பட்டதொன்றுடம்படுமென்று உத்திவகையாற்கொள்ளாது. முழுவதூஉங் கொள்ளுமாகலானும் அவ்வாய்பாடு கூறலாகாதென்பது. இனி முதனூன் மேலென்னுது மீயெனமரீஇயிற்றென்று விதந்தோதப்பட்டதனை அங்ஙனங் கூறுது மீயென மரீஇயிற்றென்று வாளாது கூறினமையின் அதனை இனமென்று கொண்டாமென்பது. எனவே, ஈண்டுப்பிறனென்றது வழக்கினுள்ளோரை நோக்கியாயிற்று. என்றாற்கு ஒழிந்த வழிநூலாசிரியரைப் பிறனென்றுனென்னுமோவெனின், அவருடம்பட்டது உடம்பட்டதனாற் பயந்ததென்னை? முதனூலிற் பிறழ்ச்சி நூல்செய்யுமாயினென மறுக்க. அல்லதூஉம் இசைநூலுங் கூத்தநூலும்பற்றிப் பிறன் கோட்கூறலென்பதனாற் பிறனென்னினன்றி இயற்றமிழ்க்கண்ணே முதனூலாசிரியனைப் பிறனென்னுனென்பது. அஃதேல் வழக்குநூல்செய்வான் அவ்வழக்கினை வழங்குவாரைப் பிறனென்னுமோவெனின் இலக்கணமும் வழக்குமென இரண்டனுள் இஃதிலக்கணமாதலின் அவ்வழக்கினுள் வழங்குவாரைப் பிறனென்றல் அமையுமன்றோவென்பது. என்றாற்கு அவருடம்பட்டது உடம்படுதல் உத்திவகையென்ப தெற்றுக்கு? அஃது இயல்பேயன்றோவெனின், அங்ஙனம் மரீஇயினும் இலக்கணமென்பது திரிபில்லாதாகலிற் றிரிபுபடும் வழக்கினை உடம்படுதல் இலக்கணமன்றாயினும் அது வழக்கினுள்ளார் வேண்டுமாற்றான் இலக்கணமேயாமென்பது கருத்து; அல்லாக்கால் எள்ளேபோல எட்சுப்பையுந் தன்தன்மையான் உள்பொருளாகலும் வேண்டுமென்றோவென்பது.

(14) இறந்தது காத்தல்—என்பது, முற்கூறியவோர் சூத்திரப் பொருண்மை பின்னொரு சூத்திரத்தான் விலக்குதல் : அது,

'பால்கெழு கிளவி நால்வர்க்கு முரித்தே' (தொல்-பொரு-5) எனக் கூறிய பின்னர் 'நட்பி னடக்கை யாங்கலங் கடையே' (தொல்-பொரு-6) என்றாற்போல விலக்குதல்.

நூற்புறனடையும் ஒத்துப்புறனடையும் அதிகாரப்புறனடையும் போல்வன அதற்கு இனமெனப்படும். அவை,

'ஈறியன் மருங்கி னிவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லா
மெய்த்தலைப் பட்டூ வழக்கொடு சிவணி
யொத்தவை யுரிய புணர்மொழி மீலையே'

(தொல்-எழுத்-தொகை-29.)

எனவும்,

'புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியுஞ்
சொல்லிய வல்ல வேனைய வெல்லாம்'

(தொல்-எழுத்-உரு-30.)

எனவும் வருவனபோல்வன.

(15) எதிரதுபோற்றல்—வருகின்ற சூத்திரப் பொருண்மைக்கேற்ப வேறொருபொருண் முற்கூறுதல் : அது,

'ஈறுகு புள்ளி யகரமொடு மீலையும்'(தொல்-எழுத்-தொகை-19.) வருகின்றதனை நோக்கி,

'ஆற னுருபி னகரக் கிளவி
யீறு ககரமுனைக் கெடுதல் வேண்டும்'

(தொல்-எழுத்-புண-13)

எனக் கூறுதலும்,

'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை' (தொல்-சொல்-வினை-30) என வருகின்றதனை நோக்கித்,

தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்'

(தொல்-சொல்-கிளவி-43.)

என வழுவமைத்தலும் போல்வன.

— , ஒரு சூத்திரத்துள்ளே, 'ஈருகு புள்ளி யகரமொடு னீலையும்' (தொல்-எழுத்-தொகை-19) என வருவதனை நோக்கிக் கூறிய 'குற்றெழுத் திரட்ட லில்லை' (தொல்-எழுத்-தொகை-19) என்றல் அதற்கு இனமெனப்படும்.

(16) மொழிவாமென்றல்—ஒருபயனெக்கி முற்கூறுது மென்றல் : அவை,

'உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்' (தொ-எழு-மொ-2) எனவும், 'கடப்பா டறிந்த புணரிய லான' (தொல்-எழுத்-மொழி-4) எனவும், 'அவ்வே, இவ்வென வறிதற்கு மெய்பெறக் கிளப்ப' (தொல்-சொல்-விளி-2) எனவும் வரும். இங்ஙனங் கூறிய தனாற் பயன் குற்றுகரவீற்றுக்கணன்றிப் புணர்மொழிக்குற்றிகர மின்றென்பதூஉம், இனிப் புணர்மொழிக்குற்றுசரம் பெருவரவிற்றென் பதூஉம் அறிவித்தலாயிற்று. 'அவ்வே, இவ்வென வறிதற்கு மெய் பெறக் கிளப்ப' என்பதூஉம் 'அவ்விளி யேலா' என்றதூஉம் அவ் விளியிலக்கணமென்றற் பயம் பட வந்தது. ஈற்றுப் பொதுவினுல் விளியேற்குமென்று ஒதப்பட்ட பெயருள் இவை விளியேலாவென விளிவிலக்கல் வேண்டுதலானும் ஈவாரா யென்பது இயல்புவிளியன் றென விலக்குதலும் விளியிலக்கணமேயாதலானுமென்பது.

இனி,

'மெய்பெறக் கிளந்த பொருள்வரைந் திசைக்கு
மைகார வேற்றுமைத் திரிபென மொழிப'

எனவும்,

'மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
னகரமெ வென்னு மொற்று கும்மே'

(தொல்-எழுத்-தொகை-1.)

எனவும் வருவன அதன்பாற்படும். என்னை? அவையும் முன்னர்ப் போய் மொழிவனவற்றை அவாவினின்றமையி னென்பது.

(17) கூறிற்றென்றல்—முற்கூறியதோர் இலக்கணத்தினை மற்றொரு பொருட்கும் விதிக்கவேண்டிய வழி, அவ்விலக்கணத்தினை மீட்டுங்கூறாது மேற்கூறியவாற்றானே கொள்கவென்பான் அவை கூறினமென்று நெகிழ்ந்து போதல்: அவை,

'கைக்கிளை முதலா வெழுபெருந் திணையு
முற்கிளந் தனவே முறைநெறி வகையின'

(தொல்-செய்-185.)

எனவும்,

'எண்வகை யியனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின ததுவே'

(தொல்-செய்-205.)

எனவும் வரும். இவை அகப்பொருட்கும் புறப்பொருட்கும் ஓதிய இலக்கணஞ் செய்யுளுள்ளும் அவ்வாறெய்துவித்தவாறுயிற்று.

'முதலெனப் படுவ தாயிரு வகைத்தே' (தொல்-அகத்-7.)

எனவும்,

'மெய்பெறு வகையே கைகோள் வகையே' (தொல்-செய்-188.)

எனவும்,

'மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.' (தொல்-செய்-2,)

எனவும் வருவன அதற்கு இனமெனப்படும். என்னை? கைக்கிளை பெருந்திணைக்கும் இவையே முதலென்றலானும் திணையுங் கைகோளும் போல்வன புறப்பொருட்கும் சோடம் பயுன்பட வைத்தமையானும் முற்கூறிய மாத்திரையும் எழுத்தும் பிறவாற்றாற் செய்யுட்குப் பயன்படுமாற்றான் வேறுபட்டதல்லது அவை மேற்கூறிய மாத்திரையும் எழுத்துமே என்றமையானு மென்பது.

(18) தான் குறியிடுதல்—உலகு குறியின்றித் தன்னூலுள்ளே வேறு குறியிட்டாளல் : அவை,

உயர்திணை அஃறிணையெனவும், கைக்கிளை பெருந்திணையெனவுஞ் சொல்லிற்கும் பொருளிற்கும் வழக்கியலானன்றி ஆசிரியன் தானே குறியிடுதல். வண்ணச் சினைச்சொன் முற்று வினைச்சொல்லென ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தனவும் வினையெஞ்சுகிளவியும் பெயரெஞ்சுகிளவியுமென்று ஆண்டு, 'ஆயீ ரைந்து—நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி' எனக் குறியிடுதலும் அது.

'இரண்டாகுவதே
யையெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி'
(தொல்-சொல்-வேற்-10.)

எனவும்,

'மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய
வாக்கமொடு புணர்ந்த வேதுக் கிளவி'
(தொல்-சொல்-வேற்,ம-9.)

எனவும் பெயர் கொடுத்தல் அதற்கு இனமெனப்படும்.

(19) ஒருதலையன்மை—'வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகும்' என விரித்தாற்போலாது இலக்கணங் கூறி ஒழிதல் : அது,

'குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே'
(தொல்-எழுத்-மொழி-5.)

என்றக்கால் யாண்டும் ஒருதலையாக வாராது, வருஞான்று வருவது ஆண்டென்று கொள்ளவைத்தல். இனிச் சொல்லோத்தினுள் வேற்றுமையென்று ஒதப்பட்ட எட்டனுள் எழுவாய் வேற்றுமையினையும் விளிவேற்றுமையினையும் வேற்றுமையென்னுது எழுத்தோத்தினுள் அல்வழியென்றல் போல்வன அதற்கு இனமெனப்படும்.

(20) முடிந்தது காட்டல்—சொல்லுகின்ற பொருட்கு வேண்டுவன வெல்லாஞ் சொல்லாது தொல்லாசிரியர் கூறினாரென்று சொல்லுதல்:

அஃது, ஒன்றறிவது உற்றறிவதென்றற்கும், இரண்டறிவது உற்றுஞ் சுவைத்தும் அறியுமென்றற்கும் முறைமையாற் சூத்திரஞ் செய்வான் அவை அவ்வாறாதற்குக் காரணங் கூறாது, 'நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே' (தொல்-மர-27) என முடிந்தது காட்டல்.

'நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே' (தொல்-எழுத்-நூன்-7) என்றாற் போல்வன அதற்கு இனமெனப்படும்.

(21) ஆணை கூறல்—இவ்வாசிரியன் கருத்து இதுவெனக் கொள்ள வைத்தல் : அது,

'அம்மி னிறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும்' (தொல்-எழுத்-புண-26.)

எனக் கருவியோத்தினுட் சாரியை மகரம் பகரவருமொழிக்கண் திரியாதென்று போய்ச் செய்கையுள் வல்லெழுத்தினது இயற்கை மெல்லெழுத்தாதல் அறிவித்தற்கு அல்வழி யெல்லா மெல்லெழுத்தாகுமெனச் சொல்லுதல் போல்வன. ஙஞந ஆதற்கும் இஃதொக்கும்.

'ஓம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்'

(தொல்-சொல்-உரிச்-98.)

என்றாற் போல்வன அதற்கு இனமெனப்படும். மற்றுத் தன்கோட் கூறலோடு இதனிடை வேற்றுமை யென்னை யெனின், அது தந்திரஞ் செய்யும் பகுதிக்கண்ணது, இஃது அன்னதன்றிப் புணர்ச்சிக்கட் சிறப்புடைய நிலைமொழி வருமொழிக்குத் திரிபுபோலாதென்று கருவியாகிய இடைச்சொற்காயின் இத்துணை யமையுமென்று ஆணை செய்தலின் அப்பெயர்த்தாயிற்று.

பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்—ஒரு சூத்திரத்துட் பய
ந்த சொற்றொடர் பலபொருட் கேற்றதாயினும் நல்லது கொள்கின்று
ரெனக் கருதி அவ்வாறு செய்தல் : அவை,

'ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
யிருபாற்கு மூரித்தே தெரியுங் காலை'

(தொல்-சொல்-பெய-37.)

என்றவழி ஒருவரென்பதொரு சொல் தற்கண்ணே இருபாலாரையுந் தழீஇ நிற்குமெனவும் அது கருவியாக இருபாலாரையுஞ் சொல்லப்படு மெனவுங் கவர்ந்தவழி, 'தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்' (தொல்-சொல்-பெய-38) என்பதனோடு படுத்துநோக்க இருபாலா ரையும் ஒருசொல் தற்கட்டழீஇ நிற்றலே நல்லதென்று கொள்ள வைத்தல்

'நும்மெ னிறுதி யியற்கை யாகும்' என்புழி எழுத்து விகார முடையதனைக் கலந்து சாரியைக் கண்ணே இயற்கை கோடலும் அதன்பாற்படும். இதனை ஏற்புழிக் கோடலெனவும் ஒருபுடைச் சேற லெனவுஞ் சொல்லுப.

(22) தொகுத்தமொழியான் வகுத்தனர்கோடல்—ஒருவாய்பாடு எடுத் தோதப் பலவாய்பாடு அதற்குவந்துபுணருமென்று வகுத்துக் கொள்ளவைத்தல் : அது,

'செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யிர் செய்யிய செயின்செயச் செயற்கென
வவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி'

(தொல்-சொல்-வினை-31.)

எனவும்,

'காப்பி னெப்பி னூர்தியி னிழையின்'

(தொல்-சொல்-வேற்-11.)

எனவும் ஒருவாய்பாடு தொகுத்து ஓதியவாற்றானே பலவாய்பாடு வகுத்துக் கொள்ளவைப்பதென்பது. செய்தென்பதனை நக்கு வந்து

கண்டு நின்றுபாடிப் போயெனப் பலவாக்குதலும், முற்றுவாய்பாடு பலவுமாக்குதலும், இனிக் காப்பினென்றவழிப் புரத்தல் புறந்தர வோம்புதல் போற்றலெனப் பலவாக வகுத்தலுங் கண்டுகொள்க.

'உருவென மொழியினும்' (தொல்-சொல்-கிளவி-24) என்ற லும், 'இதன திதுவிற்று' (தொல்-சொல்-வேற்,ம-27) என்றலும் போல்வன அதற்கு இனமெனப்படும்.

(23) மறுதலைசிதைத்துத் தன்றுணிபுரைத்தல்—ஒருபொருளினை ஒருவன் வேறுபடக்கொள்வதோர் உணர்வுதோன்றியக்கால் அவ்வேறு பாட்டினை மாற்றித் தான் துணிந்தவாறு அவற்கும் அறிவுறுத்தல். இது மறுதலைசிதைத்தலுடைமையின் வாளாது தன்கோட் கூறலின் அடங்காதாயிற்று.

உதாரணம் :

'மூவள பிசைத்த லோரெழுத் தின்றே'
(தொல்-எழுத்-நூன்-5.)

எனவும்,

'நீட்டம் வேண்டி னவ்வள புடைய'
(தொல்-எழுத்-நூன்-6.)

எனவும்,

'குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்'
(தொல்-எழுத்-மொழி-8.)

எனவும் மூன்றுமாத்திரையான் ஒரெழுத்து உண்டென்பாரை விலக்கி வழக்கியலான் இல்லையென்று தன்றுணிபு உரைத்தவாறு. உயிர் மெய் வேறெழுத்தன்றென்பான்,

'புள்ளி யில்லா வெல்லா மெய்யு
முருவுரு வாகி யசரமோ டியிர்த்தலும்'
(தொல்-எழுத்-நூன்-17.)

எனவும்,

'மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே'

(தொல்-எழுத்-நூன்-18.)

என்பதும் வேறுபடாது கூறுதலும் அது.

வழக்கினுள் அறியாதார் மாட்டு ஒன்றுபோல இசைப்பனவா யினும் அன்றென்று கூட்ட முணர்த்தினமையின்,

'மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினு மெழுத்திய றிரியா' (தொல்-எழுத்-மொழி-20.)

என்றலும் அதன்பாற் சார்த்தியுணரப்படும். பிறவும் அன்ன.

(24) பிறன்கோட்கூறல்—தன்னூலே பற்றுகப் பிறநூற்குவருவ தோர் இலக்கணங்கொள்ளுமாறு கூறுதல்: அது,

'அரையளபு குறுகன் மகர மூடைத்தே யிசையிட னருகுந் தெரியுங் காலே' (தொ-எழு-நூன்-13)

எனவும்,

'அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலும்'

(தொல்-எழுத்-நூன்-33.)

எனவும்,

'பண்ணைத் தோன்றிய வெண்ணுன்கு பொருளுங் கண்ணிய புறனே நானுன் கென்ப' (தொல்-மெய்ப்-1.)

எனவும் இவை அவ்வந்நூலுட் கொள்ளுமாற்றுன் அமையுமென்ற

'அளபிற் கோட லந்தணர் மறைத்து' (தொல்-எழுத்-பிறப்-20.)

என்பது அதற்கு இனமெனப்படும். என்னை? அவர்மதம்பற்றி இவர்கொள்வதோர் பயனின்றுகலினென்பது.

(25) அறியாதுடம்படல்—தானேதிய இலக்கணத்தின் வேறுபட வருவன தான் அறிந்திலனுகக் கூறி அதன்புறத்துச் செய்வ தோர் புறனடை: அவை,

---

* 'அளவிறந்திசைத்தலும்' என்பதும் பாடம்.

'இனந்த வல்ல வேறுபிற தோன்றினும்
இனந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே'
(தொல்-சொல்-வேற்,ம-65.)

எனவும்,

'வருவ வுளவெனினும் வந்தவற் றியலாற்
றிரிவின்றி முடித்த றெள்ளியோர் கடனே.'
தொல்-செய்-243.)

எனவும் வரும். இறந்தது காத்தலோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், இறந்ததென்பது தான் துணிந்து சொல்லப்பட்ட பொருளாகல்வேண்டும். இஃது இன்னதன்றிச் சொல்லப்படாத பொருண்மேற்றாகி அதுவுந் தான் துணியப்படாதபொருளாகித் தான் நூல்செய்த காலத்தே உள்ளவற்றுள் ஒழியப்போயின உளவாயினுங் கொள்கவென்பான் வேறுபிறதோன்றினும் எனவும் வருபவுளவெனி னும் எனவுந் தேறாது அதன் ஐயப்பாடுதோன்றச் சொல்லுதலின் இது வேறென்க. முழுதுணர்ந்தாற்கல்லது பழுதறச் சொல்லலாகாமை யின் அஃது அவையடக்கியல்போல்வதோர் உத்தியெனக் கொள்க.

'குறியதன் முன்னர்த் தன்னுரு விரட்டலு
மறியத் தோன்றிய நெறியிய லென்ப'
(தொல்-எழுத்-தொகை-18.)

எனவும்,

'செல்வழி யறிதல் வழக்கத் தான' (தொல்-எழுத்-புள்-17.)

எனவும் வருவன அதற்கு இனமென வுணர்க.

(26) பொருளிடையிடுதல்—வேற்றுமைப்பொருளினைச் சொல்கின்ற பொருண்மைக்கிடையே பெய்துசொல்லுதலும், சொல்கின்ற பொருட்கு இயைபுடையதனை ஆண்டுச் சொல்லாது இடையிட் டுப்போய்ப் பிறிதொருவழிச் சொல்லுதலும் போல்வன: அவை,

'முறைப்பெயர்க் கிளவி யேயொடு வருமே' (தொல்-சொல்-விளி-19) என்றுற்போலச் சொல்கின்ற உயர்திணைப் பெயரிடை விர வுப்பெயர் பெய்துரைத்தலும் போல்வன. வழுவமைக்கின்ற கிளவி

யாக்கத்துள் ஒதாது எச்சவியலுட்போக்கி, 'அவையல் கிளவி மறைத் தனர் கிளத்தல்' (தொல்-சொல்-எச்ச-46) எனச் சொல்லுதலும் கொள்வது.

'தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் விஞவின் பெயரு
மன்றி யனைத்தும் விளிகோ ளிலவே'
(தொல் சொல்-விளி-20.)

என்றவழித் தானென்னும் விரவுப்பெயரினை இடைப்பெய்து விலக் குதலும் வேற்றுமைக் கிளவியோத்தினுட் கூறுது எஞ்சிநின்ற வேற் றுமைத் தொகை முதலிய எச்சங்களை எச்சவியலுட் சொல்லுதலும் போல்வனவும் அதன்பாற் சார்த்தியுணர்க.

(27) எதிர்பொருளுணர்த்தல்—தான் கூறிய இலக்கணத்திற் சில பிற்காலத்துத் திரிபுபடினும் படுமென்பது முதற்கால முத னூலுங்கொண்டுணர்ந்த ஆசிரியன் எதிர்காலத்து வருவது நோக்கி அதற்கேற்றதோர் இலக்கணங் கூறிப்போதல்:

'மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப
புகரறக் கிளந்த வஃறிணை மேனை'.
(தொல்-எழுத்-மொழி-49.)

என்று ஓதிய இலக்கணத்துச் சில பிற்காலத்துக் குறையவருதல் எதிர் பொருளெனப்படும். அதனைத் தான் உணர்ந்து, 'கடிசொ வில்லைக் காலத்துப் படினே' (தொ-சொல்-எச்-56) என்று கூறவே முற் கூறிய பொருளினை வற்புறுத்தலாம் அதுவென்பது. இங்ஙனந் திரிபு படுதல் அறிந்தே கூறுதலானும் எதிர்பொருளாகலானும் இஃதறியாது உடம்படுதலினடங்காதாயிற்று.

'பொய்யும் வழுவுந் தோன்றிய பின்ன
ரையர் யாத்தனர் காணம்' (தொல்-கற்-4.)

என்பதனாலும் அதன்பாற்படும்.

(28) சொல்லினேச்சஞ் சொல்லியாங் குணர்த்தல்—சொல்லினூற்ற லாற் பெறப்படும் பொருளினையும் எடுத்தோதியாங்குக் கொள்ள வைத்தல் : அஃது,

'எஞ்சிய வெல்லா மெஞ்சுத லில' (தொல்-எழுத்-மொழி-14) என்புழி எல்லாமென்பதனை எச்சப்படுத்தற்காகாதன இருபத்தாறு கொண்ட வழியும் அதனைஎடுத்தோதிற் சிறப்பின்றென்று கொள்ளற்க என்பது இதன் கருத்து.

எச்சவியலுட் கூறிய பொருள் அகத்தோத்துக் கூறிய பொருளோடு ஒப்பக்கூறுதலும் அதன்பாற்படும்.

'மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின்மொழியாததனை முட்டின்று முடித்த'லோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், அஃது எடுத்தோதப்பட்ட பொருட்கண்ணதெனவும் இஃது எடுத்தோத்திலுழை ஒக்கும் எச்சப்படவைத்துக்கொள்ளும் இலக்கணங்களெனவும் அதனுடிதனிடை வேற்றுமையுணர்க.

(29) தந்து புணர்ந்துரைத்தல்—உள்பொருளல்லதனை உளபோலத் தந்து கூட உணர்த்தல்; அவை,

'அளபெடை யசைகளிலை யாகலு முரித்தே' (தொல்-செய்-17) எனவும் 'குறிலிணை யுகர மல்வழி யான' (தொல்-செய்-5) எனவும் கூறுங்கால் அளபெடையினை எழுத்துப்போலவும் குற்றுகரத்தினைக் குற்றெழுத்துப் போலவும் ஓதுதல் போல்வன.

'மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்' (தொல்-எழுத்-புண-2) எனவும், 'மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்' (தொல்-எழுத்-புண-37) எனவும் மேற்கூறிய புள்ளியினையே ஒருபயனேக்கி மீட்டும் புள்ளி பெறுமெனக் கூறுதல் அதற்கு இனமெனப்படும்.

'குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல'
(தொல்-எழுத்-மொழி-17.)

என்பதேபற்றி, 'நெடியதன் முன்ன ரொற்றுமெய் கெடுதலும்' (தொல்-எழுத்-தொகை-18) என்புழித் தொடர்மொழியே நெட் டெழுத்தாக்கிக் கோடலும் அது.

1) ஞாபகங்கூறல்—சூத்திரஞ் செய்யுங்கால் அதற்கு ஓதிய இலக்கணவகையானே சில்வகையெழுத்தின் செய்யுட்டாகவும் நாதத லின்றிப் பொருணனி விளங்கவுஞ் செய்யாது அரிதும் பெரிதுமாக நலித்து செய்து மற்று அதனானே வேறுபல பொருளுணர்த்தல்: அது,

'மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே * * * உணர்ந்திசி னோரே' (தொல்-செய்-101) என வருதல். இதனற்கொண்ட பொருண்மையெல்லாஞ் செய்யுளியலுட் காட்டப்பட்டன.

'எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
" யுக்கி னிறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே'

(தொல்-எழுத்-புண-26.)

என்றாற் போல்வன அதற்கு இனமெனப்படும். பிறவும் அன்ன.

(32) உய்த்துக்கொண்டுணர்தல்—ஒருவழி ஒருபொருள் சொல் லியக்கால் அதன்கண்ணே மற்றொரு பொருளினையும் கொணர்ந்து கொண்டறியுமாறு தோன்றச் செய்தல் : அவை,

நெட்டெழுத் திம்பரந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா னூர்ந்தே' (தொ-எழு-மொ-3.)

என இடனும் பற்றக்கோடும் கூறி அதனுன் ஈறு ஆக்கங் கோடலும்,

'குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி
னெற்றிய நகரமிசை நகரமொடு முதலும்'

(தொல்-எழுத்-மொழி-34.)

என முதலாக்கம் கூறியதனானே இடனும் பற்றக்கோடும் அதுவே யெனக் கோடலும் போல்வன.

பெயரினுக்கு ஓதிய இலக்கணம் ஒழிந்த சொற்குஞ் செய்

வனஞ் செல்லுமென்றுகோடல் அதற்கு இனமெனப்படும். பிறவும் அன்ன.

மற்று நுதலியதறிதலொடு இதனிடை வேற்றுமையெனினை யெனின், அது வாளாது பயமில கூறியதுபோலக் கூறியவழி இவ்வாறு கூறியது இன்னகருத்துப் போலுமென்று அறியவைத்தலும், உரைவகையானும் நுதலியதறியச் சொல்லுதலுமாம்; இஃது அன்ன தன்றி அச்சூத்திரந் தன்னான் ஒருபொருள் பயந்ததன்றலையும் பின்னொருபொருள் பெறவருதலின் இது வேறென்பது. மற்று ஞாபகங் கூறலோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், பயமில்லது போலவும் அரிதும் பெரிதுமாகவும் இயற்றி எளிதுஞ்சிறிதுமாக இயற்றாது சூத்திரஞ்செய்தல் வேறுபாடே நிமித்தமாகத் தோற்றிக் கொள்வதோர் பொருள்பெற வைத்தலின் இதுவும் வேறெனப்படுமென்பது,

மெய்ப்பட நாடிச் சொல்லிய அல்ல பிற அவண் வரினும்—உய்த்துக்கொண்டுணர்தலோடு மேற்கூறிய முப்பத்திரண்டும் இச்சூத்திரத்துள் எடுத்தோதிய பொருள்வகையான் ஆராய்ந்து சொல்லப்பட்டன வன்றே? அங்ஙனஞ் சொல்லாதன பிறவும் இந்நூலுள் வரினும்; சொல்லிய வகையாற் சுருங்க நாடி—உத்திவகையென வகுத்துக்கொண்டு ஓதிய முப்பத்திரண்டு பகுதியான் அடங்குமாறு ஆராய்ந்து; மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு—ஓதப்பட்ட உத்திப்லவும் ஒருங்குவரினும் உள்ளத்தால் தெள்ளிதின் ஆராய்ந்து மயக்கந்தீர வேறுவேறு தெரிந்து வாங்கிக்கொண்டு; இனத்திற் சேர்த்தி உணர்த்தல்வேண்டும்—முப்பத்திரண்டற்கும் ஏற்றவகையான் இனஞ்சார்த்தி மற்று அவற்றை இன்னதிதுவெனப் பெயர்கூறல்வேண்டும், அங்ஙனந் தொகவின்றவழியும் வேறுவேறுகொண்டு; நுனித்தகு புலவர் கூறிய நூலே—தலைமைசான்ற ஆசிரியராற் கூறப்பட்டநூல், என்றவாறு.

எண்ணிய முப்பத்திரண்டுமல்லன தோன்றினும் அவற்றுள் அடக்கி அவைதாம் ஒருங்குவரினும் வேறு தெரிந்து இனந்தோறுஞ் சேர்த்துதலை அவாவி நிற்கும் ஈண்டு ஓதிய நூலென்பது கருத்து.

சொல்லிய அல்ல பிற அவண் வருமாறும், அவை சொல்லியவகை யாற் சுருங்க காடி இனத்திற் சேர்த்துமாறும் மேற் காட்டப்பட்டன. இனி ஒருங்கு பலவுத்திவந்தவழி உள்ளத்தால் தெள்ளிதி னெண்ணித் தெரிந்துகொண்டு இனத்திற் சேர்த்துதல் வருறுமாறு:

'அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
முரிச்சொ லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னெனைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லெண்மனூர் புலவர்'

(தொல்-சொல்-உரி-98.)

என்றவழி,

'அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
முரிச்சொல்'

என்பது இறந்தது காத்தலாம். என்னே? இசையுங் குறிப்பும் பண்பு மேயின்றிச் சீர்த்தியும் புனிறும் போல்வன வேறும் உள, எடுத்தோதப் பட்டன எனவும்; எடுத்தோதாது இசையுங் குறிப்பும் பண்புமன்றிச் சேணென்றுந் தொறுவென்றும் வருவன உளவென்றுங் கூறினமை யின். 'வரம்புதமக் கின்மையின்' என்பது எதிர்பொரு ளுணர்த்த லும் அறியாதுடன்படலுமாம். 'ஓம்படையாணை' என்பது ஆணைகூற லாம். இங்ஙனம் ஒரு சூத்திரத்துட் பல வந்தவழி ஒன்றே உத்தி யென்றுணராது மனத்தினெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு இவ் வாற்றான் இனத்திற் சேர்த்துக என்றான் ஆசிரியனென்பது.

'மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூறு மிருவகை நிலைய' (தொல்-மர-93.)

என்பது முதலாக இத்துணையும் வழக்குநூலிலக்கணங் கூறினான், எழு திலத்தெழுத்தே யெய்புளின் இதுவும் ஒன்றுகலின் இதனைச் செய்யு

வியலிற் கூறினான், ஈண்டு மரபு கூறும் வழி ஒழிந்த செய்யுட்குப் போலாது நூலிற்குப் பொருட்படையாகிய யாப்புக் குற்றங்களும் உத்தி வகையும் கூறல் வேண்டுதலிற் கூறினானென்பது. அங்ஙனம் கூருக் காற் பாட்டின் மரபு கட்டுரைபோலவுங் கட்டளை அரங்கின்றி வட்டாடியது போலவும் வரம்பின்றி வேண்டியவாறு நூல்செய்தல் விலக்கின்றுவான் செல்லும். செல்லவே, எழுசீராஞகிய முடுகியலடியானும் எத்துணையும் நீண்டதோர் வஞ்சிப்பட்டானும் பிறவும் வேண்டியவாறுஞ் சூத்திரஞ்செய்தலும், ஒருவன் பெயரினை அவ்வச் சூத்திரச்செய்யுளுட் சார்த்துவகையாற் பெய்துகூறலும், உணர்த்தப்படும் பொருளினை முதனூலுட் கிடந்தவாறுபோலாது மரபுநிலை திரியச் செய்தலும், நால்வகை யாப்பொடு மாறுபடச்செய்தலும், வேண்டியவர் வேண்டியவாறு சிலபொருள்களை வேறுதோற்றிக்கொண்டு நூல்செய்தலும் விலக்கின்றுகல் படுமென்பது.

இனி, உத்திவகையும் அவ்வாறே இன்றியமையாதன வெனப்படும். என்னை? உணர்த்தப்படும் பொருள் இதுவென்று அறிவித்தலும், எழுத்துச் சொற்பொருளெனப் பகுத்துக்கொண்டு அதிகாரஞ் செய்தலும், உணர்வு புலங்கொள்ளுமாற்றால் தொகுத்துக் காட்டலும், மற்று அவற்றை வகுத்துக்காட்டிய வழிப் பயமில்கூறலென்று கருதாமல் அது தன்னானோர் பயம்படச்செய்தலும், முதனூலாயினவெல்லாம் நூற்பொருளுணர்தற்குக் கருவியுஞ் சூத்திரச்சுருக்கத்துக் கேதுவாகலும் உடைமையின் அவையும் வேண்டப்பட்டன வென்பது.

இனி, அவற்றை இத்துணையென வரையறுக்கால் எத்துணையும் பலவாகி இகந்தோடுதலும் வழிநூன் முதனூல்வழித் தன்றாகலும் படும். முப்பத்திரண்டு தெழுத்தென்றாலுமினும் அப்பெற்றித்தன்றி அறுபத்தாறாகக் கொள்ளவைத்தானென்று உத்திகூறலும் உடம்படுவானுதல் செல்லுமென மறுக்க.

இனி, நுனித்தகு புலவர் கூறிய நூல் என்றதனானே, பாயிரச் செய்யுளுஞ் சூத்திரச்செய்யுளும் ஆசிரியப்பாவும் வெண்பாவும் பெற்றுவருதலும், அவ்விருபாவும் பெற்றுவருதலும், பரிட்டுப்போல எல்லா

வுறுப்பும் பெறுதற்குச் செல்லாவென்பதூஉம் மாத்திரை முதலாகப் பாவீறாக வந்த பதினென்றும் வண்ணங்களுள் ஏற்பன கொள்ளினுங் கொள்ளுமெனவும் யாப்புறுக்கொள்ளுங்கால் ஈண்டோதிய மரபுங் கொள்ளப்படுமெனவுங் கொள்க. உரைக்குங் காண்டிகைக்கும் இவற்றுள்ளும் ஏற்பன அறிந்து கொள்க.

இன்னும் நுனித்தகு புலவர் என்றதனானே தந்திரமுஞ் சூத்திரமும் விருத்தியுமென மூன்றும் ஒருவரேயன்றி ஒன்று ஒருவர் செய்தலும் இரண்டு செய்தலும் பெறப்படுமென்றலும், ஒருசாலை மாணாக்கரும் தம்மாசிரியருந் தம்மிடை நூல்கேட்ட மாணாக்கரும் பாயிரஞ் செய்யப் பெறுபவென்றலும், பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமுமென அப்பாயிரந்தாம் இரண்டாமென்றலும், ஈவோன்றன்மையும் ஈதலியற்கையுங் கொள்வோன்றன்மையுங் கோடன்மரபுமென்ற நான்குறுப்புடையது பொதுப்பாயிரமென்றலும் அதன்வழியே கூறப்படுஞ் சிறப்புப்பாயிரந்தான் எட்டிலக்கணமுடைத்தென்றலும், அவை ஆக்கியோன் பெயரும் வழியும் எல்லையும் நூற்பெயரும் யாப்பும் நுதலிய பொருளுங் கேட்போரும் பயனுமெனப்படுமென்றலும், அவைதாம் நூற்கின்றியமையாவெனக் கொள்ளப்படுதலுங் கூறிமுடிக்க.

சிறப்புப்பாயிரத்தானே நூலிலக்கணம் ஒருவகையான் உணரப்படும். பொதுப்பாயிரத்தானே ஆசிரியரும் மாணாக்கரும் நூலுரைத்தலும் நூல்கேட்டலும் மாசறவறிந்து உரைநடாத்துவாராப. அதனானே இவை நூன்முகத்தினின்று நிலாவுமென்பது. (சுக0)

"நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று." (குறள்-41-7.)

"ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனடி
பல்காற் பரவுது மெழுத்தோடு
சொல்கா மருபொருட் டோகைதிகழ் பொருட்டே."

மரபியன் முற்றும்.

பொருளதிகாரம் முற்றும்.

தொல்காப்பியம் முற்றும்.

தொல்காப்பியம் பொருளதிகாரம்

சூத்திரமுதற்குறிப்பகராதி

பகுதி-பக்கம்.

அ

அஃதான்றென்ப ... 3-301
அஃதொழித்தொன்றி... 3-314
அகத்திணைமருங்கின் ... 1-150
அகப்பாட்டுவண்ண ... 4-518
அகவலென்ப .. 3-300
அகன்றுபொருள்கிடப்பி 4-512
அகைப்புவண்ணம் ... 4-521
அங்கதந்தானே ... 4-387
அங்கதப்பாட்டவற் ... 4-465
அசைகூனாகும் ... 3-240
அசைசீர்த்தாகும் ... 3-288
அசையுஞ்சீரும் ... 3-185
அச்சமுநாணும் ... 2-365
அடக்கியல்வாரம் ... 4-410
அடிதொறுந்தலை ... 3-310
அடிநிமிர்கிளவி ... 4-487
அடியிகந்துவரினும் ... 4-487
அடியிறந்துவருதல் ... 3-225
அடியின் சிறப்பே ... 3-227
அடியுள்ளனவே ... 3-224
அடியோர்பாங்கினும் ... 1- 61
அடுக்கியதோற்றம் ... 3-151
அடைநிலைக்கிளவி ... 4-402
அணங்கே விலங்கே .. 3- 18
அதுவேதானுமிருநால்... 1-206
அதுவேதானுமீரிரு ... 4-476
அதுவே தானுமிரு ... 4-481
அதுவேதானும் பிசி ... 4-486
அதுவே, வண்ணக ... 4-406

பகுதி-பக்கம்.

அந்தணாளர்க்கரசு ... 4-579
அந்தணாளர்க்குரியவும் ... 4-574
அந்தமில்சிறப்பின் ... 2-854
அந்நிலைமருங்கின்வஞ்சி . 3-222
அந்நிலைமருங்கினறமுத . 4-359
அப்பெயர்க்கிழமை ... 4-560
அமரர்கண் முடியும் ... 1-298
அம்பலுமலரும் ... 2-592
அம்போதரங்கம் ... 4-437
அயலோராயினும் ... 1 -91
அருண்முந்துறுத்த ... 2-732
அலரிற்றோன்றுந் ... 2-735
அல்குறைவரல் ... 3 -35
அல்ல குறிப்படுதலும் ... 2-585
அவற்றுட், சூத்திரந் ... 4-477
அவற்றுட், பாஅவண்ணம் ... 4-515
அவற்றுட், மார்ப்பும் ... 4-534
அவற்று ணடுவணைந் ... 1- 4
அவற்று, ணூலெனப் ... 4-475
அவற்றுண், மாத்திரை . 3-168
அவற்றுள், ஒத்தாழிசை . 4-395
அவற்றுள், ஓதலுந் ... 1 -67
அவனறிவாற்ற ... 2-640
அவன் குறிப்பறிதல் ... 2-730
அவன் சோர்புகாத்தல்.. 2-749
அவன் வரம்பிறத்தல் ... 2-573
அவைதாம், அன்ன ... 3-101
அவைதாம், நூலினான... 4-474
அவைதாம், பாஅவண்ண 4-514

	பகுதி-பக்கம்.
அவையடக்கியலே	... 4-367
அவைடமுளவே	... 3- 51
அவ்வடாக்களும்	... 4-511
அவ்வியலல்லது	... 3-303
அனபெடை தலேப்பெய.	3-207
அனபெடையனசங்லே	... 3-197
அனபெடைவண்ணம்	... 4-517
அனபெழினவையே	... 3-329
அனவடி மிகுதி	... 3-269
அனவியல் வசையே	... 4-473
அனவுஞ் சிந்தும்	... 3-268
அறக்கழிவுடையன	... 2-812
அறத்தொடு நிற்கும்	... 2-791
அறசீரடியே	... 3-277
அறவகைப்பட்ட	... 1-243
அன்புதலேப்பிரிந்த	... 2-754
அன்புறுதகுஉ	... 2-831
அன்பேயறனே	... 2-809
அன்னபிறவும்	... 3 -45
அன்னராயினும்	... 4-560
அன்னவகையான்	... 2-580
அன்னவாங்க	... 3-105
அன்னவென்னினவி	... 3-107
அன்னேயென்னே	... 2-858

ஆ

ஆங்கவையொருபால்	... 3- 25
ஆங்காங்கொழுகும்	... 2-588
ஆன்னம் விரிப்பின்	... 3-252
ஆசிரியப்பாட்டின்	... 4-462
ஆசிரியமருங்கினும்	... 3-281
ஆசிரியம்வஞ்சி	... 4-356
ஆசிரிய கலேத்தே	... 4-360

	பகுதி-பக்கம்.
ஆண்பாலெல்லாம்	... 4-558
ஆயர்வேட்டுவர்	... 1 -56
ஆயிருதொடைக்கும்	... 3-316
ஆய்பெருஞ்சிறப்பின்	... 2-577
ஆவுமெருமையும்	... 4-543
ஆறின தருமையும்	... 2-590
ஆற்றது பண்பும்	... 2-743
ஆற்றலொடு புணர்ந்த	... 4-557

இ

இசைசங்லேயிறைய	... 3-215
இசைதிரிந்திசைப்பி	... 2-775
இடித்துவரை	... 2-725
இடைச்சுரமருங்கில்	... 4-498
இடைநிலேப்பாட்டு	... 4-396
இடைநிலேப்பாட்டே	... 4-399
இடையிருவகையோர்	... 4-577
இதுனிபயகும்	... 4-507
இமையோர்தேவெத்தும்	... 2-862
இயங்குபடையரவம்	... 1-189
இயலசை மயக்கம்	... 3-191
இயலசைமுதலிரண்	... 3-177
இயலசையிறறமுன்	... 3-195
இயற்சீரிறதிமுன்	... 3-203
இயற்சீர்ப்பாற்படுத்	... 3-216
இயற்சீரெள்ளடி	... 3-272
இயைபு வண்ணம்	... 4-517
இரட்டைக்கினவி	... 3-125
இரந்துகுறையுற்ற	... 2-841
இரலேயுங்கலேயும்	... 4-555
இரவுக்குறியே	... 2-582
இருசீரிடையிடின்	... 3-382
இருகைக்குறி	... 2-418

	பகுதி-பக்கம்.
இருவகைப்பிரிவு	1- 28
இருவகையுகாமோடு	3-173
இலேய முறியே	4-582
இவ்விடத்திம்மொழி	4-509
இழுமென்மொழியான்	4-526
இளிவேயிழவே	3- 10
இறப்பேகிழ்வே	4-506
இறவாயொன்றல்	3-328
இறைச்சிதானே	2-828
இறைச்சியிற் பிறக்கும்	2-829
இனிதறிவினவியும்	3-134
இன்சீரியைய	3-220
இன்பத்தைவெறுத்தல்	3- 51
இன்பமுமிடும்பையும்	4-510
இன்பமும் பொருளும்	2-349

ஈ

ஈதலைதொண்டு	3-188
ஈற்றயலடியே	3-282

உ

உடம்புமுயிரும்	2-787
உடனுறையுவமம்	2-851
உணர்ப்புவரை	2-726
உணடற்குரிய	2-807
உயர்ந்தன்மேற்றே	3- 89
உயர்ந்தோர் வினவி	2-811
உயர்ந்தோர்க்குரிய	1- 78
உயர்மொழிவினவி	2-849
உயர்மொழிக்குரிய	2-844
உயிரிலெழுத்தும்	3-237
உயிரினுஞ்சிறந்தன்று	2-485
உயிருமாணும்	2-875
உய்த்துணர்வின்றி	4-507

	பகுதி-பக்கம்.
உரிப்பொருளல்லன	1- 40
உருட்டுவண்ணம்	4-522
உரையெடுத்ததன்	4-599
உவமத்தன்மையும்	3-147
உவமப்பொருளின்	3-121
உவமப்பொருளே	3-124
உவமப்போலி	3-127
உவமையும் பொருளும்	3- 97
உழிஞைதானே	1-204
உழைச்சுறுந்தொழிலும்	2-746
உள்ளுறுத்திதினே	1-134
உள்ளுறைதெய்வம்	1-133
உள்ளுறையுவமம்	1-130
உறுகணெம்ப	2-848
உறுப்பறைகுடிகோள்	3- 21
உற்றழியல்லது	2-798

ஊ

ஊருமயலும்	4-495
ஊரும்பெயரும்	4-576
ஊரொடுதோற்றமும்	1-307

எ

எஞ்சாமண்ணைசை	1-188
எஞ்சியோர்க்கும்	1-114
எண்ணருப்பாசறை	2-750
எண்ணிடையொழிதல்	4-412
எண்ணுவண்ணம்	4-521
எண்வகையியனெறி	4-508
எதிர்மறுத்தனின்	4-622
எத்திணைமருங்கினும்	1- 80
எந்திலமருங்கிற்	1- 54
எருத்தேகொச்சகம்	4-438

	பகுதி-பக்கம்.
எருமையு—வரை	... 4-541
எருமையு—அன்ன	... 4-553
எருமையு—காகே	... 4-569
எல்லாவாயிலும்	... 2-753
எல்லாவுயிர்க்கும்	... 2-820
எழுசேரடியே	... 3-279
எழுசிறுதி	... 3-291
எழுத்தனவெஞ்	... 3-233
எழுத்துமுதலா	... 3-292
எழுத்தொடுஞ்	... 4-485
எழுநிலத்தெழுந்த	... 4-474
எளித்தலேத்தல்	... 2-793
எள்ளலிளமை	... 3- 7
எள்ளவிழைய	... 3-107
ஏ	
ஏந்தல்வண்ணம்	... 4-522
ஏமப்பேரூர்	... 1- 89
ஏன்மரபினே	... 1- 63
ஏழெழுத்தென்ப	... 3-228
ஏறியமடற்றிறம்	... 1-138
ஏறுமேற்றையும்	... 4-513
ஏற்புடைத்தென்ப	... 4-552
ஏனைப்பிரிவு	... 2-766
ஏனையுவமந்தா	... 1-135
ஏனையொன்றே	... 4-405
ஏனோர்பாங்கினும்	... 1- 58
ஐ	
ஐவகையடியும்விரிக்குங்	. 3-242
ஐவகையடியுமாசிரியக்	... 3-254
ஒ	
ஒட்டகங்குதிரை	... 4-559
ஒட்டகமவற்றெழு	 4-547
ஒண்டொடிமாதர்	4-492
ஒத்தகாட்சி	4-626
ஒத்தசூத்திரம்	4-599
ஒத்தாழிசைக்கலி	4-392
ஒத்தாழிசையும்	4-369
ஒத்துமூன்றுரும்	4-408
ஒப்புமுரூவும்	2-860
ஒப்பொடுபுணர்ந்த	4-482
ஒரீஇக்கூறலும்	3-146
ஒருசிறைநெஞ்ச	2-789
ஒருசீரிடையிட்டு	3-331
ஒருதலையுரிமை	
ஒருநெறிப்பட்டாங்	4-503
ஒருநெறியின்றி	4-478
ஒருபாற்கிளவி	2-819
ஒருபான்சிறுமை	4-435
ஒருபொரு-வெள்ளடி	4-141
ஒருபொரு-சூத்திரத்	4-476
ஒருபோகியற்கை	4-420
ஒருஉவண்ணம்	4-520
ஒழிந்தோர்கிளவி	4-494
ஒழுகுவண்ணம்	4-520
ஒற்றளபெடுப்பினும்	3-200
ஒற்றெழுத்தியற்றே	3-179
ஒற்றொடுபுணர்ந்த	4-529
ஒன்றறிவதுவே	4-536
ஒன்றுத்தமரினும்	1-102
ஒன்றேமற்றும்	4-481
ஒன்றேவேறே	2-354
ஓ	
ஓதல்பகையே	... 1- 67

பகுதி-பக்கம்.

க

கடையுமுரையும் ... 4-543
கடல்வாழ்சுறவும் ... 4-553
கடுப்பவேய்ப்ப ... 3-109
கட்டுரைவகையான் ... 4-384
கணையும்வேலும் ... 1-226
கண்ணியுந்தாரும் ... 4-578
கண்ணிறுஞ்செவி ... 3- 80
கரணத்தினமைந்து ... 2-604
கலந்தபொழுதும் ... 1- 51
கலித்தளைமருங்கிற் ... 3-210
கலித்தளையடிகயின் ... 3-211
கலிவெண்பாட்டே ... 4-466
கலியென்காட்சி ... 4-555
கல்லிதறுகண் ... 3- 20
கவரியுங்காரும் ... 4-542
கழிவினும்வரவினும் ... 2-721
கனவலராயினும் ... 2-556
கனவுஞ்சற்பும் ... 2-734
கற்புங்காமமும் ... 2-718
கற்புவழிப்பட்டகன் ... 2-833
கற்பெனப்படுவது ... 2-596
கனவுமுரித்தால் ... 2-783

கா

காஞ்சிதானே ... 1-274
காமக்கடப்பினுள் ... 2-731
காமக்கூட்டம் ... 2-572
காமஞ்சாலாவினமை ... 1-135
காமஞ்சான்ற ... 2-769
காமஞ்சொல்லா ... 2-431
காமத்தினையில் ... 2-430
காமனிலையுரைத்தலும் ... 2-751
காமப்பகுதி ... 1-504
காமப்புணர்ச்சியும் ... 4-488
காயேபழமே ... 4-584
காருமாலையும் ... 1- 16

கி

கிழக்கிடுபொருளோடு ... 3- 94
கிழவன்றன்னெஞ்சுங் ... 4-496
கிழவிசொல்லின் ... 3-132
கிழவினிலையே ... 2-760
கிழவிமுன்னர் ... 2-756
கிழவோட்குவமம் ... 3-135
கிழவோன்பிறள்குணம் ... 2-833
கிழவோற்காயினிடம் ... 3-137
கிழவோற்காயினுரை ... 3-133
கிழவோனறியா ... 2-570
கிழவோன்வினை ... 2-736
கினியவகையில் ... 4-487

கு

குஞ்சரம்பெறமே ... 4-542
குடையும்வாளும் ... 1-214
குட்டமெருத்தடி ... 4-372
குட்டியும்பறழும் ... 4-538
குரக்கினேற்றினை ... 4-570
குரங்குமுசவு-மந்தி ... 4-570
குரங்குமுசவு-மூன்று ... 4-543
குழவிமருங்கினும் ... 1-306
குழவியுமகவும் ... 4-544
குறளடிமுதலா ... 3-262
குறித்தெதிர்மொழிதல் ... 2-757
குறிப்பேகுறித்தது ... 2-362
குறியெனப்படுவது ... 2-582
குறிவினையுகரம் ... 3-176

	பகுதி-பக்கம்.
குறிலேநெடிலே	... 3-172
குறுஞ்சீர்வண்ணம்	... 4-517
குறையுறவுணர்தல்	... 2-579
குற்றியலுகரமும்	... 3-184
கூ	
கூதிர்வேனில்	... 1-259
கூழைவிரித்தல்	... 3- 33
கூற்றுமாற்றமும்	... 4-459
கை	
கைக்கிளைதானே	... 4-376
கைக்கிளைமுதலா	... 1- 1
கைக்கிளைமுதலாவெழு	4-488
கொ	
கொச்சகமராகம்	... 4-377
கொச்சகவொருபோ	... 4-421
கொடிநிலைகந்தழி	... 1-313
கொடுப்போரின்றியும்	... 2-599
கொடுப்போரேத்தி	... 1-317
கொண்டுதலைக்	... 1- 48
கொள்ளார்தேஎங்	... 1-206
கொற்றவள்ளை	... 1-315
கோ	
கோடுவாழ்குரங்கும்	... 4-540
கோழிகூகை	... 4-560
சி	
சிதலுமெறும்பும்	... 4-549
சிதலிலவென்ப	... 4-611
சிதலெனப்படுபலவை	... 4-614
சித்திரவல்லணு	... 4-518

	பகுதி-பக்கம்.
சிறந்தழியையம்	... 2-358
சிறப்போலனே	... 3- 92
சினனேபேதைமை	... 2-856
சீ	
சீரியமருங்கின்	... 3-261
சீர்கூறுதல்	... 3-241
சீர்நிலைதானே	... 3-230
சு	
சுட்டிக்கூறு	... 3- 97
சுரமெனமொழிதலும்	... 2-810
சூ	
சூத்திரத்துப்பொருள்	... 4-607
சூழ்தலுமுசாத்துணை	... 2-578
செ	
செம்பொருளாயின்	... 4-387
செய்பொருளச்சமும்	... 2-832
செய்யுட்டாமே	... 4-389
செய்யுண்மருங்கின்	... 4-530
செய்யுண்மொழியால்	... 4-525
செலவிடையழுங்கல்	... 2-759
செல்வம்புலனே	... 3- 23
செவியுறைதானே	... 4-368
செறிவுசிறைவும்	... 2-799
சே	
சேரிமொழியால்	... 4-528
சேவற்பெயர்க்கொடை	4-557
சொ	
சொல்லப்பட்டன	... 4-610
சொல்லியதினவி	... 2-724

பகுதி-பகதம்.

சொல்லியதொடை ... 4-342
சொல்லியமரபின் ... 4-546
சொல்லெதிர்மொழிதல் . 2-432
சொல்லொடுங் ... 4-508
சொற்சீரடியும் ... 4-383

ஞ

ஞகாரமுதலா ... 4-528

ஞா

ஞாயிறுதிங்கள் ... 4-505

த

தமொறுவமம் ... 3-150
தத்தமரபிற் ... 3-113
தந்தையுந்தன்னையும் ... 2-501
தம்முறவிழுமம் ... 2-835
தரவியலொத்து ... 4-403
தரவிற்சுருங்கித் ... 4-409
தரவின்றூங்கித் ... 4-421
தரவும்போக்கும் ... 4-444
தரவேதானுநான்கு ... 4-408
தூவேதானுநாலடி ... 4-398
தலைமைக்குணச் ... 4-576
தலைவரும்விழுமம் ... 1- 91
தவலருஞ்சிறப்பி ... 3-127
தவழ்பவைதாமும் ... 4-535
தற்புகழ்கிளவி ... 2-755
தனிக்குறின்முதலசை ... 3-177
தன்சிருன்வழி ... 3-259
தன்சிறைழுத்தின் ... 3-239
தன்சிர்வகையிலும் ... 3-256
தன்பாவல்வழி ... 3-208
தன்வயிற்கரத்தலும் ... 2-790

பகுதி-பக்கம்.

தன்னுமவலும் ... 1- 81
தன்னுறுவேட்கை ... 2-571

தா

தாஅவண்ணம் 4-516
தாயத்தினடையா 2-817
தாயறிவுறுதல் 2-591
தாய்க்குமுரித்தால் 2-783
தாய்க்கும்வரையார் 2-570
தாய்போற்கழறி 2-748
தாவில்கொள்கை 1-243
தாவினல்லிசை 1-329
தானேசேறலும் 1- 69
தானேயானை 1-228

தி

திணைமயக்குறுதலும் ... 1- 30

து

துகளொடும் பொரு ... 4-390
தும்பைதானே ... 1-224
துள்ளலோசை ... 3-302
துன்புறு பொழுதிலும் ... 2-757

தூ

தூக்கியல் வகையே ... 3-304
தூங்கலோசை ... 3-302
தூங்கல் வண்ணம் ... 4-521

தெ

தெய்வமஞ்சல் ... 3- 66
தெய்வமுணவே ... 1- 52
தெரிந்தனர் விரிப்பின் ... 4-349
தெரிந்துடம் படுதல் ... 3- 40

பகுதி-பக்கம்.

தே

தேரும் யானையும் .. 2-805

தொ

தொகுத்தல் விரித்தல் .. 4-595
தொடைவகை யிலையே. 4-351
தொல்லவை யுரைத்த .. 2-740
தொன்மைதானே .. 4-526

தோ

தோடே மடலே .. 4-581
தோழிதாயே .. 2-771
தோழிதானே .. 2-578
தோழியீன் முடியும் .. 2-574
தோழியுஞ் செவிலியும். 3-137
தோழியுள்ளுறுத்த .. 2-681

ந

நகையேயழுகை 3-6
நவ்வு மிலத்திணை 1- 23
நட்பினடக்கை 2-785
நண்டுந்தும்பியும் 4-549
நந்தி முரலும் 4-548
நரியுமற்றே நாடினர் 4-537
நரியுமற்றே நாடினர் 4-569
நலிபு 4-518

நா

நாடகமழக்கினும் 1-142
நாட்ட மிரண்டு 2-360
நாயே பன்றி 4-537
நாலிரண்டாகும் 3- 5
நாலிரண்டாகும் 3-115
நாலெழுத்தாதி 3-228

பகுதி-பக்கம்.

நாற்சீர் கொண்ட ... 3-223
நாற்ற மூன்தோற்றமும் ... 2-190

நி

நிகழ்தகை மருங்கின் ... 2-826
நிகழ்ந்தது கூறி ... 1-122
நிகழ்ந்தது நினைத்தற் ... 1-120
நிப்பிரி கொடுமை ... 3- 79
நிரனிறுத்தமைத்த ... 3-152
நிரனிறுத்தமைத்தலும்.. 3-308
நிழறமுதல் வெண்சீர் ... 3-270
நிரையவணிற்பின் ... 3-290
4-584
நிலம் பெயர்ந்துறைதல்... 2-742
நிலையிற்றப்பெயர் ... 4-555
நிறைமொழிமாந்தர் ... 1-484

நீ

நீர்வாழ் சாதியுளமு ... 4-554
நீர்வாழ் சாதியுணந்து ... 4-569

நு

நுண்மையுஞ் சுருக்கமும் 4-483

நூ

நூலேகாரகம் ... 4-472

நெ

நெடுஞ்சீர் வண்ண ... 4-517
நெடுவெண்பாட்டேழுறு 4-874
நெடுவெண்பாட்டேழும். 4-463
நெல்லும்புல்லும் ... 4-545

நே

நேரவணிற்பின் ... 3-194

	பகுதி-பக்கம்.
சேரினமணியை	... 4-477
சோற்றியற்சீர்	... 3-288
சோ்லிலை வஞ்சிக்	... 3-232
நோ	
நோயு மின்பமும்	... 2-777
ப	
பகற்புணர்களனே	... 2-584
படையியங்கரவம்	... 1-153
படையுங்கொடியும்	... 4-573
பண்ணைத்தோன்றிய	... 3- 1
பண்பிற் பெயர்ப்பினும்	... 2-405
பத்தெழுத்தென்ப	... 3-228
பரத்தைமைமறுத்தல்	... 2-729
பரத்தை வாயிலென	... 4-504
பரத்தை வாயினல்	... 2-821
பரிசில் பாடாண்டினை	... 4-575
பரிபாடல்லே	... 4-376
பரிபாட்டெல்லே	... 4-473
பழிப்பில் சூத்திரம்	... 4-604
பறழெனப்படினும்	... 4-536
பனியெதிர் பருவம்	... I- 19
பன்றிபுல்வாயுழையே	... 4-552
பன்றிபுல்வாய் நாயென	.. 4-561
பன்னூறு வகையினும்	... 2-576
பா	
பாங்கருஞ் சிறப்பிற்	... 1-275
பாங்கனிமித்தம்	... 2-418
பாடாண்பகுதி	... 1-295
பாட்டிடைக்கலந்த	... 4-486
பாட்டிடைவைத்த	... 4-47
பாட்டி யென்பது	... 4-569
பாட்டுரை நூலே	... 3-294
பாணன் கூத்தன்	... 4-494
பாலிலை வகையே	... 4-449
பாராட்டெடுத்தன்	... 3- 38
பார்ப்பாரறிவர்	... 4-502
பார்ப்பான் பாங்கன்	... 4-493
பால்கெழுகிளவி	... 2-784
பாவிரி மருங்கினை	... 4-360
பி	
பிடியென்பெண்பெயர்	... 4-559
பிணவலெனினும்	... 4-562
பிள்ளை குழவி	... 4-544
பிள்ளைப்பெயரும்	... 4-539
பிறப்பே குடிமை	... 3- 73
பிறிதாடுபடாது	... 3-126
பின்பனிதானும்	... I- 27
பின்முறையாக்கிய	... 2-746
பு	
புகுமுகம்புரிதல்	... 3-129
புணர்தல் பிரிதல்	... I- 42
புணர்ந்துடன்போகிய	... 2-679
புதுமை பெருமை	... 3- 15
புலத்தலு மூடலும்	... 2-727
புல்லுதன்மயக்கும்	... 2-704
புல்லு மரனும்	... 4-548
புல்வாய் கல்வி	... 4-560
புல்வாய் புலியுழை	... 4-552
புள்ளுமுரிய	... 4-559
புறக்காழனவே	... 4-580
புறஞ்செயச் சிதைத்தல்	3- 43
புறத்தினை மருங்கின்	... 1-148

பகுதி-பக்கம்.

புதித்தோராங்கட் ... 2-751
புறநிலை வாயுறை ... 4-471
புறப்பாட்டு வண்ணம் ... 4-519

பூ

பூப்பின் புறப்பாடூரறு ... 2-761

பெ

பெண்ணுமாணும் ... 4-571
பெண்ணும்பிணையும் ... 4-562
பெயரும்வினையுமென் ... 1- 55
பெருமையுஞ் சிறுமை ... 3- 99
பெருமையுஞ்-மென்ப ... 3-118
பெருமையீ முரணும் ... 2-364
பெறற்கரும் ... 2-681
பெற்றமுமெருமை ... 4-562
பெற்றமெருமை ... 4-554

பே

பேடையும் பெடையும் ... 4-533
பேடையும் பெடையுமாடி 4-559

பொ

பொய்யும் வழுவும் ... 2-601
பொருளெனமொழிதலும் 2-808
பொருளேயுவமம் ... 3- 98
பொருள் வயிற்பிரித 1- 79
பொழிப்புமொருவுமை ... 3-308
பொழுதுதலைவைத்த ... 2-836
பொழுதுமாறுமுட்கு ... 1- 97
பொழுதுமாறுங்காப் ... 2-799

போ

போல்வியல்வகையே ... 4-402

பகுதி-பக்கம்.

போலமறப்ப ... 3-111

ம

மகவும் பிள்ளையும் ... 4-540
மக்கடாமே ... 4-551
மக்கணுதலிய ... 1-145
மங்கலமொழியும் ... 2-855
மண்டிலங்குட்டம் ... 4-373
மீயிலுமெழாலும் ... 4-554
மரபுநிலைதிரிதல் ... 4-585
மரபுநிலை திரியா-என்ப 1-126
மரபுநிலைதிரியா-தெறியின 4-587
மரபுநிலை திரியின் ... 4-586
மரபே தானும் ... 3-295
மருட்பாவேனே ... 3-302
மறங்கடைக்கூட்டிய ... 1-164
மறுதலைக் கடாஅ ... 4-608
மறைந்தவற் காண்டல் ... 2-431
மறைந்த வொழுக்கத் ... 2-589
மறைவெளிப்படுதலுள் ... 4-490
மனையோள் கிளவி ... 4-500
மனைவிதலைத்தாட் ... 2-738
மனைவிமுன்னர் ... 2-739
மனைவியுயர்வும் ... 2-825
மன்னர் பாங்கிற் ... 1- 76

மா

மாட்டு மெச்சமும் ... 4-513
மாத்திரைமுதலா ... 4-351
மாத்திரை யெழுத்தியல் 3-159
மாயோன் மேய ... 1- 12
மாவு மாக்களும் ... 4-550
மாற்றருங் கூற்றம் ... 1-276
மாற்றருஞ் சிறப்பின் ... 4-531

பகுதி-பக்கம்.

மி

மிக்கபொருளினுட் ... 2-814

மு

முச்சீரானும் ... 3-239
முச்சீர் முரற்கையுண் ... 3-284
முடுகியல்வரையார் ... 3-280
முடுகுவண்ண ... 4-52[illegible]
முட்டுவயிற் கழறன் ... 3- 62
முதலுஞ்சினையுமென்று 3- 94
முதலெப்படுவதா ... 1- 52
முதலெனப்படுவது ... 1- 12
முதலொடு புணர்ந்த ... 2-417
முதல் கருவுரி ... 1- 6
முதல்வழியாயினும் ... 4-612
முதற்றொடை பெருகி... 4-410
முந்நாளல்லது ... 2-575
முந்நீர் வழக்கம் ... 1- 79
முயற்சிக்காலத் ... 2-581
முழுமுதலரண ... 1-204
முறைப்பெயர் ... 2-816
முற்றியலுகரமும் ... 3-181
முன்னிலையுறினும் ... 3-193
முன்னிலைப் புறமொழி 2-739
முன்னிலையாக்கல் ... 2-369
முன்னையநான்கும் ... 1-141
முன்னைய மூன்றும் ... 2-415

மூ

மூங்காவெருகெலி ... 4-536
மூடுங் கடமையும் ... 4-569
மூப்பேபிணியே ... 3- 12
மூவாறெழுத்தே ... 2-228

பகுதி-பக்கம்.

மூவைந்தெழுத்தே ... 3-2[illegible]8
மூன்றுறுப் படக்கிய ... 4-478

மெ

மெய்தெரிவகையின் ... 4-577
மெய்தொட்டுப்பயிறல் ... 2-374
மெய்பெறுமரபிற் ... 4-345
மெய்பெறுவகையே ... 4-492
மெய்ப்பெயர்மருங் ... 1-311
மெல்லிசை வண்ணம் ... 4-516

மே

மேலோர் முறைமை ... 1- 74
மேலோர் மூவர்க்கும் ... 2-601
மேவிய சிறப்பின் ... 1- 71
மேற்கிளந்தெடுத்த ... 4-600

மை

மைந்து பொருளாக ... 1-225

மொ

மொத்தையுந்தகரும் ... 4-556
மொழிகரந்துசொல் ... 4-389
மொழியினும் பொரு ... 3-326
மொழியெதிர் ... 2-756

மோ

மோனையெதுகை ... 3-306

யா

யாறுங்குளனும் ... 2-767
யாடுங்குதிரையு ... 4-539
யானையுங்குதிரையும் ... 4-541

வ

வசையொடு நசையொடு 4-392

வஞ்சிச்சீரென ... 3-204
வஞ்சிதானே ... 1-187
வஞ்சித்தூக்கே ... 3-285
வஞ்சி மருங்கினும் ... 3-212
வஞ்சிமருங்கின் ... 3-208
வஞ்சி யடியே ... 3-238
வண்டேயிழையே ... 2-359
வண்ணகந்தானே ... 4-407
வண்ணந்தாமே ... 4-523
வண்ணந்தானே ... 4-514
வண்ணம் பசந்து ... 2-786
வருத்த மிகுதி ... 2-823
வரை விடைவைத்த ... 2 477
வல்லிசை வண்ணம் ... 4-516
வழக்கெனப்படுவது ... 4-587
வழக்கொடு சிவணிய ... 1-308
வழங்கிடன் மருங் ... 1-300
வழிபடுதெய்வ ... 4-363
வழியினெறியே ... 4-594
வழியெனப்படுவது ... 4-593
வனப்பியலுனே ... 4-523

வா

வாகைதானே ... 1-242
வாயிலுசாவே ... 4-505
வாயிற்கினவி ... 2-850
வாயுறை-யவை ... 4-364
வாயுறை-வயங் ... 4-366
வார்கோட்டியானே ... 4-522
வாழ்த்தியல வகையே ... 4-361

வி

விட்டகல்வின்றி ... 4-605
விரவியுறழ் வருமும் ... 3- 88
விராவுயதனையும் ... 3-272
விராவுவரினும் ... 3-255
விருந்தே தானும் ... 4-527
வில்லும் வேலும் ... 4-580
வினைபயன் மெய்யுரு ... 3- 82
வினையினீங்கி ... 4-589
வினையுயிர்மெலி ... 3- 49
வினைவயிற்பிரி ... 2-772

வெ

வெண் சீர்ற்றசை ... 3-218
வெண்டூஉ விரவி ... 3-274
வெண்பாடமுறடி ... 3-287
வெண்பாவியலினும் ... 3-291
வெண்பாவுரிச்சீர் ... 3-203
வெளிப்படவரைதல் ... 2-593
வெளிப்படைதானே ... 2-594
வெறியறிசிறப்பின் ... 1-165

வே

வேட்கை மறுத்து ... 2-804
வேட்கையொருதலை ... 2-366
வேண்டியகல்வி ... 2-763
வேந்துவிடுதொழில் ... 4-579
வேந்துவிடுமுனைஞர் ... 1-151
வேந்துவினையியற்கை ... 1- 78
வேந்துறு தொழிலே ... 2-764
வேறுபடவந்த ... 3-139
வேழக்குரித்தே ... 4-551
வேளாண்மாந்தர் ... 4-578

வை

வைகுறுவிடியல் ... 1- 20
வைகின்பெறுமே ... 4-577

"ஈட்டு மகத்திணையு மேய்ந்த புறத்திணையுங்
காட்டு களவியலுங் கற்பியலு—மீட்டும்
பொருளியன்மெய்ப் பாடுவமம் போற்றிய செய்யுண்
மாபியலு மாம்பொருளின் வைப்பு"

"பூமலர்மென் கூந்தல் பொருளியலிற் சூத்திரங்க
ளாவவறு நூற்றறுபத் தைந்தாகு—மூவகையா
லாயிரத்தின் மேலு மறுநூற் றிருபதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்."

[இவ்வெண்பாக்களால் பொருளதிகாரச் சூத்திரங்கள் 665 என்பதும், தொல்காப்பிய முழுதுக்குமுள்ள சூத்திரங்கள் 1610 என்பதும் விளங்கும். முன் அச்சுப்பிரதியில், பொருளதிகாரச் சூத்திரங்கள் 666 ஆகக் காணப்படுவது, 462 ஆவது சூத்திரத்தை 463 என இலக்கமிட்ட அச்சுப்பிழையாலே யொழிய வேறல்ல.]

அறிக்கை : உதாரணச் செய்யுள்களுக்கு முதற் குறிப்பகராதி, பிழைதிருத்தங்கள், ஆராய்ச்சிக் குறிப்புக்கள் முதலியன தனிப்புத்தகமாக வெளியிடப்படும்.

குறிப்பு

170-ஆவது பக்கம் 20-ஆவது வரிமுதல் 171-ஆவது பக்கம் 4-ஆவது வரிவரையில் உள்ள உரைப் பகுதியில், குற்றுகரம்' 'குற்றியலுகரம்' எனவருவனவற்றை முறையே 'குற்றிகரம்' 'குற்றியலிகரம்' எனத் திருத்திக்கொள்க.

இப்பிழை மயக்கத்துக் கிடந்தராக் கூடியதாதலால் ஈண்டுத் தனியே எடுத்துக் காட்டப்பட்டது.

தாம்ஸன் கம்பெனியாரால் தமது 'மினெர்வா' அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.